# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

## திருநெல்வேலி

## தொலைநிலைக் கல்வி இயக்ககம்

## (Directorate of Distance & Continuing Education)

### முதுகலை இரண்டாமாண்டு - தமிழ்

# காப்பிய இலக்கியம்

<u>பாடத்திட்டம் தயாரிப்பு</u>


## முனைவர் இரா. சுதமதி

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி

திருநெல்வேலி

# காப்பிய இலக்கியம்

## அலகு 1

காப்பிய இலக்கியம்

தமிழ்க்காப்பியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

கால மாற்றத்தால் காப்பிய வடிவமைப்பில் உருவான மாற்றங்கள்

## அலகு 2

சிலப்பதிகாரம் – வஞ்சிக் காண்டம் முழுமையும்

மணிமேகலை – 13 ஆம் காதை முதல் 16 ஆம் காதை வரை

சீவகசிந்தாமணி – சுரமஞ்சரியார் இலம்பகம்

## அலகு 3

சூளாமணி – நாட்டுச் சருக்கம் முழுமையும்

உதயணகுமார காவியம் – இலாவாண காண்டம் முழுமையும்

நாககுமார காவியம் – ஐந்தாம் சருக்கம் முழுமையும்

## அலகு 4

பெரியபுராணம் – குங்குலியக் கலய நாயனார் புராணம்

கந்தபுராணம் – காசிபன் உபதேசப் படலம்

கம்பராமாயணம் – வாலிவதைப் படலம்

தேம்பாவணி – முடிசூட்டுப் படலம்(முதல் 30 பாடல்கள்)

சீறாப்புராணம் – ஓநாய் பேசிய படலம்

## அலகு 5

பாரதிதாசன் – கண்ணகி புரட்சிக் காப்பியம்

முடியரசன் - பூங்கொடி

# காப்பிய இலக்கியம்

## அலகு – 1

**காப்பிய இலக்கணம்**

**தமிழ்க் காப்பியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்**

**கால மாற்றத்தால் காப்பிய வடிவமைப்பில் உருவான மாற்றங்கள்**

## காப்பியம்

காப்பியம் என்பது இலக்கிய வடிவங்களில் ஒன்று. இதனைப் பெருங்காப்பியம் என்றும், சிறுகாப்பியம் என்றும் பகுத்துக் காட்டினர்.

அறம்,பொருள், இன்பம், வீடு என்பனவற்றோடு ஒரு ஒப்பிலாத் தலைவனையும் தலைவியையும் கொண்டு இயற்றப்படுவது பெருங்காப்பியமாகும். வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதைபொதி பாடல்கள் என்று இது விரிந்து வளர்கிறது. நான்கு பொருள்களையும் பயக்காமல் சில பொருள்கள் மட்டும் பயக்கும் கதைநூல் சிறுகாப்பியம்.

தமிழின் பழைய இலக்கியங்கள் தனிப்பாடல் திரட்டுக்களாகவே உள்ளன. தொடக்கத்தில் நாட்டுப் பாடல்களின் ஓசையமைப்பையும் பொருள் வகையையும் ஒட்டி வளர்க்கப்பட்ட தனிப்பாடல்களே தமிழ் இலக்கியத்தின் தோற்றமாகும். சங்க காலத்தில் கதை தழுவிய பல நாடகங்களும் பல கதைகளும் பல இருந்திருக்கக் கூடும். ஆனால், அந்தக் கதைகள் திரண்டு வளர்ந்து காப்பியங்களாக உருவம் கொள்ளவில்லை. கற்றறிந்த புலவோர் அந்தக் கதைகளை எழுதிப் போற்ற மனம்கொள்ளாதது காரணமாக இருக்கலாம்.

**காப்பியம், சொல்விளக்கம்**

காப்பு + இயம் = காப்பியம் ஆகியது. பழமரபுகளைக் குறிப்பாக இலக்கண மரபுகளைக் காத்து நிற்பது காப்பியம் என்ற பொருளில் தமிழில் இச்சொல் முதலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'இயம்பு' என்பது 'சொல்' எனப் பொருள்படும் ஒரு வினைச்சொல். இசைக் கருவிகளை இயம் என்பது பண்டைய வழக்கு. பல இசைக் கருவிகளைப் பல்லியம் என்பர். சிறிய இசைக்கருவிகளை இயக்கிக்கொண்டு குன்றுதோறாடும் முருகன் 'குறும்பல்லியத்தன்' எனப் போற்றப் படுகிறான். தொல்காப்பியம் என்னும் நூலின் பெயரில் 'காப்பியம்' என்னும் சொல் உள்ளது. தொல்+காப்பு+இயம் எனபது தொல்காப்பியம். இது தமிழில் இருக்கும் மொழியியல் வாழ்வியல் தொன்மையை இயம்பும் நூல். இவற்றால் 'காப்பியம்' என்பது தூய தமிழ்சொல் என்பது பெறப்படும்.

காப்பியம் என்றால் என்ன? இந்தச் சொல்லின் பொருள் என்ன? இச்சொல் விளக்கும் இலக்கியம் எத்தகையது? ஒருவகையில் சிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்றவை கதைப்பாடல்கள் என்பதை நாம் அறிவோம். இன்னொரு நிலையில் ‘காப்பியம்’ என்றால் என்ன? இந்தச் சொல் எங்கிருந்தது வந்தது? இதன் அடிப்படைப் பொருள் யாது? இதற்கான விளக்கத்தை இங்கு விரிவாகக் காணலாம்.

வடமொழியில் ‘காவ்யா’ என்றால் பாட்டு என்பது பொருள். கவியால் படைக்கப்படுவன அனைத்தும் ‘காவியமே’. எனவே காவ்யா - காவியம் - காப்பியம் என ஆகியது என்பர். தமிழில் தொல்காப்பியம், காப்பியக்குடி, வெள்ளூர்த் தொல்காப்பியர், காப்பியஞ்சேந்தனார், காப்பியாற்றுக் காப்பியனார் முதலான பெயர்கள் காணப்படுகின்றன. இவை காப்பு + இயம் என்ற சொற்களின் சேர்க்கையாகக் கருதப்படுகின்றன. பழமரபுகளைக் காப்பது ‘காப்பியம்’ எனக் கருத இடம் உண்டு. காப்பியம் என்ற இலக்கியமே, வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சமூக - சமய - அரசியல் வரலாற்றையோ அல்லது வரலாறாக நம்பப்படுவதையோதான் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. இவை வாய்மொழி மரபாகச் சொல்லப்பட்டு வந்த கதைகளாக அமைந்தன. இவ்வாறு வரலாற்றுக்கு முந்தைய கால மனிதனின் வாழ்வியல், சிந்தனை மற்றும் சமய நம்பிக்கை பற்றிச் சொல்லப்பட்டு வந்த கதைகளே ஹோமர் போன்ற கவிஞர்களால் காப்பியமாகத் தொகுக்கப் பட்டன.

ஆங்கிலச் சொல்லான Epic என்பதும் ‘epo’ என்ற கிரேக்கச் சொல்லின் ஆக்கமாகக் கருதப்படுகிறது; ‘epo’ என்றால் ‘to tell’ என்றும், ‘epos’ என்றால் ‘anything to tell’ என்றும் பொருள்படும். எனவே Epic என்பது மரபுவழியாகச் சொல்லப்பட்டு வருவது என்பது பொருளாகிறது. இவ்வகையில் காப்பியம் என்பதும் பழமரபுகளைக் காத்து இயம்புவது அதாவது ‘சொல்லப்பட்டு வருவது’ என்பது விளங்குகிறது.

**காப்பியத் தோற்றம்**

எம்மொழியிலும், தொடக்கத்தில் காப்பிய இலக்கியம் தோன்றுவதற்கான அடிப்படைகளும், வளர்ச்சிப் படிநிலைகளும் அமைந்திருக்கும். திடீரென ஒரு பேரிலக்கியப் படைப்பு ஒரு மொழியில் முகிழ்த்து எழுதல் என்பது இயலாத ஒன்று. முதலில் தனிப் பாடல்களாகவும், செய்யுள் தொகுப்புகளாகவும் இருந்த தொல் பழங்கால (Primitive) இலக்கியப் படைப்பு மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்றது; கதையைத் தொகுத்துக் கூறும் பாடல்கள் பிறந்தன. கற்பனை வளம் விரிவடைந்தது. இவ்வாறுதான் காப்பியப் படைப்புகள் உருவாயின. தனிமனிதனின் வீரதீரச் செயல், அவன் பிறப்பு, வளர்ப்பு, அவன் சார்ந்த மரபு முதலான வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள், விழாக்களிலும் வழிபாடுகளிலும் பாடுபொருளாயின. அவனது புகழ் ஓர்

உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டது. அவன் ஒரு குறிக்கோள் மனிதனாக உயர்த்தப்பட்டான். மேலும் அவன் தெய்வீக நிலையை எய்தினான். அவனைப் போற்றிப் புகழ்ந்த நிலை, படிப்படியாக அவன் வாழ்க்கை வரலாறு பற்றிய கதையாக உருவாகித் தனிச்சிறப்பும் உயர்வும் பெற்றது. பின்னர் இசையோடு கூடிய கூற்று வகைக் கதைப்பாடல்கள் உருவாகத் தலைப்பட்டன. புலவர்கள் இவ்வரலாற்றுப் பழங்கதைப் பாடல்களைத் தொகுத்து, அவற்றை ஒரு முறைப்படுத்தித் தம் கவித்துவச் சிறப்பால் உயிரோட்டமுள்ள ஓர் ஒப்பற்ற படைப்பாகக் காப்பியத்தை ஆக்கித் தந்தனர்.

**காப்பிய இலக்கணம்**

தண்டியலங்காரம் வடமொழியில் தண்டி இயற்றிய காவ்யாதர்சம் என்னும் நூலைத் தமிழ்ப்படுத்தி அவரால் இயற்றப்பட்டது. காப்பிய இலக்கணத்தைத் தண்டியலங்காரம் விரிவாக எடுத்துரைக்கின்றது. காப்பியத்தைப் பெருங்காப்பியம், காப்பியம் என்று இரு வகைப்படுத்தி, அவற்றின் இலக்கணத்தைத் தனித்தனியே எடுத்துச் சொல்கிறது. இந்தப் பாகுபாடு தோன்றிய காலம் கருத்தில் கொள்ளத்தக்கது. தமிழ் இலக்கிய வரலாற்றில் வீரயுகத்தை அடுத்துத்தான் காப்பியக்காலம் தொடங்குகிறது. இக்காப்பிய எழுச்சிக்கு வித்திட்டவர் இளங்கோ அடிகள் ஆவார். இவர் எழுதிய காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரத்திற்கு முன் பல காப்பியங்கள் எழுந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தாலும் அவை அனைத்தும் ஊகங்களே. தமிழில் தோன்றிய முதல் காப்பியமே சிலப்பதிகாரம்தான். இதனை அடியொற்றியே தமிழில் பல காப்பியங்கள் எழுதப்பட்டுள்ளன. 'ஐம்பெருங்காப்பியம்' என்னும் தொடரை 14 - ம் நூற்றாண்டைச் சேர்ந்த மயிலைநாதர் குறிப்பிடுகிறார்.

**பெருங்காப்பியம்**

1) பெருங்காப்பியமாவது வாழ்த்துதல், தெய்வத்தை வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்ற மூன்றில் ஒன்றினைத் தொடக்கத்தில் பெற்று வரும். அவற்றுள் இரண்டோ மூன்றுமோ பெற்றும் காப்பியம் தொடங்கலாம்.

2) அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளைப் பயனாகத் தருவதாக அமையும்.

3) தன்னிகர் இல்லாத தன்மை உடையவனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

4) மலை, கடல், நாடு, நகர், ஆறு பருவங்கள், கதிரவன் தோற்றம், சந்திரனின் தோற்றம் ஆகியவற்றைப் பற்றிய வருணனைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

5) திருமணம் புரிதல், முடிசூடல், சோலையில் இன்புறுதல், நீர் விளையாடல், மதுவுண்டு களித்தல், மக்களைப் பெற்றெடுத்தல், ஊடல் கொள்ளுதல், புணர்ச்சியில் மகிழ்தல் முதலிய நிகழ்வுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

6) அமைச்சர்களுடன் ஆலோசனை செய்தல், தூது செல்லல், போர் மேற்கொண்டு செல்லுதல், போர் நிகழ்ச்சி, வெற்றி பெறுதல் போன்ற நிகழ்வுகளும் இடம் பெறுதல் வேண்டும்.

7) சந்தி எனப்படும் கதைப் போக்கு (கதைத் தொடக்கம், வளர்ச்சி, விளைவு, முடிவு என்பவை) வரிசைப்படி அமைந்திருக்க வேண்டும்.

8) அமைப்பு முறையில் பெருங்காப்பியம் உள் பிரிவுகளுக்குச் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பெயர்களில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

9) எண்வகைச் சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்புகளும் கேட்போர் விரும்பும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

10) கற்றறிந்த புலவரால் புனையப்பட்டதாக இருத்தல் வேண்டும். நாற்பொருளும் குறையாது வரவேண்டும். இவை தவிரப் பிற உறுப்புகளில் சில குறைந்தும் வரலாம்

**பெருங்காப் பியநிலை பேசுங் காலை**
**வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று**
**ஏற்புடைத் தாகி முன்வர வியன்று**
**நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்**
**தன்னிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்**
**மலைகடல் நாடு, வளநகர் பருவம்**
**இருசுடர்த் தோற்றமென்று இனையன புனைந்து**
**நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்**
**பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்**
**தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்**
**புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்று**
**இன்னன புனைந்த நன்னடைத் தாகி**
**மந்திரம் தூது செலவுஇகல் வென்றி**
**சந்தியின் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்**
**பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி,**

**நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்**
**கற்றோர் புனையும் பெற்றிய தென்ப**

(தண்டியலங்காரம், நூற்பா - 8)

**கூறிய உறுப்பிற் சிலகுறைந் தியலினும்**
**வேறுபாடு இன்றென விளம்பினர் புலவர்**

(தண்டியலங்காரம், நூற்பா - 9)

**சிறுகாப்பியம்**

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றேனும், இரண்டேனும், குறைந்து வருவது காப்பியமாகும். தண்டியலங்காரம் கூறும் காப்பியம் என்பது சிறுகாப்பியத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

**அறமுதல் நான்கினுங் குறைபா டுடையது**
**காப்பியம் என்று கருதப் படுமே**

(தண்டியலங்காரம், நூற்பா - 10)

மேற்கூறிய பெருங்காப்பியமும், காப்பியமும் ஒருவகைச் செய்யுளாலும், பலவகைச் செய்யுள்களாலும், உரைநடை கலந்தும், பிறமொழி கலந்தும் வரலாம். மேற்கூறியவாறு தண்டியலங்காரம் காப்பிய இலக்கணத்தைத் தெரிவிக்கின்றது.

**பாவிகம்**

காப்பியத்தினுடைய பண்பாகப் பாவிகம் என்பதையும் அந்நூல் குறிக்கின்றது.

**பாவிகம் என்பது காப்பியப் பண்பே**

(தண்டியலங்காரம், நூற்பா - 91)

காப்பியம் முழுவதிலும் கவிஞன் வலியுறுத்த விரும்பும் காப்பியத்தின் சாரமான அடிப்படைக் கருத்தினையே பாவிகம் எனலாம். காப்பியத்தில் இடம்பெறும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் இக்கருத்து ஊடுருவி நிற்பது. இது நூலின் தனிச் செய்யுள்களிலோ, பகுதிகளிலோ புலனாவது இல்லை. தொடக்கம் முதல் முடிவு வரை நூலை முழுமையாக நோக்கும் போதே இப்பண்பு விளங்கும்.

**காப்பியச் சிறப்புகள்**

இலக்கிய உலகில் காப்பியம் ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது. இதனைச் செவ்விலக்கிய வகையில் (Classical Literature) அடக்குவர். இலக்கிய வளம் நிறைந்த பழமையான மொழிகளில் முதல் இலக்கியம் காப்பியமாக அமைவதைக் காணலாம். இந்த நிலை தமிழுக்கு இருக்கிறதா? என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும். இதனால் மட்டுமே தமிழ் பழமையான செம்மொழி அன்று என்று கூறிவிட முடியாது. இங்குக் கர் என்பார் கூற்று நினைத்தற்கு உரியது. அவர் "வீரயுகத்தில் காப்பியம் மட்டுமே எழ வேண்டும் என்ற நியதி இல்லை. பல மொழிகளில் ஹோமரின் இலியத், ஒதீசி போன்ற காவியங்களுக்குப் பதிலாக, கதை எதுவும் இன்றித் தங்கள் தங்கள் நாட்டுச் சிற்றரசர்களையும் தலைவர்களையும் பாராட்டிப் பாடும் பாடல்கள் எழுந்துள்ளன" என்கிறார். சங்க இலக்கியமான புறநானூறும், பதிற்றுப்பத்தும் பத்துப்பாட்டில் பல பாடல்களும் இத்தகைய வீரயுகப் பாடல்கள்தாம். சீன மொழியிலும் இத்தகைய உதிரிப் பாடல்களே வீரயுகத்தில் எழுந்துள்ளன.

**காப்பிய வகை**

காப்பியம் என்றாலே தமிழர்களுக்குச் சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலான ஐம்பெருங் காப்பியங்களும் - ஐஞ்சிறு காப்பியங்களுமே நினைவுக்கு வரும். தொடர்ந்து பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலான பலவும் நம் நினைவுக்கு வருவதுண்டு. 20-ஆம் நூற்றாண்டில் பாரதியின் பாஞ்சாலி சபதம், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, புலவர் குழந்தையின் இராவண காவியம், கண்ணதாசனின் ஏசு காவியம் போன்றனவும் காப்பியங்களாகவே எண்ணப்படுகின்றன. எனவே காப்பியம் என்ற இலக்கிய வகையைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

**தமிழில் காப்பியங்கள்**

தமிழின் செவ்வியல் இலக்கியக் காலமான சங்க காலத்தில் நீண்ட காப்பியங்கள் வழக்கில் இல்லை. மூன்று அடிச் சிற்றெல்லை முதல் 782 அடிப் பேரெல்லை வரை அமைந்த நீண்ட தனிப்பாடல் அமைப்பே வழக்கத்தில் இருந்தது. இலக்கிய நடையில் எழுதப்பட்ட காப்பியங்கள் இல்லையே தவிர, நிறையக் கதைகள் மக்களின் வாய்மொழி இலக்கியங்களாக இசையோடு நடிப்புடன் தெருக்கூத்தாக அரங்கேற்றப்பட்டன.

ஏட்டில் எழுதா வாய்மொழிக் கதைகள், வழிவழியாக அடுத்தடுத்த தலைமுறைக்குப் பெயர்த்துத் தரப்பட்டன. நெடுங்காலமாய் மண்ணில் உலவிய கதைகள் புலவர்களால் யாப்பு வடிவில் காப்பியங்களாக ஆவணப் படுத்தப் பட்டன.

**தமிழில் காப்பிய வகை**

தமிழ்க் காப்பியம் என்றாலே நமக்கு நினைவுக்கு வருவன ஐம்பெருங் காப்பியங்கள் - ஐஞ்சிறு காப்பியங்கள் என்பனவே. கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதை என்ற ஒரு மிகச் சிறந்த காப்பியமும் உள்ளது. பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் என்பனவும் தமிழில் தோன்றிய மிகச் சிறந்த காப்பியப் படைப்புகளே. இருபதாம் நூற்றாண்டிலும் காப்பியம் என்ற பெயரில் பல படைப்புகள் வெளி வந்துள்ளன. இவற்றைப் பின்வரும் வகைப்பாடுகளில் பகுத்துக் காணலாம்.

1) இதிகாசம்

2) புராணம்

3) பெருங்காப்பியம்

4) சிறுகாப்பியம்

5) மறைந்துபோன தமிழ்க் காப்பியம்

6) மொழிபெயர்ப்புக் காப்பியம்

7) இசுலாமிய சமயக் காப்பியம்

8) கிறித்தவ சமயக் காப்பியம்

9) தற்காலக் காப்பியம் - மற்றும் கதைப் பாடல்கள்

கம்பராமாயணமும் வில்லிபாரதமும் தமிழில் இதிகாசக் காப்பியங்களாகும். ஆனால் இவை இதிகாசத் தன்மையான வாய்மொழி மரபோ, உணர்ச்சியோ இன்றிக் கலைத்தன்மையோடு கற்பனை வளமும், கருத்தியல் புனைவும் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. இதனால், இவை மேலை இலக்கியக் கலைக்காப்பியம் என்ற வகையைச் சார்ந்தன எனலாம்.

தமிழில் புராணக் காப்பியங்கள் மூன்று வகையாகப் படைக்கப் பட்டுள்ளன. ஒன்று, கந்தபுராணம் போன்ற கடவுளர் பற்றிய புராணக் காப்பியம். இரண்டாவது வகை திருவிளையாடல் புராணம் போன்ற கடவுளர் பற்றிய தலபுராணம். மூன்றாவது வகையைச் சார்ந்தவை மாமனிதர் பற்றிய பெரியபுராணம் போன்றவை ஆகும்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன பெருங்காப்பியங்கள் என்றும்; உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், நீலகேசி, சூளாமணி ஆகியன சிறு காப்பியங்கள் என்றும் எண்ணப்படுகின்றன.

சமயப் போராட்டங்கள், மக்களின் கவனிப்பு இன்மை முதலான காரணங்களால் அழிந்து போன தமிழ்க் காப்பியங்கள் பல. உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்ட ஒரு சில காப்பியங்களில் தகடூர் யாத்திரை, வளையாபதி,

குண்டலகேசி, விம்பசார கதை, சாந்தி புராணம், நாரத சரிதை, கலியாணன் கதை, பருப்பதம், புராண சாகரம், அமிர்தபதி, பிங்கலகேசி, அஞ்சனகேசி, காலகேசி, இராசராச விசயம், வீரணுக்க சரிதம், குலோத்துங்கச் சோழன் சரிதை முதலான காப்பியங்களின் பெயர்கள் அறியப்படுகின்றன.

நச்சினார்க்கினியர் உரையிலும், புறத்திரட்டிலும் காணப்படும் இராமாயணச் செய்யுள்கள்; பெருந்தேவனார் குறிப்பிடும் இராமாயண வெண்பா; யாப்பருங்கலத்திலும், வீரசோழியத்திலும் மேற்கோள் காட்டப்படும் வெண்பாவில் அமைந்த இராமாயணச் செய்யுள்கள்; புராணம் குறிப்பிடும் சைன ராமாயணம்; பல திரட்டு என்னும் சுவடித் தொகுப்பில் உள்ள நான்கு இராமாயண வெண்பாக்கள் இவற்றின் மூல நூல்கள் அழிந்து போய்விட்டன.

இதே போன்று சங்ககாலம் தொட்டுப் பாரதக் கதை தொடர்பான பல காப்பியங்கள் எழுந்துள்ளன. சின்னமனூர்ச் செப்பேடு "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" எனச் சங்க காலத்ததான ஒரு பாரதம் பற்றிக் குறிப்பிடுகிறது. அடுத்தது பெருந்தேவனார் பாடிய பாரதம். வத்சராசன் பாரதம் அல்லது அருணிலை விசாகன் பாரதம் என்ற ஒரு பாரத நூலும் குறிப்பிடப் படுகின்றது. இவை அனைத்தும் மறைந்து போயின.

தமிழில் பல தழுவல் காப்பியங்கள் எழுந்துள்ளன. இத்தகைய தழுவலன்றி மொழிபெயர்ப்பாகவும் பல எழுந்துள்ளன. மனுசரிதை, வசுசரிதை, பிரபுலிங்க லீலை, வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியாரின் துறக்க நீக்கம் (மில்டனின் Paradise Lost), அனந்த நாராயணரின் இலியதம் (ஹோமர்), அ. சிங்கார வேலுவின் ஒதீசியம் (ஹோமர்), ஜமதக்னியின் மொழிபெயர்ப்பான இரகுவம்சம், குமார சம்பவம், மேக சந்தேசம் (காளிதாசர்), ஆதி வரகவி மொழி பெயர்த்த காதம்பரி ஆகியன இவ்வகையில் குறிப்பிடத் தக்கன.

இசுலாமியக் காப்பியங்களில் குறிப்பிடத்தக்கது சீறாப்புராணம். கிறித்தவக் காப்பியங்களில் தேம்பாவணியும், இரட்சணிய யாத்திரிகமும் சிறப்புடையன. தற்காலத்தில் பாரதியின் பாஞ்சாலி சபதம் முதலானவும், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, தமிழச்சியின் கத்தி முதலானவும் காப்பிய வரிசையில் குறிப்பிடப்படுவன. முடியரசனின் பூங்கொடி, கவியோகி சுத்தானந்த பாரதியின் பாரத சக்தி மகா காவியம், புலவர் குழந்தையின் இராவண காவியம் ஆகியன பழந்தமிழ்க் காப்பிய மரபில் பாடப்பட்டனவாகும். பஞ்சபாண்டவர் வனவாசம், கர்ணன் சண்டை, நல்லதங்காள் கதை முதலான பல எண்ணற்ற கதைப் பாடல்கள் தற்காலக் காப்பிய வரிசையில் இடம் பெற்றுள்ளன.

**தமிழில் பெருங்காப்பியங்கள்**

தமிழில் பெருங்காப்பியங்களை ஐம்பெருங் காப்பியங்கள் என்ற வகையுள் அடங்குகின்றனர். அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன. இவற்றுள் சிலப்பதிகாரம் மணிமேகலை இரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என்பர். ஆனால் இந்தப் பாகுபாடுகள் எதன் அடிப்படையில் செய்யப்பட்டன. இப்பாகுபாடு சரிதானா? என்ற சிந்தனை அறிஞரிடையே இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது. இங்கே குறிக்கப்பட்டுள்ள ஐம்பெருங் காப்பியங்கள் வரிசையில் குண்டலகேசியும், வளையாபதியும் கிடைக்கப் பெறவில்லை. அவை எப்படி இருந்தன. அவை பெருங்காப்பிய மரபில் பாடப் பட்டவைதானா? என்பது யாருக்கும் தெரியாது. நன்னூல் மயிலைநாதர் உரையில் (நூ.387) ‘ஐம்பெருங் காப்பியம்’ என்ற பெயர் காணப்படுகிறது. பின்னர் தோன்றிய தமிழ்விடுதூது ‘கற்றார் வழங்கு பஞ்ச காப்பியம்’ என்று குறிப்பிடுகின்றது. இந்த இரு நூல்களிலும் எவை ‘பஞ்ச காப்பியம்’ என்பது குறிக்கப்படவில்லை. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கந்தப்ப தேசிகர்,

**சிந்தா மணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்**

**நந்தா மணிமே கலைபுனைந்தான் - நந்தா**

**வளையா பதிதருவான் வாசகனுக்கு ஈந்தான்**

**திளையாத குண்டலகே சிக்கும்**

என்று ஐம்பெருங்காப்பியங்களை எண்ணிச் சொல்கிறார்.

**சிறுகாப்பியங்கள்**

தமிழில் சிறுகாப்பியங்களை ஐஞ்சிறு காப்பியங்கள் என்று வகை செய்வர். இந்த வகைப்பாடும் கூடக் கருத்து வேறுபாடுகளுக்கு உரியதாக உள்ளது. யசோதர காவியம், நீலகேசி, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், சூளாமணி ஆகியவற்றை ஐஞ்சிறு காப்பியங்களாகத் தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர்.

**தமிழ்க் காப்பிய வகைமையின் பயன்கள்**

உயர்தனிச் செம்மொழியாய்த் திகழும் தமிழின் தொன்மையை உலகம் அறிய, கால அடிப்படையிலான காப்பிய வகைமையாக்கம் அவசியமாகிறது. காப்பிய வகைமை மூலம் அந்தந்தக் கால மக்களின் மதிப்பீடுகள், பழக்க வழக்கங்கள், பண்பாட்டுக் கூறுகள், சமயச் சடங்குகள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை நம்மால்

தெளிவாக அறிய முடியும். கால முறைப்படி காப்பியங்களை வகைமைப் படுத்துவதன் மூலம், அதே காலத்தில் இந்திய இலக்கியத்தில் செய்யப்பட்ட காப்பியப் பதிவுகளை ஒப்பு நோக்கலாம். மறைந்து போன அல்லது அழிந்து போன தமிழ்க் காப்பியங்களை எளிதாக அறிந்து கொள்ளலாம். காப்பியங்களை வகைமைக்குள்ளாக்கும் போது, ஒவ்வொரு புலவரும் கொண்டிருந்த இலக்கியக் கொள்கைகளை இனங்காண முடியும். ஆக, காப்பிய வகைமை என்பது, தமிழ் இலக்கியத்திற்குச் செய்யும் பெருந்தொண்டாகவே அமைகிறது.

**வகைமைப்படுத்தும் முறை**

வகைமைப் பாகுபாட்டைக் கீழ்க்காணும் அடிப்படைகளை ஒட்டிச் செய்யலாம் :

(1) காப்பியங்களை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட பா வகையின் அடிப்படையில் செய்யலாம்.

(2) வடமொழிக் காப்பிய வகைமை மரபைப் பின்பற்றி அமைக்கலாம்.

(3) அவை தோன்றிய காலக் கட்டத்தின் அடிப்படையில் பிரிக்கலாம்.

(4) சோழர் காலம், பல்லவர் காலம் என்று அரசர்களின் காலத்தை முன்னிறுத்திச் செய்யலாம்.

(5) பாத்திர அடிப்படையிலும், வேறு காப்பியங்களின் தொடர்ச்சி அடிப்படையிலும் அமைக்கலாம்.

(6) காப்பியப் புலவர் அல்லது காப்பிய மாந்தர் பின்பற்றிய சமயத்தின் அடிப்படையில் பார்க்கலாம்.

(7) பொதுவான, ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தக் கோட்பாடுமின்றி மனவோட்டத்தின் அடிப்படையில் பிரிக்கலாம்.

(8) பாடல்களின் எண்ணிக்கை, அளவின் அடிப்படையிலும் செய்யலாம்.

இவ்வாறு காப்பியங்களை வகைமைப் படுத்தும் மரபு தமிழில் இருந்து வருகிறது.

**பா வகைமை** :

மு.அருணாசலம் பா வகைகளை அடிப்படையாகக் கொண்ட வகைமையை முன்வைக்கிறார். அவரது கருத்துப்படி, “காப்பியம் என்பது கதை தழுவிய தொடர்நிலைச் செய்யுள். ஆசிரியத்தில் தொடங்கிப் பின்னர் விருத்த யாப்பாக வளர்ந்தது. இளங்கோ ஒருவரே கலிப்பாவைக் காப்பியத்தில் படைத்துக் காட்டுகிறார்.

ஆசிரியப்பாவால் இயன்றவை காலத்தால் பழமையானவை. சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை என்ற மூன்றும் அவ்வகையைச் சேர்ந்தவை.

**ஏற்றுக் கொள்ளத்தக்க காப்பிய வகைமை**

(1) தமிழின் முதற்காப்பியம் சிலப்பதிகாரமே என அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

(2) சிலம்பின் தொடர்ச்சி மணிமேகலையாய் மலர்வதால் இவை இரண்டினையும் ஒன்றிணைத்து இரட்டைக் காப்பியம் என வகைப் படுத்துகின்றனர்.

(3) மூன்றாம் காப்பியமாகப் பெருங்கதையை முன் வைக்கின்றனர்.

(4) ஐம்பெருங்காப்பியங்கள் எனச் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசியைக் குறிப்பிடுகின்றனர்.

(5) ஐஞ்சிறு காப்பியங்கள் என யசோதரகாவியம், உதயண குமார காவியம், நீலகேசி, நாககுமார காவியம், சூளாமணி ஆகிய நூல்களைக் குறிப்பிடுகின்றனர்.

(6) இராமாயண, மகாபாரதக் கதைகளை இதிகாசங்கள் என அழைக்கின்றனர்.

(7) பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்றைப் புராணக் காப்பியங்கள் என்கின்றனர்.

**மன்னர்களின் ஆட்சிக் காலத்தை முன்வைத்து வகைப்படுத்துதல்**

காப்பிய வகைமையாக்கம் பல இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் மன்னர்களின் ஆட்சிக் காலத்தை முன்வைத்து நடைபெற்றது எனலாம்.

**(1) சங்க கால இலக்கியங்கள்**(கி.மு. 500 முதல் கி.பி. 200 வரை)

தோன்றிய நூல்கள் : **அகத்தியம், தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு**
**(2) சங்கம் மருவிய கால இலக்கியங்கள்** (கி.பி. 200 முதல் கி.பி. 450 வரை)

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்** இக்காலத்தில் தோன்றின.சங்க காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கள் குடித்தலையும், பரத்தமைத் தொடர்பையும் இக்கால இலக்கியங்கள் கண்டித்தன. பௌத்தமும் சமணமும் தமிழகத்தில் வேரூன்றின. தனிப்பாடல் அமைப்பை இளங்கோ மாற்றி, சிலப்பதிகாரம் எனும் காப்பியம் தந்தார்.

**பசியைப் போக்குதலே உயர்ந்த அறம்**

எனும் நோக்கில் சீத்தலைச் சாத்தனார் **மணிமேகலை** எனும் காப்பியம் படைத்தார். குணாட்டியர் என்பவரால் பைசாச மொழியில் இயற்றப்பட்ட பிருகத் கதை எனும்

நூலின் அடிப்படையில் பெருங்கதை அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் கொங்கு வேளிர். இது சமண சமய நூல்.

**(3) சோழர் காலக் காப்பியங்கள்**(கி.பி. 900 முதல் கி.பி. 1300)

**1. *சீவகசிந்தாமணி*** - திருத்தக்க தேவர்

**2. வளையாபதி** - 72 பாடல்கள் தற்போது கிடைத்துள்ளன. **ஆரிய வைசியபுராண**த்தின் அடிப்படையில் அமைந்தது.

**3. குண்டலகேசி** - பௌத்தம் சார்ந்தது.

**4. நீலகேசி** - தமிழின் முதல் தர்க்க நூல். புத்த சமய நூலுக்கு **(குண்டலகேசி)** எதிர்ப்பாகத் தோன்றியது. சமண சமய நூல்.

**5. சூளாமணி** - வடமொழியில் ஜினசேனர் எழுதிய **மகாபுராண**த்தின் அடிப்படையில் எழுதப் பட்டது.

**6. உதயணகுமார காவியம்** - 367 பாடல்களை உடையது. உதயணன் வரலாறு கூறும் நூல் இது. சமண சமயம் சார்ந்த நூல்.

**7. யசோதர காவியம்** - நூலாசிரியர் சமணர்.

**8. நாககுமார காவியம்** - சென்னைப் பல்கலைக்கழகம் 1973 இல் புலவர் சண்முகத்தைக் கொண்டு இந்நூலை வெளியிட்டது. **நாகபஞ்சமி கதை** என்ற பெயர் உண்டு. நாககுமாரனின் கதையைக் கூறும் காப்பியம் இது.

**9. மேரு மந்தர புராணம்** - சமண சமயத்தின் சமய சாரம் இந்நூல். ஆசிரியர் வாமனாசாரியர். “நல்வினையோ, தீவினையோ நம்மைத் தொடரும்” என்கிறது இந்நூல்.

**10. பெரிய புராணம் -** ஆசிரியர் சேக்கிழார். காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு. அப்போது சோழ நாட்டை ஆண்ட மன்னன் இரண்டாம் குலோத்துங்கன். சேக்கிழார் இந்நூலுக்கு இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். 63 நாயன்மார்கள்,9 தொகையடியார்களின் வரலாறு கூறும் நூல்.

**11. கம்பராமாயணம்** - ஆசிரியர் கம்பர். தமிழில் தோன்றிய காப்பியங்களுள் அளவிற் பெரியது. இராமபிரானின் வரலாறு கூறும் நூல்.

**12. நளவெண்பா** - ஆசிரியர் புகழேந்தி. வியாசபாரதத்தில் வரும் நளன் பற்றிய கதையைக் கூறுவது. வெண்பா யாப்பில் அமைந்தது.

**(4) நாயக்கர் காலம்**. இதைச் சிற்றிலக்கியக் காலமாக அழைக்கலாம். இக்காலத்தில்தான் கோவை, பரணி, பள்ளு, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்கள் தோன்றின.

**பல்வேறு தமிழறிஞர்களின் கருத்தில் காப்பியக் காலம் -ஓர் அறிமுகம்**

எந்தவோர் இலக்கிய வகைமையையும் அறிமுகப்படுத்த அது பிறந்த காலச் சூழலை அறிவது அவசியமாகிறது.

**(1) சி.வை. தாமோதரம் பிள்ளை**: இவர் இதிகாச காலமாகக் கி.பி.350 கி.பி. 1150 என்பதை முன் வைக்கிறார்.

**(2) எம்.சீனிவாச ஐயங்கார்**: Tamil Studies, (1914) என்னும் நூலில் எம்.சீனிவாச ஐயங்கார். 'Classic Period' என்ற செவ்வியல் காலமாகக் கி.பி.150 - கி.பி.500 என்பதை வரையறுக்கிறார். இக்கால கட்டத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை தோன்றின என்கிறார்.

**(3) கா.சு. பிள்ளை**: கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில், சீவகசிந்தாமணி, வளையாபதி உருவாகின என்கிறார்.

**(4) எஸ்.வையாபுரிப் பிள்ளை:** 1957இல் வெளியான இவரது காவிய காலம் என்னும் நூல் முற்காவிய காலம் கி.பி.750 - கி.பி.1000 வரை என்று கூறுகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி எனும் ஐம்பெருங் காப்பியங்கள் தோன்றிய காலம் இது என்பது இவர் கருத்து

**புதிய வகைமைகளுக்கு முன்னோடி**

தமிழ்ச் சிறுகதைகள் ஆங்கில இலக்கிய வகைமையின் தமிழ்வெளிப்பாடு என நினைக்கிறோம். ஆனால் கதை கூறும் மரபு ஈராயிரமாண்டு தொன்மை மிக்கது. தமிழ்க் காப்பியங்களில் அமைந்த கிளைக் கதைகளைத் தனிச் சிறு கதைகளாகக் கொள்ள முடியும். பிற்கால இலக்கிய வகைமைகளான சிற்றிலக்கியங்கள், குறுங்காவியங்கள்,சிறுகதைகள்,புதினங்கள் போன்றவை உருவாகக் காப்பியங்கள் அடியெடுத்துக் கொடுத்தன எனலாம். காப்பியங்கள் காலத்தால் முற்பட்டிருந்தாலும், இன்றும் அவற்றிலிருந்து ஆயிரக்கணக்கான இலக்கியப் புதுமைகள் உருவாகிக் கொண்டிருப்பதைமறுக்க இயலாது.

**புதிய காப்பியங்கள்**

இருபதாம் நூற்றாண்டில் புதுமைகளைக் கொண்ட பழைய மரபைப் பின்பற்றிய காப்பியங்களையும், புதுக்கவிதை போன்ற புதிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களையும் பற்றிப் பார்ப்போம்.

**இருபதாம் நூற்றாண்டுக் காப்பியங்கள்**

பாரதியின் பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு; பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய், தமிழச்சியின் கத்தி, இருண்டவீடு, எதிர்பாராத முத்தம்; கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை எழுதிய மருமக்கள்வழி மான்மியம்; கண்ணதாசன் சங்க இலக்கியப் பாத்திரங்களைக் கொண்டுபுனைந்த ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி; முடியரசனாரின் பூங்கொடி, வீரகாவியம்; கவியோகி சுத்தானந்த பாரதியின் பாரதசக்தி மகாகாவியம்; டாக்டர் சாலை இளந்திரையனின் சிலம்பின் சிறுநகை; புலவர் குழந்தையின் இராவண காவியம் ஆகிய இக்காப்பியங்களை இருபதாம் நூற்றாண்டுக்காப்பியங்களாகக் குறிக்கலாம்.

**புதுக்கவிதைக் காப்பியங்கள்**

யாப்பு வடிவத்தை உடைத்து, பாரதி, ந.பிச்சமூர்த்தி, தருமு சிவராம், சி.மணி, வைதீஸ்வரன், பசுவய்யா போன்றோரால் வளர்த்தெடுக்கப்பட்ட இயக்கம் புதுக்கவிதை இயக்கம். **எழுத்து** இதழும், **வானம்பாடி** இதழும் பெரியதாக வளர்த்தெடுத்த இப்புதுக்கவிதைகளிலும் காப்பியங்கள் சமீப காலமாய் அதிகம் படைக்கப்படுகின்றன. வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா போன்ற யாப்பு வகைக்குள் இடம் பெறவில்லை என இவற்றைப் புறந்தள்ளிவிட முடியாத அளவுக்குப் புதுக்கவிதை இந்நூற்றாண்டு இலக்கியமாகி உள்ளது. பாரதியின் வாழ்க்கை வரலாற்றைப் புதுக்கவிதையில் அமைத்து வாழ்க்கை வரலாற்றுக் காப்பியம் படைத்த வைரமுத்துவின் **கவிராஜன்கதை** புதிய முயற்சி. ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, சிற்பி, ஞானி ஆகியோரும் புதுக்கவிதைக் காப்பியங்களைப் படைத்துள்ளனர்.

இந்தியாவின் ஒப்பற்ற இதிகாசங்களைப் புதுக்கவிதைக் காப்பியமாக்கிய ஆனந்த விகடன் இதழ் வாலியைக் கொண்டு இப்பணியைச் செய்வித்தது. கவிஞர் வாலி **இராமாயணத்**தை **அவதார புருஷன்** எனும் தலைப்பில் புதுக்கவிதைக் காப்பியத் தொடராக ஆனந்த விகடனில் எழுதினார். அவரே **மகாபாரதத்**தை ஆனந்த விகடனில் புதுக்கவிதையாய் எழுதினார்.**பாண்டவர் பூமி** என்ற தலைப்பில் அது காப்பிய நூலாய் வெளியானது.ஸ்ரீகிருஷ்ணரின் வரலாற்றை வாலி **கிருஷ்ண விஜயம்** என்ற காப்பியமாகப் படைத்தார்.

**மொழிபெயர்ப்புக் காப்பியங்கள்**

பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட காப்பியங்களை நாம் மொழிபெயர்ப்புக் காப்பியங்கள் என வகைமைக்குள்ளாக்கலாம்.

**தெலுங்கு: மனுசரிதையும் வசுசரிதை**யும் தெலுங்கிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்ட காப்பியங்கள் ஆகும்.

**கன்னடம்: பிரபுலிங்க லீலை** எனும் காப்பியம் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் (17ஆம் நூற்றாண்டு) கன்னடத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**ஐரோப்பிய மொழிகள்:** வெள்ளக்கால் ப.சுப்பிரமணிய முதலியார் மில்டனின் **Paradise lost** எனும் காப்பியத்தைத் தமிழில் **துறக்க நீக்கம்** என்று மொழி பெயர்த்துள்ளார். ஹோமரின் **இலியத்தை (Iliad)** அனந்த நாராயண ஐயர் மொழி பெயர்த்துள்ளார். ஹோமரின் **ஒடிசி**யை (Odyssey) **ஓசியத்** என அ.சிங்காரவேலு தமிழில் மொழிபெயர்ப்புக் காப்பியமாகத் தந்துள்ளார். சமஸ்கிருதத்தில் அமைந்த **காதம்பரியை** ஆதிவரகவி தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

**காப்பியமும் இலக்கியச் செழுமையும்**

தமிழ்க் காப்பியங்கள் இலக்கியச் செழுமை மிக்கனவாய் அமைகின்றன. கதைகூறல் என்பது மட்டுமன்றி, அக்காலப் பண்பாட்டினை, தமிழ் மரபினை, வரலாற்றினை விளக்கவும் தமிழ்க் காப்பியங்கள் முயன்றன ; அதில் வெற்றியும் பெற்றன. கற்பனை வளம், உவமை நயம், தேர்ந்த சொல்லாட்சி, ஆழ்ந்த சிந்தனையை உள்ளடக்கிய கருத்து, சுவையாகக் கதை சொல்லும் தன்மை ஆகியவற்றால் காப்பியங்கள் இலக்கியச் செழுமை உடையனவாய்த் திகழ்கின்றன.

## பயிற்சி வினாக்கள்

### குறு வினா

1. காப்பியம் என்றால் என்ன? விளக்கம் தருக

2. காப்பியத்தின் தோற்றம் குறித்து விளக்குக

3. காப்பிய வகைகள் சிலவற்றை விளக்குக

4. தமிழில் காப்பியங்கள் – குறிப்பு வரைக

5. தமிழ்க் காப்பியங்களின் புதிய வடிவங்கள் குறித்து எழுதுக

## நெடுவினா

1. காப்பிய இலக்கணம் கூறி, பெருங்காப்பியம், சிறுகாப்பியம் ஆகியவற்றை விளக்குக

2. காப்பியத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்து கட்டுரை வரைக

3. காப்பிய வகைமைகள் குறித்து விவரித்து எழுதுக

4. தமிழ்க் காப்பியங்களின் மரபு மாற்றம் குறித்து விவரி

## அலகு – 2

**சிலப்பதிகாரம் – வஞ்சிக்காண்டம் முழுமையும்**

**மணிமேகலை – 13 ஆம் காதை முதல் 16 ஆம் காதை வரை**

**சீவகசிந்தாமணி – சுரமஞ்சரியார் இலம்பகம்**

# சிலப்பதிகாரம்

# வஞ்சிக் காண்டம்

### சிலப்பதிகாரம்

தமிழ் மொழியில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். இந்நூலின் ஆசிரியர் **இளங்கோவடிகள்** ஆவார். இக்காப்பியம் சங்க காலத்திற்கும் தேவாரக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்தது. காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து, குலவொழுக்கப்படி திருமணம் செய்து, இல்லறம் நடத்திய **கோவலன் கண்ணகி** வாழ்க்கை வரலாற்றை விளக்குவது இந்நூல். இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை மூன்று காண்டங்களில் முப்பது காதைகளில் விரிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

சிலப்பதிகாரக் காப்பிய நிகழ்ச்சிகள் முறையே சோழ, பாண்டிய, சேர நாடு என்னும் மூன்று நாடுகளில் மூவேந்தரின் தலைநகரங்களிலும் நடந்த நிகழ்ச்சிகளாகும். எனவே இக்காப்பியம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்று மூன்று காண்டங்களாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்த மூன்று காண்டங்களில் முப்பது காதைகள் அமைந்துள்ளன. இந்தக் காப்பியத்தின் கதை சிலம்பினைக் காரணமாகக் கொண்டு அமைந்ததால் **சிலப்பதிகாரம்** எனப் பெயரிடப்பட்டது. காப்பியத்தில் அறம், பொருள், இன்பம் மூன்றும் இடம் பெறுகின்றன.

ஒருவரது வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து, உயர்ந்த உண்மைகளைக் காட்டி, மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் முதல் இலக்கிய முயற்சியாக, பெருங்காப்பியமாக அமைந்தது சிலப்பதிகாரம் ஆகும். இளங்கோ அடிகள் இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழையும் பயன்படுத்தியுள்ளார். அதனால் சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் எனப் போற்றப்படுகிறது.

சிலப்பதிகாரம் இவ்வுலக மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் மூன்று உண்மைகளைக் கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது.

**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும்**

இவை சிலப்பதிகார நூல் முழுமையும் விரவி வந்துள்ளதைக் காணலாம். சிலப்பதிகாரக் காப்பியத்தின் பெருமையைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்" எனப் பாராட்டியுள்ளார்.

இன்பியலும் துன்பியலும் கலந்து எழுதப்பட்ட இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள் என்பவராவார். இவர் புகழ் பெற்ற சேரமன்னன் செங்குட்டுவனுடைய தம்பி எனக் கருதப்படுகின்றது. இவர் இளவரசுப் பட்டத்தை விடுத்துத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். தன் அண்ணன் செங்குட்டுவனுடன் மலைவளம் காணச் சென்றபோது, கண்ணகியைப் பற்றிய செய்தியைச் சீத்தலைச்சாத்தனார் எனும் புலவர் மூலமாக அறிந்தார் இளங்கோ. கண்ணகியின் கற்பொழுக்கமும், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் நேர்மையும் அரசியல் நடுநிலைமையும் அவரை மிகவும் கவர, மூவேந்தர்களுக்கும் உரிய தமிழின் உயர் காவியமாக சிலப்பதிகாரத்தைக் கவிபுனைந்தார் அவர்.

சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி மற்றும் கோவலனின் துணைவி மாதவி ஆகியோரது வரலாற்றை விவரிக்கின்றது. இதன் இரட்டைக் காப்பியமாகத் திகழும் மணிமேகலை, ஆடலரசி மாதவியின் மகள் மணிமேகலையின் வரலாற்றை உரைக்கும் காவியமாகும். இங்கு பாடப்பகுதியாக சிலப்பதிகாரத்தின் வஞ்சிக்காண்டம் முழுமையும் அமைந்துள்ளது.

**வஞ்சிக் காண்டம்**

வஞ்சிக்காண்டம் 7 காதைகளைக் கொண்டது. அவையாவன:

1. குன்றக் குரவை
2. காட்சிக் காதை
3. கால்கோள் காதை
4. நீர்ப்படைக் காதை
5. நடுகற் காதை

6. வாழ்த்துக் காதை
7. வரம் தரு காதை

கண்ணகி வானுலகு சென்ற காட்சியைக் கண்ட மலைக்குறவர்கள், அவளைத் தம் குல தெய்வமாகக் கருதி அவளுக்காகக் குரவைக்கூத்து நிகழ்த்துகின்றனர். மலைவளம் காணவந்த அரசன் செங்குட்டுவனிடம் தாம் கண்ட காட்சியை எடுத்துரைக்கின்றனர். உடனிருந்து சாத்தனார் கோவல - கண்ணகியர் வரலாற்றை, புகார், மதுரை நிகழ்வுகளை அரசனுக்கு விளக்குகிறார். அதைக் கேட்ட செங்குட்டுவன் மனைவி, 'நம் சேரநாடு வந்த இப்பத்தினிக் கடவுளுக்கு வழிபாடு எடுக்க வேண்டும்' என்கிறாள்.

**நம் அகல்நாடு அடைந்த இப்**
**பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்**

**(சிலப்பதிகாரம்: 25: 113-114)**

கண்ணகிக்குச் சிலை செய்ய இமயத்தில் கல் எடுத்துக் கங்கையில் புனித நீராட்டிக் கொண்டுவந்து வஞ்சியில் கோயில் எடுப்பதே நோக்கமானாலும், தமிழர் வீரத்தை நிலை நாட்டுவதற்காகவும் சேரன் படை எடுத்துச் செல்கிறான். வழியில் பல மன்னர்கள் திறைப் பொருளுடன் சேரனை வரவேற்கின்றனர்; வாழ்த்துகின்றனர். எதிர்த்த மன்னர்களைச் சேரன் வெல்கிறான்.

கண்ணகி சிலை வடிக்க, இமயத்தில் கல் எடுத்து, தமிழர் தம் வீரத்தைப் பழித்த கனக-விசயர் தலையிலே அக்கல்லைச் சுமந்து வரச் செய்து, கங்கை ஆற்றில் புனித நீராட்டுகிறான். அப்போது அங்கு வந்த மாடல மறையோன் சேரனின் வெற்றியைப் புகழ்கிறான். பின்னர்க் கோவலனுக்கும் கண்ணகிக்கும் நேர்ந்தவற்றைக் கேட்ட அவர்களின் தாயர் இறந்துபட்டனர் என்பதையும், அவர்தம் தந்தையர் துறவு மேற்கொண்டனர் என்பதையும், மாதவி-மணிமேகலை பௌத்தத் துறவியாகினர் என்பதையும், கவுந்தியடிகள் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தார் என்பதையும், அடைக்கலமாகக் கண்ணகியைப் பெற்ற மாதரி தீப்பாய்ந்து உயிர் துறந்தாள் என்பதையும், கொற்கை அரசன் வெற்றிவேற் செழியன் ஆயிரம் பொற்கொல்லர்களைப் பத்தினிக் கடவுளுக்குப் பலியிட்டான் என்பதையும் தெரிவிக்கிறான். இவ்வாறு புகார், மதுரை நிகழ்வுகளைக் கேட்டறிந்த செங்குட்டுவன் வஞ்சி திரும்புகிறான். சேரன் சிற்பநூல் வல்லாரைக் கொண்டு கண்ணகிக்குக் கோயில் எழுப்புகிறான். இமயக் கல்லில் வடிக்கப்பட்ட கண்ணகி சிலையைப் பிரதிட்டை செய்து முறைப்படி வழிபாடு

நடத்துகிறான். கண்ணகியின் அடித்தோழி, தேவந்தி, காவற்பெண்டு முதலானோர் அங்கு வந்து கண்ணகியை வாழ்த்திப் பாடுகின்றனர். பத்தினிக் கடவுள் மின்னல் கொடியாகச் செங்குட்டுவனுக்கும் காட்சியளிக்கிறாள். முன்பு பாண்டியனைப் பழிவாங்கிய வீரக்கண்ணகி, இங்கு அவனை மன்னித்து **அருள் செய்யும்** அருள் கடவுளாக மாறுகிறாள்.

**தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்**
**நல்விருந்து ஆயினான் நான்அவன் தன் மகள்**
**வெல்வேலான் குன்றில் விளையாட்டு யான் அகலேன்**
**என்னோடும் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்**

**(சிலப்பதிகாரம்: 29 பாடல் : 10)**

என அருள்புரிகிறாள். கண்ணகிக் கடவுளின் அருள்பெற்ற தோழியர் அம்மானை வரி, கந்துகவரி, ஊசல்வரி முதலான வரிப்பாடல்களால் மூவேந்தரையும், பத்தினிக் கடவுளையும் வாழ்த்துகின்றனர். இப்பத்தினி வழிபாட்டில் பன்னாட்டு மன்னர்கள் கலந்து கொள்கின்றனர்; குறிப்பாக இலங்கைக் கயவாகு மன்னன் இவ்விழாவில் கலந்து கொள்கிறான். பத்தினிக் கடவுள், அவ்வந்நாட்டு வழிபாட்டில் தான் எழுந்தருளுவதாக வரமளிக்கிறாள். இத்துடன் வஞ்சிக்காண்டம் நிறைவு பெறுகிறது.

## வஞ்சிக் காண்டம்

## 1. குன்றக் குரவை

திருச்செங்குன்றினைச் சேர்ந்த கண்ணகியாள், மலர் நிறைந்த ஒரு வேங்கை மரத்தின் அடியிலே சென்று நின்றனள், மதுரைமா தெய்வம் கூறியதைப் போலவே, கோவலன் இறந்ததன்பின் பதினான்கு நாட்கள் கழிந்திருந்தன. வானுலகத்திலிருந்து தேவருடன் அவர் வர, அவனுடன் அவளும் விமானம் ஏறி வானகம் நோக்கிச் சென்றனள். அக் காட்சியைக் குறவர் குடியினர் கண்டனர். அவர்கள் அடைந்த வியப்போ பெரிது!அதனால், அவளைத் தம் குலதெய்வமாகவே கொண்டு வழிபட்டுப் பணிந்து போற்றலாயினர்.

**குருவியோப்பியும் கிளிகடிந்தும் குன்றத்துச் சென்றுவைகி**
**அருவியாடியும் சுனைகுடைந்தும் அலவுற்று வருவேம்முன்**
**மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க**
**முலையிழந்து வந்துநின்றீர் யாவிரோவென முனியாதே**
**மணமதுரையோ டரசுகேடுற வல்வினைவந் துருத்தகாலைக்**

**கணவனையங்கு இழந்துபோந்த கடுவினையேன் யானென்றாள்**
**என்றலும் இறைஞ்சியஞ் இணைவளைக்கை எதிர்கூப்பி**
**நின்றஎல்லையுள் வானவரும் நெடுமாரி மலர்பொழிந்து**
**குன்றவரும் கண்டுநிற்பக் கொழுநனொடு கொண்டுபோயினார்**
**இவள்போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம் இல்லையாதலின்**
**சிறுகுடி யீரே சிறுகுடி யீரே**
**தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே**
**நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை**
**நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்**
**தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே**
**தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்**
**கோடுவாய் வைம்மின் கொடுமணி இயக்குமின்**
**குறிஞ்சி பாடுமின் நறும்புகை எடுமின்**
**பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்**
**பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்**
**ஒருமுலை இழந்த நங்கைக்குப்**
**பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே;**
**ஆங்கொன்று காணாய் அணியிழாய் ஈங்கிதுகாண்**
**அஞ்சனப் பூமி யரிதாரத் தின்னிடியல்**
**சிந்துரச் சுண்ணஞ் செறியத் தூய்த் தேங்கமழ்ந்து**
**இந்திர வில்லின் எழில்கொண் டிழுமென்று**
**வந்தீங் கிழியு மலையருவி யாடுதுமே;**
**ஆடுதுமே தோழி யாடுதுமே தோழி**
**அஞ்சலோம் பென்று நலனுண்டு நல்காதான்**
**மஞ்சுசூழ் சோலை மலையருவி ஆடுதுமே;**

குருவி ஒட்டினர்; கிளிகளை விரட்டினர்; மலைக்குச் சென்று தங்கினர் அருவி ஆடினர்; சுனை குடைந்தனர். அலை உற்று வந்தவர்கள் அவர்கள் வேங்கை மரத்து நறு நிழலில் கண்ணகியைக் கண்டனர். அவர்களுக்குக் கண்ணகி வள்ளியாகிய தெய்வம் போலக் காட்சி அளித்தாள். மனம் நடுங்க முலையிழந்து வந்து நின்றாள். அவளைக் கண்டு "நீவீர் யார்?" என்று கேட்டனர். அதைக் கேட்டு அவள் சினக்கவில்லை. "மதுரையையும், அதன் மன்னனையும் தீவினை வந்து அழித்தது. அந்தச் சுழற்சியில் கணவனை அங்கு இழந்து விட்ட தீவினையாட்டி யான்" என்று கூறினாள். அவர்கள் அவளைக் கரங்கூப்பி வணங்கினர். அவ்வாறு அவள் நின்ற நிலையில் வானவர் மலர் மழை பொழிந்தவராய் அவர்கள் கண்டு நிற்கக் கண்ணகியை அழைத்துக் கொண்டு சென்றனர். கோவலனும் உடன் வந்திருந்தான். அவனோடு இவளும் சென்றாள். இவளைப் போல் மாபெருந் தெய்வம் நம் குலத்தில் இல்லை. இந்த மாநிலத்தில் இல்லை" என்று அறிவித்தனர்.

“சிறுகுடியிரே! சிறுகுடியிரே! இவளை வழிபடும் தெய்வமாகக் கொள்ளுங்கள். இவள் வேங்கை நறுநிழலில் நமக்குத் தெய்வமாகக் காட்சி அளித்து உள்ளாள். அதனால் இவளுக்கு வழிபாடு இயற்றுங்கள்; அனைவரும் ஒன்று கூடுவோம்” என்றனர்.

“தொண்டகப் பறையைத் தொடுங்கள்; சிறுபறை அறையுங்கள்; கொம்புகளை முழக்குங்கள்: மணி ஒலி ஒலிக்கச் செய்யுங்கள்; குறிஞ்சிப்பண் பாடுங்கள்; நறும் புகை காட்டுங்கள்; பூ இட்டு வழிபாடு செய்யுங்கள்; அவள் புகழைப் பாடுங்கள்; பரவுதலைச் செய்யுங்கள்; பல்வகை மலர்களைத் தூவுங்கள் ஒரு முலை இழந்த நங்கை இவள் நம் பெருமலை தொடர்ந்து வளம் சுரக்க அருள் செய்வாள்” என்று கூறினர்.

அனைவரையும் ஒன்று திரட்டி, “மலை அருவி ஆடுவோம். வாருங்கள். இது இங்கு வந்த புதுப்புனல் ஆகும்; இது பொன் துகளை வாரிக் கொண்டு வருகிறது: இது நம் தலைவன் மலையாகும்: அவனோடு நாம் புலவி கொள்வதற்குக் காரணமே இல்லை. எனினும் நம்மைத் தவிர்த்து மற்றவர்கள் இதில் வந்து நீராடினால் நம் நெஞ்சு நோகும், வேதனைப்படும்; அதைப் பொறுக்க மாட்டோம்” என்றனர்.

**தெய்வத் திருப்பாடல்**

நீராடி முடித்த பின் தோழியர் தம் தலைவியை நோக்கி “நீராடினோம் நாம்; இனி நாம் செய்யத் தக்கது யாது?” என்று வினவினர். “கடலில் சூரபதுமனைக் கொன்ற வேலவன் ஆகிய முருகனைப் பாடுவோம்; அவனை வைத்துக் குரவைக் கூத்து ஆடி அவனைச் சிறப்பித்துப் பாடுவோம்” என்றனர். முருகனைச் சிறப்பித்துப் பாடினர். “ஆறுமுகத்தினன், பன்னிரு கையினன் முருகவேள்: இவன் வேல் ஏந்தி நின்றான்; மயில் மீது ஏறிச் சென்று அயில் வேல் தாங்கிக் கடலில் சூரபதுமனைக் கொன்றான்; அவுணர்களை அழித்தான்; அவன் தன் வேலைக் கொண்டு கிரவுஞ்ச மலையைப் பிளந்தான்” எனப்பாடினர். அடுத்து அகப்பொருள் துறை அமைய அவர்கள் பாடத் தொடங்கினர்.

“தலைவன் தந்த நோய் இதை அறியாத தாய் பூசாரியைக் கொண்டு வெறியாட்டு நடத்துகிறாள். இது நகைக்கத் தக்கது ஆகும். கோயில் பூசை செய்யும் பூசாரி வருவானாம். அவன் வழிபாடு செய்ய முருகன் வருவானாம். அவன் நம் நோயைத் தீர்ப்பானாம். இது மடமையன்றோ! அப்படி வந்தால் அந்த முருகன் ஒன்றும் அறியாதவனே ஆவான். எல்லாம் விளையாட்டாக முடியும். சிரிப்புத்தான் வருகிறது சிந்தித்துப் பார்த்தால்” என்றனர்.

“வேலைத் தாங்கிய வேலவன் ஆகிய முருகன் வந்தால் எம் குறமகள் தான் விரும்பிய காதலனை மணக்க அருள் செய்க என்று வேண்டுவோம். அவள் விரும்பும் தலைவனையே அவள் மணக்க அருள் செய்க! மாறுபட்டு அயலவனைக் கொண்டு வந்து நிறுத்துவர்; அதனைத் தவிர்க்க! என்றும் வேண்டுவோம்” என்றனர்.

“அவர்கள் பாடலைக் கேட்டு அவ்வழியே மலை நாடனாகிய தலைவன் வந்தான் எனவும் அவனைச் சந்தித்து அவன் திருவடியைத் தொழுது வணங்கித் தலைவி இவ்வாறு கூறத் தொடங்கினாள்” எனவும் பாடினர். “கடம்பைப் பூச்சூடிக் கொண்டு கையில் வேல் ஏந்தி நீ வந்தாலும் உன்னை இவ்வூரார் முருகன் என்று ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். உனக்கு ஆறுமுகங்கள் இல்லை; ஏறிவர மயில் இல்லை; பக்கத்திலே வள்ளி இல்லை; தோள்கள் பன்னிரண்டு இல்லை; அதனால் உன்னை முருகன் என்று கருதமாட்டார்கள். நீ தலைவியைத் தேடி வந்த தலைவன் என்று எளிதில் அறிந்து கொள்வர். அதனால் ஊரில் அலர்தான் எழும்; மலர்த்தார் மார்ப! விரைவில் மணம் செய்துகொள்க” என்று கூறினேன் என்றாள் தலைவி. “அவனும் விரைவில் மணம் செய்து கொள்ள வரலாம்; அந்த நம்பிக்கை உள்ளது” என்று மற்றவரும் சேர்ந்து பாடினர்.

“கண்ணகி தெய்வத்தைப் பாடினால் அவள் காட்சி தருவாள். வந்தால் மண அணி வாய்க்க என்று அத் தெய்வத்தை வேண்டுவோம்” என்று அப்பெண்கள் பாடினர். “வானக வாழ்க்கையைப் பெற்றுவிட்ட அத்தெய்வம் கானகத்தில் நறுவேங்கை நிழலில் நின்று காட்சி தந்தாள். அத்தெய்வம் உறுதியாக வந்து அருள் செய்வாள். தலைவனைத் தலைவி மணம் செய்யும் இனிய காட்சியை இவ்வூர் காணப் போகிறது. இது பெருமை மிக்க காட்சியாகும். இதுவரை முருகனை வழிபட்ட யாம் இனிக் கண்ணகியைத் தெய்வமாக ஏற்போம்; வழிபடுவோம்” என்று கூறிப் பாடினர். குரவைக் கூத்துப் பாடல்களைக் கேட்டு நம் காதலர் வந்தார் எனவும் பாடினர். மற்றும் சேரனின் வெற்றியைப் பாடி அவன் வாழ்க என்று வாழ்த்தினர்.

## 2. காட்சிக் காதை

சேர வேந்தனான செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்றான். கண்ணகி வேங்கை மரத்தடியில் நின்றதும், தாம் கண்ட அதிசயமும் குன்றக் குறவர் அவனுக்குக் கூறினர். அப்போது அங்கே அவ்விடத்தே இருந்த சாத்தனார், கண்ணகி வழக்கு உரைத்ததும், மதுரை தீயுண்டதும் பற்றி அவர்கட்குக் கூறினார். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல் நட்டு வழிபட எண்ணினான். வடநாட்டு வேந்தர் சிலரின் வீராப்பான பேச்சு இமயத்திற்கே செல்ல அவனைத் தூண்டியது பற்றிய அரசாணையும் எழுந்தது என்பது இது.

### மலைவளம் காணுதல்

**மலைவளம் காணச் செல்லுதல்**

சேரன் செங்குட்டுவன் இலவந்திகை என்னும் வெள்ளி மாடத்தில் தன் தம்பி இளங்கோவுடனும் துணைவி வேண்மாளுடனும் இருந்தான். முழவு என அருவிகள் ஒலித்தன. மேகங்கள் சோலைகளைக் கவித்தன. “அருவிகளும் சோலைகளும் உடைய மலை வளத்தைக் காண்போம்” என்று முடிவு செய்தனர். வஞ்சி மாநகர் சேரர் ஆண்ட தலைநகர்; அதனை விட்டு நீங்கிச் சென்றான். இந்திரன் தன் பரிவாரத்தோடு செல்வதுபோல் சேரன் யானை மீது ஏறி அவன் தன் சுற்றமும் ஆயமும் சூழ்ந்துவர

அங்குச் சென்றான். திருமால் மார்பில் அணிந்திருந்த மாலைபோல் மலையை அறுத்துச் செல்லும் பேரியாற்றங்கரையின் மணல் மேட்டின் மீது தங்கினான்.

**குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடலும்**
**வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்**
**தினைக்குறு வள்ளையும் புனத்தெழு விளியும்**
**நறவுக்கண் ணுடைத்த குறவ ரோதையும்**
**பறையிசை அருவிப் பயங்கெழும் ஓதையும்**
**புலியொடு பொரூஉம் புகர்முக வோதையும்**
**கலிகெழு மீமிசைச் சேணோன் ஓதையும்**
**பயம்பில்வீழ் யானைப் பாக ரோதையும்**
**இயங்குபடை யரவமோ டியாங்கணு மொலிப்ப**
**அளந்துகடை யறியா அருங்கலம் சுமந்து**
**வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றத்து**
**இறைமகன் செவ்வி யாங்கணும் பெறாது**
**திறைசுமந்து நிற்கும் தெவ்வர் போல**
**யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்**
**மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்**
**சந்தனக் குறையுஞ் சிந்துரக் கட்டியும்**
**அஞ்சனத் திரளும் அணியரி தாரமும்**
**ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்**
**கூவை நூறுங் கொழுங்கொடிக் கவலையும்**
**தெங்கின் பழனும் தேமாங் கனியும்**
**பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்**
**காயமும் கரும்பும் பூமலி கொடியும்**
**கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்**
**பெருங்குலை வாழையின் இருங்கனித் தாறும்**
**ஆளியி னணங்கும் அரியின் குருளையும்**
**வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்**
**குரங்கின் குட்டியுங் குடாவடி உளியமும்**
**வரையாடு வருடையும் மடமான் மறியும்**
**காசறைக் கருவும் மாசறு நகுலமும்**
**பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்**
**கானக் கோழியும் தேன்மொழிக் கிள்ளையும்**
**மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டாங்கு**

**ஏழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்**
**கான வேங்கைக் கீழோர் காரிகை**
**தான்முலை இழந்து தனித்துய ரெய்தி**
**வானவர் போற்ற மன்னோடும் கூடி**
**வானவர் போற்ற வானகம் பெற்றனள்**
**எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ**
**நின்னாட்டு யாங்கள் நினைப்பினும் அறியேம்**
**பன்னூ றாயிரத் தாண்டுவா ழியரென**
**மண்களி நெடுவேல் மன்னவற் கண்டு**
**கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த**
**தண்டமி ழாசான் சாத்தனிதுரைக்கும்**

**பல்வகை ஒசைகள்**

அங்கே குறவர்கள் பாடிய குரவைப் பாடல் ஒசை, குறமகளிர் பாடிய பாடல் ஒசை, முருகனை ஏத்திப் பாடிய வேலன்பாணி, தினை காப்போர் எழுப்பிய ஒசை, தினைப்புனத்தில் ஒருவரை ஒருவர் விளித்து அழைக்கும் ஒசை, தேன் உடைப்பால் எழுப்பிய ஒசை, புலியொடு மோதும் யானைகளின் ஒசை, பரண்மீது ஏறிப் பறவைகளை விரட்டுவார் எழுப்பிய ஒசை, குழிகளில் விழுந்த யானைகளைக் கட்டி இழுப்பவர் எழுப்பும் ஒசை, சேரன் படைகள் இயக்கத்தால் ஏற்பட்ட ஒசை எல்லாம் சேர்ந்து பேரொலி செய்தன.

**காணிக்கைப் பொருள்கள்**

சேர அரசனின் அரண்மனை முற்றத்தில் பிறநாட்டுப் பகை மன்னர் கொண்டு வந்து திறைப்பொருள் குவிப்பர்; அதைப்போல இம்மலைக் குறவர்கள் தம் தலைகளில் சுமந்து வந்த பல்வகைப் பொருள்களையும் கொண்டு வந்து முன்வைத்துக் காணிக்கையாக்கினர். மலைப் பொருள்கள், யானைத்தந்தம், அகில் கட்டை, மான்கவரி, சந்தனக் கட்டை, சிந்தூரக்கட்டி, அஞ்சனத்திரள், அரிதாரம், ஏலக்கொடி, மிளகுக் கொடி, கவலைக்கொடி, கிழங்குகள், வெள்ளுள்ளி எனப்படும் காயம், தேங்காய், மா, பலா முதலியன, கரும்பு, பூங்கொத்துகள், கமுகத்தாறு, வாழைத்தாறு, யானை, சிங்கம், புலிக்குட்டிகள், யானைக்குட்டிகள், குரங்குக் குட்டிகள், கரடிக்குட்டிகள், மலையாட்டுக் குட்டிகள், மான்குட்டிகள், கீரிப்பிள்ளைகள், மயில்கள், பூனைக்குட்டிகள், காட்டுக்கோழி, கிளிகள் இவற்றையெல்லாம் சுமந்து வந்து குவித்தனர். “ஏழ் பிறப்பும் உமக்கு அடிமை செய்வோம்” என்று கூறியவராய்த் தொழுதனர். “நறு வேங்கை மரத்தின் நிழலில் காரிகையாள் ஒருத்தி முலை இழந்தவளாய்த் தனித்துயர் அடைந்து வானவர் வரவேற்கத் தன் கணவனோடு சேர்ந்து வானகம் சேர்ந்தாள். அவள் எந்நாட்டாள்? யார் மகள்? அறிய இயலவில்லை. அவள் இந்நாட்டில் பிறந்த நங்கை

என்று கூற இயலாது; புதியவளாக இருக்கின்றாள்" என்று நவின்றனர். மன்னனைப் "பல்லாண்டுகள் வாழ்க" என்று வாழ்த்துத் தெரிவித்தனர்.

**சாத்தனார் உரை**

அரசன் அருகில் இருந்த சாத்தனார் என்னும் தமிழ்ப் புலவர் இவற்றைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்திருந்தார். "அவள் யார்? எந்நாட்டவள்" என்று அரசன் கேட்டதற்கு அவர் விளக்கம் கூறினார். "சிலம்பு விற்கச் சென்றவன் கோவலன் என்பான் தீவினை காரணமாக வாழ்வினை இழந்தான்; அவன் மனைவி கண்ணகி அவள் சிலம்பு ஒன்று கையில் ஏந்தி மன்னன் அவைக்களம் புகுந்தாள்; வழக்கில் வென்றாள்; பாண்டியன் சாய்ந்தான்; வீழ்ச்சியுற்ற பாண்டிமாதேவியின் முன் "அரசையும் நகரையும் அழிப்பேன்" என்று சூள் உரைத்து மதுரையைச் எரித்தாள். பாண்டிமாதேவி கணவனோடு தானும் சேர்ந்து உயிர்விட்டாள். அவள் உயிர்விட்டது தன் உயிரைக் கொண்டு அவன் உயிரைத் தேடிச் சென்றது போல இருந்தது. வெற்றி வேந்தன் பாண்டியன் அவன் கொற்றம் இத்தகையது என்று சாற்றுவதற்கு வந்தவள்போல் நின்னாட்டு அகம் இவள் வந்து சேர்ந்தாள். தன் நாட்டுக்கு அவள் சென்றிலள் வாழ்க நின் கொற்றம்" என்று அவர் விளக்கம் தந்தார்.

**சேரன் கருத்துரை**

தென்னவன் அரசன் அவன்தன் பழி மிக்க வாழ்வினைக் கேட்ட சேர மன்னன், "செம்மை நீங்கிய சொற்கள் எம்மைப் போன்ற அரசர்கள் செவியில் விழுந்து வெம்மை ஊட்டாமல் இருக்கப் பாண்டியன் தன் உயிர்விட்டான் என்று நினைக்கவும் தோன்றுகிறது. வல்வினை வளைத்த கோலை மன்னவன் செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கிவிட்டது," என்று கூறினான். மற்றும் அரசர்க்கு உள்ள துன்பங்கள் இவை என்று வரிசைப்படுத்திக் கூறினான்.

"மழை பொய்த்துவிட்டால் அது மிகப்பெரிய கவலையைத் தருகிறது; அது பேரச்சத்தை உண்டாக்குகிறது. நாட்டு மக்கள் தவறு இழைத்தால் அது மன்னனைத் தாக்குகிறது; அவ்வாறு ஏதாவது நேர்ந்து விடுமோ என்ற அச்சம் எப்பொழுதும் நச்சரிக்கிறது. மக்களைக் காக்கும் அரச குடியில் பிறத்தல் துன்பம்தான் அன்றி மதிக்கத் தக்கது அல்ல; பாராட்டித் தொழத்தக்கதும் அல்ல." இவ்வாறு சாத்தனார்க்குச் சேரன் தன் கருத்துகளைக் கூறினான்.

பின்பு தன் மனைவியை நோக்கி, "உயிர்விட்டுப் புகழ்பெற்ற ஒருமகள் பாண்டியன் மனைவி ஆவாள்; உயிருடன் இங்கு வந்து வழக்கினை உலகறியச் செய்ய வந்திருக்கிறாள் மற்று ஒரு மகள்; அவள் இந்நாடு அடைந்திருக்கிறாள். இவ்விருவருள் வியக்கும் நலத்தை உடையவர் யார்?" என்று வினவினான்; இருவரில் யார் உயர்ந்தவர் என்று கேட்டு வைத்தான். சேரமாதேவி நாகரிகமாக அதற்கு விடை நல்கினாள். "பாண்டிமா தேவிக்கு வானவர் சிறப்புச் செய்வர்; பாவை கண்ணகிக்கு நாம் சிறப்புச் செய்வோம். நம் நாட்டை அடைந்த பத்தினித் தெய்வத்துக்குக் கல் எடுத்துப் பரவுதல் செய்வோம்" என்றாள்.

சேரன் அருகிருந்த நூல்கள் கற்ற புலவர்களை நோக்கினான். அதற்கு அவர்கள், “இமயத்தில் இருந்து கல்லைக் கொணரலாம் அல்லது பொதிகை மலையில் இருந்தும் கொண்டு வரலாம். முன்னதைக் கங்கையில் நீர்ப்படுத்தலாம்; பின்னதைக் காவிரியில் நீர்ப்படுத்தலாம்” என்று அவர் தம் கருத்தினைத் தந்தனர்.

அதற்குச் சேரன் தன் பெருமை தோன்றக் கண்ணகிக்கு எங்கிருந்து கல் எடுப்பது தகுதி வாய்ந்தது என்பதைத் தக்க காரணம் தந்து கூறினான். “பொதிகையில் கல் எடுத்துக் காவிரியில் நீர்ப்படுத்தல் போதுமானதுதான்; ஆனால் அது எளியவர் செய்வது; வலிமைமிக்கவர், புகழ்மிக்கவர், ஆற்றல் மிக்கவர் அதனை ஏற்று நடத்துவது தக்கது அன்று. வீர மன்னன் செய்யும் விவேகமான செயல் ஆகாது. இமயத்தினின்று கல் கொணர்தலே தக்கது ஆகும். வடநாட்டு வேந்தர் இடக்கு ஏதாவது செய்தால் அவரை ஒடுக்குவது தவிர வேறு வழியே இல்லை; தவம் மிக்க அந்தணர் முன் சடங்கின்படி கல்லைக் கண்ணியமாகத் தரவேண்டும்; மறுத்தால் அவர்களை ஒறுப்பது தவிர வேறு வழியே இல்லை. சரித்திரம் அவர்களுக்குச் சரியான பாடத்தைக் கற்பிக்கும்; தமிழ்ப் போர்த்திணைகள் புறத்திணைகள் அவர்கள் அறியட்டும்; காஞ்சித்திணை என்பது நிலையாமையை உணர்த்துவது ஆகும். வாழ்க்கை சிறந்த குறிக்கோள் கொண்டது. அத்தகைய குறிக்கோள் அற்றவர் வாழ்ந்து என்ன பயன்? முதியவர்கள் பலர் மண்ணில் மறைந்துவிட்டனர். அவர்கள் உணர்த்துவது யாது? வாழ்க்கை நிலையற்றது என்பது அறியத்தக்கது ஆகும்; அந்நிலையாமை அறத்தை நூல்கள் காட்டத் தேவை இல்லை. என் வாள் அவர்களுக்குக் காட்டும்; வாழ்க்கை நிலையற்றது என்பதை அவர்கள் உணர்வார்கள்.”

“அவர்களை உணர வைப்பது உறுதி; மகளை மறுத்தவன் இமய அரசன் பார்வதி அவளைப் பரமசிவன் வீரம் காட்டி மணந்தான். அவனைப் பணிய வைத்தான்; அது மகட்பால் காஞ்சி என்பர் மற்றும் எம்முன்னவர் இமயம் சென்று விற்கொடியைப் பொறித்த நாள் எதிர்த்த மன்னர் எரி சாம்பல் ஆயினர்; இது வரலாறு கற்பித்த பாடம் ஆகும். காஞ்சித் திணையை அவர்கள் உணர்ந்தனர். ஒழிந்தோர் மற்றவர்க்குக் காட்டிய பொதுக்காஞ்சி, மகட்பால்காஞ்சி, நீள்மொழிக்காஞ்சி ஆகிய இம்மூன்று காஞ்சிகளையும் காண நேரிடும்.

“பகைவர்கள் காஞ்சி காண்பர்; யாம் வஞ்சி சூடுவோம்” என்று சேரன் வஞ்சினம் மொழிந்தான். வஞ்சித் துறைகளுள் வெற்றிச் சிறப்பைக் கூறவது 'நெடுமாராய வஞ்சி'; வெற்றி கொண்ட பிறகு பகைவர் நாட்டைக் கொளுத்தி, அழித்தல் 'வென்றோர் வஞ்சி' எனப்பட்டது. வீரர்க்குச் சோறு தருவது 'பெருஞ்சோற்று வஞ்சி'; பகைவர் நாடு அழிவதற்கு மனம் அழிவது 'கொற்ற வள்ளை'; இவற்றைத் தான் விளைவிப்பதாகக் கூறினான். பனை மாலை அவனுக்கு உரிய சிறப்பு மாலை; “அதனையும், வஞ்சி மாலையும் சூடிக் கொண்டு போர் தொடுப்போம்” என்று வஞ்சி நாட்டு அரசன் சேரன் செங்குட்டுவன் கூறினான்.

வில்லவன் கோதை என்னும் அமைச்சன் சேரனின் பழைய வெற்றிகளை எடுத்து விளம்பி வாழ்த்துக் கூறினான்; "கொங்கர் களத்தில் சோழரும் பாண்டியரும் தோற்றுத் தம் கொடிகளாகிய மீன் கொடியையும், புலிக்கொடியையும் விட்டுச் சென்றனர். மற்றும் வட வாரியருடன் சிற்றரசராகிய கொங்கணர், கலிங்கர், கருநாடர், பங்களர், கங்கர் இவர்கள் போர் செய்து தோற்று ஓடினர். கங்கைப் பேரியாற்றில் உன் தாயின் இறுதிச் சாம்பலைக் கலக்க அதனை நீராட்டிய நாளில் எதிர்த்த ஆரிய மன்னர் ஆயிரவரையும் அஞ்ச வைத்தனை!"

"ஆரிய மன்னர் ஆயிரவர் அன்று தோற்று ஒடினர். இப்போர்களைக் கண்ட யாம் அவற்றை நினைத்துப் பார்க்கிறோம். கூற்றுவனும் வியக்கும் வண்ணம் ஆற்றலோடு போர் புரிந்தாய்! தமிழக மன்னன் நீ இமயத்து அரசர்க்கு இதனைத் தெரிவித்து முடங்கல் ஒன்று நீ எழுதினால் போதும் அவர்கள் அடங்கியவராய்ச் சிலை வடிக்கக் கல் தந்து விடுவர்; அதனால் வில் புலி கயல் பொறித்த முத்திரை இட்டு முடங்கல் அனுப்புக" என்றான்.

வில்லவன் கோதை உரைத்த நல்லுரைகளைக் கேட்ட அழும்பில்வேள் என்னும் மற்றொரு அமைச்சன் அதற்கு ஒரு திருத்தம் கூறினான். "செய்தி அனுப்பத் தேவை இல்லை; இங்கே அம்மன்னர் தம் ஒற்றர் அங்கங்கே தங்கி இருக்கின்றனர். அவர்களே சென்று செய்தி செப்புவர்" என்று அறிவித்தான். அதனைச் சேரன் ஏற்றுக் கொண்டு போர் தொடுக்கத் தன் நகராகிய வஞ்சி மாநகரை அடைந்தான். மன்னவன் வெற்றியை விளம்பி வாழ்த்தியபின் "வடஅரசர்க்கு இங்கிருந்து முரசு அறைந்து செய்தி அறிவிக்க" என்று அழும்பில் வேள் ஆணையிட்டான்.

"விற்பொறி பதித்த இமயத்தில் கற்கொண்டு வர எம் காவலன் கருதிட்டான். அவனை எதிர்த்துப் போரிட்டால் அதன் விளைவினைத் தாங்க நேரிடும்; திறை தந்து இறையைப் பணியீர் ஆயின் அவன் வெற்றி விளைவுகளைச் சிந்திப்பீராக; அவன் கடலில் சென்று கடம்பு எறிந்த வெற்றி, இமயத்தில் வில் பொறித்த வெற்றி இவற்றைக் கேட்டிருப்பீர் நீர் அடங்கி எதிர் கொண்டு வரவேற்று உதவுவீர் என்றால் உயிர் பிழைப்பீர் எதிர்த்தால் உயிருக்கு அஞ்சித் துறவு கொண்டு ஓடநேரிடும்" என்று செய்தி தெரிவித்தனர்; "வாள் கண்டு வணங்கினால் வாழ முடியும்; இல்லை என்றால் தோள் துணை மறந்து துறவு கொள்ள நேரிடும்" என்று அறிவித்தனர். "அரசன் வாழ்க" என்று யானை மீது இருந்து முரசு அறைவித்தனர்.

## 3. கால்கோள் காதை

செங்குட்டுவன் படைப்பெருக்கோடு வடநாடு நோக்கிச் சென்றான். எதிர்த்த ஆரிய மன்னர்கள் பலரையும் வென்றான். இமயத்திலே பத்தினிக்குக் கல்லும் தோண்டிக் கொண்டான்.

**அறைபறை யெழுந்தபின் அரிமா னேந்திய**
**முறைமுதற் கட்டில் இறைமக னேற**
**ஆசான் பெருங்கணி அருந்திற லமைச்சர்**

**தானைத் தலைவர் தம்மொடு குழீஇ**
**மன்னர் மன்னன் வாழ்கென் றேத்தி**
**முன்னிய திசையின் முறைமொழி கேட்ப**
**வியம்படு தானை விறலோர்க் கெல்லாம்**
**உயந்த்தோங்கு வெண்குடை உரவோன் கூறும்**
**இமையத் தாபதர் எமக்கீங் குணர்த்திய**
**அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி**
**நம்பா லொழிகுவ தாயி னாங்கஃது**
**எம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந் தரூஉம்**
**வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்**
**கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது**
**வறிது மீளுமென் வாய்வா ளாகில்**
**செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்**
**பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்**
**குடிநடுக் குறூஉங் கோலே னாகென**
**ஆர்புனை தெரியலும் அலர்தார் வேம்பும்**
**சீர்கெழு மணிமுடிக் கணிந்தோ ரல்லால்**
**அஞ்சினர்க் களிக்கும் அடுபோ ரண்ணல்நின்**
**வஞ்சினத் தெதிரும் மன்னரு முளரோ**
**இமைய வரம்பநின் இகழ்ந்தோ ரல்லர்**
**அமைகநின் சினமென ஆசான் கூற**
**கல்லைக் கொணர்தல்**

பறை அறைந்தனர்; சிம்மாசனத்தில் செங்குட்டுவன் ஏறி அமர்ந்தனன்; ஆசான், நிமித்திகன், அமைச்சர், படைத்தலைவர்கள் ஆகிய இவர்கள் அனைவரும் சேர்ந்து 'மன்னர் மன்னன் வாழ்க' என்று ஏத்தினர்; அரசன் கூறுவதை முன்னிருந்து கேட்டனர். படைத் தலைவரை விளித்து வீரமொழி பேசினான்: “இமயத்திலிருந்து வந்த தவசிகள் எமக்கு ஈங்கு உணர்த்திய அவச்சொல் கேட்டு அடங்கிவிட்டால் சோழரும் பாண்டியரும் என்னை இகழவும் கூடும்; பழிச்சொல் நிலைத்து நிற்கும்; அதைப் போக்க வடக்கே சென்று கல்லை அங்கு ஆரிய அரசர்கள் தலைமீது சுமத்திக் கொண்டு வராமல் என் வாள் வறிது மீளும் என்றால் பகைவர்களை எதிர்த்துப் போரிட்டு அவர்களை நடுங்க வைக்காமல் குடிமக்களை அவதிக்குள் ஆக்கும் கடையன் என்ற பழிச்சொல்லை யான் அடைவதாக” என்று வஞ்சினம் கூறினான்.

அதனைக் கேட்ட அவையில் இருந்த கல்வி ஆசான் அரசனை நோக்கி “அவர்கள் இகழ்ந்தது உன்னை அன்று: சோழ பாண்டியரை; நீ சினம் ஆறுக” என்று அறிவித்தனன். “வஞ்சின மொழி கேட்டு அவர் அஞ்சி அடங்குவர் நின் வஞ்சினத்துக்கு

எதிராக நின்று போர் செய்யும் மன்னர்கள் யாரும் இல்லை" என்றனன். அவர்களுள் நிமித்திகன் எழுந்து நின்று, "காலம் கூடி உள்ளது. செல்லுதற்கு உரிய நற்பொழுது இது; நீ குறித்த திசைமேல் எழுக! படை எழுச்சி பெறுக" என்று கூறினான்.

அரசன் உடனே, "வாளையும், குடையையும் வடதிசை நோக்கிப் பெயர்க்க" என ஆணை இட்டனன். சேனைகள் ஆரவாரித்தன; முரசு எழுந்து ஒலித்தது; இரவு இருட்டை விலக்கிய ஒளி விளக்குகளின் வெளிச்சத்தில் கொடிகள் வரிசையாக அசைந்தன. பகைவரை வாட்டும் சேனை வீரர்களும், ஐம்பெருங்குழுவினரும், எண் பேராயத்தினரும், யானை வீரர்களும், கணித்துக் கூறும் காலக் கணிதரும், அறம் கூறும் சான்றோரும், படைத்தலைவர்களும், "நில உலகை ஆளும் மன்னன் வாழ்க" என்று வாழ்த்துக் கூறினர்.

பெருங்களிறு ஒன்றின் மீது வாளையும், வெண் கொற்றக் குடையையும் வைத்து அதனை மதிற்புறத்து இருந்த கொற்றவை கோயில் முன் நிறுத்தினர்; வஞ்சிப் பூவுடன் பனம்பூவையும் அவ்யானைக்கு அணிவித்துச் சேரனின் அவைக்குச் சென்றனர். போரை விரும்பிப் படைக்குத் தலைமை தாங்கிய படைத் தலைவர்களுக்குப் பெருஞ்சோறு அளித்தான். வஞ்சி மாநகரில் சேரன் வஞ்சிப் பூவைச் சூடிக் கொண் டான் பிறநாட்டு அரசர்கள் திறை கொண்டு வந்து செலுத்த அவர்களை அழைக்கும் முரசு காலையில் ஒலித்தது. சிவனின் திருவடிகளை வணங்கிப் பின் யானை மீது ஏறினான். அதனை அடுத்துச் "செங்குட்டுவன் வெற்றி கொள்க" என்று வாழ்த்தி தெய்வப் பூ மாலை கொண்டு வந்து தந்தனர். அது திருவனந்தபுரத்து ஆடகமாடம் என்னும் திருமால் கோயிலினின்று கொண்டுவரப்பட்டது. சிவனை வணங்கிய தன் சிரசில் அதை ஏற்றுக் கொள்ளாமல் தோளில் தாங்கினான். அவன் போர்ப் பயணம் தொடங்கியது.

நாடக மடந்தையர் ஆடரங்கு எங்கும் அரசனுக்கு வாழ்த்துக் கூறினர்; "கொற்ற வேந்தே! நீ வெற்றி கொள்க! வாகைப் பூவும், தும்பைப் பூவும் சூடிப் பொலிவு பெறுக" என்று வாழ்த்தினர். "எங்கள் கண்களைக் கவரும் பேரழகு பெற்றிருக்கிறாய்! உன்னைக் கண்டு காதல் கொண்டு எம் வளையல்களை இழக்கின்றோம். இந்த நிலை என்றும் தொடர்க" என்றும் சிறப்பித்து அவர்கள் வாழ்த்துதல் தெரிவித்தனர். மற்றும் மாகதப் புலவரும், வைதாளிகரும், சூதர் எனப்பட்டவரும், "வெற்றி பெறுக" எனக் கூறி வாழ்த்தினர்.

யானை வீரரும், குதிரைத் தலைவரும், வாள் வீரரும் இவன் வாளாற்றலை ஏத்திப் புகழ்ந்தனர். அசுரரை அழிக்கச் சென்ற இந்திரனைப் போல் வஞ்சி நகரை விட்டு நீங்கித் தம் படைகளுடன் நீலகிரி மலையைச் சேர்ந்தான். அங்கே பாடி வீடு அமைத்துச் சிம்மாசனத்தில் அமர்ந்தான்.

படை இயங்கு அரவம் விண்ணையும் முட்டியது; அதனைக் கண்டு வானத்து முனிவர்கள் விசும்பினின்று இறங்கி வந்து இவனைக் காண விழைந்தனர். மின்னல் ஒளிபோல் அவர்கள் காட்சி அளித்தனர். அவர்களை வணங்கி வேண்டுவது யாது என்று கேட்டனன். அவர்கள் "யாம் பொதிகை மலை செல்கின்றோம்; வழியில்

உன்னைக் காணும் வாய்ப்பு நேர்ந்தது; நீ இமயம் ஏகுகின்றாய் என்பதை அறிகிறோம். அங்கே மறைகற்ற அந்தணர் உள்ளனர்; அவர்களுக்கு எந்தக் குறையும் நேராமல் காப்பது நின் கடமை” என்று கூறினர்; அவனை வாழ்த்தி விட்டுச் சென்றனர்.

அதன் பின் கொங்கணக் கூத்தரும், கருநாடகக் கலைஞர்களும் தத்தம் துணைவியருடன் வந்து இருந்து பாடல் பாடினர். “வேனில் காலம் வந்தது; ஆனால் காதலன் வந்திலன்” என்ற கருத்துடைய பாடல்களைப் பாடினர். மற்றும் “கார்காலம் வந்தது. காதலன் தேரும் வந்தது; மகளிர் கோலம் கொள்க” என்றும் குடகர்கள் கார்க்குரவை என்னும் வரிப்பாடலைப் பாடினர்; “வாள்வினை முடித்து வெற்றியுடன் வருக” என்று ஒவர் எனப்பட்டவர் வாழ்த்தினர். அவர்களுக்கு மிக்க பரிசிலை நல்கினான். அதன்பின் சஞ்சயன் என்பான் நாடக மகளிருடனும், ஏனைய இசைக் கலைஞருடனும் அரசனைக் காண அங்கு வந்து சேர்ந்தான். அச்செய்தியை அறிவித்தனர். “அவனை வரவிடுக” என்று கூறி அழைப்பித்தான்.

**சஞ்சயன் வருகை**

சஞ்சயன் என்பவன் நூற்றுவர் கன்னர் அனுப்பிய தூதுவன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். தன்னுடன் தான் அழைத்து வந்த நாடகக் கலைஞர்களையும், இசை வல்லுநரையும், ஆடல் மகளிரையும் அறிமுகம் செய்து வைத்தான். பின்பு நூற்றுவர் கன்னர் சொல்லி அனுப்பிய செய்தியை முறைப்படி கூறினான். கடவுள் எழுத ஒரு கல் கொணரச் செல்வது ஆயின் அதனைத் தன் தலைவர்களாகிய நூற்றுவர் கன்னரே செய்து முடிப்பர் என்று அவர்கள் சொல்லி அனுப்பியதாகத் தெரிவித்தான்.

“தான் வடநாடு செல்வது கல்லைக் கொணர்வதற்கு மட்டுமன்று; கடுஞ் சொல்லைக் கூறிய கனகனையும் விசயனையும் களத்தில் சந்திப்பதற்கே” என்று கூறினான். பாலகுமரன் என்பானின் மக்கள் கனகன், விசயன் என்பார் இருவர் தம் நாவைக் காவாதவராகித் தமிழர்களின் ஆற்றலைக் குறைவுபடுத்திப் பேசினர். விருந்தினர் மத்தியில் இழிவுடன் பேசித் தம் வீரத்தை மிகைப்படுத்திக் கூறினர். “இமயத்தில் தமிழரசர்கள் புலியையும், கயலையும் பொறித்த நாட்களில் தாம் அங்கு இல்லை” என்றும், “இருந்திருந்தால் அவர்களைத் தடுத்து நிறுத்தி இருக்க முடியும்” என்றும் நா காக்காமல் நகையாடிப் பேசினர். இச்செய்தியைச் சேரன் எடுத்துச் சொல்லி அவர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்கவேதான் செல்வதாகக் கூறினான்.

கங்கையைக் கடக்க வங்கங்கள் தேவை என்ற செய்தியைச் செப்பி அனுப்பினான். கன்னரைக் கொண்டு படகுகளை அனுப்பச் சொல்லி அறிவிப்புச் செய்தான். அரசன் இட்ட ஆணையைத் தாங்கி நூற்றுவர் கன்னரிடம் அதை நுவலச் சஞ்சயன் சென்றான்; அதன்பின் தென்னவர் இட்ட திறை என்று சொல்லிச் சந்தனக் குப்பையும், முத்துக் குவியலும் சட்டை அணிந்த நாவன்மை படைத்தவர் ஆயிரவர் கொண்டு வந்து அளந்து தந்தனர். தென்னவன் தந்தவை எனச் சாற்றினர். அவற்றைப் பெற்றதற்கு ஒப்புதல் தெரிவித்துச் சேரன் தன் அரசு முத்திரை இட்ட முடங்கல்களை

அவருக்கு ஆட்கள் வழி அனுப்பினான். கணக்கு எழுதுவோர் இவற்றைக் குறித்துக் கொண்டு ஒப்புதல் எழுதி அனுப்பினர்.

**வட நாடு அடைதல்**

அதன் பின் நீலகிரியை விட்டு நீங்கி வடநாடு செல்லக் கங்கையைக் கடந்தான்; நூற்றுவர் கன்னர் இவனுக்குக் கரையைக் கடக்கப் படகுகளை அனுப்பி வைத்தனர். அடுத்த கரையில் அவர்கள் இவன் வரவுக்காகக் காத்து நின்றனர். அவர்களையும் துணையாக அழைத்துக் கொண்டு வடநாட்டை அடைந்து அங்குப் பாடி வீடு அமைத்துக் கொண்டு அங்குத் தங்கினான்.

**உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன்**
**சித்திரன் சிங்கன் தனுத்தரன் சிவேதன்**
**வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாம்**
**தென்றமி ழாற்றல் காண்குதும் யாமெனக்**
**கலந்த கேண்மையிற் கனக விசயர்**
**நிலந்திரைத் தானையொடு நிகர்த்து மேல்வர**
**இரைதேர் வேட்டத் தெழுந்த அரிமாக்**
**கரிமாப் பெருநிரை கண்டுளஞ் சிறந்து**
**பாய்ந்த பண்பிற் பல்வேன் மன்னர்**
**காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப**
**வெயிற்கதிர் விழுங்கிய துகிற்கொடிப் பந்தர்**
**வடித்தோற் கொடும்பறை வால்வளை நெடுவயிர்**
**இடிக்குரல் முரசம் இழுமென் பாண்டில்**
**உயிர்ப்பலி யுண்ணும் உருமுக்குரல் முழுக்கத்து**
**மயிர்க்கண் முரசமொடு மாதிரம் அதிரச்**
**சிலைத்தோ ளாடவர் செருவேற் றடக்கையர்**
**கறைத்தோன் மறவர் கடுந்தே ரூருநர்**
**வெண்கோட்டு யானையர் விரைபரிக் குதிரையர்**
**மண்கண் கெடுத்தவிம் மாநிலப் பெருந்துகள்**
**களங்கொள் யானைக் கவிழ்மணி நாவும்**
**விளங்குகொடி நந்தின் வீங்கிசை நாவும்**
**நடுங்குதொழி லொழிந்தாங்கு ஒடுங்கியுள் செறியத்**
**தாருந் தாருந் தாமிடை மயங்கத்**
**தோளுந் தலையுந் துணிந்துவே றாகிய**
**சிலைத்தோள் மறவர் உடற்பொறை யடுக்கத்து**
**எறிபிணம் இடறிய குறையுடற் கவந்தம்**

**பறைக்கட் பேய்மகள் பாணிக் காடப்**
**பிணஞ்சுமந் தொழுகிய நிணம்படு குருதியில்**
**கணங்கொள் பேய்மகள் கதுப்பிகுத் தாட**
**அடுந்தேர்த் தானை ஆரிய வரசர்**
**கடும்படை மாக்களைக் கொன்று களங்குவித்து**
**நெடுந்தேர்க் கொடுஞ்சியுங் கடுங்களிற் றெருத்தமும்**
**விடும்பரிக் குதிரையின் வெரிநும் பாழ்பட**
**எருமைக் கடும்பரி ஊர்வோன் உயிர்த்தொகை**
**ஒருபக லெல்லையின் உண்ணு மென்பது**
**ஆரிய வரசர் அமர்க்களத் தறிய**
**நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்**
**போந்தையொடு தொடுத்த பருவத் தும்பை**
**ஓங்கிருஞ் சென்னி மேம்பட மலைய**
**வாய்வா ளாண்மையின் வண்டமி ழிகழ்ந்த**
**காய்வேற் றடக்கைக் கனகனும் விசயனும்**
**ஐம்பத் திருவர் கடுந்தே ராளரொடு**
**செங்குட் டுவன்றன் சினவலைப் படுதலும்**

**போர் நிகழ்ச்சிகள்**

சேரனை எதிர்த்த வட ஆரிய வேந்தர்கள் ஆகிய உத்திரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்திரன், சிவேதன் ஆகிய இவர்கள் தென்தமிழ் ஆற்றலைக் காண்போம் எனத் திரண்டு எழுந்தனர். அவர்களோடு கனகனும் விசயனும் கனத்த சேனையுடன் சேர்ந்து கொண்டனர். களிற்றைக் காயும் சிங்கத்தைப் போன்று சேரன் சீறி எழுந்தான். பல்வேறு மன்னர்கள் எதிர் ஊன்றித் தடுக்க அவர்களை எதிர்த்துப் போர் செய்து வெற்றி முழக்கம் செய்தான். இவன் தங்கிய பாடி வீடு கொடிகள் பந்தல் இட்டதுபோல் அமைந்தன. இடிபோல இவன் படைகள் எழுப்பிய முழக்கம் எழுந்தது; முரசுகள் அதிர்ந்தன; வில் ஏந்திய வீரரும், வேல் தாங்கிய வீரரும், கிடுகுப்படையாளரும், தேர் ஊர்வோரும், யானையர், குதிரையர் இவர்களும் மண்ணில் எழுப்பிய பெருந்துகள் யானைக்குக் கட்டிய மணிநாவையும், கொடிகளில் கட்டிய சங்குகளின் நாவையும் அசையாதவாறு தடுத்து நிறைத்தது.

முன்னணியில் இருந்த தூசிப் படைகள் ஒன்றோடு ஒன்று முரணித் தாக்கிக் கொண்டன; தோளும் தலையும் துணிபட்டு வேறு வேறாக விழுந்தன; தலை இழந்த முண்டங்கள் பேய்கள் இட்ட தாளத்துக்கு ஏற்பக் கூத்து ஆடின. பிணம் சுமந்து ஒழுகிய குருதிக் குட்டையில் பேய்க் கூட்டம் கூந்தலை விரித்துப் போட்டு நீராடின. ஆரிய அரசர்தம் படைகளைச் சேரன் கொன்று குவித்தான்; அவர்கள் தேர்கள் களிறுகள் குதிரைகள் சாய்ந்து விழுந்தன. ஒரே பகலில் உயிர்க் கூட்டத்தை இயமன் உண்ண இயலும் என்பதைக் கனகவிசயர் அன்று கண்டறிந்தனர். பகைவர்களைக் கொன்று

குவித்த மாவீரனாகச் சேரன் திகழ்ந்தான். பனம்பூ மாலையோடு தும்பையும் அங்கு சூடிச் சிறப்புப் பெற்றான்.

திமிர் பிடித்துத் தமிழரசரை இகழ்ந்த கனகனும் விசயனும் நூற்றுவர் அரசர்களும் இவன் சினத்துக்கு ஆளாயினர்; ஏனையவர்கள் ஆடும் கூத்தரைப் போலவும், நாடும் தவத்தவர் போலவும் பல்வேறு வேடங்கள் தாங்கித் தப்பித்துச் சென்றனர். வாள்ஏர் உழவன் ஆகிய செங்குட்டுவன் தன் மறக்களத்தை வாழ்த்திப் பேய்கள் பரணி பாடின. அவை மடிந்த வீரர்களின் கைகளைத் தூக்கிப் பிடித்தும், அவர் முடியுடைய தலைகளைத் தூக்கி எறிந்தும் போர்ப் பாடலைப் பாடின. கடலைக் கலக்கி அமுதம் கடைந்து எடுத்த நாளில் தேவர் அசுரப் போர் பதினெட்டு ஆண்டுகள் நடைபெற்றது. இலங்கையில் இராமன் இராவணனோடு நிகழ்த்திய போர் பதினெட்டுத் திங்கள் நடந்தது. கண்ணன் தேர்செலுத்தப் பாண்டவர்கள் நடத்திய போர் பதினெட்டு நாட்கள் நடைபெற்றது. அந்தப் போர்களின் சிறப்புகளைச் சீர்வரிசையில் செப்பி இவன் பேரிசையைப் புகழ்ந்து பாடின.

பேய்கள் கூத்து ஆடி மகிழ்ந்தன. இவன் வெற்றிப் புகழைப் பாடிச் சிறப்பித்தன. மறக்கள வேள்வி முடித்த வேந்தன் அங்கு "வேள்விகள் ஒம்பிய மறையவர்க்குத் தக்க வகையில் உதவி அவர்களுக்குச் சிறப்புச் செய்க" என்று ஆட்களை அனுப்பினான். அதன்பின் வில்லவன் கோதை என்னும் அமைச்சனோடு வீரர்களை அனுப்பி இமயத்து உச்சியினின்று பத்தினிக் கடவுளுக்குக் கல்லைக் கொண்டுவரச் செய்தான்.

## 4. **நீர்படைக் காதை**

கண்ணகிப் படிவத்திற்கான கல்லினைத் தோண்டிக் கொணர்ந்து, நீர்ப்படை செய்தது முதல், மீண்டும் செங்குட்டுவன் வஞ்சிமா நகரம் திரும்பியது வரை கூறுவது.

### கங்கையில் நீராட்டுதல்

வட பேர் இமயத்தில் கடவுள் பத்தினிக்குக் கல்லைக் கொண்டு வந்த பின்பு கனக விசயர்தம் கதிர்முடிமேல் ஏற்றிக் கொண்டு வந்தான். தென் தமிழ் ஆற்றல் அறியாது வந்து மலைந்த ஆரிய மன்னரையும், அவனுடன் வந்த படை வீரர்களையும் கொன்று குவித்தான். இந்த வெற்றிச் செய்தி எட்டுத் திசையும் பேசப்பட்டது. இதற்கு முற்பட்ட போர்கள் யாண்டுகளில் நடந்தன; மாதங்களில் நிகழ்ந்தன; நாட்களில் நடைபெற்றன; அவற்றிற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட காலம் ஒவ்வொன்றுக்கும் பதினெட்டு எனக் கூறப்பட்டது. ஆண்டுகளிலும், மாதங்களிலும், நாட்களிலும் நிகழ்ந்த போர்கள் அவற்றை நோக்க இது நாழிகைகளில் முடிவு பெற்றது. பதினெட்டே நாழிகையில் இப்போர் தொடங்கி முடிவும் பெற்றது. சாதனைகளில் இது மற்றவற்றை விட விஞ்சி விட்ட செய்தி, வரலாற்று நிகழ்ச்சியாகவும் இடம் பெற்றது. ஒரே பகலில் முடித்த போர் இது என்று தடித்த எழுத்துகளில் எழுதப்பட்ட செய்தி இது.

செங்குட்டுவன் தன் மாபெருஞ் சேனையுடன் கங்கைப் பேர்யாற்றுக் கரையை அடைந்தான். பத்தினிக் கடவுளுக்கு வேதியர்களைக் கொண்டு நீர்ப் படுத்தித் தூய்மை செய்து விழா எடுத்தான். மஞ்சனநீர் ஆட்டி வெஞ்சின வேந்தன் வெற்றி விழா எடுத்தான். அவன் அமர்ந்து வீரர்களுக்குப் பரிசு தர மண்டபம் அமைத்துக் கொடுத்தனர். அவன் தங்குதற்கு ஏற்ற வகையில் அரண்மனைகளையும், மணி மண்டபங்களையும், பொன்னால் புனையப்பட்ட மேடை அரங்குகளையும், அழகிய பந்தர்களையும், பள்ளி அறைகளையும், பூஞ்சோலைகளையும், மலர்ப் பொய்கைகளையும், இசைப் பாடல்கள் இருந்து கேட்பதற்குத் தக்க அரங்கங்களையும், பேரிசை மன்னர்க்கு வேண்டுவன பிறவும் ஆரிய அரசர்கள் ஆகிய நூற்றுவர் கன்னர் அமைத்துத் தந்தனர்.

அங்கே வேந்தன் அமர்ந்திருந்து களத்தில் உயிர்விட்ட வீரர்களை உளமாரப் பாராட்டினான், அவர்கள் வாரிசுகள் ஆகிய அவர்தம் மக்களுக்கும் சுற்றத்தினருக்கும் பரிசுகள் தந்தான்; உயிருடன் வெற்றி விளைவித்துத் திரும்பிய வீரர்களுக்குப் பரிசுகள் தந்து பாராட்டினான்.

திருவோலக்கத்தில் பெருமிதத்துடன் வீற்றிருந்த அரசனைக் காண அங்கு மாடலன் என்னும் மறையவன் வந்து சேர்ந்தான். “வாழ்க எம் மன்னன்” என்று முதற்கண் சேரனை வாழ்த்தி அவன் பெற்ற வெற்றியைத் தொகுத்துக் கூறினான். “மாதவி மடந்தை கானற் பாணி கனகவிசயர் தம் முடித்தலை நெரித்தது” என்று எள்ளல் சுவைபடத் தொகுத்துக் கூறினான். “எங்கோ எழுந்த சிறு பொறி அது கொழுந்துவிட்டுப் பெரிதாகிப் போரில் முடிந்தது; வடவரை அடிமைப்படுத்தியது” என்று சொல்திறன் படக் கூறினான்.

அங்குக் கூடியிருந்த மன்னர்களுக்கு இது புதிராக அமைந்திருந்தது; விடுகதை போல விளக்கமற்றுக் கிடந்தது. அரசன் மாடலனை நோக்கி, “பகைப்புலத்து அரசர் பலர் இதை அறியமாட்டார்கள். நகைத்திறம் படக் கூறிவிட்டாய். மறைகற்ற பெரியோய்! நீ கூறிய உரையின் கருத்து யாது? அதனை விரித்துக் கூறுக” என்று கேட்டுக் கொண்டான்.

**மாடல மறையோன் மன்னவற் குரைக்கும்**
**கானலந் தண்டுறைக் கடல்விளை யாட்டினுள்**
**மாதவி மடந்தை வரிநவில் பாணியோடு**
**ஊடற் காலத் தூழ்வினை யுருத்தெழக்**
**கூடாது பிரிந்து குலக்கொடி தன்னுடன்**
**மாட மூதூர் மதுரை புக்காங்கு**
**இலைத்தார் வேந்தன் எழில்வான் எய்தக்**
**கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி**
**குடவர் கோவே நின்னாடு புகுந்து**
**வடதிசை மன்னர் மணிமுடி யேறினள்**

இன்னுங் கேட்டருள் இகல்வேற் றடக்கை
மன்னர் கோவே யான்வருங் காரணம்
மாமுனி பொதியின் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை யாடி மீள்வேன்
ஊழ்வினைப் பயன்கொல் உரைசால் சிறப்பின்
வாய்வாட் டென்னவன் மதுரையிற் சென்றேன்
வலம்படு தானை மன்னவன் றன்னைச்
சிலம்பின் வென்றனள் சேயிழை யென்றலும்
தாதெரு மன்றத்து மாதரி யெழுந்து
கோவலன் தீதிலன் கோமகன் பிழைத்தான்
அடைக்கல மிழந்தேன் இடைக்குல மாக்காள்
குடையும் கோலும் பிழைத்த வோவென
இடையிருள் யாமத் தெரியகம் புக்கதும்
தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்றம்
நிவந்தோங்கு செங்கோல் நீணில வேந்தன்
போகுயிர் தாங்கப் பொறைசா லாட்டி
என்னோ டிவர்வினை உருத்த தோவென
உண்ணா நோன்போ டுயிர்பதிப் பெயர்த்ததும்
பொற்றேர்ச் செழியன் மதுரை மாநகர்க்கு
உற்றது மெல்லாம் ஒழிவின் றுணர்ந்தாங்கு
என்பதிப் பெயர்ந்தேன் என்துயர் போற்றிச்
செம்பியன் மூதூர்ச் சிறந்தோர்க் குரைக்க
மைந்தற் குற்றதும் மடந்தைக் குற்றதும்
செங்கோல் வேந்தற் குற்றதுங் கேட்டுக்
கோவலன் தாதை கொடுந்துய ரெய்தி
மாபெருந் தானமா வான்பொரு ளீத்தாங்கு
இந்திர விகாரம் ஏழுடன் புக்காங்கு
அந்தர சாரிகள் ஆறைம் பதின்மர்
பிறந்த யாக்கைப் பிறப்பற முயன்று
துறந்தோர் தம்முன் துறவி யெய்தவும்
துறந்தோன் மனைவி மகன்துயர் பொறாஅள்
இறந்ததுய ரெய்தி இரங்கிமெய் விடவும்
கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
அண்ணலம் பெருந்தவத் தாசீ வகர்முன்

**புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவும்**
**தானம் புரிந்தோன் றன்மனைக் கிழத்தி**
**நாள்விடூஉ நல்லுயிர் நீத்துமெய் விடவும்**
**மற்றது கேட்டு மாதவி மடந்தை**
**நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்**
**மணிமே கலையை வான்துயர் உறுக்குங்**
**கணிகையர் கோலங் காணா தொழிகெனக்**
**கோதைத் தாமம் குழலொடு களைந்து**
**போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்**
**என்வாய்க் கேட்டோர் இறந்தோ ருண்மையின்**
**நன்னீர்க் கங்கை யாடப் போந்தேன்**
**மன்னர் கோவே வாழ்க ஈங்கெனத்**
**தோடார் போந்தை தும்பையொடு முடித்த**
**வாடாவஞ்சி வானவர் பெருந்தகை**
**மன்னவன் இறந்தபின் வளங்கெழு சிறப்பின்**
**தென்னவன் நாடு செய்ததீங் குரையென**
**நீடு வாழியரோ நீணில வேந்தென**
**மாடல மறையோன் மன்னவற் குரைக்கும்**

**செய்திகள் கூறுதல்**

மாடலன் ஆகிய மறையவன் மன்னனுக்கு அச்செய்திகளை விவரித்துக் கூறினான். "கடற்கரைப் பாட்டில் மாதவி கூற்றில் கண்ட குறை அது ஊடலாக அமைய ஊழ்வினை காதலர் இருவரைப் பிரித்தது; அதன் தொடர் நிகழ்ச்சியாகக் கோவலன் தன் துணைவியுடன் மதுரை சென்றான். அங்கே காவலனால் பழிசுமத்தப்பட்டுக் கொலைக் களத்தில் வெட்டுண்டான்; பட்ட மரமாகிய கண்ணகி சீற்றம் கொண்டு நீதிக்குப் போராடி வழக்கில் வென்று பாண்டியனைத் துயரில் ஆழ்த்தினாள். அவன் உயிர்விட்டான் மதுரை எரிந்தது. நின்னாடு புகுந்த அப்பத்தினித் தெய்வம் இன்று கல்லாக அமைந்து இவர்கள் முடிமீது எறினாள்" என்று கதையைக் கூறினான். இது கடந்த செய்தி, அதனைக் கூறிமுடித்து அதன் பின் தான் கங்கைக் கரைக்கு வந்தது ஏன் என்ற சங்கையைத் தீர்க்கத் தொடங்கினான்.

அகத்தியன் வாழ் பொதிகை மலையை வலம் கொண்டு குமரியில் நீராடி வந்தான். வழியில் பாண்டிய நாட்டை அடைந்து அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கேள்வி யுற்றான். அங்குச் சென்றதற்காகத் தன் ஊழ்வினையை அவன் நொந்து கொண்டான்.

தென்னவனை வழக்காடி வென்று கோவலன் பிழையற்றவன் என்பதைக் கண்ணகி நிறுவினாள். அடைக்கலமாகக் கண்ணகியை இடைக்குல மகள் பெற்றிருந்தாள். அவர்களைத்தான் காக்க முடியவில்லை; அவர்களுக்குக் கேடு

நிகழ்ந்தது தன்னால்தான் என்று வருந்திய மாதரி எரியகம் புகுந்து உயிர் நீத்தாள். அதிர்ச்சி மிக்க செய்தியாக இது மாடலனுக்கு அமைந்தது.

தீயது செய்த வேந்தன் தன் உயிரைவிட்டுப் பாவ மன்னிப்புப் பெற்றுவிட்டான். தன் உடன் வந்த உத்தமர்களுக்கு அழிவு வரத் தானும் உடந்தை என்று கருதிய கவுந்தி அடிகள் அதற்கு ஈடாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். உண்ணாநோன்பு ஏற்று உயிரை விட்டார். இது அடுத்த அதிர்ச்சி மிக்க செய்தியாகிவிட்டது.

அடுத்து மாடலன் தன் சொந்த நாடாகிய சோழ நாட்டை அடைந்தான். புகார் நகரில் புகுந்தவன் இதுவரை நடந்த இந்தச் செய்திகளைத் தகுந்தவர்க்கு எல்லாம் எடுத்துச் சொல்ல அவ் அறிவிப்புகள் பலரை உயிர் விடச் செய்தன; சிலரைத் துறவிகள் ஆக்கின; துயரத்தைப் பெருக்கின. கோவலன் தந்தை தம்பால் உள்ள பொருளை உலகினர்க்கு அளித்து வாழ்க்கையை வெறுத்துப் புத்த பள்ளியை அடைந்து துறவியாயினான். அவன் மனைவி உறவுக்கு என ஒருவரும் இல்லாமையால் உயிர் விடுவதைத் தவிர வேறு வழி அறியாதவள் ஆயினாள். மாநாய்கன் தானம் பல செய்து அருக தானத்தை அடைந்து அறங்கள் செய்வதை வாழ்வாகக் கொண்டான். அவன் மனைவி, மகளையும், மருமகனையும் இழந்த துக்கம் தாங்க இயலாமல் ஏங்கி உயிர்விட்டு மறைந்தாள்.

மற்று இச்செய்திகளைக் கேட்ட மாதவி, "என் மகள் இனி நல்வாழ்க்கையை நாடிச் செல்லட்டும்; என்னோடு இந்தப் பழைய வாழ்க்கை மாறுவதாக; என் மகளைக் கணிகையாகக் கணமும் இசையேன். கணிகை வாழ்க்கை அவளைவிட்டு ஒழிக" என்று கூறி அவளைப் புதிய நெறிக்குத் திருப்பிவிட்டாள். தானும் துறவியாவதற்கு உறுதி கொண்டு தலைமுடியை அடியோடு களைந்து புத்த பள்ளியை அவள் அடைந்து துறவறம் மேற்கொண்டு விட்டாள். இந்தச் செய்திகளை எல்லாம் எடுத்துக் கூறிய மாடலன் இப் பின் நிகழ்வுகளுக்கு எல்லாம் தானும் ஒரு காரணமாக இருந்ததற்கு வருத்தம் தெரிவித்தான். இப்பாவத்தைப் போக்கிக் கொள்வதற்கே கங்கையில் நீராடத் தான் அங்கு வந்ததாகத் தெரிவித்தான்.

**பாண்டிய நாடு**

"செழியன் மறைந்தபின் பாண்டிய நாடு அதன் நிலை யாது?" என்று சேரன் கேட்டான். "கொற்கையில் இருந்த வெற்றிவேல் செழியன் என்பான் கொல்லர் ஆயிரவரைக் கண்ணகி கோயில் முன் தலை கொய்து பலியிட்டுக் கொன்று தென்னவன் செய்த குற்றத்திற்கு ஈடு செய்தான். இச்செய்தி ஊர் எங்கும் பரவியது; மெல்ல மெல்ல நாட்டில் அமைதி திரும்பியது. செழியன் அரியாசனம் ஏறினான். நாடு சீர்பெற்றது" என்ற செய்தியை அறிவித்தான்.

அந்தி நேரம் அணுகியது; வானத்தில் பிறை தோன்றி இரவு வருதலைக் காட்டியது; அதன் வண்ண அழகில் அரசன் எண்ணம் செலுத்தினான். அவன் மனம் அமைதி பெற்று இருந்தது. அருகில் இருந்த காலக்கணிதன் ஞாலம் ஆள்வோனை நோக்கி "நாள் கணக்கிட்டுப் பார்த்து இதுவரை வஞ்சியை விட்டு அங்கு வந்து திங்கள்

முப்பதும் இரண்டும் ஆயின; இனி நாடு திரும்புதல் தக்கது" என்று ஏடு கூறுவதாகத் தெரிவித்தான். மாளிகை சென்று தனியே ஒய்வு எடுத்தான்.

**சோழ நாடு**

அதற்குள் சோழ நாட்டின் சேதிகளை அறியச் செங்குட்டுவன் விரும்பினான்; மாடலனை மறுபடியும் அழைத்து வினாவினான். "சோழ மன்னன் கிள்ளிவளவனை எதிர்த்த குறுநில மன்னர் ஒன்பதின்மரை நீ ஒரு காலத்தில் போரிட்டு வென்றாய்; அவர்கள் மறைந்தனர்; அதன்பின் எதிர்ப்புகள் இன்றி நாட்டை எழிலுறச் சோழன் ஆட்சி செய்து வருகிறான்" என்று அரசனுக்கு மாடலன் அறிவித்தான். மாடலன் சோழர் தம் முன்னோர்களின் பெருமையைக் கூறி "அத்தகைய மரபில் வந்தவன் சோழன் கிள்ளிவளவன்; அவன் நாட்டில் எந்தக் குறையும் இல்லை" என்று அறிவித்தான்.

"விண்ணவர் வியக்க எயில் மூன்றினை அறுத்து எறிந்து வெற்றிச் சிறப்புடையவன் சோழன் செம்பியன்; வீரத்துக்கு அவன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. புறாவின் உயிரைக் காக்கத் தன் உடம்பினை அறுத்துக் கொடுத்துப் பருந்தின் பசியைத் தீர்த்தவன் சிபிச் சோழன்; அவன் அருளுக்கு ஒர் அடையாளமாக விளங்கியவன். வீரமும் அருளும் மிக்க செங்கோல் வேந்தர்கள் ஆண்ட நாடு சோழநாடு; அத்தகைய சிறப்பு மிக்க நாட்டை ஆள்பவன் செங்கோல் வழுவுவது இயலாது; அவன் ஆட்சி செம்மையாக நடைபெறுகிறது" என்பதை எடுத்துக் கூறினான்.

**பொன்னை அளித்துப் பாராட்டு**

காவிரி புரக்கும் நாட்டவன் ஆட்சி சிறப்பாக உள்ளது என்று முப்புரி நூலோன் எடுத்துக் கூற அவன் மடுத்துக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான். நாடுகள் பல திரிந்து நலம் அனைத்தும் நவின்ற அந்தணாளனை மதித்துச் செங்கோல் வேந்தனாகிய சேரன் செங்குட்டுவன் அவனுக்குப் பொன் அளந்து கொடுத்துச் சிறப்புச் செய்தான். தன் எடைக்கு நிகராக ஐம்பது துலாம் நிறையளவு பொன் கட்டிகளை அவனுக்கு அட்டியின்றித் தந்தான். இதனைத் துலாபாரம் புகுதல் என்று கூறினர்.

**கனகவிசயரை அனுப்பி வைத்தல்**

ஆடகப் பைம்பொன் மாடலனுக்கு அளித்தபின் உடன் வந்து உதவிய ஆரிய மன்னர் நூற்றுவர் கன்னரைத் தம் நாடுகளுக்குச் செல்க என்று விடை தந்து அனுப்பி வைத்தான். அதன்பின் சிறைப் பிடித்து வந்த அரச குமரர்கள், அடிமைப்படுத்தி அழைத்து வந்த பேடியர்கள், தமிழ் மண்ணை இகழ்ந்து பேசிய கனக விசயர் இவர்களை ஆயிரம் படை வீரர்களிடம் ஒப்புவித்து அவர்களைச் சோழ பாண்டியர்க்குக் காட்டி வருமாறு அனுப்பினான். இருபெரு வேந்தர்க்கும் அவர்களைக் காட்டிவர ஏவிய பின் அன்று அங்கே பாடி வீட்டில் சற்றுத் துயில் கொண்டான்.

இரவு நீங்கியது; காலைக் கதிரவன் தன் கதிர் ஒளியை வீசத் தொடங்கினான். கங்கை நதி தீரத்தில் வயல் வெளிகளில் தாமரைகள் மலர்ந்தன; வண்டுகள் யாழ் ஒலி செய்தன; பொழுது விடிந்தது என்பதை அறிந்த அரசன் தன் நாடு

நோக்கிப் புறப்பட்டான். குணதிசையில் சூரியன் தோன்றினான். தென்திசை நோக்கிச் சேரன் பயணமாயினான்.

**சேரமா தேவி எதிர்பார்ப்பு**

இவன் வருகைக்கு ஏங்கி வஞ்சி மாநகரில் சேரன் மாதேவி துயில் இன்றி வருந்திக் கிடந்தாள். அன்னத் தூவி பரப்பிப் படுக்கையின் மேலே கிடந்து அந்தக் கட்டிலின் விதானத்தை வெறிச்சிட்டு நோக்கிக் கொண்டிருந்தாள்; கதிர் செலவு ஒழிந்த கனக மாளிகையில் முத்துகள் பதித்த ஒவியவிதானம், வயிரமணிக் கட்டில், அன்னத் தூவி பரப்பிய மஞ்சம் அதில் துயிலுதல் இழந்து துயருற்றுக் கிடந்த சேரமாதேவியை அருகிருந்த பாங்கியர் ஆற்றுவித்தனர். "தோள் துணை துறந்த துயர் ஈங்கு ஒழிக" எனப் பாட்டுடன் இசைத்துப் பல்லாண்டு கூறி வாழ்த்தினர். குற்றேவல் செய்யும் குறுகிய வடிவுபடைத்த கூனியர்களும், குறளர்களும் சென்று "பெறுக நின் செவ்வி; பெருமகன் வந்தான்; நறுமலர் கூந்தல் நாள் அணிபெறுக" என நற்செய்தி நவின்றனர்.

**பாட்டிசைத்தல்**

குன்றக் குறவர் இளம் பெண்கள் குறிஞ்சிப்பண் பாடினர். அவர்கள் சேரனின் வெற்றிச் சிறப்பைப் பாடினர். இந்த இன்னிசை கேட்டுத் தினை கவர்ந்து உண்ண வந்த யானைகளும் மயங்கி அசைவற்று நின்றுவிட்டன. சேரன் வருகைக்குக் குறுக்கே நிற்காதீர் என்ற கருத்துப்பட நெஞ்சை உருக்கும் பாடல்களை அவ்வஞ்சி இளம் குறத்தியர் பாடி அரசியை மகிழ்வுறச் செய்தனர்.

"வடதிசை சென்றவன் பகைவர்கள் எயில்களை முருக்கி அவற்றை அழித்துவிட்டுத் திரும்பி வந்துவிட்டான். குடவர் கோமான் வெற்றி கேட்டு மகிழ்க; நாளை அவன் பிறந்த நாள் அணிவிழா நடைபெற இருக்கிறது; எருதுகளே, நுகத்தடி பூண்க! உழவுத் தொழில் சிறக்க, பகை அரசர் கால் விலங்குகள் விலகும் நாள் இது; அவன் வெள்ளணி உடுத்து மகிழும் பிறந்த நாள்" என்று உழவர் பாடினர். இது மருதப் பாடலாகத் திகழ்ந்தது; இம் மருதப் பாடலைக் கேட்டு மன்னன் துணைவி மகிழ்வு கொண்டாள். குவளைப் பூவையும், முண்டகப் பூவையும் கோவலர்கள் தலைமுடியில் சூடிக் கொண்டனர்; தாமரை மலர்களை அணிந்து கொண்டனர்; தாழையின் கிளைகளில் அமர்ந்து இருந்து இவர்கள் குழலிசை பாடினர்; "வில்லவன் வந்தான். இமயத்திலிருந்து ஆநிரைகளைக் கொண்டு வந்துள்ளான்; அப்பசுக்களோடு நீவிரும் உடன் சென்று நீர்த்துறை படிவீர்" என்ற கருத்து அமைய அவர்கள் முல்லைப் பண்ணைக் குழலிசையில் தந்தனர். இவ் இசையைக் கேட்டுச் சேரன் மனைவி மகிழ்வு அடைந்தாள்.

இவ்வாறே நெய்தல் நிலத்து இளம் பெண்கள் முத்துகளை வைத்துக் கழங்காடிக் கொண்டு சேரனின் வெற்றிச் சிறப்பைப் பாடினர்; "சேரன் வந்தான்; நம் இளமுலைகள் அவன் தோள் நலத்தைத் துய்ப்பது ஆகுக" எனவும் பாடினர். அவன் தும்பை சூடி வெற்றியுடன் வந்ததை விளம்பிப் புகழ்ந்தனர். "அவன் சூடிய பனம் பூவையும், தும்பைப் பூவையும், வஞ்சி மாலையையும் பாடுவோமாக!" என்று ஏத்திச்

சிறப்பித்தனர். இந்நிலையில் நெய்தல் பண்ணைப் பாடிய நல்லிள நங்கையர் பாடலைக் கேட்டு அரசி மகிழ்வு பெற்றாள்.

அஞ்சொற் கிளவியர் பாடிய நால் நில இசைப் பாடல்களைக் கேட்டு மன்னவன் வருகையை அறிந்து வஞ்சிநாட்டு அரசி உடல் பூரித்தாள். வளையல்கள் செறிவு பெற்றன. வலம்புரிச் சங்குகள் முழங்கின. மாலைகள் வேயப் பெற்ற குடைக்கீழ் சேரன் யானை மீது அமர்ந்து வந்தான். அவனோடு பல யானைகள் வரிசையாகப் பின் தொடர்ந்தன. அரசனை நகர மாந்தர் எதிர் கொண்டு வரவேற்றனர். வஞ்சி மாநகருள் செங்குட்டுவன் வந்து சேர்ந்தான்.

## 5. நடுகற் காதை

பத்தினியாளான கண்ணகிக்கு இமயத்திலேயிருந்து கொணர்ந்த கல்லிலே படிவம் சமைத்து, அதனை முறைப்படி, விழாக்கோலத்துடன் தெய்வமாக நாற்றிக் கொண்டாடிய செய்திகளைக் கூறுவது இப்பகுதி.

**தண்மதி யன்ன தமனிய நெடுங்குடை**
**மண்ணக நிழற்செய மறவா ளேந்திய**
**நிலந்தரு திருவின் நெடியோன் றனாது**
**வலம்படு சிறப்பின் வஞ்சி மூதூர்**
**ஒண்டொடித் தடக்கையின் ஒண்மலர்ப் பலிதூஉய்**
**வெண்திரி விளக்கம் ஏந்திய மகளிர்**
**உலக மன்னவன் வாழ்கென் றேத்திப்**
**பலர்தொழ வந்த மலரவிழ் மாலை**
**போந்தைக் கண்ணிப் பொலம்பூந் தெரியல்**
**வேந்துவினை முடித்த ஏந்துவாள் வலத்தர்**
**யானை வெண்கோடு அழுத்திய மார்பும்**
**நீள்வேல் கிழித்த நெடும்புண் ஆகமும்**
**எய்கணை கிழித்த பகட்டெழில் அகலமும்**
**வைவாள் கிழித்த மணிப்பூண் மார்பமும்**
**மைம்மல ருண்கண் மடந்தைய ரடங்காக்**
**கொம்மை வரிமுலை வெம்மை வேதுறீஇ**
**அகிலுண விரித்த அம்மென் கூந்தல்**
**முகில்நுழை மதியத்து முரிகருஞ் சிலைக்கீழ்**
**மகரக் கொடியோன் மலர்க்கணை துரந்து**
**சிதரரி பரந்த செழுங்கடைத் தூதும்**
**மருந்தும் ஆயதிம் மாலையென் றேத்த**
**இருங்கனித் துவர்வாய் இளநிலா விரிப்பக்**

**கருங்கயல் பிறழுங் காமர் செவ்வியில்**
**திருந்தெயி றரும்பிய விருந்தின் மூரலும்**
**மாந்தளிர் மேனி மடவோர் தம்மால்**
**ஏந்துபூண் மார்பின் இளையோர்க் களித்துக்**
**காசறைத் திலகக் கருங்கறை கிடந்த**
**மாசில்வாள் முகத்து வண்டொடு சுருண்ட**
**குழலுங் கோதையுங் கோலமுங் காண்மார்**
**நிழல்கால் மண்டிலம் தம்மெதிர் நிறுத்தி**
**வணர்கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇப்**
**புணர்புரி நரம்பிற் பொருள்படு பத்தர்க்**
**குரல்குர லாக வருமுறைப் பாலையில்**
**துத்தங் குரலாத் தொன்முறை யியற்கையின்**
**அந்தீங் குறிஞ்சி யகவன் மகளிரின்**
**மைந்தர்க் கோங்கிய வருவிருந் தயர்ந்து**
**முடிபுறம் உரிஞ்சுங் கழற்காற் குட்டுவன்**
**குடிபுறந் தருங்கால் திருமுகம் போல**
**உலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்**
**பலர்புகழ் மூதூர்க்குக் காட்டி நீங்க**

**கண்ணகிக்குப் படிமை நிறுவுதல்**

**மகிழ்வும் மன நிறைவும்**

"சேரன் வாழ்க" என்று சேயிழை மகளிர் வாழ்த்துக் கூறினர். மாலை வேளை, அவர்கள் வீடுகளில் விளக்கேற்றி ஒளி கூட்டினர். மலர்களைத் தூவி மங்கலம் ஆக்கினர். களம் கண்ட வீரர்கள் வீடு திரும்பினர். அவர்கள் உளம் மகிழ அவர்கள் காதலியர் அவர்களைத் தழுவி அவர்கள் மார்பில் ஏற்பட்ட தழும்புகளை ஆற்றினர்; யானைக் கோடும் வேலும், அம்பும், வாளும் பட்ட வடுக்களை அவர்கள் மார்பு அணைப்பில் ஆறவைத்தனர். காதல் மகளிர் கடைக்கண் பார்வை அவர்களுக்குப் பரிசாக அமைந்தது. வீரம் நிறைந்த அவர்கள் ஈரம் மிக்க காதலில் திளைத்தனர்.

காதலியர் கண் பார்வை அதன் நினைவுகள் போர்க் களத்தில் வீரர்களை வாட்டி வதைத்தன; அப்பொழுது அவை நோயை விளைவித்தன. இப்பொழுது அப்பார்வை நோய் தீர்க்கும் மருந்தும் ஆகியது; இவ்வாறு எல்லாம் எண்ணி அவ்வீரர்கள் மகிழ்ந்தனர். தமது துணைவியரை நண்ணி அவர்தம் பேரழகில் ஆழ்ந்து இன்பங் கண்டனர். கண்கள் உரையாடின, முரல் அவர்களை மகிழச் செய்தது; கொங்கைகள் அவர்கள் மார்பினை அணைந்து இன்பம் தந்தன.

இசை பாடும் அழகிய மகளிரைக் கொண்டு யாழ் எடுத்து இசை கூட்டிப் பாலை, குறிஞ்சி முதலிய பண்கள் பல பாட வைத்தனர். அவர்களுக்கு அவர் மனைவியர் புதிய இன்பங்களைக் கூட்டுவித்தனர். திங்கள் நிலவு வீசி அவர்கள் அரங்குகளையும் படுக்கை முற்றங்களையும் குளிர்வித்தது. காமன் தன் கணைகளைத் தொடுத்து அவர்கள் காதல் இன்பத்தை மிகுவித்தான்; கிளர்ச்சிகள் பெறச் செய்தான்; வீரர்கள் மகிழ்வு கண்டனர்.

அந்த இன்ப இரவில் செங்குட்டுவன் தன் அரசியோடு அமர்ந்திருந்தான். சாக்கையன் என்னும் கூத்தன் உமையவளோடு சிவன் ஆடிய கொடிகொட்டி என்னும் ஆடலை ஆடிக் காட்டி அரசனை மகிழ்வித்தான்.

**அத்தாணி மண்டபத்தில் அரசன்**

அதன்பின் அரசவை கூடும் அத்தாணி மண்டபத்தைச் சேரன் அடைந்தான். கஞ்சுக மாக்கள் நீலனைத் தலைவனாகக் கொண்டு வஞ்சி மன்னன் முன் வந்து சேர்ந்தனர். உடன் மாடலனும் வந்திருந்தான். அவர்கள் செய்தி கொண்டு செப்பக் காத்திருந்தனர். சோழன் மூதூர் ஆகிய புகார் நகரத்திற்குச் சென்றதையும், அங்கு அவன் சித்திர மண்டபத்தில் வீற்றிருந்ததையும், அவனிடம் தாம் ஆரிய மன்னரை அழைத்துச் சென்று காட்டியதையும், அதற்கு அவர்கள் உரைத்த மாற்றத்தையும் விளம்பினர்.

“வீரத்தைக் களத்தில் போட்டுவிட்டு வெறுங்கையராகத் தவசிகள் கோலத்தில் தப்பிச் சென்றவர்களை மடக்கிப் பிடித்து வந்தது மடமை என்று சோழ அரசன் கூறினான்” என்றனர். மற்றும் பாண்டியன் அவைக்குச் சென்றபோது அவனும் அதேபோன்று கூறிச் “சிவனை வணங்கச் சிந்தை கொண்ட எளியவர்களை இழுத்துக் கொண்டு வந்தது சேரனுக்கு இழுக்கு” என்று உரைத்ததாக அறிவித்தனர். மன்னர் இருவரும் மதிக்காமல் உரைத்த மாற்றங்களை நீலன் என்பவன் எடுத்து உரைக்கக் காலன் போல் கடுஞ்சினம் கொண்டு ஞாலம் ஆள்வோன் ஆகிய செங்குட்டுவன் சீறி எழுந்தான்; அவன் தாமரை போன்ற கண்கள் தழல் நிறம் கொண்டன; எள்ளி நகையாடித் தம் ஆற்றலை மதிக்காமல் அவர்கள் தன்னைத் தூற்றி விட்டதாகக் கருதினான். நன்றி மறந்தவர்கள் என்று வென்றிக் களிப்பில் அவர்கள் செயலைக் கண்டித்தான்; அவர்கள் உறவைத் துண்டித்தான்.

**மாடலன் அறிவுரை**

“மாடலன் எழுந்தான்; மன்னவர் மன்ன! வாழ்க நின் கொற்றம்!” என்று தொடங்கி அவன் சீற்றத்தை ஆற்றுவிக்கத் தொடங்கினான். ஆட்சி ஏற்று ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன; எனினும் நீ அறச் செயலைக் கருதாது மறக்களமே கருதுகின்றாய்; காயம் இது பொய்; யாருமே உலகில் நிலைத்து வாழ்ந்தது இல்லை. எண்ணிப்பார்; புகழ்மிக்க உன் முன்னோர் மகிழ்வு மிக்க செயல்களைச் செய்து முடித்தனர்; வீரம் விளைவித்தனர்; கடம்பு எறிந்து கடலில் பகைவர்களை வென்றனர்; இமயத்தில் வில் பொறித்தனர்; வேள்விகள் இயற்றி வேத வேதியர்களுக்கு நன்மைகள் செய்து நற்புகழ் பெற்றனர் கூற்றுவனும் அஞ்சும் ஏற்றம் மிக்க வாழ்வு வாழ்ந்து காட்டினர்; யவனர்களை வென்று புவனத்தை ஒரு குடைக் கீழ் ஆண்டனர். இமயம்

வரை வென்று தம் வெற்றிக் கொடியை நாட்டினர்; பகைவர்களை அவர்தம் மதிலை அடைந்து அவற்றை அழித்து அவர்களை வென்று அடிமைப்படுத்தினர்; அயிரை மலையினை அடைந்து அதனையும் கடந்து ஆழ்கடலில் மூழ்கிப் புண்ணியம் தேடினர்; நகர்க் காவலுக்குச் சதுக்க பூதங்களைக் கொண்டு வந்து நிறுவி அவற்றின் ஏவலுக்கு அடிபணிந்து மதுக்குடம் கொண்டு வந்து கொட்டி நிரப்பி யாகங்கள் செய்தனர். புகழ்மிக்கு வாழ்ந்தவர் அவர்கள் பூத உடல் இன்று அபூத நிலை எய்திவிட்டது; வாழ்ந்த சுவடுகள் மறைந்துவிட்டன; யாக்கை நிலையற்றது என்பதை இவர்கள் வாழ்க்கை வரலாறுகள் காட்டுகின்றன". "செல்வம் நிலைக்காது என்பதனை நீயே நேரில் கண்டிருக்கிறாய்; செருக்களத்தில் உன்னிடம் தோற்றவர்கள் இன்று தெருத் தெருவாக வறியவராகத் திரிகின்றனர். செல்வம் நிலைத்து நிற்காது; அதுமாறி மாறிச் செல்லும் என்பது நீ நேரில் கண்டிருக்கிறாய்".

"இளமை நிலையாது என்பதனை உன் தளர்ச்சிமிக்க வயதே காட்டிவிடும். நரைமுதிர் யாக்கையை நீ கண்டு விட்டாய்; அடுத்தது? சிந்தித்துப்பார்; பிறவிகள் தொடர்கின்றன. அவையும் இன்ன பிறவி என்று உறுதி கூறும் நிலையில் இல்லை. தேவர்கள் மனிதராகப் பிறக்கின்றனர்; மனிதர்கள் விலங்காகின்றனர்; விலங்குகள் நரகர் கதியை அடைகின்றன; ஆடும் கூத்தர் போல் வேறு வேறு வடிவு கொள்கின்றது இந்த உயிர் உயிர் வாழ்க்கை நிலையற்றது; பிறப்புகளும் மாறி மாறி வருகின்றன; அவரவர் செய்யும் வினைகளுக்கு ஏற்ப உயிர்கள் பிறப்புகளை ஏற்கின்றன. யாக்கை நிலைத்து இருப்பது அன்று; செல்வம் இடம் பெயர்வது; இளமை அதுவும் மாறுவது நிலையற்ற வாழ்க்கையில் எதுவும் நிலைத்து நிற்காது" என்ற விளக்கம் தந்தான். அடுத்து அவன் செய்யத் தகுவது எது என்று எடுத்துக் கூறத் தொடங்கினான்.

அதற்கு முன்னுரையாகத் தன் நிலை யாது என்று விளக்கினான். பரிசில் பெறுவதற்காக இதைத் தான் கூறவில்லை என்று முன்னுரை தந்தான். "நீ மற்றவர்களைப் போல் உருத் தெரியாமல் மறைவதை நான் விரும்பவில்லை. பிறந்தவர் இறப்பது பொது நெறி; அவர்களுள் சிலர் வீடுபேறு அடைவது சிறப்பு நெறி; நீ மற்றவர்களைப் போல வாழ்ந்து முடிவதை யான் விரும்பவில்லை; வீட்டுநெறி அடைவது நீ ஈட்டும் செயலாக அமைய வேண்டும்" என்று வழிகாட்டினான்.

"வேள்வி செய்வதே வீட்டு நெறிக்கு வழி கோலுவதாகும்; வேள்வி அறிந்த மறையவர் முன் இருந்து நடத்தும் பெரு வேள்வியை நீ தொடங்க வேண்டும். அதனை இன்றே செய்தல் நன்மை பயக்கும். நாளை செய்குவம் என்று தள்ளிப் போட்டால் உறுதியாக அதை ஏற்றுச் செய்ய முடியும் என்று கூற இயலாது; நல்ல எண்ணம் செயல்படுவதற்கு முன் எமன் வந்து அழைத்துச் சென்றால் என்ன செய்வது? இதுதான் நாளை நடக்கும் என்று உறுதி செய்ய இயலாது; நாளை நடப்பதை யார் அறிய முடியும்? உலகில் அத்தகையவர் யாருமே இல்லை. வேள்விக் கிழத்தியாக வேண்மாள் உனக்குத் துணையாக விளங்க வேள்வி செய்க இருவரும் இணைந்து அறங்கள் பல செய்து வாழ்விராக! மன்னர் பிறர் வந்து உன் அடிகளைப் போற்ற நீ நீடு வாழ்க!" என்று மாடலன் அறவுரை கூறினான்.

மாடலன் உரைத்த அறக்கருத்துகள் நல்வித்துகளாக அமைந்து அவை உள்ளத்தில் பசும் பயிராக வளர்ந்து செயற்பாடு பெற்றன. நான்மறை கற்ற வேத வேள்வியரை அழைப்பித்து மாடல மறையவன் சொல்லிய முறைமையில் வேள்வியை அமைதியாக இயற்ற வழி வகைகள் செய்யுமாறு ஏவினான்.

அற வாழ்வில் அடியெடுத்து வைத்த அரசன் செங்குட்டுவன் முதற்கண் சிறைப்பட்டுக் கிடந்த ஆரிய மன்னர் ஆகிய கனக விசயரை விடுவித்து அவர்களை விருந்தினராக ஏற்றுப் பூம்பொழில் சூழ்ந்த மாளிகை ஒன்றில் தங்க வைத்தான்; "வேள்விக்கோ என்று அம்மாளிகை பெயர் பெற்று விளங்கியது; "வேள்வி முடிந்ததும் அவர்கள் தத்தம் ஊர்களுக்குச் செல்லலாம்" என்று வேண்டி உரைத்தான். பகைவர்கள் அவனுக்கு நண்பர்கள் ஆயினர். அந்நியர்கள் அவனுக்கு மன்னிய விருந்தினர் ஆயினர்; "அவர்க்கு ஆவன செய்க" என்று அமைச்சனான வில்லவன் கோதைக்கு நல்லுரை கூறினான்.

சிறைப்பட்டுக் கிடந்த சிறுமையோரை விடுதலை செய்யுமாறு ஆணை இட்டான். மற்றும், "பிறநாட்டு அரசர்கள் வந்து குவிக்கும் திறைப்பொருள் இனித் தேவை இல்லை" என்று கூறித் தவிர்த்தான். மக்களுக்கு வரிகள் விலக்கு அளித்தான். இறை செலுத்துவதிலிருந்து அனைவருக்கும் விலக்கு அளித்து அவர்களைப் பெரு மகிழ்வு கொள்ளச் செய்தான். இப்பணியினை அழும்பில்வேள் என்னும் அமைச்சனிடம் ஒப்புவித்தான்.

**கோட்டம் அமைத்தல்**

அதன் பின் கண்ணகிக்குக் கோட்டம் அமைத்தான்; கண்ணகி வாழ்வு மூன்று பேருண்மைகளை விளக்கிக் காட்டியது. அவள் கற்பின் பெருமைக்குக் காரணம் அவள் வளர்ப்பு முறை; அவள் பிறந்த நாட்டின் பின்புலம்; கற்பு சிறப்பதற்கு அரசு நன்கு அமைந்து இருந்தது; கண்ணகி தன் கற்பின் திறத்தால் சோழ அரசன் நல்லாட்சியை உலகுக்கு அறிவிக்க இயன்றது; இது ஒன்று. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆகும் என்ற பேருண்மையைப் பாண்டிய நாட்டில் உலகுக்கு உணர்த்தினாள். அவனுக்குப் பெருமை சேர்த்தாள். அவன் தவறு உணர்ந்து உயிர்விட்டான். அவன் புகழுக்கு உரியவன் ஆயினான்; அவன் மானத்தைத் தூண்டிவிட்டு அவனை மாண்புறச் செய்தாள். கண்ணகியின் செயல் நீதியை நிலைநாட்ட உதவியது; பாண்டியனுக்குப் பெருமை தேடித் தந்தது; அதனால் பாண்டிய நாடு பெருமை பெற்றது.

அடுத்தது சேர நாட்டை அடைந்து அரிய செயலைச் செய்ய அவள் தூண்டியவள் ஆயினாள்; வஞ்சினம் கொண்டு வாள் ஏந்திய மன்னன் வெஞ்சினத்தால் வடவரை எதிர்த்துத் தன் புகழை நிலை நாட்டி வீரச் செயல் முடித்தான் சேர அரசனின் மானம் மிக்க செயலைத் தூண்டி அவன் வீரச் சிறப்பை உலகறியச் செய்தவளும் கண்ணகி ஆவாள். எனவே கண்ணகி தமிழகத்துக்குப் பெருமை தேடித் தந்தவள் ஆயினாள் என்று அவள் பெருமையைச் சேரன் பாராட்டினான். மதுரை மூதுரை எரியழலுக்கு இரையாக்கினாள்; சீற்றம் கொண்டு மதுரையை அழித்துவிட்டுச் சேர நாடு சேர்ந்த நங்கை அவள் போற்றுதற்கு உரியவள் என்று பேசிச் சிறப்பித்தான். அவளுக்குச்

சிற்ப நூல் வல்லவரைக் கொண்டு கோயில் கட்டுவித்தான். சோதிடர்களைக் கொண்டு நாள் நியமித்தான்; அந்தணர்களைக் கொண்டு சடங்குகள் இயற்றிப் பத்தினிக் கோயில் அமைத்து முடித்தான். அதனை அடுத்துக் கண்ணகியின் படிமத்தை நிறுவி வழிபாடுகள் செய்ய ஏற்பாடுகள் செய்வித்தான்.

**வழிபாடுகள்**

இமயத்தின் உச்சியில் உள்ள தெய்வமாகிய சிவனை வழிபட்டுப் பின் விழா எடுத்தான். தெய்வப் படிமத்துக்குப் பொன்னணி பூட்டினான். பூக்களைத் தூவி வழிபாடு செய்வித்தான். காவல் தெய்வங்களைக் கோயில் கடைவாயிலில் நிறுத்தினான். இதற்குக் காப்புக் கட்டுதல்" என்று கூறுவர். இது தொடக்க நிகழ்ச்சியாக அமைந்தது. அதன்பின் வேள்விகளும், விழாக்களும் நாள்தொறும் நடைபெற வழிவகைகளை வகுத்தான். "தெய்வ வழிபாடு தொடர்ந்து செய்வீராக" என்று செங்குட்டுவன் அறிவுறுத்தினான். பத்தினிச் சிலையை அங்கே நிறுவி அதனைக் கடவுளாக ஏற்றுப் போற்றி விழாக்கள் நடத்தினான். கோயிலில் கண்ணகி சிலை இடம் பெற்றது. கல்லை நிறுவிக் கடவுள் ஆக்கிக் கோயில் தெய்வமாகக் கண்ணகியை நிறுத்தினான்.

## 6. வாழ்த்துக் காதை

கண்ணகிப் படிமத்தின் கடவுள் மங்கலம் நடைபெற்றது. செங்குட்டுவன் வந்திருந்தான். பல சிற்றரசர்களும் வந்து திறை செலுத்தினர். தேவந்தி முதலியோர் கண்ணகி கோயிலுக்கு வந்து அரற்றினர். கண்ணகி தேவ வடிவிலே தோன்றுகின்றாள்; செங்குட்டுவனையும் வாழ்த்துகின்றாள்.

**தேவந்தியும் பிறரும் வருதல்**

**தேவந்தி வருகை**

கண்ணகியின் விழாவில் அவள் தோழியாகிய தேவந்தி வந்து கலந்து கொண்டாள். அவளுடன் கண்ணகியை வளர்த்த காவற்பெண்டும், அவள் மகளும் வந்திருந்தனர். மதுரையில் இருந்து இவர்களுடன் மாதரி மகள் ஐயையும் வந்து சேர்ந்தனள், அவரவர் தம் உறவினை உரைத்து அவர்கள் ஒவ்வொருவரும் செய்திகளை விளம்பினர். தேவந்தி சோழ நாட்டில் கண்ணகியின் தாயும், கோவலன் தாயும் உயிர் துறந்தமையைச் செப்பினாள். காவற் பெண்டு ஆகிய செவிலித்தாய் மாசாத்துவான் துறவைப் பற்றியும், மாநாய்கன் துறவைப்பற்றியும் உரைத்தாள். செவிலியின் மகள் ஆகிய அடித்தோழி மாதவியும் மணிமேகலையும் துறவிகள் ஆயினமையைச் செப்பினாள். மற்றும் தேவந்தி ஐயையைச் சுட்டிக் காட்டி அவள் மணம் பெற்றில்லாத அவலத்தைக் கூறினாள். கண்ணகியின் வீழ்ச்சியால் மற்றவர்கள் அடைந்த தாழ்ச்சிகளை இவர்கள் எடுத்துச் சொல்லி ஆற்றினர்; தான் உடன் பழகிய இப்பண்டையோர் அங்கு வந்து மண்டியவராய்ச் சோகக் கதைகளைச் சொல்லி அழுதனர்; வாய்விட்டு அரற்றினர்.

**தெய்வக் காட்சி**

கண்ணகி தெய்வக் காட்சி நல்கி வானத்தில் இருந்து தோற்றம் அளித்தாள். பொன் ஒளிர் மேனியளாக மின்னல் போல் அவர்களுக்கு வானத்தில் காட்சி அளித்தாள். அதனைக் கண்டு சேரன் செங்குட்டுவன் பெருவியப்பு அடைந்தான். "என்னே இஃது, மின்னல் கொடிபோன்று ஒரு காட்சி தோற்றுகிறதே" என்று வியந்தான். பொற் சிலம்பும், மேகலையும், வளையல்களும், வயிரப் பொன் தோடும் அணிந்த பெண் உரு அவனுக்குக் காட்சி அளித்தது.

கடவுள் நிலை அடைந்த கண்ணகி புதிய வார்த்தைகள் பேசினாள். மானிட நிலையில் இருந்தவள் பாண்டியனைத் "தேரா மன்னன்" என்று சாடியவள் மனம் மாறி "அவன் தீதிலன்" என்றாள்; அதுமட்டுமன்று. "நான் அவன் தன் மகள்" என்று உறவும் கொண்டு அவனை மதித்துப் பேசினாள். மானிடப் பார்வை வேறு; கடவுள் நிலைவேறு என்பதைக் காட்டினாள். தவறுகளை மன்னிப்பதுதான் தெய்வநிலை என்பதை உணர்த்தினாள்.

"தென்னவன் தீதிலன்; தேவர் உலகில் அவன் வரவேற்கப்பட்டுள்ளான்; அவர்கட்கு நல்விருந்து ஆயினான்; யான் அவன் மகளாகிவிட்டேன். முருகனின் குன்று ஆகிய இந்நெடுவேள் குன்றில் வந்து விளையாடுவேன்; இதனை விட்டு அகலமாட்டேன்; என்னோடு தோழியர்களே வந்து கலந்து கொள்ளுங்கள்; அனைவரும் வருக" என்று அழைத்தாள்.

**வாழ்த்துரைகள்**

வஞ்சி மகளிர் வந்து கூடினர்; "தென்னவனைச் செஞ்சிலம்பால் வென்ற சேயிழையை நாம் பாடுவோம்; அப்பைந்தொடிப் பாவையைப் பாடுவோம்; வருக என்று அழைத்தனர். பாண்டியன் மகளாகிவிட்ட கண்ணகியை நாம் பாடுவோம்." என்று அழைத்தனர்.

"சேரன் மகள் என்று நாம் அவளைச் செப்பினோம்; ஆனால் அவள் தன்னைப் பாண்டியன் மகள் என்று பேசுகிறாள். அவள் பாண்டியனை வாழ்த்தட்டும். நாம் சேரனை வாழ்த்துவோம்" என்று இவ்வஞ்சி நாட்டு இளம் பெண்கள் வாழ்த்தத் தொடங்கினர். அவர்கள் சோழனையும், பாண்டியனையும், சேரனையும் அவர்கள் சிறப்புகளைக் கூறி வாழ்த்தினர். "பழிதுடைப்பதற்காக உயிரைத் தந்தான் பாண்டியன்; பத்தினித் தெய்வத்துக்குப் படிமம் சமைக்க வடநாடு சென்றான் சேர அரசன் கண்ணகி பிறந்த நகர் புகார் நகர், அதன் அரசனாகிய சோழன் அந்நாட்டுக்கு அரசன், அதனால் அவனை வாழ்த்துவோம்" என்று மூவர் தம் சிறப்புகளைச் செப்பி வாழ்த்துக் கூறினர்.

சேர நாட்டு இளம் பெண்கள் சேர்ந்து பாடிய பாடல்கள் அக்கோயில் முன் முழங்கின. அம்மானைப்பாட்டில் சோழர் தம் சிறப்பையும், கந்துகவரியில் பாண்டியனின் பெருமையையும், ஊசல்வரியில் சேரனின் வெற்றிகளையும் சிறப்பித்துப் பாடினர். வள்ளைப் பாட்டில் மூவர்தம் உயர்வுகளையும் வரிசைப்படுத்திக் கூறினர்.

அம்மானை வரி

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை
ஓங்கரணங் காத்த வுரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்கா னம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை;
புறவு நிறைபுக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை;
கடவரைக ளோரெட்டுங் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யா ரம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்றிக் கெட்டுங்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்கா னம்மானை
கொற்றவன்றன் பூம்புகார் பாடேலோ ரம்மானை;
அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை
கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானை;

கந்துக வரி

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்பஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்களன்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க என்றுபந் தடித்துமே;
பின்னுமுன்னும் எங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின் னிளங்கொடி வியனிலத் திழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்களன்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க என்றுபந் தடித்துமே;
துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலம்
தன்னினின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்களன்று சென்றுபந் தடித்துமே

தேவரார மார்பன்வாழ்க என்றுபந் தடித்துமே;

ஊசல் வரி

வடங்கொள் மணியூசன் மேலிரீஇ ஐயை
உடங்கொருவர் கைநிமிர்த்தாங் கொற்றைமே லூக்கக்
கடம்பு முதல்தடிந்த காவலனைப் பாடிக்
குடங்கைநெடுங் கண்பிறழ ஆடாமோ ஊசல்
கொடுவிற் பொறிபாடி ஆடாமோ ஊசல்;
ஓரைவ ரீரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்;
வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
தென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான்
மன்பதைகாக் குங்கோமான் மன்னன் திறம்பாடி
மின்செய் இடைநுடங்க ஆடாமோ ஊசல்
விறல்விற் பொறிபாடி ஆடாமோ ஊசல்;
தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார்மகளிர்
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்
பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்;
பாடல்சான் முத்தம் பவழ உலக்கையான்
மாட மதுரை மகளிர் குறுவரே
வானவர்கோன் ஆரம் வயங்கியதோட் பஞ்சவன்றன்
மீனக் கொடிபாடும் பாடலே பாடல்

வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்;
சந்துரற் பெய்து தகைசால் அணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டாற்
கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
படர்ந்த நிலம்போர்த்த பாடலே பாடல்
பனந்தோ டுளங்கவரும் பாடலே பாடல்;

**ஆங்கு, நீணில மன்னர் நெடுவிற் பொறையன்நல்**

**தாள்தொழார் வாழ்த்தல் தமக்கரிது சூளொழிய**

**எங்கோ மடந்தையும் ஏத்தினாள் நீடுழி**

**செங்குட் டுவன்வாழ்க என்று.**

அம்மானைப்பாட்டு என்பது வினா ஒன்று தொடுத்து அதற்கு விடை தருவது போல அமைந்த பாடல் ஆகும். "விண்ணவர்க்காக அசுரர்களை எதிர்த்து அவர்கள் எயில்கள் மூன்றனையும் அழித்தவன் சோழன் ஆவான். மற்றும் புறாவின் உயிரைக் காப்பாற்றத் தன் உயிரைத் தந்தவனும் ஒரு சோழன்தான்; பசுவின் துயர் கண்டு தன் மகனைத் தேர்க்காலில் மடிவித்தவனும் ஒரு சோழன்தான்; இமயமலையில் புலிக்கொடியைப் பொறித்தவனும் மற்றொரு சோழன் ஆவான்" என்றனர்.

கந்துகவரியில், "தென்னவன் வாழ்க" என்று கூறிப் பந்தடித்து ஆடுவதாகப் பாடினர். ஊசல்வரிப் பாடியவர்கள் சேரனின் வெற்றிச் சிறப்புகளைப் பேசிப் பாராட்டினர். "கடம்பு எறிந்த காவலன் சேரனின் முன்னவன் ஒருவன்; அவன் வெற்றிச் சிறப்பைப் பாடினர். மற்றொரு சேரன் பாரதப் போரில் இருதிறத்தவர்க்கும் சோறு வடித்துக் கொட்டி அவர்கள் பசியைப் போக்கினான்; இவர்கள் செங்குட்டுவனின் முன்னோர் ஆவார்." "யவனர்தம் நாட்டைக் கொண்டதோடு இமயத்தில் வில்பொறித்தவனும் இவன் முன்னோன் ஆவான்; மற்றும் தென்குமரியையும் தம்குடைக் கீழ்க் கொண்டவனும் சேர அரசருள் ஒருவனாவான்; வில், கயல், புலி இவற்றிற்குப் பெருமை தேடித் தந்த தமிழ் மன்னன் சேரன் செங்குட்டுவன்; அவன் திறம் பாடுவோம்" என்று சிறப்பித்துக் கூறினர்.

வள்ளைப் பாட்டில் மூவர் திறமும் செப்பித் தமிழகம் ஒன்று என்ற எண்ணத்தை அறிவித்தனர். உலக்கை கொண்டு முத்துகளைக் குற்றுவாராயினர்; தீங்கரும்பை நல்லுலக்கையாகக் கொண்டு காஞ்சி மரத்தின் நிழலில் புகார் மகளிர் முத்துக் குற்றுவார் என்று கூறி சோழனின் வெற்றிச் சிறப்பைப் பாடினர். இவ்வாறே பவழ உலக்கை கொண்டு மதுரை மகளிர் குற்றுவார் என்று கூறிப் பாண்டியனின் மீன் கொடியைச் சிறப்பித்துப் பாடினர்; சந்தன உரலில் பெய்து யானை தந்தம் கொண்டு வஞ்சி மகளிர் முத்துக் குற்றுவார் என்று கூறிக் கடலில் எறிந்த சேரனின் வெற்றிச் சிறப்பினைப் பாடினர். மூவரையும் ஒரு சேரப் பாடித் தமிழகத்தின் மூவேந்தரைச் சிறப்பித்துப் பாடினர். நீள்நில மன்னர்கள் சேரனைத் தொழுது போற்றினர். இறுதியில் "செங்குட்டுவன் நீடுழி வாழ்க" என்று கண்ணகி வாழ்த்தினாள்.

## 7. வரந்தரு காதை

மணிமேகலை துறவைப்பற்றி தேவந்தி சொன்னாள். அவள் மேல் சாத்தன் ஆவேசித்துப் பேசுகிறான். கண்ணகியின் தாய், கோவலனின் தாய், மாதரி என்பவர், தம் அடுத்த பிறப்பிற் சிறுகுழந்தைகளாக அங்கு வந்து, தாம் மீண்டும் பிறந்ததன் காரணம் பற்றிக் கூறுகின்றனர். பத்தினிக்குப் பூசை செய்யத் தேவந்தி அனுமதி பெறுகிறாள். பல

நாட்டு மன்னரும் வணங்கி விடைபெறுகின்றனர். வேள்விச் சாலைக்குச் செங்குட்டுவன் செல்லுகின்றான். நூலாசிரியருக்குக் கண்ணகி அவர்தம் முன்வரலாறு உரைக்கின்றாள். முடிவில் உலகோர்க்கான அறிவுரைகளுடன் சிலப்பதிகாரம் முடிவடைகிறது.

**வடதிசை வணக்கிய வானவர் பெருந்தகை**
**கடவுட் கோலம் கட்புலம் புக்கபின்**
**தேவந் திகையைச் செவ்விதின் நோக்கி**
**வாயெடுத் தரற்றிய மணிமே கலையார்**
**யாதவள் துறத்தற் கேதுவீங் குரையெனக்**
**கோமகன் கொற்றங் குறைவின் றோங்கி**
**நாடு பெருவளஞ் சுரக்கென் றேத்தி**
**அணிமே கலையா ராயத் தோங்கிய**
**மணிமே கலைதன் வான்றுற வுரைக்கும்**
**மையீ ரோதி வகைபெறு வனப்பின்**
**ஐவகை வகுக்கும் பருவங் கொண்டது**
**செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்கண்**
**அவ்வியம் அறிந்தன அதுதான் அறிந்திலள்**
**ஒத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த**
**நித்தில விளநகை நிரம்பா வளவின**
**புணர்முலை விழுந்தன புல்லக மகன்றது**
**தளரிடை நுணுகலுந் தகையல்குல் பரந்தது**
**குறங்கிணை திரண்டன கோலம் பொறாஅ**
**நிறங்கிளர் சீறடி நெய்தோய் தளிரின**
**தலைக்கோ லாசான் பின்னுள னாகக்**
**குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார்**
**யாது நின்கருத் தென்செய் கோவென**
**மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப**
**வருகவென் மடமகள் மணிமே கலையென்**
**றுருவி லாள னொருபெருஞ் சிலையொடு**
**விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்**
**கோதைத் தாமங் குழலொடு களைந்து**
**போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்**
**ஆங்கது கேட்ட அரசனும் நகரமும்**
**ஓங்கிய நன்மணி யுறுகடல் வீழ்த்தோர்**

**தம்மிற் றுன்பந் தாம்நனி யெய்தச்**
**செம்மொழி மாதவர் சேயிழை நங்கை**
**தன்றுற வெமக்குச் சாற்றின ளென்றே**
**அன்புறு நன்மொழி அருளொடுங் கூறினர்**
**பருவ மன்றியும் பைந்தொடி நங்கை**
**திருவிழை கோலம் நீங்கின ளாதலின்**
**அரற்றினென் என்றாங் கரசற் குரைத்தபின்**

**வரம் தருதல்**

**செங்குட்டுவன் வினவுதல்**

வடதிசை மன்னர்களை வணங்கச் செய்த சேரன் செங்குட்டுவன் கண்ணகியின் தெய்வக் காட்சியைக் கண்டு களி மகிழ்வு கொண்டான். அதன்பின் தேவந்தியை நோக்கி மணிமேகலை பற்றிய செய்திகளைக் கூறுமாறு பணித்தான். அடித்தோழி, "மணிமேகலை துறவு பூண்டாள்" என்ற செய்தியை அவள் அரற்றி வாய்விட்டுக் கூறியிருந்தாள்; அதை மனத்தில் கொண்டு சேரன் தேவந்தியை நோக்கி அவள் கூறியதாகவே கொண்டு விளக்கத்தைக் கேட்டான். அதனை அங்குள்ளவர்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது அவன் நோக்கமாக இருந்தது.

**மணிமேகலை துறவு**

தேவந்தி இச்செய்தியைக் கூறலுற்றாள். "மாதவி மனநிலை மாறிவிட்டது; அவள் துறவு நிலையை ஏற்று விட்டாள். அந்த நிலையில் அவள் தன் மகளைப் பற்றி என்ன கருதுகின்றாள் என்பதைத் தெரிந்து கொள்ள அவள் தாய் சித்திராபதி விரும்பினாள். பருவம் அடைந்த மங்கை உருவத்தில் கவர்ச்சி மிக்கவள் ஆயினாள். இளைஞர்கள் அவள் பேரழகில் மயங்கிக் கிடந்தனர். அவளைக் கலை உலகில் காண நாடே எதிர்பார்த்து நின்றது. சித்திராபதி அவளை மேடையில் ஆடவைக்க விரும்பினாள். இந்திர விழாவில் கற்றுத் து றை போகிய அந்நங்கை வந்து ஆடுவாள் என்று எதிர்பார்த்தனர்; நாட்டிய ஆசான் காத்துக் கிடந்தான். மணிமேகலையின் அடுத்த நிலை யாது? அவள் கோட்பாடு யாது? என்று சித்திராபதி தொடுத்த வினாவுக்கு அவள் தந்த விடை யாருமே எதிர்பார்க்கவில்லை. தன்மகளை "வருக" என்று அழைத்தாள். 'தருக' என்று கூறி அவள் கூந்தலைக் களைந்தாள். அவளை அழகு குறைந்தவளாக ஆக்கிப் புத்த மடத்தில் சேர்த்தாள். அழகு அவளை விட்டு அகன்றது. கலைவாழ்வு கலைக்கப்பட்டது. இது அவள் நிலை" என்று தேவந்தி கூறி விவரித்தாள்.

"இது நாட்டுக்கே பேரிழப்பு ஆகியது; அரசனும் நகரத்து மக்களும் மாணிக்க மணியைக் கடலில் வீழ்த்தி விட்டவர் போன்று கலக்கம் அடைந்தனர். மாணிக்க ஒளி மங்கிவிட்டது. கலைச்செல்வத்தை இழந்த நிலையில் நாடே துன்பத்துள் ஆழ்ந்துவிட்டது" என்று மேலும் விளக்கினாள். "இளமங்கை அவள் தன் எதிர்காலத்தை இழந்தாள். அது பேரிடியாகியது. அதனால்தான் அடித்தோழி அரற்றினாள். நானும் வருந்தினேன்" என்று கூறித் தன் நிலையையும் எடுத்து உரைத்தாள்.

**தேவந்தி வரலாறு**

அவ்வாறு கூறிய பின் தேவந்தி தெய்வம் உற்றவளாகி ஆவேசம் கொண்டு உரையாடினாள். அவள் மேல் பாசாண்டச்சாத்தன் குடிகொண்டு அவளை ஆட்டுவித்தான். அவன் தேவந்தி மூலமாக வந்து பேசினான். அங்கே குழுமி இருந்தவர்களுள் அரட்டன் செட்டி என்பானின் இரட்டைப் பெண்கள் இருவரைச் சுட்டிக் காட்டினாள்; மற்றும் ஆடக மாடத்தில் அறிதுயில் அமர்ந்த திருமாலின் திருக்கோயில் அர்ச்சகன் மகள் ஒருத்தி இருந்தாள். அவளையும் தேவந்தி சுட்டிக்காட்டி இவர்கள் மீது மாடலன் கைக் கமண்டத்தில் உள்ள சுனை நீரைத் தெளித்தால் அவர்கள் தம் பண்டைப் பிறப்பு மன நிலையைப் பெறுவர் என்று அறிவித்தாள்.

அந்தச் சுனைநீர் பாசாண்டச் சாத்தன் மாடலனுக்குத் தந்திருந்தான். மங்கலாதேவியின் கோயில் அருகில் மலை உச்சியில் ஒரு சுனை உள்ளது. அதில் நீராடுவோர் பண்டைப் பிறப்பு அறிகுவர். அந்தச் சுனை நீரை மாடல மறையவனுக்குத் தந்திருந்தான். அதனை அவன் தன் கமண்டலத்தில் வைத்திருந்தான். அதனைச் சுட்டிக் காட்டி இம்மூவர் மீதும் தெளிக்குமாறு தெய்வமுற்றிருந்த தேவந்தி கூறினாள். அவள் மீது பாசாண்டச் சாத்தன் இருந்து இவ்வாறு கூற அதனை ஏற்று மாடலன் தன் கமண்டல நீரை அம்மூவர் மீதும் தெளித்தான்.

அரசனுக்கு இச்செய்தி வியப்பு அளித்தது. அவனுக்கு விளக்கம் தர மாடலன் தேவந்தியின் வரலாற்றைக் கூறினான். “மாலதி என்பவள் தன் மாற்றாள் குழவிக்குப் பால் தர அது விக்கி இறக்கச் சாத்தன் கோயில் முன் சென்று பாடு கிடப்ப அத்தெய்வச் சாத்தன் அருள் செய்தான்.” “பாசாண்டச் சாத்தன் ஒரு குழந்தை வடிவாக அத் தாயின் முன் சென்று தவழ, அவள் அதை எடுத்துக்கொண்டு போய்ச் சேர்க்க அவன் வளர்ந்து பின் தேவந்தியை மணந்தான். எட்டு ஆண்டுகள் அவளோடு இருந்து வாழ்க்கை நடத்திய பின் தன் தெய்வ உருவை அவளுக்குக் காட்டிக் கோயிலுள் சென்று மறைந்துவிட்டான்.” “அந்தச் சாத்தன்தான் மாடலனிடம் மங்கலாதேவி கோயிலின் முன் சென்று இருந்தபோது அந்தண வடிவத்தில் வந்து இந்த நீர்க் கமண்டலத்தைத் தந்து சென்றான்” என்ற செய்தியை விளக்கினான். அந்த நீரின் இயல்பையும் விளக்கிக் கூறிச் சென்றதாகவும் கூறினான். “அவன்தான் இன்று இந்தப் பார்ப்பணியாகிய தேவந்திமேல் தோன்றி இச்செய்தியைக் கூறினான்” என்று மேலும் விளக்கினான்.

**பழம் பிறப்பு அறிவித்தல்**

நீரைத் தெளித்துக் காண்போம் என்று தெரிவித்து விட்டு அந்த மூன்று பெண்களின் மீதும் கரகத்தில் இருந்த சுனை நீரை மாடலன் தெளித்தான். பழம் பிறப்பு உணர்வு பெற்ற அரட்டன் செட்டி மகளிருள் ஒருத்தி கண்ணகியின் தாயாக இருந்து தன்துயரை வெளிப்படுத்தினாள். காதலன் தன்னொடும் சென்று கடுந்துயர் உழந்ததற்கு வருத்தம் தெரிவித்தாள். அடுத்தவள் கோவலனின் தாய் நிலையில் இருந்து தன் துயரை வெளிப்படுத்தினாள். “இலங்கிழை நங்கை தன்னோடு இடையிருளில் தனித்துயர் உழந்து சென்றாய், அதனை நினைத்துப் புலம்புகின்றேன்; என் மகனே வருக!” என்று அழுது புலம்பினாள்.

மாதரி கோயில் அர்ச்சகரின் மகளாகப் பிறந்திருந்தாள். அவள் தன் வருத்தத்தைத் தெரிவித்தாள். “வைகை நதியில் நீராடச் சென்றிருந்தேன்; வந்து விசாரித்தேன்; வீட்டில் உன்னைக் காணேன் எங்கு ஒளித்தாய்? அருமை ஐயா! இளையவனே! நீ எங்கே?” என்று கூறி வாய்விட்டு அழுதாள். இளம் சிறுமிகள் முதியவர்களைப் போல் கதறி அழுதது வியப்பைத் தந்தது; அங்கிருந்தவரைக் கலங்கச் செய்தது. இருவர் செட்டி மகளிர் ஆயினர். ஒருத்தி மட்டும் அந்தணன் செல்வியாயினள்; இது ஏன் என்ற ஐயம் அரசனுக்குத் தோன்றியது; அங்கு இருந்த ஏனையவர்க்கும் அது புதிராக இருந்தது.

மாடலன் அதற்குக் காரணமும் விளக்கமும் தந்தான். “கண்ணகி தாயும், கோவலன் தாயும் எந்தத் தனி அறமும் சிறப்பாகச் செய்திலர்; மாதரி தெய்வ வழிபாடு கொண்டவள்; கண்ணனை வழிபட்டாள். கோயில் பூசைகளைத் தொடர்ந்து செய்து வந்தாள். அதனால் அவள் உயர் வகுப்பில் பிறந்தாள்” என்று கூறி விளக்கினான். கோயில் அர்ச்சக சாதியில் மாதரி பிறந்தது அவள் செய்த நற்கருமமே என்று விளக்கினான். தாயர் இருவரும் பாசத்தால் பிணிப்புண்டனர். ஆதலின் கண்ணகிக்குக் கோயில் எழுப்பிக்கும் சேர நாட்டில் இவ் இருவரும் வந்து பிறந்தனர்; அதே பாசம்தான் மாதரியும் கோயில் அர்ச்சகன் மகளாகப் பிறந்து அந்த ஊருக்கு வரக் காரணம் ஆகியது; எனினும் அவள் நற்செய்கை செய்தவள் ஆதலின் உயர்குடியில் பிறந்தாள் என்று விளக்கம் கூறினான். அதனால் ஒர் அற உண்மையை அறிவிக்க முற்பட்டான். “நற்செய்கைகளைச் செய்பவர் பொன்னுலகை அடைவர்; பற்றுக் கொண்டவர் அப்பற்றுகளின்படி அவர்கள் வாழ்க்கை அமையும்; நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப நன்மைகளும் தீமைகளும் அடைவர். பிறப்புகள் மாறி மாறி வரும். இது உலகநெறி” என்று அறவிளக்கம் அறிவித்தான்.

“செங்குட்டுவன் சிவன் அருளால் மன்னவனாகப் பிறந்தவன், அறம் செழிக்க ஆட்சி செய்தவன்; அதனால் அவன் உயர் நிலைகளைப் பெறுகிறான்; இனியும் பெறுவான்” என்று வாழ்த்துக் கூறினான்.

**தெய்வ வாக்கு**

அதன்பின் கோயில் வழிபாடுகள் தொடர்ந்து நடக்கச் சேரன் செங்குட்டுவன் வழிவகைகளை வகுத்துத் தந்தான்; “பூவும், புனைவும், நறுமணப் புகை ஊட்டுதலும் செய்க” என்று தேவந்தியை நியமித்தான். கோயிலை மும்முறை வலம் வந்து வணங்கி வழிபாடு செய்து பிற செயல்களில் மனம் செலுத்தினான்.

சிறையிலிருந்து விடுபட்ட ஆரிய அரசர்கள் ஆகிய கனக விசயரும், ஏனைய சிறைக் கைதிகளும் வந்திருந்து தெய்வ வழிபாடு செய்தனர். கண்ணகித் தெய்வத்தை வணங்கித் தெய்வ அருள் பெற்றவராகி அவரவர்தம் நாடும் நகரும் போய்ச் சேர்ந்தனர்.

இந்த விழாவுக்கு ஏனைய அரசர்கள் பலரும் வந்திருந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் குடகு நாட்டுக் கொங்கர், மாளுவ அரசர், இலங்கை அரசன் கயவாகு ஆவர். அவர்கள் கண்ணகித் தெய்வத்தைத் தம் நாட்டில் இமய வரம்பன் ஆகிய செங்குட்டுவன் நடத்தும் வழிபாட்டு விழாக்களில் வந்து இருந்து அருள் செய்தது போலத் தம் நாட்டில் நடத்த இருக்கும் விழாக்களிலும் வந்திருந்து அருள் செய்யுமாறு தெய்வத்தை வேண்டினர். "தந்தேன் வரம்" என்று வான்குரல் ஒன்று எழுந்தது; கண்ணகியின் வாக்கை அவர்களைக் கேட்க வைத்தது. இக்குரல் ஒலியைக் கேட்ட சேர அரசனும், ஏனைய அரசர்களும் தத்தம் படைத்திரளோடு இருந்து கண்ணகித் தெய்வத்தை ஏத்தி வழிபட்டு மன நிறைவோடு தெய்வ விடு கண்டவர் போல் விம்மிதம் எய்தினர். அரசர்கள் சேரனை அரசனை வணங்கிப் போற்றினர்.

சேரனும் முன் மாடலன் தெரிவித்தபடி அவனுடன் சேர்ந்து வேள்விச் சாலை நோக்கிச் சென்றான்; வேள்வி முடித்து அதன் பயனைக் காண்பது என்பது அவன் குறிக் கோள் ஆகியது.

**இளங்கோவடிகள் வரலாறு**

இதனை அடுத்து இளங்கோவடிகளும் பத்தினிக் கடவுள் முன் சென்று நின்றார். அவர் எதிரே தேவந்தி மேல் கண்ணகி வந்து பேசினாள். கண்ணகி இளங்கோவின் இளமை வரலாற்றை எடுத்து இயம்பினாள்.

வஞ்சி முதுாரில் அரச மண்டபத்திடை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வீற்றிருக்க அங்கு அவன் தாள் நிழலில் இளங்கோ இருந்தார். அவரைப் பார்த்து அங்கிருந்த நிமித்திகன் ஒருவன், "அரசு வீற்றிருக்கும் திருப்பொறி உண்டு உனக்கு" என்று விளம்ப அவனைக் கோபித்து நோக்கினார் இளங்கோ. செங்குட்டுவன் மூத்தவன், ஆட்சி அவனுக்குத்தான் வரவேண்டும். அதற்கு மாறாக அவன் கூறிவிட்டான். அவன் கூற்றைப் பொய்யாக்குவதற்காகவும், சேரனின் சோர்வைப் போக்குவதற்காகவும் துறவு பூண்டு குணவாயிற் கோட்டத்தில் மற்றவர்கள் எண்ணிப் பார்க்க இயலாத அளவற்ற பேரின்ப நிலை அடையும் பாதையில் சென்றுவிட்டார். சிந்தை செல்லாச் சேண் நெடுந்துரத்து அந்தமில் இன்பத்து அரசு ஆள் வேந்தன் ஆகிவிட்டதாகக் கூறினாள்; நாட்டுக்கு அரசனாக ஆகாமல் பாட்டுக்கு வேந்தனாக மாறினார். உலகு ஆள் கவி வேந்தனாக ஆயினார். இந்தச் செய்தியையும் அந்தக் கடவுள்பத்தினி எடுத்து உரைக்கக் கண்ணகி கதை முடிவு பெறுகிறது.

**அறவுரைகள்**

இந்தக் கதையைக் கேட்டவர்கள் அறவழியில் வாழ்ந்து நல்வாழ்வு வாழ வேண்டும் என்று இளங்கோவடிகள் காப்பியத்தை முடிக்கிறார். அந்த நீதிகள் பின் வருமாறு :

"இடுக்கண் வருங்கால் நடுக்கம் அடையாதீர்;
தெய்வத்தைப் போற்றுவிர்; ஞானிகளை மதிப்பீர்;
பொய்பேசுவதைத் தவிர்ப்பீர்; புறம் கூறுதல் ஒழிப்பீர்;
ஊன் உணவு ஒழிப்பீர்; உயிர்க் கொலை செய்யற்க;

தானம்பல செய்க; தவம்பல ஏற்க;
செய்ந் நன்றி மறவாதீர்; தீயார் நட்பு இகழ்க;
பொய்ச்சான்று கூறாதீர்; மெய்ம்மை விட்டு அகலாதீர்;
அறவோரை அணுகுக; பிறவோரை விலக்குக;
பிறன் மனைவியை நயக்காதீர்; உயிர்களுக்கு ஊறு செய்யாதீர்;
இல்லற வாழ்வு இனியது; ஒழுக்கம் ஒம்புக;
கள், காமம், பொய், பயனற்ற சொற்கள்
இவை தீமை பயக்கும்; இவற்றை நீக்கி வாழ்க;
இளமையும், யாக்கையும், செல்வமும் நில்லா;
உள்ள நாட்களில் உறுதிகளைத் தேடுக;
இதுவே வீட்டு நெறி; பயனுள்ள வாழ்க்கை"

"இந்த அறநெறிகளைப் போற்றிக் காத்து உயர்வு அடைவீராக" என்று வாழ்த்துக் கூறி இளங்கோவடிகள் காவியத்தை முடிக்கின்றார். "இக்காவியம் தரும் உயர் அறங்கள் இவை எனக் கொள்க! நலம் பெறுக" என்ற வாழ்த்தோடு இக்காவியம் முடிவு பெறுகிறது.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினா

1. சிலப்பதிகாரம் – குறிப்பு வரைக
2. சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் குறித்து எழுதுக
3. குன்றக்குரவையில் குறமகளிர் முருகனை எங்ஙனம் வாழ்த்திப் பாடினர்?
4. கண்ணகி வரலாற்றைக் கேட்ட சேர மன்னன் கருத்துரை யாது?
5. கால்கோள் காதை தரும் செய்திகளைச் சுருக்கித் தருக
6. வடநாடு சென்ற சேரனின் போர் நிகழ்ச்சிகளைக் கூறுக
7. மாடலன் சேரனுக்குக் கூறிய அறிவுரைகளை எடுத்துரைக்க
8. கண்ணகியின் தெய்வக் காட்சியை விவரி
9. சேரநாட்டு இளம்பெண்கள் பாடிய அம்மானைப் பாடல்களைக் கூறுக
10. தேவந்தி வரலாற்றை விளக்குக

## நெடுவினா

1. சிலப்பதிகாரம்-வஞ்சிக்காண்டம் கூறும் செய்திகள் குறித்துக் கட்டுரை வரைக

2. குன்றக்குரவை கூறும் செய்திகளை விவரித்து எழுதுக

3. காட்சிக்காதை வழி சேரன் போருக்கு எழுந்த செய்தியை விளக்குக

4. சேரனின் வடநாட்டுப் போரை விவரிக்க

5. நடுகற்காதை கூறும் கண்ணகி வழிபாட்டை எடுத்துரைக்க

6. வாழ்த்துக்காதை கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க

7. வரம்தருகாதை வழி சிலப்பதிகார கதைமாந்தரின் மறுபிறப்பு பற்றிய செய்திகளை விளக்குக

8. சேரநாட்டு இளம்பெண்கள் பாடிய வரிப்பாடல்களைத் தொகுத்துரைக்க

# மணிமேகலை

**மணிமேகலை**

***சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி,*** **குண்டலகேசி** ஆகிய ஐந்தினையும் தமிழில் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்கள் என்பர். ஐந்தனுள் சிறப்புத் தகுதி வாய்ந்தவை ***சிலப்பதிகாரமும்,*** **மணிமேகலை**யும் ஆகும். இவை இரண்டையும் **இரட்டைக்காப்பியங்கள்** என்று குறிப்பிடுவார்கள்.இவ்விரண்டும் கதை நிகழ்ச்சியில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. மேலும் சமகாலத்தில் தோன்றியவை. ***சிலப்பதிகாரம்*** இளங்கோவடிகளாலும் **மணிமேகலை** *சீத்தலைச்* சாத்தனாராலும் பாடப்பட்டவை. சமண சமயச் செய்திகளைச் சிலப்பதிகாரமும்**,** பௌத்த சமயக் கொள்கைகளை மணிமேகலையும் கூறுகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் பௌத்த சமயம் தமிழகத்தில் விரிவாகப் பரவி மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. புத்தருடைய வரலாறும், அறவுரையும் புலவர் பெருமானாகிய சாத்தனாருடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதன் வெளிப்பாடே **மணிமேகலை**யாகும். இந்நூல்,

1) கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகின்றது.

2) இதனாலேயே இக்காப்பியத்திற்கு **மணிமேகலை துறவு** எனச் சாத்தனார் பெயரிட்டு வழங்கினார். பின்னர், அது மணிமேகலை என்றே வழங்கப்படலாயிற்று.

3) நூல் முழுவதும் நிலைமண்டில ஆசிரியப்பா யாப்பினால் பாடப்பட்டது. முப்பது காதைகளிலும் மணிமேகலையின் வாழ்க்கை வரலாறு விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சி என்பது போலவே தொடர்ந்து வளர்ந்து முடிகிறது. மணிமேகலையின் பிறப்பையும், கோவலன் இறந்த நிலையில் அவள் இளநங்கையாய் இருத்தலையும் சிலப்பதிகாரம் சுட்டிச் செல்கிறது. அந்த இளநங்கையைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு மணிமேகலைக் காப்பியம் பாடப்படுகிறது.

இக்காப்பியத்தின் கதை முழுதும் காப்பியத் தலைவி **மணிமேகலை**யை மையமாகக் கொண்டு பாடப்பட்டதால், இந்நூலுக்கு மணிமேகலை எனப் பெயர் வந்தது. பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூல் **மணிமேகலை**யாகும். மக்களிடையே பௌத்த சமய உணர்வு மேலோங்கவும், சமயக்

கொள்கைகளைப் பரப்பிடவும், அதனை நடைமுறையில் பின்பற்றவும் எழுந்த சமயப் பிரச்சார விளக்க நூல் **மணிமேகலை** எனலாம்.

மணிமேகலை பௌத்த சமயத்தைச் சார்ந்து, துறவியாகிப் பௌத்த சமயத்தைப் போற்றிப் பரப்பிய முறையை இக்காப்பியம் கூறுகிறது. இந்நூலில் அமைந்த முப்பது காதைகளிலும் ஊடுருவிச் செல்லும் மணிமேகலையின் வரலாற்றின் மூலமாக, காப்பியத்தின் இந்த நோக்கம் நிறைவேறி இருக்கிறது எனலாம்.

**இலக்கியங்கள், காலம் காட்டும் கண்ணாடி** என்பர். அவ்வகையில் காலந்தோறும் தோன்றும் இலக்கியங்களில் தனி மனித வாழ்வு நிலை, சமய நிலை, சமுதாய நிலை ஆகிய மூன்றினையும் அறிந்து கொள்ளலாம். இம்மூன்று நிலைகளிலும் மனித வாழ்வு செம்மை அடைவதற்காக அறநெறிகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டதே மணிமேகலைக் காப்பியமாகும்.

தன்னேரில்லாத தலைவனைக் கொண்டிருப்பதே காப்பியத்தின் இலக்கணமாகும். ஆனால் மணிமேகலைக் காப்பியத்துள் தனக்கு நிகரில்லாத தலைவியாக மணிமேகலையே எடுத்துக் காட்டப்படுகிறாள்.

**மணிமேகலை,** குறிக்கோளை வெளிப்படையாகக் காட்டிக் கொள்கையைப் பரப்ப எழுதப் பெற்ற காப்பியம் ஆகும். ஆதலால் காப்பிய இலக்கணத்திற்கோ இலக்கியச் சுவைக்கோ முதன்மை தராமல் பௌத்த சமயக் கருத்துகளை விளக்குவதிலே முன்னிலை வகிக்கின்றது. இதனால் பௌத்தக் காப்பியம் என்று கூறினால் மிகையாகாது.

**மாதவி**யின் மகளான **மணிமேகலை** உலக இன்ப நாட்டத்தினை அறவே வெறுத்துப் பௌத்த மதத் துறவி (பிக்குணி)யாகித் **தன் பவத்திறம் அறுக** என நோற்றுச் சிறப்புப் பெற்றதனைச் செந்தமிழ் நலம் சிறக்கச் சாத்தனார் பாடியுள்ளார்.

பௌத்த மதக் கோட்பாடுகள், ஒழுக்க நெறி, அரச நெறி, பசி போக்கும் அற மாண்பு இவற்றுடன், சிறைக் கோட்டங்களை அறக்கோட்டமாக மாற்றி அமைத்தல், கள்ளுண்ணாமை, பரத்தைமையை ஒழித்தல் போன்ற சீர்திருத்தக் கருத்துகளையும் சமுதாய மேம்பாட்டையும் வலியுறுத்திக் கூறுகின்ற நூலாக மணிமேகலை விளங்குகிறது. இத்தகு சீர்மையில் **மணிமேகலையைச்** சமுதாயச் சீர்திருத்தக் காப்பியம் என்பது சாலப் பொருந்தும்.

**மூன்று கருத்துகள்**

இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை என்னும் மூன்று கருத்துகளையும் இக்காப்பியம் அழுத்தமாகக் கூறுகின்றது.

**காப்பியப் பெருமை**

ஐம்பெருங்காப்பிய நூல்களையும் தமிழன்னையின் ஐந்து அணிகலன்களாக ஆன்றோர்கள் கற்பித்துள்ளனர். அவற்றுள் இம்**மணிமேகலை** மேகலை என்னும் இடை அணி ஆகும் பெருமையுடையது. தமிழில் எழுந்த இரண்டாவது காப்பியம் மணிமேகலை. தமிழ் நாட்டில் நடந்த கதையைக் கூறும் இரண்டாவது காப்பியம் மணிமேகலை. தமிழின் முதல் காப்பியம் - தமிழ் நாட்டில் நடந்த கதையைக் கூறும் சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக மணிமேகலை அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தின் இறுதியில் 'மணிமேகலை மேல் உரைப் பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்" எனக் கூறப்படுகிறது. எனவே சிலம்பும் மேகலையும் இரட்டைக் காப்பியங்கள். இரண்டும் சேர்ந்தே அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் தருவதால், இந்த இரட்டை நூல்களைப் பெருங்காப்பியமாகக் கருதுதல் உண்டு.

மணிமேகலை காப்பியம் இரண்டாவதாக நிற்பது போலச் சில சிறப்புகளில் முதலாவதாகவும் நிற்கிறது. தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம் மணிமேகலை. காப்பியத் தலைவியின் பெயரையே தலைப்பாகக் கொண்ட முதல் காப்பியம் மணிமேகலை. பரத்தையின் மகளைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு புரட்சி செய்யும் முதல் காப்பியம் மணிமேகலை.

***சீத்தலைச் சாத்தனார்***

'மணிமேகலை' என்பது காப்பியத்தின் பெயர். இதற்கு 'மணிமேகலை துறவு' என்னும் பெயர் உண்டு. காப்பிய ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்-முடி மன்னர்களும் போற்றும் பெரும் புகழ் பெற்ற சாத்தனார் - இளங்கோ அடிகளின் தோழர். இளங்கோ இவரைத் 'தண்டமிழ் ஆசான்' என்று பாராட்டுகிறார். கண்ணகியின் வரலாற்றைச் செங்குட்டுவனுக்கும், இளங்கோவுக்கும் உரைத்தவர் சாத்தனாரே. அக்கதையை இளங்கோ காவியமாக்க விரும்பியபோது, "அடிகள் நீரே அருளுக" என்று அனுமதித்தவர் சாத்தனார். இளங்கோ சிலம்பை அரங்கேற்றிய போது முன்னின்று கேட்டவர் சாத்தனார். அதன் பின்னர் சிலம்பின் தொடர்ச்சியாக மணிமேகலையைப் பாடி இளங்கோவின் முன் அரங்கேற்றினார்.

இளங்கோவும், சாத்தனாரும் சமகாலத்தவர்; சங்ககாலத்தவர்; மணிமேகலை கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த நூலே என்று ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி 'பௌத்தமும் தமிழும்' என்னும் நூலில் நிறுவியுள்ளார். புகாரின் ஒரு பகுதியைக் கடல் கொண்டதை மணிமேகலை பாடுவதால் இது சிலப்பதிகாரத்திற்குப் பின்னே தோன்றிய நூல் என்பது சிலர் கூற்று.

**மணிமேகலை கதை**

மணிமேகலைக் காப்பியக் கதை ஒரு புரட்சிக் கதை. வணிகரில் சிறந்த கோவலனுக்கும் கணிகையரில் சிறந்த மாதவிக்கும் பிறந்த மகள் மணிமேகலை. கோவலன் மறைந்ததும் மாதவி உலக வாழ்வை வெறுத்து அறவண அடிகளை அணுகித் துறவறம் பூண்டாள். மகள் மணிமேகலையைப் பரத்தை வாழ்வில் ஈடுபடுத்த பாட்டி சித்திராபதி முயன்றாள் . மாதவி அதனை வெறுத்து, "மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை. அவள் தவநெறி மேற்கொள்வாளே தவிர அவநெறி மேற்கொள்ள மாட்டாள்" எனக் கூறி, மகளின் கூந்தலைக் களைந்து அவளையும் தூய துறவு வாழ்வு மேற்கொள்ளச் செய்கிறாள். ஒரு பரத்தை, அதுவும் மங்கைப் பருவத்துப் பேரழகி துறவியாவது, சான்றோரையும் கண்கலங்கச் செய்யும் நிகழ்ச்சி. இடையே நாட்டின் இளவரசன் உதயகுமாரன் அவளைக் காதலிக்கிறான். மணிமேகலை மணிபல்லவம் அடைந்து பழம் பிறப்பு உணர்ந்து அமுதசுரபி பெற்று மீள்கிறாள். நாடெங்கும் திரிந்து பசியும் பிணியும் போக்குகிறாள். உதயகுமாரன் கொலையுண்ணச் சிறை புகுந்து மணிமேகலை சிறைச்சாலையை அறச்சாலையாக்கி மகனை இழந்த மாதரசிக்கு அறமுரைக்கிறாள். ஊர் பல சென்று அறங்கள் உரைத்துப் பௌத்த நெறியின் படி முக்தியடைகிறாள். மணிமேகலையின் கதையோடு, இந்நூலில் வரும் ஆதிரை வரலாறு ,ஆபுத்திரன் வரலாறு ஆகியனவும் காப்பியத்துக்குச் சுவை சேர்க்கின்றன.

இக்கதையைச் சாத்தனார் முப்பது காதைகளாகப் பாடியுள்ளார். சமயக் காப்பியமாதலால், வட மொழியில் வழங்கிய சமயக் கருத்துகளைத் தமிழில் பொருத்தமுற உரைக்கும் பணியில் சாத்தனார் வெற்றி கண்டுள்ளார். இங்குப் பாடப்பகுதியாக 1. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை, 2. பாத்திர மரபு கூறிய காதை, 3. பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை, 4. ஆதிரை பிச்சையிட்ட காதை ஆகிய காதைகள் இடம் பெற்றுள்ளன.

## 1. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை

**மா பெரும் பாத்திரம் மடக்கொடிக்கு அருளிய**
**ஆபுத்திரன் திறம் அணி இழை! கேளாய்**
**வாரணாசி ஓர் மறை ஓம்பாளன்**
**ஆரண உவாத்தி அபஞ்சிகன் என்போன்**
**பார்ப்பனி சாலி காப்புக் கடைகழிந்து**
**கொண்டோற் பிழைத்த தண்டம் அஞ்சி**
**தென் திசைக் குமரி ஆடி வருவோள்**
**சூல் முதிர் பருவத்து துஞ்சு இருள் இயவிடை**
**ஈன்ற குழவிக்கு இரங்காள்ஆகி**
**தோன்றாத் துடவையின் இட்டனள் நீங்க**

ஆபுத்திரன் வைத்திருந்த அமுதசுரபி பாத்திரத்தை மணிமேகலை பெற்றாள். அந்தப் பாத்திரம் பற்றிய செய்தியினை அறவண அடிகள் மணிமேகலைக்குக் கூறுகிறார். வேதம் சொல்லித்தரும் பார்ப்பனன் அபஞ்சிகன் என்பவன் வாரணாசி என்னும் காசியில் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி சாலி. சாலி தன் கணவனின் காப்பை மீறி நடந்துகொண்டாள். அதனால் தன் கணவன் தண்டிப்பானே என்று அஞ்சினாள். பாவத்தைப் போக்கக் குமரித்துறையில் நீராடலாம் என்று தென்திசையில் வந்துகொண்டிருந்தாள். வழியில் சூல் முதிர்ந்து குழந்தை ஒன்றை நள்ளிரவில் பெற்றாள். தவறான வழியில் பிறந்த அந்தக் குழந்தைமீது அவள் இரக்கம் கொள்ளவில்லை. யாருக்கும் தெரியாத ஒரு காட்டில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள்.

**தாய் இல் தூவாக் குழவித் துயர் கேட்டு ஓர்**
**ஆ வந்து அணைந்து ஆங்கு அதன் துயர் தீர**
**நாவான் நக்கி நன் பால் ஊட்டி**
**போகாது எழு நாள் புறங்காத்து ஓம்ப**
**வயனங்கோட்டில் ஓர் மறை ஓம்பாளன்**
**இயவிடை வருவோன் இளம்பூதி என்போன்**
**குழவி ஏங்கிய கூக் குரல் கேட்டுக்**
**கழுமிய துன்பமொடு கண்ணீர் உகுத்து ஆங்கு**
**"ஆ மகன் அல்லன் என் மகன்" என்றே**
**காதலி தன்னொடு கைதொழுது எடுத்து**

தாய்ப்பால் இல்லாமல் குழந்தை அழுதது. அந்தக் குரலைக் கேட்டு அங்கு வந்த பசு ஒன்று அந்தக் குழந்தையைத் தன் நாவால் நக்கி, தன் பாலை ஊட்டி, ஏழு நாள் பாதுகாத்து வந்தது. வயனங்கோடு என்னும் ஊரில் இளம்பூதி என்னும் பெயர் கொண்ட மறையோதும் பார்ப்பான் குழந்தை அழுத குரல் கேட்டு வந்து, குழந்தையின் கண்ணீரைத் துடைத்து, அவன் ஆமகன் அல்லன், என் மகன் என்று தன் மனைவியிடம் சொல்லி, குழந்தையைத் தொழுது எடுத்துச் சென்றான்.

நம்பி பிறந்துள்ளான், என் குலம் தழைக்கட்டும் என்று சொல்லிக்கொண்டு ஊருக்கு எடுத்துச் சென்றான். உற்றார் உறவினரைக் கூட்டிப் பூணூல் அணிவிப்பதற்கு முன்னர் பல நல்ல நூல்களை அவனுக்கு நாப்பழக்கம் ஆகுமாறு கற்பித்தான். அந்தணர்க்குச் செய்யவேண்டிய அனைத்தையும் செய்வித்தான். அந்த ஊரில் ஓர் அந்தணன் இல்லத்தில் புலைவேள்வி ஒன்று நடந்தது. அந்த வேள்விக்கு அபஞ்சிகன் தன் மகனுடன் சென்றிருந்தான். அங்கே கொம்பில் மாலை சுற்றி ஒரு பசு பலியிடுவதற்காக நிறுத்தப்பட்டிருந்தது. அது கூட்டத்தில் நிகழ்வது கண்டு அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்தது. வேடன் கொடுமைக்கு அஞ்சி ஓடி வலையில் பட்ட மான் போல நடுங்கிக்கொண்டிருந்தது. அதனைக் கண்டு ஆமகன் (ஆபுத்திரன்) கண்ணீர் உகுத்தான்.

பசுவைக் காப்பாற்ற எண்ணிய ஆபுத்திரன் நள்ளிருளில் அந்தப் பசுவைத் திருட்டுத்தனமாக ஓட்டிக்கொண்டு சௌன்றான். கற்கள் நிறைந்த பாதை வழியாகச் சென்றுகொண்டிருந்தான்.

**கடத்திடை ஆவொடு கையகப்படுத்தி**
**"ஆ கொண்டு இந்த ஆர் இடைக் கழிய**
**நீ மகன் அல்லாய் நிகழ்ந்ததை உரையாய்**
**புலைச் சிறு மகனே! போக்கப்படுதி" என்று**
**அலைக் கோல் அதனால் அறைந்தனர் கேட்ப**
**ஆட்டி நின்று அலைக்கும் அந்தணர் உவாத்தியைக்**
**கோட்டினில் குத்திக் குடர் புய்த்துறுத்துக்**
**காட்டிடை நல் ஆக் கதழ்ந்து கிளர்ந்து ஓட**
**ஆபுத்திரன் தான் ஆங்கு அவர்க்கு உரைப்போன்**
**"நோவன செய்யன்மின் நொடிவன கேண்மின்**

**விடு நில மருங்கில் படு புல் ஆர்ந்து**
**நெடு நில மருங்கின் மக்கட்கு எல்லாம்**

**பிறந்த நாள் தொட்டும் சிறந்த தன் தீம் பால்**
**அறம் தரு நெஞ்சோடு அருள் சுரந்து ஊட்டும்**
**இதனொடு வந்த செற்றம் என்னை**
**முது மறை அந்தணிர்! முன்னியது உரைமோ?"**
**"பொன் அணி நேமி வலம் கொள் சக்கரக் கை**
**மன் உயிர் முதல்வன் மகன் எமக்கு அருளிய**
**அரு மறை நல் நூல் அறியாது இகழ்ந்தனை**
**தெருமரல் உள்ளத்துச் சிறியை நீ அவ்**

பசுவைக் காப்பாற்றப் பிடித்துச் சென்ற ஆபுத்திரனை வழியில் அவர்கள் பிடித்துக்கொண்டனர். வேள்விப் பசுவைத் திருடிச் செல்லும் நீ அந்தணர் மகன் இல்லை, புலைமகன், நீ யார் - என்று தடியால் அடித்துக் கேட்டனர். ஆபுத்திரனை அடிப்பது கண்ட பசு அடிக்கும் அந்தணரைத் தன் கொம்புகளால் குடல் சரியும்படி குத்திவிட்டுக் காட்டுக்குள் ஓடிவிட்டது. ஆபுத்திரன் அவர்களுக்கு எடுத்துச் சொன்னான். 'பசுவைத் துன்புறுத்தாதீர்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். நிலத்தில் முளைத்துக் கிடக்கும் புல்லை மேய்ந்துவிட்டு, மக்களுக்கெல்லாம் பாலைச் சுரந்து ஊட்டும் அறநெஞ்சம் கொண்ட பசுவின்மீது உங்களுக்குச் சினம் ஏன்? வேதத்தில் முதிர்ந்துள்ள அந்தணர்களே! சொல்லுங்கள்' - என வினவினான்.

அதற்கு 'தங்கச் சக்கரத்தை வலக்கையில் சுழற்றிக்கொண்டிருக்கும் மன்னுயிர்களுக்கு முதல்வனாக விளங்கும் திருமால் அருளிய வேதமாகிய நன்னூலை நீ தடுமாறும் உள்ளத்தில் இகழ்ந்து பேசும் சிறியவன். ஆதலின் அந்த பசுவுக்கு மகன் (ஆமகன் = ஆபுத்திரன்) ஆதற்கு ஒத்தவன். மகன் என்று உன்னைக் கொள்வதற்கில்லை' என்று அவர்கள் கூறி, ஆபுத்திரனை இகழ்ந்தனர்.

'நீங்கள் பேசும் வேதத்தின்படி பார்த்தால் அசலன் என்பவன் பசுவின் மகன், சிருங்கி என்பவன் மான் மகன், விருஞ்சி என்பவன் புலியின் மகன், கேசகம்பளன் என்பவன் புலியின் மகன் இவர்களை முனிவர்கள் என்று சிறப்பு செய்கிறீர்கள். நான் ஆவோடு பிறந்தவன் என்றால் இதனை அழிகுலம் என்று பேசலாமா? நான்கு மறைகளை உணர்ந்த மக்களே! உங்கள் நன்னூலில் காட்டுங்கள்' என்று ஆபுத்திரன் அவர்களுக்கு விளக்கம் அளித்தான். 'இவனுக்கு இவன் பிறப்பு இன்னதெனத் தெரியவில்லை. தெரிந்துகொள்வேன்' - என்று அங்கு இருந்தவர்களில் ஒருவன் ஆபுத்திரனைப் பற்றிக் கூறினான். 'வறுமைக் கோலத்துடன் வடமொழி பேசும் ஒருத்தி வருத்தத்துடன் நடந்து வந்துகொண்டிருந்தாள். கன்னியாக்குமரித் தெய்வத்தை வணங்கிவிட்டு வந்துகொண்டிருந்தாள். அவள் உறவினர் யாரும் இல்லலாதவள். அவள்

பெயர் சாலி. அவளை, நீ யார், எந்த ஊர் என வினவினர். அவள் தன்னைப்பற்றிச் சொல்லலானாள். சாலி சொல்கிறாள். 'வாரணாசியில் வேதம் சொல்லும் பார்ப்பனன் ஒருவனின் மனைவி நான். பார்ப்பனர்க்கு ஒவ்வாத பண்புடையவளாக நடந்துகொண்டேன். கணவன் காப்பாற்றுதலை இழந்தேன். அதனால் குமரியாடச் செல்லும் மக்களோடு சேர்ந்து சென்று நீராடிவிட்டு வருகிறேன்' என்றாள். பொற்றேர்ச்செழியன் ஆண்டுவந்த கொற்கை நகருக்கு ஒரு காவதம் தூரத்தில் செல்லும்போது ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தேன். அந்தக் குழந்தையை ஒரு சோலையில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டேன். இப்படிப்பட்ட தீவினை செய்த எனக்குச் செல்லும் கதி ஏதும் உண்டோ? என்று சொல்லிக்கொண்டு சாலி அழுதாள்.

**புல்லல் ஓம்பன்மின் புலை மகன் இவன்" என**
**ஆபுத்திரன் பின்பு அமர் நகை செய்து**
**"மா மறை மாக்கள் வரும் குலம் கேண்மோ**
**முது மறை முதல்வன் முன்னர்த் தோன்றிய**
**கடவுள் கணிகை காதல் அம் சிறுவர்**
**அரு மறை முதல்வர் அந்தணர் இருவரும்**
**புரி நூல் மார்பீர்! பொய் உரை ஆமோ?**
**சாலிக்கு உண்டோ தவறு?' என உரைத்து**
**நான்மறை மாக்களை நகுவனன் நிற்ப**

அவள் மகன் இங்குள்ள இவன் என்று தெளிவாகச் சொல்ல முடியவில்லை. சொல்லியும் பயன் இல்லை. எப்படியாயினும் இவனைத் தழுவ வேண்டாம். இவன் புலைமகன் - என்று அங்குள்ளவர்கள் கூறினர். ஆபுத்திரன் அவர்களைப் பார்த்துச் சிரித்தான். மறை ஓதும் அந்தணர் குலம் பற்றிக் கேளுங்கள். மறைமுதல்வன் பிரமன் தனக்கு முன்னர் அவனது உடன்பிறப்பாகப் பிறந்த கடவுள் கணிகைப் பெண்ணைப் புணர்ந்து பெற்ற பிள்ளைகள் இரண்டு அந்தணர்கள். பூணூல் அணிந்த மார்பினை உடையவர்களே! இது பொய்யுரை ஆகுமா? சாலி மீது என்ன தவறு இருக்கிறது? என வினவினான்.

ஆபுத்திரன் கூறிய இந்தச் சொற்களைக் கேட்ட வளர்ப்புத் தந்தை பூதி இவன் மறை ஓதும் அந்தணர் குலத்துக்கு ஒவ்வாதவன் என்று தன் வீட்டுக்குள் நுழைய விடாமல் தடுத்துவிட்டான். மற்ற அந்தணர்கள் ஆபுத்திரனைப் பசுவைத் திருடிய கள்வன் என்று சொல்லி அவன் உணவு வாங்கும் பாத்திரத்தில் கல்லைப் போட்டனர். அதனால் ஆபுத்திரன் மிகுந்த செல்வம் படைத்தவர் வாழும் மதுரைக்குச் சென்றான். அங்குச் சிந்தாமணி விளக்கு எரிந்துகொண்டிருக்கும் கலைக்கோயிலின் முற்றத்தில் இருக்கும் எல்லாரும் தங்கக்கூடிய பீடிகை மேடையில் வாழ்ந்து வந்தான்.

கையில் கடிஞை ஓட்டை ஏந்திக்கொண்டு வீடு வீடாகப் பிச்சை எடுத்தான். அவர்கள் இட்ட உணவை, - குருடர், செவிடர், கால் முடம் பட்டோர், பாதுகாக்க ஆள் இல்லாதவர், பிணியால் வருந்துவோர் ஆகிய அனைவரும் வாருங்கள் - எனக் கூவி அழைத்து அவர்களுக்கு உணவு வழங்கிய பின்னர், மீதமுள்ள உணவைத் தான் உண்டு அந்த மேடையில் உறங்கி வந்தான்.

## 2. பாத்திர மரபு கூறிய காதை

**சிந்தா விளக்கு**

**ஆங்குஅவற்கு ஒருநாள் அம்பலப் பீடிகைப்**
**பூங்கொடி நல்லாய் புகுந்தது கேளாய்:**
**மாரி நடுநாள் வல்இருள் மயக்கத்து**
**ஆரிடை உழந்தோர் அம்பலம் மரீஇத்**
**துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி**
**வயிறுகாய் பெரும்பசி மலைக்கும் என்றலும்**
**ஏற்றுஊண் அல்லது வேற்றூண் இல்லோன்**
**ஆற்றுவது காணான் ஆர்அஞர் எய்த,**
**கேள்இது மாதோ கெடுகநின் தீதுஎன**
**யாவரும் ஏத்தும் இருங்கலை நியமத்துத்**
**தேவி சிந்தா விளக்குத் தோன்றி**
**ஏடா அழியல் எழுந்துஇது கொள்ளாய்**
**நாடுவறங் கூரினும்இவ் ஓடுவறம் கூராது**
**வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது**
**தான்தொலைவு இல்லாத் தகைமையது என்றே**
**தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தலும்**

அறவண அடிகள் மணிமேகலைக்குச் சொல்கிறார். ஆபுத்திரனுக்கு மதுரை அம்பலப் பீடிகையில் ஒரு நாள் நிகழ்ந்ததைச் சொல்கிறேன், கேள். மழை பொழியும் நள்ளிரவில் வழிநடைப் பயணத்தால் களைப்புற்ற சிலர் தூங்கும் ஆபுத்திரனை எழுப்பி வாழ்த்தி வயிற்றுப் பசி மலை போல் உள்ளது என்றனர். பிச்சை எடுத்து ஈத்துண்ணும் வாழ்க்கை உடைய அவனுக்கு அவர்களின் பசியைப் போக்க வழி அறியாமல் துன்புற்றான். அப்போது அந்தப் பீடிகையில் எரியும் சிந்தாவிளக்குத் தெய்வம் அவன் முன் தோன்றி, வருந்த வேண்டாம் என்று சொல்லித் தன் கையிலிருந்த பாத்திரத்தை அவன் கையில்

தந்து, "நாடே வறுமை உற்றாலும், இந்தப் பாத்திர ஓடு வறுமை இல்லாமல் உணவைச் சுரந்துகொண்டிருக்கும், பயன்படுத்திக்கொள்" என்று கூறிற்று.

ஆபுத்திரன் தனக்கு அமுதசுரபி பாத்திரம் அளித்த சிந்தாதேவியைப் பாராட்டினான். கலை வேலைப்பாடுகள் கொண்ட நந்தா (தூண்டா) விளக்கே! என் நாவில் நடக்கும் பாவையே! வானோர் தலைவி மண்ணோர் முதல்வி மற்றவர் துன்பத்தைப் போக்குபவளே என்றெல்லாம் போற்றி வணங்கினான். அங்கு வந்து உணவு வேண்டியவர்களின் பசியை அந்தப் பாத்திரத்தால் போக்கினான். மற்றும் அது முதல் வாங்குபவர் கை வருந்தும் அளவுக்கு உணவு வழங்கி உயிரினங்களைக் காப்பாற்றி வந்தான். மக்களும் விலங்குகளும் பழுத்திருக்கும் மரத்தில் பறவைகள் ஒலிப்பது போல, ஆபுத்திரனைச் சூழ்ந்து உண்டு மகிழ்ந்து ஒலிக்கும் ஆரவார ஒலி கேட்டுக்கொண்டே இருந்தது. இங்கு எழுந்த மகிழ்ச்சி ஒலி வானுலக இந்திரன் அவைக்களத்தின் பாண்டுகம்பளத்தை உலுக்கியது.

**இந்திரன்**
**தளர்ந்த நடையின் தண்டுகால் ஊன்றி**
**வளைந்த யாக்கைஓர் மறையோன் ஆகி**
**மாஇரு ஞாலத்து மன்உயிர் ஓம்பும்**
**ஆர்உயிர் முதல்வன் தன்முன் தோன்றி**
**இந்திரன் வந்தேன் யாதுநின் கருத்து**
**உன்பெருந் தானத்து உறுபயன் கொள்கென**

இதனால் தன் இந்திர பதவிக்கு ஆபுத்திரனால் ஆபத்து வந்து விடுமோ என்று இந்திரன் அஞ்சினான். எனவே, முதிர்ந்த அந்தணன் உருவத்தில், கையில் தடி ஊன்றிக்கொண்டு, தளர்வாக ஆபுத்திரன் முன்னர் இந்திரன் வந்தான். உலகின் உயிரினங்களைப் பாதுகாக்கும் முதல்வனாகிய ஆபுத்திரன் முன் வந்தான். "இந்திரன் வந்திருக்கிறேன், உனக்கு என்ன வேண்டும்? கேள். உன் தானத்துக்குப் பயனாகத் தருகிறேன். கொள்க" என்றான்.

ஆபுத்திரன் ஒன்றுமறியாதவன் போல உடம்பு குலுங்க, இந்திரனைப் பார்த்து எளனம் செய்துகொண்டு சிரித்தான். இங்கு செய்த நல்வினைகளை உன் உலகில் நுகரச் செய்பவன் நீ. உன் தேவர்களும் அப்படிப்பட்டவர்கள். தேவர்கள் இங்கு அறம் செய்பவர்களுக்கு உதவுவார்களா? அல்லது இங்குள்ளவர்கள் போலத் தவந்தான் செய்வார்களா? அல்லது இங்கு உள்ளவர்கள் போலப் பற்றினை அறுக்க முயல்வார்களா? இப்படிப்பட்டவர் யாரும் இல்லாத தேவர் நாட்டுக்குத் தலைவன் நீ.

வருந்தி வந்தவர்களின் பசித் துன்பத்தைப் போக்கி, அவர்களின் மலர்ந்த

முகத்தைக் காணச் செய்யும் 'தெய்வக் கடிஜை' என்னிடம் உள்ளது. இது என்னிடம் இருக்கும்போது, நீ எனக்கு என்ன தருவாய்? உணவா, உடையா? அல்லது இன்பம் தரும் பெண்களா, அல்லது பேணிப் பாதுகாப்பவர்களா? என்று தேவர்களின் அரசனை ஆபுத்திரன் கேட்டான்.

**மழைவளம்**

**புரப்போன் பாத்திரம் பொருந்துஊண் சுரந்துஈங்கு**
**இரப்போர்க் காணாது ஏமாந் திருப்ப**
**நிரப்புஇன்று எய்திய நீள்நிலம் அடங்கலும்**
**பரப்பு நீரால் பல்வளம் சுரக்கென**
**ஆங்குஅவன் பொருட்டால் ஆயிரம் கண்ணோன்**
**ஓங்குஉயர் பெருஞ்சிறப்பு உலகோர்க்கு அளித்தலும்,**
**பன்னீ ராண்டு பாண்டிநல் நாடு**
**மன்உயிர் மடிய மழைவளம் இழந்தது**
**வசித்தொழில் உதவ மாநிலம் கொழுப்பப்**
**பசிப்புஉயிர் அறியாப் பான்மைத்து ஆகலின்**
**ஆர்உயிர் ஓம்புநன் அம்பலப் பீடிகை**
**ஊண்ஒலி அரவம் ஒடுங்கிய தாகி**
**விடரும் தூர்த்தரும் விட்டேற் றாளரும்**
**நடவை மாக்களும் நகையொடு வைகி**
**வட்டும் சூதும் வம்பக் கோட்டியும்**
**முட்டா வாழ்க்கை முறைமைய தாக,**

ஆபுத்திரன் கையில் இருக்கும் பாத்திரம் உணவு சுரக்க வேண்டும். அதனை வாங்குவதற்கு யாரும் இல்லாமல் அவன் வருந்தி ஏமாற வேண்டும். அதற்காக உலகம் முழுவதும் பல வளங்களும் சுரக்கும்படி மழை பொழிய வேண்டும். இப்படி ஆபுத்திரனுக்காக, ஆயிரம் கண் பொண்ட இந்திரன் வரம் தந்துவிட்டுப் போய்விட்டான்.

அதனால் 12 ஆண்டு மழை இல்லாமல் வருந்திய பாண்டிய நாட்டில் மழைவளம் சுரந்தது. உயிரினங்கள் பசி வருத்தம் இல்லாமல் மகிழ்ந்தன. ஆபுத்திரன் இருந்த அம்பலப் பீடிகையில் உணவு உண்ணும் ஆரவாரம் இல்லை. காமுகர், பரத்தர், சுற்றத்தாரைத் துறந்து திரிவோர் முதலானோர் அங்குச் சிரித்து மகிழலாயினர். வட்டும், சூதும் விளையாடி வம்பளந்துகொண்டு அங்குத் திரிந்தனர். எங்கும் எதற்கும் தட்டுப்பாடில்லாத வாழ்க்கை அங்கு நிலவுவதாயிற்று.

## மணிபல்லவத் தீவு - கோமுகி

ஆபுத்திரன் மதுரை அம்பலத்தை விட்டு நீங்கினான். உணவு வேண்டுவோர் யார் என்று ஊர் ஊராக வினவிக்கொண்டே சென்றான். "இவன் யார்" என்று அவனை எல்லாரும் இகழ்ந்தனர். அருந்தும் உணவளித்துக் காப்பாற்றிய உயிர் முதல்வனை யார் என்பார் இல்லை. இருக்கும் திருச்செல்வம் அனைத்தையும் கடல் கொண்டு செல்லத் தனிமகனாய் வருபவன் போல ஆபுத்திரன் வந்துகொண்டிருந்தான். அப்போது கப்பலிலிருந்து வந்த சிலர் அவனைக் கண்டு வணங்கினர். சாவக நாட்டில் மழை பொழியவில்லை. ஆதலால் உயிரினங்கள் அங்கு மடிந்துகொண்டிருக்கின்றன என்றனர். இந்திரன் ஆணையால் உணவு வழங்கும் பாத்திரம் பயனற்றிருக்கும் பாத்திரத்தைப் பயனுடையதாக்க, வங்கக் கப்பலில் ஏறி சாவகத் தீவு நோக்கி ஆபுத்திரன் செல்லலானான். அப்போது புயல் காற்று வீசிற்று. வங்கம் மணிபல்லவத் தீவில் ஒரு நாள் தங்கியது. அதன் பாய்மரத்தைச் சீர் செய்துகொண்டிருந்தனர். ஆபுத்திரன் கப்பலை விட்டு இறங்கி நடமாடிக்கொண்டிருந்தான். இறங்கியவன் ஏறிவிட்டான் என்று எண்ணி மாலுமி கப்பலை ஓட்டிச் சென்றுவிட்டான்.

"வங்கம் போன பின்னர் அங்கு வாழ்வோர் யாரும் இல்லை. மக்கள் உயிரைக் காப்பாற்றும் இந்தப் பாத்திரம் என் உயிரை மட்டும் காப்பாற்றுவதை நான் பொறுத்துக்கொள்ள மாட்டேன். என் தவநிலை கெட்டுவிட்டது. இதனைச் சுமந்துகொண்டு வாழ்வது துன்பம்" என்று சொல்லி, கோமுகி என்னும் பொய்கையில் அமுதசுரபி என்னும் அப்பாத்திரத்தைப் போட்டுவிட்டான். "ஆண்டுக்கு ஒருமுறை, ஒரு நாள் அது தோன்ற வேண்டும். அருளும் அறமும் பூண்டு உயிரினத்தைக் காப்பாற்றுவோர் உளர் எனில் இப்பாத்திரம் அவர் கைக்குப் போய்ச் சேரவேண்டும்" என்று வேண்டிக்கொண்டு பொய்கையில் போட்டுவிட்டான். அதன் பின் உண்ணாமல் பட்டினி கிடந்து ஆபுத்திரன் உயிர் துறந்தான்.

### மணிபல்லவம் - சாவகம்

**அந்நாள் ஆங்குஅவன் தன்பால் சென்றே**
**என்உற் றனையோ என்றுயான் கேட்பத்**
**தன்உற் றனபல தான்எடுத்து உரைத்தனன்**
**குணதிசைத் தோன்றிக் கார்இருள் சீத்துக்**
**குடதிசைச் சென்ற ஞாயிறு போல**
**மணிபல் லவத்திடை மன்உடம்பு இட்டுத்**
**தணியா மன்உயிர் தாங்கும் கருத்தொடு**

**சாவகம் ஆளும் தலைத்தாள் வேந்தன்**
**ஆவயிற்று உதித்தனன் ஆங்குஅவன் தான்என்.**

அறவண அடிகள் மணிமேகலையிடம் பின்வருமாறு கூறுகிறார்:

அவன் உயிர் விடப் பட்டினி கிடந்த நாளில் நான் அவனிடம் இருந்தேன். "என்ன துன்பம்?" என்று வினவினேன். நான் சொன்னவாறு அவன் தன் துன்பத்தை எடுத்துரைத்தான். கிழக்குத் திசையில் தோன்றிய சூரியன் இருளைப் போக்கிக்கொண்டு இருந்துவிட்டு மேற்குத் திசையில் மறைவது போல ஆபுத்திரன் மறைந்தான். உயிரினங்களைக் காப்பாற்றும் தணியாத ஆசை காரணமாக சாவகத் தீவை ஆளும் வேந்தனின் பசு வயிற்றில் அவன் பிறந்துள்ளான்.

## 3. பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை

### மண்முகன்

**இன்னும் கேளாய் இளங்கொடி மாதே**
**அந்நாள் அவனை ஓம்பிய நல்ஆத்**
**தண்என் சாவகத் தவள மால்வரை**
**மண்முகன் என்னும் மாமுனி இடவயின்**
**பொன்னின் கோட்டது பொன்குளம்பு உடையது**
**தன்நலம் பிறர்தொழத் தான்சென்று எய்தி**
**ஈனா முன்னம் இன்உயிர்க்கு எல்லாம்**
**தான்முலை சுரந்து தன்பால் ஊட்டலும்**

அறவண அடிகள் மணிமேகலையிடம் மேலும் கூறியதாவது, 'இளம்பெண்ணே! இன்னும் கேள். ஆபுத்திரனுக்கு அந்த நாளில் பாலூட்டி அவனைப் பாதுகாத்த பசு பொன்னாலான கொம்பும் குளம்பும் கொண்டதாக, குளுமையான சாவக மலையில், மண்முகன் என்னும் முனிவனிடம் சென்று பிறர் தொழுமாறு, கன்று போடுவதற்கு முன்னதாகவே பாலைச் சுரந்து ஊட்டிக்கொண்டிருந்தது.

### நாவலந்தீவு

மண்முகன் முக்காலமும் உணர்ந்த முனிவன். அவர் கூறினார். மழைவளம் சுரக்கவும், உயிரினங்களைப் பாதுகாக்கவும், உயிர்க்காவலனாக ஒருவன் அந்தப் பசுவின் வயிற்றில் தோன்றுவான். குடலை மாலையாகப் போட்டுக்கொண்டு அவன் பிறக்க மாட்டான். பசுவின் வயிற்றில் பொன்முட்டை ஒன்றில் பிறப்பான். பிணி, நோய் இல்லாமல் பிறப்பான். அறம் செய்யப் பிறப்பான். மணிபல்லவத் தீவில் உயிர் விட்ட

ஆபுத்திரன் பிறப்பான். தன்னைப் பாதுகாத்த அந்தப் பசுவை அவன் மறக்காமல் இருப்பதனால் அப்படிப் பிறப்பான். நாவல்மரம் ஓங்கிய இந்த நாவலந்தீவுக்கே உதவும் ஒருவனாகப் பிறப்பான் என்றார். அதன்படியே அவனும் பிறந்தான்.

### அந்தில் பாவை

**பெரியோன் பிறந்த பெற்றியைக் கேள்நீ:**
**இருதுஇள வேனிலில் எரிகதிர் இடபத்து**
**ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்**
**மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்**
**போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து**
**மண்ணகம் எல்லாம் மாரி இன்றியும்**
**புண்ணிய நல்நீர் போதொடு சொரிந்தது,**
**போதி மாதவன் பூமியில் தோன்றும்**
**காலம் அன்றியும் கண்டன சிறப்புஎனச்**
**சக்கர வாளக் கோட்டம் வாழும்**
**மிக்க மாதவர் விரும்பினர் வியந்து**
**கந்துடை நெடுநிலைக் கடவுள் எழுதிய**
**அந்தில் பாவை அருளு மாயிடின்**
**அறிகுவம் என்றே செறிஇருள் சேறலும்,**

அந்தப் பெரியோன் பிறந்த தன்மையைச் சொல்கிறேன், கேள். இளவேனில் பருவம். வெயில் காயும் வைகாசி மாதம். 12 நாள் சென்ற பின்னர் மீனம் என்னும் நாள்மீனுக்கு உரிய நாளில், போதித் தலைவன் புத்தன் பிறந்தான். அதுபோல அதே நாளில் ஆபுத்திரன் பசுவின் வயிற்றில் பிறந்தான். மண்ணகம் மழை இல்லாமல் வறண்டிருந்த காலத்தில் மலரும் மழையும் பொழியப் பிறந்தான். இது மழை பொழியும் காலம் இல்லையே, மழையும் மலரும் பொழிகின்றனவே என்று சக்கரவாளக் கோட்டத்தில் இருக்கும் முனிவர்கள் வியக்குமாறு பிறந்தான். அப்படி ஒரு நிகழ்வு இப்போது தோன்றியிருக்கிறதே என்று என்று சக்கரவாளக் கோட்டத்தில் உள்ள முனிவர்கள் அக் கோட்டத்தில் உள்ள "அந்தில் பாவை" என்னும் தெய்வப் படிமையிடம் நள்ளிருளில் சென்று வினவினர்' என்று கூறினார்.

### ஆபுத்திரன் அரசனானான்

அறவண அடிகள் மணிமேகலையிடம் 'ஆபுத்திரன் மணிபல்லவத் தீவில் உயிர் நீத்தான். மக்களுக்கு உதவும் அவன் ஆவல் தீரவில்லை. எனவே மீண்டும் பிறந்தான். அதனால் இப்படி மழை பொழிகிறது என்று "அந்தில் பாவை" கூறி என்

நாவை இழுத்துவிட்டது. அப்போது சாவக நாட்டை ஆண்டுகொண்டிருந்த வேந்தன் தனக்குப் பிள்ளை இல்லாத காரணத்தால் மண்முக முனிவனை வேண்டி, ஆ பெற்ற ஆபுத்திரனைப் பெற்றுச் சென்று வளர்த்து வந்தான். அதனால் ஆபுத்திரன் சாவக நாட்டுக்கு அரசனானான்.

இந்திரனுக்குப் பூசை சரிவர நடக்கவில்லையோ அல்லது அறநெறியைப் பின்பற்றும் சோழ வேந்தன் அருள் இல்லாமல் இருந்தமையாலோ, காவிரி ஆறு பரந்து நீர் ஊட்டியும், சோழநாட்டு மக்களும் உயிரினங்களும் துன்புற்றுக் கொண்டிருந்தன. பெண்ணே கடலைக் கடைந்தபோது கிடைத்த அமிழ்தத்தை வானோர் உண்டனர். மிச்சத்தை ஒளித்து வைத்துக்கொண்டனர். அதுபோல உன் கையில் இருக்கும் அமுத சுரபி ஓட்டை ஒளித்து வைக்கக் கூடாது' என்றார். இவ்வாறு அறவண அடிகள் மணிமேகலையிடம் தெரிவித்தார்.

**புத்த பிக்குணி - வத்தவன் - கோசம்பி - யூகி**

**தாயர் தம்மொடு தாழ்ந்துபல ஏத்திக்**
**கைக்கொண்டு எடுத்த கடவுள் கடிஞையொடு**
**பிக்குணிக் கோலத்துப் பெருந்தெரு அடைதலும்,**
**ஒலித்துஒருங்கு ஈண்டிய ஊர்க்குறு மாக்களும்**
**மெலித்துஉகு நெஞ்சின் விடரும் தூர்த்தரும்**
**கொடிக்கோ சம்பிக் கோமகன் ஆகிய**
**வடித்தேர்த் தானை வத்தவன் தன்னை**
**வஞ்சம் செய்துழி வான்தளை விடீஇய**
**உஞ்சையில் தோன்றிய ஊகி அந்தணன்**
**உருவுக்கு ஒவ்வா உறுநோய் கண்டு**
**பரிவுஉறு மாக்களில் தாம்பரிவு எய்தி,**

மணிமேகலை தன் தாய் மாதவி, வளர்ப்புத் தோழி சுதமதி ஆகியாருடன் முனிவனை வாழத்தி விடை பெற்றுக்கொண்டனர். மணிமேகலை புத்த பிக்குணிக் கோலத்துடன் கடவுள் தந்த கடிஞை அமுதசுரபி ஓட்டினைக் கையில் வைத்துக்கொண்டு பெருந்தெரு வீடுகளில் பிச்சை எடுக்கச் சென்றாள். பெருங்கதை நூலின் பாட்டுடைத் தலைவன் வத்தவ நாட்டு அரசன் உதயணனை, கோசம்பி நாட்டு அரசன் வஞ்சமாகப் பிடித்துச் சிறை செய்தபோது, உதயணனின் அமைச்சன் யூகி உதயணனை விடுவிக்க அந்தணன் வேடம் போட்டுக்கொண்டு வந்தபோது, அந்த அந்தணனைப் பார்த்து, பலரும் எள்ளி நகையாடியது போல, பிக்குணி மணிமேகலையைப் பார்த்து விசமக்காரர்களும், காமுகர்களும் இரக்கம் காட்டி ஏளனம் செய்தனர்.

**உதய குமரன் உளம்கொண்டு ஒளித்த**
**மதுமலர்க் குழலாள் வந்து தோன்றிப்**
**பிச்சைப் பாத்திரம் கையின்ஏந் தியது**
**திப்பியம் என்றே சிந்தைநோய் கூர,**

இளவரசன் உதயகுமரன் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் ஒரு பெண் பிச்சைப் பாத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு தெருவில் தோன்றுவது வியப்பாக உள்ளது என்று பலரும் பேசிக்கொண்டனர்.

**ஆதிரை**

மாதவி ஈன்ற மலர்க்கொம்பு பத்தினிப் பெண் வாழும் மணம் மிக்க வீட்டில் பிச்சை வாங்குதல் தகைமை உடையது என்று கூறினாள். குளத்தில் இருக்கும் தாமரை மலர்களில் தனித்து ஓங்கி நிற்கும் ஒரு தாமரை மலர் போன்று மழை பொழியச் செய்யும் கற்புடன் மனையில் வாழும் மகளிரில் ஆதிரை என்பவள் விளங்குகிறாள். அவள் இல்லத்தில் நீ முதலில் பிச்சை வாங்க வேண்டும் என்று காயசண்டிகை கூறினாள்.

**வடதிசை விஞ்சை மாநகர்த் தோன்றித்**
**தென்திசைப் பொதியில்ஓர் சிற்றியாற்று அடைகரை**
**மாதவன் தன்னால் வல்வினை உருப்பச்**
**சாபம் பட்டுத் தனித்துயர் உறூஉம்**
**வீவில் வெம்பசி வேட்கையொடு திரிதரும்**
**காயசண் டிகைஎனும் காரிகை தான்என்.**

விஞ்சை என்பது வடதிசை நாட்டில் உள்ளதோர் ஊர். அந்த நகரில் பிறந்தவள் காயசண்டிகை. தென்திசைப் பொதிய மலையில் ஒரு சிற்றாற்றங்கரையில் வாழ்ந்த முனிவன் (விருச்சிகன்) தன்னால், தன் வல்வினை உருத்தியதால் சாபம் பெற்று, தனிமையில், தீராத பசி வேட்கையோடு திரிந்துகொண்டிருந்த காயசண்டிகை என்னும் பெண் - ஆதிரை இல்லத்தில் பிச்சை பெறுமாறு - மணிமேகலைக்குக் கூறினாள்.

## 4. ஆதிரை பிச்சை இட்ட காதை

### ஆதிரை கணவன் சாதுவன்

ஆதிரையின் செய்தியைக் கேள் என்று சொல்லிக்கொண்டு அறவண அடிகள் மணிமேலைக்குப் பின்வருமாறு கூறுகிறார். ஆதிரையின் கணவன் சாதுவன். அவன் தகைமை இல்லாதவனாக ஆதிரையை விட்டுவிட்டுக் கணிகை ஒருத்தியோடு

வாழ்ந்துகொண்டு வட்டாட்டத்திலும் சூதாட்டத்திலும் தன்னிடமிருந்த வானளாவிய செல்வத்தை இழந்துவிட்டான். அதனால் உறவினர்களும், அவனைப் பேணிவந்த கணிகையும் அவனைக் காசு இல்லாதவன் என்று கைவிட்டு விட்டனர். அதனால் வங்கக் கப்பலில் பொருளீட்டச் செல்லும் வணிகர்களுடன் சேர்ந்து பொருளீட்டும் ஆசையில் சென்றான். நள்ளிரவில் புயல் வந்து கப்பலைக் கவிழ்த்தது. அதில் ஒடிந்த மரத்துண்டுகளைப் பற்றிக்கொண்டு சிலர் உயிர் தப்பினர். சாதுவன் அம்மணமாக நாகர் இன மக்கள் வாழும் மலைக்கு வந்து சேர்ந்து அந்த மலைமக்களோடு ஒன்றிவிட்டான். ஒடிந்த மரத் துண்டுகளைப் பற்றிக்கொண்டு நாடு திரும்பியோர் சாதுவன் இறந்துவிட்டான் என்று ஆதிரைக்குக் கூறினர். அதனைக் கேட்ட ஆதிரை ஊர் மக்களைத் தீ மூட்டச் செய்து, "என் கணவன் சென்ற இடத்துக்கு நானும் செல்வேன்" என்று கூறிக்கொண்டு அதில் இறங்கினாள். காய்ந்த விறகில் பற்றி எரிந்த அந்தத் தீ அவளைச் சுடவில்லை. அவள் உடுத்தியிருந்த ஆடையிலும் தீ பற்றவில்லை. அவள் மேனியில் இருந்த சந்தனம், கூந்தலில் சூடியிருந்த பூ ஆகியனவும் மாறாமல் இருந்தன. தீ தாமரை போலவும், ஆதிரை தாமரையில் நிற்கும் திருமகள் போலவும் காணப்பட்டன. தீயும் என்னை ஏற்றுக்கொள்ளாத அளவுக்குத் தீவினை செய்தவள் ஆகிவிட்டேனே என்று சொல்லிக்கொண்டு அழுதாள்.

**சந்திர தத்தன் - நாகமலை - நாகன் - நக்க சாரணர் - சாதுவன்**

**ஆதிரை கேள்உன் அரும்பெறல் கணவனை**
**ஊர்திரை கொண்டாங்கு உய்ப்பப் போகி**
**நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்**
**பக்கம் சேர்ந்தனன் பல்லியாண்டு இராஅன்**
**சந்திர தத்தன் எனும்ஓர் வாணிகன்**
**வங்கம் தன்னொடும் வந்தனன் தோன்றும்**
**நின்பெருந் துன்பம் ஒழிவாய் நீயென**
**அந்தரம் தோன்றி அசரீரி அறைதலும்,**

உன் கணவன் பிழைத்துப்போய் அம்மணமாக நடமாடும் நாகர் மக்கள் வாழும் மலையை அடைந்திருக்கிறான். பல ஆண்டுகள் அங்குத் தங்கியிருக்க மாட்டான். சந்திர தத்தன் என்னும் வணிவனின் கப்பலில் வந்து சேர்வான் - என்பது அந்த அசரீரி வாக்கு. ஆதிரை அழுகைத் துயரம் நீங்கி, பொய்கையில் நீராடிவிட்டு வருபவள் போல இல்லம் வந்தடைந்தாள். கண்மணி போன்ற என் கணவன் விரைந்து வந்து சேரவேண்டும் என்று புண்ணியச் செயல்கள் பல செய்தாள். இதனைப் பார்த்து, மழை பொழியச் செய்யும் கற்பினை உடைய பத்தினிப் பெண்டிரும் இவளைத்

தொழுதனர். ஆதிரையின் கணவன் நாகமலையின் மர நிழல் ஒன்றில் கடலில் ஒடிந்த மரம் பற்றி நீந்தி வந்த களைப்பால் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். அப்போது அந்த மலையில் அம்மணமாகத் திரியும் நக்க சாரணர் சிலர் இவன் தனியே வந்திருக்கிறான். வருந்தி உறங்குகிறான். நன்றாகக் கொழுத்திருக்கும் இவன் உடம்பு நமக்கு நல்ல உணவாகும் என்று சொல்லிக்கொண்டு எழுப்பினர்.

சாதுவன் நாகர்களின் மொழியை நன்றாகக் கற்றவன். ஆதலால் கொடுந்தொழில் புரியும் அவர்களைத் தொழுது கொல்லவேண்டாமென்று வேண்டிக்கொண்டான். அதனைக் கேட்ட நாகர்கள் தம் குருமகனிடம் வருமாறு அழைத்துச் சென்றனர். காய்ச்சிய கள், மிகுந்த முடைநாற்றக் கவிச்சல், ஊனைத் தின்ற பின் குவிந்து கிடக்கும் வெள்ளெலும்புகள் ஆகியவற்றுக்கு இடையே, கரடி ஒன்று தன் பெண் கரடியுடன் வீற்றிருப்பது போல நாகர்களின் குரு வீற்றிருந்தான். அவனோடு சாதுவன் அவர்களின் மொழியில் பேசி அவர்களைக் கவர்ந்தான். பின்னர் குளிர்ந்த மரநிழலில் அனைவரும் வீற்றிருந்தனர். "இங்கு வந்த காரணம் என்ன" என்று குரு சாதுவனை வினவினான். சாதுவன் கடலில் தனக்கு நேர்ந்த துன்பத்தை எடுத்துரைத்தான். அதனைக் கேட்ட குரு பெரிதும் அவன்மீது இரக்கம் கொண்டு, தம் மக்களை அழைத்து "இவன் பெரிதும் வருத்தத்துடன் இருக்கிறான், ஆதலின் இந்த நம்பிக்கு, ஓர் இளம் பெண்ணையும், சூடான கள்ளும், உணவும் வேண்டுமளவுக்குத் தாருங்கள்" என்று கூறினான்.

அந்தச் சொற்களைக் கேட்ட சாதுவன், "விரும்பிச் சொன்ன உரையைக் கேட்டேன். அவற்றை நான் விரும்பவில்லை" என்றான். "பெண்ணும் உணவும் இல்லாமல் உலகிலுள்ள மக்கள் அடையும் பயன் வேறு உண்டோ, இருப்பின் சொல்வாயாக" என்று சினத்துடன் கூறினான்.

**உயிர் விளக்கம்**

**சாதுவன் - நாகர் குரு - புலால் அறம்**

**மயக்கும் கள்ளும் மன்உயிர் கோறலும்**
**கயக்குஅறு மாக்கள் கடிந்தனர் கேளாய்:**
**பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்**
**உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்**
**நல்அறம் செய்வோர் நல்உலகு அடைதலும்**
**அல்லறம் செய்வோர் அருநரகு அடைதலும்**
**உண்டுஎன உணர்தலின் உரவோர் களைந்தனர்**
**கண்டனை யாகென, கடுநகை எய்தி**

**உடம்புவிட்டு ஓடும் உயிர்உருக் கொண்டுஓர்**
**இடம்புகும் என்றே எமக்குஈங்கு உரைத்தாய்**
**அவ்வுயிர் எவ்வணம் போய்ப்புகும் அவ்வகை**
**செவ்வனம் உரைஎன,**

சாதுவன் நாகர் குருவிடம் விளக்கமாகக் கூறுகிறான். மயக்கம் தரும் கள் உண்பதையும், வாழும் உயிர்களைக் கொல்வதையும் தெளிவு பெற்ற பெருமக்கள் விலக்கியிருக்கின்றனர். மேலும் கேள். பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் உறங்குவதும் விழிப்பதும் போன்றவை. நல்லறம் செய்வோர் நல்லுலகை அடைவர். அறம் அல்லாதனவற்றைச் செய்பவர் துன்பம் தரும் நரக உலகினை அடைவர். இந்த உண்மையை உணர்ந்து உள்ளத்தில் உரம் பெற்றவர் அறமல்லாத நெறிகளைக் கைவிட்டு வாழ்கின்றனர். இதனைக் கண்டுகொள்வாயாக என்று சாதுவன் கூறினான்.

இதனைக் கேட்ட நாகர் குரு சிரித்தான். உடம்பை விட்டு ஓடும் உயிர் ஒரு உருவத்தைப் பற்றிக்கொண்டு ஓர் இடத்தில் வாழும் என்று எனக்கு இங்குச் சொல்கிறாய். அந்த உயிர் எவ்வாறு அங்குப் போய்ப் புகும்? தெளிவாக எடுத்து எனக்குச் சொல் என்று நாகர் குரு கேட்டான். "சினம் இல்லாமல் கேள்" என்று வேண்டிக்கொண்டு சாதுவன் விளக்குகிறான். உன் உடலில் உயிர் வாழும்போது, உனக்கு நேர்வதை எல்லாம் உன் உடல் உணர்ந்துகொள்ளும். மற்று அந்த உடம்பே உயிர் போய்விட்டால் நெருப்பிலிட்டுச் சுட்டாலும் அதனை உணராது. இதனால் உடம்பை விட்டு ஒன்று போய்விட்டது என்பதை நீ உணர்ந்துகொள். இங்கிருந்து போனது எதுவாயினும், எங்காவது இருக்கும் என்பதை நானா சொல்ல வேண்டும்? எல்லாருக்கும் தெரியுமே. உடம்பு இங்கே இருக்கும்போது உணர்வு என்னும் உயிர் பல காவத தூரம் கடந்து செல்வதை நீ உன் கனவிலும் காணலாம். ஒருவர் இறந்த பின்னர் அப்படிச் செல்லும் உயிர் வேறொரு உடம்பில் புகுந்துகொள்ளும் என்பதை நீ புரிந்துகொள். இவ்வாறு சாதுவன் கூறிய மொழிகளைக் கேட்ட நாகன் கள்ளுண்ட சிவந்த கண்களுடன் அவனை நோக்கி மேலும் வினவலானான்.

### சாதுவன் - நாகன் - சந்திர தத்தன்

**நன்றுஅறி செட்டி நல்அடி வீழ்ந்து**
**கள்ளும் ஊனும் கைவிடின் இவ்வுடம்பு**
**உள்உறை வாழ்உயிர் ஓம்புதல் ஆற்றேன்**
**தமக்குஒழி மரபின் சாவுறு காறும்**
**எமக்குஆம் நல்அறம் எடுத்துஉரை என்றலும்,**
**நன்று சொன்னாய் நல்நெறிப் படர்குவை**

**உன்தனக்கு ஒல்லும் நெறிஅறம் உரைக்கேன்**
**உடைகல மாக்கள் உயிர்உய்ந்து ஈங்குஉறின்**
**அடுதொழில் ஒழிந்துஅவர் ஆர்உயிர் ஓம்பி,**
**மூத்துவிளி மாஒழித்து எவ்வுயிர் மாட்டும்**
**தீத்திறம் ஒழிகென, சிறுமகன் உரைப்போன்**
**ஈங்குஎமக்கு ஆகும் இவ்வறம் செய்கேம்**
**ஆங்குஉனக்கு ஆகும் அரும்பொருள் கொள்கெனப்**
**பண்டும் பண்டும் கலம்கவிழ் மாக்களை**
**உண்டேம் அவர்தம் உறுபொருள் ஈங்குஇவை**
**விரைமரம் மென்துகில் விழுநிதிக் குப்பையோடு**
**இவைஇவை கொள்கென எடுத்தனன் கொணர்ந்து**
**சந்திர தத்தன் என்னும் வாணிகன்**
**வங்கம் சேர்ந்ததில் வந்துஉடன் ஏறி**
**இந்நகர் புகுந்துஈங்கு இவளொடு வாழ்ந்து**
**தன்மனை நன்பல தானமும் செய்தனன்,**

நல்லனவற்றை அறிந்த செட்டியின் காலடியில் விழுந்து நாகன் (நாகர் குரு, நாகர் தலைவன்) வினவலானான். கள்ளும், ஊனும் உண்ணுதலைக் கைவிடின் என்னால் உயிர் வாழ இயலாது. எனவே எனக்கு உகந்த வகையில் நல்ல அறநெறியை எடுத்துரைக்க வேண்டும் - என்று கேட்டுக்கொண்டான். சாதுவன் சொல்கிறான் -நன்று சொன்னாய். இனி நீ நல்ல நெறியில் செல்வாயாக. உன்னால் செய்ய இயலக்கூடிய அறநெறியைச் சொல்கிறேன். பாய்மரக் கப்பல் உடைந்து இங்கு வரும் மக்களை அடித்துத் தின்னும் பழக்கத்தைக் கைவிட்டு அவர்களைப் பாதுகாக்க வேண்டும். மூப்பால் இறந்து கிடக்கும் விலங்குகளைத் தின்னலாம். பிற உயிர்களைக் கொல்லும் தீய செயலை விட்டொழிக்க வேண்டும்.

இப்படிச் சொல்லக் கேட்ட சிறுமை குணமுடைய நாகன் கூறுகிறான் - இங்கே என்னால் செய்ய முடிந்த இந்த நல்லனவற்றைச் நான் செய்கிறேன். அங்கு உனக்குப் பயன்படும் பொருள்களைத் தருகிறேன். பெற்றுக்கொள் - என்று கூறினான். முன்பெல்லாம் கப்பல் கவிழ்ந்து வந்த மக்களைக் கொன்று தின்றோம் . அவர்களிடம் கைப்பற்றிய ஏராளமான பொருள்கள் இங்கு உள்ளன. மணம் மிக்க மரங்கள், மெல்லிய ஆடைகள், விழுமிய பணப்பொருள் முதலானவை அந்தச் செல்வங்கள் பலவற்றையும் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தான். அவற்றை எடுத்துக்கொண்டு வந்து சந்திரதத்தன் என்பவனின் கப்பலில் ஏறிப் புகார் நகருக்குத்

திரும்பினான். தன் மனைவி ஆதிரையுடன் சேர்ந்து நல்ல பல தானங்கள் செய்து வாழ்ந்து வருகிறான்.

**ஆதிரை - மணிமேகலை - அமுதசுரபி**

**ஆங்ஙனம் ஆகிய ஆதிரை கையால்**
**பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென,**
**மனையகம் புகுந்து மணிமே கலைதான்**
**புனையா ஓவியம் போல நிற்றலும்**
**தொழுது வலம்கொண்டு துயர்அறு கிளவியோடு**
**அமுத சுரபியின் அகன்சுரை நிறைதரப்**
**பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென**
**ஆதிரை இட்டனள் ஆர்உயிர் மருந்துஎன்.**

காயசண்டிகை கூறிய ஆதிரை இப்படிப்பட்டவள். அப்படிப்பட்டவள் கையால், பெண்ணே, பிச்சை பெறுக என்று அறவண அடிகள் கூறினார். மணிமேகலை ஆதிரை மனைக்குச் சென்று முழுமை செய்யப்படாத ஓவியம் போல நின்றாள். ஆதிரை மணிமேகலையைத் தொழுது வலமாகச் சுற்றிவந்து மணிமேகலை கையிலிருந்த அமுதசுரபி பாத்திரம் நிறையும்படி, இந்த உலகம் முழுவதும் பசிப்பிணியிலிருந்து நீங்க வேண்டும் என்று சொல்லி வாழ்த்தி உயிரைக் காக்கும் மருந்தாகிய உணவினை இட்டாள்.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினா

1. மணிமேகலை – குறிப்பு வரைக
2. ஆபுத்திரன் பிறப்பு பற்றி விவரிக்க
3. ஆபுத்திரனுக்கு அமுதசுரபி பாத்திரம் எவ்வாறு கிடைத்தது? அதன் நன்மை யாது?
4. ஆபுத்திரன் மணிபல்லவத் தீவுக்குச் சென்ற வரலாற்றைக் கூறுக
5. ஆதிரை வரலாற்றைச் சுருக்கி எழுதுக
6. சாதுவன் நாகர் தலைவனுக்குக் கூறிய அறிவுரைகளை விவரி

### நெடுவினா

1. ஆபுத்திரன் வரலாற்றை விவரி

(அல்லது)

ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை கூறும் செய்திகளைத் தொகுத்துத் தருக

2. அறவண அடிகள், ஆபுத்திரன் கையில் இருந்த பாத்திரச் சிறப்பு குறித்த கூறியவற்றை விவரிக்க

3. மணிமேகலை ஆதிரையிடம் பாத்திரம் கொண்டு பிச்சை ஏற்ற செய்திகளைத் தொகுதுரைக்க

4. ஆதிரை – சாதுவன் வரலாற்றை விவரிக்க

அல்லது

'ஆதிரை பிச்சை இட்ட காதை' – விவரி

# *சீவக சிந்தாமணி*

## சுரமஞ்சரியார் இலம்பகம்

### *சீவக சிந்தாமணி*

சீவக சிந்தாமணி சங்க காலத்துக்குப் பின்னர்த் தோன்றிய ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் தமிழில் தோன்றிய முதல் இரு காப்பியங்களாகக் கருதப்படும், கதையை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்களைத் தொடர்ந்து மூன்றாவதாக உருவான தமிழ் இலக்கியம் இது. விருத்தப்பாக்களால் ஆன முதல் தமிழ்க்காப்பியமாகவும் இது திகழ்கின்றது. தமிழில் முழுமையாகக் கிடைக்கும் காப்பியங்களுள் ஒப்பற்றதாய்த் திகழ்வது **சீவக சிந்தாமணி** ஆகும். சீவக சிந்தாமணி என்னும் காப்பியம் கதை அமைப்பு, கதை மாந்தர் படைப்பு, நூற்பயன் முதலான கூறுகளால் முழுமை பெற்றுத் திகழ்கின்றது. **விருத்தம்** என்னும் புதிய பாஇனம் இந்நூலில் முதன் முறையாகக் கையாளப்பட்ட சிறப்புடையது. அதனால் இக்காப்பியம் பிற்காலத்தில் எழுந்த கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய காப்பியங்களுக்கு அடிப்படையாகவும், முன்னோடியாகவும் அமைந்துள்ள பெருமையுடையது.

### நூலாசிரியர்

இக்காப்பியத்தை இயற்றிய திருத்தக்கதேவர் சமண முனிவராவார். இவர், திருத்தகுமுனிவர், திருத்தகு மகாமுனிவர் என்றும் அழைக்கப் பெறுவார். திருத்தக்கதேவர் சோழர் குடியில் பிறந்தவர். இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர். வடமொழிப் பயிற்சி மிக்கவர். விருத்தமெனும் பாடல்களைக் கொண்டு பெருங்காப்பியம் பாடியவர்களில் இவர் முதன்மையானவர். இவருடைய காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு ஆகும். சமணத் துறவிகள் அறக்கருத்துகளை மட்டும் அன்றி இல்லறச் சுவையையும் பாட முடியும் என்பதனை நிறுவும் பொருட்டு இந்நூலை இயற்றினார் திருத்தக்க தேவர்.

### நூல் அமைப்பு

சீவக சிந்தாமணி," மூவா முதலா உலகம் " எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்தோடு தொடங்குகிறது. இந்நூல் நாமகள் இலம்பகம் முதலாக முத்தி இலம்பகம் ஈறாக **13** இலம்பகங்களைக் கொண்டு திகழ்கின்றது. **இலம்பகம்** யாவும் மகளிர் பெயரினையே பெற்றுள்ளன. ஒவ்வோர் இலம்பகத்திலும் ஒரு மண நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. இலக்கியச் சிறப்பு மிக்க இந்நூலில் **3145 பாடல்கள்** உள்ளன. இந்நூல் மணநூல், முக்தி நூல், காமநூல், இயற்கை தவம், முதல் விருத்தப்பா காப்பியம், தமிழ் இலக்கிய நந்தாமணி, முடி பொருள் தொடர்நிலைச் செய்யுள் எனப் பல்வேறு பெயர்களைக் கொண்டுள்ளது சீவக சிந்தாமணி.

**சீவக சிந்தாமணி - பெயர்க் காரணம்**

இலக்கண நூலார், சிந்தாமணி என்பது நெஞ்சின் கண் பொதிந்து வைத்தற்குரிய ஒரு மணி போன்றது என்பர். அதுபோல் இந்நூலைப் படிப்போர் அறிவுப் பொருள் அனைத்தும் ஒருங்கே பெறுமாறு படைத்தலால் இந்நூல் இப்பெயர் பெற்றது எனலாம்.

காவியத் தலைவனான தன் மகனை விசய மாதேவியார் முதன் முதலாக இட்டு விளித்த பெயர் சிந்தாமணி என்பதாகும். பின்னர் வழிபடு தெய்வம் 'சீவ' என்று வாழ்த்தியது. அதற்குப் பின் அக்குழந்தைக்குச் சீவகன் என்று பெயரிட்டனர். சீவகனின் வரலாற்றை முழுமையாகத் தெரிவிப்பதால் ***சீவக சிந்தாமணி*** என்று இந்நூல் பெயர் பெற்றது.

**நூல் கூறும் செய்தி**

***சச்சந்தன் விசயை*** என்போர் சீவகனின் பெற்றோர் ஆவர். **கட்டியங்காரன்** என்னும் அமைச்சன் சூழ்ச்சியால் மன்னன் சச்சந்தனைக் கொன்று, ஏமாங்கத நாட்டினைக் கைப்பற்றினான். குழந்தைப் பருவம் முதற்கொண்டு சீவகனைக் **கந்துக்கடன்** என்னும் வாணிகன் வளர்த்து வந்தான். உரிய பருவம் எய்தியதும் தன் நாட்டைப் பெறுவதற்குத் தாயின் அறிவுரையோடு, மாமன் **கோவிந்தனின்** துணைக்கொண்டு போரிட்டு வென்றான் சீவகன். அச்செய்திகளை விரிவாக விளக்கிக் கூறும் நூலே ***சீவக சிந்தாமணி*** ஆகும்.

சீவகனின் வீர தீரச் செயல்கள், பேரழகு, பேராற்றல், போராற்றல், அரச குடும்பத்தின் செயல்கள், அரசியல் நெறிமுறைகள், மனித குல மேம்பாட்டிற்குத் தேவையான அறக்கருத்துகள் கூறுதல் முதலான பல செய்திகளைக் கொண்டதாக இந்நூல் விளங்குகின்றது. சீவகன் தன் ஆற்றலால் எட்டுப் பெண்களைத் திருமணம் செய்து கொள்கின்றான். இதனால் இந்நூலுக்கு **மணநூல்** என்ற பெயரும் உண்டு. திருத்தக்க தேவர் தம் நூலுக்குச் **சிந்தாமணியின் சரிதம்** என்றே பெயரிட்டனர்.

சிந்தாமணி ஒரு சமயக் காப்பியமாகும். வட மொழியிலுள்ள **கத்திய சிந்தாமணி, சத்திர சூடாமணி, ஸ்ரீ புராணம்** ஆகிய நூல்களில் சீவகன் கதை காணப்படுகிறது. அவற்றைத் தழுவித் தமிழில் சீவக சிந்தாமணி என்னும் பெரு நூலாகத் தந்துள்ளார் திருத்தக்க தேவர்.

**சுரமஞ்சரியார் இலம்பகம் - கதைச் சுருக்கம்**

சீவகனுடைய புதுமணக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்த தோழர்கள் அவனை நோக்கி, ஐய! நீ மணந்த நங்கையின் பெயர் கூறுக ! என்று வினவினர். சீவகன்

அவள் பெயர் விமலை என்றான். அதுகேட்ட தோழர் வியந்து 'ஐயன் காமனே' என்றனர்; அதுகேட்ட புத்திசேனன், இது வியத்தற்குரியதன்று. இவ்வூரிடத்தே ஆடவர் பெயரைக் கேட்டாலே சினம் கொள்ளும் ஒரு நங்கையுளள்; சுரமஞ்சரி என்னும் அவள் காமனே தன்னெதிர் செல்லினும் காணாளாய் வெறுப்பாள். அவளை மயக்கிச் சீவகன் மணம் புரிவான் எனின் இவனை யான் காமதிலகன் என்றே பாராட்டுவேன் என்றான். அதுகேட்ட சீவகன் 'புத்திசேன! நாளையே அவளை மயக்கிக் காமன் கோட்டத்தே கொணர்வேன். அப்பொழுது நீ அக்கோட்டத்தில் காமன் படிவத்தின் பின் மறைந்திருப்பாயாக' என்று கூறிப் புறப்பட்டுச் சென்றான்.

சென்ற சீவகன் கண்டோர் இரங்கத் தகுந்த முதுபார்ப்பனப் படிவம் கொண்டு, தண்டூன்றி நடை தளர்ந்து கூனிக் குறுவுயிர்ப்புடையனாய்ச் சுரமஞ்சரியின் மாளிகை வாயிலை எய்தினன். இவனது வருகை கண்ட வாயின் மகளிர் இரக்கமுடையராய்ச் சுரமஞ்சரியிடம் சென்றுணர்த்தினர். அதுகேட்ட சுரமஞ்சரியும் இரக்கமுடையளாய் அத்தகைய முதுபார்ப்பானைப் பார்ப்பதால் நம் நோன்பிற்கு இழுக்கொன்றுமில்லை. என்வே அவனை வரவேற்று விருந்தூட்டடல் நன்று என எண்ணி விரைந்து வந்து அவ் வேதியனை வரவேற்றனள். முகமன் மொழிந்து, 'ஐய! நீவிர் இங்கு வந்தது யாது கருதியோ?' என்று வினவினாள்! அவன், 'யான் திருநீர்க் குமரியாட வந்தேன், என்றான். அவள், 'அதனாற் பயன் என்ன?' என்றனள். அவன் இம் முதுமை என்னை விட்டு ஒழியும் என்றான். அதகேட்ட சுரமஞ்சரி நகைத்து இவர் பித்தர்போலும் என்று இரங்கி இவர் தம் பசி தீர்ப்பது அறமாம் என்று கருதி அம் முதுபார்ப்பானை அன்புடன் அழைத்துச் சென்று அறுசுவை உணவு கொடுத்து போற்றி அங்கே ஓர் அறையில் அவனைப் படுக்கச் செய்தனள்.

படுத்திருந்த பார்ப்பனன் பின்னர் ஓர் அமுத கீதம் பாடினன். அதுகேட்ட மகளிர் வியந்து மயங்கினர். தோழிமார் இவர் கீதம் சீவகனின் இன்னிசையையே ஒத்துளது என்றனர். அதுகேட்ட சுரமஞ்சரி சீவகன் என்ற பெயர்கேட்ட அளவிலே, தோழியரை நோக்கி, அன்புடையீர்! நாளையே காமன் கோட்டஞ் சென்று வழிபாடு செய்து யான் அக் காளையை விரைவில் எய்த முயல்வேன், என்றனள். அங்ஙனமே மறுநாள் சுரமஞ்சரி தோழியோடும் முதுபார்ப்பனனோடும் காமன் கோட்டத்தை அடைந்தனள். அந்தணனை அயலிலோர் அறையினுள் வைத்தனள்.

காமன் படிவத்தின் பின்புறத்தே புத்திசேனன் முன்னரே சென்று காத்திருந்தான். சுரமஞ்சரி தனியளாய்க் காமன் முன் சென்று, காமதேவா! நீ சீவகனை எனக்குத் தருவாயாயின் நான் உனக்கு மீன் கொடியும், மலரம்பும், கரும்பு வில்லும் தேரும், ஊரும் தருவேன்! என வேண்டி நின்றாள். அத்தெய்வப் படிமத்தின் பின்னிருந்த புத்திசேனன், நங்காய்! நீ அச் சீவகனைப் பெற்றாய். விரைந்து சென்று அவனைக்

காணுதி! என்று விளம்பினன். அது தெய்வத்தின் தீங்குரலே என்று கருதினள் சுரமஞ்சரி. மீண்டும் காமனை வணங்கி அந்தணனிருந்த அறைக்குள் சென்றாள். ஆண்டுச் சீவகன் தன் உண்மை உருவத்தொடு நின்றான். அது கண்ட மஞ்சரி மருண்டாள்; நாணினாள். காளை அக்காரிகையைக் காதல் கூர்ந்து தழீஇயினான். நாளை மணப்பேன் என்று உறுதி கூறி விடுத்தனன்.

சுரமஞ்சரி விம்மிதமெய்தித் தன் இல்லம் புகுந்தாள். இரு முதுகுரவரும் இந் நிகழ்ச்சியறிந்து மகிழ்ந்தனர்; தமர்க்கெலாம் உணர்த்தினர். சீவகனைத் தோழர்கள் காமதிலகனே என்று வியந்து பாராட்டினர். சுரமஞ்சரியின் தந்தை குபேரமித்திரன் சுரமஞ்சரிக்கும் சீவகனுக்கும் திருமணம் செய்வித்தான். சீவகன் அற்றைநாளிரவு அவளோடு கூடி இன்புற்றிருந்தனன். மறுநாள் தன்னில்லத்திற் சென்று தந்தையும் தாயுமாகிய கந்துக்கடனையும் சுநந்தையையும் கண்டு வணங்கி மகிழ்வித்தனன். காந்தருவதத்தையையும் குணமாலையையுங் கண்டு அளவளாவினன். கந்துக்கடனுக்கு பின்னர் நிகழ்த்தவேண்டியவற்றை உணர்த்தினன். பின்னர் அவன்பால் விடைபெற்றுக் கொண்டு தோழரோடு குதிரை வாணிகர் போன்று உருக்கொண்டு ஏமாங்கத நாட்டினின்றும் புறப்பட்டான்.

## சுரமஞ்சரி இலம்பகம்

**வாளிரண்டு மாறுவைத்த போல் மழைக்கண் மாதரார்**

**நாளிரண்டு சென்றவென்று நையமொய்கொள் காவினுள்**

**தோளிரண்டும் அன்னதோழர் தோன்றலைப் புணர்ந்து பின்**

**தாளிரண்டும் எத்திநின்று தையல்நாமம் வேண்டினார்.**

எதிர்எதிரே வைத்த இரண்டு வாள்களைப்போல் விளங்கும் குளிர்ந்த கண்ணையுடைய மகளிர், இரண்டு நாட்கள் கழிந்தன என்று வருந்த, அடர்ந்த மரம் உள்ள சோலையில் சீவகன் இரண்டு தோள்களைப் போன்ற தோழர்கள் சீவகனைச் சார்ந்தபின், அவனது இரண்டு திருவடிகளையும் வணங்கினர். அவன் மணந்து கொண்ட பெண்ணின் பெயரைக் கூறுமாறு கேட்டனர்.

பாடும் வண்டுகள் மொய்ப்பதை போல் மணியுடைய மேகலையும், அகன்ற அடிவயிறும், வீடுபேற்றை விழைந்த துறவியும் மயங்கி விழச்செய்யும் விருப்பம் தரும் கொங்கைகளையும் உடைய அவள் பெயர் விமலை. அவள் நடனமாடும் பெண் போல ஒளி பொருந்திய நெற்றியுடையவள். ஊடினாலும் கூடினாற் போன்ற இன்பம் தருபவள் என்றாள்.

அதுகேட்ட தோழர்கள், நம் சீவகன் மலர் அம்புகள் ஐந்தையும் உடைய காமனே! என வியந்தனர். அப்போது புத்திசேனன், தான் விரும்பும் குணங்கள் இல்லாத நல்ல குரங்குக் குணம் கொண்டவராயினும், தம் பெற்றோர் மணம் செய்து தருவராயின், சீறுகின்ற பாம்பின்படம்போல் அடிவயிறையுடைய மகளிர் மனம் விரும்பி அவரைப் பணிந்து வாழ்வர் என நகைத்து விரும்பிக் கூறினான்.

அதுமட்டுமல்லாது, கன்னிப் பெண்ணாகிய அழகிய மகளிரைத் திருமணம் முடிக்காமல் நீண்ட நாட்கள் வீட்டில் வைத்திருந்தால், பாவமும் வந்து சேரும், பழியும் வந்து சேரும் என்று கருதி, மணம் பேசினோர்க்குத் தாமே தம் மகளைக் கொண்டு கொடுத்து தம் சுமை கழித்து இளைப்பாறல், நல்ல குடியில் பிறந்த அனைவருக்கும் ஒக்கும் என்றான் புத்திசேனன்.

**மதுக்குடம் விரிந்தன மாலை யாரொடும்**

**புதுக்கடி பொருந்துதி புக்க ஊரெலாம்**

**விதிக்கடை காணலாம் வீதி மாநகர்**

**மதிக்கடை முகத்தியோர் மடந்தை ஈண்டையாள்**

இவை வியப்புக்குரியவை அல்ல என்று கூறி, சீவகனை நோக்கி, நீ சென்ற ஊரில் தேன்குடம் விரித்தாற்போல் மலரால் ஆன மாலையணிந்த மகளிர் மணம் செய்து கொண்டிருக்கிறாய்! சிற்ப நூல் விதிப்படி அமைந்த தெருக்களுடைய இப்பெரு நகரில் முழுமதி போல் முகமுடைய உடைய மங்கை ஒருத்தி இருக்கிறாள் என்றான்.

ஆடவர்கள் அவள் வாழும் இல்லத்தின் அருகே சென்றாலும், ஆடவர்கள் பெயரைக் கேட்டாலும் உயிர் விடுவேன் என்று சீறுகிறாள். அவள் பணிப்பெண்கள் வழிபாடு செய்ய வாழ்ந்து வருகிறாள்.

காமனே அவள் எதிரில் வந்தாலும் நோக்காது உடல் வேகும் எனச் சினந்து கூறுவாள். மூங்கில் அனைய தோளையுடைய அவளை மயக்கி அவளது அழகு நலத்தை நீ நுகர்ந்து வருவாயின், நாங்கள் அனைவரும் உன்னை காம திலகன் என்று அழைப்போம் என்றான் புத்திசேனன்.

அதனைக் கேட்ட சீவகன், பணிப்பெண்டிர் கொங்கை தாக்குதலால் அவிழ்ந்து மணம் வீசும் மாலையுடன் முந்நூல் பொருந்திய மார்பனே! வெற்றியுடையவனே! நீ புகழ்ந்து பேசிய சுரமஞ்சரியை என்னிடம் மயக்கச் செய்யாமல் விடுத்தால் சிறிதும் அன்பில்லாத கீழ்மக்களின் கூந்தலைத் தழுவியவன் ஆவேன் என்று சூளுரை கூறினான்.

வண்டும் தேனும் வில்லின் நாணாக, மலர்கள் அம்பாகக் கொண்டு காமன் கோட்டத்திற்குள் நுழைந்து, வெள்ளை நூல் நீலத்தில் தோய்த்து, சுரமஞ்சரியின் புதிய கொள்கைகளைக் கெடுத்து, அவள் மணம் செய்வதற்குரிய ஆடவரின் பெயரைச் சிந்தையில் கொள்ளச் செய்வேன். நாளை நீ காமன்கோட்டம் சென்று அவனது சிலைக்குப் பின்னால் மறைந்திரு என்றான்.

அணிகலன் அணிந்த மார்பையும், ஏந்திய அடி வயிறையும், குளிர்ந்த பாவையைக் கொண்ட கண்களையும், உடைய சுரமஞ்சரி காதல் நோயால் மயங்கச் செய்ய குகையில் உள்ள ஆண் போன்று வலிமை மிக்க சீவகன் அருகில் உள்ள கண் போன்ற தோழர்களின் சூளுரைத்துப் புறப்பட்டான்.

அவ்வாறு சென்ற சீவகன் உள்ளம், அழகு ஒழுகும் சுரமஞ்சரியின் முத்துமாலை அணிந்த கொங்கையிடத்தே தனது மாலையும், மார்பும் குளிரத் தழுவுதற்கு, அவள் வடிவை இவ்வாறு இருக்கும் என ஆராய்ந்து வருந்தி உணர்ந்து பார்க்கும்.

கடைந்து எடுத்த பொன் செப்பினைப் போல் ஒளியுடன் பருத்து விளங்கவும், முத்து வடத்தைச் சுமந்தனவும் ஆகும். கரிய கண்ணையுடைய அவளது கொங்கைகள்! மடந்தையின் முகத்தனவாகிய என் மனத்தில் உள்ளவனாகிய குவளை மலரைப் போன்று அவளது கண்கள் உள்ளங்கையிலும் பெரியனவாகும்.

**ஏத்தரு மல்லிகை மாலை ஏந்திய**

**பூத்தலைக் கருங்குழற் புரியி னாற்புறம்**

**யாத்துவைத் தலைக்குமிவ் வருளி லாள்நலம்**

**காய்த்தியென் மனத்தினைக் கலக்கு கின்றதே**

புகழுடைய மல்லிகை மாலை சூடிய, பூ முடித்த கருங்கூந்தலாகிய கயிற்றினால் உன்னைப் பிணித்து வருத்துகின்ற இந்த அருளில்லாதவளது அழகு என் உள்ளத்தைச் சுட்டு வருத்தும்.

**சில்லரிக் கிண்கிணி சிலம்புஞ் சீறடிக்**

**செல்விதன் திருநலஞ் சேரும் வாயில்தான்**

**அல்லங் கிழவனோர் அந்தணா ளனாய்ச்**

**செல்வல்யான் தெளிதக வுடைத்தென் றெண்ணினான்**

மணிபரல்கள் உடைய கிண்கிணி ஒலிக்கும் சிற்றடி செல்வியின் அழகை அடையும் வழி. பசிப்பிணியால் வாடும் ஒரு கிழவனாகிய அந்தணனாய் நான் சொல்வேன்! அதுவே ஐயம் கொள்ளாத சிறந்த வழியாகும் என எண்ணினான்.

வருத்தும் பாம்புத்தோல் போன்று மேனியாய், வில்லென வளைந்த உடலுடைய மேலாடையோடு பின்னிய நூலணிந்த மார்பினனாய் மூப்பை எழுதிய தன்மை ஒப்ப தோன்றினான் சீவகன்.

அவன் நரைமயிர் படர்ந்த உடம்பினனாய், தெளிந்த புள்ளியனாய், மைந்துபோன உடையினாய், தலை வளைதலால் வளைந்த பார்வையினாய், கிழிந்த குடையினனாய், கையில் ஒரு கோலையூன்றிப் பெண்ணின் நலத்தை விரும்பிப் பேயின் தன்மையையும் உடையவனான்.

பிணித்துக் கட்டிய யாழை ஒத்த குரல் என்னும் அங்குசத்தால், ஆடவரை நீக்கிய தூய நெஞ்சுடைய சுரமஞ்சரி இன்ப நலத்தைப் பிணிக்கும் பாகனாய் முதுமைப் பருவம் என்னும் முகப்படாத்தில் தன் உருவம் தெரியாதவாறு மறைந்து, அவளது காவல்மிக்க மனையை அடைந்தான் சீவகன்.

அவ்வாறு அடைந்தவுடன், கையில் உள்ள ஊன்றுகோல் பற்றுக்கோடாகக் கொண்டு தளர்ந்து நிற்க, அவனைக் கண்ட வாயில் காவலர்கள் வந்த காரியம் என்ன? என்று கேட்டனர். அதற்கு அவன் பண்டை என் இளமைப் பருவத்தில் பால் சோற்றை விரும்பி உண்டேன். ஆனால் இப்போது அதனை என்னால் விரும்பப் பட்ட மகளிர் தருவனவற்றை விரும்பி உண்பேன் என்றான்.

**கையிற்றொழு தார்கழிய மூப்பிற்செவி கேளார்**

**மையலவர் போலமனம் பிறந்தவகை சொன்னார்**

**பையநடக் கென்றுபசிக் கிரங்கியவர் விடுத்தார்**

**தொய்யில்முலை யவர்கள் கடை தோன்றல் நனி புக்கான்**

அதனைக் கேட்ட காவலர்கள், கையால் வணங்கி, முதுமை காரணமாக காது கேட்கவில்லை. ஆதலால் பித்தரைப் போல் மனத்தில் தோன்றியதைப் பேசுகிறார் என்று எண்ணி அவர் பசிக்கு இரங்கி மெதுவாக நடந்து செல்க என்று உள்ளே போக விட்டனர். உடனே சீவகன், தொய்யில் கொடி எழுதிய கொங்கை உடைய மகளிர் காவல் காக்கும் வாயிலுக்குச் சென்றாள்.

பணிமகளிர் கூந்தலும் மாலையும் சரிய, வண்டுகள் பொங்கி ஆர்ப்ப, அணிகலன்கள் பிறழ ஓடிவந்து இங்கே நீர் வருவதும் துன்பம் தரத்தக்கது. திரும்பிப்

போய்விடுங்கள் என்று கூற, அதற்கும் பதில் கூறாதவனாய், ஊதினால் பறக்கும் பஞ்சினைப் போல் அசைந்து வந்து அவர்கள் அருகில் நின்றான்.

கச்சினால் இறுகக் கட்டிய கொங்கைகளையுடைய மாலையணிந்த மங்கையர்கள் கூரிய வாளையும் விடம் உடைய கூர் அம்பையும் வில்லையும் பார்த்து இமயன் நடுங்குவான் என அவற்றை ஏந்தி அமுது புளித்தாற்போல் தம் இனிய சொல் கெடக் கடுஞ்சொல் கூறி சீவகனைச் சூழ்ந்தனர்.

முதிய அந்தணர் வருந்துமாறு ஒன்றும் சொல்லாதீர்! அப்படி சொல்லுதல் பாவம், தொட்டவுடனே இறப்பார் போலும் இவர் எனவே நாம் இங்குக் கண்டதை ஓவியபாவையான நங்கைக்குக் கூறி அவள் இடும் கட்டளைப்படி இவரை நீக்கும் செயலைச் செய்வோம் என சிலர் சொன்னார்கள்.

கரிய கூந்தலையும், செவ்வரி படர்ந்த வாள்போன்ற கண்ணையும், வருந்தும் இடையையும், இன்பம் தரும் கொங்கையினையும் உடைய நங்காய்! ஓர் அந்தணன் மூப்புடன் வந்துள்ளான். அவன் இறந்துவிடுவான் போலிருக்கிறது. அவன் இறக்கும் முன் நாங்கள் செய்யக் கூடியது என்ன? எனக் கூறுவாயாக! என்றனர். அவளும் அப்படியானால் போய்ப் பார்ப்போம் என்றாள்.

நல்ல சந்தனத்தைக் கொங்கையில் பூசி பாலை யாழ்போலும் அழகிய மழலைமொழி பேசும் சொல்லையுடைய சுரமஞ்சரி வாசமிடும் அகிற்குழம்பால் மெழுகப்பட்டு, பசியபொன் மாடத்தின் கீழ் இறங்கி வரும்போது சோலையுடைய மலையினின்று இறங்கும் மயில் போன்று விளங்கினாள்.

கிண்கிணி ஒலிக்கும் சிலம்புடன், மேகலையில் மணிகள் இசைக்க, பூந்தாது தேனொடு கலந்த சேறானதால் மாலைமீது இருந்த வண்டுகள் தேனை நுகரமுடியாமல் பறந்து பாட மணமுடைய மலர்க்கொடி போன்ற சுரமஞ்சரி மெல்ல நடந்து வந்தாள்.

அவ்வாறு வந்தவள் சீவகனை நோக்கி, நீர் என் காரியத்தைக் கருதி இங்கு வந்தீர்? எனக் கேட்க, அவன், வாள் போன்ற கண்ணையுடைய பெண்ணே, கேள்! என் உள்ளத்தை வருத்தும் அழகிய நீரையுடைய குமரியில் நீராட வந்தேன் என்றான். அதனால் என்ன பயன்? என அவள் கேட்க வருங்காலத்துக்கு முன்பே வந்து என்னை வருந்துகிறது இந்த மூப்பு என்றான்.

அதனைக்கேட்டு வாசனை வீசும் கூந்தலையுடைய சுரமஞ்சரி மிகவும் நகைத்து, குமரியாடி இளமை பெறுபவர்கள் உன்னைத் தவிர யாராவது இருக்கிறார்களா? என்றாள். அதற்கு அவன் இம்மூப்பு போகும்படி தொழுது ஆடுவார்

என்னைத் தவிர யாரும் இல்லை என்றான். மூப்புப் போக உலகத்தார் அறியாத வழிகன்னி அறிவீர் போலும் என்று அவள் இகழ்ந்து கூற, அவன் அதில் ஒன்றும் ஐயம் இல்லை என்றான்.

பட்டுப்போன மரம் பெரிய மழையினால் உயிர்பெறுவது போல, குமரியாடினால் மூப்புக் கழியும் என்று கருதும் இவர் பித்தராவார்! இனி இவர் உற்ற பசி நோயைப் போக்குவோம் எனக் கூறி, இஃது அத்தமனகிரி என நினைத்து கதிரவன் தன் கதிரைச் சுருக்கிக் கொள்ளும் அழகொழுகும் மாடத்தின்மேல் அழகு பொருந்தச் சென்றாள்.

பருத்த வளையணிந்த பெண்ணே! சிவந்த வாய், நீண்ட பவளக்கொடியின் துண்டு போன்ற தாமரைமலர் போலும் கண்ணும் அடியும் உடைய இவர் வடிவம் முதுமையுடையது. இவர்க்குப் பசியும் அதிகமாகவுள்ளது. எனவே விரைந்து உணவை சமைத்து வருக எனப் பணிப்பெண்களை ஏவினான்.

இனியமொழி பேசும் சுரமஞ்சரி, அவனுக்கு வாசநெய் பூசி, நல்ல நீரால் ஆட்டுவித்தாள். வெள்ளை ஆடையையும், சிறந்த பொன்னால் ஆன பூணூலையும் அவள்தர, அவன் அதனை ஏற்று அங்கு இட்ட ஒரு இருக்கை மீது அமர்ந்தான்.

நிலவைச் சூழ்ந்த விண்மீன்கள் கதிரவனைச் சூழ்ந்தன என்பதுபோல, பொன்னாலான அழகிய உண்கலத்தில் சிறிய தட்டுகளை வைத்து, அறுசுவை உண்ண மகளிர் படைக்க, சீவகன் இது போன்ற இனிய சுவை உள்ள உணவை நான் எங்கும் உண்டதில்லை என்று வியந்து உண்டான்.

**தமிழ்தழிய சாயலவர் தங்குமலர்த் தூநீர்**

**உமிழ்கரகம் ஏந்தஉர வோன் அமர்ந்து பூசி**

**அமிழ்தனைய பஞ்சமுக வாசம்அமைந் தாய்ந்த**

**கமழ்திரையும் காட்டஅவை கொண்டுகவுள் அடுத்தான்.**

இனிமை சாயலையுடைய பணிமகளிர் நீர் உமிழும் கமண்டலத்தை ஏந்த, சீவகன் விரும்பி ஏற்று, வாய் கழுவி அமர, அவனிடம் ஐந்துவகைப்பட்ட முகவாசத்தைக் கூட்டி ஆய்ந்த மணமிகு வெற்றிலையைக் காட்ட, அவற்றை வாங்கி அவன் வாயில் அடக்கிக் கொண்டான்.

இவ்வாறு இருந்த பின்பு, நீர் எதில் வல்லவர்? என்று அவள் கேட்க, நான் மறைவல்லவன் என்று கூறினான். அவளோ வேதத்தில் தான் வல்லவன் என்று கூறுகிறார்போலும் என நினைத்து, அதன் எல்லை எவ்வளவு? என்றாள். அவன் தான்

நினைத்த பொருளை அடையும்வரை என்றான். அவளோ தத்துவத்தை உணர்த்தி முடியும் அளவு என்று கருதி, அதனை எவ்வளவு காலம் கற்றீர்? என்று மீண்டும் கேட்டாள். அதற்கு அவன் கிளியைப் போன்ற சொல்லையுடையவளே! எனக்கு அஃது கருத்தன்று என்றான். அவளோ, தனக்குக் காலம் நினைவில்லை என்று கூறுவதாகக் கருதினாள்.

அன்ன நடையினைப் போன்ற சுரமஞ்சரி இந்நிலத்தில் இத்திறமுடையவர் உன்னைப்போல் யாரும் இல்லை! என்று அவனை வியந்து புகழ்ந்து விரும்பி நோக்க, அவன் இனி இவள் நம்மைப் போக சொல்லுவாள் என்று கருதி, தூக்கக் கலக்கத்தால் தலை சிறிது தாழ, அதைக் கண்டு அவள் நகைத்தாள்.

முத்துபோல் பற்களையுடைய வாயும், குவளைமலர் போல் உள்ள கண்ணையுடைய சுரமஞ்சரியை சீவகன் பார்த்து, கால்கள் மிகவும் நோவுகின்றன. கண்கள் மயங்கத் துயில் கொண்டேன்! சாந்தின் மணம் கமழும் பெண்ணே! இதற்கு நான் என்ன செய்வேன்? கூறுக என்றான்.

மகரந்தப்பொடி நிறைந்த மலர்மாலையுடைய கூந்தலாள், என்னுடைய பட்டுக் கச்சாற் பிணிந்த கட்டிலில் வருத்தமின்றித் தங்குக என்றாள். அது கேட்டு, நெருப்பைப் போல் சுடும் காமக்கடலைக் கடையத் தொடங்கியவன், அந்த படுக்கையில் மெல்ல படுத்துக் களைப்பாறினான்.

**காலையொடு தாழ்ந்துகதிர் பட்டது கலங்கி**

**மாலையொடு வந்துமதி தோன்றமகிழ் தோன்றி**

**வேலனைய கண்ணியர்தம் வீழ்துணைவர் திண்தோள்**

**கோலமுலை யால் உழுதக் கூடியதை அன்றே**

சூரியன் மெல்ல மேற்திசையில் சென்று சாய்ந்து மறைந்துகொள்ள, மாலைக் காலத்தோடு நிலவு தோன்றியது. வேல் அனைய கண்களையுடைய மகளிர் மகிழ்ச்சிதோன்றி, விரும்பும் தன் கணவர் தோளை அழகிய கொங்கைகளால் தடவும் இரவுப்பொழுது வந்தது.

மலர் பரப்பிய படுக்கையில் வளர்ந்த அகில்புகையும், அழகிய பூமாலையும் ஏற்றி இனிய மணம் தரும் அகில்புகையும், கூந்தலுக்கு ஏந்திய அகிற்புகையும் ஆடைக்குப் புகைத்த அகில் புகையும், மலைமேல் தவழும் வெண்மேகம் போல் உயர்ந்த மாடத்தின் மீது எழுந்து பரவின.

மாசில்லா பால்சோற்றைச் சிறிது உண்டு, மணம் வீசும் மலர்மாலையும், மெல்லிய அணிகலனும் அறிவை மயக்கச் செய்யும் ஆடையும், வாசனை மிக்க சந்தனமும், இவற்றை அணிந்து கொண்டு தூய மகளிர், அழகிய வீணையின் நரம்பைத் தடவி இன்னிசை வாசித்தனர்.

புறமாலையையும், புகழத்தக்க தலைமுடியையும் உடைய ஆடவர் தங்களது பருத்த தோளும் அகன்ற மார்பும் பொருந்த, சந்தனத்தைப்பூசி, இனிய கரும்பை மென்றாற்போலும் இனிய சுவை அமிழ்தை மகளிரது பவளமனைய வாயிடத்தே பருகி, வளமான மாலை வாடும்படி தழுவினர்.

பொன் அறையில் அழகிய மலர்ப்படுக்கையில் மேல் இருந்த சீவகன் தான் கருதியிருந்த தத்தையின் மணத்தினை விரைந்து முடிக்க எண்ணி, இனிய இசையைப் பாடினான். அதனை இளநங்கையர் கேட்டனர்.

**மன்மதன் மணிக்குரல் மருட்டுமென்று மால் கொள்வார்**

**இன்னதன் றியக்கரின் இயக்கவந்த தென்றுதம்**

**பின்னுமுன்னும் நோக்குவார் பேதுசால எய்துவார்**

**கன்னிதன் மனத்திழைத்த காளைநாமம் வாழ்த்துவார்.**

அவர்களில் சிலர், இது மன்மதனது குரலே என்றும், அவனது குரலையும் மயக்கும் என்று மயங்கினர். இது அத்தன்மையுடையதன்று, இது இயக்கரால் இசைக்கப்படுவது என்று தம் முன்னும் நோக்கி மேலும் மயங்கினர். சிலர் சுரமஞ்சரி தன் மனத்துள் வைத்ததுபோன்று சீவகன் இவ்வாறு பாடவல்லவன் என்று அவனை வாழ்த்தினர்.

மலர்கொடியினைப் போல் அசைந்தும், மாலைகள் தாங்கியும் அம்பு போன்ற கண்களை உடைய மகளிர், தம் காலில் அணிந்த சிலம்பு மெல்லிடை வருந்தும் என ஒலிக்கவும், சீவகனது இன்னிசையை விரும்பிக் கேட்டு அவனைக் காண ஓடி வந்தனர். சீவகன் கண்ணுக்குத் தெரியாமல் இன்னிசைப் பாட்டினாலும் மன்மதனே ஆனான்.

ஒளிமிக்க பூமாலையும், நீண்ட கூந்தலையும் பெரிய கண்களையும் உடைய மகளிர்க்குத் தம் வயத்தன் ஆக மாட்டான் என்று நீக்கப்படுபவனாகிய மன்மதனை ஒத்த சீவகன், தன் கருத்தொடு அவர்கள் கருத்து ஒத்திருக்க, சாமவேதமாகிய இன்னிசைக்கீதத்தை மீண்டும் பாடத் தொடங்கினான்.

தம் குரலைப் போலவே ஓசைசெய்து அழைக்கின்ற வேடனது குரல்மேல் ஆசைகொண்டு பொய்மை கொண்ட அந்தணனாகிய வேடத்தை சீவகனின் இசைவழியே, வள்ளிக் கொடியை வென்ற குளிர்ந்த மலரனைய பெருங்கண் மகளிர் எல்லோரும் அவன் இருக்கும் இடம் வந்தனர்.

**இனிச்சிறி தெழுந்து வீங்கி இட்டிடை கோறும் நாங்கள்**

**எனக்கொறு கொறுப்ப போலும் இளமுலைப் பரவை யல்குற்**

**களிப்பொறை மலிந்த காமர் கற்பக மணிக் கொம்பொப்பாள்**

**பனிப்பிறைப் பூணினான் தன் பாண்வலைச் சென்று பட்டாள்.**

இதனால் நாங்கள் சிறிது பருத்து சிற்றிடை கொல்வோம் எனச் சினந்து கொண்டு, பரந்த அடிவயிற்றையுடைய பழமாகிய பாரம் தாங்கி நிற்கும் கொங்கைப் போன்ற சுரமஞ்சரி குளிர்ந்த பிறைபோன்ற வடிவமுடைய பூணையுடைய சீவகனின் இசைப் பாட்டாகிய வலையில் விழுந்தாள்.

பெண்ணே! பாதத்தில் அணிந்த சிலம்பு முதலிய அரற்ற இடையில் அணிந்த மேகலை ஒலிக்க ஓடிவந்து நீ முடிக்கும் காரியம் என்ன? நானோ மிகவும் வயதான கிழவன் என்று சீவகன் கூற, சுரமஞ்சரி நாணித் தலைகுனிந்து தோழிக்குப் பின்னால் மறைந்து மின்னல்கொடி கூட்டத்தில் மாணிக்கக்கொடிபோன்று நின்றாள்.

நீங்கள் என்னைவிட்டு ஓர் இளைஞனைக் கண்டால் என்ன செய்திருப்பீர்கள்! என கேட்டான் சீவகன். அதற்குத் தோழி தேன்மிக்க கண்ணியை அணிந்த எந்த ஆடவர் பெயரையும் இவ்விடத்துக் கூறவேண்டாம் என்றாள். நாணல் முளைபோல் கூரிய பற்களையுடைய இவளை மணம்செய்ய யாரும் வரவில்லை என்ற காரணத்தால் ஆடவரை வெறுக்கின்றீர்கள்? ஒளி பொருந்திய வளையல் அணிந்த இவள் வருந்துமாறு வேறுஏதும் அவர்கள் செய்தது உண்டா? என்று சீவகன் கேட்டான்.

எல்லா நன்மையுமுடைய சுண்ணத்தைச் சீவகன் பழித்த பிறகுதான் ஆண்களை வெறுத்தாள் என்று தோழியர் கூற, அதைக் கேட்ட சீவகன் இவளுக்குத் தீமை செய்த காளை இறந்து விட்டான் போலிருக்கிறதே! எனக்கூற அங்கேயிருந்த மகளிர் சீவகன் நூறாண்டு வாழ்க என்று கூறி சீவகன் உயிரோடுதான் இருக்கிறான் என்றனர்.

**காலுற்ற காம வல்லிக் கொடியெனக் கலங்கி நங்கை**

**மாலுற்ற மயங்க யாங்கள் மடக்கிளி தூது விட்டேம்**

**சேலுற்ற நெடுங்கட் செவ்வாய்த் தத்தைதன் செல்வங்கண்டே**

**பாலுற்ற பவளச் செவ்வாய்த் தத்தையாற் பரிவு தீர்த்தேம்**

காற்றில் சிக்கிய காமவல்லிக்கொடி போல சுரமஞ்சரி பித்தேறிய மயங்கிக் கலங்க, இளங்கிளி ஒன்றை தத்தைபால் தூது போகவிட்டோம். சிவந்த வாயையுடைய தத்தையின் அழகு நலத்தைக் கண்டு வந்து பாலை உண்ட பவளம்போல் சிவந்த வாளையுடைய கிளி கூறிய சொல்லால் வருத்தம் தீர்த்தோம் என்றனர்.

அழகு விளங்கும் கொம்பு போன்ற அந்நங்கையர் நீர் எம்மிடம் அன்பு கொண்டு ஒரு இன்னிசை பாடுவீராக! சுரமஞ்சரியும் ஆடவரைக் காணவும் மாட்டேன் என முன்புகொண்ட விரதத்தின் விலக்கி உம்முகம் நோக்கிச் சினம் தணிந்தாள். திருமகள் போன்ற இவளை என்ன ஆனாலும் உனது பாடலைக் கேளாது நாங்கள் உங்களைப் போகவிடமாட்டோம் என்றனர்.

அதற்கு சீவகன் இந்த பாவை தனது தோற்றப் பொலிவு முதல் மற்றவற்றை எனக்குத் தருவாளாயின் பாடுவேன், இதற்குச் சம்மதமா? என்று கேளுங்கள் என்றான். அதற்கு அவர்களோ வேறுபொருள் கொண்டனர். அதற்கு அவன் பொன்னால் ஆன பேயைத் தரின் பாடுவேன் என்றான். மேலும் இந்த ஆண் மகன் கூறும் பொன்னாலான பேய் உலகில் இல்லை. எனவே யாராலும் காட்டமுடியாத பொருளுக்கு உடன்படோம் என்றனர்.

**பட்டுலாய்க் கிடந்த செம்பொன் பவளமோ டிமைக்கும் அல்குல்**

**ஒட்டினான் அதனை ஓரா துலம்பொரு தோளினானும்**

**பட்டவாள் நுதலி னாய்க்கும் பாடுவல் காமன் தந்த**

**தொட்டிமை யுடைய வீணைச் செவிச்சுவை யமிர்தம் என்றான்.**

பவளத்தாலாகிய மேகலையால் ஒளிவிடும் அடிவயிறு உடைய சுரமஞ்சரி சீவகன் கருதி பொருளை அறியாமல் உடன்பட்டாள். சீவகனும், காமன் குரலுக்கு இணையான என் வீணைக்குரல் செவிக்கு இன்பம் தரும் அமிழ்தத்தை, நெற்றிப்பட்டம் சூடிய உனக்கு நான் பாடுவேன் என்றான்.

வயிர ஒளியைச் சிந்தும் பொற்பூண் அணிந்த மகளிருள் உயிர்பெற்று உலகம் எழுதப்பட்ட ஓவியப் பாவை போன்ற சுரமஞ்சரியின் மாசற்ற முகத்தைநோக்கி, இனிமையான யாழ் நரம்பில் பழுதிலா இன்னிசையைப் பாடத்தொடங்கினான்.

வட்டமான தோள்வளைகள் கழலும் கொங்கைமேல் மாவடு போன்ற நிறமுடைய மலரனைய நீண்ட கண்கள் நீர் சொரியும்; அவ்வாறு சொரிதற்கும் வளைகழலுதற்கும் காரணமாக நம்மிடத்து உள்ளதால் ஆர்வமுற்ற நெஞ்சின் மாலையைக் காலம் வந்து வருத்தும்.

மெல்லிய மேலாடை ஏந்திய அடிவயிற்றையுடையவளே! கொட்டாவி விட்டுக்கொண்டு நெருப்பைப் போல் பெருமூச்செறிந்து கன்னத்தில் ஊன்றுதலால் கண்ணீர் கன்னம் வருத்த வீழும். அவ்வாறு கண்ணீர் சிந்தி நாம் செயலற்று வருந்தும்படி, புண்ணைப் பிளக்கும் வேலைப் போன்று மாலைக்காலம் வந்து வருத்தும்.

**அவிழ்ந்தேந்து பூங்கோதை யாகத் தலர்ந்த**

**முகிழ்ந்தேந்து பூண்முலைமேற் பொன்பசலை பூப்பப்**

**பொன்பசலை பூப்பப் பொருகயற்கண் முத்தரும்ப**

**அன்புரு நெஞ்சம் அழுங்குவிக்கும் மாலை**

மாலை அணிந்தவளே! மார்பில் தோன்றி அரும்பி நிமிர்ந்து கொங்கைமேல் பசலைவந்து படரும். கயற்கண்கள் முத்துப்போல் நீர் சிந்தும். அன்பினால் உருகும் உள்ளத்தை மாலைக்காலம் வந்து வருத்தும்.

சீவகன் சுதஞ்சணதேவனால் கற்று தரப்பெற்ற இன்னிசையைப் பாடினான். அதுகேட்டு மகளிர் சோர்ந்து மயங்கி மயிலை ஒத்தார். அப்போது சுரமஞ்சரி அந்தணனைப் புகழ்ந்து நாளைக் காமவேளின் கோயில்புகுந்து, நமக்குத் தெய்வமாகிய காமனை வழிபட்டு இப்பாடலைத் தரவேண்டும் என்று விரும்பி வரம் கேட்பேன் என்றாள்.

மடலைக் கொண்ட பனைமரம் பெற்ற நீலமணியை நிறத்தால் மருட்டும் குரும்பைபோல, ஆடவரின் உடலில் தங்கிய உயிர் வருந்ததோன்றி, சுரமஞ்சரியும், கண்டாரை வருத்தும் அழகுடைய தோழியரும் வரம் வேண்டப்போகும் ஆர்வத்தில் திரள, கடலிடத்தே இட்ட பொட்டினைப் போல் சூரியன் தோன்றினான்.

விரைந்து செல்லும் எருதைப் பொன்னால் ஆன மணியும், கண்ணியும் அணிவித்து, ஆவின் நெய்யையும் பாலையும் ஊட்டி, வண்டியில் பூட்டி, ஒரு பெண் எருதைச் செலுத்தும் ஒரு கோலைக் கையில் கொள்ள இனிய சுரமஞ்சரி ஆடவரைக் காணாமல் போக, அவள்பின் தோழியரும் ஏறினர்.

அரசன் கட்டளையால் ஆண்கள் விலகிப்போக, மகளிர் சூலச்சென்று காமன்கோயிலில் இறங்கி, சீவகனை ஒரு அறையில் இருக்கச் செய்து, மாலையும்,

சந்தனமும் உள்ள தூபம் ஏந்தியப் பெண்கள் தொழுது ஏற்ப, திருமகள் போல் சுரமஞ்சரி காமனை வழிபட்டாள்.

அவள் இடது முழங்காலை தரையில் ஊன்றி, மென்மலர்க் கூந்தலும் வலத்தோளில் சரிய, பொன்அணி அணிந்த கழுத்தை வலப்புறத்தே சாய்த்து பொன் பதித்த தரையில் தலை பொருந்த வணங்கி எழுந்து தனது இரு கையினையும் குவித்து நின்று இதனைக் கூறினாள்.

**தாமரை செங்கட் செவ்வாய்த் தமனியக் குழையி னாய்ஓர்**

**காமம்இங் குடையேன் காளை சீவகன் அகலஞ் சேர்த்தின்**

**மாமணி மகரம் அம்பு வண்சிலைக் கரும்பு மான்தேர்**

**பூமலி மார்ப ஈவல் ஊரொடும் பொலிய என்றாள்.**

தாமரை மலர் கண்ணையும், சிவந்த வாயை உடைய பொற்குண்டலம் அணிந்த பெருமானே! உன்னிடம் ஒரு வரம் வேண்டுகிறேன். காளையாகிய சீவகனோடு நான் பொருந்துமாறு என்னை நீ சேர்ப்பாயாக! அப்படி செய்தால் உனக்கு பெரிய மகரக் கொடியும் அம்பும், கரும்புவில்லும் தேரும் ஊருடன் பொலியக் காணிக்கையாகத் தருவேன் என்றாள்.

தேன் சிந்தும் மாலையணிந்தவளே! உன் மனம் விரும்பும் காதலனைப் பெறுவாய்! உன் சிற்றிடை நோவ நில்லாது செல்க என்று சீவகன் தோழன் புத்திசேனன் வஞ்சனையாகக் கூறியதை அறியாதவளாக, தன் தெய்வம்தான் கூறுகிறது என்று அருளி, வேல்போன்ற கண்ணையுடைய சுரமஞ்சரி வீடு திரும்பினாள்.

சிற்றடியில் தங்கும் ஆடகப் பொன்னான சிலம்பும், காதில் குண்டலமும் திகழ, இலக்குமி போன்ற சுரமஞ்சரி, மணவறை அருகில் நின்ற சீவகனைக் கண்டு நெஞ்சு திடுக்கிட்டாள். அவள் நீண்ட பூங்கொடிபோல் வளைந்து நின்றாள்.

அச்சந்தரும் வேல் போன்ற வடிவுடைய, விருப்பம் உண்டாகும் கண்ணையுடைய சுரமஞ்சரி, முகத்தைச் சிறிது தாழ்த்தி, ஒரு காதில் குண்டல ஒளியும், மற்றொரு காதுக் குழையுடன் கலந்து ஒளிவீசி வானவில் போல் மின்னியது. அன்பு நிறைந்து நெஞ்சுருகி நின்றாள்.

மேகலையில் அழுத்தி பதித்த இந்திரநீலம் என ஒப்பற்ற மணி, கொப்பூழுக்கு நேரே நின்று ஒரு கதிரை உமிழும் தன்மைபோல், சுரமஞ்சரியின் அடிவயிற்றை அழகு செய்த அழகிய மயிரொழுங்கு வந்து எனது திண்ணிய ஒருமைப்பட்ட மனத்தைக் கவர்ந்தது.

**தேறினேன் தெய்வ மென்றே தீண்டிலே னாயின் உய்யேன்**

**சீறடி பரவ வந்தேன் அருளெனத் தொழுது சேர்ந்து**

**நாறிருங் குழலி னாளை நாகணை விடையிற் புல்லித்**

**கோல்தொடுத் தநங்கன் எய்யக் குழைந்துதார் திவண்ட தன்றே.**

நான் உன்னைத் தெய்வம் என்றே நினைத்தேன். அழகிய சிற்றடியை பணிந்து வாழ வந்தேன். இனி உன்னைத் தீண்டாமல் உயிர்வாழ்வேன். அருள் புரிவாயாக! என வணங்கி நெருங்கிச் சேர்ந்து மன்மதன் மலரம்பு எய்தலால் மணமிக்க கருங்கூந்தலையுடைய சுரமஞ்சரியை நாகை தழுவும் ஏறுபோலச் சீவகன் தழுவ அதனால் அவளது மாலை வாடியது.

ஆடை அணிந்த அடிவயிற்றையுடைய மயில்போல சாயலையுடைய சுரமஞ்சரி பச்சிலைக் கொண்ட கண்ணியை அணிந்த மாலையைத் தோற்கச் செய்யும் மார்பினையும், பெரிய கையினையும் உடைய சீவகனுக்கும், இனிய தமிழ் அகப்பொருள் கூறும் இயற்கைப் புணர்ச்சி இன்பம் நிலைபெற துய்த்தனர்.

பருத்த குவிந்த கொங்கைகளையும் அழகு செய்யும் மேனியையும் குளிர தடவி அடிவயிற்றையுடைய மேகலைக் காசுகளை திருத்தி அழகிய பொன்னால் ஒலிக்கும் சிலம்பில் படிந்த மகரந்தத் தூளைத் துடைத்து சுரமஞ்சரிக்கு மாலையை முன்போல் சூட்டி, அவளது கூந்தலையும் திருத்தினான்.

**வானார் கமழ்மதுவும் சாந்தும்ஏந்தி மதுத்துளித்து வண்டுஞ் சுரும்புமூசுந்**

**தேனார்பூங் கோதாய் நினக்குக்காமன் நிலையிரண்டுஞ் செவ்வனே கோலித்தந்தான்**

**தானாரப் பண்ணித் தடறுநீக்கித் தண்குருதி தோய்த்துத் தகைமைசான்ற**

**ஊனார்ந்த ஓரிணை யம்புந்தந்தான் என்னை யுளனாக வேண்டினானே.**

மணம் கமழும் சிறந்த மதுவையும், சாந்தையும் ஏந்தி, அதனைப் பருக வண்டும் தும்பியும் மொய்க்கும் மாலை அணிந்தவளே! மன்மதன் கைவில்லையும் சேமவில்லையும் வளைத்து தந்துள்ளான். அதுமட்டுமில்லாமல், தான் தாழ்வுற உறையை நீக்கிக் குருதி தோய்ந்த அழகு அமைந்த ஊன்பொருந்திய சிறந்த இரண்டு கூர் அம்புகளையும் தந்துள்ளான். அதனுடன் அமையாது, அவற்றின் இலக்காக என்னையும் உயிருடன் இருக்க செய்தான் என்று கூறினான்.

தேன் சிந்தும் மலர்மாலையும் மணக்கும் பூவுடைய கூந்தலையும், இனிக்கும் மொழியுடையவளே! ஒளி விளங்கும் உன் கொங்கைகளில் இவ்விண்ணும் மண்ணும் ஒப்பாகுமா? மின்னல் போன்ற இடையுடைய உன்னைப் பெண்ணினத்திற்கு ஒரு சிகரமாக இருக்க விரும்பி பெரியோர் தலைவனாகிய பிரமன் படைத்தான் என பறவைகள் மகிழ காரணமான சீவகன் புகழ, அதனை உடைய சுரமஞ்சரி கொடிபோல் நாணி நின்றாள்.

அவ்வாறு நாணம் கொண்டு நின்றவளை, தன் கையால் தழுவி தன் மடிமீது வைத்து, வேலையுடைய சீவகன், நாளை சிறந்த உன் இன்பத்தை அடையாவிட்டால் நான், அறம் கெட நாட்டை ஆளும் கட்டியங்காரன் ஆகக் கடவேன், நீ இப்போது செல்வாயாக என்றான்.

மோதிரம் அணிந்த மெல்விரல்களையுடைய கைகளால் கூப்பி தொழுது நிற்க, சீவகன் நங்காய்! நீ நடுங்காது செல்க என்றான். அது கேட்ட அவள் மேகலையின் மணிகள் ஒலிக்க, மெல்ல அசைந்து நடந்து தோழியருடன் சென்றாள்.

பாம்பினது படம் போன்ற அடிவயிறையுடைய, ஒளி வீசும் மாலையும், விரும்பும் கொங்கையையும் வேல் போன்ற கண்ணும் உள்ள சுரமஞ்சரி, சீவகனிடத்து அன்பு வைத்து அழகிய மணிச் சிவிகையில் ஏறி, பொன்னாலான பெரிய மாளிகையில் புகுந்தாள்.

தான் மழைபெய்ய நீர்த்துளிகளை வாங்கிய வானவில் போல, வடிவுடைய தேன் துளிக்கும் மாலை அணிந்த பரந்த மார்பு சீவகனின் தோழர்கள் நாம் காமதிலகன் என்று உவமித்த நம்பி என்று புகழ்ந்தவாறு போரில் நாண் ஏற்றிடப்பட்ட வில் போன்ற புருவத்தையுடைய சுரமஞ்சரியை இவன் மணம்செய்யும் விதம் பற்றி கூறினர்.

அமுதையும் தேனையும் கலந்த கொடிபோல, இரண்டு மலர்கள் பூத்ததுபோல கொங்கைகளும், மலரை குடைந்து தேனைப் பருகித் தம்வயிறை நிறைத்து நீலமணிபோல் விளங்கும் வண்டுகள் பாடும் நறுமண மாலையணிந்த சுரமஞ்சரியின் சுற்றத்தாரிடம் இத்திருமணம் பற்றி பேசத் தக்காரை அனுப்பினர்.

சீவகனுக்கு சுரமஞ்சரியைத் தரவேண்டும் என்று கூறியதைக் கேட்ட, குபேரதத்தன் சூடான தேனை வாயில் கொண்டவன் விழுங்கவும் முடியாமல், உமிழவும் முடியாமல் இருப்பது போல, அதற்கு உடன்படவோ, மறுக்கவோ முடியாமல் நல்வினையில்லாத என்மகள் திறத்து நல்வினையில்லாத தந்தையாகிய நான் என்ன செய்வேன்? என்று மனம் தடுமாறி மயங்கி நின்றபோது, சுரமஞ்சரி தன் அறிவால் தோழி வாயிலாக அறத்தொடு நிற்றலை ஆராய்ந்தாள்.

அழகுமிக்க மாலையுடைய, மின்னலைப்போல் சூரியனை தோற்கும் ஒளியையுடைய பவளத் தூணைச் சார்ந்து நின்று, இனிய தன்மைகொண்ட, கற்பெனும் மாலை வீசி, நாணம் என்னும் களிப்புடைய வண்டை ஓட்டிச் சொற்குற்றமின்றி, தலைவி தோழிக்கு அறத்தோடு நின்றாள்.

நல்லொழுக்கம் மிக்க, மயில்போன்ற சாயலையுடைய பவளத்தாலான பாவைபோன்ற உப்பங்கழியில் வளரும் மீன்போல் கண்ணையுடைய சுரமஞ்சரியின் கற்பினை அறிந்த தோழி, மலர் மாலையை அணிவித்து அடிபணிந்து வாழ்த்தி, முகில் போன்ற கூந்தலையுடைய தோழி, செவிலியைச் சார்ந்து தலைவியின் நிலையைக் கூறினாள்.

தேன் பொருந்திய மாலை அணிந்த நற்றாயே! சுரமஞ்சரியின் உளக்கருத்து சீவகனை மணக்க வேண்டும் என்பதே என்றும், குவளை மலர் போன்ற கண்ணையுடைய சுமதிக்கு செவிலித்தாய் கூறினாள். அதுகேட்ட நற்றாய், நள்ளிரவில் விருப்பமூட்டும் ஒரு மலர் பொய்கை வற்ற கனவு கண்டேன். அத்தன்மையதாகும், கன்னித்தன்மை சுரமஞ்சரியை விட்டு இன்றோடு நீங்கியது போலும் என்றாள்.

கயல்மீன் போன்ற கண்களும், வில்போன்ற புருவமும் பிறைநிலவு போன்ற நெற்றியும், முத்துப்போன்ற பற்களும் நன்கு அமைந்து அசையும் குண்டலத்துடன் தோன்றும் முழுமதி இது என்று கூறக்கூடிய சுரமஞ்சரியின் தந்தை தன் மனைவி சுமதியிடம் என்ன? என்று கேட்க, இதனைச் சொன்னாள்.

போர் விளைத்து கனலும் வேலுடையவனே! சிறு பருவத்தில் அறிவு பெற்ற சுரமஞ்சரி பெரிய வேலியிட்டுக் காத்துக் கொண்டு கற்பாகிய இது, முன்பு சீவகன் சாட்சிகாட்டி, ஆராய்ந்த சுண்ணத்தைத் தாழ்ந்தது என்று கூறியதைக் கருதியதால் போலும். செல்வம் விளைய பொழிகின்ற தேன்மாரி, பாற்கடலில் பொழிந்தது என அறிக என்றாள்.

அதனை விரும்பிக் கேட்ட குபேரதத்தன் சுற்றத்தார்க்கெல்லாம் அறிவித்து, உணவும், உடையும், சிறந்த பொன்னும், பூ மாலையும் சந்தனமும் குறைவில்லாமல் எல்லோர்க்கும் கொடுத்து, மங்கல வாத்தியங்கள் கூடி ஒலிக்க, நல்ல நாளில் சீவகனுக்கு சுரமஞ்சரியைத் திருமணம் செய்து கொடுத்தான்.

காற்சரி என்னும் அணியும், சிலம்பும், கிண்கிணியும் வீணை வல்லாருமாகிய உரிய மகளிர் நூற்றெண்மரையும் ஒன்றரைக்கோடி பொன்னையும், மூன்று ஊர்களையும் சீதனமாகக் கொடுத்தேன் என்று தீயின் முன்னே நின்று குபேரதத்தன் கூறினான்.

மாசற்ற மணியும், முத்தும், வயிரமும் ஒளிவிடும் மேனியில், மாலையணிந்த அழகிய மேருவை ஒத்தவனும், ஆடை அணிந்த பரந்த அடிவயிற்றையுடைய தூய மணிக்கொடி ஒத்தவளும் குற்றமற்ற அன்புடன் கூடி இன்பக் கடலில் மூழ்கினர்.

யானையின் இரண்டு தந்தக் கொம்பு போன்றதாய், திரண்ட முத்துச்சரம் சுமந்து பருத்து, மின்னல்கொடி அனைய இடையை வருத்தி விரும்புதற்குக் காரணமான கொங்கைகளின் நீலமணி போன்ற கண்கள் சிவக்க, பேரின்பம் துய்த்து, சீவகன் துறக்கம் அடைந்தவர்களை ஒத்தான்.

வரியையுடைய கழல் அணிந்த சீவகன், தன் மார்பும் சுரமஞ்சரியின் கொங்கையும் தம்முள் போரிட்டு அதில் திளைக்க, தாளத்தோடிசைகளும் பறைஒலி கெட, சிலம்பொலியும் சேர்ந்து ஒலிக்க, முறுக்குடைய கூந்தல் கலைந்து குலைய, மலரணையை விடாதவனாய் இன்பம் நுகர்ந்தான்.

சீவகன் மேலும் புணர, போதை தரும் பானகத்தை ஏந்தித் தர, அவள் அதனைப் பருகி மயக்கம்மிக்க, அழகிய குவளை மலரை ஒருகையால் கூந்தலில் நல்கி, பெண்மான் போன்ற மார்புற இறுகத் தழுவினால் இடை முறியும் என்று கருதி, ஒப்பில்லாத தன் தோளால் அவளைத் தழுவினான்.

சுரமஞ்சரியும் அவனும் ஊடல் கொண்டு, வளமிகு கங்கைப்போல் பலரும் பலமுகமாகத் தழுவும் மார்பினால் தழுவ வேண்டாம். என்னைத் தொடாது போய்விடுக என்று கூறி, விலகி நிற்க, அவனை நோக்கி, முல்லை மாலை அணிந்தவளே! நான் சிறிதும் தவறு செய்யவில்லை, சினம் கொள்ளாதே என்று சிற்றடியை வணங்கினான்.

ஒருபிடி அளவுள்ள இடையுடைய சுரமஞ்சரி, சுவரில் வரைந்த பாவையை நோக்கி, நீர் மகிழ்வுடன் இருந்தீரோ? எனக் கேட்க, அவன் ஓவியத்தில் தீட்டிய உருவம் உன் உருவத்தில் ஒன்றாக விளங்குகிறது. நீ சுவர் அருகில் நின்றாய். பேரழகுமிக்க நங்கையே நீயே அந்த உருவம் எனக் கருதி ஒப்பிட்டு அதனைக் கண்டேன் என்றான்.

மெல்லிய ஆடை நெகிழ்ந்ததால், அடிவயிற்றின் மேல் மேகலையிற் கட்டிய மணிஒளி பரவ வருந்தி, காமத்தினால் சினந்து நோக்கி, குண்டலம் அசைந்து விளங்க, மலர்மாலை அணிந்த கூந்தல் தாழ, ஒளிவிடும் வளையல் அணிந்த அழகாக பூங்கொம்பு போன்ற அவள், சீவகனுடன் ஊடி நின்றாள்.

அன்று கிழவனைப்போல் வடிவம் கொண்டு என் காவலிடம் தங்கி பாடியிருந்ததைக் கண்டேன். இன்று சுவரில் வரைந்த பாவையை கண்டதையும் பார்த்தேன். ஊரில் இருவேறு தன்மை நிகழ்ந்தது. அன்று நான் விரும்பப்பட்டேன்.

இன்று என்னைக் காட்டிலும் ஓவியம் சிறந்துவிட்டதா? என்று கேட்டு இக்காமம் ஒழிக என்று சுரமஞ்சரி கூற, சீவகன் உயிரை அது வருந்தின.

**அலங்கல்தா தவிழ அஞ்செஞ் சீறடி யணிந்த அம்பூஞ்**

**சிலம்பின்மேற் சென்னி சேர்த்திச் சிறியவர் செய்த தீமை**

**புலம்பலர் பொறுப்பர் அன்றே பெரியவர் என்று கூறி**

**இலங்குவேல் கண்ணி ஊடல் இளையவன் நீக்கினானே.**

அழகிய சிவந்த பாதத்தில் அணிந்த சிலம்பின் மேல், சீவகன் தலையைத் தாழ்த்தி வணங்கி, சிறியவர் செய்த தீமையை வெறுக்காது பொறுப்பர் பெரியவர். அதுபோல என் பிழையையும் பொறுத்தருள்க என்றான். சுரமஞ்சரியின் ஊடலை நீக்கினான்.

மாலை சூடிய மார்பனான சீவகன் யாழிசையை வென்ற மொழியினளாகிய சுரமஞ்சரியின் அமிழ்தத்தை ஒத்த இனிய ஊடலை நீக்கி, பழுத்த காமக்கனியை உண்டு, அச்சுரமஞ்சரியுடன் கூடி நீங்காதவனாய் முறையாகக் கலைகள் நிறைந்த மதியை சூரியன் பொருந்தி ஒன்றாகும் தன்மையை ஒத்தான்.

**பச்சிலைப் பட்டும் முத்தும் பவளமும் இமைக்கும் அல்குல்**

**நச்சிலை வேற்கண் மாதர் நகைமுக முறுவல் மாந்தி**

**இச்சையும் குறிப்பும் நோக்கி எய்வதே கரும மாசுக்**

**கைச்சிலை கணையோ டேந்திக் காமன்இக் கடையைக் காப்பான்**

பசிய இலையுள்ள தொழில் நிறைந்த பட்டையும், முத்தையும், பவளம்போல் அடிவயிறும், விடம் உள்ள இலைவடிவமான வேல் போன்ற கண்ணையுடைய சுரமஞ்சரி, அழகிய முகத்தின் புன்னகைய நுகரவிரும்பும் சீவகன் அழகிய முகத்தின் புன்னகையை அவளது குறிப்பைக் கண்டு, அவர்கள் இருவரும் இணையுமாறு அம்பு எய்வதே தொழிலாகக் கொண்டு, அம்பைக் கையில் ஏந்தி இவ்வீட்டு வாயிலில் காப்பவனானான்.

சீவகன் அவளைப் பிரிய, தலைமுடியின் மணம் காத தூரம் மணக்குமாறு தொடுத்த மலரைச் சூட்டி, கிம்புரி வடிவுள்ள முத்துமாலையை மென்தோளில் அணிந்து, அடிவயிற்றை சூழ்ந்த பொன் மேகலையைத் தடவி, அவளது ஒளிமிக்க வளையலைத் திருத்தான்.

தகரம் என்னும் வாசனைமரத்தின் விறகில் செந்தீயில் வரும் அகில்மணமும், தேனும் நேர்கட்டி என்னும் வாசனைப் பொருளும் கூட்டி, குற்றமற்ற வளர்த்த புகைமணம் உடைய அழகிய படுக்கை மீது அமர்ந்து, சீவகன் ஒளிபொருந்திய வளையலை அணிந்த சுரமஞ்சரிக்கு இதனைத் தெரிவித்தான்.

கயற்கண்ணாய்! நீ வருந்தவேண்டாம். நான் கூறுகின்ற காரியம் யாது எனின், சில நாள் உன்னைப் பிரிவேன். பிரிவைத் தாங்கியிருப்பாயாக! என்றும் பிரிவைத் தாங்கியிருத்தல் சிறப்பான பயன் தரும் செயலாகும் என்றான். அதுகேட்ட அவள் பெருமை மிக்கவனே! நீ விரும்புவதன்றி, நான் விரும்புவது வேறு ஒன்று உண்டோ? நான் ஒன்றுபட்ட உன்மனம் போல் ஒழுகினேன். எனவே உன் விருப்பமே என் விருப்பம் என்றாள்.

அவ்வாறு அவள் கூறிய பின், நாணொடு கலந்த இன்சுவை கொண்ட, அச்சம் உள்ள சொல்லைக் கேட்டு தன் மார்பில் பொருந்தி, மலர் மாலை அணிந்தவளே! புனைந்த உன் அழகு கெட, நீ தனித்து வருந்தும்படி நான் உன்னைப் பிரிகிறேன் என்று கூறி அவளை விட்டு நீங்கி தோழர்களுடன் மகிழ்வோடு தன் இல்லம் புகுந்தான்.

குதிரைகளையும் யானைகளையும் நோக்கி, பொன் வடித்த தேரையும், நோக்கி இரவும் பகலும் இடைவிடாது என் மகள் எங்கேயிருக்கிறான் என்று கேட்டு அழுத, மெழுகு நெருப்பைச் சார்ந்தாற் போல நெஞ்சு உருகுகின்ற தாய் சுநந்தையின் வருத்தத்தை நீக்கினான்.

அரசனால் அனுப்பப்பெற்ற ஒற்றர்கள் உணரமுடியாதபடி, வாயினால் ஒன்றும் கூறாமல் தன்வருகையை உறவினர் எல்லார்க்கும் தெரிவிக்க, அவர்கள் எல்லோரும் ஒரு சேரத் திரண்டு தழுவிக் கொள்வராகி மார்பில் அடித்துக்கொண்டு ஏங்கிச் சோர்ந்து, நம்பி, நம்பி என்று கூறி அழுத கண்ணீர் காலை இழுத்து ஓடியது.

**கந்துகள் கழறக் கல்லென் கடற்றிரை அவிந்த வண்ணம்**

**வந்தவர் புலம்பு நீங்க மறைபுறம் படுமென் றெண்ணி**

**எந்தைதான் இறந்த நாளின் றெனநகர் இயம்பி யாரும்**

**அந்தமில் உவகை தன்னால் அகங்குளிர்ப் பெய்தினாரே.**

இந்த அழுகையால் சீவகன் உயிருடன் இருக்கிறான். இராசமாபுரம் வந்துள்ளான் என்று இரகசியம் வெளிபடும் என்று கந்துக்கடன் கூற, வந்தவர்கள் எல்லாரும் அழுகை அகற்றி, அழுகைக் காரணம் கந்துக்கடனின் தந்தை இறந்தநாள்

இன்று என்று நகரத்தார் கூறி, சீவகன் இருக்கிறான் என்ற மகிழ்ச்சியில் அமைதியடைந்தனர்.

குளிர்ச்சிப்பொருந்திய கண்களும், சிவந்த வாயையுமுடைய தத்தை சீவகனைக் கண்டு மகிழ்ந்து, அடிகளே! இன்மொழி பேசும் என் தங்கையாகிய குணமாலையைச் சென்று காண்க என வேண்ட, அவனும் அவளைச் சார்ந்து மங்கல முறையால் மணம்மிகும் கண்ணியையும் புனைந்து குங்குமத்தை அணிந்தான்.

சீவகன் புனைந்த மாலையும், கண்ணியையும் ஏற்றுக்கொண்டு குணமாலை, அடிகளே! தீவினையுடைய என்னைத் தொடவேண்டாம் நான் ஒரு பாவி! என்று நொந்து அழுது உருகி வாட, கருங்குவளை மலர் அனைய கண்ணையுடையவளே! நீ சிறிதும் வருந்தவேண்டாம். நான் எல்லாவற்றிலும் பிழைத்தது, புனுகு மணக்கும் மேனியுடை நங்கையாகிய உனது தவத்தினால்தான் என்றான்.

**அன்னமென் நடையும் நோக்கும் சாயலும் அணியும் ஏரும்**

**மின்னினுண் ணுசுப்பும் வெய்ய முலைகளும் முகமுந் தோன்ற**

**என்மனத்தெழுதப் பட்டா யாயினும் அரிவை கேளாய்**

**உன்னையான் பிரிந்த நாள்ஓர் ஊழியே போன்ற தென்றான்.**

சீவகன் குணமாலையை நோக்கி அரிவையே! கேளாய்! அன்னம்போன்ற நடையும், பார்வையும், மென்மையும், அழகும், எழுச்சியும், பருத்த கொங்கையும், முகமும் விளங்க என் மனத்தில் உயிரோவியமாக எழுதப்பட்டு என்றும் நீங்காதிருந்தாய்! உன் மெய்யுறு புணர்ச்சியின்றி உன்னைப் பிரிந்த ஒரு நாளும் ஓர் ஊழிக்காலம் போல் இருந்தது என்றான்.

இவ்வாறு குற்றமற்ற முறுக்கவிழ்ந்த மலர்மாலை அணிந்த சீவகன், குணமாலை மனம் மகிழ்வனவற்றைக் கூறி, அவளைக் கூடி இனிய துயில் கொண்டு மற்றைநாள் தந்தையிடம் அடுத்து நடைபெற உள்ள காரியங்களை எடுத்துச்சொல்லி தோழர்கள் சூழ்ந்துவர, காவும் குதிரை வாங்கும் வணிகரது வேடம் கொண்டு தன் நகரைவிட்டு நீங்கினான்.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினா

1. சுரமஞ்சரியார் இலம்பகம் – கதைச்சுருக்கம் தருக

2. சுரமஞ்சரி குறித்து புத்திசேனன் சீவகனிடம் கூறியது என்ன?

3. சீவகன் சுரமஞ்சரியின் மாளிகைக்குச் சென்ற நிகழ்வை விளக்குக

4. சுரமஞ்சரி காமன் கோட்டத்திற்குச் சென்று வேண்டியது என்ன?

5. சுரமஞ்சரி-சீவகன் திருமண நிகழ்வை விளக்குக

## நெடுவினா

1. சீவகன் சுரமஞ்சரியின் அரண்மனைக்குச் சென்ற வரலாற்றை விவரி

2. சுரமஞ்சரியின் பாத்திரப்படைப்பை ஆராய்க

3. சீவகன் சுரமஞ்சரியின் அரண்மனைக்குச் சென்ற பின் நிகழ்ந்தவற்றை விவரிக்க

4. சுரமஞ்சரியார் இலம்பகச் செய்திகளை விவரித்து எழுதுக

## அலகு – 3

**சூளாமணி – நாட்டுச் சருக்கம் முழுமையும்**

**உதயணகுமார காவியம் – இலாவாண காண்டம் முழுமையும்**

**நாககுமார காவியம் – ஐந்தாம் சருக்கம் முழுமையும்**

# சூளாமணி

ஐஞ்சிறுங்காப்பியங்களுள் ஒன்றான சூளாமணி ஒரு சமண சமயம் சார்ந்த நூலாகும். சமண சமயத்தைச் சார்ந்த தோலாமொழித்தேவர் இதனை இயற்றினார். பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட யாப்பருங்கல விருத்தியுரையில் சூளாமணிப் பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. பெருங்காப்பியத்தின் இலக்கணம் அனைத்தும் பெற்ற குறுங்காப்பியம் இது. இக்காப்பியத்தின் தலைவன் திவிட்டன். இந் நூல் ஜினசேனர் என்பவர் வடமொழியில் எழுதிய ஸ்ரீபுராணம் எனப்படும் ஆருகத மகாபுராணம் என்னும் நூலைத்தழுவித் தமிழில் எழுதப்பட்டது. இது விருத்தப்பாவல் ஆன நூல் ஆகும். இந் நூல் சமண தத்துவங்கள் மற்றும் நான்கு வகையான பிறவிகள் பற்றி விரிவாக விளக்குகிறது. இது 12 சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டு, 2131 பாடல்களை கொண்டது. இந்நூல் கதை கூறும் போக்கில் சீவக சிந்தாமணியை ஒத்துள்ளது.

சூளாமணி என்பது செந்தமிழ் மொழியின்கண் சிறந்து விளங்கும் பெருங்காப்பியங்களுள் ஒன்று. இது ஆருகத சமயத்தைச் சார்ந்த தோலாமொழித்தேவர் என்னும் நல்லிசைப் புலவரால் இயற்றப்பட்டது. கடைச்சங்க காலத்திற்குப் பின்னரும் தேவாரக் காலத்திற்கு முன்னரும் நிகழ்ந்த காலத்தில் நம் தமிழகத்தின் கண் ஆருகத சமயம் என்னும் சமண சமயம் யாண்டும் பரவி மிகவும் செழிப்புற்றிருந்தது. அக்காலத்தே அம்மதச் சார்புடைய நல்லிசைப் புலவர் பலர் அம்மதத்திற்கு ஆக்கமாக இயற்றிய பெருங்காப்பியங்கள், நிகண்டுகள் பல. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி இவை ஐம்பெருங்காப்பியமாம். சூளாமணி, யசோதர காவியம், உதயண காவியம், நாககுமார காவியம், நீலகேசி இவை ஐஞ்சிறுகாப்பியமாம். இலக்கண வகையாலன்றிக் காப்பியப் பண்பு வகையாலும் தலை சிறந்த காவியம் சிந்தாமணியாகும். இதை அடியொற்றி அதற்குப் பின் தோன்றிய பெருங்காப்பியமே இச்சூளாமணியாகும். எனினும், சிந்தாமணியின் செய்யுளைக் காட்டிலும் சூளாமணியின் செய்யுட்கள் இனிய ஓசையுடையனவாய்ச் சிறந்திருக்கிறது. இந்நூலிற்கு அமைந்த சூளாமணி என்னும் இப்பெயர் ஆசிரியரால் இடப்பட்ட பெயராகத் தோன்றவில்லை, தன்மையால் வந்த பெயரே ஆகும்.

சூளாமணியை இயற்றிய தோலாமொழித் தேவரின் இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. இவர் இந்நூலின்கண் இரண்டிடங்களில் 'ஆர்க்கும் தோலாதாய்' என்றும், 'தோலாநாவிற் சச்சுதன்' இனிய அழகிய சொற்றொடரை வழங்கி யிருத்தலால் அதன் அருமை உணர்ந்த பெரியோர் இவரைத் தோலாமொழித் தேவர் என்று வழங்கலாயினர் என பெரியோர்கள் கருதுகின்றனர். இவர் கார்வெட்டியரசன் விசயன் என்பவனுடைய காலத்தவர், தருமதீர்த்தங்கரரிடத்தே பெரிதும் ஈடுபாடுடையவர் என்றும் மன்னன் விசயன் வேண்டுகோளின்படி இந்நூலை இயற்றினார் என்பதும் சில செய்யுட்களால் விளக்கப்பட்டு இருக்கிறது. கடைச்சங்க காலத்திற்குப் பின்னர்ச் சமண சமயம் செழிப்புற்றிருந்த காலத்தே அச்சமயக் கணக்கர்கள் அதை பரப்பும் பொருட்டு அங்கங்கே சங்கங்கள் பல நிறுவினர், அதில் தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்ச்சங்கம் [திரமிள சங்கம் ] மிகவும் சிறப்புற்றிருந்தது. இச்சங்கங்களுக்கு அரசர்கள் தலைமை தாங்கினர். இச்சூளாமணி, அரசன் விசயன் சேந்தன் அவையின்கண் அமைந்த சான்றோர்களால் கேட்கப்பட்டு அவர்களால் நல்ல நூல் என ஏற்றுக் கொள்ளப்பட்டும் இருக்கிறது.

தோலாமொழித்தேவர் வாழ்ந்த காலத்தை இதுகாறும் யாரும் வரையறுத்துக் கூறவில்லை. சிந்தாமணி ஆசிரியருக்குத் தோலாமொழித் தேவர் பிற்காலத்தவர் என்பதை மறுப்பார் யாருமில்லை. எனவே, இவர் கடைச்சங்ககாலத்திற்குப் பின்னிருந்த சிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்கதேவர் காலத்திற்கு அணித்தாய்த் தேவாரக் காலத்திற்கு முற்பட்டதொரு காலத்தே வாழ்ந்தவர் எனலாம்.

இங்கு பாடப்பகுதியாக சூளாமணி நூலிலிருந்து நாட்டுச் சருக்கம் அமைந்துள்ளது. அதனை விரிவாக இங்கு காணலாம்.

## நாட்டுச் சருக்கம்

[இச் சருக்கத்தின்கண் சுரமைநாட்டு நான்கு வகைப்பட்ட நிலவளங்களும், அவற்றின்கண் உள்ள பொருள்கள் தம்முள் மயங்கி நிற்கும் திறமும், நகரங்கள் ஊர்கள் முதலியவற்றின் சிறப்பும் பிறவும் கூறப் பெறுகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலத்துக் கருப்பொருள்களும் மக்களுடைய தொழில் நலங்களும் இனிது விளக்கப்பெறுகின்றன.]

### சுரமை நாட்டின் சிறப்பு

**1. மஞ்சுசூழ் மணிவரை யெடுத்த மாமலர்**
**இஞ்சிசூ ழணிநக ரிருக்கை நாடது**

**விஞ்சைநீ ளுலகுடன் விழாக்கொண் டன்னது**

**துஞ்சுநீள் நிதியது சுரமை யென்பவே.**

முகில்களாற் சூழப்பெற்றதும் அரிய மணிகளையுடையதுமான கோடிக்குன்றம் என்னும் மலையைக் கைகளால் தூக்கிய திருமாலின் கூறாகிய திவிட்டன் அரசு வீற்றிருக்கின்ற மதில்கள் சூழ்ந்த அழகிய போதனம் என்னும் நகரத்துக்கு இருப்பிடமான நாடாவது, வித்தியாதரர்களுடைய நீண்ட உலகத்தோடு கூடி திருவிழாக் கொள்வதுபோன்ற சிறப்பினையுடையது. யாவரும் பெறுநராதலால் இரப்பார் இல்லாமல் வீணே பெருகிக்கிடக்கும் செல்வத்தையுடையது சுரமை என்னும் நாடு என உயர்ந்தோர் சொல்லுவர்

**கயல்களும் கண்களும்**

**2.** அந்நாட்டகத்தின் பல இடங்களிலும் உள்ள நீர் நிலைகளில் தாமரை மலர்கள் மிகுதியாக மலர்ந்து விளங்குகின்றன. அந்நீர் நிலைகளில் உள்ள மீன்கள் தாமரை மலர்களின்மீது துள்ளிக்குதித்து விளையாடல் புரிந்து களிக்கின்றன. வீட்டகத்திலோ அழகிய மாதர்கள் பலர் நிறைந்துள்ளனர். அவர்களுடைய முகங்களோ செந்தாமரை மலரைப்போன்று திகழ்கின்றன. அவர்களுடைய கண்கள் அடிக்கடி மருண்டு பார்க்கும் பான்மை உடையவைகளாக மிளிர்கின்றன. தாமரை மலரில் மீன்கள் துள்ளிக்குதிக்கும் தோற்றமும், மாதர்முகத்துக் கண்களின் பிறழ்ச்சியும் காண்போர்க்கு ஒரே தன்மையுடையனவாகக் காணப்பெறுகின்றன. இதனால் அந்நாட்டின் நீர்வளமும் மாதர்களின் அழகுவளமும் இனிது புலனாகின்றன.

**வயல்களும் ஊர்களும்**

**3.** அந்நாட்டின்கண்ணுள்ள குளிர்ந்த மருதநிலங்கள் அந்த மங்கையரின் அழகிய நடையைப் போன்ற அன்னப் பறவைகளின் இனிய குரலின் ஒலியால் ஆரவாரம் உடையனவாயிருக்கும். அந்நாட்டிலுள்ள ஊர்கள் பருத்த முற்றாக் கொங்கைகளையுடைய மங்கையரின் மெல்லிய சிறிய அடிகளில் அணியப்பட்ட உயர்ந்த பெரிய சிலம்புகளினால் ஆரவாரமுடையனவாயிருக்கும்

**பொழில்களிலும் வீடுகளிலும் இன்னிசை**

**4. நிழலகந் தவழ்ந்துதே னிரந்து தாதுசேர்**

**பொழிலகம் பூவையுங் கிளியும் பாடுமே**

**குழலகங் குடைந்துவண்டுறங்குங் கோதையர்**

**மழலையும் யாழுமே மலிந்த மாடமே.**

அந்நாட்டுப் பொழிலிடங்கள் நிழல்பரந்து தேன் பரவி மகரந்தப் பொடி நிறைந்து சிறந்து திகழ்கின்றன. அத்தகைய இடங்களிலே நாகணவாய்ப் பறவைகளும் கிளிகளும் இசைபாடி மகிழ்கின்றன. வீடுகளோ பெண்களுடைய இனிய மொழிகளாலும் வீணைப்பாடல்களாலும் இன்ப நிலையங்களாக விளங்குகின்றன.

(நாகணவாய்ப்புள் கிளியைப்போன்று பேசவும் பாடவும் வல்ல ஒரு பறவை.)

**வண்டுகளும் கொங்கைகளும்**

**5. காவியுங் குவளையு நெகிழ்ந்து கள்ளுமிழ்**

**ஆவியுண் டடர்த்ததே னகத்து மங்கையர்**

**நாவியுங் குழம்புமுண் ணகில நற்றவம்**

**மேவினின் றவரையு மெலிய விம்முமே.**

கருங்குவளை செங்குவளை முதலியவைகளிலுள்ள தேனைப் பருகி எங்கும் வண்டுக்கூட்டங்கள் மொய்க்கின்றன. இல்லத்துள்ள மாதர்களின் கத்தூரியும் குங்குமக்குழம்பும் அணியப்பெற்ற கொங்கைகளோ அளவுகடந்து பருத்து விம்மிநிற்கும் தோற்றத்தினால் அவர்தம் கணவன்மாரையே அன்றி நற்றவம் புரிந்துநிற்கும் துறவிகளைக்கூட வருத்தத்தக்கவைகளாக விளங்கி நிற்கின்றன.

**சுரமை நாட்டின் நானிலவளம்**

6. அந்த நாடானது பெருமை பொருந்திய அருவிகளையுடைய மலைகளாகிய குறிஞ்சி நிலத்தையும் முல்லைமலர்களில் உள்ள தேன், நீர் அருவியை ஒத்துப்பெருகுகின்ற காட்டிடமாகிய முல்லைநிலத்தையும் தேன் பொருந்திய நீலோற்பல மலரையுடைய அழகிய கழனிகளாகிய மருதநிலத்தையும் கடலிடமாகிய நெய்தல்நிலத்தையும் பக்கத்தே கொண்டு விளங்குவதாய், இந்நால்வகைப்பட்ட நிலங்களும் பொருந்தி பொருட்செல்வத்தால் எப்பொழுதும் ஆரவாரம் உடையதாயிருக்கும்.

**குறிஞ்சி நிலம்**

**7. முன்றி லெங்கு முருகயர் பாணியும்**

**சென்று வீழரு வித்திர ளோசையும்**

**வென்றி வேழ முழக்கொடு கூடிவான்**

**ஒன்றி நின்றதி ரும்மொரு பாலெலாம்.**

அந்நாட்டில் ஒருபக்கம் முழுவதிலும் குறவர்களின் வீட்டு முற்றங்கள்தோறும் முருகக்கடவுளை வழிபட்டு வெறியாடுவார் எழுப்பும் பாட்டிசையும், சுனை நிரம்பி வழிந்து சென்று பாறை மருங்கினின்று வீழும் அருவிக்கூட்டங்களின் ஒலியும், தம் பகையாகிய புலிகளை வென்று பிளிறும் யானைகளின் முழக்கத்தோடு கூடி விண்ணில் சென்று தாக்கி எதிரொலி செய்து முழங்கும்.

**முல்லை நிலம்**

8. பணையம் வைத்துவிட்ட கொல்லேற்றினைத் தழுவிக்கொண்ட வெற்றி குறித்து அடிக்கின்ற ஏறங்கோட்பறையையுடைய இடையர்கள் இசைகளின் வகைகளைக் கொண்டு எழுகின்ற கொன்றைப் பழத்தாலாகிய அழகிய இனிய இசையையுடைய குழலென்னும் ஊதுகருவியின் இசையும், ஏர் உழுகின்ற ஆயர்கள் ஆரவாரமும் என்கிற இவைகள் ஒரு பக்கமாகிய முல்லைநிலத்தின் எவ்விடத்தும் ஒன்றின் ஒன்று மாறுபடுதலைக் கொண்டு மிகுந்தொலிக்கும்.

**மருத நிலம்**

**9. அணங்க னாரண வாடல் முழவமும்**

**கணங்கொள் வாரணக் கம்பலைச் செல்வமும்**

**மணங்கொள் வார்முர சும்வய லோதையும்**

**இணங்கி யெங்கு மிருக்குமொர் பாலெலாம்.**

தெய்வப் பெண்களை ஒத்தவர்களான அழகில் சிறந்த மகளிர் பொருத்தமாக நடிக்கும் பொழுது அடிக்கப்படுகிற முழவோசையும், கூட்டமான கோழிச் சேவலைக்கொண்டு போர் செய்விப்பார் செய்யும் பேராரவாரமும், மணம் குறித்து முழக்கப்படும் வார்க்கட்டமைந்த முரசு முழக்கமும், வயலிடத்தே உழவர்கள் செய்யும் ஆரவாரமும் எவ்விடத்திலும் பொருந்தி நாட்டின் ஒரு பகுதியாகிய மருதநிலத்திடத்தே இருக்கும்.

(வாரணம்; யானை, சங்கு, கோழி, பன்றி, கடல், மறைப்பு முதலிய பலபொருள்களைத் தரும் ஒரு சொல்.)

**நெய்தல் நிலம்**

10. மரக்கலங்களையுடைய பரதவர் முழக்கும் இனிய இசைக்கருவி முழக்கமும், கடலினிடத்தே விளையாடும் அந்நெய்தல் நிலச்சிறுவர்கள் புலால் நாற்றம்

வீசும் நீரினிடத்தே தாம் அணிந்துள்ள அணிகலன்களை எறிந்து விளையாடும் ஆரவாரமும், மிக வெண்ணிறமான மணலையுடைய நீண்ட பெரிய கடற்கரைச் சோலைகளிலே வந்து உலாவுகின்ற கடல் அலைகளின் ஒலியும் அந்நாட்டின் ஒரு பகுதியான நெய்தல் நிலத்தின் இடம் எங்கும் மிகுந்திருக்கும்.

**குறிஞ்சி நிலம்**

**11.** செங்காந்தள் மலர்கள் மங்கையர்களுடைய கைகளைப்போல மலர்ந்தன; அழகிய சுனையிடத்தனவாகிய நீல மலர்களும் மை பரவினாற் போல மலர்ந்தன; வேங்கை மரங்களும் சிறப்பைத் தரும் நன்னாளிலே தம்மெய் நிரம்ப மலர்ந்தன; இம்மலர்கள் ஒழுகவிட்ட தேனாகிய நெய் பெரிய குன்றுகளிலெல்லாம் பரவின.

**முல்லை நிலம்**

**12. கொன்றை யுங்குருந் துங்குலைக் கோடலும்**

**முன்றி லேறிய முல்லையம் பந்தரும்**

**நின்று தேன்நிரந் தூதவி ரிந்தரோ**

**மன்றெ லா மண நாறும ருங்கினே.**

முல்லைநிலப் பக்கத்தில் கொன்றை மரங்களிலும், குருந்த மரங்களிலும், மலர்க்கொத்துக்களையுடைய காந்தள் செடிகளிலும், வீட்டின் முன்றிலில் அமைத்த பந்தர்களில் படர்ந்த முல்லைக்கொடிகளிடத்தும் வண்டுகள் பரவி மொய்த்திருந்து ஊத, அப்பூக்கள் மலர்ந்து வெளியிடங்களிலெல்லாம் நல்ல மணத்தை வீசும்.

**மருதம்**

**13.** அந்நாட்டின் ஒரு பக்கமாகிய மருதநிலத்து இடம் எங்கும் மணம் வெளிப்படும்படியாக மலர்ந்த கருநெய்தல் மலர்களிலும், சேற்றிலே உண்டான நாட்காலத்தே தேன் ஒழுக மலர்ந்த செந்தாமரைப் பூக்களின் கூட்டத்திடத்தும் வண்டுகளின் கூட்டம் மேலே ஏறித் தம் கால்களை ஊன்றுதலால் சுரந்த தேன் ஊற்றெடுத்து வந்து வழிதலைச் செய்யும்

**நெய்தல்**

**14. கோடு டைந்தன தாழையுங் கோழிருள்**

**மோடு டைந்தன மூரிக் குவளையும்**

**தோடு டைந்தன சூகமுங் கற்பகக்**

**காடு டைந்தன போன்றுள கானலே**

சங்கு உடைபட்டாற் போன்று மலர்ந்த தாழைமலர்களும், மிகுந்த இருளின் திரள் உடைந்து சிதறினாற்போன்று மலர்ந்த பரிய கருங்குவளை மலர்களும், இதழ் ஆம்பலும், அவிழ்ந்தனவான மற்றைய நீர்ப்பூக்களும் என்னும் இவற்றால் கடற்கரைச் சோலைகள் விண்ணுலகிலுள்ள கற்பகச்சோலைகள் மலர்ந்தன போன்று விளங்கலாயின.

## குறிஞ்சி

**15.** அந்நாட்டின் குறிஞ்சிநிலத்து இடங்களிலெல்லாம் நீல நிறத்தையுடைய ஆலவட்டத்தின் நிறமுண்டாக விரிக்கும் பீலியினையுடையவாய் உயர்ந்த உச்சியினையுடைய குன்றின்மேல் ஒலிக்கின்ற மிகுதியான மழைப் பெருக்கினையுடைய நீண்ட முகில்கள் முழங்கும்தோறும் ஆடுதலையுடைய அழகிய மயில்கள் கூத்தாடும்.

## முல்லை

**16. நக்க முல்லையு நாகிளங் கொன்றையும்**

**உக்க தாதடர் கொண்டொலி வண்டறா**

**எக்க ரீர்மணற் கிண்டியி ளம்பெடைப்**

**பக்க நோக்கும் பறவையொர் பாலெலாம்.**

முல்லை நிலப்பக்கங்களில் எல்லாம் மலர்ந்த முல்லைப்பூக்களும், மிகப் புதியவாய் மலர்ந்த கொன்றைப்பூக்களும் சொரிந்த பூந்தாதின்கண் மொய்த்து ஒலித்தலையுடைய வண்டுகள் நீங்காமைக்குக் காரணமான அலைகளால் இடப்பட்ட குளிர்ந்த மணலைக்கிளறி, ஆண்டுள்ள இரையை ஊட்டக்கருதி நீர்ப்பறவையின் சேவல்கள் தமது அண்மையிலுள்ள இளமை மிக்க தமது பெண் பறவையைப் பார்க்கும்.

## மருதம்

**17.** அந்நாட்டுத் தடாகங்கள் வண்டும் தேனும் நீங்கப் பெறாத செந்தாமரை மலர்த்தொகுதியின் இடையே பறவைகள் நீங்காவாய்ப் பொருந்தியிருந்து துள்ளுகின்ற இறாமீனை எளிதாக வாயில் பற்றிக்கொண்டு, எதிர்பாராதவாறு இரைகிடைத்தலால் தம் மகிழ்ச்சியானது இரட்டிப்பாக இடைவிடாது ஒலிக்கப் பெறுதலையுடையன.

## நெய்தல்

**18.** வெள்ளிய முளையினையுடைய பசிய தாமரையின் மெல்லிய இலைச் சுருளை முள்பொருந்திய நாளங்களுடன் வெறுத்துக்கொண்டு நீர்க்குள் மூழ்கியெழுந்து அன்னப் பறவைகளின் குஞ்சுகள் நீரைக் கலக்குதலால் பெரியகழியிடமெல்லாம் தேன் தோன்றலாயின.

## குறிஞ்சி

**19. காந்த ளங்குலை யாற்களி வண்டினம்**

**கூந்தி ளம்பிடி வீசக்கு ழாங்களோ**

**டேந்து சந்தனச் சார லிருங்கைமா**

**மாந்தி நின்றுறங் கும்வரை மாடெலாம்.**

மலைப்பக்கங்களிலெல்லாம் உயர்ந்த சந்தனமரங்கள் செறிந்த சாரலில் பெரிய கையினையுடைய களிறுகள், தம்மத நீரைப் பருகிக் களிக்கின்ற வண்டுக் கூட்டத்தைக் கூந்தலையுடைய இளம் பிடியானைகள் அழகிய காந்தள் பூங்கொத்தினால் விசிறி ஓட்ட மற்றை யானைக் கூட்டத்தோடு சேர்ந்து தினை முதலியவற்றை உண்டு தூங்கும்.

(ஆண் யானைகள் தினை முதலியவற்றைத் தின்றுவிட்டுத் தம் குழாத்துடன் உறங்குகின்றன; அவற்றின் மதநீரில் வண்டுக் கூட்டங்கள் இடைவிடாது மொய்த்துக் களிற்றின் உறக்கத்தைக் கெடுக்கின்றன; வண்டுக் கூட்டங்கள் ஆண் யானைகளின் உறக்கத்தைக் கெடுத்தல் அவற்றின்பால் அன்புள்ள பிடிகளுக்குப் பொறுக்கவில்லை. ஆகவே அவை காந்தளங் குலையினால் வண்டுக்கூட்டத்தை விரட்டி ஆண் யானை உறங்குதற்கு உதவிபுரிகின்றன. இதனால் அப்பிடிகள் களிற்றினிடத்திற் கொண்டுள்ள காதலும் அன்பும் புலனாம்)

## முல்லை

**20.** அழகிய குளிர்ந்த முல்லை நிலங்களில் மாலைபோல் மலரும் கொன்றையிடத்தே துளித்த குளிர்ந்த தேனையுண்டு அழகு செய்கின்ற இளமையான பசும் புற்களையும் சிறந்த தழைகளையும் கார்காலத்திலே மேயுந்தோறும் பசுத்திரள் ஒன்றோடொன்று விளையாட்டாகப் போர் செய்யும்.

## மருதம்

**21. அள்ளி லைக்குவ ளைத்தடம் மேய்ந்தசைஇக்**

**கள்ள லைத்தக வுட்கரு மேதிபால்**

**உள்ள லைத்தொழு கக்குடைந் துண்டலால்**

**புள்ள லைத்த புனலபு லங்களே.**

செறிந்த இலைகளைக் கொண்ட நீலமலர்களையுடைய நீர்நிலையில் அவற்றை மேய்ந்து அசையிடுதலால் குவளைப்பூவின் தேன்வழியும் கடைவாயையுடைய கரிய எருமையின் உள்ளத்தே அதன் கன்றின் நினைவு தோன்றி அலைத்தலால் அதன் பாலானது நீரிலே ஒழுகவே அன்னப்பறவைகள் நீரில் முழுகி அப்பாலைத் தேர்ந்து உண்பதனால் நீர் நிரம்பிய வயல்கள் அவ்வன்னங்களால் உழக்கப்பட்ட நீரையுடையவாயின.

### நெய்தல்

**22.** நீர்க்கழிகளில் எல்லாம் கெண்டைமீன்களையும் அவற்றின் அழகிய முட்டைகளையும் தின்று செருக்கிச் சென்று நீர்முள்ளி நிறைந்த நீர்த்துறையை அடைந்த முதலைகள் வண்டலையுடைய நீண்ட கடற்கரையோரங்களிலுள்ள பெரிய சுறாமீன்களின் கூட்டத்தைப்பார்த்து அஞ்சாது எதிர்த்து நின்று சினக்கும்.

### குறிஞ்சி

**23.** கணுக்கள் விளங்குகின்ற மூங்கில்களிடத்தே விளைந்த நெல்லும் மண்ணிடத்தே விளையும் நீண்ட கதிர்களையுடைய தினையாகிய வருவாயும் அளவில்லாதனவாய் விளைகின்ற மற்றைப் பொருள்களின் தொகுதியும் பிறர்க்குக் கொடுத்துத் தாம் உண்டபோதும் அந்நாட்டிடத்தே குறைவுபடாது மிகுந்திருந்தன.

### முல்லை

**24.** முற்றிப் பிளவுபட்டனவான காய்களையுடைய பெரிய எள்ளுச்செடிகளும் விளங்குகின்ற கொத்துக்களாகத் தாழ்த்த காய்களையுடைய குளிர்ந்த அவரைக்கொடியும் தம்மைச் சூழும்படி காய்களைக் காய்த்த துவரைச்செடிகளும் வரகும் என்று சொல்லப்பட்ட இவைகள் முல்லை நிலங்களிலே செறிந்து மூடியிருப்பதுபோல் உள்ளன.

### மருதம்

**25. மோடு கொண்டெழு மூரிக் கழைக்கரும்**

**பூடு கொண்ட பொதும்பரொ டுள்விராய்த்**

**தோடு கொண்டபைங் காய்துவள் செந்நெலின்**

**காடு கொண்டுள கண்ணக னாடெலாம்.**

பருமையைக் கொண்டு ஓங்கும் பெரிய கருப்பங்கழிகளை தம்மிடத்திலே கொண்ட சோலைகளுடனே அதனுள்ளே கலந்து தொகுதியுற்ற பசிய கதிரை ஈன்று தலைசாயப்பெற்ற செந்நெற் பயிர்களின் மிகுதியைக் கொண்டு இடமகன்ற மருதநிலப் பகுதி முழுவதும் உள்ளன.

**நெய்தல்**

**26.** வலம்புரிச் சங்கு ஈன்ற முத்துக்களும் தவழ்ந்து செல்லும் சிப்பியில் பிறந்த முத்துக்களும் தென்னையின் அழகிய இனிய பாளையில் ஊறிய கள்ளும் மரக்கலங்களின் மூலமாகப் பிறநாடுகளிலிருந்து வரும் பண்டங்களும் நீண்ட கடலிடத்தே உண்டாகும் பொருள்களும் ஆகிய குளிர்ந்த நெய்தல்நிலம் முற்றும் நிலைபெற்ற வருவாய்களை உடையனவாகும்

**திணைமயக்கம் (மலர்)**

**27.** குறிஞ்சிநிலப் பெண்களது தினைப்புன இடத்திலுள்ள குறிஞ்சி மரத்தின் மலர்கள் நெய்விற்கின்ற முல்லை நிலத்துப் பெண்களின் கூந்தலின் இடத்தில் மணம்வீசும் பேதைமைக் குணத்தையுடைய அழகிய மருதநிலத்துப் பெண்கள் களைபறித்து எறிந்த குவளைமலர்கள் கடற்கரைச் சோலைகளிலுள்ள தொடுக்கப்பட்டு மலர்ந்த மலர்மாலைகளை உடையவர்களான நெய்தல் நிலத்துப் பெண்களினுடைய கூந்தலினிடத்தே விளங்கும்.

**திணைமயக்கம் (ஒலி)**

**28. கலவர்தஞ் சிறுபறை யிசையிற் கைவினைப்**

**புலவர்தேம் பிழிமகிழ் குரவை பொங்குமே**

**குலவுகோற் கோவலர் கொன்றைத் தீங்குழல்**

**உலவுநீ ளசுணமா வுறங்கு மென்பவே.**

மரக்கலமோட்டும் பரதவருடைய சிறுபறையின் ஒலியால் உழுது பயிர் செய்தலாகிய கைத்தொழிலில் தேர்ச்சியையுடைய மருதநிலத்து மக்களது இனிய கள்ளையுண்டதனால் களித்தாடுகின்ற குரவைக் கூத்துச் சிறப்பையடையும் வளைந்த கோலையுடைய இடையர்களுடைய முதிர்ந்த கொன்றைக் காயினாலாகிய இனிய குழலினது இசையால் குறிஞ்சிநிலத்தில் உலவுகிற அசுணமா துயில்கொள்ளும்.

# பயிற்சி வினாக்கள்

## குறுவினா

1. சூளாமணி – குறிப்பு வரைக

2. சுரமை நாட்டின் குறிஞ்சி நில வளங்களை விவரி

3. சுரமை நாட்டின் முல்லை நில வளங்களை விவரி

4. சுரமை நாட்டின் மருத நில வளங்களை விவரி

5. சுரமை நாட்டின் நெய்தல் நில வளங்களை விவரி

6. சுரமை நாட்டின் திணைகள் மயங்கிக் கிடக்கும் சிறப்பினை விவரி

## நெடுவினா

1. சுரமை நாட்டின் இயற்கை வளங்கள் குறித்து கட்டுரை வரைக

2. சுரமை நாட்டின் குறிஞ்சி, முல்லை நிலங்களின் சிறப்புகளை விவரிக்க

3. சுரமை நாட்டின் மருதம், நெய்தல் நிலங்களின் வளங்களை விரிவாக எடுத்துரைக்க

4. சுரமை நாட்டின் மக்கள் வாழ்வியல் சிறப்பு குறித்து விவரித்து எழுதுக

# உதயண குமார காவியம்

சீவக சிந்தாமணி, கந்தபுராணம் முதலான பேரிலக்கியங்களுக்குச் சுருக்கம் பாடுகிற மரபு காணப்படுகிறது. இவ்வகையில் கொங்குவேளிரின் **பெருங்கதை**க் காப்பியத்திற்குச் சுருக்க நூலாகப் பாடப்பட்டதே உதயணகுமார காவியம். இது சமண சமயப் பெண்பால் துறவியரில் ஒருவரான **கந்தியர்** என்பவரால் பாடப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதுவர். 369 பாடல்களைக் கொண்டது. பெருங்கதை அமைப்பையே கொண்டு இந்நூலும் **உஞ்சை காண்டம், மகத காண்டம், இலாவாண காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம்** என ஐந்து காண்டங்களுடன் அமைகிறது. கூடுதலாகத் **துறவுக் காண்டம்** ஒன்றும் இதில் இடம் பெறுகின்றது. பெருங்கதையின் முதல் பகுதியும் இறுதிப் பகுதியும் நமக்குக் கிடைக்கவில்லை.

பெருங்கதையில் கிடைக்கப் பெறாத கதைக் குறிப்புகளை ஓரளவு அறிந்து கொள்வதற்கு இந்நூல் துணை செய்கிறது. ஏனைய சிறுகாப்பியங்களுக்கு இருந்த நோக்கம், நெறி இந்நூலுக்கு இல்லை. பெருங்கதைக்குச் சுருக்க நூலாக அமைவதன்றி வேறு சிறப்புகள் இந்நூலுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

உதயண குமார காவியம் இலக்கியச் சுவை இன்றிக் காணப்படுவதாக அறிஞர் கருதுவர். கதைச் சுருக்கத்தைச் சொல்வதால், வருணனைத் திறன் இன்றிக் காணப்படுகிறது எனலாம். காப்பியக் கதை அமைப்பிற்கு ஏற்பத்தான் கவிதை அமையும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதன் ‘விருத்தப்பா’ அமைப்பு சில இடங்களில் இலக்கிய நயமுடன் அமைவது குறிப்பிடத்தக்கது. மதயானையின் கம்பீரமான நடையை இதன் கவிதை நடையில் காண முடிகிறது.

வத்தவ நாட்டரசன் சதானிகனுக்கும் அவன் மனைவி மிருகாவதிக்கும் பிறந்த உதயணனின் கதையைக் கூறுவது இக்காவியம். 6 காண்டங்களில், 367 விருத்தப்பாக்களால் ஆன இந்நூல் கந்தியார் (சமணப் பெண்துறவி) ஒருவரால் இயற்றப்பட்டது. இந்நூலில் உதயணன் நான்கு மனைவியரை மணந்து இறுதியில் துறவு நிலையை மேற்கொண்டதை அறிய முடிகிறது. கதையமைப்பு சிக்கலானதாகவும், இரு கதைத் தலைவர்களைக் கொண்டும் உள்ளது. உதயணகுமார காவியத்தில் கதை நாயகன் நான்கு மனைவிகளைச் சமண சமய நெறிப்படி திருமணம் புரிந்து உலக நிலையாமையை அறிந்து தவ நிலையில் மேற்கொண்டதைப் பற்றி பாடப்பட்டுள்ளது.

துறவு நெறியைக் கூறும் இந்த நூலில் தொடக்கத்தில் சிற்றின்பங்களைப் பற்றி விரிவாக அலசப்பட்டாலும், இறுதியில் துறவு நெறியைப் பற்றியும் சமண சமய

நெறிமுறைகளையும், தவ ஒழுக்கத்தையும் விரிவாகப் பேசுவதை காணலாம். இதன் காலம் கி.பி.15-ஆம் நூற்றாண்டு .

தமிழ் சான்றோர்கள் தமிழ் இலக்கியங்களில் ஐம்பெரும் காப்பியங்கள் என்றும், ஐஞ்சிறு காப்பியங்கள் என்றும் வரையறுத்துள்ளனர். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் அமைந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி போன்றவை ஐம்பெரும் காப்பியங்கள். இவற்றில் ஏதேனும் ஒன்று குறைந்தால் அது சிறுகாப்பியம் எனப்படும். அந்த வரிசையில் நாககுமார காவியம், யசோதார காவியம், நீலகேசி, உதயணகுமார காவியம், சூளாமணி ஆகியவை ஐஞ்சிறு காப்பியங்களாகும். இங்கு உதயணகுமார காவியத்திலிருந்து இலாவாண காண்டம் பகுதி முழுமையும் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## உதயணகுமார காவியம் கதைச்சுருக்கம்

உஞ்சை நகரத்து நதிக்கரையிலிருந்து பத்திராபதியில் உதயணன் தத்தை முதலியவர்களுடன் ஏறிப் புறப்பட்ட பின் நிகழ்ந்தவற்றை அவனிடம் கேட்டறிந்தாள் சாங்கியத்தாய். அவற்றோடு உதயணன் சந்திப்பை முடித்துக் கொண்டு தத்தையைக் காணச் செல்லலாம் என்று எழுந்த அவளை, உதயணன் கேட்ட அந்தக் கேள்வி திகைக்கச் செய்து விட்டது. "ஆமாம்! யூகியும் உங்களோடு உஞ்சையிலிருந்து திரும்பி வந்திருக்க வேண்டுமே? எங்கே அவன்? நலமாகத்தானே இருக்கிறான்?" இந்தக் கேள்வி சாங்கியத் தாயால் விடை கூற முடியாதது அல்ல. ஆனால் இதற்கு அவள் கூற வேண்டிய விடை இன்னும் சில திட்டங்கள் முடிந்த பின் சொல்லக் கூடியதாக இருந்தது. என்ன சொல்லவேண்டும் என்பதைத் தான் யூகி முன்பே கூறியிருந்தானே? அதை இவ்வளவு விரைவாக வெளிப்படுத்த நேருமென்று அவள் எதிர்பார்க்கவில்லை. ஒரு கணம் என்ன கூறுவது என்ற திகைப்பும் சிந்தனையும் அவளுக்கு ஏற்பட்டன. உடனடியாக உதயணனுக்கு அவள் விடை கூறவில்லை. சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்த பின் யூகியைப் பற்றிய வேறு சில செய்திகளை விவரித்துக் கொண்டே பொழுதைக் கழித்தாள். 'யூகி தன்னுடன் வந்தானா? அவன் நலமா? இல்லையா?' என்ற விவரங்கள் எதுவுமே இல்லாமல் சென்றது அவள் பேச்சு. "விரைவிற் சென்று நம் அரசனை அடையுங்கள்" என்று எனக்கும் ஏனையோர்க்கும் கூறிவிட்டுத் தான் பின்னால் வந்து சேர்வதாக யூகி கூறினான், எனச் சாங்கியத் தாய் இறுதியாகச் சொல்லி முடித்தாள். அதைக் கூறியதும் யூகி கூறிய பொய்ச் செய்தியைப் பின்பு கூறலாமென்ற கருத்துடன் வாசவதத்தையைப் பார்க்க அவனிடம் விடைகொண்டு எழுந்தாள்.

தளர்நடைப் பருவம் முதல், உஞ்சை நகரில் உதயணனனோடு பிடியேறி வந்தது முடியத் தத்தை தன் நெஞ்சைத் திறந்து பேசுவதற்கு ஏற்ற ஒரே ஒருத்தியான செவிலித் தாயாக இருந்தவள் சாங்கியத் தாய்தான். அவளைக் கண்டவுடன் அப்படியே தன் மெல்லிய இடை வளைய இறுகத் தழுவிக் கொண்டாள் வாசவதத்தை. திடீரெனச் சந்தித்த சந்திப்பின் இன்ப மிகுதியால் இருவருக்குமே கண்ணில் நீரும் துளித்தது. உஞ்சை நகரிலிருந்து வாசவதத்தை வந்த பிறகு அரண்மனையில் தந்தை தாய் முதலியோர் அடைந்த நிலையை அவள் கேட்கவே, சாங்கியத் தாய் அவற்றைக் கூறினாள். அப்போதுதான் தாய் தந்தையரையும் ஏனைச் சுற்றத்தினரையும் எண்ணிப் புலம்பினாள் வாசவதத்தை. அவளைத் தேற்றி ஆறுதல் கூறிய சாங்கியத் தாய், "திருமணமான மங்கல மகளிர், இவ்வாறு பெற்றோரை எண்ணி வருந்துதல் கூடாது" என்று அவளுக்குக் கூறி அரண்மனைப் பூங்காவிலிருக்கும் மிக உயர்ந்த செய்குன்று ஒன்றிற்கு அவளை அழைத்துச் சென்றாள். அந்தச் செய்குன்றிலிருந்து உஞ்சை நகரத்தைத் திசை சுட்டிக் காட்டித் தத்தையினுடைய மனக் கலக்கம் தீருமாறு மேலும் பல தேற்றுரைகளைக் கூறினாள் சாங்கியத் தாய். தத்தை மனந்தேறிய பின் உருமண்ணுவா, வயந்தகன், எல்லோரும் யூகியோடு கூடிச் செய்திருக்கும் திட்டங்களை அவள் துணுக்குறாதபடி மெல்லக் கூறினாள். எல்லாவற்றையும் கேட்டு முதலில் திகைத்த வாசவதத்தை, இறுதியில் உதயணன் நலங்கருதி யூகியின் திட்டப்படி நடக்க ஒப்புக் கொண்டாள். உறுதிப் பொருளை விளக்கும் நன்னெறி நூல்களை முயன்று கற்று வருந்தித் தவம் செய்வோன் பின்னர் நற்பயன் பெறுவது போல, யூகியின் திட்டத்தால் வருத்தமடைவதற்குரிய பல நிலைகள் நேரிடுமாயினும் பின்னால் நலமே விளையும் என்று தத்தை மனந்தெளிந்தாள். அந்தத் திட்டப்படி தானும் ஒத்துழைப்பதாக ஒப்புக் கொண்டாள் அவள்.

தத்தையின் இசைவு பெற்ற சாங்கியத் தாய் அவளை மீண்டும் விரைவில் சந்திப்பதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டு யூகி தன்னிடம் குறிப்பிட்டிருந்தபடி, அவன் ஒளிந்து வாழும் மறைவிடத்துக்குச் சென்றாள். உதயணனைக் கண்டதையும் அவன் கேட்ட கேள்விகளையும் வாசவதத்தை தங்கள் திட்டத்திற்கு இசைந்ததையும் யூகியிடம் சாங்கியத் தாய் விளக்கமாகக் கூறினாள். அவற்றைக் கேட்ட யூகி, தான் இறந்துவிட்டதாக எழுப்பிய செய்தியைக் குறிப்பாகச் சாங்கியத் தாய் மூலம் உதயணனுக்கு அனுப்பத் தீர்மானித்தான். சித்திரம் வரைவதற்கு ஏற்ற பலகை ஒன்றில் உதயணனுடைய உருவத்தை வரைந்து, அந்த ஓவியத்தை யூகி, வயந்தகன், இடவகன், உருமண்ணுவா என்ற நான்கு நண்பர்களையும் நான்கு கண்களாக உருவகப்படுத்தி, மேற்கண்ணாகிய யூகி அழிந்து போனதற்கு அறிகுறியாக அக்கண்ணை ஒளி மழுங்கிப் போனதாக அமைத்து, உதயணனிடம் அப்படத்தைக் காட்டுமாறு சாங்கியத் தாயிடம்

கொடுத்து அனுப்பினான். படத்தைக் கண்டவுடன் குறிப்பைத் தெரிந்து கொண்டு உதயணன் வினாவினால் செய்தியைச் சொல்லி விடுமாறும் சாங்கியத் தாய்க்குக் கூறினான். அவள் அந்தப் படத்தைப் பெற்றுக் கொண்டு சயந்தி நகர் சென்றாள்.

சாங்கியத்தாய் படத்தோடு நகர அரண்மனையை அடைந்தாள். உதயணனும் வாசவதத்தையும் ஒருங்கே அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த நேரத்தில் படத்தை உதயணனிடம் அளித்துக் காணும்படி வேண்டிக்கொண்டாள். ஓவியக்கலை நுட்பங்களை நன்கு உணர்ந்தவனாகிய உதயணன் படத்தை எழுதியவன் செய்திருக்கும் உருவகங்களையும் மேற்கண் ஒளி மழுங்கி இருந்த குறிப்பால் தோன்றும் செய்திகளையும் புரிந்து கொண்டான். யூகிக்கு ஏதோ துயரப்பொறை அவன் உள்ளத்தை அழுத்தியது! ஒன்றும் புரியாமல் கையில் அந்த ஓவியத்துடன் அப்படியே மலைத்துப் போய் உட்கார்ந்து விட்டான் உதயணன். அப்போது யூகியின் ஓவியக் குறிப்பை உதயணன் ஓரளவு அறிந்து கொண்டிருக்கிறான் என்ற செய்தி எதிரே அமர்ந்திருந்த சாங்கியத் தாய்க்குத் தெரிந்தது. உடனே அவள், "யூகி உஞ்சையிலிருந்து வரும் வழியில், அவல் விக்கி இறந்து போனான்" என்று கூறிவிட்டாள். அதைக் கேட்ட அக்கணத்தில் இயக்கும் பொறி இழந்த எந்திரப் பாவை போலச் சோர்ந்து கீழே வீழ்ந்தான் உதயணன். வாசவதத்தையும் அச்செய்தி கேட்டுத் துடிதுடித்தாள். முதல் நாள் எல்லாத் திட்டங்களையும் கேட்டிருந்தும் இப்போது பெண்மைக்குரிய பேதைமையால் இப் போலிச் செய்தியை உண்மையென நம்பி அவள் அழுவதைக் கண்ட சாங்கியத் தாய் கள்ளமற்ற அவள் உள்ள நிலையை விளங்கிக் கொண்டாள். நண்பர்கள் ஓடோடி வந்து உதயணன் மயக்கத்தைத் தீர்த்தனர். மயக்கம் தெளிந்த உதயணன், யூகி தனக்குச் செய்த பேருதவிகளைச் சொல்லிப் புலம்பினான். இளமையில் தானும் யூகியும் பழகிய உழுவலன்பு முறையைக் கூறிக் கதறினான். உருமண்ணுவா மெல்ல உதயணனை நெருங்கி ஆறுதல் கூறி அவனைத் தேற்றத் தொடங்கினான்.

யூகி இறந்தான் என்ற செய்தி அறிந்த பின்னர், உருமண்ணுவா எவ்வளவோ தேறுதல் கூறியும் உதயணன் ஆறாமல் எப்போதும் யூகியின் நினைவாகவே புலம்பிக் கொண்டிருந்தான். நாள்தோறும் தேய்பிறையைப் போலத் துயரால் வாடிவரும் உதயணனை, எவ்வாறு துன்பத்தை மறக்கச் செய்வது என்று உயிர் நண்பர் ஏதும் புரியாமல் இருந்தனர். அமைச்சரையும் மந்திரச் சுற்றத்தினரையும் கூட்டி அரசனின் அவலந்தீர என்ன செய்வது எனச் சிந்தித்தனர். உதயணன், யூகி இறந்த துன்பத்தைப் பொறுக்க முடியாமல் அரை உடலாக இளைத்துப் போய்விட்டான்.

கடைசியில் நண்பர் யாவரும் சேர்ந்து அவனுடைய துயர் தீர்க்கும் அந்தப் பொறுப்பும் உருமண்ணுவாவினாலேயே நிறைவேற்றப்பட வேண்டுமென்று அவனை

வேண்டிக் கொண்டனர். உருமண்ணுவாவும் ஒப்புக் கொண்டனன். பலவகை இன்ப நுகர்ச்சிகள், பகை மன்னர்களோடு போர் புரிந்து வென்று அவர்கள் முடி வணங்கச் செய்தல், சிற்றரசர்களைத் திறை இடச் செய்தல், காடு செய்து விலங்குகளை வேட்டையாடுதல், இத்தகைய நிகழ்ச்சிகளில் சில திங்கள் இடைவிடாமல் உதயணனை ஈடுபடுத்தி யூகி இறந்த துயரை ஒருவாறு அவன் மறக்கும்படி செய்து வந்தான் உருமண்ணுவா. சில முறை வாசவதத்தையோடு உதயணனையும் பக்கத்திலுள்ள மலைச்சாரல் ஒன்றில் பொழில் விளையாட்டுக்கு அழைத்துச் சென்றும் வேறு பல நுகர்ச்சிகளில் ஈடுபாடு கொள்ளச் செய்தும் துயர் மறக்கச் செய்துவிட்டான். இதன் பின்னர் உருமண்ணுவா, உதயணனுக்கு யூகியைப் பற்றிய நம்பிக்கை ஒன்றையும் உண்டாக்கிவிட வேண்டுமென்று கருதித் தோழர்களோடு கலந்து சிந்தித்துப் பின்வரும் முடிவுக்கு வந்தான். உதயணனையும் ஏனையோரையும் இலாவாண மலைச்சாரலில் உண்டாட்டு விழாவிற்காக அழைத்துச் சென்று, அங்குள்ள முக்கால நிகழ்ச்சிகளையும் அறிந்து சொல்லவல்ல முனிவரொருவர் மூலம் அவனுடைய வாழ்வில் இதுவரை நடந்தவற்றையும், இனி நடக்கப் போவனவற்றையும் அவனுக்குக் கூறச் செய்து, இடையே யூகி எப்படியும் உயிர்பெற்று வருவான் என்பதைப் போன்ற ஒருவகை நம்பிக்கையையும் அம் முனிவர் வாயிலாகவே அவனுக்கு ஏற்படுத்தி விட வேண்டும் என்பது தான் உருமண்ணுவாவின் அந்த முடிவு. அதற்கு மற்றவர்களும் இசைவு தெரிவித்தனர். தோழர்கள் சம்மதம் பெற்ற உருமண்ணுவா, உதயணனை அணுகி இதனை உரைத்தான். உதயணன் முதலில் "அப்படி முக்காலமும் அறிந்து கூறும் முனிவர்களும் இருக்கிறார்களா?" என்று சந்தேகப்பட்டு வினாவினான். 'அவனுக்கு நம்பிக்கை ஏற்படும்படியாக அந்த வினாவுக்கு விடை கூறவேண்டும்' என்று நினைத்த உருமண்ணுவா, "நீயும் உன் தாயும் விபுலமலைச் சாரலில் சேரக முனிவரிடம் வாழ்ந்து வந்ததையும் பின் உன் மாமனுக்குரிய ஆயர்குலத்து ஆட்சி பெற்று இருந்ததையும் முதலில் அறிய முடியாதபடி உன் தந்தை சதானிகன் துன்புற்றார். கோசாம்பியிலிருந்து சதானிக மன்னர் இப்படி ஒரு முனிவனை அடைந்து, வனத்தில் அவனிடம் கேட்டுத்தான் முக்கால நிகழ்ச்சிகளையும் அறிந்து கொண்டார். அதுவும் அல்லாமல், யூகி இறந்ததாக எழுந்த செய்தி ஒருவேளை பொய்யாகவும் இருக்கலாம். அதனால் எதற்கும் இலாவாண மலைச்சாரலில் உண்டாட்டு விழாவிற்காகத் தங்கி அப்படியே அந்த முனிவரையும் பார்த்து வரலாம்" என்று கூறினான். உருமண்ணுவா தக்க முறையில் கூறிய இந்த விடை உதயணன் உண்டாட்டு விழாவிற்கு உடன்படச் செய்தது.

இலாவாண மலைச்சாரலில் உண்டாட்டு விழா நடைபெறப் போவதை நகரமெங்கும் அறிவிக்கச் செய்தனர். உண்டாட்டு விழாவிற்கு உதயணன் உடன்பட்டால், யூகியின் இரண்டாவது சூழ்ச்சியாகிய வாசவதத்தையை

உதயணனிடமிருந்து பிரிக்கும் செயலும் அந்த விழாவிலேயே எளிதில் முடியுமென்று நண்பர்கள் மகிழ்ந்தனர். விழாவிற்குத் தேவையான நுகர் பொருள்களைச் சேகரித்தார்கள். விழாச் செய்தி அறிந்த நகர மக்கள் களிப்பில் ஆழ்ந்தனர். இயற்கை அழகு இலாவாண நகர மலைச் சாரலுக்கே தனி உரிமை உடையது என்று சொல்லும் படியாக இருக்கும் அதன் நிகரற்ற வனப்பு.

இலாவாணத்தின் சாரலிலே இனிய நீர்ச்சுனைகளும் கலகலவென்ற ஒலி பரப்பிப்பாயும் கான்யாறுகளும் சோவென்ற போரொலியும் கறங்கிவீழும் அருவிகளும் நிறைந்திருக்கும். புகுந்தவர் திரும்ப விரும்பாத பேரெழில் வளம் படைத்தது அது. பலவகை மரங்கள் அடர்ந்து வளர்ந்து காணப் பசுமை கொழிக்கும், நறுமண மிக்க ஒருவகைக் கத்தூரி விளையும் தகர மரம் என்னும் விருட்சங்கள் எங்கும் நாசிக்கு மண விருந்து நல்கும். அந்த மலைச்சாரலில் தக்க முனிவர் வாழும் தாபதப் பள்ளியும் கற்றோர் வாழும் கடவுட் கோட்டங்களும் எங்கும் நிறைய உண்டு.

இத்தகைய பெரு வனப்பு வாய்ந்த இலாவண மலைச் சாரலில் சயந்தி நகரப் பெருமக்கள் கூடிக் குழுமினர். தேரும் வையமும் சிவிகையும் வண்டியும் ஆகிய பலவகை ஊர்திகளில் ஏறி வந்திருந்தனர் அவர்கள். நகர், மக்களை முற்றிலும் இழந்து தனிமையுற்றது என்னும்படியாக அவ்வளவு மக்களும் மகளிரும் மைந்தருமாக மலைச்சாரலுக்கு வந்திருந்தனர் என்றால் அது மிகையாகாது. பாடி வீடுகள் பல அமைக்கப் பெற்றன. மலைச் சாரலில் உள்ள சோலைகள் தோறும் அங்கங்கே பல வெண்ணிறத் துணிகளில் அமைத்த பாடி வீடுகள் முழு நிலவு போலத் தோன்றின.

சுனையிலுள்ள குவளை மலர்களைக் கொய்து மகிழ்ந்தனர் சில மகளிர். தத்தம் கை விரல்களைச் செம்மை நிறத்தால் தோல்வியுறச் செய்வன போல முறுக்கேறிச் சிவந்திருந்த காந்தள் மொட்டுக்களைப் பறித்து அழகு பார்த்தனர் வேறு சில மகளிர். பொன் போன்ற நிறத்துடன் பூத்துக் குலுங்கும் வேங்கை மலர்களைப் பறித்துத் தம் காதல் மகளிர்க்கு விரும்பி அளித்தனர் சில ஆடவர். பின்பு ஆடவரும் மகளிருமாகப் பல்வகை விளையாட்டுக்களை ஆடினர். ஊசலாடுவோரும் பூக்களிற் செய்த பந்தை அடித்து விளையாடுவோருமாகப் பலர் பல விளையாடல்களை மேற்கொண்டனர். மயிலும் கிளியும் குயிலும் பயிலும் சோலைகளில் தழை கொடிகளால் கயிறிட்டு ஊஞ்சலாடிய காட்சி எழில் மிகுந்து விளங்கியது. வளம் பொருந்திய மலையில் வாழும் வளம் பொருந்திய மக்கள் இன்னும் எண்ணற்ற இன்பங்களை நுகர்ந்தனர். வேனிற் காலத்தில் பொழில்களில் வாழும் வாழ்க்கையின் அருமையைப் 'பொழில்வதி வேனில் பேரெழில் வாழ்க்கை' என்று புகழ்ந்து கூறியுள்ளனர். அத்தகைய பேரெழில் வாழ்க்கையாகத்தான் இவர்களுடைய வாழ்வு அமைந்தது.

மக்கள் மலைச் சாரலில் இவ்வாறிருக்க உதயணன் அவன் நண்பர், வாசவதத்தை முதலியோர் பரிவாரங்கள் புடைசூழ மிக்க ஆரவாரத்துடன் மலைச் சாரலிலுள்ள ஒரு பெரிய வனத்தில் வந்து தங்கினர். அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு எதிரே ஒரு தவப்பள்ளி இருந்தது. அதில் பேராற்றல் மிக்க சிறந்த முனிவரொருவர் வாழ்ந்து வந்தார். உதயணன் அந்த முனிவரைக் கண்டு தான் குறிகேட்க விரும்புவதாகத் தக்கவர்கள் மூலம் அவருக்குக் கூறி அனுப்பினான். முனிவர் மகிழ்ந்து குறி கூற உடன்பட்டவுடன் உதயணன் அங்கே சென்றான். அந்த முனிவரின் தவப்பள்ளிக்குச் செல்லும் வாயிலில் மணல் முற்றத்தின் மேல் அழகாகத் தழைத்து வளர்ந்திருந்த அசோக மரம் ஒன்று விளங்கியது. அந்த அசோக மரத்தின் நிழலில் அவனை எதிர் கொண்டு இருக்கச் செய்தார் முனிவர். சோகம் நிறைந்த உதயணன் அசோக மரத்தின் கீழே அமர்ந்திருந்தான்.

அப்போது உதயணன் கையில் வைத்துக் கொண்டிருந்த வெள்ளிய இதழ்களையுடைய நறுமண மலர் ஒன்று கையிலிருந்து நழுவிக் காலடியில் வீழ்ந்தது. அவன் பசுமையான மரத்தின் அடியில் இருப்பதையும் மலர் வீழ்வதையும் உற்று நோக்கித் தமக்குள் ஏதோ முடிவு செய்தவர் போலக் காணப்பட்டார் முனிவர். முனிவர் என்ன கூறப் போகிறார் என்று எதிர்பார்த்து அமைதியாக உட்கார்ந்திருந்தான் உதயணன். யூகியைப் பறி அவர் கூறும் செய்தி நலம் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்பதே அவனுடைய மனத்தினுள் இருந்த ஒரே எண்ணமாகும். அவன் மனக் கருத்தையும் முகக் குறிப்பையும் பிறவற்றையும் ஊடுருவித் தெரிந்து கொண்ட பின் முனிவர் அவனிடம் கூறத் தொடங்கினார்.

நீ இப்பொழுது பசுமரம் ஒன்றை அடைந்து அதன் அடியில் வீற்றிருக்கிறாய். ஆகையால் உன்னோடு உயிர் நட்புப் பூண்ட ஒருவன் கருதுவது போல் இறந்துவிடவில்லை. உண்மையில் அவன் உயிரோடு இருக்கிறான். ஆனாலும் வேறோர் துயர் இப்போது உனக்கு நேர இருக்கிறது. உன் கையிலிருந்த வெண்மலர் நழுவிக் கீழே விழுந்ததால் உனக்கு அளவற்ற இன்பமளித்து வரும் ஒரு பொருள் உன்னிடமிருந்து விலகி மறைந்துவிடும். மலர் உன் காலடியிலேயே வீழ்ந்திருத்தலினால் அதை நீ எடுத்துக் கொள்ளவும் முடியும். அது போல இழந்த அந்தப் பொருள்களையும் பின்பு நீ விரைவில் அடைந்து விடலாம். நின் ஆட்சிக்குரிய தலைநகரையடைந்து பேரரசனாக வாழும் ஆட்சிப்பேறு உன்னை நோக்கி விரைவில் வந்து சேரும்" என்று அந்த முனிவர் உதயணனுக்கு விவரமாகச் சொன்னார். சாரணர் தரும உபதேசத்தையும் அவனுக்கு உள்ள வாழ்நாள் அளவையும் அதற்குள் அவனடையக் கூடிய பேறுகளையும் மேலும் அந்த முனிவர் அவனுக்குக் கூறினார். அவற்றை எல்லாம் கேட்ட உதயணன் யூகியை அப்போதே உயிருடன் காண முடிந்தது

போல மகிழ்ந்தான். முனிவரைப் பாராடிக் கொண்டாடி அவருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்தான். யூகியைப் பற்றியும் ஏனையச் செய்திகளைப் பற்றியும் தனக்கிருந்த மனக் கவலையின் சுமை, முனிவர் கூற்றுக்குப் பிறகு கழிந்து போனது போன்ற உணர்வு அப்போது அவனுக்கு ஏற்பட்டது. அவன் ஓரளவு நிம்மதியடைந்தான். பழைய கவலைகள் நீங்கின. கவலை நீங்கவே முழு மகிழ்ச்சியுடன் உண்டாட்டு விழாவில் கலந்து கொண்டு அதைச் சிறப்புற நிகழ்த்தலாயினான். நண்பரும் துயர் நீங்கி உவகை பெற்றனர். இலாவாண மலைச் சாரலில் பொழுது இன்பமாகக் கழிந்து கொண்டிருந்தது.

மலைச்சாரலில் அங்கங்கே இருந்த சுனைகளில் நீராடியும் சுவையுணவுண்டும் பூப் பல கொய்தும் பொழுதைக் கழித்தனர். மூங்கில் வெடித்ததனால் வீழ்ந்த முத்துக்களை பதித்துச் சிற்றில் இழைத்து விளையாடினர் சிறுமகளிர். குரவம் பூவைக் கொய்து, பாவை விளையாட்டும் விளையாடினர். அம்மானைப் பாடலும் வள்ளைப் பாடலும் பாடிச் சிலர் ஆடிப் பலர் கண்டுங் கேட்டும் மகிழ்ந்தனர். காதலர் இருதலைப் புள்ளின் ஓருயிர்போல இணைபிரியாத உண்டாட்டு அயர்ந்து உவந்தனர். இவ்வாறு உண்டாட்டு விழா நிகழ்ந்து வரும் நாள்களில் ஒருநாள் மலைச்சாரல் வழியாகத் தன் போக்கில் உலவச் சென்ற உதயணன் மிக்க அழகான இயற்கைச் சூழ்நிலையில் அமைந்திருந்த ஒரு தவப்பள்ளியை அடைந்தான். அவ்வாறு உலாவிய வண்ணம் சென்று கொண்டிருந்த அவனோடு இடையிலே தத்தை, காஞ்சனமாலை, வயந்தகன் முதலியோரும் வந்து சேர்ந்து கொண்டனர். மிக்க எழிலோடு கூடிய பல சோலைகளை அந்த ஆசிரமத்தைச் சுற்றிக் கண்ட வாசவதத்தையும் காஞ்சனையும் உதயணனிடம் கூறிவிட்டுச் சோலைகளின் வளங்காணச் சென்று விட்டனர். உதயணன் வயந்தகனுடனே அங்கிருந்த பெரிய அசோக மரமொன்றின் நிழலில் அமர்ந்தான். உடன் வந்த இரண்டோர் படை வீரர்களும் தனியே அகன்று போயிருந்தனர். மலைச் சாரலின் அழகைக் கண்டு மகிழ்வதற்கு வாய்த்த அந்த இனிய சூழ்நிலையில் அங்கே தனியாக உதயணன் அமர்ந்திருந்தான். சோகங்கள் நீங்கப் பெற்றவன் அப்போது அசோக மரத்தடியிலே அமர்ந்தது மிகவும் பொருத்தமாக இருந்தது.

இதுவே உதயணன் கதையாகும். இதில் இலாவாண காண்டம் மட்டும் பாடப்பகுதியாக அமைந்துள்ளது. அதனை விரிவாகக் காணலாம்.

## இலாவாண காண்டம்

**உஞ்சைநகர் விட்டகன் றுதயணகு மாரனும்**
**தஞ்சமாய்ச் சயந்தியிற் றளர்வின்றிப் புகுந்தபின்**
**என்செய்தன னென்றிடி னியம்புதும் மறியவே**
**கொஞ்சுபைங் கிளிமொழிதன் கூடலை விரும்பினான். (1)**

இனி உதயணகுமரன் உஞ்சை நகரத்தை விட்டு இவ்வாறு சயந்தியைப் புகலிடமாய்க் கொண்டு அதன்கண் மனந்தளராமல் புக்கபின்னர் யாது செய்தனன்? என்று வினவுதிராயின் நுமக்கு அறியக் கூறுவேம் கேண்மின்! சயந்தி நகரத்தே அவ்வுதயணன் திருமணம் புரிந்து கொண்டு கொஞ்சிப் பேசுகின்ற கிளிபோலும் மொழியினையுடைய அவ்வாசவதத்தையோடு கூடி மகிழ்தலைப் பெரிதும் விரும்பினான்.

<u>**உதயணன் வாசவதத்தையை மணம் புணர்தல்**</u>

**இலங்கிழைநன் மாதரை யினிமைவேள்வித் தன்மையால்**
**நலங்கொளப்பு ணர்ந்தனன் நாகநற் புணர்ச்சிபோல்**
**புலங்களின்மி குத்தபோகம் பொற்புடன் னுகர்ந்தனன்**
**அலங்கலணி வேலினா னன்புமிகக் கூறினான் (2)**

மலர் சூடிய வேல்படை ஏந்தியவனும் வாசவதத்தையின்பால் மாபெருங் காதல் மிக்கவனுமாகிய உதயணகுமரன் விளங்கும் அணிகலன்களையுடைய பேரழகியாகிய வாசவதத்தையைக் காண்போர்க்கு இனிமை தருகின்ற திருமண வேள்வி முறைமையாலே நன்மை மிக மணந்தனன். பின்னர் ஐம்புல இன்பங்களும் ஒருங்கே மிக்க காமவின்பத்தை நாக நாட்டினர் புணர்ந்து இன்புறுமாறு போலே புணர்ந்து பொலிவுண்டாக நுகர்ந்தனன்

ஐந்துமலரம்புகளாலே வெற்றியில் மிகுகின்ற காமவேள் எய்கின்ற அம்மலர்க் கணைகள் தன்மேல் பாய்ந்து ஊடுருவி நிற்ப அவற்றிற்கு ஆற்றாதவனாய் அளவு கடந்து மிக்குநின்ற காமக் கடலுக்கு எல்லை காணாதவனாய் அக்கடலின்கண் முழுகுதலாலே பாம்பின் படத்தினும் அழகுமிகுகின்ற அல்குலையுடைய வாசவதத்தையின் தளராத முலைகளையே அக்காமக்கடல் நீந்தும் தெப்பமாகக் கொண்டு மயக்கமிக்க களிற்றினையுடைய உதயணகுமரன் அக்காமக் கடலை இடையறாது நீந்தி நின்றான் (3)

<u>**உதயணன் கழிபெருங்காமத் தழுந்திக் கடமையை நீத்தல்**</u>

**இழந்ததன் னிலத்தையும் மெளிமையுந் நினைத்திலன்**
**கழிந்தறமு மெய்ம்மறந்து கங்குலும் பகல் விடான்**
**அழிந்தியன்பிற் புல்லியே யரிவையுடை நன்னலம்**
**விழுந்தவண் மயக்கத்தில் வேந்தனினிச் செல்கின்றான். (4)**

இவ்வாறு காமக் கடலில் விழுந்த வேந்தன் பகை மன்னர் கைப்பற்றினமையாலே தான் இழந்துவிட்ட தன் நாட்டினையும் தனது சிறுமையையும்

நினைத்திலன்; அரசனாகிய தனக்குரிய அறத்தையும் கைவிட்டு இரவும் பகலும் இடையறாது அவ்வாசவதத்தையைப் பிரியாமல் அவ்வரிவையினுடைய பேரின்பத்திலே பெரிதும் அழுந்தி அன்பாலே தழுவி மயக்கத்தில் விழுந்து கிடப்பானாயினன்.

## யூகியின் செயல்

உதயணன் செயல் இங்ஙனமாகிய காலத்தே அவன் உயிரினும் சிறந்தவனும், அழகு மிகும் தனது சூழ்ச்சியில் அவ்வுதயணனுக்கு இனிமையாகிய தான் உஞ்சைக்கு வந்தது குறைவின்றி உதயணனைச் சிறைவீடு செய்து பக்கத்தார் பாராட்டிப் புகழ்தற்குக் காரணமாக வத்தவ நாட்டரசனாகிய அவ்வுதயணகுமரன் வாசவ தத்தையாகிய அழகிய நங்கையை இளமையுடைய பிடியானை மிசை ஏற்றிக் கொண்டு போகும்படி செய்தவனும் ஆகிய அந்த யூகி என்னும் அமைச்சன்.(5)

**மிஞ்சிநெஞ்சி லன்புடன் மீண்டுவர வெண்ணினன்**
**உஞ்சைநகர்க் கரசன்கேட் டுள்ளகத் தழுங்கினன்**
**விஞ்சுபடை மேலெழாமை விரகுட னறிந்தந்த**
**உஞ்சையெல்லை விட்டுவந்து யூகிபுட்ப கஞ்சென்றான். (6)**

உதயணன் பிரிந்தமையாலே அவன்பால் அன்பு மிகுந்த நெஞ்சத்தோடு யூகிதானும் மீண்டும் வத்தவ நாட்டிற்கு வர நினைத்தான். அச்செவ்வியில் பிரச்சோதனன் யூகியின் செயலிது என்று ஒற்றர் கூறக்கேட்டு மனம் புழுங்கினன்; யூகி அவன் கருத்தறிந்து அம்மன்னவனுடைய மிக்க படைகள் தன்மேல் போர்க்கு எழுமுன்பே உபாயமாக அந்த உஞ்சை நகரத்தின் எல்லையைக் கடந்து வந்து வத்தவநாட்டுப் புட்பக நகரத்தை அடைந்தான்

## யூகி இடபகன்பால் உதயணனைப் பற்றி வினாதலும் அவன் விடையும்

ஆண்டுப் புட்பக நகரத்திருந்த இடபகனுக்குத் தான் உஞ்சையிற் செய்தனவெல்லாம் இனிதே அவனைத் தனியிடத்து வைத்துக் கூறி அறிவித்த பின்னர், யூகி இடபகனை நோக்கி பொன்முடியணிந்த நம்மன்னவன் உதயணன் இப்பொழுது செய்வது யாதென்று வினவ அவ்விடபகன் “நண்பனே! நம்பெருமான் உஞ்சையினின்றும் பிடியேறி ஊர்க்கு வரும்பொழுது மிக்க நிலத்தைக் கடந்து வந்தபின்னர் அப்பிடியானையைப் பற்றிய நச்சு நோய் அது நிலத்தில் அடிவைக்கப் பொறாமல் அதனை நலிதலாலே அப்பிடியானை நிலத்திலே வீழ்ந்திறந்தது” என்றான்.(7)

பின்னும் அக்காட்டினில் வேடர்கள் குழுமிவந்து உதயணனை வளைத்துக் கொண்டதனையும் ஒப்பற்ற வயந்தகன் காட்டினின்றும் தன் நகரமாகிய புட்பகத்திற்கு வந்து உடனே சென்றதனையும் உதயணன் அவர்களை வென்றதனையும், பின்னர் வெண்கொடி செறிந்த சயந்தி நகரத்தே உதயணன் முதலியோர் புகுந்ததனையும், பின்னர்க் குவிந்த முலைகளையும் மலர்மாலைகளையுமுடைய வாசவதத்தைபாற் காதல் மிகுந்த அவளுடன் திருமணம் புணர்ந்த செய்தியினையும் கூறினன்(8).

**இழந்தபூமி யெண்ணில னினியபோகத் தழுந்தலும்**
**குழைந்தவ னுரைப்பயூகி கூரெயிறி லங்கநக்கு**
**விழைந்தவேந்தன் றேவியை விரகினாற் பிரித்திடின்**
**இழந்தமிக் கரசியல்கை கூடுமென வெண்ணினான். (9)**

பகைவர் கைப்பற்றியதனால் தான் இழந்துவிட்ட நாட்டையும் நினைந்திலனாய் இனிய காமநுகர்ச்சியிலே அழுந்திக் கிடத்தலையும் இடபகன் நெஞ்சு நெகிழ்ந்து கூற அதுகேட்ட யூகி கூர்ந்த தன் பற்கள் திகழும்படி நகைத்துத் தன்னுள் நம்மரசன் இவ்வாறு பெரிதும் விரும்பியுள்ள வாசவதத்தையை அவனிடத்தினின்றும் யாதானும் ஒரு உபாயத்தாலே பிரித்துவிடின் அவன் இழந்திருக்கின்ற அரசியல் அவனுக்குக் கைகூடிவருவதாம்; இல்லையேல் இல்லை என்று எண்ணினான்.

## யூகியின் செயல்

**சாங்கிய மகளெனுந் தபசினியைக் கண்டுடன்**
**ஆங்கவ ளறியக்கூறி யானயூகி தன்னுயிர்**
**நீங்கினது போலவு நின்றமைச்சர் மூவரும்**
**பாங்கரசன் ரூபமும் படத்தினில் வரைந்தனன். (10)**

பின்னர் யூகி சாங்கியத்தாய் என்னும் தவமூதாட்டியைக் கண்டு அவளுக்குத் தன் கருத்தெல்லாம் தெரியக் கூறியான பின்னர் யூகி ஒரு படத்தின்கண் தன்னுயிர் நீங்கிவிட்டாற் போன்ற தன் பிணத்துருவினையும் ஏனைய மூன்றமைச்சர் உருவங்களையும் அவ்வமைச்சர் பக்கத்தே உதயணன் உருவத்தையும் வரைந்தனன்.

பின்னர் யூகி அப்படத்திலமைந்த அரசன் உருவத்தில் ஒரு கண்ணைப் பரந்து மேனோக்கும் கண்ணாக அமைத்து இடக்கண்ணை அழித்துப் பண்போடு அப்படத்தினைச் சாங்கியத்தாயின் பாற் கொடுத்து “அன்னாய்! நீ இப்படத்தைக் கொண்டுபோய் அரசனுக்குக் காட்டுக!” என்று வேண்ட அத்தவமுதுமகளும் சென்று இடிபோல் முழங்கும் அரிமானேறு போன்ற உதயணனைக் கண்டனள்.(11)

## <u>சாங்கியத்தாய் அரசனைக் கண்டு வினாதல்</u>

சாங்கியத்தாயின் வரவுகண்ட உதயணமன்னனும் பெரிதும் விரும்பி அவட்கு வழிபாடு செய்து இருக்கை ஈந்து இதன் மிசை எழுந்தருள்க! என்று வேண்ட அவன்பாற் பண்டே உறவுப் பண்புடைய அத் தவமூதாட்டியும் பண்புடைய இனிய வாழ்த்துரைகளும் பிறவும் கூறி அளவளாவிய பின்னர், “முருகனை ஒத்த பேரழகனே! நின்னுடைய சிறையை வீடு செய்த செல்வனாகிய யூகி நின்னோடு தொடர்ந்து ஈங்கு வாராமைக்குக் காரணம் என்னையோ? வேந்தே நீ கூறியருளுக!” என்று வேண்ட,(12)

## <u>உதயணன் செயல்</u>

**அவனுரை யறிந்தில னறிந்தநீ யுரைக்கெனத்**
**தவிசிடை யிருந்தவ டான்படத்தைக் காட்டினள்**
**புவியரசன் கண்டுடன் புலம்பிமிக வாடிப்பின்**
**தவமலி முனிவனைத் தான்வணங்கிக் கேட்டனன். (13)**

அதுகேட்ட உதயணகுமரன் பெரியோய்! யான் யூகியைப் பற்றிய செய்தி ஏதும் அறிந்திலேன் நீ அறிவதுண்டாயிற் கூறுக! என்று வேண்ட, இருக்கையில் வீற்றிருந்த அச்சாங்கிய மகள் தான் கொணர்ந்த படத்தை மன்னனுக்குக் காட்டினளாக! (அப்படத்தின்கண் யூகியின் பிணவுருவத்தைக் கண்டமையால்) மிகவும் அழுது உடல் மெலிவுற்றுப் பின்னும் ஆற்றாதவனாய் முக்காலமுமுணர்ந்த முனிவனொருவன்பாற் சென்று வணங்கி யூகியைப் பற்றி அறிதற்குக் குறிகேட்டான்.

## <u>உதயணன் விரிசிகைக்கு மலர்மாலை சூட்டுதல்</u>

**முடிமுத லரசினோடு முனிவறநின் றுணைவனை**
**வடிவுடன் பெறுவையென்ன வன்மையிற் றேறிமீக்**
**கடிகமழச் சாரலிற் கண்டமாத வன்மகள்**
**துடியிடை விரிசிகையைத் தோன்றன்மாலை சூட்டினான். (14)**

அம்முனிவன் “பெருமகனே! நீ இழந்த கோமுடி சூடுதற்கு முதலாகவுள்ள அரசுரிமையோடு வெறுப்பின்றி நின் துணையாகிய யூகியையும் முன்னை வடிவத்துடன் பெறுவாய் என்று கூற உதயணகுமரன் அம்முனிவன் மொழியை ஐயுறாது தெளிந்து மீள்பவன் மணங்கமழும் அம்மலைச் சாரலில் ஒரு பூம்பொழிலே கண்ட சிறந்த துறவியின் மகளாகிய உடுக்கை போன்ற இடையையுடைய விரிசிகை என்னும் ஒரு பேதைப் பருவத்தாள் வேண்டுகோட்கிணங்கி மலர்மாலை புனைந்துசூட்டி விடுத்தனன்.

## உதயணனன் தழைகொணரப் போதல்

விரிசிகைக்கு மாலை சூட்டிய உதயணகுமரன் மீண்டு வந்து வாசவதத்தையோடு கூடி இலாவாண நகரத்தில் இனிதிருந்தனர். ஒருநாள் அழகு திகழ்கின்ற கற்புநலமிக்க அவ்வாசவதத்தை வேண்டிக் கோடலால் உதயண வேந்தன் அவளுக்கு நல்ல நறுமணம் கமழும் இளந்தளிர் கொணரக் கானகத்திற்குச் சென்றனனாக, அச்செவ்வியறிந்த அணிகலன் திகழுகின்ற யூகிதானும் தான் ஆராய்ந்து துணிந்தபடி உதயணன் கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தையை ஒருசில நாள்கள் அவனிடத்திலிருந்து பிரிவித்தற்கு எண்ணம் கொண்டு இலாவாண நகர் வந்து தோன்றினான்.(15)

## யூகியின் செயல்

**மன்னவன் மனைதனின் மறைந்திருக்கும் மாந்தரைத்**
**துன்னுநன் கிருவரைத் தொக்குட னிருக்கவென்று**
**மன்னன்மனை தன்மனைக்கு மாநிலச் சுருங்கைசெய்**
**தன்னவன் மனைமுழுது மறைந்தவர் தீயிட்டனர்.** **(16)**

உதயணமன்னன் அரண்மனையிலே தன் ஏவலாலே மறைந்திருக்கும் மாந்தருள்ளிருந்த இருவரைத் தன்னுடன் கூடியிருக்க என்று கூறி அவர்களைக் கொண்டு உதயணன் தேவியாகிய வாசவதத்தை உறைகின்ற உவளக மாளிகையினின்றும் ஒரு சுருங்கை வழியுண்டாக்கிய பின் அந்த மாளிகை முழுவதினும் (யூகி கூறியபடி) அங்குக் கரந்திருந்த ஏனையோர் தீக்கொளுவினர்.

## சாங்கியத்தாய் வாசவதத்தையை யூகி இருக்கைக்கு அழைத்து வருதல்

உவளகமாளிகையில் தீக்கொளுவியபொழுதே நீதி மிக்க உதயண மன்னன் மனைவியாகிய வாசவதத்தையை (யூகி அறிவித்தபடி) தவவொழுக்கத்தால் விளங்குகின்ற சாங்கியத்தாய் நிலத்தினூடு திகழ்கின்ற சுரங்க வழியினூடே அழகுற அமைத்துக் கொண்டுவந்து எதிர்பார்க்கின்ற மாலையணிந்த வேற்படையினை உடைய அமைச்சனாகிய யூகி கரந்துறைந்த மனையிற் சேர்த்தாள்.(17)

## யூகி வாசவதத்தையை வரங் கேட்டல்

**என்னுடைநற் றாயேநீ யெனக்கொரு வரங்கொடு**
**நின்னரச னின்னைவிட்டு நீங்குஞ்சில நாளன்றி**
**நன்னில மடந்தைநமக் காகுவது மில்லையே**
**என்னவுடன் பட்டன ளியல்புடன் கரந்தனன்.** **(18)**

வாசவதத்தை வந்து சேர்ந்தவுடன் யூகி அவள் திருமுன்சென்று வணங்கி அடியேனுடைய அன்புமிக்க அன்னையே! நீ அடியேனுக்கு ஒரு வரந்தருதல் வேண்டும். அஃதியாதெனில் நீ என் வேண்டுகோட்கிணங்கி மன்னனைச் சிலநாள் பிரிந்துறைதல் வேண்டும். அது எதற்கு எனில் நின் தலைவன் நின்னைப் பிரிந்து தனித்துறையும் சில நாளில் அல்லது நாம் இழந்த நல்ல நாடு மீண்டும் நம்மை அடையாது என்று வேண்ட அப்பெருமகளும் யூகியின் வேண்டுகோட்கிணங்கினள். ஆதலின் அப்பெருந்தேவியோடு யூகி மறைவானாயினன்

## உதயணன் மீண்டுவந்து வருந்துதல்

உதயணகுமரன் காட்டினின்று மீண்டும் விரைந்து வரும் வழியிலே தீச்சகுனங்களும் நிமித்தங்களும் மிக மிகக் கண்டு கேட்டு இவற்றால் தன்னன்பிற்குரிய வாசவதத்தைக்குத் துன்பமுண்டாகும் என்றுணர்ந்து பெரிதும் வருந்தி அவள் உறைகின்ற உவளக மருங்கே வந்துழி ஆங்கு நின்ற அமைச்சர்கள் தீக்கொளுவினமையைத் தம் பகைவரான வேடர் வந்து தீயிட்டுப் போயினர் என அவர் செயலில் வைத்து ஆங்கு நிகழ்ந்த பிறவற்றையும் கூற அது கேட்ட உதயணன் கவலையுள் அழுந்தி வாய்விட்டுக் கதறியழுது நெஞ்சு கலங்கி நிலத்தின்மேற் சாய்ந்தனன். (19)

அணிகலன் கொண்ட மார்பை யுடைய உதயணகுமரன் அந்த நிலத்திலே கிடந்து புரண்டழுது துயரம் மிகுந்து எழுந்து யான் இனி உயிர்வாழேன், தீயில் மாண்ட வாசவதத்தையோடு நானும் ஒருங்கே இத்தீயில் விழுந்து இறந்தொழிவேன் என்று தீயை நோக்கி விரைந்துழி, விழிப்புடன் நின்ற நெடிய கைகளையுடைய உருமண்ணுவா முதலிய அமைச்சர்கள் உதயணனை விடாது பற்றிக் கொள்ளவே அவர்களிடமிருந்து உருமண்ணுவாவை வேண்டி, நண்பனே! வெந்து கரிந்த அவ்வாசவதத்தையின் உடம்பையேனும் எனக்குக் காட்டுதி! என்றான்.(20)

## உதயணன் வாசவதத்தையின் அணிகலன்கண்டழுதல்

அதுகேட்ட அமைச்சர்கள் பெருமானே! கரிப்பிணத்தைக் காவல் மன்னர் கண்ணாற் காண்டல் அறமன்று என்று மறுப்பப் பின்னர் உதயணன் மனஞ்சுழன்று ஐய! அந்நல்லாள் அணிந்திருந்த தீப்பிழம்பன்ன பொன்னணிகலங்களையேனும் எனக்குக் காட்டுக! என்று வேண்ட அமைச்சர்கள் அங்கு வாசவதத்தை கைவிட்டுப்போன பொன்னணிகலங்களை ஆராய்ந்தெடுத்துக் கொணர்ந்து அரசன் முன்பு வைத்தனர். அவற்றைக் கண்ட உதயணகுமரன் தேவி தீயிடைச் சிக்கி மாண்டது நினைக்குங்கால் வாய்மையே என்று கருதித் தன் காதலையுடைய நல்ல தேவியாகிய அவ்வாசவதத்தையின் பொருட்டுப் பின்னரும் மிகவும் அழுது புலம்பினன் (21)

## <u>உதயணன் மனம் நொந்து அழுது புலம்புதல்</u>

**மண்விளக்க மாகிநீ வரத்தினெய்தி வந்தனை**
**பெண்விளக்க மாகிநீ பெறற்கரியை யென்றுதன்**
**கண்விளக்கு காரிகையைக் காதலித் திரங்கவான்**
**புண்விளக் கிலங்குவேற் பொற்புடைய மன்னவன். (22)**

பகைவர் மார்பிற் புண்திறந்து காட்டும் விளக்கமுடைய வேற்படையினையுடைய அழகுடைய உதயணமன்னன் வாசவதத்தையை நினைத்து நங்காய்! நீ பிரச்சோதன மன்னன் செய்தவத்தினாற் பெற்ற வரமாகப் பிறந்தனையே! இப்பேருலகிற்கு ஒரு விளக்காகவும் நீ பிறந்தனை! அம்மட்டோ? நீ பெண்குலத்தின் பெருவிளக்காகவும் இருந்தனையே! அந்தோ! பெறற்கரிய பெண்ணருங்கலமே! என்று தன் கண்களைத் தன் பேரெழிலாலே விளக்கும் பெண்டகையாளைப் பெரிதும் அவாவி அழுவான்.

பின்னரும் மான்போல்வாளே! என்பான். மயில் போல்வாளே! என்பான். தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் போல்வேளே! என்பான். தேன்போலும் எனக்கினிய சேயிழையே! என்பான். பூங்கொடி போல்வாளே! என்பான். சிறந்த கொங்கையுடைய தெரிவையே நீ! என்பான். வானுலகத்துத் தெய்வ மடந்தை போல்வாளே! யான் செய்த தவத்தின் பயனாக எனக்கு மனைவியாக வந்தனை. அளியேன் இவ்வாறு இடர்ப்படுவது நினக்கு அறமாமோ? என்னைவிட்டு நீ மாண்டதுவும் நினக்குத் தகுமோ? என்றும் அழுவான். (23)

**நங்கைநறுங் கொங்கையே நல்லமைக் குழலியெம்**
**கொங்குலவு கோதைபொன் குழையிலங்கு நன்முகம்**
**சிங்கார முனதுரையும் செல்வி சீதளம்மதி**
**பொங்காரம் முகமெனப் புலம்பினான் புரவலன். (24)**

நங்கையே! நறிய கொங்கையுடையாளே! அழகிய கரிய மை போன்ற கூந்தலையுடையோய்! எமக்கு மணங்கமழும் மலர்மாலை போல்வாளே! பொற்குழை விளங்கும் அழகிய நின் முகமும் மொழியும் காமச்சுவைப் பிழம்புகளல்லவோ? செல்வீ! நினது அழகிய முகந்தான் குளிர்நிலவு பொங்குதல் ஆர்ந்த திங்கள் மண்டிலமன்றோ? என்று பற்பல கூறி உதயணவேந்தன் அழுவான்.

பின்னும் நீ யாழ்வித்தைக்கு உறைவிடமானவள்! நீ கலையுருவமானவள்! நீ நாண் என்னும் பண்பால் இயன்ற பாவை போல்வாள், அழகு திகழ்கின்ற

மாணிக்கமும் நீயே! காரிகையே நீ அளியேன் முன்னர்த் தோன்றி நின்னுடைய முகத்தைக் காட்டி உய்யக் கொள்க! என்று சொல்லி அழுதான்.(25)

**அமைச்சர் தேற்றுதல்**

**துன்பமிக வும்பெருகச் சொற்கரிய தேவிக்கா**
**அன்புமிக் கரற்றுவதை யகல்வது பொருளென**
**நன்புறு மமைச்சர்சொல்ல நரபதியுங் கேட்டனன்**
**இன்புறும் மனைவிகாத லியல்புட னகன்றனன். (26)**

வாசவதத்தையின் பிரிவினாலே துன்பம் பெருகுதலாலே இவ்வாறு புகழ்தற்கரிய அத்தேவியை நினைந்து காதல்மிக்கு இங்ஙனம் அழுவது நின்போலும் மெய்யுணர்வுடையார்க்கு அழகன்று. ஆதலால் அழாதே! என்று நன்மையுடைய அமைச்சர்கள் பலவும் கூறித் தெளிவித்தலாலே அவர் கூறியவாறு உதயண மன்னனும் தேறி ஒருவாறு அழுகை தவிர்ந்து இன்புறுதற்குக் காரணமான அத்தேவியின்பால் நீங்காத காதற் பண்புடையனாயிருந்தனன்.

**யூகி உருமண்ணுவாவிற்கு உரைத்தல்**

உதயணகுமரன் அமைச்சர்களால் தெளிவு எய்தியது தெரிந்த யூகி, உருமண்ணுவாவினைக் கண்டு இனி நீ திட்பமுற நிகழ்த்தவேண்டிய செயல் இஃதாம் என்று கூறி இனி நீ உதயணன்பாற் சென்றுயாம் ஈண்டு ஆராய்ந்து துணிந்த செயலை இச் செவ்வியிற் செய்யக் கடவை என்று பணித்தான் (27)

**அமைச்சர்கள் ஆராய்ந்து துணிந்தபடி வயந்தகன்**
**உதயணனுக்குக் கூறுதல்**

**தன்னிலைக் கமைந்த தத்துவ ஞானத்தான்**
**துன்னருஞ் சூழ்ச்சித் தோழன் வயந்தகன்**
**மன்னற் குறுதி மறித்தினிக் கூறும்**
**பொன்னடி, வணங்கிப் புரவலன் கேட்ப. (28)**

அமைச்சர்கள் தம்முள் ஆராய்ந்து துணிந்தபடி செயலின் கண் ஈடுபட்டு நல்லமைச்சனாகிய தனது பெருந்தகைமைக்கு ஏற்ற மெய்யுணர்ச்சியுடையவனும் பகைவர் அறிதற்கரிய சூழ்ச்சித் திறனுடையானும் உதயணன் தோழனுமாகிய வயந்தகன் உதயணனுக்கு உறுதி பயக்கும் காரியத்தை அம்மன்னன் இனிது கேட்கு மாற்றாலே செவ்வியறிந்து பொன்னடி வணங்கிக் கூறுவான்.

பெருமானே! வெற்றி தரும் வேலேந்திய மகத மன்னன் நாட்டிலே மெய்ந் நூல்களை ஐயந்திரிபறக் கற்று வல்லுநன் ஆனவனும் நன்ஞானம் நற்காட்சி நல்லொழுக்கம் என்னும் மும்மணியும் கைவரப் பெற்றவனும் ஆகிய தத்துவம் தேர்ந்த துறவி ஒருவனுளன். அவன் இறந்த மாந்தரை மீண்டும் உயிருடன் வரவழைத்துக் காட்டும் வித்தையிலும் மிக்கவன் ஆதலால் யாம் இனி அம்மகதநாடு சென்று அவனைக் காண்பாம் என்றனன்(29)

**<u>உதயணகுமரன் நாற்படையும் சூழ மகதநாடு செல்லுதல்</u>**

வயந்தகன் மகதத்தில் இறந்தாரை மீட்டுத் தரும் துறவி ஒருவனுளன் என்று கூறிய மொழி கேட்டு உதயணகுமரன் மனம் பெரிதும் மகிழ்ந்து அவ்வயந்தகனை நோக்கி அங்ஙனமாயின் ஒரு தலையாக அந்நாட்டிற்கு யாம் போகக் கடவேம்!ீ என்றுடன்பட்டு அவ்வமைச்சனுக்கு முகமன் பல கூறி வெற்றியுடைய நால்வேறு படைகளும் தன்னைச் சூழ்ந்துவரவும் வெண்குடை நிழற்றவும் கவரி யிரட்டவும் அமைச்சருடன் கூடி மகதநாடு நோக்கிச் சென்றான். (30)

# பயிற்சி வினாக்கள்

## குறுவினா

1. உதயணன் வாசவதத்தையை மணம் புரிந்த நிகழ்வை விவரி

2. யூகி இடபகனிடம் உதயணன் பற்றித் தெரிந்து கொண்ட செய்திகளைக் கூறுக

3. யூகி -சாங்கியத்தாய் சந்திப்பு பற்றி விவரி

4. யூகி, வாசவதத்தையைச் சந்தித்து வரம் கேட்ட நிகழ்வினை எடுத்துரைக்க

5. உதயணன் வாசவதத்தையின் பிரிவை எண்ணி எங்ஙனம் வருந்தினான்?

## நெடுவினா

1. யூகியின் மதிநுட்பத்தை நும் பாடப்பகுதி கொண்டு விவரிக்க
2. இலாவாணக் காண்டத்தில் உதயணன் பாத்திரப்படைப்பை ஆராய்க
3. யூகி உதயணன் நலன் கருதி எடுத்த முடிவுகளை விளக்கி வரைக
4. வாசவதத்தையின் பிரிவு எண்ணி உதயணன் அழுது புலம்பியவற்றைத் தொகுத்துரைக்க
5. இலாவாணக் காண்டச் செய்திகளை விவரிக்க

# நாககுமார காவியம்

**சைன காவியங்கள்**

சைன சமயக் கொள்கைகளை உலகிற்கு அறிவிக்க எழுந்த பிற காவியங்கள் பெருங்கதை, சீவகசிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, மேருமந்தர புராணம், யசோதர காவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம், சாந்தி புராணம் முதலியனவாம். இவற்றுள் பெருங்கதை, சிந்தாமணி, சூளாமணி என்பவை பெருங்காவியம் என்னும் வரிசையில் வைத்துப் போற்றத்தக்க இயல்புடையவை.

**ஐஞ்சிறு காவியம்**

ஐம்பெருங்காவியம் என்பது போலவே 'ஐஞ்சிறு காவியம்' என்னும் ஒரு வழக்கும் ஒரு சில புலவரால் எடுத்துக்காட்டப்படுகிறது.

**காவிய அமைப்பு**

நாககுமார காவியம் ஐந்து சருக்கங்களையும் 170 பாடல்களையும் கொண்டுள்ளது. சருக்கங்கள் முதல், இரண்டு என எண்ணுப்பெயரால் குறிக்கப் படுகின்றனவேயன்றி அவற்றிற்குத் தனிப் பெயர் தரப்படவில்லை. இது சிந்தாமணி, சூளாமணி, யசோதரகாவியம் முதலிய காவியங்களைப் போல விருத்தயாப்பில் அமைந்துள்ளது.

**கவிக் கூற்றால் கதை நடத்தல்**

கதை நடத்திச் செல்லுகின்ற திறத்திலும் பிற காவிய மரபுகளை இதுவும் பெற்றுள்ளது. இடையிடையே கவிக் கூற்றாகக் கதைப் போக்கினைத் தெரிவித்து மேலே விவரித்துச் செல்வது ஒரு மரபு. இம் மரபினை இக்காவியத்துள்ளும் காணலாகும்.

**காவியப் பெயர்**

இக்காவியத்திற்கு 'நாக பஞ்சமி கதை' என்றும் ஒரு பெயர் உண்டு.

**காவியப் போக்கு**

நாககுமாரன் சரிதம் 26ஆம் பாடலுடன் தொடங்குகிறது. இது முதலாக நான்காம் சருக்கம் வரையில் நாககுமாரனின் வீரதீரச் செயல்களும், காதல் களியாட்டங்களும் சிறப்பிக்கப்படுகின்றன. இறுதிச் சருக்கமான ஐந்தாம் சருக்கம் நாககுமாரனின் முற்பிறப்பு வரலாற்றையும், பஞ்சமி விரத நோன்பையும், அதனால் விளையும் பெரும் பயனையும், துறவு நிலையையும் எடுத்துரைக்கின்றது. நாககுமாரன் அரசகுல மங்கையரையும் பிறரையும் திருமணம் செய்துகொள்கிறான். காவியம்

நெடுகிலும் இவன் செய்து கொண்ட திருமணங்கள் பல பேசப்படுகின்றன. அவனும் வீரச் செயல்களைப் போலவே இன்பம் அனுபவிப்பதிலும் நாகலோகவாசிகள் போலக் காணப்படுகிறான். மன்னர் பலரும் மாவீரர்களும் இவனுக்கு உற்ற துணைவர்களாயிருந்து இவனிட்ட ஏவலை ஏற்றுப் பணி புரிகின்றனர்.

இத்தகு சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த இவன் முனிவர்பால் தருமம் கேட்டு, ஞான நன்னிலை பெறுகிறான். இறுதியில் தன் மகன் தேவ குமாரனுக்கு முடி சூட்டித் துறவு மேற்கொள்கிறான். நாககுமாரன் துறவேயன்றி செயவர்மாவின் துறவு (78), சோமப்பிரபனின் துறவு (107) முதலியனவும் இக்காவியத்துள் இடம் பெறுகின்றன. எனவே, உலக இன்பங்களில் சிக்கிச் சுழன்றாலும் இறுதியில் துறவு பூண்டு இறைநிலை பெறவேண்டும் என்னும் குறிக்கோளையும் இக்காவியம் எடுத்துரைக்கின்றது.

**அருக சமயக் கோட்பாடுகள்**

அருக சமயக் கோட்பாடுகளும் இக் காவியத்தில் அங்கங்கே சுட்டப்பட்டுள்ளன. அருக தேவரைத் துதித்து உளமுருகப் பாடும் பாடல்களும் இக்காவியத்திலுள்ளன.

**பெருங்காவியப் பண்பு**

இங்ஙனம் சிறுகாவியமாகிய இதில் பெருங்காவியக் கூறுகள் பல விரவி வரக் காணலாம். காவிய அமைப்பில் யசோதர காவியத்துடன் இது ஒருசில வகைகளில் ஒத்துக் காணப்படுகிறது. தெய்வ வணக்கம், அவையடக்கம், நூற்பயன், நாடு நகரச் சிறப்பு என்று வருகின்ற முறைமை முதலிற் காணும் ஒருமை நிலை. இவற்றுள் அவையடக்கச் செய்யுள் இரு நூலிலும் ஒரே வகையில் உரைக்கப்பட்டிருக்கின்றது. ஐஞ்சிறு காவியங்களுள் ஒன்றான நாககுமார காவியம் 12ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டுத் தோன்றிய நூல் என்பது வெளிப்படை. பல மொழிகளிலும் போற்றிக் காவியமாக்கப் பெற்ற சிறப்புடையது இந் நாககுமார சரிதம்

**காவிய ஆசிரியர்**

தமிழ் நாககுமார காவியத்தை ஆக்கிய ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. இக்காவியத்திற்கு வேறு நல்ல ஏட்டுச் சுவடிகள் கிடைக்குமானால், ஒருகால் தெரிவதற்கு ஏதுவுண்டு. இதன் ஆசிரியர் சைன சமயத்தவராவர் என்பதும் சைன சமயக் கோட்பாடுகளில் தேர்ந்தவர் என்பதும் இக்காவியத்தால் புலப்படும். கதைகளைத் தொகுத்தும் வகுத்தும் உரைக்கும் கலையில் இவர் கைதேர்ந்தவர் என்பது இக்காவிய நடையினால் நன்கு விளங்கும்.

# நாக குமார காவியம்

## ஐந்தாம் சருக்கம்

<u>நாககுமாரனின் முந்திய பிறப்பு வரலாறு</u>

**நாவலந் தீவு தன்னுள் நன்கயி ராவ தத்தின்**
**மேவுமின் முகில்சூழ் மாட வீதசோ கப்பு ரத்துக்**
**காவிநன் விழிமா தற்குக் காமன்விக் கிரம ராசன்**
**தாவில் சீர் வணிகன் நாமந் தனதத்த னென்ப தாமே.**

இந்நாவலந்தீவில் ஐராவதச் சேத்திரத்து ஆரிய கண்டத்திலே மின் தவழும் மேகக் குழாம் சூழ்ந்த மாடங்களையுடைய வீதசோகபுரத்து அரசன் விக்கிரமன். நீலோற்பலம்போலும் விழிகளையுடையாள் அவனது தேவி. அந்நகரிலே புகழ்மிக்க வணிகன் தனதத்தன் என்பானாகும். (1)

அவன் மனைவி தனதத்தை. இவர்கட்கு மகன் நாகதத்தன். அந் நகரத்து மற்றொரு வணிகன் வசுதத்தன். அழகிய வெற்றிமாலை சூடிய வேற்படையாளன். நன்மணமாலை அணிந்த அழகுடைய நல்லாள் வசுமதி அவன் தேவி. இவர்கட்குப் புத்திரி நாகவசு எனப்படுவாள். (2)

நற்பண்பு மிக்க நாகதத்தன் நற்குணம் மிக்க நாகவசு என்பவளை அன்புமிக்க வேள்வி விதியால் மணம் செய்து அவளுடன் இனிது கூடியிருக்கும் நாளில், நற்றவப்பண்பு மிகுந்த பரமமாமுனிவர் முனிகுப்த ஆசாரியர் என்பார் அந்நகர்ப்புறத்து உய்யான வனத்துள்ளதோர் ஜிநாலய மடத்தில் வந்து தங்கினார். (3)

**நாகதத் தன்சென் றந்த நன்முனி சரண டைந்து**
**வாகுநற் றருமங் கேட்டு அனசன நோன்பு கொண்டான்**
**போகபுண் ணியங்க ளாக்கும் பூரண பஞ்ச மீயில்**
**ஏகனற் றினத்தி னன்று யிடர்பசி யாயிற் றன்றே.**

நாகதத்தன் உடனே சென்று, அம் முனிவரை வணங்கி, வாழ்க்கையில் வெற்றிதரும் நல்லறம் கேட்டு, பஞ்சமி உண்ணா நோன்பு விரதம் மேற்கொண்டான்.போகங்களையும் புண்ணியங்களையும் உண்டாக்க வல்ல பூரணமானதோர் சுக்கிலபட்ச பஞ்சமி திதி விரத நாளன்று நள்ளிரவில் பசிப் பிணித்துன்பம் மேலிட்டது. (4)

பெற்றோர் வேண்டவும் விரதத்தை விடாமல் வடக்கிருந்து நோன்பிருந்து தருமமும் தியானமும் உடையவனாய் தன்னுடலை விட்டு நீங்குகையில், சூரியப்பிரப விமானத்துத் தேவனாகித் தோன்றினான். கயல்மீன் போன்ற கண்ணாளாகிய நாகவசுவும் அவ்வாறே நோன்பிருந்து அத்தேவனுக்கு மனைவியாய்ச் சேர, மகிழ்ந்து இன்பம் நுகரலானார்கள்.(5)

அத்தகைய தேவகதி ஆயுள் ஐந்து பல்லமும் தேகசுகமும் அனுபவித்து இங்கு வந்து அரசன் ஆனாய் நீ. உன்னுடைய தேவியே வந்து இலக்கனையானாள். அதனால் அவள் மீது உனக்கு அன்புண்டாயிற்று என்று அருளினார். அவ்வாறாயின் வாழ்க்கை வெற்றி தரும் அப்பஞ்சமி நோன்பை எங்களுக்கும் கொடுத்தருள்வீராக என இறைஞ்சிக் கேட்டான். (6)

<u>**நாககுமாரன் வேண்ட முனிவர் நாகபஞ்சமி நோன்பினை விளக்குதல்**</u>

**திங்கட் கார்த்திகையி லாதற் சேர்ந்தபங் குனியி லாதற்**
**பொங்கன லாடி யாதற் பூரண பக்கந் தன்னில்**
**அங்குறு பஞ்சமியி னனசன நோன்பு கொண்டு**
**தங்குமாண் டைந்து நோற்றான் றானைந்து திங்க ளன்றே.**

கார்த்திகை மாதம், பங்குனி மாதம், வெப்பமிக்க ஆடி மாதம் ஆகிய இவற்றில் ஏதேனும் ஒரு சுக்கில பக்கத்திலே நான்கு நாள் ஒருபோது உண்டு, ஐந்தாம்நாள் உபவாச விரதத்தை மேற்கொண்டு ஐந்து ஆண்டளவும் மாதாமாதம் வரும் பஞ்சமி திதியில் நோன்பிருத்தல் வேண்டும். (7)

இப்போது சொல்லிய வரிசைப்படி பஞ்சமி நோன்பை இனிது மேற்கொண்டு நோற்று, எல்லையற்ற குணங்களையுடைய அருகன் பூசனையும் அருளறம் பூண்ட முனிகட்குத் தானங்களும் செய்து, அப்பலனால் இந்திர பதவியும் பெற்று, மீண்டும் இங்கு வந்து பேரசர்களாகப் பிறந்து, அருந்தவம் நோற்று, வினைக்கட்டு அறுத்து வீடுபேறும் அடையலாகும்.(8)

<u>**முனிவர் உரைப்படி நாககுமாரன் பஞ்சமி நோன்புகொள்ள அவன் தந்தை ஏவலால் அமைச்சன் நயந்தரன் வந்து அழைத்தல்**</u>

**என்றவ ருரைப்பக் கேட்டு யிறைஞ்சிக் கைக்கொண்டு நோன்பை**
**சென்றுதன் பவனம் புக்கான் சேயிழை யோடு மன்னன்**
**நன்றுடன் செல்லு நாளு ணயந்தரன் வந்தி றைஞ்சி**
**உன்னுடைத் தந்தை யுன்னை யுடன் கொண்டு வருக வென்றான்.**

என்று முனிகுப்த ஆசாரிய முனிவர் கூறியருளக் கேட்ட நாககுமாரன் வணங்கி நன்றெனப் பஞ்சமி நோன்பு விரதம் கைக்கொண்டு, தன் மனைவியோடும் விடைபெற்றுக் கொண்டு மீண்டு தன் அரண்மனை அடைந்து இனிதிருக்கும் நாளில், நயந்தரன் என்னும் அமைச்சன் வந்து குமாரனை வணங்கி, 'குமாரனே! உன்னுடைய தந்தை உன்னை உடனழைத்துக் கொண்டு வாவென என்னை அனுப்பினார். ஆதலால், நீ வருக!' என்றான். (9)

**நாககுமாரன் தன் நகருக்கு மனைவி இலக்கணையோடும் பிறரோடும் திரும்புதல்**

இரத்தினாபரணம் பூண்ட குமாரனும் அமைச்சன் சொல்லைக் கேட்டதும் நாற் படைகளும் புடைசூழ இலக்கணையோடும் இமயமலை போலும் பெரிய பட்டத்து யானைமிசை ஏறித் தன் தோழன்மார்களோடு இமையவர்க்கு இறைவனைப் போலப் பொலிவோடு சென்று தந்தையின் மாளிகையை அடைந்தான்.(10)

**மகன் நாககுமாரனைத் தந்தை தழுவி வரவேற்றல்**

உடனே தந்தையாகிய சயந்தர மன்னன் எதிர்கொண்டு அழைக்கக் குமாரனும் பணிவன்போடு அவர் பாதங்களைப் பணிந்து தொழுதான். தந்தையும் அன்போடு தன் மகனை மார்புறத் தழுவி அழைத்துக்கொண்டு போய் அரண்மனை அடைந்து இனிதிருந்தனர் (11)

**நாககுமாரன் தான் மணந்த மனைவியரையெல்லாம் அழைப்பித்து அவருடன் சேர்ந்திருத்தலும், தந்தை அவனுக்கு முடிசூட்டித் துறவு பூணுதலும்**

**வெற்றியுடன் வேள்விசெய்த வேல்விழியி னாரை**
**யுற்றுடனே மாதரை யொருங்கழைக்க வந்தார்**
**சித்திரநற் பாவையரைச் சேர்ந்துட னிருந்தான்**
**பற்றறச் செயந்தரனும் பார்மகன் வைத்தான். 12.**

சென்றவிடமெல்லாம் சிறப்பாக வேள்வி முறைப்படி திருமணம் செய்து கொண்ட வேல்விழி மங்கையர்களையெல்லாம் ஒருசேர வருக என அழைப்புவிட, அவர்களும் வந்து சேர்ந்தார்கள். சித்திரப் பாவையரைப் போன்ற அவ்வழகிய மாதர்களோடு இனிது இன்பம் துய்த்துக் குமாரன் இருக்கலானான். அவன் தந்தை சயந்தரனும் வாழ்க்கை நிலையாமையை நன்கு உற்று நோக்கி, வைராக்கியமுற்று அகப்பற்று புறப்பற்று அறத் துறந்து நாட்டாட்சியை மகன் வைக்கலானான்.

நாககுமாரனுக்கு மணிமகுடம் சூட்டி, அரச பாரம் ஏற்கச் செய்து போக உபபோகம் துய்த்தலை விட்டுத் துறந்துபோய் யோகப் பயிற்சியால் மனவசன காயச்

செயலை அடக்கி நோற்கும் பிஹிதாசிரவ முனிவருடைய பாதங்களை வணங்கித் தொழுது, பல சிற்றரசர்களுடனே துறவு பூண்டு ஒருமனமுடையவனாகி இறைவனுடைய இயற்கையுருவத்தைப் பற்றறத் துறவை மேற்கொண்டான். (13)

## பிரிதிதேவியும் துறவுபூண்டு நற்பேறு பெறுதல்

**இருவினை கெடுத்தவனு மின்பவுல கடைந்தான்**
**பிரிதிவிநற் றேவியுந்தன் பெருமகனை விட்டு**
**சிரிமதி யெனுந்துறவி சீரடி பணிந்து**
**அரியதவந் தரித்தவளு மச்சுத மடைந்தாள்.**

சயந்தர மன்னனும் அருந்தவத்தால் நல்வினை, தீவினைகளாகிய இரு வினைகளையும் கெடுத்து இன்ப உலகமாகிய தேவருலத்தை அடைந்தான். அவன் மனைவி பிரிதிவிதேவியும் தன் பெருமை சான்ற குமாரனை விட்டுப் பிரிந்து போய், சிரீமதி என்னும் ஆரியாங்கனையை வணங்கித் துறவு மேற்கொண்டு அருந்தவம் புரிந்து அச்சுத கற்பத்தை அடைந்தாள். (14)

## நாககுமாரன் வியாளன் முதலிய தோழர்களுக்குத் தேசங்கள் அளித்தலும், தன் மனைவியருள் இலக்கணையைப் பட்டத்தரசியாக்குதலும்

நாககுமாரனும் பாதி இராச்சியத்தை வியாளனுக்குக் கொடுத்தான். ஏனைய பல தோழர்களுக்கு அவரவர் தகுதிக்கு ஏற்பப் பல தேசங்களை உரிமையாக்கினான். தான் மணந்த மங்கையருள் இலக்கணைக்கு மாதேவிப் பட்டம் கொடுத்துத் தலைமையாக்கினான்.(15)

## இலக்கணையார் வயிற்றில் புதல்வன் பிறத்தல்

இலக்கணையார் வயிற்றில் ஓர் நல்ல ஆண்மகன் பிறந்து நலமுற்றிருந்தான். அழகுமிக்க அவனுடைய திருநாமம் தேவகுமாரன் என்பதாகும். அவன் அரசர்க்குரிய கலை, சிலை, வேல் முதலியவற்றைக் கற்றுப் பயின்றும் யானை, குதிரை, தேர் ஏறி ஊர்ந்தும் களிப்புற்றுத் தினமும் செல்லும் நாளில், (16)

## நாககுமாரன் மன்னர் புடைசூழ அரியாசனத்து வீற்றிருத்தல்

பெருமை சிறந்த நாககுமாரன் மகாமண்டலேசுவரனாய் எழுமதில் சூழ்ந்த நிலத்திலே அழகாக விளங்கும் செயற்கரிய சிம்மாசனத்தின் ஏறி ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற பொன்முடி மன்னர் எண்ணாயிரம்பேர் தன்னைப் புடைசூழ இருமருங்கும் கவரிவீச, இனிது அழகுபெற 108 ஆண்டுகள் செங்கோலோச்சியிருந்தான். (17)

## மகன் தேவகுமாரனுக்கு முடி சூட்டி நாககுமாரன் துறவு பூணவே அவன் தேவி இலக்கணையும் துறவு மேற்கொள்ளல்

**அரசனினி தியல்பினி னமர்ந்திருக்கு மளவிற்**
**பரவுமுகின் மாய்ந்திடப் பார்த்திபன் விரத்தி**
**விரவிமிகு குமரன்மிசை வீறுமுடி சூட்டி**
**அரியதவந் தாங்கவவ னன்புட னெழுந்தான்.**

அரசர்க்கரசனாகிய நாககுமாரன் மகாமண்டலேசுவரனுக்குரிய இலக்கணம் பொருந்த வீற்றிருக்கின்ற காலத்தே ஆகாயத்தே பரவிய முகிற்கணங்கள் விரைவில் தோன்றி மாய்தலைக் கண்டு, வைராக்கிய பாவனையுற்று, இலக்கணை புத்திரனாகிய தேவ குமாரனுக்கு முடிசூட்டி, வீறு பெற ஆட்சிபுரியச் செய்து, செயற்கரிய தவம் புரிய உடன்பட்டு எழுந்தான். (18)

வியாளன் முதலிய தன் ஆயிரம் நண்பர்கள் மற்றும் அரசர்களுடன் நாககுமாரன் சென்று அமலமதி என்னும் கேவலஞானியை வணங்கித் துறவுபூண்டு இயற்கையுருவாகிய நிருவாண உருக்கொண்டு நோற்கலானான். செந்தாமரையாளை ஒத்த நற்காட்சியுடைய இலக்கணை மாதேவி முதலாயினோரும் பதுமஸ்ரீ என்னும் ஆரியாங்கனையை வணங்கித் துறவு மேற்கொண்டார்கள். (19)

## நாககுமாரனும் அவன் தோழர் முதலியோரும் சித்தியும் முத்தியும் பெறுதல்

நறுமணமிக்க குழலினாளாகிய இலக்கணையும் ஏனைய மாதர்களுடன் மிக்க கடுந்தவத்தை உவந்து மேற்கொண்டு செல்லுகின்ற நாளில் குற்றமற்ற சிறப்புடைய நாககுமார முனிவனும் தன்னைப் பற்றிய கொடிய வினைகளை வென்று சித்திபதஞ் சேர்ந்தான். (20)

வியாளன், மாவியாளன் இருவரும் சிறந்த தவத்திற்குரிய தன்மை எனப்படும் உயிரியல்பாகிய தருமத்தியான சுக்கிலத் தியானங்களால் எண்வினைகளை வேரற வெற்றி பெற்றுத் தேவர்கள் ஜெய கோஷஞ்செய்து துதிபாடி, சிறப்பாகிய கேவல பூசனைபுரிய மயக்கம் நீங்கிப் பிறப்பு இல்லாத முத்தி நகரைச் சேர்ந்தனர். (21)

அச்சேத்திய அபேத்தியர்கள் அரிய தவயோகத்தால் இருவினைகளை வென்று, பேரின்பமுடைய சித்தியைச் சேர்ந்தார்கள். ஏனையோர்கள் தாம்தாம் மேற்கொண்ட தவத்தாற்றற் கேற்பசெல்வ மிக்க சௌதர்ம கற்பம் முதலாகச் சேர்ந்து தேவசுகம் அனுபவித்தனர். (22)

**நாகநற் குமரற் காயு நான்காண் டைஞ்நூற் றிரட்டி**
**ஆகுநற் குமார கால மைந்து முப்பத் திரட்டி**
**போகபூ மியாண்ட பொருவி லெண்ணூ றுவாண்டு**
**ஆருநற் றவத்தி லாண்டு வறுபத்து நான்க தாமே.**

நாககுமாரனுக்கு ஆயுள் ஆயிரத்து நூற்று அறுபத்துநான்கு ஆண்டாகும். அவற்றுள் குமாரகாலம் 300 ஆண்டுகளாகும், போக மிக்க இப் பூமி ஆட்சிக் காலம் 800 ஆண்டுகளாகும், நற்றவம்புரிந்த ஆண்டுகள் 64 ஆகும். (23)

**மறுவறு மனைய வர்க்கு மாதவர் தமக்கு மீந்த**
**பெறுமிரு நிலங்க ளெங்கும் பெயர்ந்து நற்கே வலியாய்**
**அறமழை பொழிந்த கால மறுபத்தா றாண்டு சென்றார்**
**உறுதவர் தேவர் நான்கு முற்றெழு குழாத்தி னோடே.**

நாககுமார முனிவர் கேவலஞானம் பெற்று உடன் தவத்தால் மிக்க முனிபுங்கவர்கள், நான்கு வகைத் தேவர் கூட்டங்கள் முதலிய கணங்களோடு குற்றமற்ற இல்லற ஒழுக்கமுடையோர்க்கும் துறவற ஒழுக்கமுடையோர்க்கும் கொடுத்த நற்றானப் பயனால் அடையக் கூடிய போகபூமிகள் எல்லாம் திருவுலாச் சென்று தருமோபபேசம் செய்த காலம் அறுபத்தோராண்டாகும். அதற்பின் அகாதி வினையையும் கெடுத்து, சித்திநகர் அடைந்து பிறவிப் பேற்றை அடைந்து இன்புற்றார். (24)

## <u>நூற் பயன்</u>

**இதன்கதை யெழுதி யோதி யின் புறக் கேட்ப வர்க்கும்**
**புதல்வர்நற் பொருளும் பெற்றுப் புரந்தரன் போல வாழ்ந்து**
**கதமுறு கவலை நீங்கிக் காட்சிநல் லறிவு முன்பாய்ப்**
**பதமிகு மமர யோகம் பாங்குடன் செல்வ ரன்றே.**

இந் நாககுமாரன் கதையைப் படிப்போரும் எழுதுவோரும் எல்லாம் புத்திரப்பேறும் பெருவாழ்வுமுடையோராய்த் தேவேந்திரன்போல வாழ்ந்து செற்றமூட்டும் மனக்கவலை நீங்கி நற்காட்சி, நன்ஞான, நல்லொழுக்கமுடையவராய்ப் பதவி முன்னேற்றமுடைய தேவலோக சுகம் பெற்று இன்புறுவர்.(25)

## <u>உலகிற்கு அறவுரை</u>

**அறமின்றிப் பின்னை யொன்று முயிர்க்கர ணில்லையென்றும்**
**மறமின்றி யுயிர்க் கிடர்செய் மற்றொன்று மில்லை யென்றும்**

**திறமிது வுணர்ந்து தேறித் தீக்கதிப் பிறவிக் கஞ்சி**
**மறமிதை விட்ட றத்தில் வாழுமின் னுலகத் தீரே.**

உலகத்தோர்களே! நீவிர் புலனடக்கும் உபவாச விரதம் நோற்றலாகிய நல்அறவொழுக்கமின்றி நம்முயிர்க்கு இன்பந்தரும் புகலிடம் பிறிதொன்றில்லை என்றும், நம்முயிர்க்குப் பேரிடர் புரிவது பேராசை, தீயொழுக்கம், மறமின்றிப் பிறிதொன்றில்லை என்றும், இத் திறத்தை உய்ந்துணர்ந்து தெளிந்து, கொடிய நாற்கதிப் பிறவிச் சுழலுக்குப் பயந்து, பேராசையால் விளையும் மறத்தை (தீவினையை) விட்டு இல்லற துறவற நெறியைப் பின்பற்றித் திருப்தியோடு வாழுங்கள். (26)

# பயிற்சி வினாக்கள்

## குறுவினா

1. நாககுமார காவியம் – குறிப்பு வரைக

2. நாககுமாரனின் முற்பிறப்பு வரலாற்றை விவரிக்க

3. நாகபஞ்சமி நோன்பு குறித்து முனிவர் கூறியவற்றை எடுத்துரைக்க

4. நாககுமாரனின் தந்தை தன் மகனுக்கு முடி சூட்டித் துறவு பூண்ட நிகழ்வை எடுத்துரைக்க

5. நாககுமாரன் துறவு பூண்ட செய்தியைக் கூறுக

6. நாககுமார காவியம் உலகிற்குக் கூறும் அறவுரை யாது?

## நெடுவினா

1. நாககுமாரனின் முற்பிறப்பு, நாகபஞ்சமி நோன்பு குறித்து விரிவாக விளக்குக

2. நாககுமாரனின் தந்தையும், நாககுமாரனும் தம் மைந்தருக்கு முடி சூட்டித் துறவு மேற்கொண்ட நிகழ்வை விவரி

3. நாககுமார காவியம் எடுத்துரைக்கும் அறக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க

4. நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள நாககுமார காவியத்தின் செய்திகளை விவரித்து எழுதுக

**அலகு 4**

| | |
|---|---|
| **பெரியபுராணம்** | **– குங்குலியக்கலய நாயனார் புராணம்** |
| **கந்தபுராணம்** | **– காசிபன் உபதேசப் படலம்** |
| **கம்பராமாயணம்** | **– வாலிவதைப்படலம்** |
| **தேம்பாவணி** | **– முடிசூட்டுப்படலம்(முதல் 30 பாடல்கள்)** |
| **சீறாப்புராணம்** | **– ஓநாய் பேசிய படலம்** |

# பெரியபுராணம்

## குங்கிலியக்கலய நாயனார்

**குங்கிலியக்கலய நாயனார் வரலாறு**

**குங்கிலியக்கலய நாயனார்** என்பவர் சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆவார்.

காவிரி பாயும் சோழவளநாட்டில் திருக்கடவூர் என்ற ஒரு தலம் உண்டு. இத்தலத்தில் மறையவர்கள் சிறந்து வாழ்ந்து வந்தனர். அவர்களுள் **கலயனார்** என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் சிவனடி பேணும் சிறந்த அன்புடையவர். நல்லொழுக்கத்தில் சிறந்தவர். அத்தலத்தே எழுந்தருளியிருக்கும் அமிர்தகடேசருக்கு, பாலன் மார்கண்டருக்காகக் காலனைக் காலால் உதைத்த கருணையை நினைத்து, விதிப்படி குங்கிலிய தூபம் இடும் திருப்பணியை நியதியாகச் செய்து வந்தார். ஆதலால் அவரைக் குங்கிலயக்கலயர் என்று அழைத்தனர்.

அந்நாளிலே திருவருளாலே அவருக்கு வறுமை வந்தது. அதன் பின்னரும் அத்திருப்பணியை வழுவாது செய்து வந்தனர். வறுமை மிகவே தமது நல்லநிலம் முழுவதையும், அடிமைகளையும் விற்றுப் பணிசெய்தனர். வறுமை மேலும் முடுகியதனால் தாமும், மனைவி, மக்களும் சுற்றமும் உணவுக்கான பொருள் ஒன்றும் இன்றி இரண்டு நாள் உணவின்றி வருந்தினார்கள். இதுகண்ட மனைவியார் கணவனார் கையில் குற்றமற்ற மங்கல நாணில் அணிந்த தாலியை எடுத்துக் கொடுத்து "இதைக் கொண்டு நெல்கொள்ளும்" என்றனர். அதனைக் கொண்டு அவர் நெல்கொள்ளச் சென்றபோது எதிரில் ஒரு வணிகன் ஒப்பில்லாத குங்கிலியப்

பொதிகொண்டு வந்தான். அதனை அறிந்த கலயனார் "இறைவனுக்கேற்ற மணமுடைய குங்கிலியம் இதுவாயின் இன்று நல்ல பேறு பெற்றேன். பெறுதற்கரிய இப்பேறு தவிர வேறு கொள்ளத்தக்கது என்ன உள்ளது? என்று துணிந்து, பொன் பெற்றுக்கொண்டு குங்கிலியப் பொதியினைத் தருமாறு வணிகனைக் கேட்டார். அவனும் மகிழ்ந்து அவர் தந்த தாலியைப் ஏற்றுக்கொண்டு குங்கிலியப் பொதியைக் கொடுத்துச் சென்றான். கலயனார் சிந்தை மகிழ்வுடன் விரைந்து சென்று கோயிற் களஞ்சியத்தில் அப்பொதியின் குங்கிலியத்தைச் சேமித்து வைத்தார். தூபத் திருப்பணி செய்துகொண்டு சிவசிந்தையுடன் அங்கேயே தங்கினார்.

அன்று இரவு மனைவியாரும், மக்களும் பசியால் மிகவருந்தி அயர்ந்து தூங்கினர். அப்போது இறைவனுடைய திருவருளினாலே குபேரன் தனது செல்வத்தைப் பூமியில் கொண்டுவந்து நிறைத்து கலயனாரது மனை முழுவதும் பொற்குவியலும் நெற்குவியலும் அரிசி முதலிய பிற எல்லா வளங்களுமாக ஆக்கி வைத்தனன். இதனை இறைவன் அம்மையாருக்குக் கனவில் உணர்த்த, அவர் உணர்ந்து எழுந்து செல்வங்களைப் பார்த்தனர்; அவற்றை இறைவரின் அருள் என்று கண்டு கைகூப்பித் தொழுதனர்; தனது கணவருக்குத் திருவமுது சமைக்கலாயினார். திருக்கோயிலில் இருந்த கலயனார்க்கு "நீ பசித்தனை! உன் மனையில் சென்று பாலின் இன் அடிசில் உண்டு துன்பம் நீங்குக" என்று இறைவர் கட்டளை இட்டு அருளினார். அத்திருவருளை மறுப்பதற்கு அஞ்சிக் கலயனார் மனையில் வந்தனர். செல்வமெல்லாம் கண்டார்; மனைவியாரை நோக்கி "இவ்விளைவெல்லாம் எப்படி விளைந்தன?" என்று கேட்க, அவர் "திருநீலகண்டராகிய எம்பெருமானது அருள்" என்றார். கலயனார் கைகூப்பி வணங்கி "என்னையும் ஆட்கொள்ள எம்பெருமான் திருவருள் இருந்தபடி இதுவோ? என்று துதித்தனர். மனைவியார் பரிகலந்திருத்திக் கணவனாரைச் சிவன் அடியார்களோடு இருத்தித் தூபதீபம் ஏந்திப் பூசித்து இன்னமுதூட்டினார். அது நுகர்ந்த கலயனார் இன்பமுற்றிருந்தார்.

இவ்வாறு இறைவரருளால் உலகில் நிறைந்த செல்வமுடையவராகி அடியவர்களுக்கெல்லாம் நல்ல இனிய அமுதூட்டியும் உதவியும் வாழ்ந்திருந்தனர்.

இந்நாளில் திருப்பனந்தாளில் வீற்றிருக்கும் சிவலிங்கத் திருமேனி, தாடகை என்ற அரச மாதுக்கு அருளும் பொருட்டு சாய்ந்தது. சாய்ந்தவாறே இருந்தது. அதனைச் சாய்வு போக்கி கண்டு கும்பிட வேண்டுமென்று ஆசை கொண்ட சோழமன்னன் யானைகளையும் சேனைகளையும் பூட்டித் திருமேனியினை நிமிரப்பண்ண முயன்றனன். இறைவர் நேர் நிற்கவில்லை. யானைகளும் இளைத்து வீழ்ந்தன. அரசன் மிகவும் கவலையோடிருந்தான். இதனைக் கேள்வியுற்ற

குங்கிலியக்கலய நாயனார், நாதனைக் நேர்காணும் பணியில் நின்ற அரசனை விரும்பித் திருக்கடவூரின்றும் சென்று திருப்பனந்தாளில் சேர்ந்தனர். சேனைகள் இளைத்து வீழ்ந்து எழ முடியாத நிலைகண்டு மனம் வருந்தினார். இவ்விளைப்பிலே நானும் பங்குகொண்டு இளைப்புற வேண்டும் என்று துணிந்தார். இறைவரது திருமேனிப் பூங்கச்சில் கட்டிய பெரிய வலிய கயிற்றினைத் தம் கழுத்திற் பூட்டி இழுத்து வருந்தலுற்றார். இவர் இவ்வாறு செய்து இளைத்த பின் இறைவர் சரிந்து நிற்க ஒண்ணுமோ? இவர் தமது அன்பின் ஒருமைப்பாட்டினைக் கண்டபோது அண்ணலார் நேரே நின்றார். தேவர்கள் விண்ணில் ஆரவாரித்துப் பூமழை பெய்தனர். வாடியசோலை தலைமழை பெய்து தழைப்பது போல யானை சேனைகள் களித்தன. சோழ மன்னன் கலயனாரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி மேருவை வில்லாக வளைத்துப் 'புரமெரித்த கடவுளின் செந்நிலை காணச் செய்தீர்! திருமாலும் காணாத மலரடியிணைகளை அன்புடைய அடியாரே அல்லால் நேர்காண வல்லார் யார்?' என்று துதித்தான். பின்னர் அரசன் இறைவர்க்குப் பிறபணிகள் பலவும் செய்து தனது நகரத்திற்குச் சென்றான். அரசன் சென்ற பின்னரும் கலயனார் சிலநாள் இறைவனைப் பிரிய ஆற்றாது அங்கு தங்கி வழிபட்டுப் பின் திருக்கடவூர் சேர்ந்தனர்.

திருக்கடவூரிலே தூபத்திருப்பணி செய்திருக்கும் நாளில் ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடைய அரசுகளும் அத்திருத்தலத்திற்கு எழுந்தருளினார்கள். மிக்க மகிழ்ச்சி பொங்கக் கலயனார் அவர்களை எதிர்கொண்டு அழைத்து வந்தார். தமது திருமனையில் அவர்களது பெருமைக்கேற்றவாறு இன்னமுது அளித்து வழிபட்டார். அதனால் அவர்களது அருளே அன்றி இறைவரது அருளும் பெற்றார். இவ்வாறு கலயனார் அரசனுக்கும், அடியவர்களுக்கும் ஏற்றனவாய்த் தமக்கு நேர்ந்த பணிகள் பலவும் செய்து வாழ்ந்திருந்து சிவபெருமானது திருவடி நிழலிற் சேர்ந்தார்.

## குங்குலியக்கலய நாயனார் புராணம்

[ சோழநாட்டுத் திருக்கடவூரில் அந்தணர் மரபில் தோன்றியவர். திருக்கடவூர் இறைவற்குக் குங்கிலியத் தூபமிடும் பணியைச் செய்து வந்தார். அதனால் வறுமையுற்ற நிலையில் குடும்பத்திற்கான பொருள்களை வாங்கத் தன் மனைவியின் திருமாங்கல்யத்தை விற்று வரும் போது அதற்கும் குங்கிலியம் பெற்றுத் தூபம் இடும் பணியைச் செய்து இறையருளால் பெரும் செல்வம் பெற்றார். திருப்பனந்தாளில் சாய்ந்து நின்ற செஞ்சடையப்பரைத் தம் அன்பின் வலியால் நிமிர்த்தியவர். திருக்கடவூருக்கு எழந்தருளிய ஞானசம்பந்தரையும் நாவுக்கரசரையும் வரவேற்று இன்னமுதளித்துச் சிறந்தவர்.]

1. காவிரியாற்றின் நீர்வளத்தால் சிறந்து விளங்கியது சோழ நாடாகும். அந்நாட்டில் சிறந்த வேதியர்கள் வாழ்கின்ற மதிலையுடைய ஊர். கங்கையை அணிந்தவரும் மார்க்கண்டேயரின் உயிரைக் கொள்வதற்காக வந்த கூற்றுவனை உதைத்த சிவந்த திருவடியினை உடையவருமான இறைவன் எழுந்தருளியிருக்கும் 'திருக்கடவூர்' என்பதாகும்.

**2. வயலெலாம் விளைசெஞ்சாலி வரம்பெலாம் வளையின் முத்தம்**

**அயலெலாம் வேள்விச் சாலை அணையெலாங் கழுநீர்க் கற்றை**

**புயலெலாங் கமுகின் கா(டு) அப் புறமெலாம் அதன்சீர் போற்றல்**

**செயலெலாந் தொழில்கள் ஆறே செழுந்திருக் கடவூர் என்றும்.**

செழிப்பும் வளமும் கொண்ட அந்தத் திருக்கடவூரில் வயல்களில் எல்லாம் நெற்பயிர் விளையும். வயல்களின் வரப்புகளெங்கும் சங்குகள் ஈன்ற முத்துக்கள் இருக்கும். வயல்களின் பக்கங்களில் எல்லாம் யாகசாலைகள் இருக்கும். அணைகளில் எங்கும் செங்கழுநீர் உச்சிகளில் எல்லாம் மேகங்கள் இருக்கும். அவற்றின் வெளியிடங்கள் எல்லாம் அதன் சிறப்பை வெளிப்படுத்துவதாய் விளங்கும். இவ்வறுவகைத் தொழில்களே எக்காலத்தும் நிகழும்.

3. மை பூசப்பெற்ற விழிகளையுடைய பள்ளரினப் பெண்கள் கூடி ஆடுவதற்கான பண்ணைகள்தோறும் மருதப்பண்ணுடைய பாடல் ஓசை ஒலிக்கும். பூணூல் அணிந்த மறையவர் வேதச்சடங்குகள் செய்யும் இடங்கள்தோறும் சாமவேதத்தின் பாடல் ஓசை ஒலிக்கும்.

**4. துங்கநீள் மருப்பின் மேதி படிந்துபால் சொரிந்த வாவிச்**

**செங்கயல் பாய்ந்து வாசக் கமலமுந் தீம்பால் நாறும்**

**மங்குல்தோய் மாடச் சாலை மருங்கிறை ஒதுங்கும் மஞ்சும்**

**அங்கவை பொழிந்த நீரும் ஆகுதிப் புகைப்பால் நாறும்.**

அங்குள்ள நீர்நிலைகளில் நீண்ட கொம்புகளையுடைய எருமைகள் பால் சொரிந்ததால், செங்கயல் மீன்கள் துள்ளியதால், அந்த நீர் தெறித்து மணம் கமழும் தாமரை மலர்களும் அந்த இனிய பாலின் மணத்தை உடையதாக இருக்கும். உயர்ந்த மாளிகைகளையுடைய வேள்விச் சாலைகளின் பக்கத்தில் ஒதுங்கும் மேகங்களும், அவை பெய்த நீரும் ஆகுதிப்புகையின் மணம் கொண்டதாக இருக்கும்.

5. வேத மறைவிதிப்படி பூணூல் அணிந்த அந்தணரான 'கலயர்' என்பவராவார். அவர் மிக்க வளம் கொண்ட திருக்கடவூரில் வாழ்பவர். அவர் கங்கையாற்றை சடையில் உடைய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றுபவரும், அன்புமிக்க உள்ளத்தை உடையவரும், சைவ ஒழுக்கம் மிக்கவரும் ஆவார்.

6. சிவபெருமானை மார்க்கண்டேயன் தழுவிக் கொண்டதால், அவரது அச்சம் முழுவதையும் நீக்கி அருள்செய்யும் பொருட்டு திருமாலும் நான்முகனும் காணாத வடிவத்தைக் கொண்டார். அவ்வடிவத்துடன் வந்து உதைத்து உருட்டி அக்கூற்றுவனின் உயிரைப் போக்கினார். அத்தகைய இறைவனுக்குக் கலயனார், குங்குலியத் தூபத்தை மிகுந்த மணம் வீசம்படியாக இடும் திருப்பணியில் சிறந்து விளங்கினார்.

7. அவர் கங்கையாற்றை உடைய திருமுடியையும் நெற்றிக் கண்களையும் உடைய எம்பெருமானுக்கு மேன்மேலும் அதிகமாக கிளம்பும் குங்குலியத் தூபத்தைச் சிறப்புடன் செய்து வந்தார். அப்படிப்பட்ட நேரத்தில் இறைவரது திருவருளால் அவருக்கு வறுமை வந்து சேர்ந்தது. அதன் பிறகும் இறைவனுக்குத் தவறாமல் திருப்பணி செய்து வந்தார்.

8. கலயர், இவ்வாறு இறைத்தொண்டு செய்துவந்த காலத்தில், வறுமை மிகவும் அதிகமானது. அதனால் தம் நிலங்களை விற்றும், அடிமைகளை விற்றும் தாம் மேற்கொண்ட தொண்டினைச் செய்து வந்தார். இவ்வாறு தம் செல்வங்கள் தீர்ந்து போனதால், இல் வாழ்க்கையில் சுற்றத்தாருடன் மக்களும் வருந்தினர்.

**9. யாதொன்றும் இல்லை யாகி இருபகல் உணவு மாறிப்**

**பேதுறு மைந்த ரோடும் பெருகுகற் றத்தை நோக்கிக்**

**காதல்செய் மனைவி யார்தம் கணவனார் கலய னார்கைக்**

**கோதில்மங் கலநூல் தாலி கொடுத்து 'நெற் கொள்ளும்' என்றார்.**

இரண்டு நாள் உணவில்லாது மைந்தர்களும், சுற்றத்தார்களும் வருந்தினர். உணவுக்குரிய வழி ஏதும் இல்லாமல் போனதைப் பார்த்து நாயனாரின் மனைவியார். தம் கணவரான கலயனாரின் கையில் மங்கலக் கயிற்றில் உள்ள பொன்தாலியைக் கொடுத்தார். கொடுத்து, 'இதற்கு நெல்லை வாங்கி வாருங்கள்!' என்று கூறினார்.

10. குங்குலியக்கலயர் தாலியை எடுத்துக்கொண்டு நெல்லை வாங்குவதற்காகச் சென்றார். அவர் எதிரே ஒரு வணிகன் குங்குலிய மூட்டையுடன் வந்தான். அதைப்பார்த்த கலயர் 'இந்த மூட்டையில் என்ன இருக்கிறது?' என்று

கேட்டார். அதற்கு, அவ்வணிகன் மூட்டையில் உள்ளதைக் கூறினான். அதைக்கேட்டுப் பூணூல் அணிந்தவர் முகமலர்ச்சியுடன் கூறலானார்.

**11. 'ஆறுசெஞ் சடைமேல் வைத்த அங்கணர் பூசைக் கான**

**நாறுகுங் குலியம் ஈதேல் நான்இன்று பெற்றேன்: நல்ல**

**பேறுமற் றிதன்மேல் உண்டோ? பெறாப்பேறு பெற்று வைத்து**

**வேறினிக் கொள்வ தென்?' என்றுரைத்தெழும் விருப்பின் மிக்கார்.**

கடைமேல் கங்கையை உடைய அருளாளரான சிவபெருமானின் பூசைக்கு ஏற்ற நறுமணம் மிக்க குங்குலியம் இதுவாக இருந்தால் நான் பெரும் பேறுபெற்றவன் ஆவேன். இப்பேற்றைப் பெற்ற பின்பும், இனிபெறத்தக்க பேறு வேறு யாதுள்ளது?' என்று கூறி மிகுதியான விருப்பத்திற்கு ஆளானார்.

12. 'நான் உமக்குப் பொன்னைத்தர நீர் எமக்குக் குங்குலியத்தைத் தாரும்' என்று அவ்வணிகளைப் பார்த்து கலயர் கூறினார். 'தாங்கள் எதனைக் கொடுக்க நினைத்துள்ளீர்கள்?' என்று வணிகன் கேட்டான். கலயர் தம்மிடம் இருந்த பொன்தாலியைக் கொடுத்தார். உடனே அவன் அந்தத் தாலியை வாங்கிக்கொண்டு குங்குலிய மூட்டையைத் தந்தான். அதைப் பெற்றுக்கொண்ட கலயர், அங்கே சற்றும் நிற்காமல் மகிழ்ச்சியான உள்ளத்துடன் வேகமாகப் புறப்பட்டார்.

13. காளையூர்தியைக் கொண்ட சிவபெருமான் உள்ள வீரட்டானத் திருக்கோயிலுக்கு வேகமாகச் சென்றார். கலயர் தன்னை அடிமையாக கொண்டவரும். நம்மை ஆள்கின்றவருமாகிய இறைவரின் கருவூலத்தில் கொடுத்து அந்தக் குங்குலிய மூட்டையைச் சேமித்தார். பின்னர் எல்லாவற்றையும் மறந்து மிகுந்த அன்புடன் அந்தச் சடையரின் மலர் போன்ற அடிகளை உடைய சடையரைத் துதித்த வண்ணம் அங்கேயே இருந்தார்.

14. இறைவனிடம் அன்புகொண்ட கலயர், வீரட்டானத்தில் இருந்தார். அச்சமயத்தில், இறைவனது திருவருளால், குபேரன் தன் செல்வத்தைப் பூமியில் கொண்டு வந்து, கலயரது வீட்டில் பொற்குவியல்களும், நெல்லும், ஒப்பில்லாத பிறவளங்களும் எங்கும் நிறைந்து இருக்கும்படி நிலைத்த செல்வங்களை உருவாக்கி வைத்தான்.

**15. மற்றவர் மனைவி யாரும் மக்களும் பசியால் வாடி**

**அற்றைநாள் இரவு தன்னில் அயர்வுறத் துயிலும் போதில்**

**நற்றவக் கொடிய னார்க்குக் கனவிடை நாதன் நல்கத்**

**தெற்றென உணர்ந்து செல்வங் கண்டபின் சிந்தை செய்வார்.**

பசியின் வருத்தத்தால் கலயரின் மனைவியாரும் மக்களும் அன்று இரவு அயர்ந்து உறங்கினர். அப்போது கலயரின் மனைவியாருக்குக் கனவில் இவ்விளைவுகளை உணர்த்தியருளினார். அவர் எழுந்து கனவில் கண்டவாறு அங்கிருந்த செல்வங்களையெல்லாம் பார்த்து பின்வருமாறு நினைத்தார்.

16. அந்த அம்மையார், 'தம் இல்லம் முழுவதும் நிறைந்து காணப்பட்ட பொற்குவியல், நெல், அரிசி முதலியவை சேர்ந்தது எம்பெருமானின் திருவருளே ஆகும்' என்று நினைத்து இரு கைகளையும் தலை மீது வைத்து வணங்கினார். தம் ஒப்பில்லாத கணவர்க்கு உணவு சமைக்க சமையல் அறைக்குச் சென்றார்.

17. காலனை உதைத்து உருட்டிய இறைவர், தம் திருவடியில் நிறைந்த அன்பு பூண்டவரான கலயனார் அறியுமாறு, 'நீ மிகவும் பசித்தாய்! உன் அகன்ற பெரிய வீட்டை அடைந்து பாலுடன் சேர்ந்த இனிய உணவை உண்டு பசித்துன்பம் நீங்குவாயாக!' என்று அருள் தந்தார்.

18. அங்ஙனம் அருளிய இறைவரைக் கலயனார் கைகளால் தொழுது வணங்கினார். அலைகளை உடைய கங்கையைத் தலையில் கொண்ட இறைவனின் திருவருளை மறுத்துக் கோயிலில் தங்கியிருக்க அஞ்சியவரானார். அதனால் அவ்விறைவரின் பணியைத் தலைமேற்கொண்டு கோயிலிலிருந்து வெளிப்பட்டுச் சென்று மாடங்கள் நிறைந்த தெருவில் இருந்த தம் வீட்டை அடைந்தார்.

19. தம் இல்லத்தை அடைந்து உள்ளே புகுந்தார் கலயனார். பெரிய செல்வக் குவியல்களுடன் மற்றச் செல்வங்கள் அனைத்தையும் பார்த்தார். பார்த்து, 'வில் போன்ற நெற்றியையுடைய பெண்ணே! இவையெல்லாம் எவ்வாறு இங்கு வந்தன?' என கேட்டார். அதற்குக் 'கரிய நிறம் கொண்ட நீலகண்டரான எம்பெருமானால் இவையெல்லாம் வந்தன!' என்று கூறினார்.

20. மின்னல் போன்ற இடையுடைய அந்த அம்மையார் இவ்வாறு கூற, சிறப்புடைய கலயனார், நிலைபெற்ற பெருஞ்செல்வங்களின் சிறப்பைப் பார்த்தார். பார்த்து, 'என்னையும் ஆட்கொண்டருளும் எந்தையான சிவபெருமானின் திருவருள் தன்மைதான் என்னே!' எனக் கைகளைத் தலையின் மேல் குவித்து வணங்கினார்.

21. தாமரையில் அமர்ந்திருக்கும் திருமகளைவிடச் சிறந்த அம்மையார், உண்கலமான வாழை இலையைச் சுத்தம் செய்து கொண்டார். விரைவாகத் தம்

கணவருடன் சேர்ந்து விதிப்படி தீபம் ஏற்றி பூசை செய்து இனிய அமுதைப் படைத்தார். வேதத்தில் சிறந்த அவரும் அதனை உண்டு மகிழ்ந்தார்.

**22. ஊர்தொறும் பலிகொண் டுய்க்கும் ஒருவன தருளி னாலே**

**பாரினில் ஆர்ந்த செல்வம் உடையராம் பண்பில் நீடிச்**

**சீருடை அடிசில் நல்ல செழுங்கறி தயிர்நெய் பாலால்**

**ஆர்தரு காதல் கூர அடியவர்க் குதவும் நாளில்.**

சிவபெருமானின் திருவருளால் கிடைத்த செல்வத்தைக் கலயர், ஊர் ஊராகச் சென்று யாசகம் பெறும் சிவனடியார்களுக்குச் சிறந்த அமுதாக நல்ல கறி, தயிர், நெய், பால் போன்றவற்றை மிகுந்த அன்புடன் கொடுத்து உதவினார்.

23. அந்நாளில் திருப்பனந்தாள் என்ற தலத்தில் வீற்றிருந்தருளும் சிவந்த கண்ணையுடைய வெள்ளை எருதின் ஊர்தியை உடைய இறைவரை “நேரே நிற்கவைத்து வணங்கவேண்டும் என்ற ஆசை சோழ மன்னனுக்கு எழுந்தது. இறைவரின் திருமேனியைத் தம்யானை முதலியவை எல்லாம் பூட்டி நிமிர்த்த முயன்றும் நேராக நிமிர்த்த முடியவில்லை. அதனால் அம்மன்னன் இரவும் பகலும் தீராத கவலையுற்று உள்ளம் வருந்தினான்.

24. புகழையுடைய நல்ல நெறியில் ஒழுகுகின்ற கலயனார் அந்தச் சோழமன்னனின் வருத்தத்தைக் கேள்விப்பட்டு இறைவனை நேரே காணவேண்டும் என்ற நெறியில் நின்ற அம்மன்னனை விரும்பினார். மேலும் நெறியும் செறிவும் கொண்ட சடைமுடியை உடைய சிவபெருமானைத் துதிப்பதற்காக வந்தார்.

**25. மழுவுடைச் செய்ய கையர் கோயில்கள் மருங்கு சென்று**

**தொழுதுபோந் தன்பி னோடுந் தொன்மறை நெறிவ ழாமை**

**முழுதுல கினையும் போற்ற மூன்றெரி புரப்போர் வாழும்**

**செழுமலர்ச் சோலை வேலித் திருப்பனந் தாளிற் சேர்ந்தார்.**

மழுவைக் கையில் கொண்ட இறைவர் எழுந்தருளிய பக்கத்தில் உள்ள கோயில்களுக்குச் சென்றார் கலயனார். மேலும் எல்லா உலகங்களையும் காத்தற்பொருட்டு மறைவிதியினின்று தவறாமல் ஆகவனீயம் முதலான மூன்று தீக்களையும் பின்பற்றி வரும் வேதியர் வாழ்கின்ற மலர்ச்சோலை சூழ்ந்த திருப்பனந்தாள் என்ற தலத்தை வந்தடைந்தார்.

26. தான் கொண்ட ஆசையினால் ஏற்பட்ட வருத்தத்தையும் யானைகளுடன் படைகளையும் சேர்த்துத் தான் செய்யும் திருப்பணி முடிவுபெறாமையால் நிலத்தில் விழுந்து சோழமன்னன் சோர்வதையும், மாதவரான கலயனார் பார்த்து மனதால் வருந்தினார்.

27. படைகளும் யானைகளைக் கொண்ட கூட்டமும் சேர்ந்து மேல் எழமாட்டாது இருக்கின்ற நிலையைப் பார்த்தார். கலயனார் 'நானும் இத்தகைய சோர்வினால் மெலிகின்ற இப்பேற்றைப் பெறவேண்டும்' என்று மனத்தில் நினைத்தார். 'தேன் நிறைந்த கொன்றை மலரைச் சூடிய சிவபெருமானின் திருமேனியில் அணிந்த ஆடையில் பெரிய கயிற்றைப் பிணைத்து கழுத்தினால் இழுக்கத் துவங்கினார்.

28. தனித்தன்னைமயுடைய அன்பாகிய நரையால் ஆன கயிற்றால் வலிமை தொண்டர் பூட்டி சோர்வடைந்த பின்பும், முன்போலவே சாய்ந்து நிற்பது என்பது இறைவர்க்கு முடியுமோ? கலயனாரின் உள்ளத்தில் உதித்த முயற்சியைக் கண்ட போதே பெருமையுடைய இறைவர் நேராக நின்றார். வானவரும் மகிழ்ச்சியினால் ஆரவாரம் செய்தனர்.

**29. பார்மிசை நெருங்க எங்கும் பரப்பினர் பயில்பூ மாரி:**

**தேர்மலி தானை மன்னன் சேனையும் களிறும் எல்லாம்**

**கார்பெறு கானம் போலக் களித்தன: கைகள் கூப்பி**

**வார்கழல் வேந்தன் தொண்டர் மலரடி தலைமேல் வைத்து.**

பூமியின் மீதெங்கும் கற்பகமலர் மழையைத் தேவர்கள் பொழிந்தனர். அதனைக் கண்ட மன்னனின் படைகளும், யானைகளும் மேகத்தைக் கண்ட சோலை போல மகிழ்ந்தன. வீரக்கழலையுடைய மன்னன் கைகளைக்கூப்பி கலயனாரின் மலர்போன்ற அடிகளைத் தலைமேல் வைத்து வணங்கினான்.

30. 'வானில் உள்ள முப்புரங்கள் அழியுமாறு வேதக்குதிரை பூட்டப்பட்ட தேரில் ஏறிச்சென்று, மேருமலையை வில்லாகக்கொண்டு வளைத்து நின்றவர் சடையப்பர். அவ்விறைவரின் நேராக நின்ற நிலையை அடியேன் கண்டு வணங்கும்படி செய்தருளினார்! மண்ணைத் தோண்டிச் சென்ற திருமாலும் தேடிக்காணமுடியாத இறைவரின் திருவடிகளைப் பண்புமிக்க அடியார்களேயில்லாமல் நேராகக் காணவல்லவர் வேறு எவர்?'

31. இவ்வாறு கூறிய சோழ மன்னன் உண்மையான தொண்டரான குங்குலியக் கலயனாரைத் துதித்தார். அத்தலத்தில் இறைவர்க்கு மற்ற திருப்பணிகள்

பலவற்றையும் செய்தான். பின்னர், வெண்கொற்றக் குடையையுடைய அம்மன்னன் தன் நகரத்திற்குச் சென்றான். ஒப்பில்லாத கலயனார் பொன்னம்பலத்தில் ஆடுகின்ற மலர்போன்ற அடிகளை வாழ்த்தி வணங்கி அங்கு தங்குவராயினார்.

32. சிறிது நாட்கள் சென்ற பின்னர், அங்கிருந்து புறப்பட்டு திருக்கடவூரை அடைந்தார். சிவப்பணியைச் செய்துவரும் ஒப்பில்லாத சீர்காழியில் தோன்றிய தலைவரான ஆளுடைய பிள்ளையாரும், தாண்டக வேந்தரான மிக்க புகழைக்கொண்ட ஆளுடைய அடிகளும் அங்கு ஒன்றாக வந்தருளுவதை அறிந்து கொண்டார்.

33. அறிந்த கலயனார், அளவில்லாத மகிழ்ச்சியுடன் அவ்விருவரையும் அழைத்துவந்து, தம் இல்லத்தை அடைந்தார். முடிவில்லாத மிகுந்த அன்பினால் அறுசுவைகளும் பொருந்த அமைத்து உண்ணச்செய்து, அவர்கள் திருவருளைப் பெற்றவர் அவ்வாறு பெற்றதேயில்லாமல் அழகிய கொன்றையைச் சூடிய சிவபெருமானின் திருவருளையும் பெற்றுக் கொண்டார்.

**34. கரும்புவில் லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி**

**விருப்புறும் அன்பு மேன்மேல் மிக்கெழும் வேட்டை கூர**

**ஒருப்படும் உள்ளத் தன்மை உண்மையால் தமக்கு நேர்ந்த**

**திருப்பணி பலவுஞ் செய்து சிவபத நிழலிற் சேர்ந்தார்.**

கலயனார், கரும்புவில்லைக் கொண்ட மன்மதனையும் கூற்றுவனையும் தண்டித்த சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கடவூரில் நிலையாக வாழ்ந்து வந்தார். சிவனை வணங்குதல் என்ற ஒரே தன்மையான உள்ளநிலை உண்டானதால் விருப்பத்துடன் கூடிய ஆசை அதிகப்படவே, தம்மால் இயன்ற திருப்பணிகள் பலவற்றையும் செய்து, சிவபெருமானின் திருவடிகளை அடையப் பெற்றார்.

35. மலர்மாலை சூடிய மனைவியின் தாலியை விற்று, வளைந்ததும் குளிர்ந்ததுமான பிறைச்சந்திரனைச் சூடிய இறைவர்க்கு ஏற்ற குங்குலியத் தூபத் திருப்பணியைத் தடையில்லாது செய்த பாங்கையும், வலிமையையும் உடைய கலயனாரைப் பணிந்து, அவரது அருளின் துணையால் மானக்கஞ்சார நாயனாரின் வலிமை மிக்க திருத்தொண்டைச் சொல்லத் துவங்குகின்றேன்.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினா

1. குங்கிலியக் கலய நாயனார் குறித்து அறிமுகம் செய்க
2. திருக்கடவூரின் சிறப்புகளை விவரி

3. வறுமை சூழ்ந்த பொழுதிலும் குங்கிலியக் கலய நாயனார் இறைவனுக்குச் செய்த அருந்தொண்டு பற்றி எழுதுக

4. குங்கிலியக் கலய நாயனாருக்கு இறைவன் எவ்வாறு அருள் புரிந்தான்?

5. திருப்பனந்தாளில் குங்கிலியக் கலய நாயனார் செய்த அருந்தொண்டு குறித்து எழுதுக

6. திருக்கடவூரில் குங்கிலியக் கலய நாயனார் செய்த திருப்பணி குறித்து விவரி

## நெடுவினா

1. குங்கிலியக் கலய நாயனாரின் அருந்தொண்டுகள் குறித்து விரிவான விடை தருக

2. குங்கிலியக் கலய நாயனாரின் பக்திச் சிறப்பையும், அவருக்கு இறைவன் அருள் புரிந்த வரலாற்றையும் விவரிக்க

3. திருப்பனந்தாள், திருக்கடவூர் ஆகிய தலங்களில் குங்கிலியக் கலய நாயனார் செய்த அருட்பணிகள் பற்றி விவரித்து எழுதுக

4. சேக்கிழாரின் பெரியபுராணம் பக்திச்சுவை நிரம்பியது என்பதை நும் பாடப்பகுதி கொண்டு நிறுவுக

# கந்தபுராணம்

கந்தபுராணம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவாசாரியார் என்பவரால் எழுதப்பட்ட தமிழ்க் காவியம் ஆகும். பதினெண் புராணங்களும் வடமொழியில் இருப்பவை. இவற்றுள், ஸ்கந்த புராணத்தின் சங்கர சங்கிதையில் சிவரகசிய கண்டத்தில் வரும் முதல் ஆறுகாண்டங்களின் தமிழ் மொழிபெயர்ப்பே கந்த புராணம். ஸ்கந்த புராணம் சிவபுராணங்கள் பத்தில் ஒன்றாகும். இது நூறாயிரம் சுலோகங்களால் ஆனது. அது ஆறு சங்கிதைகளைக் கொண்டது. இதில் சங்கர சங்கிதையும் ஒன்றாகும். சங்கர சங்கிதையில் உள்ள பல கண்டங்களில் சிவரகசிய கண்டமும் ஒன்றாகும். இக்கண்டத்தில் ஏழு காண்டங்கள் காணப்படுகின்றன. இவற்றில் உபதேச காண்டம் தவிர ஏனைய ஆறு காண்டங்களதும் தமிழ்த் தொகுப்பே கந்தபுராணமாகும்.

இந்நூல் உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம் என்று ஆறு காண்டங்களை உடையது. இது 91 படலங்களையும், 10345 பாடல்களையும் உடைய இது முருகப்பெருமானின் வரலாற்றை முறையாகவும் முழுமையாகவும் கூறுகிறது

கந்தனின் புராணம் சொல்லும் கந்தபுராணத்தின் ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியார், முருகனின் கட்டளையின்படி இப்பெரும் காவியத்தை இயற்றியுள்ளார். முருகனுக்கும் சூரபதுமனுக்கும் நடந்த போர் இதில் விரித்துக் கூறப்படுகிறது. முருகன் வள்ளியையும், தெய்வயானையையும் மணந்த வரலாறுகளும் இக்காவியத்தில் இடம் பெறுகின்றன.

சிவபெருமானின் மூன்று திருக்கண்களுள் கந்தபுராணம் நெற்றிக் கண்ணாகப் போற்றப்படுகிறது. இந்நூலில் சிவபெருமானின் மாண்பே பெருமளவில் கூறப்பட்டிருந்தாலும் குறிப்பாக, முருகப் பெருமானின் வரலாறுகள் விரித்துரைக்கப்படுவதால் இது கந்தபுராணமாயிற்று. இது மக்கள் பிறவிக் கடலைக் கடக்க உதவும் தோணியாகத் திகழ்கிறது.

"எந்தப் புராணமும் கந்தப் புராணத்தில் உள" என்கிற பழமொழிக்கேற்ப, இப்புராணத்தில் சொல்லப்படாத செய்திகளே இல்லை எனலாம். சைவ சித்தாந்தக் கருத்துகளும் பெருமளவில் இதில் உள்ளன.

## காசிபன் உபதேசப் படலம்

**1. நீங்கிய சூர் முதல் நெறியின் ஏகியே**

**ஆங்கவர் அடிதொழு தருள்செய் மேலையீர்**

**பாங்கள்செய் கின்றதென் இசைமீன் நீரென**

**ஓங்கிய காசிபன் உரைத்தல் மேயினான்.**

நின்றவிடத்தை விட்டு நீங்கியவனான சூரபன்மன் என்னும் தலைவன் முறையாகத் தம்பியருடன் தந்தை தாய்பாற் சென்று ஆங்கே அவர்களுடைய அடிகளைத் தொழுது சொல்வான். எம்மைப் பெற்றருளிய முன்னையீர்! நாங்கள் மேலாகி இனிச் செய்வது எதுவாகும்? இதை எங்களுக்குச் சொல்வீர்கள் என்று கேட்க, தவத்தால் மேலோங்கிய காசிப முனிவன் சொல்லத் தொடங்குவான்.

**2. உறுதிப தொன்றினை உணர்த்து கின்றனன்**

**அறைகழல் மைந்தர்காள் அரிப மாதவ**

**நெறிதனில்மூவிரும் நிற்றிர் அன்னதன்**

**முறைதனை வாய்மையான் மொழிவன் கேண்மீனோ**

உங்களுக்கு யான் உறுதியான பொருள் ஒன்றினை இப்போது உணர்த்தப் போகிறேன். அதுதான் ஒலிக்கின்ற கழல் அணிந்த எனது அருமை மைந்தர்களே! நீங்கள் மூவிரும் மிக அருமையான தவநெறியின்கண் பற்றாகி நில்லுங்கள். அந்தத் தவநெறியின் முறையினை உண்மையாக யான் எடுத்துச் சொல்வேன். நீங்கள் கேட்பீராக.

**3.** பெரியோர்களாலே இங்கு ஆராயத்தக்கதான பொருள் மூன்றுள்ளது. அவற்றைதான் வேதங்கள் யாவும் சொல்லி நிற்பன. அவைகளாவன மிகச் சிறப்புடைய முன்னைப்பொருளான பதி, கடவுள், நிறைந்த ஆன்மாக்கள் பெருமையுடனும் வலியுடனும் திகழும் பாசம் என மூன்றாக வகுத்துச் சொல்வார்கள்.

**4.** படைத்தலும், காத்தலும், சங்கரித்தழித்தலும், உண்மையான உணர்வை மறைத்தலும், பேரருள் வழங்குதலும் ஆகச் சொல்லப்பெறும் ஐந்து தொழிலையும் புரியும் நீல நிறத்துடன் விளங்கும் கண்டமுடைய சிவனே பதியாகும். அதனை வேதங்கள் சொல்லும்.

**5.** விருப்பும் வெறுப்பும் அற்றவனாகிய பரமனின் இயல்பை இப்படியானவன் இவ்வண்ணத்தன் என எவராலும் உரைக்க முடியாது எனப் பெரியோர் சொல்லுவார்கள். சிவனது பெருமையே சொல்லி நிற்கும் வேதங்கள் தானும் அவர் இயல்பை இப்படித்தான் எனத் துணியமாட்டாது இன்னமுமே தேடிநிற்பன. ஆகையால் பகவானுடைய பெருமையை இப்படித்தான் என நாம் பேச வல்லமை உடையமோ?

**6. மூவகை யெனுந்தளை மூழ்கி யுற்றிடும்**

**ஆவிகள் உலப்பில் அநாதி யுள்ளன**

**தீவினை நல்வினைத் திறத்தின் வன்மையால்**

**ஓவற முறைமுறை உதித்து மாயுமே.**

ஆகாமியம், பிராரத்துவம், சஞ்சிதம் என்னும் மூவகைத் தொடர்பாலும் வரும் பாசங்களில் மூழ்கிப் பொருந்திய ஆன்மாக்கள் அளவுகடந்தன. இவை அனாதியாக உள்ளன. தாங்கள் தாங்கள் செய்யப்பெறுகின்ற தீவனை நல்வினை ஆகிய செயல்களுக்கேற்ப அவ்வினைகளின் வலியால் ஓயாது முறை முறையாக வந்து பிறந்து பின்னர் மாய்ந்துபோகும்.

**7.** இந்த ஆன்மாக்களில் சில பூமியில் பிறக்கும். பூமியைச் சூழ்கின்ற நீரிலே பிறக்கும். நெருப்பில் உதிக்கும். காற்றில் பிறக்கும். சிறப்புடைய ஆகாயம் என்னும் வானத்தில் சேர்ந்து பிறக்கும். இந்த ஆன்மாக்கள் பிறப்பதற்கு ஓரிடம்தான் நிலையானது என நாம் சொல்லமுடியுமோ?

**8.** இந்த ஆன்மாக்கள் மானுடராகப் பிறக்கும். மிருகமாகப் பிறக்கும். களங்கமற்ற வானத்தில் புகுந்து பறந்து திரியும் பறவைகளுமாகப் பிறக்கும். புல்லாகவும் பிறக்கும். அவற்றின் மேலான மரம் முதலிய தாவரங்களாகவும் பிறக்கும். மலையாகவும் பிறக்கும். எல்லாத் திக்கிலும் அரசு செய்கின்ற தேவர்கள் யாவராகவும் பிறக்கும்.

**9.** சில உயிர்கள் பிறப்பதற்கு முன்னாக கருவிலே இறந்திடும். பிறந்த உடனும் இறந்திடும். பிறந்து சில நாட்கள் வரையில் இருந்து பின்னர் இறக்கும். சிறப்புப் பொருந்திய இளந்தாரியாகவும் இறக்கும். கிழப்பருவம் அடைந்ததும் இறக்கும். ஆகவே பிறக்கும் அந்த உயிர்கள் எப்படி எந்நாள் இறக்கும் என நிச்சயித்து சொல்லலாமோ? முடியாது.

**10. சுற்றுறு கதிரெழு நுகளி னும்பல**

**பெற்றுள என்பதும் பேதை நீரதால்**

**கொற்றம் துடையதோர் கூற்றங் கைக்கொள**

**இற்றவும் பிறந்தவும் எண்ணற்பாலளோ.**

சூரியதேவன் உதயமாகின்றபோது தோற்றமாகி எழும் கிரகணங்களில் காணும் துகள்களிலும் பார்க்க பலதொகையான எண்ணிக்கை கொண்டுள்ளன. இங்கு இயமனாற் பற்றப்பட இறந்த உயிர்களும் பின்னர் பிறந்த உயிர்களின் எண்ணிக்கைகள் என்று சொன்னாலும் அது எங்களது அறியாமையைப் புலப்படுத்தும் என்றால் இறக்கின்ற பிறக்கின்ற உயிர்களின் தொகை எண்ணமுடியாது.

**11. கலைபடும் உணர்ச்சியுங் கற்பும் வீரமும்**

**மலைபடு வெறுக்கையும் வலியும் மற்றது**

**மலைபடு புற்புத மாகும் அன்னலை**

**நிலைபடு பொருளென நினைக்க லாகுமோ.**

நூல்களைக் கற்றதினால் வரும் உணர்ச்சியும், மனத்திட சங்கற்பங்களும், வீரமும் மலைபோல் தேட்டத்தால் குவிந்த செல்வமும், வலிமையும், யாவும் அலைந்து கொண்டிருக்கும் நீர்க்குமிழி போலாவன. ஆகையால் நீர்க்குமிழி போல் அழியும் இவையாவும் ஓர் உயிருக்கு நிலையான பொருள் என நினைக்க முடியுமோ? ஆகாது.

**12.** ஆகையால் தருமம் என்று சொல்லப் பெறும் ஒரு பொருள் இருக்கின்றது. அப்பொருள் அழிவில்லா இயல்புடையதாகி இப்பிறவியிலும் இது நீங்கிய மறுமைக்கும் இன்பத்தை இலகுவாக தரும்படியாயது. அதுதான் அருமையாகக் கிடைக்கத்தக்க பொருளாகும். தருமம் தான் மேலாகிய பொருள் என்பதையும் ஒருவழிப்பட்ட மனமுடையார்க்கு அன்றி ஏனையோரால் அது உணர முடியாது.

**13.** தருமத்தைச் செய்தவழி அன்பு வந்துசேரும். அன்பு பெருகியவழி அங்கு அருள் என்னும் குழந்தையும் தோற்றும். எனவே அருள் பெருக்கம் தோன்றும். ஆங்கு அறனும் அன்பும் அருளும் வரும் வழியாக தவம் என்னும் உயர்வான நிலை கைகூடும். அறமும் அன்பும் அருளும் தவமும் கைகூடிய வழி உள்ளத்தெளிவு கொண்டு அந்த ஆன்மா முடிவிலா இன்பமான சிவனைச் சேரும் என்றார் காசிபர்.

**14. சேர்ந்துழிப் பிறவியுந் தொன்மையாய்ச்**

**சார்ந்திடு முவகைத் தளையும் நீங்கிடும்**

**பெர்ந்த்திடல் அரியதோர் பேரின் பந்தனை**

**ஆர்த்திடும் அதன்பரி கறைதற் கேயுமோ.**

சிவபிரானை ஆன்மா அடையப்பெறின் பிறவி என்னும் பிணியும் தீரும். தொன்று தொட்டு ஆன்மாவைச் சார்ந்து நிற்கின்ற ஆகாமியம், பிராத்துவம், சஞ்சிதமாகிய வினையான மூவகைக் கட்டுகளும் நீங்கும். இவைகள் நீங்கியவழி ஆன்மாவானது நீங்குதற்கரியதான பேரின்பத்தைச் சார்ந்திடும். அப்பேரின்ப விளைவின் நிலையினை இவ்வாறென நாம் எடுத்துப்பேசும் தன்மை உடையதோ? அன்று.

**15.** ஆகையால் உலகில் எல்லாவற்றிலும் மிக ஆற்றல் பெற்றது பெரிய தவமே அன்றி வேறொரு பொருள் இன்னும் இருப்பதென யாராலும் எடுத்துப்பேசலாமோ? சொல்லற்கரிய பேரின்ப நிலையான சிவகதியையும் தவமே தந்து நிற்றலால், நாம் பக்குவமாகப் பேணவேண்டியது ஒன்று உண்டானால் தவத்தையே அவ்வாறு பேண வேண்டும் என்றான்.

**16.** அவ்வாறாகிய தவம் பிறவியை நீக்கி மேன்மையான முத்தியின்பத்தைக் கொடுத்து ஒருவரை முதன்மையான நிலையில் வைக்கும். இதுவன்றி அத்தவம் ஒருவர்க்கு இப்பிறவியில் பெறவேண்டிய இன்பமும் கொடுத்து அவர் சித்தத்துள் நினைத்தவெல்லாம் கைகூடும்படி கொடுக்கும்.

**17.** ஆதலினால் பல நாட்கள் அருமையாகப் புரிகின்ற மாதவம் இப்பிறவியிலே இன்பமும் அதுவன்றி மறுமைக்கும் இன்பத்தைக் கொடுக்கும் காரணமாக இருக்கின்றது. அந்தத் தவமானது இம்மை மறுமை இன்பங்களைக் கொடுத்துநிற்பது ஆதியான ஈசன் அருளின் வண்ணமாகக் கிடைக்கும் என்பதை உணர்வீராக.

**18.** மன ஒருமைப்பாடு கொண்ட தவத்தை அரிதாகச் செய்து பின்னர் அருமை கொண்ட முத்தியின்பத்தை அடைந்துள்ளார் சிலர். மேலான பெரிய செல்வ போகங்களைப் பெற்று விளங்குவேர் சிலர். முத்தியும் போகமும் ஒருவரே பெற்றுக் கொள்வோர் சிலர்.

**19. ஆற்றலில் தம்முடல் அலசப் பற்பகல்**

**நோற்றவர் அல்லரோ நுவலல் வேண்டுமோ**

**தேற்றுகி லிர்கொலோ தேவராகியே**

**மேற்றிகழ் பதந்தொறும் மேவுற்றோர்எலாம்.**

மக்களே! இதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். நான் சொல்லவும் வேண்டுமோ! எதுவாகில் பல நாட்கள் தவம் செய்தலினால் தங்கள் உடல் வாடினாலும், தாங்கள்

சஞ்சலமடையாது உறுதியுடன் தவஞ் செய்தவரல்லவோ தேவர்களாக இப்பொழுது மேலாகித் திகழும் வான உலக பதம்தோறும் வீற்றிருப்பவர்களானவர்.

**20.** இறைவன் மீது பத்திமையான ஒழுக்கம்பூண்டு தவம் செய்து அதன் பயனால் முத்தி பெற்று சிவபிரான் திருவடிகளை அடைந்தோர்தமை இத்தன்மை உடையர் என அவரது பெருமையையோ அல்லது தொகையையோ கணித்தல் அரிதாகும். இப்பால் மக்களே முத்தியும் போகமும் ஆகிய இரண்டினையும் பெறுபவரான உண்மைத் தபோதனர்கள் பிரமதேவன் நாராயணக் கடவுள் ஆகியோர்கள் என அறிவீராக.

21. பிள்ளைகளே! அதுவன்றி, பல உயிர்களையும் கொன்று, பூமியில் வாழ்வார்க்குத் துன்பம் செய்து, செய்தற்கரிய தவத்தைச் செய்திடாதவற்கு இம்மை மறுமையாகிய இருவகைப் பிறப்பிலேயும் சுகம் இன்பம் அடையமாட்டார்கள். ஆங்கு இவர்கள் எல்லாம் கணக்கிட்டுச் சொல்ல முடியாத பிறவிகளை எடுத்துத் துன்பத்தில் ஆழ்ந்து சங்கடப்படுவார்கள்.

**22. அறிந்திளை உரைப்பினும் அவனி மாக்கள் தாம்**

**மறங்தொலை களவொடு மயக்கம் நீங்கலர்**

**துறந்திடு கின்றிலர் துன்பம் அற்றிலர்**

**பிறந்தனர் இறந்தனர் முத்தி பெற்றிலார்.**

இவற்றையெல்லாம் உண்மையெனக் கண்டு பெரியோர்கள் இதைச் சொன்னாலும், பூமியில் வாழும் மனிதர்கள் கொடுமையான கொலை, களவு, இவற்றுடனாக வைத்துச் சொல்லப்படும் ஏனைய பாதகச் செயல்களைச் செய்யும் மயக்க நிலை நீங்கார்கள். பாவச்செயல்களை நீக்குவதற்கான துறவி மார்க்கத்தைக் கொள்ளார்கள். பிறந்தார், இறந்தார் ஆகினாரொழிய முத்தி பெற்றிலர்.

**23.** மக்களே! தவம் தனில் மிக்கதானது யாதொன்றும் இல்லை. குறைவிலாத சீருடைய தவத்திற்கு சமமாவதும் வேறில்லை. தவத்திலும் பார்க்க அறியதான செயலும் வேறு இல்லை. தவத்திற்கு ஒப்பானது தவமேயாகும்.

**24.** ஆனமையின் மைந்தர்களே! தருமத்தைச் செய்யுங்கள். தீமைகளை நீக்குங்கள். சிவபிரானை நினைத்து தவம் செய்யுங்கள். இதுவேயல்லாமல் இவ்வுலகத்து வேறு ஏது ஒரு செயல் செய்யத்தக்கதாக இருப்பது தவம் ஒன்றேதான்.

**25. உடம்பினை ஒறுத்துநோற்பார் உலகெலாம் வியப்பவாழ்வர்**

**அடைந்தவர்க் காப்பர் ஒல்லார்க் கழிவுசெய்திடுவர் வெஃகும்**

**நெடும்பொருள் பலவுங் கொள்வர் நித்தராய் உறைவர் ஈது**

**திடம்பட உமக்கோர் காதை செப்புவன் என்று சொல்வான்**

உடம்பை ஒறுத்து தவம் செய்வார் உலகமெல்லாம் அதிசயத்துடன் பாராட்ட வாழ்வார். தன்னை அண்டினாரைக் காப்பராவர். பகைவர்க்கு அழிவு செய்திடுவர். தாம் விரும்பும் எப்பொருளையும் பெறுவார். அழிவின்றி நித்தராகவும் வாழ்ந்திருப்பார். இது உறுதி என் பிள்ளைகளே! நீங்கள் இது திடம்பெறுமாறு உங்கட்கு ஒரு கதை சொல்வேன் என காசிபமுனிவர் மேலும் சொல்லத் தொடங்குவார்.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினா

1. காசிப முனிவனிடம் சூரபத்மன் வேண்டியது என்ன?
2. ஆன்மாக்களின் பிறப்பு பற்றி காசிப முனிவன் கூறியவை பற்றி எழுதுக
3. வேதங்களின் இயல்பு பற்றி காசிப முனிவன் கூறியது யாது?
4. உயிர்க்கு நிலையான பொருள் யாது? அதனை எவ்வாறு பெறுவது என்பது பற்றி காசிப முனிவன் கூறிய செய்திகளைக் கூறுக
5. ஆன்மா இறைவனை அடையும் வழிமுறைகள் பற்றி காசிப முனிவன் கூறியது யாது?
6. தவத்தின் சிறப்பு குறித்து காசிப முனிவன் கூறியவற்றை எழுதுக

### நெடுவினா

1. உயிர்களின் பிறப்பு, இறப்பு பற்றி காசிப முனிவன் கூறிய கருத்துக்களைத் தொகுத்துரைக்க
2. வேதங்கள் உயிர்களுக்குத் தரும் நன்மைகள் குறித்து காசிப முனிவன் சூரபத்மனுக்குக் கூறியவற்றை விவரிக்க
3. இறையருள் பெறும் வழிமுறைகள் பற்றி காசிப முனிவன் கூறிய உபதேசம் யாது? விவரி
4. தவத்தின் சிறப்பும் மேன்மையும் பற்றி காசிப முனிவன் சூரபத்மனுக்குக் கூறியவற்றைத் தொகுத்துரைக்க
5. கந்தபுராணம் கூறும் காசிபன் உபதேசப் படலச் செய்திகளைக் கட்டுரை வடிவில் தருக

# கம்பராமாயணம்

இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது. வால்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் அதனைத் தமிழில் இயற்றினார். கம்பர் இயற்றிய இராமாயணம் கம்பராமாயணம் எனப்பட்டது. கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமவதாரம் எனப் பெயரிட்டார். இந்நூல் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உடையது. கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாக பெற்றது. சொற்சுவையும், பொருட்சுவையும் தமிழ்ப்பண்பாடும் மிளிர்ந்துள்ளது.

கம்பரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு. இவர் தம்மை ஆதரித்த வள்ளல் சடையப்பரை ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல்வீதம் பாடிச் சிறப்பித்துள்ளார். "கல்வியிற் பெரியவர் கம்பர்", "கம்பன் வீட்டுத் கட்டுத்தறியும் கவிபாடும்", "கவிச்சக்கரவர்த்தி கம்பர்" போன்ற தொடர்கள் அவர் பெருமையை பறைசாற்றுவன.

கம்பர் பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரையிலுள்ள ஆறு காண்டங்களையும் 118 படலங்களாகப் பகுத்து 10,589 விருத்தப்பாக்களால் பாடியுள்ளார். கம்பராமாயணம் சிறந்த தொடர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

## வாலி வதைப் படலம்

இராமன் கிட்கிந்தையின் மன்னனான வாலியைக் கொன்ற நிகழ்ச்சியைக் கூறும் பகுதியாகும்.

இராமன், இலக்குவன், சுக்கிரீவன், அனுமன் ஆகிய நால்வரும் பிற வானர வீரர்களோடு கிட்கிந்தையை அடைந்து, வாலியைக் கொல்லுதற்குரிய வழியை ஆராய்ந்தனர். போர் நடக்கையில் தான் வேறுபுறம் நின்று வாலி மீது அம்பு தொடுப்பதாக இராமன் கூற, சுக்கிரீவன் அதை ஏற்றுக்கொண்டு, வாலியை வலியப் போருக்கழைத்தான். வாலியும் போருக்குப் புறப்படத் தாரை இராமன் துணையொடு சுக்கிரீவன் போரிட வந்துள்ளமையைச் சுட்டிப் போருக்குச் செல்வதைத் தடுத்தாள். வாலி, இராமனது அறபபண்புகளைத் தாரைக்கு உணர்த்திவிட்டுப் போரை விரும்பிக் குன்றின் புறத்தே வந்தான்.

பேராற்றல் படைத்த வாலி சுக்கிரீவர்களை இராமன் வியந்து பேச, இலக்குவன் சுக்கிரீவனை ஐயுற்றுப் பேசினான். நட்புக் கொள்வாரிடம் உள்ள நற்குணங்களை மட்டுமே ஏற்றுக்கொள்ளவேண்டுமென இராமன் இலக்குவனுக்கு மறுமொழி உரைத்தான். வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் இடையே போர் கடுமையாக நடந்தது. வாலி, சுக்கிரீவனை யானையைச் சிங்கம் அழிப்பது போல அவன் வலிமை தளர்ந்து விழும்படி செய்ய, சுக்கிரீவன் இராமனை அடைந்து உதவி வேண்டினான். இராமன் சுக்கிரீவனைக் கொடிப் பூ அணிந்து, போர் புரியச் சொல்ல, அவ்வாறே சென்று சுக்கிரீவன் வாலியோடு மோதினான். வாலி சுக்கிரீவனை மேலே தூக்கிக் கீழே எறிந்து கொல்ல முயன்றபோது, இராமன் வாலியின் மார்பில் அம்பினைச் செலுத்த வாலி மண்ணில் சாய்ந்தான். தன்மீது அம்பு செலுத்தியவன் யார் என அறிய, வாலி அம்பைப் பறிக்க, அதனால் குருதி வெள்ளம் பெருக, அதைக் கண்டு உடன்பிறந்த பாசத்தால் சுக்கிரீவன் கண்களில் நீர்மல்க நிலமிசை வீழ்ந்தான்.

வாலி தன் மார்பில் தைத்த அம்பில் 'இராமன்' என்னும் நாமத்தைக் கண்டான். இராமன் அறமற்ற செயலைச் செய்துவிட்டதாக இராமனைப் பலவாறு இகழ்ந்தான். இராமன் தான் செய்தது முறையான செயலே எனத் தெளிவுபடுத்தினான்; வாலி தன்னை விலங்கெனக் கூறிக்கொள்ளும் முகத்தான் தன்பால் சிறிதும் குற்றம் இல்லை என உணர்த்த, உருவத்தால் விலங்காயினும் நல்லறிவு பெற்ற வாலி செய்த செயல் குற்றமுடைத்து என இராமன் விளக்கினான். அதனைக் கேட்ட வாலி, தகாத வகையில் மறைந்து நின்று எய்யக் காரணம் யாது என வினவ, அதற்கு இலக்குவன் விடையளித்தான். இராமனைச் சுக்கிரீவன் முதலில் சரணடைந்துவிட்டதால், அவனைக் காக்க வேண்டி இராமன் இவ்வாறு செய்ய நேரிட்டது என்று உரைத்தான்.

'சிறியன சிந்தியாதா'னாகிய வாலி மனம் மாறி இராமனிடம் தன்னை மன்னிக்குமாறு வேண்டி, அவன் பெருமை கூறித் துதித்தான். தன் தம்பி சுக்கிரீவன் தவறு செய்யின் அவன்மீது அம்பு தொடுக்க வேண்டாம் என ஒரு வரம் வேண்டினான். அனுமனின் ஆற்றலை இராமனுக்கு வாலி எடுத்துரைத்தான். சுக்கிரீவனுக்குப் பல அறிவுரைகள் கூறி, அவனை இராமனிடத்தில் அடைக்கலப்படுத்தினான்.

போர்க்களம் வந்த அங்கதன், குருதி வெள்ளத்தில் தந்தையைக் கண்டு அரற்ற, வாலி அவனைத் தேற்றி, இராமன் பெருமைகளை அறிவுறுத்தினான்.

அவனை இராமனிடம் கையடைப்படுத்த, இராமன் அங்கதனுக்கு உடைவாள் அளித்து ஏற்க, வாலி வீடு பேறு அடைந்தான். வாலி மார்பில் தைத்த அம்பு இராமனிடம் மீண்டது. வாலிக்கு ஏற்பட்ட துயர் கேட்டுத் தாரை போர்க்களம் உற்று, வாலியின் மேல் வீழ்ந்து புலம்பினாள். அவளை அந்தப்புரம் செலுத்தி, அனுமன் வாலிக்குரிய இறுதிக் கடன்களை அங்கதனைக் கொண்டு செய்வித்தான்.

அந்நிலையில் கதிரவன் மறைய இருள் சூழ்ந்தது. இராமன் சீதையின் நினைவோடு இரவுக்கடலை அரிதில் நீந்தினான்.

## வாலி வதைப்படலம்

### இராமன் முதலியோர் மலைச்சாரல் வழியே செல்லுதல்

**1. வெங்கண் ஆளி ஏறும், மீளி மாவும், வேக நாகமும்,**

**சிங்க ஏறு இரண்டொடும் திரண்ட அன்ன செய்கையார்,**

**கங்கு சாலம், மூலம் ஆர் தமாலம், ஏலம், மலைபோல்**

**பொங்கு நாகமும் துவன்று சாரலூடு போயினார்**

இராமன், இலக்குவருடன் வந்த சுக்ரீவன், அநுமன் முதலிய வானவீரர் ஆண் சிங்கங்களுடன் வெம்மை மிக்க கண்களை உடைய யாளியும் புலியும் யானையும் சேர்ந்து வந்தாற் போன்று இருந்தனர். இவர்கள் ஆச்சாமரம், மூலமரம், பச்சிலைமரம், ஏலம், மாலைபோல் (வரிசையாக) காணப்பட்ட புன்னை மரங்கள் அடர்ந்துள்ள மலைச்சாரல் வழியே போயினர்.

2. இவர்கள் போகும் பாதையில் மான் போன்ற மருட்சியான பார்வையுள்ள நீண்ட கண்கள் உள்ள மகளிர் விளையாடும் ஊசல்களும், அவையல்லவாயின் தளிருடன் தழைத்து அசையும் சந்தன மலர்ச்சாரலும், அவையல்லவாயின் முகில் தவழும் மனை முற்றங்களும், அவையல்லவாயின் மணம் வீசும் சண்பகச் சோலைகளும் அவையல்லவாயின் பொன்னால் செய்யப்பட்ட செய் குன்றங்களே.

3. அறங்கள் தோன்ற விளை நிலமான திருமேனியரான இராம இலக்குவர் வானரக் கூட்டத்தோடு அம்மலைப்புறங்களில் இறங்கும்போது ஏறும்போது ஒலிக்கும் அவரின் நீண்ட வீரக்கழல்கள் ஏற்படுத்தும் ஓசையால் உறங்கும் மேகம் கண் விழித்து விண்மீது உலாவும்.

4. நீண்ட மலைகளின் வழியே மழை மேகம் விரைந்து ஓட, நீர் ஆறாக ஓட, படமெடுத்தாடும் பாம்புகள் அஞ்சி ஓட பெருமை மிகு யானைகள் ஓட, சிங்கங்கள் திரியும் பக்கத்தே புன்னை மரங்கள் மிகு மலைச்சாரலில், வாளை மீன்கள் ஓடிடும் வாவியில் நீர் பாம்புகள் ஓட, புலிகள் (அஞ்சி) ஓடின. கருங்குரங்குகள் அஞ்சி ஓடின.

5. மதமயக்கம் தெளியாத செருக்குற்ற யானை கோபத்தால் தாக்குவதால் இருளை தரும் வண்ணம் தழைத்த சந்தனமரங்கள் ஒடிந்து வீழ்ந்து உருள, அதனால் சிதைந்த தேன் அடைகளிலிருந்து தேன் சிந்துவதால் அதிகளவு வழுக்கும் தன்மையுடையதான மருட்சியைத் தரும் பெரிய மலையில் உள்ள வழிகள் எளிதாக போகக் கூடியன அற்று.

6. வில்லைத் தாங்கிய இராம, இலக்குவர் நடந்து போகும் இம்மலை மின்னும் செம்மையான மணிகளைக் கொண்டது. அவை வீசும் ஒளி வான் முட்டும் தன்மையுடையது. தீச்சுடர் போல பரந்து ஒளி வீசுவது. அதனை வந்து அவிப்பார் போல் அம்மலையில் படிந்து இருந்த பொன் போன்ற நீரை எங்கும் பரப்புதலைச் செய்யும் ஒளிவீசும் தன்மையானது.

**7. மருவி ஆடும் வாவிதோறும் வானயாறு பாயும், வந்து**

**இருவி ஆர் தடங்கள் தோறும் ஏறுபாயும்: ஆறுபோல்**

**அருவி பாயும் முன்றில் ஒன்றி யானை பாயும்: ஏனலில்**

**குருவி பாயும்: ஓடி, மந்தி கோடு பாயும், மாடெலாம்.**

மலை பக்கங்கள் யாவும் நீராடுவதற்கரிய தடாகங்கள் தோறும் ஆகாய கங்கையின் நீர் வந்து பாயும். கதிர் அறுக்கப்பட்ட நிலப்பரப்பில் எருதுகள் பாய்ந்து விளையாடும். அருவிகள் யாவும் மலை முற்றங்கள் தோறும் யானைகள் விளையாடும். தினைக்கதிர்களில் குருவிகள் படிந்து உண்டு மகிழும். குரங்குகள் மலைக்கிளைகளில் தாவி விளையாடும்.

8. வான் வாழும் தேவர்களையும் தன் வாசத்தால் இழுக்கும் ஏலம் வாசமும் ஏனைய நறுமணமும் வீசும் அம்மலைக் குன்றுகள் தேன் சிந்தப்பட்டதால் வழுக்குவதால் வான் மீது போகும் மீன்கள் காலூன்றி போக இயலாது வழுக்கி போகின்றன. தவிர வானவில்லும் வழுக்குகிறது. வெண்நிலவான கூன் பிறையும் வழுக்கும். வானத்து உலாவும் ஏனைய கோள்களும் வழுக்கும் என்பர்.

**இராமன் முதலியோர் கிட்கிந்தை மலையை அடைதல்**

9. அத்தன்மையான மலைவழி சென்ற இராம, இலக்குவர் ஐந்தும் ஐந்தும் பத்து என எண்ணுதற்குரிய பத்து யோசனை தூரத்திற்கு மேலாக மலைமீது ஏறிச் சென்று பொன்மயமான வானுலகே பூமியிற் வந்தாற் போன்ற வாலியின் வாழ்விடமான கிட்கிந்தை என்ற மலையை அடைந்து மேற்கொண்டு யாது செய்வது என யோசித்தனர்.

**வாலியைக் கொல்லும் உபாயத்தை ஆராய்தல்**

10. அப்போது இராமன் சுக்ரீவனை நோக்கி நீ வாலி என்ற கொடிய நஞ்சுடன் போர் செய்யும்போது அதாவது நீ வாலியை போருக்கு அழைத்து நான் மறைந்து இருந்து அம்பு எய்ய யோசித்துள்ளேன். இதுவே என் கருத்து என்றான். பகைவனைப் பொருது அழிக்கும் கருத்துடைய சுக்ரீவனும் இதுவோர் நல்லதோர் உபாயம் என்றான்.

**இராமனது கருத்துக்குச் சுக்கிரீவன் இசைதல்**

11. இராமனின் கருத்து தனக்கு பொருந்துவதாக அமைய, வானத்து தேரான கதிரவன் மகன் சுக்கிரீவன் அலைமிகு பெரு வெள்ளத்தையுடைய கடல் பயத்தால் அடங்கவும் கருமுகில்கள் நாணி விலகவும் மண்ணுலகத்தார் உடல் வியர்த்து ஓடவும் தேவர் விம்மவும் ஏற்பட்ட பேரோசை திருமாலால் உட்கொள்ளப்பட்ட உலகு முழுவதும் தன்னகத்தே அடங்கியது.

**சுக்கிரீவனது போர் முழக்கம் உறங்கும் வாலியின் செவியற் சென்று சார்தல்**

12. போர் மேற்கொண்டு வந்தால் உனை அழித்து ஒழிப்பேன் என இடி இடித்தாற்போல் அகட்டி, கால்களை நீட்டி, உதட்டை மடித்து, தோள் தட்டி வலிய போருக்கு அழைக்கும் சுக்கிரீவனது ஆரவாரம் கிட்கிந்த மலையில் உறங்கிக் கொண்டிருந்த இடத்தோள், இடக்கண் துடிக்கும் வாலியின் செவியிற் புகுந்தது.

**அப்பேரொலியினைக் கேட்ட வாலி, உலகமெலாம் நடுங்கும்படி அடங்காச் சினமுடையவனாய்ச் சுக்கிரீவனோடு போர் செய்தற்கு விரைந்து எழுதல்**

13. **மால் பெருங் கடகரி முழக்கம், வாள் அரி**

**ஒர்ப்பது செவித்தலத்து என்ன ஓங்கிய**

**ஆர்ப்பு ஒலி கேட்டனன் அமளிமேல் ஒரு**

**பாற்கடல் கிடந்ததே அனைய பான்மையான்.**

பாற்கடலில் துயின்றதான தன்மை உள்ள வாலி மிகப்பெரிய மதயானையின் முழக்கத்தைக் (தன்) கொடுமை வாய்ந்த ஆண் சிங்கம் தன் செவியாற் கேட்டாற் போல் கேட்டான்.

14. மலையைப் போன்ற பெரிய தோளையுடைய வாலி தன் தம்பியாகிய சுக்கிரீவன் தன்னுடன் எதிர்த்த தன்மையை மனதில் எண்ணி சிரித்தான். அது பதினான்கு உலகங்களையும், திசைகளையும் கடந்து பாய்ந்து ஓடும்படி செய்தது.

15. ஊழிக்காலத்தின் இறுதியில் பேரலைகளையுடைய கடல் பொங்கிமேல் எழுந்தாற் போல் எழுந்தான் வாலி. அப்போது அவனது பாரம் தாங்காது கிட்கிந்தை மலை நிலத்துள் அழுந்தியது. அவன் தோள்களை அசைத்ததும் புயல் ஏற்பட்ட காற்றால் அருகே உள்ள பெரிய மலைகள் பலவும் சாய்ந்து வீழ்ந்தன.

**16. போய்ப் பொடித்தன மயிர்ப்புறத்த, வெம்பொறி:**

**காய்ப்பொடு உற்று எழு வட அனலும் கண்கெடத்**

**தீப்பொடித்தன, விழி: தேவர் நாட்டினும்**

**மீப்பொடித்தன புகை, உயிர்ப்பு வீங்கவே.**

வாலியின் மேனியின் கண் உள்ள மயிர்க்கால்களிடையே தீப்பொறிகள் தோன்றி புறத்தே சிதறின. அவனது விழிகளில் கனன்று எழும் வடவைத்தீயும் கண்ஒளி கெடும்படி தீத்திரளைச் சிந்தின. அவனது மூச்சுக்காற்று வெளிப்படுதலால் புகைத்திரள் தேவர்கள் வாழும் வானுலகிலும் மேலோங்கி பரவின.

17. ஒரு கை கொண்டு மறுகையை வாலி தட்டிய ஓசையால் உலகத்தினை தாங்கி நின்று காக்கும் கடமையுடைய திசை யானைகளும் தம் மதமாகிய இடித்தொகுதிகளும் தம் வலியிழந்தன. வானுலகும் நடுக்குற்றன. மலைகளும் பிளந்து பொடியாயின.

18. வந்தேன், வந்தேன் என வாலி கூறிய சொற்கள் கீழ்த்திசை முதலிய எட்டுத் திசையேயும் போய் ஒலித்தது. வாலி போருக்குக் கிளர்ந்து எழ, அவன் மணிகள் இழைக்கப்பட்ட முடியாகிய சிகரம் பட்டு உராய்ந்ததால், சந்திரன் உள்பட நட்சத்திரத் தொகுதிகள் யாவும் சிதறி வீழ்ந்தன.

19. வீசிய கரங்களினால் ஏற்பட்ட காற்றால் பறிக்கப்பட்ட மலைத்தொகுதிகள் திசையின் எல்லையைக் கடந்து வீழ்ந்தன. அவன் மேனியின் வெண்மை வாய்ந்த மயிர்க்கால்கள் தோறும் தோன்றிய தீப்பொறிகள் அண்டப்பரப்பின்

மதிற் சுவரை பொருந்தித் தடவின. (வாலியை) இவனைக் காண கூற்றுவனும் கூசினான். மேல் உலகும் நடுங்கியது.

20. பற்களை வாலி கடித்தபோது அவற்றின் கண் எழுந்த தீப்பொறிகள் மேகத்தின் கண்ணே கார் மேகங்கள் பரஸ்பரம் மோதியபோது உருவான இடித்தொகுதி போல் எங்கும் சிதறின. தோள்களை அசைத்த மட்டில் அதில் இருந்து அழகிய மணிகள் மின்னல்போல சிதறி வீழ்ந்தன.

21. நிலவுலகும் அதன் நான்கு திசைகளில் சுற்றி உள்ள கடல்நீரும் நாகர்களும் யாவுக்கும் மூலமாகிய மூலப்பகுதியும் அழியும்படி முடிவில் அழிக்கும் ஊழித் தீ போன்றும் தன்னாற் கடையப்பட்ட பாற்கடலில் தோன்றிய ஆலகால நஞ்சைப் போன்று வாலி தோன்றினான்.

**போருக்குச் செல்லுதல் வேண்டாம் என வாலியைத் தாரை விலக்குதல்**

22. **ஆயிடைத் தாரை என்று அமிழ்தின் தோன்றிய**

**வேயிடைத் தோளினுள், இடை விலக்கினார்,**

**வாயிடைப் புகைவர, வாலி கண்டரும்**

**தீயிடைத் தன் நெடுங் கூந்தல் தீகின்றாள்**

அப்போது தாரை எனும் உள்ள அமுது வடிவான பச்சை மூங்கில் போன்ற தோளினைக் கொண்டவள், வாலியின் வாயிடத்தே புகை எழ கண்களிலிருந்து பரவும் கோபத்தீயினால் தன் கூந்தல் தீய்ந்திடும் நிலையில் அவனைத் தடுத்திட்டாள்.

**வாலி அவள் தடையை மீறுதல்**

23. விலக்காதே, எனை விடுவாயாக, வலிய போருக்கு அழைத்தவன் நெஞ்சத்தைக் கலங்கச் செய்து, பாற்கடல் கடைந்து அமுதம் கொண்டது போல் அவன் இனிய உயிரை குடித்து விரைந்து வருவேன் மலையிடை வாழ் மயில் போன்றவளே என தாரையை நோக்கி வாலி கூற அவள் பின்வருமாறு கூறுவாள்.

**'சுக்கிரீவன் வலிய துணையினைப் பெற்றே போருக்கழைக்கிறான்' எனத் தாரை கூறுதல்**

24. வெற்றியையுடைய வேந்தே, (பகைவனாகிய சுக்கிரீவன்) நின்னுடைய பெரிய திரண்ட தோள்களில் வன்மைக்குத் தோற்று வலியழிந்தவனாகி வருத்தமுற்று முன்னே நாட்களில் ஓடியொளிந்தான். (அவ்வாறு தோற்றோடியவன் நின்னை எதிர்த்துப் போர் செய்தற்கேற்ற) பேராற்றலைப் (புதுவாகப்)

பெற்றாலுமல்லன். (அவன்) மீண்டும் நின்னுடைய நின்னுடன் போர்புரிதற்கு வந்துற்றமை மிகப் பெரிய துணையினைத் தான் பெற்றுடையவனாகிய வன்மை கருதியேயாகும்' என்று கூறினாள் (தாரை)

**வாலி தன் பேராற்றலை எடுத்துக் கூறித் தேற்றுதல்**

25. தையலே, மூவுலகும் ஆகிய எல்லை அற்ற உலகு யாவும் சேர்ந்து எனக்குப் பகையாக வரினும் அவையாவும் என் பெருவலிமைக் தோற்று அழியும் என்பதற்குச் சான்றுகள் உள கேட்பாயாக.

26. '**மந்தர நெடுவரை மத்து, வாசுகி**

**அந்தம் இல் கடைகயிறு, அடைகல் ஆழியான்,**

**சந்திரன் தூண், எதிர் தருக்கின் வாங்குநர்**

**இந்திரன் முதலிய அமரர், ஏனையோர்'**

மந்தரம் என்ற மலையை மத்து ஆகவும், வாசுகி என்ற பாம்பு கயிராகவும், சக்கர ஆயுதம் உள்ள திருமால் அடைகல்லாகவும், சந்திரன் தூணாகவும் அமைய எதிரெதிரே நின்று தேவர்களும் அசுரரும் கடைந்தனர்.

27. மயில் போன்ற சாயலும், குயில் போன்ற குரலும் உள்ளவளே இப்படி தேவ அசுரர் மந்தரமலையை மத்தாக கொண்டு கடைய இயலாத நிலை கண்டு வான் ஒருவனே அதனை தயிர் கடைவதுபோல் எளிதிற் கடைந்து தேவருக்கு அமுதை வழங்கிய பெரும் செயல் மறக்கும் தன்மையானதோ.

28. பெருவலிமை மிகு தேவர், அசுரர் யாவரும் என் வலிமைக்கு தோற்றனர். ஏனையோர் பற்றி கூறவும் வேண்டுமோ? யமனும் என் பெயர் கூற நடுங்குவார். இனி பகைவனுக்கு துணையாகி வந்து எனை எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையார் யார் உளர்?

29. அறிவு இல்லாதவனை எதிர்த்து வரினும் அவர் பெற்றுள்ள பெரும் செல்வம், வரம், பலம், மனவலிமை என்பவற்றே சரிபாதியும் எனை சேர்ந்து விடும். ஆதலால் அன்னோர் எனை பகைத்தால் எப்படி? நீ வருந்தாதே என்று தாரைக்குக் கூறினான்.

**சுக்கிரீவனுக்குத் துணையாக இராமன் என்பவன் நின்னைக் கொல்லுதற் பொருட்டு வந்துள்ளான் எனத் தாரைக் கூறுதல்**

30. அம்மொழியைக் கேட்ட தாரை அரசே இராமன் என்பான் அச்சுக்கிரீவனுக்கு இனிய உயிர் நண்பனாக பொருந்தி உன் உயிரை கொல்லுதற்காக அவனுடன் வந்துள்ளான் என நெருங்கிய அன்புடைய சிலர் சொன்னார்கள் என்றாள்.

**வாலி இராமனுடைய நற்பண்புகளை யெடுத்துரைத்து தாரையின் கூற்றினை மறுத்தல்**

31. வருந்தி புரந்த வலிய இருவினைகளுக்கு அழிவை செய்யும் வழியைக் காணாது வருந்தும் உயிர்களுக்கு அவை உய்யும் பொருட்டு அறத்தின் நெறிமுறை யாவும் வழி வகுத்துக் கொடுத்த இராமனுக்கு தகுதியற்ற மொழிகளைக் கூறி எத்தகைய தீங்கு செய்தாய்? பெண் தன்மைக்கேற்ற பேதமை புரிந்தனை!

32. என் உயிரைக் கவர இராமன் வந்துள்ளான் என்ற இந்நிலை அவனின் இம்மை, மறுமை ஆகிய பிறப்புகளின் பயன்களைச் சீர்தூக்கும், அறவோனாகிய இராமனுக்குப் பெருமை தருமோ? இப்பழிச் செயலால் அவன் இங்கு பெறும் ஊழியந்தான் என்ன? உயிர் யாவும் காக்கும் ஒப்பற்ற அறக்கடவுள் இப்படி தன்னைத்தானே அழித்துக் கொள்ளுமோ?

33. தான் பெற்ற பெரிய உலகு யாவும் தன்னைப் பெற்ற தாய்க்கு மாறான மாற்றந்தாய் ஏவலனால் அவள் மகனுக்கு பெரு மகிழ்வுடன் கொடுத்தருளிய பெரியோன் ஆகிய இராமன் செயலை புகழ்ந்து போற்றாதவளாய் ஆனாய்! இத்தகைய மொழிகளை நீ கூறல் ஆகுமோ?

34. தனக்கு ஒப்பாக வேறு எவரையும் பெறாத இராமன் நிலை பெற்றுள்ள பேர் உலகு யாவும் ஒன்றாக கூடி எதிர்த்தாலும் தன் வெற்றியை தரும் வில்லையன்றி வேறு ஒன்றைக் கொள்வானோ? புன்மையான (இழிய) செயல்மிகு குரங்கொடு பொருந்தும் நட்பினையுடையவன் ஆனானோ?

35. **தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர்**

**இம்பரின் இலது’ என எண்ணி ஏய்ந்தவன்**

**எம்பியும் யானும் உற்று எதிர்த்த போரினில்**

**அம்புஇடை தொடுக்குமோ, அருளின் அழியான்?**

தம்பியரையன்றி இவ்வுலகில் தனக்கென வேறு ஓர் உயிர் இல்லை என்று நினைத்து நடப்பவனும் கருணைக்கு நிலைக்களமாகிய கடல் போன்றவனும் ஆகிய இராமன் என் தம்பி ஆகிய சுக்கிரீவனும் நானும் எதிர்த்து நின்று போரிடும்போது தான் இடையே வந்து அம்பினை எய்வானோ?

36. நீ சிறிது நேரம் இங்கு இருப்பாயாக! கண் இமைக்கும் நேரத்தே போருக்கு வந்த சுக்கிரீவன் உயிர் பருகி, அவனுக்குத் துணையாக உடன் வந்தவர்களையும் அழித்து மீள்வேன். கலங்காதே' என்றான். அதனைக்கேட்ட மணம் வீசும் கூந்தல் உடைய தாரை மேலும் கூற அஞ்சினாள்.

**போர் வேட்டெழுந்த வாலி ஒரு குன்றின் புறத்தே வந்து தோன்றுதல்**

37. வாலி விரைந்து போர் செய்ய விரும்பி வான் உலக எல்லைக்கும் அப்பால் கிளர்ந்து ஓங்கிய தோள் ஆகிய மலை இரண்டும் கொண்டவனாக கீழ்திசை தோன்றிய சூரியனைப் போல் வளம் மிகு மலையின்மேல் வந்து தோன்றினான்.

**வாலியின் வீரத் தோற்றம்**

38. **நின்றான், எதிர் யாவரும் நெஞ்சு நடுங்கி அஞ்சுத்**

**தன் தோள்வலியால் தனிமால் வரை சாலும் வாலி,**

**குன்றூடு வந்து உற்றனன்: தோள் அவுணன் குறித்த**

**வன் தூணிடைத் தோன்றிய மா நரசிங்கம் என்ன**

தன் தோள் வலிமையால் ஒப்பற்ற மலை போன்ற வாலி கொடுமை மிகு இரணியன் குறித்துக் காட்டிய தூணில் இருந்து தோன்றிய பெருமை வாய்ந்த சிங்கம் போல், மலையின் மீது வந்து யாவரும் பயந்து நடுங்கும்படி நின்றான்.

**வாலி சுக்கிரீவனை எதிர்ப்பட்டு ஆரவாரித்தல்**

39. வாலி, போர் முழுக்கம் செய்யும் தம்பியாகிய சுக்கிரீவனைச் சினந்து நோக்கினான். தானும் பேராரவாரம் செய்தான். வியர்த்து நடுங்கிய மேகத்தில் பேரிடிகள் வீழ்ந்தன. மேகந்தவழும் நீண்ட மலையை போன்ற திருமால் உலகை தாவி அளந்தபோது எடுத்த பாதம்போல போர் எல்லா உலகும் தனக்குள் அகப்பட சூழ்ந்துக் கொண்டது.

**வாலி சுக்கிரீவரது போர்த் தோற்றத்தைக் கண்டு, வியந்த இராமன், அதனை இலக்குவனுக்குக் காட்டிக் கூறுதல்**

40. இராமன் அன்புடைய தம்பியாகிய இலக்குவனை நோக்கி ஐயனே நன்றாக கூர்ந்து நோக்குவாயாக அசுரரும் தேவரும் ஒருபுறம் இருக்கட்டும் எந்தக்கடல், எம்மேகம், எக்காற்று வெம்மை மிகு எவ் ஊழித்தீ இவ்வுலகில் இவ்வாலியின் மேனியை தனித்தனியே ஒத்து தோன்றவல்லன?

**சுக்கிரீவனது ஒவ்வாச் செயல் நினைந்து உணர்விழந்தேன்' என இலக்குவன் கூறுதல்**

41. வள்ளல் ஆகிய இராமனுக்கு இளையவனாகிய இலக்குவன் கூறுவான், 'இவன் தன் தமையனது வாழ்நாளைக் கவர்ந்து கொள்ளுதற்கான கொடுமை மிகு கூற்றுவனைத் தன்னுடன் அழைத்து வந்துள்ளான். பலரும் இகழும்படி குரங்கினது போர்த்தொழிலை செய்ய எண்ணினான் என்பதால் ஏற்படும் பெரும் துயர் என்மனதில் தைத்ததால் ஒன்றும் உணரும் உணர்வின்றி கலக்கம் அடைந்துள்ளேன் என்றான்.

42. மனம் தாங்காது மேலும் கூறத் தொடங்கும் இலக்குவன், 'பெருவீரனே (இராமனைப் பார்த்து) அறநெறி சிதையும்படி தீசெயலை செய்பவர்களை நம்புதல் நன்மை தராது. பகைவன் என தன் தமையனையே சொல்ல வந்த இவன்(சுக்ரீவன்) மாற்றாருக்கு உறவினராதல் எங்ஙனம்?' என வினவினான்.

**இலக்குவனுக்கு இராமன் ஏற்ற மறுமொழி பகர்தல்**

43. **'அத்தா! இது கேள்' என ஆரியன் கூறுவான்: 'இப்**

**பித்து ஆய விலங்கின் ஒழுக்கினைப் பேசல் ஆகுமோ?**

**எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தார்கள் எல்லாம்**

**ஒத்தால், பரதன் பெரிது உத்தமன் ஆவது உண்டோ?**

ஐயனே! இதனைக் கேள் என இராமன் இலக்குவனை நோக்கிக் கூறுவான், மயங்கித் திரியும் இவ்விலங்காகிய குரங்கின் நடைமுறையை ஒழுகலாற்றை பேசல் முறையா? எத்தகைய தாயார் வயிற்று பிறந்தவராயினும் பின்னே பிறந்த தம்பியர் யாவரும் இணங்கி நடப்பின் பரதன் நற்குணங்களால் மிக உயர்வானவன் என உலகத்தவரால் போற்றப்பட இயலுமோ?

44. விற்படையைத் தாங்கி நிற்கும் மலை போன்ற மார்புடையவனே! வாய்மை பண்பாகிய நல் ஒழுக்கத்தை கடைபிடித்து ஒழுகுபவர் மிகச்சிலரே. வாய்மைக்கு மாறாக நடப்பவரே பலர் என்பதே உண்மை. நண்பராக கிடைக்கப் பெற்றவரிடம் பயனைப் பெற்றுக் கொள்வதனை விட்டு ஒரு குற்றமும் இல்லாதவர் என்று கொண்டு பழக தகுதி உடையவர் யார் உளர்? என இராமன் இலக்குவனை நோக்கி கூறினான்.

**வாலி சுக்கிரீவர் இருவரும் நெருங்கிப் பொருதல்**

45. வீரம், போர்த்திறன் மிகு இராமனும் இலக்குவனும் உரை செய்து கொண்டிருந்தபோது தேரில் பவனிவரும் சூரிய புதல்வன் சுக்கிரீவனும் இந்திரன்

மைந்தன் வாலியும் இவ்வுலகில் திரியும் பனி படர்ந்த மலையினைப் போன்று பெரு வலிமை மிக்க திசையானைகள் இரண்டு மோதின போல் மோதினர்.

**இருவரும் சாரி திரிதல்**

46. வாலியும் சுக்கிரீவனும் மலையோடு மலை பொருதனர். உயிர் கொல்ல வல்ல வலிய ஆண் சிங்கம் ஒன்றோடு ஒன்று எதிர்த்து பொருதல் போல் பொருதனர். ஓரிடத்தே நிலையாக நின்றும் பின் எங்கும் சுற்றித் திரிந்தும் பொருதனர். இவரின் போரால் நிலமானது குயவனாற் மட்கலம் வனைதற் பொருட்டு சுழற்றப்படும் சக்கரம் போலானது.

47. தம் தோளால் தோளினை தேய்த்தல் காரணமாகவும் தொன்மையான நிலம் தாங்க இயலாத ஆற்றல் உள்ள காலினால் காலைத் தேய்த்தலாலும் ஏற்பட்ட தீத்திரள் ஒளியுடன் மின்னல்போல் வானத்தே பரவிய கோள்கள் இரண்டு தம்மிற் மோதினாற்போல தம் ஆற்றலால் அவர்கள் இருவரும் சமமாக மோதினர். கொதிப்பு அடைந்தனர்.

**அவ்விருவரும் சுந்தோப சுந்ததை ஒத்துத் தோன்றுதல்**

48. தம் தோள் வலிமையால் மேம்பட்டவரும் தாம் ஒரே தாய் வயிற்று பிறந்தவர்களும் இளமைமிகு மங்கை காரணமாக போர் புரிந்தவர்களும் ஆகிய வாலி, சுக்கிரீவன் ஆகிய இருவரும் சிதறிய செவ்வரிபடர் ஒளிமிகு கண் உள்ள திலோத்தமை என்ற தேவமகள் மீது கொண்ட காதலால் தம்மிடையே செருக்குற்று சண்டை செய்த சுந்தன், உபசுந்தன் எனும் பெயருடைய பழைய அசுரர் இருவரையும் போன்றவர்கள் ஆயினர்.

**இருவரும் செய்த பெரும்போர்**

49. கடல் ஒன்றோடு ஒன்று போர் புரியவும், மேரு மலை ஒன்றோடு ஒன்று போர் புரியவும் சீற்றம் எனும் வெம்மைக் குணம் இருவரும் கொண்டு எதிர் நின்று போர் செய்யவும் போன்று வாலி சுக்கிரீவன் போர் நிகழ்ச்சிக்கு உவமையாக வேறு எதனையும் காணோம்.

**இருவரது கடும் போரைக் காண அஞ்சித் தேவர்கள் ஓடி மறைதல்**

50. **ஊகங்களின் நாயகர் வெங்கண் உமிழ்ந்த தீயால்,**
**மேகங்கள் எரிந்தன வெற்பும் எரிந்த் திக்கின்**
**நாகங்கள் நடுங்கின: நானிலமும் குலைந்த:**
**மாகங்களை நண்ணிய விண்ணவர் போய் மறைந்தார்.**

குரங்கினத் தலைவர்களாகிய சுக்கிரீவனதும் வாலியினதும் வெம்மை மிகு விழி சொறிந்த தீயால் கார்மேகங்கள் தீய்ந்தன. மலைகள் எரிந்து சாம்பலாயின. திசையானைகள் அஞ்சி நடுங்கின. விசும்பின் (வான்) தேவர்கள் ஓடி மறைந்தனர்.

**இருவரும் வானிலும் மண்ணிலும் தொடர்ந்து ஓடிப் பொருதல்**

51. இருவரும் வானத்தின் மேல் உளரோ, நெடிய மலை உச்சியில் உளரோ, புறத்தே உள திசைகளின் எல்லையில் உளரோ, கண்களில் உளரோ என யாவரும் வியக்கும்படி வாலி, சுக்கிரீவன் ஆகிய இருவரும் உடலில் புண்பட்டு அதன்மீது குருதி சிந்தும்படி கடித்தும் குத்துவதுமானார்கள்.

**அவ்விருவரது போர் முழக்கமும் குத்துதலின் ஓசையும்**

52. ஏழு கடல்களும் ஒத்து ஒன்றாகியதும் எட்டும் இரண்டுமாகிய பத்து திசைகளிலும் நெருங்கி பரவியதும் ஆகிய பெருங்கடலிற் ஒலிக்கும் ஆரவாரத்தினை விட ஐந்து மடங்கு மிக்கு ஆரவாரம் ஒலிப்பதாயிற்று, அவர்களின் ஆரவாரிக்கும் ஓசை. வன்மையான தோள், மார்பில் கைகள் உள்ளே அழுத்துமாறு குத்துவதால் ஏற்படும் ஓசை யுக முடிவில் கருமேகங்கள் இடிக்கும் இடி முழக்கத்தை போன்று தோன்றியது.

**ஒருவரையொருவர் கடித்தலாற் பொடித்த இரத்தம் விண்மீன்களிலும் மேகத்திலும் படிந்த தோற்றம்**

53. வன்மை மிகு பெரு வீரர் இருவரும் மேலே பாய்ந்து சென்று தம் வாயில் உள்ள வெம்மையான பற்களால் கடித்ததால் பொங்கி பாயும் உதிரம் திசைதோறும் தெரிந்ததால் எல்லா பக்கத்தேயும் தோன்றிய செழித்த ஒளிவீசும் நட்சத்திரங்கள் யாவும் செவ்வாய் எனும் கோளினை போல் ஆயின.

**வாலியின் தோள்களும் சுக்கிரீவன் மார்பும் தகர்தல்**

54. காய்ந்த வலிய இரும்பின் மேல் சம்மட்டி கொண்டு அடிக்க அதனின்றும் தீப்பொறிகள் சிந்திச் சிதறுவன போல் தீப்பொறிகள் பறக்க இந்திரன் புதல்வன் ஆகிய வாலியின் தோள்களும் சூரிய புதல்வனாகிய சுக்கிரீவனின் மார்பும் அழகிய வலிய நீண்ட கைகள் தாக்குவதால் சிதைவுறுவனவாயின.

**இருவரும் செய்த போர்ச் செயல்கள்**

55. **உரத்தினால் மடுத்து உந்துவர், பாதம் இட்டு உதைப்பர்:**
**கரத்தினால் விசைத்து எற்றுவர்: கடிப்பர்: நின்று இடிப்பர்:**
**மரத்தினால் அடித்து உரப்புவர்: பொருப்பு இனம் வாங்கிச்**
**சிரத்தின் மேல் எறிந்து உறுக்குவர்: தெழிப்பர்: தீ விழிப்பர்:**

மார்பினில் தாங்கி எடுத்து எறிவர், கால்களினால் உதைத்து தள்ளுவர், கைகளால் வேகமாக வீசி எறிவர், கால்களால் உதைத்து தள்ளுவர், கடிப்பர், நேர் நின்று மோதுவர், அதட்டி மரங்களினால் அடிப்பர், மலைகளைப் பெயர்த்து எடுத்து தலையின் மேல் வீசி துன்புறுத்தி ஏசி அதட்டுவர், தீப்பொறி பறக்க சினந்து நோக்குவர்.

56. ஒருவரையொருவர் இறுகப் பிடித்து உயரத் தூக்கி வீசி எறிவர். எறியப்பட்டவர் வந்ததும் மார்பைக் கொடுத்து எதிர்ப்பர். கைகள் உள்ளே பதியும்படி குத்துவர். விரைவுடன் சுழலும் காற்றாடி போல சுழன்று அக்குத்துக்களைத் தடுப்பர். இருவரும் பின் எழுவர். இறுகத் தழுவுவர் பின் கீழே விழுவர்.

57. வாலினால் மார்பை இறுக பிணித்தவராக நெரிந்து சிதையும்படி இழுப்பர். காலினால் நீண்ட காலினை பிணைத்து வருந்துவர். பிடியில் இருந்து கழன்று வெளிப்படுவர். வேற்படை போன்ற கூரிய நகத்தால் வலிய தோலால் மூடப்பட்ட உடம்பினை மலையில் உள்ள குகை என எண்ணும்படி கிழித்து துளைப்பர்.

58. மண்ணிற் தோன்றிய மலைகளும் மரங்களும் கண்ணெதிர்ப்பட்ட சகல பொருளும் தம் மனவலியால் கைகளாற் பெயர்த்து எடுத்து வீசலாலும் புடைத்து தாக்குவதாலும் அழிந்தனவாக விண்ணிடையே மறைந்தன. அலை மிகு கடலில் வீழ்ந்தன.

59. யாவரும் ஒருவருக்கொருவர் போரில் தோற்று பின் அடையவில்லை. கோபம் கொண்டு பரஸ்பரம் தேய்த்து வருத்துவதால் மயிர்க்கால் முழுதும் செந்தீத்திரள் வெளிப்பட உலர்ந்த புற்கள் நிரம்பிய காட்டிலே தீப்பற்றி எரிந்தாற்போல இருவரும் போர் செய்தனர். தேவரும் அஞ்சி ஓடினர். இனி கூறத்தக்கது வேறு யாது உளது?

**வாலி, சுக்கிரீவனைத் தாக்கி வருத்துதல்**

60. **அன்ன தன்மையர் ஆற்றலின் அமர்புரி பொழுதின்,**

**வல்நெடுந் தடம் திரள் புயந்து அடுதிறல் வாலி,**

**சொன்ன தம்பியைத் தும்பியை அரி தொலைத் தென்னக்**

**கொன் நகங்களின், கரங்களின் குலைந்து உக மலைந்தான்.**

அத்தன்மையரான இருவரும் பெருவலிமையுடன் போர் செய்யும் போது வலிய மீண்ட பெருந்தோளினையும் கொல்லும் வலிமையும் உடைய வாலி என்பான் சுக்கிரீவனாகிய தம்பியை யானையைச் சிங்கம் அழிப்பது போல் வலிய நகம், கையால் நிலைகுலைந்து விழும்படி தாக்கி வருத்தினான்.

**வாலியால் தாக்கப்பட்டு வருந்திய சுக்கிரீவன், இராமனையடைந்து அவன் பணித்தவாறு அடையாள மாலை அணிந்து சென்று போர் புரிதல்**

61. வாலி தாக்கியபோது சூரிய குமாரனாகிய சுக்கிரீவன் மிக வருந்தி இராமன் உள்ள இடத்துக்குப் போய் நடுங்கிய மனத்தோடு வாட்டம் உற்றவனாக இருக்க, இராமன் நீ மனம் நடுங்காதே! வருந்தாதே! உங்களிருவருடைய வேறுபாட்டினைத் தெரிந்து கொள்ள இயலாது உள்ளேன். நீ கொடிப் பூவினைச் சூடி செல்வாயாக என்றான். சுக்கிரீவன் மீள போர் செய்வானாயினான்.

**சுக்கிரீவன் வாலியைத் தாக்குதல்**

62. விண்மீன்கள் மாலையாகத் தொடுத்து அணியப்பட்டது போல் விளங்கும் தலையையுடைய சுக்கிரீவன், வன்மையுள்ள புலியும் மேகத்திலுள்ள வல்ல இடியேறும் அஞ்சி பயப்படும்படி ஆரவாரம் செய்தவனாக விரைந்து வந்து அழிக்க வல்ல ஆற்றல் படைத்த வாலி அச்சம் கொள்ளும்படி அறைந்து தாக்கினான். பலமுறை குத்தினான்.

**வாலி சுக்கிரீவனை உயிர்த்தலத்தில் புடைத்து உதைத்தல்**

63. சந்தேகமுற்ற மனத்தினன் ஆகிய வாலி யமனும் நெஞ்சம் நடுங்கும்படி கோபித்து நோக்கி, மனதுள் இகழ்ந்து முறுவலித்து சூரியன் மகனாகிய சுக்கிரீவனை உணர்வு அற்று சோரும்படி அவனின் உயிர் நிலையாகிய அங்கங்கள் முழுவதும் வலிய தன் கரம், கால் என்பன மூலம் அடித்தான், உதைத்தான்.

**வாலியினால் நெருக்கப்பட்டுக் கலங்கிய சுக்கிரீவன் இராமனிருக்கின்ற திசைநோக்கி விழித்தல்**

64. **கக்கினான் உயிர், உயிர்ப்பொடும்: வாவிகளின், கண்ணின்**

**உத்தது, ஆங்கு எரிப்படலையோடு உதிரத்தின் ஓதம்;**

**திக்கு நோக்கினன், செங்கதிரோன் மகன்: செருக்கிப்**

**புக்கு, மீக்கொடு நெருங்கினன், இந்திரன் புதல்வன்**

சிவந்த கதிர்களை உடைய சூரியனின் புதல்வன் சுக்கிரீவன் பெருமூச்சுடன் உயிரைக் கக்குவான். அவனது காது, கண்களிலிருந்து தீப்படலத்துடன் இரத்த வெள்ளம் பரவியது. முன் எதிர்க்கும் ஆற்றல் அற்றவனாக இராமன் இருக்கும் திசையைப் பார்த்தான். இந்திரன் குமாரனாகிய வாலி செருக்குற்று சுக்கிரீவன் மீது பாய்ந்து அவனைத் தூக்கி நெருக்கி வருத்தினான்.

**வாலி சுக்கிரீவனை நிலத்தில் மோதுதற்குப் பற்றி மேலே தூக்கியபொழுது இராமன் வாலியின் மேல் அம்பு செலுத்துதல்**

65. இவனை தூக்கி எடுத்து தரையில் மோதுவேன் என்று எண்ணி தம்பி சுக்கிரீவனை இடை, கழுத்து இரண்டையும் தன் இரு கரம் செலுத்தி உயரத்தூக்கிய வாலி மீது இராமன் ஓர் அம்பு எடுத்து வில் வளைத்து நாண் ஏற்றி விரைந்து செலுத்தினான்.

**இராமபாணம் வாலியின் மார்பை எளிதில் துளைத்தல்**

66. அவ்அம்பானது நீரும் நீரைத் தோற்றுவித்த நெருப்பும் வலிய தன்மையுடைய காற்றும், கீழே பரவி உள நிலமும் ஆகிய நாற்பூதங்களைச் சேர்ந்த பெரு வலிமை உடைய வாலியின் மார்பை வாழையின் கனியினை ஊசி சென்று சேர்வது போல் சென்று தைத்தது.

**வாலி கலங்கி விழுதல்**

67. விளங்குகின்ற தோளின் வலிமை குறைந்த தன் தம்பியாகிய சுக்கிரீவன் மீது அருள் செலுத்தாமல் அவனை வலிய பூமி மீது மோதுவதற்கு விரைந்த போர்த்திறன் உள்ள வாலி மனம் கலங்கி ஊழிக்காலத்தே வலிய வேகத்துடன் கூடிய பெரும் காற்று வீசுதலால் மேரு மலையும் வேருடன் வீழ்ந்தது போல் விழுந்தான்.

**வாலி, சுக்கிரீவனைப் பற்றிய பிடியில் நெகிழ்ந்து, தன் மார்பில் தைத்த அம்பினைக் கையினால் இறுகப் பற்றுதல்**

68. பேரிடி விழுவதால் மலை வேருடன் சாய்வது போல நிலத்தின் மீது விழுந்து கிடந்த போரில் கொல்லும் தொழில் வல்ல வாலியானவன் வெஞ்சுடரோனாகிய சூரியன் பெற்ற புதல்வனாகிய சுக்கிரீவனை வன்மையுடன் இறுகப் பற்றிய கரம் நெகிழ்ந்தாயினும் கொடுமை மிகு அம்பினைப் பிடித்த கை நெகிழாதவனாயினான்.

69. வெற்றியைத் தரும் இராமனின் கொல்லும் தன்மை வாய்ந்த அம்பு வாலியின் வன்மைமிகு மார்பில் ஊன்றியது. அது அப்புறத்தே விரைந்து போவதன் முன் மிக்க வலிமையுள்ள தன் கரம் கொண்டு அதனைப் பற்றி தன் வால், கால் மூலம் இறுகப்பிடித்து தடுத்தான். வெற்றி கொள்ள வல்ல கொடுமை வாய்ந்த யமனும் இச்செயலைக் கண்டு நடுங்கினான்.

**வாலியின் சீற்றமும் ஐயமும்**

**70. எழுந்து, 'வான் முகடு இடித்து உகப் படுப்பல்' என்று, இவரும்:**

**உழுந்து பேருமுன், திசை திரிந்து இறுப்பல்' என்று வறுக்கும்,**

**விழுந்து பாரினை வேரொடும் பறிப்பல்' என்று ஓரும்:**

**'அழுந்தும் இச்சரம் எய்தவன் ஆர்கொல்? என்று அயிர்க்கும்.**

எழுந்திருந்து வாலி வானகத்தின் மேல் முகட்டினை இடித்து சிதையும்படி அழிப்பேன் என்று ஏற முயல்வான்; எல்லாத் திசைகளிலும் சுற்றித் திரிந்து பகைவரை அழித்தொழிப்பேன் என கோபிப்பான்; விழுந்து நில உலகை வேருடன் பறித்து எறிவேன் என எண்ணுவான்; அழுந்தவூன்றிய இப்படைகலத்தை என்மேல் எய்தவன் யாரென சந்தேகப்படுவான்.

**வாலி தன் மார்பில் வைத்த அம்பினைப் பற்றிப் பறிக்க முயன்று பறிக்க வராமையின் வருந்துதல்**

71. தன் கையினைத் தரையுடன் அறைந்து தாக்குவான்; தீப்பொறி பறக்க சகல பக்கங்களிலும் வெகுண்டு நோக்குவான்; சுட்டு வருத்தும் அம்பினைத் தன் இரு கரத்தால் பற்றிக் கொண்டு வால், காலால் வலிதிற் பறிக்க முயன்று வராமையால் பெரிதும் வருந்துவான்; மலை போன்று புரள்வான்.

**வாலி தன்மேற் படைக்கலம் எய்தோர் யாவரோ என ஐயுறுதல்**

72. தேவர் எய்தனரோ என ஐயுறுவான்; தேவர் இக்கொடும் செயலில் ஈடுபட்டிருப்பாரோ அவர்களுக்கு ஆற்றல் உளதோ? என்பான்; வேறு யார்? என கூறி இகழ்ந்து சிரிப்பான்; தான் ஒருவனாகவே நின்று இறைவன் மூவரையும் ஒத்தமைந்த பேராற்றல் படைத்தவனது செயலே இதுவாகும் என துணிந்து பின்வருமாறு கூறுவானாயினான்.

**வாலி தன்னுயிரை வாங்கிய படைக்கலம் எத்தகையதோ என ஐயுறுதல்**

73. இப்படைக்கலம் சக்கரம்தானோ? அல்லது நீலகண்டனின் சூலப்படையோ? அன்றின் மலையை ஊடுருவிப் பாய்ந்த முருகனின் வேற்படையும் பயத்தை தரும் இந்திரனின் வச்சிரப்படையும் என் மார்பிற் ஊடுருவிச் செல்லும் அளவு வன்மையுடையது ஆகுமோ? இப்படை யாருடையது? என்று ஐயுற்று மனம் வெதும்புவான்.

**வாலி தன்னுயிரைக் கவர்ந்த படைக்கலத்தின் ஆற்றலை வியந்து அப்படைக்கலம் அம்பு என்பதனைக் கண்டறிதல்**

74. பலமுறை பல்லினால் கடித்து இழுப்பான்; தன் மார்பினுள்ளே தைத்து வருந்திய (உயிரை) அம்பினைக் கண்டான். வெம்மை வாய்ந்த இவ்அம்பு வில்லின் கண் தொடுத்து எய்ய இயலாதது என வியப்புறுவான். இதனைப் பெருமை மிகு மறை முனிவர் சொல்லின் துணையினால் செலுத்தினரோ என்பான்.

**அம்பினை எய்தவன் பெயர் யாதென அறிய எண்ணி வாலி தன் வன்மையால் அதனைப் பறித்தெடுத்தல்**

**75. சரம் எனும்படி தெரிந்தது: பலபடச் சலித்து என்?**

**உரம் எனும் பதம் உயிரொடும் உருவிய ஒன்றைக்**

**கரம் இரண்டினும் காலினும் வாலினும் கழற்றிப்**

**பரமன் அன்னவன் பெயர் அறிவேன்' எனப் பறிப்பான்**

இது அம்பு என்பது நன்று புலனாயிற்று. பலவாறாக ஐயுற்று வருந்துதலால் பயன் யாது? மார்பு எனும் இடத்தை உயிருடன் ஊடுருவி துளைத்த ஒப்பற்ற படைக்கலமாகிய இதனை இருகை, கால், வாலினால் பெயர்த்தெடுத்து பெரியோனது பெயர் இதுவென அறிவேன் என கருதி பறித்து எடுப்பான்.

76. சிங்க ஏறு போன்ற வாலி உயர்ச்சி, அருமை, பெருமை வாய்ந்த ஆற்றல் மிக்க மனத்தவனாய் அம்மனத்திற்கேற்ற உள்ளக்கிளர்ச்சியுடன் ஊக்கமாக தன் மார்பில் அழுத்திய அந்த அம்பினை வாங்கினான். அங்கு அதனை நேரில் கண்ட தேவர், அசுரர், ஏனையோர் தோள் பூரிக்கப் பெற்றனர். வீரர்களை வியந்து பாராட்டாதார் யாருளர்?

**வாலி அம்பினைப் பறித்த அளவில் அவனது மார்பினின்றும் உதிரம் வெள்ளமெனப் பெருகுதல்**

77. பீரிட்ட ரத்த வெள்ளமானது அலைகள் சிதறி பரவும் கடலை போன்று ஆரவாரித்து வன்மையும் பெருமையும் வாய்ந்த இவ்வுலகின் எல்லையைக் கடந்து சென்றது என்ற அளவில் அளவிட்டுக் கூற முடியுமா? காடு, கரிய பெரும் மலைத்தொடர் கடந்தது. அக்கடலின் கண்ணும் ஊடுருவிச் சென்று அக்கடலைப் பெயர்த்து அலைகளால் உயர்ந்து விளங்குவதாயிற்று.

**வாலியின் மார்பிற் பெருகிய குருதிப் பெருக்கைக் கண்ட சுக்கிரீவன் உடன்பிறப்பெனும் பாசத்தால் கண்ணீர் மல்கி நிலத்தில் வீழ்தல்**

78. மணம்மிகு மாலையணிந்த வாலியின் மார்பாகிய மலையிலிருந்து சொரியும் அருவியாகிய ஆரவாரத்துடன் கூடிய ரத்தப்பெருக்கை உற்று நோக்கிய உடன் பிறப்பு எனும் அன்பாற் பிணிக்கப்பட்ட தம்பியாகிய சுக்கிரீவனும் பசுமையான தன் கண்களிலிருந்து அன்பினால் நீர் சொரிய நீண்ட நிலத்தின் மீது விழுந்தான்.

**தன் மார்பில் தைத்து உறுத்திய அம்பினைப் பறித்தெடுத்த வாலி அதன்கண் இராமனது பெயர் பொறிக்கப் பெற்றிருத்தலைக் காணுதுல்**

79. மேருமலையையும் முறிக்க வல்லவனாகிய வாலி பறித்தெடுக்கப்பட்ட அம்பினைப் பெரிய வலிமை வாய்ந்த கரத்தால் இறுகப் பற்றிக்கொண்டு இதனை முறித்தெறிவேன் என்று துணிந்து எழுந்தான். புகழ் உடையவனாகிய வாலி இதனை நான் முறிப்பேன் என வலிதின் முயன்றலும் இது முறியக் கூடிய எளிமையுடையதன்று எனக்கூறி அதில் எழுதப்பட்டுள்ள பெயரை அறிவதற்காக அதனை நோக்கினான்.

80. மூன்றாக நிறைந்த உலகம் யாவுக்கும் ஆதாரமாக பொருந்திய மந்திரமாவதும், சுற்றத்தாராகிய அடியார்களுக்குத் தம்மை முழுதும் தரவல்ல ஒப்பற்ற மொழியாக உள்ளதும், தான் ஒன்றே இப்பிறவியில் ஏழு பிறப்பாகிய நோய்களை நீக்க உரிய அருமருந்தாக வாய்த்ததும், வீடுபேறு என்னும் சொற்பொருளைச் சேர்க்கவல்லதுமாகிய இராமன் என்ற பெயரைத் தன் கண்களால் வாலி தெளிவாகக் கண்டான்.

**இராமனது செயல் நினைந்து, வாலி நாணி வருந்துதல்**

**81. இல்லறம் துறந்த நம்பி, எம்மனோர்க்கு ஆகத் தங்கள்**

**வில் அறம் துறந்த வீரம், தோன்றுதலால், வேத நூலில்**

**சொல்அறம் துறந்திலாத சூரியன் மரபும், தொல்லை**

**நல்லறம் துறந்தது’ என்னா, நகை வர, நாண் உட்கொண்டேன்.**

இல்லத்தே மனைவியுடன் இருந்து செய்ய வேண்டிய அறங்களைத் துறந்து வனத்தே புகுந்த இராமன் எம்பொருட்டு தம் முன்னோர் தவறாது கடைப்பிடித்த விற்போரான அறநெறியை விட்டொழித்த வீரனுமாகிய இராமன் தவறு செய்த்தால் வேத நூல்களில் கூறப்படும் அறங்களை நெகிழாது போற்றும் இயல்புடைய சூரியனது குலமும் தொன்றுதொட்டு தனக்கே உரியதாக வரும் நல்ல அறநெறியை விட்டு நீங்குவதாயிற்று என்று சிரிப்பு தோன்ற அகத்தே நாணம் கொண்டு வருந்தினான்.

82. வெட்கப்படுவான்; தன் முடித்தலையினைத் தாழ்த்துவான்; இராமன் தனக்குச் செய்த தீமையை மீளவும் நினைப்பான்; இச்செயலும் உயர்ந்தோர் அறமாகுமா என எண்ணுவான்; குழியிற் அகப்பட்ட வலிமையும் கொடுமையும் வாய்ந்த யானை சேற்றில் அழுந்திக் கிடந்தாற் போன்று துயர்பட்டு மனம் அழிந்து தளர்வானாயினான் வாலி.

83. தலைவனாகிய இராமன் தன் முறைமையான குணத்திலிருந்து பிறழ்ந்தான். இவனே இப்படியெனில் இழிந்தோராகிய சிறியோர் இயல்பு என்னவாகும்? என்று நினைத்து, இராமன் தனக்குரிய நீதிமுறையில் தவறிவிட்டான் என கூறி வருந்துகின்ற முகத்தனாகிய வாலியின் முன்பு வேத நெறி, வாய்மை, ஒழுக்கம் என இவற்றைத் தவறாத மன்னருக்கு மனு முதலிய நூல்களில் கூறப்பட்ட அறங்களைத் தவறாமல் கடைப்பிடித்தற் பொருட்டு அவதரித்தவனாகிய இராமன் வந்து தோன்றினான்.

**இராமனைக் கண்ணுற்ற வாலி, 'நின் செயல் முறையற்றது' எனக் கூறி இகழ்தல்**

84. நீல நிறம் வாய்ந்த மழை மேகம் தன்னிடம் செந்தாமரை மலர்கள் மலரப் பெற்று விரிந்து கட்டப்பட்ட வில்லொன்றைக் கையில் ஏந்திக் கொண்டு மண் உலகில் நடந்து வருவதனைப் போல் காணப்பெறும் தோற்றத்தை உடைய இராமனை வாலி தன் கண்களால் பொருந்தக் கண்டான். புண்ணில் இருந்து வெளிப்படுவது போன்ற குருதி நீர் தீப்பொறிகளுடன் வெளிப்பட்டு சிதறும்படி, கோபத்துடன் இராமனை நோக்கி, 'நீ என்ன நினைத்து என்ன செய்தாய்?' என்று சொல்லி இகழ்ந்துரைப்பவனாகி பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

85. பொய்யாமையாகிய அறத்தையும் தன் குடிப்பிறப்பான நெறியையும் தவறாமல் போற்றி நிலைபெற்ற உயிரைத் துறந்த வள்ளலாகிய தூயோனுக்கு மகனாக தோன்றிய நீ பரதனுக்கு முன்பாகவே அவனது தமையனாக தோன்றினாய் இல்லையா? தாய் போல் நின்று உதவும் கருணையும், நண்பனாகிய பண்பினையும் அறத்தையும் பற்றி நின்றவனே! தீமை என்பது பிறரைச் செய்யாமல் தடுத்துக் காத்து, தான் புரியும் போது மட்டும் தீங்கற்ற நன்மையாக மாறும் இயல்புடையதோ?

**86. குலம் இது: கல்வி ஈது: கொற்றம் ஈது: உற்ற நின்ற**

**நலம் இது: புவனம் மூன்றும் நாயகம் உன்னது அன்றோ?**

**வலம் இது; இவ் உலகம் தாங்கும் வண்மை ஈது: என்றால் திண்மை**

**அலமரச் செய்யலாமோ, அறிந்திருந்து அயர்ந்துளார் போல்.**

நீ பிறந்த குலமோ பெருமை வாய்ந்தது. நீ கற்ற கல்வியோ தகுதி மிக்கது. உனது வெற்றித் திறமோ தனிச் சிறப்பு உடையது. உன்பால் அமைந்த நற்பண்புகளின் இயல்போ குறிப்பிடத்தக்கது. மூவுலகேயும் ஆட்சி புரியக் கூடிய இறைமைக் குணம் உனக்கு மட்டுமே உரியதன்றோ? உன் பேராற்றல் இதுவாகவும் இவ்வுலகைப் பாதுகாக்குமே வன்மை இதுவாகவும் அமைந்துள்ளது என்றால் அறிந்திருந்தும் அறியாதவர் போன்று நிலைகுலைந்து சிதையும்படி நீ தகுதியற்றவற்றைச் செய்தல் முறையாகுமா?

87. ஓவியமாக வரைவதற்கு அரிய அழகிய உடலை உடையவனே! அரச நீதியாகிய அறம் உங்கள் குடியிற் பிறந்தோர் யாவருக்கும் உடைமை பொருளாக அமைந்ததல்லவா? உனக்கு இனிய உயிராகியவளும், சனகன் பெற்ற மகளாகிய அன்னம் என்று கூறத்தக்கவளுமான அமிழ்தத்தோடு பிறந்தவளான உன் மனைவியைப் பிரிந்த பின் உனக்குரிய அறச்செயல்களில் தவறி திகைத்தாய் போலும்!

88. அரக்க இனத்தார் ஒரு தீங்கு செய்து தப்பிப் போய் விட்டார் என்றால் அதற்குத் தண்டனையாக வேறுபட்ட குரங்கு இனத்து அரசனைக் கொல்லும்படி மறு சாஸ்திரம் விதித்துள்ளதோ? ஐயனே! இரக்கத்தை எங்கு கொட்டிக் கவிழ்த்தாய்? என்னிடம் என்ன குற்றத்தைக் கண்டாய்? பெரும் பழியாகிய இதனை அணிவாயாயின் புகழ் ஆகிய அணியை (பொறுத்தற்கு) அணிய ஆற்றல் உள்ளவர் யாருளர்?

89. அருள்மிகு வள்ளலே! சத்தம் செய்யும் கடலாற் சூழப்பட்ட இவ்வுலகில் ஏறித் திரியும் இயல்பு உடைய குரங்குபால் கலிகாலம் வந்துளதோ? ஒழுக்கமும் சிறப்பும் மெலியவரிடம் மட்டும் அமைதற்குரியதோ? வலிமையிற் சிறந்தோர் தம்மின் மெலியாரைத் துன்புறுத்தினால் அவ்வலியோருக்கு புகழே உளதாவதன்றி பழி என்பது இல்லை என்பதாகி விடுமோ?

90. துணையாக எவரையும் வேண்டாத வெற்றி வேந்தனே! உனைப் பெற்ற தந்தை வற்புறுத்தி மேற்கொள்ளச் செய்த அரசை உன் தம்பி பரதனுக்குக் கொடுத்தமையால் உன் நாட்டில் ஓர் ஒப்பற்ற செயலைச் செய்தாய். என் தம்பி சுக்கிரீவனுக்கு இவ்வரச செல்வத்தைக் கொடுத்து இக்காட்டில் ஒரு காரியத்தைச் செய்தாய். இச்செயலைவிட மேலாக கூறத்தக்க செயல் உண்டோ?

91. தொன்மையாக பயிலப்பட்டுவரும் நல்ல அறநூல்கட்கு யாவும் ஆசானாக விளங்கும் நீ எனை பொருதழித்த செயல் ஒழிக்கின்ற வீரக்கழல்களையும் மாலையையும் பூண்ட வீரர் புரியும் செயல் (அறத்துக்கு முரண்படினும்) அவர் பேராண்மையைப் புலப்படுத்தும் போர்த்துறை என்று சிறப்பித்துக் கூறப்படும் நிலையை அடைந்ததல்லவா? எவரையும் கோபிக்காத இயல்புள்ளவனே! வன்செயல்

இத்தன்மையாயின் இலங்கை மன்னனாகிய இராவணன் நீதியற்ற செயல்களைப் புரிந்தான் என்று அவனைக் கோபிப்பது எப்படி?

92. வீரர் இருவர் தம்முள் எதிர்த்து போர் செய்து கொண்டுள்ளபோது அவ்விருவரும் நல்ல உறவினராக அமைய, அவருள் ஒருவரிடம் அருள்காட்டி மற்றவர் பால் மறைந்திருந்து வரிந்து கட்டப்பட்ட வில்லை நன்கு வளையும்படி வளைத்து கூரிய வாய் உடைய அம்பினை அவரது மார்பில் செலுத்தல் அறமோ? தவிர அறத்தோடு மாறுபட்டதாகுமோ? தகுதி இல்லாதது என்ற செயலின் கீழ்பட்டதே ஆகும்.

**93. வீரம் அன்று விதி அன்று: மெய்ம்மையின்**

**வாரம் அன்று: நின் மண்ணினுக்கு என் உடல்**

**பாரம் அன்று: பகை அன்று: பண்பு ஒழிந்து,**

**ஈரம் அன்று இது: என் செய்தவாறு நீ?**

வீரமல்ல, விதிமுறைக்கு உட்பட்டதுமல்ல, வாய்மையுடன் பொருந்திய செயலும் அல்ல, என் உடம்பு உன் ஆட்சிக்குட்பட்ட மண்ணுக்குப் பாரமும் அல்ல. உனக்குப் பகையுமல்ல, பண்பற்று ஈரம் இல்லாது நீ இச்செயலைச் செய்தது எது கருதி?

94. அறநெறி நின்று காத்தலாவது நன்மை, தீமை இரண்டையும் சீர்தூக்கி பார்த்து யாவருக்கும் ஏற்கும்படி அருமையான செயலைச் செய்து முடிப்பதன்றோ? பெருமையாவது குற்றங்களைப் பொறுத்து பேணுதலன்றி அதனை விட்டு ஒரு பக்கமே நோக்கி ஒருவனுக்கு உதவி செய்வதாகுமோ? இச்செயல் எதுவாக முடியும்?

95. உன் காத்தல் தொழிலான ஆற்றலை இழந்து இராவணனை அழிக்க வேண்டி அதற்கான உபாயத்தை ஆராய்ந்து அயலான் ஒருவனை உனக்குத் துணையாகக் கொண்டு அமைந்தாயின், விண்ணையும் பற்றவல்ல சினம் மிக்க ஆண் சிங்கத்தை விட்டு ஒரு முயலைப் பற்றிப் பிடித்தல் போல் உன் செயல் உளது. அது என்ன முயற்சியோ?

96. ஊர்ந்து போகும் நிலவுக்கு கருமை என்ற களங்கம் ஒன்று உளது என எண்ணி சூரிய குலத்துக்குத் தொன்மையுடையதாக தொடரும் ஓர் பெரும் களங்கத்தை மேலோனாகிய நீ பிறந்துண்டாக்கி விட்டாய் போலும்.

97. அயலான் ஒருவன் வலிய வந்து போருக்கு அறைகூவி அழைத்தால் அவனுடன் வந்து பொருத என்னை மறைந்து நின்று உயிரைக் கவர்ந்த நீ இந்நாளில் இந்நிலத்தில் பிறவீரர் யாவருக்கும் வலிமை மிக்க சிங்க ஏறு போன்று நிற்கின்றாய் போலும்.

**98. நூல் இயற்கையும், நும் குலத்து உந்தையர்**

**போல் இயற்கையும், சீலமும், போற்றலை:**

**வாலியைப் படுத்தாய் அ(ல்)லை: மன்அற**

**வேலியைப் படுத்தாய் விறல் வீரனே!**

வெற்றிமிகு வீரனே! அறநூல்களில் விதிமுறை நும் குலத்து மூதாதையர் மேற்கொண்டு போற்றிய ஒழுகலாறுகளையும் போற்றாது விட்டாய். வாலியைக் கொன்றாய் இல்லை அரசரின் அறநெறியாகிய வேலியையே அடியோடு அழித்தவன் ஆயினாய்.

**99. தாரம் மற்றொருவன் கொள, தன் கையில்**

**பார வெஞ்சிலே வீரம் பழிப்பதே!**

**நேரும் அன்று, மறைந்து, நிராயுதன்**

**மார்பின் எய்யவோ வில் இகல் வல்லதே?**

உன் மனைவியை வேறு ஒருவன் கவர (அவனை நீ அம்பு எய்து கொல்லாததால்) உன் கையில் சுமையாக உள்ள கொடிய வில்லானது உன் வீரத்தைப் பழிப்பதாக அமைவது தகுதியோ? நீ விற்போரில் வல்லவன் ஆவது கையிற் படைக்கலம் எடுக்காதவன் மார்பில் நேரம் அல்லாமல் மறைவாக நின்று அம்பு எய்வதற்காகத்தானோ?

**வாலியின் மொழிகளுக்கு இராமன் மறுமொழி கூறுதல்**

**100. என்று, தானும் எயிறு பொடி படத்**

**தின்று, காந்தி, விழி வழித் தீ உக**

**அன்று அ(வ்)வாலி அனையன கூறினான்**

**நின்ற வீரன் இனைய நிகழ்த்தினான்.**

என இவ்வாறு பற்கள் பொடியாகும்படி கனன்று சினந்து கண் வழி தீப்பொறி பறக்க வாலியானவன் அத்தன்மையாய சொற்களைக் கூறினான். அதனைக் கேட்ட இராமனும் பின்வரும் சொற்களைக் கூறுவானாயினான்.

101. முன்பு மாயாவி என்ற அரக்கனைத் தொடர்ந்து பாதாளத்துள் போன நீ நெடுநாள் திரும்பாமல் தங்கியது அறிவாய். உன்னைத் தொடர்ந்து நீ போன பாதை வழியே போக முற்பட்ட உன் தம்பி சுக்கிரீவனை நோக்கி உன் குலத்திற் தோன்றிய

அறிவால் நிறைந்த முதியோர்கள் "அசையும் பொன்மாலை அணிந்தவனே! அரசாட்சியை நீ மேற்கொள்வாயாக' என்றனர்.

102. என் தமையனாகிய வாலியை வானுலகத்தை ஆளுமாறு அனுப்பி வைத்த மாயாவி இறக்க அவனைச் சுற்றத்தாருடன் அழிப்பேன், பின் நானும் இறப்பேன் அரசாட்சி ஏற்கேன். எனக்குப் பழிதரும் மொழியைக் கூறினீர்கள் என்றான் சுக்கிரீவன்.

103. ஆற்றல் மிகு சேனைத் தலைவர்களாகிய வீரர்களும் முற்றுமுணர்ந்த முதியோரும் சுக்கிரீவனை நிறுத்தி 'நீ இவ்வரசாட்சி ஏற்காவிடின் உன் குலத்தோருக்கான கிட்கிந்தை என்ற அரசு அழியும்' எனக்கூறியதால் குற்றம் அற்றவனாகிய சுக்கிரீவன் இவ்அரசாட்சியை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

104. மாயாவியைக் கொன்று மீளவந்த தமையனாகிய உன்னைக் கண்டு மகிழ்ந்து வணங்கி 'என் தந்தையே நம்மவர் என்பால் தந்த இவ்வரசு உனக்கே உரிதாகும்' என தான் அதனை மேற்கொள்ளாதவனாக முன் நடந்தவற்றைக் கூற நீ அதனை ஏற்காமல் கோபித்து.

**105. 'கொல்லல் உற்றனை, உம்பியை கோது அவற்கு**

**இல்லை என்பது உணர்ந்தும் இரங்கலை**

**"அல்லல் செய்யேல் உனக்கு அபயம் பிழை**

**புல்லல்" என்னவும், புல்லலை, பொங்கினாய்'**

உன் தம்பியாகிய சுக்கிரீவனைக் கொல்லத்தொடங்கினாய். அவனிடம் சிறிதளவேனும் தவறு இல்லை என உணர்ந்த பின்பும் அவனிடம் இரக்கம் காட்டவில்லை. 'எனை துன்புறுத்தாதே, நான் உனக்கு அடைக்கலப் பொருளாவேன், குற்றத்தை பொருட்படுத்தாதே' என உன்னைக் கெஞ்சி கேட்டும் ஏற்காது நீ வெகுண்டாய்.

106. உன்னுடன் எதிர்த்து நிற்கத் தக்க வலிமை அற்றவன் ஆயினும் (வலிமையிற் பாதியைப் பெறத்தக்கவல்ல தமையனாகிய உன்னுடன்) எதிர்ப்பதற்கு அரிய போரில் தோற்றோமென்று கூறி உனைத் தொழுது தலைக்கு மேல் உயர்த்திய கைகளையுடைய சுக்கிரீவனை இவன் உயிரை யமன் உண்ணும்படி தொடுப்பேன் எனக் கருதி நீ எழுந்தாய். உன்னிடம் இருந்து தப்ப அவன் இந்நிலவுலகின் நான்கு திசைகளின் எல்லைகளையும் கடந்து சென்றான்.

107. அவனின் அத்தகைய எளிய நிலை உணர்ந்தும் அவனிடம் நீ அருள்காட்டவில்லை. இவன் உன் பின் தோன்றிய தம்பி என்பதனையும் நோக்க இல்லை. மதங்க முனிவன் இட்ட சாபத்தினால் நீ செல்ல முடியாத தடையினை உடைய

ருசிய முகப்பர்வதம் என்ற இடத்துக்குப்போய் சுக்கிரீவன் தங்கினான். (வாலி இவ்விடத்துக்கு போயின் அவன்தலை வெடித்துச் சிதறும் சாபத்தை விதித்தார் மதங்க முனிவர்).

**108. ‘ஈரம் ஆவதும், இற்பிறப்பு ஆவதும்,**

**வீரம் ஆவதும், கல்வியின் மெய்ந்நெறி**

**வாரம் ஆவதும், மற்று ஒருவன் புணர்**

**தாரம் ஆவது தாங்கும் தருக்கு அரோ?**

நல்ல குடிப்பிற்கு ஏற்றதும் வீரமாவதும் அறிவு நூல்களின்பாற்பட்ட ஒழுக்கமாவதும் வேறு ஒருவன் மணந்த மனைவியினை மதித்து காக்கும் பேராண்மை ஆகும்.

109. தெளிவான அறிவுள்ள பெரியோருக்கு எல்லாம் வீரத்தில் வழுவுதலாவது நாம் வலிமையுடையோம் என கருதி மனம் அறத்துக்குப் புறம்பான வழியில் போய் எளியோரைக் கோபித்து துன்புறுத்துவது ஆகும். அறநெறியில் இருந்து வழுவுதலாவது நிறை என்ற காவல் உள்ள கற்புள்ள மகளிரிடம் முறைக்கேடாக நடத்தல் ஆகும்.

110. அறத்தின் தன்மை இதுவாகும் என்றதையும் இரு பிறப்பின் பயன்களையும் தெளிவாக ஆராய்ந்தாய் இல்லை. எண்ணியிருப்பின் பெறற்குரிய உன் தம்பியாகிய சுக்கிரீவனின் ஆருயிர் மனைவியை நினக்குள்ள பெருந்தன்மை நீங்கி அடைவாயோ?

111. ஆதலால் அச்சுக்கிரீவன் எனக்கு அரிய உயிர்போன்ற நட்பினன் என்று கரும்படி என்னிடம் அன்புடையவன் ஆதலால் உன் உயிர் நீக்கினேன். அயலார் ஆயினும் எளிய நிலைக்கு ஆளாகின் அவர் பெறும் துயரை அறவே நீக்குவதே என் மனத்துள் கொண்ட குறிக்கோளாகும்.

**இராமன் கூறிய மாற்றங்களுக்கு வாலி எதிர்மொழி பகர்தல்**

112. “நீ குற்றம் புரிந்த தன்மை ‘இதுவாகும்’ என்று பேரழகு தளிர்த்து விளங்கும் பெருவீரனாகிய இராமன் கூற தகுதியற்ற தீச்செயல் செய்த வாலி இத்துணை நியதிகளும் எம் இனத்தவருக்குப் பொருந்தாது; மனம் விரும்பியபடி ஒழுகும் திறமே எமது தொழில் எனக் கூறி மேலும் கூறத் தொடங்குவானாயினான்.

**113. ஐய! நுங்கள் அருங்குலக் கற்பின் அப்**

**பொய் இல் மங்கையர்க்கு ஏயந்த புணர்ச்சி போல்**

**செய்திலன், எமைத் தேமலர் மேலவன்:**

**எய்தின் எய்தியது ஆக இயற்றினுள்.**

ஐயனே, உங்கள் கற்பில் தவறாத நிறையுள்ள பெண்கள் போற்றும் புணர்வு முறையினை பிரமன் (தாமரை மலரில் தோன்றிய நான்முகன்) எம் குரங்கினத்தாருக்கு வகுத்தான் இல்லை. கிடைத்ததைக் கிடைத்தவாறு நுகரும்படி எங்களைப் பிரமன் படைத்து விட்டான்.

114. தசையும் நிணமும் பொருந்தித் தோய்ந்த ஆழிப்படையுடையவனே! மனம் போன வழி செல்லுதலான நடத்தையே அன்றி வேத வழிப்படி விதிக்கப்பட்டுவரும் மணம் என்ற வரையறைகள் இல்லை. நற்குடிப்பண்புக்கு இயைந்த நல்ல பண்புகளும் இல்லை.

115. வெற்றியானது இயல்பாகவே வந்து வாய்க்கக்கூடிய பெரு வெற்றியை உடையவனே! எம் இயல்பு இதுவாகும். நான் எவ்வித குற்றமும் செய்யவில்லை. அதனை நீ மனதிற் கொள்வாயாக என்று கூறிய சொல்லின் தகுதியான வாலிக்கு இராமன் மேலும் கூறுவான்.

**'குற்றமுற்றிலேன்' என வாலி கூறிய மொழிகளை இராமன் மறுத்து, அவன் செய்த செயல் குற்றமுடையதே என்பதனை வலியுறுத்தல்**

**116. நலம் கொள் தேவரின் தோன்றி, நவை அற,**

**கலங்குலாது, அற நல்நெறி கண்டலின்,**

**விலங்கு அலாமை விளங்கியது: ஆதலான்**

**அலங்கலார்க்கு இது அடுப்பது அன்றும் அரோ.**

நல்லது இவை என தேர்ந்து கொள்ளும் தேவர் குலத்து பிறந்து (வாலி இந்திரன் மகன்) மனம் கலங்காது அறமாகிய நன்நெறியின் தன்மையைக் குற்றம் இலாது கண்டுணர்வதால் நீ விலங்கினத்தவர் இல்லை என்பது தெளிவாக விளங்கியது. ஆகவே வெற்றி மாலையணிந்த வீரராகில் உமக்கு இப்படிக் கூறல் பொருந்தாது.

117. அறநெறியாவது ஐம்பொறி(மெய், வாய், கண், மூக்கு, செவி)யோடு பொருந்திய உடம்பின் எல்லைக்குள் அடங்கியதா? இவ் ஐம்பொறிகளை வாயிலாகக் கொண்டுள்ள புலன்களாகிய ஊறு - சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்ற ஐம்புலன்களாகிய உணர்வுகளை அறிவை நிலைக்களனாகக் கொண்டதல்லவா? அறநெறியின் வலியை

செம்மை நிலையில் இருந்து உணர்ந்த நீ குற்றம் உள்ள செயல் செய்து அத்தீமையில் மூழ்கும் தன்மை பெறுவாயோ?

118. முதலையானது தன்னைப் பற்றி ஒரு பக்கத்தே வலிந்து இழுத்ததால் சங்கு ஏந்திய கொற்றவனாகிய மாலவனை ஆதிமூலமே என்று என்று கூவியழைத்த ஒப்பற்ற பெருமையுள்ள நல்லறிவால் வீடுபேறு அடைந்த கஜேந்திரன் என்ற யானையும் விலங்கு இனத்துள் வைத்து எண்ணத்தக்கதோ?

119. நல்லறத்தின் வழியே தன் மனம் ஈடுபட்டு சேரும் இயல்பினால் பசிய வளையல் அணிந்த திருமகள் போன்ற சீதையின் துயரை நீக்க கொடிய போர் செய்து வீடுபேறு அடைந்த சடாயுவும் என் தந்தை என போற்றப்படும் தனிச்சிறப்பு பெற்றான் அன்றோ?

120. விலங்காவது நல்லது, தீயது என்று அதனதன் இயல்புகளை உணரும் நல்லறிவு இலாது வாழ்வதன்றோ? நிலையான அறநெறிகளில் நீ ஆராயாதது ஒன்றும் இல்லை என்பதனை உன் வாய்ச் சொல்லே நன்கு உணர்த்தும்.

121. உயர்வான மக்களும் தக்கது இது, தகாதது இது என்று உணரார் ஆயின் அவரும் விலங்குகளே. விலங்கும் மனநெறியாகிய ஒழுக்க நெறியில் நின்றால் தேவர்களாக மதிக்கப்படும் சிறப்புபெறும்.

122. யமனின் வலிமையை நீக்கிய மழுபடையினை ஏந்திய சிவன் மீது கொண்ட பக்தியால் அதன் காரணமாக நல்லபயன் ஏற்பட்டதால் திருமால் ஆகியவரால் கலக்கப்படும் பெரிய பூதங்கள் நான்கின் (வளி, தீ, நீர், நிலம்) பெரிய வலிமையை ஒருங்கே பொறுத்துத் தாங்கும் வலியினை பெற்றாய்.

123. குற்றமே புரியும் இயல்பு உடையவரிடையேயும், பிறப்பால் இழிவான கீழோரிலும் பெருமை வளர காரணமாகிய நல்ல அறச் செயல்கள் உள்ளவர் உளர். ஆற்றல் மிகுதற்குக் காரணமான தவத்தினையுடைய முனிவரிடையேயும் பல்வகை நற்குணங்கள் நிரம்பிய தேவரிலும் தீய செயல்கள் செய்தவர் உள்ளனர்.

**124. இனையது ஆதலின், எக் குலத்து யாவர்க்கும்,**

**வினையினால் வரும், மேன்மையும் கீழ்மையும்**

**அனைய தன்மை அறிந்தும், அழித்தனை,**

**மனையின் மாட்சி என்னே மனு நீதியான்.**

உண்மை இதுவாதலால் எக்குலத்து பிறப்பவராயினும் எவராயினும் வினை காரணமாகவே உயர்வும் இழிவும் ஏற்படும். அத்தன்மையை நீ தெளிவாக அறிந்து இருந்தும் பிறமனையாளின் அழித்தால் என்றான் மனுநீதி தவறாத இராமன்.

**'நேர் நின்று அம்பு எய்யாமல் மறைந்து நின்று அம்பு எய்தது எது கருதி;' என வாலி இராமனை வினாதல்**

125. அவ்வுரையை மனதே பொருந்த கேட்ட குரங்கினத்து அரசனாகிய வாலி, 'மாண்பு மிகு நேர்மையாளனே அது அங்கனமாகட்டும், போர்க்களத்தே கோபித்து அம்பு எய்யாது கொடுமை வேடர் போல் மறைவாக அம்பு எய்தது எது கருதி?' என வினவினான். இதற்கு இலக்குவன் விடை கூறினான்.

**வாலியின் வினாவுக்கு இலக்குவன் விடை பகர்தல்**

126. உன் தம்பியாகிய சுக்கிரீவன் முன்னதாக வந்து சரண் புகுந்ததால் நீதியற்ற உன்னைத் தென் திசையில் உள்ள கூற்றுவன் உலகில் செலுத்துவேன் என்று உறுதிமொழி கூறினான். போரில் நீ உன் உயிர் மீது அன்பு கொண்டு 'நானும் உனக்கு அடைக்கலம்' என கூறுவாய் என்பதனை எண்ணியே பெரியோனாகிய இராமன் மறை பாணம் தொடுத்தது என்றான்.

**தன் குற்றம் உணர்ந்த வாலி இராமனைப் பணிந்து தான் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்தருளுமாறு வேண்டுதல்**

**127. கவி குலத்து அரசும் அன்ன கட்டுரை கருத்தில் கொண்டான்:**

**அவி யுறு மனத்தன் ஆகி, 'அறத்தின் அழியச் செய்யான்**

**புவி யுடை அண்ணல்' என்பது எண்ணினான்: பொருந்தி முன்னே**

**செவி யுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சிச் சொன்னான்.**

குரங்கு இனத்தவன் ஆகிய வாலியும் அவ்வார்த்தைகளை ஏற்றுக் கொண்டான். அடங்கி ஒழுகும் இதயத்தவன் ஆகி, அறம் தவறிய எதனையும் உலகம் முழுதும் உடைய இராமன் செய்யான் என எண்ணினான். எண்ணி, முற்பருவத்து நற்பொருளை செவிமடுக்கும் கேள்விச் செல்வத்தை உடையவனாகிய வாலி தலையால் இராமனை வணங்கினான். வணங்கி பின்வருமாறு கூறினான்.

128. சகல உயிருக்கும் தாய் போன்று தேவையான நலங்களை வழங்கி அறமும் தகுதியும் நற்பண்புகளின் நிறைவும் நீயே என்று சொல்லுமாறு நின்ற ஆடவரில் சிறந்த அழகனே! நன்னெறியினை குறிக்கோளாகக் கொண்டு நோக்கி ஒழுகும்

நேர்மையாகிய உயர்ந்த பண்பை நாய் போன்ற இழிந்த நிலையினரான எம்மிடம் குற்றமாக காணல் கூடுமோ?

**வாலி, தனக்கு மெய்யுணர்வருளிய இராமனைப் போற்றி வரம் வேண்டுதல்**

129. வாலி மேலும் இராமனை இரந்தவனாக 'எந்தையே எதனையும் எண்ண அறியாத குரங்கு எனக் கருதி நாய் போன்ற கீழான எளியேன் கூறிய சொற்களை உன் மனதே கொள்ளாது மறந்து விடுக. துயரைத் தரும் கொடிய பிறவியான நோய்க்கு அரியமருந்து ஆக வந்து வாய்த்த தலைவனே! வரங்களை அருளும் வள்ளலே! ஒன்று கேட்பாயாக' எனக் கூறுவான்.

130. செலுத்தப்படும் கூரிய அம்பால் எய்து நாய்போன்ற கீழான அடியேனது உயிர் நீங்கும்போது மெய்யுணர்வான ஞானத்தை வழங்கினாய்! மும்மூர்த்தி நீ, முழுமுதற் கடவுளும் நீ, பொருள் நீ, மற்றும் நீ, பாவ புண்ணியம் நீ, பகைவன் உறவினன் நீயே.

131. முப்புரம் முழுவதையும் எரித்து நீராக்கிய சிவன் முதலிய கடவுள்கள் அளித்த ஒப்பற்ற வரம் யாவும் ஊடுருவி எனது பழிப்பற்ற வன்மை மிகு மார்பு முழுதையும் துளைத்து போய் என் உயிராற்றல் அனைத்தும் உண்ட உன் அம்பினைத் தவிர அறம் என்று வேறாக ஒன்றுள்ளதோ?

132. உயர்திணையாகவும் அஃறிணையாகவும் பருவங்களாகவும் நல்ல பயன்களாகவும் பூவும் மணமும் போல் பிரித்து அறிய இயலாத பொதுமை நிலையில் யாவும் கலந்து விளங்கும் இயல்புடையவனே! நீ யாவன் என்றும், எத்தகையது உன் இயல்பு என்றும் நல்லறிவு எனக்கு உணர்த்தியது. கிடைத்தற்கரிய 'வீடு' எனக்கு இனி அரியதாகுமா?

133. உள்ளது என மெய் நூல்கள் கூறும் அறத்தினையே மேனியாகக் கொண்டு தோன்றிய உனைக் கண்டேன். இனி வேறு ஒன்று காண வேண்டுமோ? அன்று முதல் இன்று வரை நான் என்னால் செய்யப்பட்ட பழம் தீவினை காரணமாக நீ செய்த இத்தண்டனையே எனக்கு உயர்வான வீடு பேற்றைத் தரும்.

134. வானத்தின் எல்லையையும் கடந்த உயர் பெருமை உடைய வெற்றி வேந்தனே! என் தம்பி எனைக் கொல்ல உனை அழைத்து வந்து தொன்றுதொட்டு வரும் சிறுமை உள்ள இனத்தே பிறந்த குரங்கோடு தன்னை ஒப்பு நோக்கி வைத்து எண்ணும்படி செய்த செயலால் பயனற்ற அரசாட்சியைப் பெற்று வீட்டுலக அரசாட்சியை எனக்கு வழங்கினான். இதன் மேலும் எனக்கு செய்யக்கூடிய பேருதவி உள்ளதோ?

**135. ஓவிய உருவ! நாயேன் உளது ஒன்று பெறுவது உன்பால்:**

**பூ இயல் நறவம் மாந்தி, புந்தி வேறு உற்ற போழ்தில்,**

**தீவினை இயற்றுமேனும், எம்பிமேல் சீறி, என்மேல்**

**ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல்;' என்னான்.**

ஓவியம் போன்ற அழகிய மேனியுள்ளவனே! நாய் போன்ற கீழான எனக்கு உன்னிடம் வேண்டிப் பெற ஓர் வரம் உளது. என் தம்பி பூக்களில் உள்ள மதுவைப் பருகி அறிவு திரிந்த நிலைமையில் தீச்செயல் புரிவானாயின் என் மேல் சினந்து ஏவிய அம்பு என்ற கூற்றினை அவன் மேல் வெகுண்டு எய்யாது தவிர்ப்பாயாக என வேண்டினான்.

**வாலி மற்றும் ஒரு வரம் வேண்டுதல்**

136. மேலும் நான் உன்னை வேண்டி பெற ஓர் வரம் உளது. உன் தம்பிமார்கள் என் தம்பியைக் குறித்து இவன் தன் தமையனைக் கொன்ற கொடியவன் என இகழுங் கருத்து கொண்டால் தடுப்பாயாக. ஐயனே, இவனது குறையை முடித்து வைப்பதன் முன்னமே இவனுக்கு உறுதி கூறியுள்ளாய் அல்லவா? (அதாவது சுக்கிரீவனின்) அதனை நிறைவேற்றிய பின்னர் இவனின் செயற்பாட்டினை (சுக்கிரீவனின்) நீ தவறவிடல் ஆகலாமா?

**வாலி, இராமனுக்கு உதவ முடியாத தன்னிலைமையை நினைத்து இரங்கி, இராமனுக்கு அநுமனைப் பற்றித் தகவுரை பகர்தல்**

**137. 'மற்று இலென் எனினும், மாய அரக்கனை வாலின் பற்றி,**

**கொற்றவ! நின்கண் தந்து, குரங்கு இயல் தொழிலும் காட்டப்**

**பெற்றிலென்: கடந்த சொல்லின், பயன்இலை: பிறிது ஒன்றேனும்,**

**'உற்றுத செய்க' என்றாலும், உரியன் இவ் அனுமன்' என்றான்.**

வெற்றிவேந்தனே! உனக்கு மிக்கதொரு பேருதவியைப் புரியும் பேறு பெறவில்லை. ஆனால் வஞ்சனையில் வல்ல அரக்கனாகிய இராவணனை என் வாலினால் இறுகப்பிடித்து வந்து உன்னிடம் ஒப்படைத்து குரங்கினமாகிய எம்மியல்புக்கு ஏற்ப சிறு செயலைத் தானும் செய்யவல்ல நிலையைப் பெற்றிலேன். நடந்தவற்றைப் பற்றிய பேச்சினைப் பேசுவதால் பயனெதுவும் இல்லை. இதனையொத்த பெரிய தொழில் யாதாயினும் உனக்கு ஏற்ற அத்தொழிலை செய்க என நீ பணித்தால் அதனைச் செய்து முடிக்க இங்குள்ள அநுமன் என்பவன் உரியத் தகுதியுடையவன் என்றான்.

138. விண்ணினும் உயர்ந்த தோளினனே! ஆணைச் சக்கரத்தை உடையவனே! அனுமன் என்ற பெயர் உள்ள இவ்வீரனை உன் உயர்வான சிவந்த கரத்துள்ள வில் என்று கருதுவாயாக. என் தம்பியாகிய சுக்கிரீவனை இனி உன் தம்பி என கருதுவாயாக. இவர்கள் போல ஒப்பற்ற துணைவர்கள் வேறு பிறர் இல்லை. இங்கு இவர்கள் மூலம் சீதை என்ற மங்கையைத் தேடிப் பெறுவாயாக.

**வாலி, தன் தம்பி சுக்கிரீவனை அன்பினால் அணைத்து உறுதியுரை பகர்தல்**

139. இவ்வாறு வாலி இராமனை நோக்கிக் கூறிய பின் அங்கு இருந்த சுக்கிரீவனை வன்மையும் பெருமையும் வாய்ந்த தன் இரு கரத்தால் தழுவி, 'மகனே, மலைகளைப் பார்க்க உயர்வான தோள்களையுடையவனே! மனம் வருந்தாதே, நான் உனக்கு உறுதிப் பொருளாகக் கூற கூறத்தக்கது ஒன்றுளது. அதனை உணர்ந்து கடைப்பிடிப்பாயாக'.

140. எதையும் ஆய்ந்தறிய வல்ல ஆற்றல் உடையவனே! வேதங்களும் முனிவர், தாமரை மலரில் உள்ள பிரமன், மெய்நூல்களும் தெளிவாக கூறும் மெய் பொருள் ஆகிய அறத்தை நிலைநாட்ட ஒலிக்கும் வீரக்கழல் உள்ள இராமன் தோன்றி ஒப்பற்ற ஓர் வில் தாங்கி வந்து உள்ள உண்மையை உன் மனதே கொள்வாயாக.

141. பொன்மலை போன்ற தோள்களை உடையவனே! என்றும் அழியாத செல்மான வீடுபேறு என்ற பெருஞ்செல்வம் வேண்டி நல்ல நெறியில் இருந்து ஒழுகும் உயிர்கள் யாவும் பயில்வது இராமனின் பெயரையே. தியானிப்பது இம்முதல்வனையே. யாவுக்கும் நடுநிலை நின்று ஒழுகும் தன்மை நோக்கின் எனை கொன்ற இவன் செய்கையே இதற்குப் போதும் வேறு சான்று தேவையில்லை.

142. வஞ்சனை புரிந்து எங்கும் நீக்க இயலாதளவு எண்ணற்ற பாவச்செயல் நாள்தோறும் செய்து உளார். எனினும் வள்ளல் இராமனால் அம்பு எய்து தண்டிக்கப்பட்டவர் வானுலகை விட உயர்ந்தபெரு நிலையான வீடு பெறுவாராயின், அவனின் பாதங்களை வணங்கி தொண்டு செய்தவர் பெறும் சிறப்பு வார்த்தையால் கூற இயலுமோ?

143. விதி என்ற தெய்வமே துணை செய்ய அமையும் போது அடைய இயலாதது எது உள்ளது? நீ இகபர பயன்களை ஒன்றாகப்பெற்றாய். நீ இனி செய்ய வேண்டியது யாது என நினைத்தால் அழகிய மறுவினை மார்பில் கொண்ட திருமாலாகிய இராமனின் கட்டளையைத் தலைமேற்கொண்டு மனதை ஒரு நிலையில் வைத்து மூவுலகங்களிலும் சிறப்புற்று உயர்வாயாக.

**144. “பதஇயல் குரக்குச் செய்கை மயர்வொடு மாற்றி, வள்ளல்**

**உதவியை உன்னி, ஆவி உற்றிடத்து உதவுகிற்றி:**

**பதவியை எவர்க்கும் நல்கும் பண்ணவன் பணித்த யாவும்**

**சிதைவு இல செய்து, நொய்தின், தீர்வு அரும் பிறவி தீர்தி”**

அறியாமையால் செருக்கு அடையும் இயல்பாகிய குரங்கின் செயலையும் மயக்கத்தையும் அறவே நீக்கி, வள்ளலாகிய இராமன் செய்த உதவியை நினைத்து ஓர் இடையூறு ஏற்படும் போது உன் உயிரையும் கொடுத்து உதவி புரிவாயாக. யாவருக்கும் உயர்ந்த பதவியாகிய வீடு பேற்றைத் தரும் கடவுளான இராமன் ஏவிய பணிகள் யாவும் குறையற்று செய்து எளிதில் நீங்க அரிய பிறவித் துயரை நீங்கி உய்வாயாக.

145. அரசாட்சியாகிய பதவியின் பெருமையால் மனம் மிக களித்து மறதியாக போற்றலில் சோர்வு வராமல் தலைவனாகிய இராமனின் மலர் போன்ற பாதங்களை நீங்காமல் வாழ்வாயாக. அரசர் எனப்படுவோர் நெருப்பு என்று கூறக்கூடிய இயல்பானவன் என எண்ணுவாயாக. அவர்கள் தமக்குத் தொண்டு செய்யும் மக்கள் விடும் குற்றங்களை அவ்வரசர் பொறுத்துக்கொள்வார்கள் என நினைத்து விடக்கூடாது.

**வாலி, சுக்கிரீவனை இராமனிடம் அடைக்கலமாக ஒப்புவித்தல்**

**146. என்ன, இத்தகைய ஆய உறுதிகள் யாவும், ஏங்கும்**

**பின்னவற்கு இயம்பி, நின்ற பேர் எழிலானை நோக்கி,**

**‘மன்னவர்க்கு அரசன் மைந்த! மற்று இவன், சுற்றத்தோடும்**

**உன் அடைக்கலம்’ என்று உய்த்தே, உயர்கரம் உச்சி வைத்தான்.**

என இத்தன்மை மிக்க உறுதி பயக்கும் வார்த்தை யாவும் வருத்தும் தன் தம்பிக்கு கூறி, தன்முன் நின்ற பேரழகனான இராமனை நோக்கி, ‘மன்னர் மன்னனாகிய தசரதன் புதல்வனே, சுக்கிரீவன் ஆகிய இவன் தன் சுற்றத்தாருடன் உனக்கு அடைக்கலப் பொருள் ஆவான்’ எனக் கூறி உயர்த்திய கைகளை தலைமேல் வைத்து வணங்கினான்.

**வாலி, சுக்கிரீவனைக் கொண்டு அங்கதனை அழைத்து வரச் செய்தல்**

**147. வைத்தபின், உரிமைத்தம்பி மாமுகம் நோக்கி, ‘வல்லை**

**உய்த்தனை கொணர்தி, உன் தன் ஓங்கு அரு மகனை’ என்ன,**

**அத்தலை அவனை ஏவி அழைத்தலின், அணைந்தான் என்ப:**

**கைத்தலத்து உவரி நீரைக் கலக்கினான் பயந்த காளை.**

கையை தலை மீது வைத்து வாலி வணங்கிய பின், அன்பிற் சிறந்த தன் தம்பியாகிய சுக்கிரீவனின் பெருமை மிக்க முகத்தை நோக்கி உன் சிறப்பால் உயர்ந்த அரும் புதல்வனாகிய அங்கதனை இங்கே விரைவாக அழைத்து வந்து சேர்ப்பாயாக எனக்கூறி, அவனை அழைக்க தன் கைகளால் கடலை கடைந்த வாலி பெற்ற புதல்வனாகிய அங்கதன் அங்கு வந்தான்.

**அங்கதன் வாலியைக் காணுதல்**

148. ஒளிமிக்க முழுமதி போன்ற பொலிவுடன் தோன்றிய அங்கதன் என்ற இளவல் என்றும் துயர்பட்ட வரை மனதினாலும் நினைக்கப்பெருக அவன் மலர் இதழ்களாகிய மணம் வீசும் மெல்லிய பூவணையாகிய மலை மீதன்றி குருதி வெள்ளமான கடலில் கிடந்த தன் அன்பு தந்தையாகிய வாலியைத் தன் கண்ணால் பார்த்தான்.

**அங்கதன், வாலியின் மீது வீழ்ந்து புலம்புதல்**

149. குண்டலங்கள் தவழ்ந்து அசைய, மாலையணிந்த திரண்ட தோள் உடைய நம்பியாகிய அங்கதன் கண்கள் தீயையும் கண்ணீரையும் ரத்தத்தையும் சொரிய, சந்திரமண்டலம் விண்ணிலிருந்து மண் வந்து விழுந்திருந்தது போலவும், அம்மதி மீது விண்ணிலிருந்து ஓர் மீன் விழுந்தது போல் விழுந்தான்.

150. என் தந்தையே! என் தந்தையே! எழும் அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட இவ்வுலகு கண் எவருக்கும் மனதால், செயலால் யாதொரு தீங்கும் நீ செய்யவில்லை. அவ்வாறு இருக்க கூற்றமும் சிறிதும் அச்சம் இன்றி உன் முகம் நோக்கி எதிர் வந்து நின்றதல்லவா? அதன் வன்மை ஒழிக்க வல்லார் யார் உளர்?

151. ஆணி அறையப்பட்டது போன்ற இடம் பெயராத வண்ணம் எட்டு திசைகளிலும் இப்பூமியைக் தாங்கி நிற்கும் திசையானைகளுக்குத் தோல்வியை ஏற்படுத்திய கொடியோன் இராவணன். உன் வாலின் வன்மை எண்ணும் போது திசையானைகள் யாவும் தோற்பறை போல பயந்து அடித்துக் கொள்கிறது. அத்தகைய பயம் இப்போது அறவே நீங்கிவிட்டது அன்றோ?

152. (இவ்வுலகின் எட்டுத்திசைகளிலும் அமைந்துள்ள) அஷ்டகுல பர்வதங்கள், (இவ்வுலகின் புறத்தே மதிலாக அமைந்துள்ள) சக்கரவாள மலை என்று சொல்லப்படும் வானோங்கிய மலைகளின் சிகரங்களும் நின்னுடைய அழகிய கால்களை ஊன்றி மிதித்தாற் பதியும் (அடிச்சுவடாகிய) தழும்பினை (நீ இப்போது உயிர் நீங்கினமையால்) நீங்கின அல்லவோ? மந்தர மலையென்னும் மத்தினைச் சுற்றி வளைத்துக் கொள்ளவல்ல (வாசுகி என்னும்) பெரும் பாம்பினையும் (அடைதூணாகிய)

சந்திரனையும், (அடை கல்லாகிய ஆமை முதலிய) பிறவற்றையும் (ஆற்றலாற் பிறழாது) பொறுத்து, அலைகள் மறியும் பாற்கடலைத் கடைத்து அமுதம் தரும்படி (தேவர்) வேண்டின் (அவ்வேண்டுகோளையேற்றுக்) கடையும் ஆற்றலுடையவர் இனி, யார் இருக்கிறார்கள் (ஒருவரும் இலர்)

**153. "பஞ்சின் மெல் அடியாள் பங்கன் பாதுகம் அலாது யாதும்**

**அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய்! அமரர் யாரும்**

**எஞ்சலர் இருந்தார் உன்னால்: இன் அமுது ஈந்த நீயோ**

**துஞ்சினை: வள்ளி யோர்கள் நின்னின் யார் சொல்லற் பாலார்?"**

பஞ்சினும் மெல்லிய திருவடியினையுடையாளாகிய உமையம்மையை ஒரு பாகத்திற் கொண்ட சிவனினது திருவடியன்றிப் பிறிதொன்றையும் (மறந்தும்) வணங்கியறியாத செம்மை வாய்ந்த கைகளையும் ஆணைச் சக்கரத்தையும் உடைய அரசே, தேவர்கள் எல்லோரும் (பாற்கடலைக் கடைந்து அமுதம் வழங்கியவரைகிய) உனது பேருதவியால் தம் தொகுதியிற் குறையாதவராய் (இறவாது) நிலைத்து வாழ்கின்றனர். இனிய அமுதத்தை (நினக்கென வைத்துக் கொள்ளாது அவர்களுக்கு) வழங்கிய நீயோ இங்ஙனம் பகைவரால் அம்பு எய்யப்பட்டு உயிர் துறந்தனை. (இவ்வாறு தனக்கென வாழாது பிறர்க்கென வழங்கிய) நின்னைப் போன்று வள்ளன்மையுடையராக எடுத்துரைக்கத்தக்கார் (இவ்வுலகில்) வேறுயார் இருக்கின்றார்கள்? (ஒருவரும் இலர்)

**வருந்திய அங்கதனை வாலி தழுவித் தேற்றுதல்**

154. (அங்கதன்) மேற்குறித்தவனாகிய பலவற்றையும் மீட்டும் மீட்டும் கூறிப் புலம்பிய வருந்தியவனாய் மனம் வெதும்பி (தன் தந்தையை) நோக்கி அழலிற்பட்ட மெழுகினைப் போன்று நெஞ்சம் நெக்குருகினான். சிவந்த கண்களையுடைய வாலி, (தன் மகனை நோக்கி) "மைந்தனே, இனி நீ தளர்ந்து வருந்தக் கடவாயல்லை" என்று சொல்லித்தன் மனம் பொருந்த அணைத்துக் கொண்டு, (எல்லாவுயிர்கட்கும்) தலைவனாகிய இராமன் செய்த இது, (யான் செய்த) புண்ணியத்தின் பயன் என்றான்.

**வாலி அங்கதனுக்கு அறிவுரை கூறுதல்**

155. குற்றம் நீங்க ஆராய்ந்து பார்க்குங்கால் பிறத்தலும் இறத்தலும் ஆகிய இவை (மேல் கீழ் நடு என்னும்) மூவகைப்பட்ட உலகங்களின் வாழ்வார்க்கும் (தாய் வயிற்றில் கருவாய்ப் பதியும்) முன்னரே (வரையறுக்கப்பட்டு) முடிந்து கிடந்தனவாகும். யான் முன் செய்த பெருந்தவம் உடைமையால் இத்தகைய நல்லதோர் சாக்காடு

எனக்குத் தானே வந்து பொருந்தியது. (எவ்வுயிர்க்கும்) சாட்சியாய் நிற்கின்ற வீரனாகிய இராமபிரான் தானே (விரும்பி என்பால் எழுந்தருளி) வந்து வீடு பேற்றினை தந்தருளினான்.

**156. "பாலமை தவிர் நீ: என் சொல் பற்றுதி ஆயின், தன்னின்**

**மேல் ஒரு பொருளும் சில்லா மெய்ப்பொருள், வில்லும் தாங்கி**

**கால் கரை தோய நின்று கட்புலக்கு வற்றது அம்மா!**

**மால் தரும் பிறவி நோக்கு மருந்துஎன வணங்கு மைந்த!"**

மகனே, சிறு பின்ளைத் தன்மையை விட்டு விடுவாயாக. நீ எனது வார்த்தையை உறுதியெனக் கொள்வாயாயின், தன்னின் மேம்பட்டதொரு பொருளும் இல்லாத (உயர்வுறவுயர்ந்த முழுமுதற் பொருளாகிய) மெய்பொருள் தானே தனது திருவடி மண்ணிற் பொருந்தும்படி (இராமனாகி) நின்று விற்படையினையும் ஏந்திக் கொண்டு நமது கண்ணினது அறிவாகிய காட்சியுணர்வுக்குப் பொருளாய் வந்து எதிர்பட்டது. இஃது என்ன வியப்பு! மயக்கத்தை விளைக்கும் பிறப்பென்னும் பிணியினை அறவே நிக்குதற்குரிய அருமருந்தெனக் கருதி (இம்முழு முதற் பொருளை) விரைந்து வணங்கி உய்திபெறுவாயாக.

157. (உயிரில் பொருளாகிய) பொன் உயிரும் பெற்று ஒளிர்ந்தாற்போன்று ஒளி செய்யும் அழகிய அணிகலன்களையுடையவனே! (இவ் இராமன், உன் தந்தையாகிய) எனது உயிர்க்கு இறுதியையுண்டாக்கினான் என்பதைச் சிறிதும் நின் மனதில் கொள்ளாமல் உன்னுடைய உயிர்க்கு இறுதிபயக்கும் நிலையுடைய ஆக்கங்களைத் தேடிக்கொள்வாயாக! இவனுக்குப் பகைவரொடு போர் செய்யும் நிலையை ஏற்படுமானால், அறத்தினை (அழியாது நிலைபெறக்) காத்து நீ (இவன் பொருட்டு அப்போரில் நின்னுயிரைக் கொடுத்து) இறப்பாயாக.

**அங்கதனுக்கு உறுதியுரை கூறிய வாலி, இராமனை நோக்கி இவ்அங்கதன் உன் கையடைப் பொருளாவான் எனக்காட்டுதல்**

158. மலையைக் காட்டிலும் திக உயர்ந்த தோள்களையுடைய குல மன்னாகிய வாலி, மேற்குறித்தவற்றைக் இத்தன்மையான உறுதி பயக்கும் அறிவுரைகளை அங்கதனுக்குச் சொல்லி அவனைத் தன்னுடைய நீண்ட பெரிய இரண்டு கைகளாலும் ஆரத் தழுவிக் கொண்டு, திணிந்த பசும் பொன்னால் இயற்றப்பட்டு வயிர முதலிய நன்மணிகள் பதிக்கப் பெற்ற அணிகலன்களையுடைய வெற்றி வேந்தனாகிய இராமனை நோக்கி.

159. பொய்மை நிறைந்த நெஞ்சினராகிய வஞ்சனையாளருக்குப் புலனாகாத தூய திருமேனியுடையவனே! அங்கதனாகிய இவன் பெறப் பெற்ற நீண்ட வேற்படையையுடைய அரக்கர் சேனையைப் பஞ்சினைப் போல் பற்றியெரிக்குப் நெருப்பினையொத்து விளங்கும் தோளினையுடையவன். மனத்தாலும் வாக்காலும் செயலாலும் தூயவன். இவன் உன்னைப் பாதுகாக்கத்தக்க அடைக்கலப் பொருளாவான் என்று கூறி (வாலி தன் மகனை) இராமனுக்குக் காட்டிய பொழுது.

**அங்கதனை இராமன் ஏற்றுக்கொள்ள, வாலி பரமபதம் அடைதல்**

160. (அங்கதன்) தன்னுடைய திருவடிகளில் விழுந்து வணங்கிய அளவில், செந்தாமரை மலர் போன்ற அழகிய பெரிய கண்தளையுடையனாகிய இராமனும் அவனை அடைக்கலமாக ஏற்று கொண்டமைக்கு அறிகுறியாகத் தனது அழகிய உடைவாளைக் கையில் எடுத்து நீட்டி அங்கதனை நீ இதனை நின் கையிற் கொள்வாயாக எனப் பணித்தருளினான், அவ்வாறு கூறிய போது ஏழு உலகங்களில் வாழும் உயிர்கள் யாவும் அடைந்தாரைப் புரந்தருளும் இராமனது இறைமைக் குணத்தை வியந்து துதித்தனர். வாலியானவன் உடம்பைவிட்டு உயிர் நீங்கப்பெற்று உலகத் தொடர்பாகிய அந்நிலையை அறவே விட்டொழித்து வானோர்க்கும் எய்துதற்கு அரியதாய் வானுலகுக்கும் அப்பாற்பட்டதாய் உயர்ந்த வீட்டுலகினை அடைந்தான்.

**வாலி உயிரைக் கவர்ந்த இராம பாணம் தூய நீர்க்கடலில் நீராடி, இராமனது அம்பறாத் தூணியில் வந்தடைதல்**

161. வாலியின் உயிர் உடம்பை விட்டு நீங்கிய அந்நிலைமைக்கண் தன் மார்பில் தைத்த இராம பாணத்தை இறுகப்பற்றியிருக்க வாலியின் கை நெகிழ்ந்ததாக, விரைவு மிக்க அம்பானது கூற்றுவனையொத்த ஆற்றல் மிக்கோனாகிய வாலியின் வெம்மையுடைய மார்பினுள்ளே தங்காமல் அதனைத் துளைத்து ஊடுருவிக் கொண்டு மேற்பட்டு உயர்ந்தலால் மேலே சென்று தூய நீர்க்கடலிற் நீராடித் தூய்மையுடைய நறுமலர்களைத் தேவர்கள் சூட்டி வழிபட தலைவனாகிய இராமபிரானது முதுகினை விட்டு நீங்காதுள்ள அம்பறாத்தூணியில் மீட்டும் வந்து சேர்ந்தது.

**தன் கணவன் வாலி இறந்து வானுலகடைந்தமை கேட்ட தாரை அங்கு வந்து அவன் மேல் வீழ்ந்து புரண்டு வருந்துதல்**

162. எல்லையற்றதாகிய அவ்வீட்டுலகில் வாலியும் சென்று சேர்ந்தான். ஆலின் இலையினைப் படுக்கையாகக்கொண்ட திருமாலின் அம்சமாகிய இராமனும் வாலிக்குப் பேரின்பத்தை வழங்கி, தன் முன் நின்ற கதிரவன் புதல்வனாகிய சுக்கிரீவனது சிவந்த கையினைப் பற்றிக் கொண்டு, வாலியின் புதல்வன் அங்கதனுடன்

அவ்விடத்தை விட்டகன்றுப் போயினான். வேற்படையினை ஒத்த கண்களையுடைய தாரை என்பாள் தன் கணவன் துயர்நிலையைக் கேட்டாள். அந்தப்புரத்தை விட்டு ஓடி வந்து வாலியின் மேனிமேல் செயலற்று வீழ்ந்தாள்.

163. குங்குமக் குழம்பினைச் சொரிந்தாற் போன்ற குவிந்த கொங்கையென்னும் மலைச் சிகரத்திற்குப் பொருந்த வாலியின் மார்பினின்றும் ஊற்றெடுத்துப் பொங்கி வெம்மை மிக்க இரத்தப்பெருக்கு தன்கொங்கைக் குவடுகளில் முழுவதும் பரவிப் போர்க்கவும், நெறிப்புடையக் கூந்தல் செந்நிறம் அடையவும், வெம்மை வாய்ந்த கதிர்களையுடைய ஞாயிறு மறைய அமைந்த பொழுதிலே தோன்றிய மின்னலையொத்து விளங்கும் மேனியையுடையவளாய் அவ்விடத்தே வாலியென்னும் அவனுடைய பொன்னிறம் வாய்ந்த தோள்களிலும் மாலையணிந்த மார்பிலும் வீழ்ந்து புரண்டு வருந்தினாள் தாரை.

**164. “வேய்ங்குழல் விளரி நல் யாழ், வீணை என்று இவையும் நாண,**

**ஏங்கினள் இரங்கி: விம்மி உருகினள்: இருகை கூப்பி,**

**தாங்கிய கலைகள் சோர்ந்து கரிதர, குழலும் தாழ,**

**ஓங்கிய துயராள், பன்னி, இனையன உரைக்கலுற்றாள்”**

புல்லாங்குழலும் நல்ல விளரி யாழும், வீணையும் என்று கூறப்படும் இத்தன்மையவாகிய இசைக்கருவிகளின் இனிய இசைகளும் தனது புலம்புதல் ஒலிக்குத் தோற்று நாணும்படி தாரை வருந்திப் புலம்பினாள். பெருமூச்சுயிர்த்து நெஞ்சும் கரைந்தாள். இரு கைகளையும் தலைமேற் குவித்துத் தன் கணவனை வணங்கி, உடம்பும் உயிரும் வாடிய நிலையில் தான் அரிதின் தாங்கியிருந்த கலைகள் தளர்ந்து சரியவும் கூந்தல் குலைந்து தரையில் தாழ்ந்து புரளவும் அளவிறந்து பெருகிய துயரத்தினையுடையவளாய் இத்தன்மையவாகிய புலம்புதல் மொழிகளை அடுத்தடுத்துக் கூறத் தொடங்கினாள்.

**தாரை புலம்புதல்**

165. என்னுடைய புகழ் பொருந்திய அரிய உயிரே! என் நெஞ்சமே! என் அரசனே! மலையினை பெயர்த்து விளங்கும் நின் தோள்களைச் சார்ந்து என்றும் இனிது வாழும் இயல்பினனாகிய யான், கரையின்றிப் பெருகிய துன்பக் கடலைக் காணும் வலியுடையேன் அல்லேன். நினக்கு உளதாகிய இத்துன்ப நிலையைக் கண்ணினால் காணுதற்கும் அஞ்சுகிறேன்.

166. யாவரிடத்தும் பகைமை கருதாத பண்புடைய தலைவனே! நின்னையிழந்த பிரிவுத்துன்பத்தால் உடனே இறந்துபடாத உன் நெஞ்சத்தாளாகிய என்னையும் உன்பால் அன்பினால் அழைத்து கொள்ளமாட்டாயா? எம்மிடத்துச் செற்றம் நீங்காத தீயூழாகிய தெய்வமே! உயிர் உடலைவிட்டுப் பிரிந்து போனால் உடம்பு மட்டும் அழியாது பிழைத்திருக்கவல்லதே.

167. நினது உயிரைக் கவர்ந்து சென்ற கூற்றவனார், நறுமணமுடையதாகிய நல்ல அமிழ்தத்தை உண்ணும்படி நீ பாற்கடலைக் கடைந்து தந்தமையால் உடம்பைவிட்டு நீங்காத இனிய உயிரைத் தாம் பெற்ற நிலைபேறாகிய தன்மையினை, தான் இதுகாறும் ஆகிலரோ? அதுவன்றி அறிந்திருந்தே நினது உயிரைக் கவர்ந்தாரெனின், நீ காலத்தினாற் செய்த பேருதவியை நினையாதவராகி நன்றியறிதலாகிய தகுதியையிழந்து மிகவும் சிறுமையுடையவராயினரோ?

168. மாதொருபாகனாகிய சிவனைத் திசைகள் தோறும் சென்று, வாடாத ஒளியுடைய நறுமலர்களைக்கொண்டு மனம் நிறைந்த உண்மையான பேரன்பினால் காலை, நண்பகல், மாலை என்னும் முக்காலத்தும் வழிபாடு செய்யும் நின் இயல்பினை விட்டு இவ்வளவு நேரமும் இங்கே பொழுதுப் போக்கிப் புறக்கணித்து தங்கியிருக்க வல்லாயோ?

**169. “வரை ஆர் தோள் பொடி ஆடி வைகுவாய்!**

**தரை மேலாய்: ‘உறு தன்மை ஈது’ எனக்**

**கரையாதேன் இடு பூசல் கண்டும், ஒன்று**

**உரையாய், என் வயின் ஊனம் யாவதோ?”**

மலையினையொத்த தோள்களில் வெண்பொடியாகிய திருநீற்றினைப் பூசி மலையின் மேல் சிவபூசையில் அமர்ந்திருக்கும் இயல்புடைய நீ இப்போது புழுதிபடிய நிலத்தின்மேல் வீழ்ந்து கிடக்கின்றாய். நீ உற்ற துயரின் தன்மை இத்தகையதோ என்று ஊனும் உள்ளமும் கரைந்துருகப் பெறாத தீவினையாட்டியாகிய எளியேன் நின் எதிரில் நின்று கதறும் இப்புலம்பல் ஓசையினை நேரிற் கேட்டறிந்தும் என் துயர் தீரும் வண்ணம் மாற்றம் ஒன்றும் கூறினாயில்லை. இவ்வாறு நீ வெறுத்தொதுக்குமாறு என்பாலுள்ள குற்றந்தான் யாதோ?

170. பொய்மொழி புகலாத நல்வினைப் பேறுடையவனே! நின் மனைக்கிழத்தியாகிய யான் நின்னைப் பிரிந்து இங்கிருந்து துயருற்று நைகின்றேன். நீயோ வாய்மையில் வழுவாத தேவர்கள் வாழும் திருநாட்டினையடைந்து

இன்புறுகின்றாய். என் ஆருயிர்த் தலைவனே! நீ என்னை நோக்கி “நீயே எனது உயிர்” எனக் கூறிய அம்மெய்மொழியும் இன்று பொய்யாய் விட்டதோ?

171. போர் வலி படைத்த தோள்களையுடையவனே! நின் மனைக்கிழத்தியாகிய யான் நின்னெஞ்சிற் பொருத்தியிருந்தேன் என்பது மெய்யாயின், நின்மேற் பகைவர் எய்த கொடிய அம்பு நின்னைக் கொன்றது போலவே என்னுயிரையும் கவர்ந்தழுக்கும். தனியளாகிய என் நெஞ்சில் நீ அகலாது அமர்ந்திருந்தனையாயின் பகைவரது அம்புக்கு இலக்காகாமல் யான் பிழைத்திருப்பது போன்று நீயும் பிழைத்திருப்பாய். இவற்றுள் ஒன்று நிகழாமையால் மனைவியும் கணவனுமாகிய நாம் இருவரும் ஒருவருள்ளத்தில் மற்றவர் அகலாது இருந்திலேம் என்பது உறுதியாயிற்று.

**172. “ஒயா வாளி ஒளித்து நின்று எய்வான்**

**ஏயா வந்த இராமன் என்று உளான்,**

**வாயால் ஏயினன் என்னிகர் வாழ்வு எலாம்**

**ஈயாயோ? அமிழ் தேயும் ஈருவாய்!”**

சாவாமைக்கு காரணமாகிய அமுதத்தையும் தனக்கென வைத்துக் கொள்ளாது தேவர்கட்கு வழங்கிய வள்ளலே! பகைவரது இன்னுயிரைக் கவர்தலில் ஒழியாத ஆற்றல் வாய்ந்த அம்பினை மறைந்து நின்று நின்மேல் எய்தற்கு மனம் இசைந்து வந்த இராமன் என்போல் நின்னை நோக்கி நீ இன்னதைச் செய்யவேண்டும் எனத் தன் வாய்மொழியாற் பணித்தானாயின் நினக்குரிய அரச பதவி முதலிய வாழ்க்கைச் செல்வங்கள் எல்லாவற்றையும் அவன் விரும்பிய வண்ணம் நின் தம்பி சுக்கிரீவனுக்கே கொடுத்து விடமாட்டாயா?

173. நீ நின் தம்பியோடு போர் செய்யப் புறப்படும் முன்னமே இராமன் என்பவன் நின் தம்பிக்கு இன்னுயிர் நட்பமைத்து உன்னுயிர் கொள்ளுதற்கு உடன் வந்தான் என்று சொன்னேன். அம்மொழியை நீ ஏற்றுக்கொள்ளாமல் விருப்பு, வெறுப்பு அம்சமாகிய இராமன் அவ்வாறு முறையற்ற செயலைச் செய்யமாட்டான் என்று சொல்லி, நின் தம்பியை எதிர்த்துப் போர் செய்யப் பொருந்தினாய், அதனால் யுக முடிவையும் கண்டு இறவாது வாழவல்ல பேராற்றல் படைத்த நீ விரைவில் இறந்தொழிந்தாய். உயிருக்குயிராகிய நின்னை யான் இனி எப்பொழுது கண்பேனோ?

174. மைந்தனே! (அங்கதனே) நின் தந்தைக்குத் தம்பியாகிய சுக்கிரீவர், தகுதிவாய்ந்த நின் தந்தையின் வண்மையமைந்த புகழுக்குப் பொருந்த நின்றொழுகிப்

பின் அவ்வுறவு நிலையினின்றும் வேறுபட்டு நின் தந்தையொடு பகைமையினை மேற்கொண்டவராக அமைந்த தீயூழின் தன்மையால் நின் தந்தை இறந்துபட, நம்முடைய வாழ்வனைத்தும் சிதறிக்கெட்டழிந்தன. இதனை நீ பார்த்தியோ?

175. பிறர் யாவராலும் பெறுதற்கு அரிய பெரு வன்மையினால் தன்னை அடைந்தாரது துன்பத்தினைப் போக்கவல்ல வில்வீரராகிய இராமர், எந்த வீரனுக்கும் ஒவ்வாத முறையற்ற செயலை நினைந்து செய்துவிட்டார். அறநெறியினைக் கடைப்பிடித்தொழுகும் தகுதியுடைய பெரியோர்க்கெல்லாம் அவர்கள் செய்யும் நன்றும் தீதுமாகிய செயல்களே அவரது பண்பினை அறிதற்குரிய உரைகல்லாகும் என்னும் ஆன்றோர் மொழி உண்மையோடு படாது, புனைந்துரையின் பாற்பட்டதோ?

**அனுமன், வானர மகளிரைக்கொண்டு தாரையை, அந்தப்புரத்திற்கு அனுப்பிவிட்டு, வாலிக்கு இறுதிக்கடன் செய்வித்து இராமனையடைந்து நிகழ்ந்தன கூறல்**

176. இவ்வாறு வாலியை எண்ணிப் புலம்பியவளாகிய தாரை இத்தன்மையனாகிய புலம்புதல் மொழிகளைப் பலமுறையும் அடுக்கிச் சொல்லி, நீங்காத பெருந்துன்பத்தோடு ஒன்றாகித் தன்னை மறந்தாள். தன்னுணர்வு சிறிதும் வரப்பெற்றிலள். உயிர்ப்பற்று நின்றாள். அவளுக்கு உளதாகிய அத்துன்ப நிலையினை நோக்கி நீதி அமைந்த வலிய முயற்சியினையுடைய பெரிய மலையினையொத்த தோற்றமுடையவனாகிய அனுமன் பின்வரும் செயல்களைச் செய்தான்.

**177. மடவாரால் அம்மடந்தை முன்னர் வாழ்**

**இடம் மேவும் படி ஏவி, வாலி பால்**

**கடன் யாவும் கடைகண்டு, கண்ணனோடு**

**உடனுப் உற்றது எலாம் உணர்த்தினான்.**

அனுமன் வானர மகளிரைக்கொண்டு தாரை எனும் அம்மடந்தையை அவள் முன்னர் தங்கியிருந்த அந்தப்புரத்திற் சென்று சேரும்படி அனுப்பிவிட்டு, வாலிக்குச் செய்யவேண்டிய இறுதிக்கடன்கள் அனைத்தையும் அவன் புதல்வனாகிய அங்கதனைக் கொண்டு செய்து முடித்துத் திருமாலின் அம்சமாகிய இராமனுடனே வந்து சேர்ந்து நடந்த செய்தியனைதையும் அறிவித்தான்.

**சூரியன் மறைதலும் இராமன் இரவுப் பொழுதை அரிதிற் கழித்தலும்**

178. விசும்பின் மீது இயங்கும் சூரியன், அகலிடமாகிய இப்பூமி எழுச்சி குன்றி ஒளியிழக்கும்படி மேற்றிசை மலையிடப் புக்கு மறைய, மறைந்த அப்பொழுது,

பெருமை வாய்ந்த சூரிய மண்டிலமானது மலையினையொத்த தோற்றமுடைய வானர வேந்தனாகிய வாலியின் முகத்தையொத்துச் செந்நிறமுடையதாய் விளங்கியது.

179. கதிரவன் மாலைப் பொழுதில் மறைந்தான். வண்மைக் குணமுடையனாகிய இராமன், சீதையின் துயர் நிலையை எண்ணியவனாய் அங்குத் தங்கியவன், உடல் மெலிந்து உள்ளம் நைந்து வருந்துபவனாகி இருள் நிறைந்து பரவிய இராப்பொழுதாகிய பெரிய கடலினை அரிதின் நீந்திக் கடந்தான்.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினா

1. இராமன் முதலியோர் கிட்கிந்தை நோக்கிச் சென்ற வழியின் இயல்பைக் கூறுக

2. வாலியைக் கொல்ல இராமன் சுக்ரீவனுக்குச் சொன்ன கருத்துரையும், சுக்ரீவன் முடிவும் கூறுக

3. சுக்ரீவன் அழைப்பொலி கேட்டு வாலி போருக்கு எழுந்த நிகழ்வினை விளக்குக

4. வாலியைப் போருக்குச் செல்ல வேண்டாம் எனத் தாரை தடுத்து உரைத்தவற்றைக் கூறுக

5. வாலி தன் பேராற்றல் குறித்து தாரையிடம் கூறியவற்றை விவரி

6. சுக்ரீவனது ஒவ்வாச் செயல் குறித்துப் பேசிய இலக்குவனுக்கு இராமன் கூறிய மறுமொழி யாது?

7. வாலி, சுக்ரீவன் போர் நிகழ்ச்சியைச் சுருக்கி வரைக

8. தன் மார்பில் பாய்ந்த அம்பு குறித்து வாலி சீற்றத்துடன் சிந்தித்தவை யாவை?

9. இராமனின் அம்பு கண்டு வாலி வருந்தி உரைத்தவற்றைக் கூறுக

10. இராமனிடம் வாலி ‘ நின் செயல் முறையற்றது’ என இகழ்ந்து கூறியவற்றை எழுதுக

11. வாலி தன்னை இகழ்ந்து பேசியது கண்டு இராமன் கூறிய மறுமொழிகளை விவரிக்க

12. இராமனின் மறுமொழிக்கு வாலி கூறிய எதிர்மொழிகளை விளக்குக

13. வாலி செய்த குற்றங்கள் குறித்து இராமன் கூறியவற்றை எழுதுக

14. வாலி இராமனிடம் வேண்டிய வரங்கள் யாவை?

15. அம்பு பட்டு வீழ்ந்த வாலி, சுக்ரீவனிடம் கூறிய அன்புரைகளை எழுதுக

16. அங்கதன், வாலி மீது விழுந்து அழுது புலம்பியவற்றை விவரி

17. வாலி அங்கதனுக்குக் கூறிய அறிவுரைகள் யாவை?

18. தாரை புலம்பலை விவரி

## நெடுவினா

1. சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைத்ததும், வாலி போருக்கு எழுந்ததும் ஆன நிகழ்ச்சிகளை விவரித்து எழுதுக

2. வாலியைத் தாரை தடுத்து உரைத்ததும், வாலி தன் பேராற்றலை எடுத்துரைத்ததுமான செய்திகளை விளக்கி வரைக

3. வாலியின் ஆற்றல் கண்டு இலக்குவன் வியத்தலும் இராமன் மறுமொழியும் பற்றி விவரித்து எழுதுக

4. வாலி, சுக்ரீவன் போர்த் திறத்தை விவரிக்க

5. ‘இராமன் மறைந்து நின்று அம்பு எய்தலும், வாலி இராமபாணத்தைக் காண்டலும்’ குறித்து விரிவான விடை தருக

6. இராமபாணம் கண்டு வாலி வருந்திக் கூறியவற்றை விவரிக்க

7. இராமனை வாலி இகழ்ந்துரைத்தலும், இராமன் மறுமொழியும் குறித்து விளக்குக

8. அங்கதன், தாரை புலம்பலை விவரி

# தேம்பாவணி

## முடி சூட்டு படலம்

**தேம்பாவணி**

சூசை விண்ணுலகிலும் மண்ணுலகிலும் மன்னனாக முடி சூட்டப்பெற்ற செய்தியைக் கூறும் பகுதி.

தேம்பாவணி என்னும் நூல் இயேசு கிறிஸ்துவின் வளர்ப்பு தந்தையான புனித யோசேப்பு மீது இயற்றப்பட்ட முதற் பெரும் செய்யுள் வகை நூலாகும். இந்நூல் இத்தாலிய நாட்டவரான **வீரமாமுனிவர்** அவர்கள் தமிழில் திறம்பட ஆக்கிய நூல் எனப் புகழப்படுகிறது. கிறிஸ்தவ சமயத்தின் சுருக்கமென்றே இந்நூலை அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர்.

இத்தமிழ்க் காப்பியம் பிறமொழி நூல் ஒன்றில் வருகின்ற செய்திகளைத் தழுவி, தமிழ் நெறிக்கேற்ப எழுதப்பட்டதாகும். அந்நூலைத் தழுவி, தமிழ் மரபுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்ப யோசேப்பின் வரலாற்றை இயற்றியிருக்கிறார் **வீரமாமுனிவர்**.

**தேம்பாவணியின் பொருள்**

தேம்பா + அணி எனப் பிரித்து வாடாத மாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்துத் தேன் போன்ற இனிய பாடல்களின் மாலை என்றும் இதற்குப் பொருள் உண்டு. இயேசு நாதரை வளர்த்த தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு இது பாடப்பட்டது. சூசையப்பருக்குத் தேம்பாவணி எனப் பெயரிட்டு இந்நூலில் பாடியுள்ளார்.

**நூலின் அமைப்பு**

தேம்பாவணி மூன்று காண்டங்களைக் கொண்டது. ஒவ்வொன்றிலும் 12 படலமாக 36 படலங்கள் உள்ளன. மொத்தம் 3,615 விருத்தப்பாக்கள் 90 சந்த வகைகளுடன் பாடப் பெற்றது தேம்பாவணி.

**தமிழ் மரபு**

தேம்பாவணி ஆசிரியர், வெளி நாட்டவரே ஆயினும், காப்பியக் கதைத் தலைவர் சூசை வாழ்ந்தது தமிழ் மண்ணில் இல்லை எனினும், காப்பியம் முழுக்கத் தமிழ்

மணம் கமழ்வதாக, தமிழ்ப் பண்பாட்டில் தோய்ந்ததாகவே படைக்கப் பெற்றுள்ளமைக்குப் பல சான்றுகள் கூறலாம். **வீரமாமுனிவர்** வெளிநாட்டவராக இருந்தும் தமிழ் மரபைக் கருத்தாகக் கடைப்பிடித்திருப்பது சிறப்பு. அவர் வருணிக்கின்ற பாலத்தீன நாடும், எருசலேம் நகரும் தமிழ் மண்ணின் மணம் கமழ்வதாகவே உள்ளன. முன்னோர் மொழியைப் பொன்னேபோல் போற்றிய **வீரமாமுனிவர்** திருவள்ளுவர், சீவக சிந்தாமணி பாடிய திருத்தக்கதேவர், கம்பர், மாணிக்கவாசகர் போன்றோரின் நடை, சொல், உவமை, கருத்து போன்றவற்றைச் சூழலுக்குப் பொருத்தமாக எடுத்தாள்கிறார்.

**நூலின் சிறப்பு**

தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு. **வீரமாமுனிவர்** இயற்றிய தேம்பாவணி கிறித்தவ விவிலியத்தில் வருகின்ற பல நிகழ்ச்சிகளை உள்ளடக்கியுள்ளது. தேம்பாவணியின் காப்பியத் தலைவனாக யோசேப்பு (சூசை, வளன்) இருந்த போதிலும், அங்கே அன்னை மரியா மற்றும் இயேசுவின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளது. தேம்பாவணிக் காப்பியம் இயற்கை வனப்பில் இறைவனின் தோற்றம், இல்லறம், துறவறம் ஆகியவற்றின் மாட்சி, உழைப்பின் மேன்மை, வறுமையில் செழுமை, கற்பின் பெருமை, கடவுளின் இலக்கணம், வானோர் உயர்வு, நரகோர் தாழ்வு, பாவத்தின் கொடுமை, அறத்தின் மேன்மை, காதலின் பெருமை, காமத்தின் தீமை ஆகியவற்றை விளக்கும் நீதி நூலாகவும் விளங்குகிறது.

**யோசேப்புக்கு விண்ணகத்தில் இறைவன் முடிசூட்டல்**

தன்னை வளர்த்து ஆளாக்கிய யோசேப்பு மண்ணுலகில் இறைவனுக்கு உகந்தவராக வாழ்ந்து சிறப்புற்றமையால் அவருக்கு விண்ணக மகிழ்ச்சியில் பங்களித்து அவரை மாட்சிப்படுத்த வேண்டும் என்று இயேசு தந்தையாம் இறைவனிடம் கேட்கின்றார். முழுமுதல் இறைவனாகிய தந்தை அவ்வாறே யோசேப்புக்கு மணிமுடி சூட்டுகின்றார். பின்னர் மகனாம் இறைவன் இயேசு யோசேப்புக்கு மகுடம் சூட்ட, இறுதியில் தூய ஆவி இறைவன் யோசேப்பைப் பெருமைப்படுத்துகிறார்.

## முடி சூட்டு படலம்

சூசை விண்ணுலகிலும் மண்ணுலகிலும் மன்னனாக முடி சூட்டப்பெற்ற செய்தி கூறும் பகுதி. இங்கு பாடப்பகுதியாக முடிசூட்டுப் படலத்திலிருந்து 30 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இப்படலம் கூறும் செய்திகளை இங்கு விரிவாகக் காணலாம்.

**திருமகனும் சூசையும் விண்ணேறுதல்**

**1. அன்பு அருந்திய ஆண்டகை மாய்தலால்**
**துன்பு அருந்திய யாவரும், தொய்யலின்**
**பின்பு அருந்திய காட்சியின் பெற்றியால்,**
**இன்பு அருந்தலில் எல்லை ஒன்று இல்லை ஆல்.**

அன்பு செறிந்த ஆண்டவனாகிய திருமகன் முன்னே இறத்தலால் துன்பம் உட்கொண்ட யாவரும், பின்பு மகிழ்ச்சியோடு தாம் சுவைத்த உயிர்ப்புக் காட்சியின் தன்மையால், இன்பம் அருந்தியதற்கு எல்லையென ஒன்றும் இல்லை.

2. நீதி சார்ந்த நல்ல வேத நெறியைக் காட்டித் தந்து, கருணைச் சக்கரத்தால் உலகை ஆளும் ஆண்டவன், இவ்வாறு நாற்பது நாள் இங்கே தங்கியிருந்த, பின், பகலவன் உலாவும் வானத்திற்கும் மேலே செல்ல ஆசை கொண்டு, அதற்குக் கருத்தும் கொண்டான்.

**3.** விதிமுறைப்படி அமைந்த உண்மை வேதத்தை உலகிற்கு அருளிய நல்ல ஆண்டவனும், புகழ் கொண்டு உயர்ந்த வளர்ப்புத் தந்தையாகிய சிறந்த சூசையும், பிறைமதியின் மேல் எழுந்து நின்ற அடிகளை உடைய மரியாளை வாழ்த்தியவராய், "எல்லாச் செல்வங்களாலும் உயர்ந்த விண்ணுலகு செல்ல நாங்கள் விரும்புகின்றோம்" என்றனர்.

**4.** யாழினின்று மீட்டிய இசை போலும் இனிய சொல்லை உடைய மரியாள், புண் புகுந்த வேல் போன்ற அச்சொல்லைக் கேட்டு, "நான் வானத்தைக் குடைந்து வந்த இடிக்கு ஆளாகுமாறு, நீங்கள் கண்ணைப் பறித்த ஒளி வடிவம் காட்டி, மின்னல் போல் மறையப் போகிறீர்களோ!" என்று கூறி, வணங்கி ஏங்கினாள்

**5.** "பகலின் மன்னனாகிய பகலவன் மறைவதனால் உண்டாகும் இருளை அறுத்து ஒளிதரும் இரவின் மன்னனாகிய விண்மதி போல், நாங்கள் இவ்வுலகை விட்டு நீங்குவதனால் ஏதேனும் துயரம் ஏற்படுமாயின், நீயே இங்கிருந்து யாவரையும் பேணுவாய்" என்று அவ்விருவரும் மரியாளுக்குச் சொல்லி, ஆசியும் வழங்கி, மூவருமாக ஒரு மலையை அடைந்தனர்.

**6. களி அழுந்திய காட்சி உளோர்களும்**
**ஒளி அழுந்திய உம்பரும் முன்பு உற,**
**தெளி அழுந்திய சீடரும் பின்வர,**
**வெளி அழுந்திய வெற்பினைத் துன்னினார்.**

களிப்பில் மூழ்கிய தெய்வக் காட்சியை அடைந்துள்ள பாதலத்தோரும் ஒளியில் மூழ்கிய வானவரும் தமக்கு முன்னே செல்லவும், தெளிவில் மூழ்கிய சீடர் பின்னே வரவுமாக, மூவரும் வெளியான ஒரிடத்திற் பொருந்திக் கிடந்த அம்மலையை அடைந்தனர்.

**7. விரை கிடந்த வெற்பு ஏறி, விண் வேந்தனும்**
**கரை கடந்த கடல் கடந்து இன்பு உற,**
**நிரை கிடந்தனர், ஆகுலம நீத்து அற,**
**சுரை கிடந்த சொல் ஆசி தந்தான் அரோ.**

விண்ணுலக அரசனாகிய திருமகன், மணம் நிறைந்து கிடந்த அம்மலைமீது ஏறி, அங்கு அணியாக நின்றுகொண்டிருந்த பிறர், கரைக்குள் அடங்காத கடலையும் கடந்த இன்பத்தில் மூழ்கவும், தம் துன்பமெல்லாம் அறவே நீங்கவும், தேனின் இனிமை பொருந்திக் கிடந்த சொல்லால் ஆசி வழங்கினான்.

**8.** தான் விருப்பத்தோடு மேலே எழுந்து செல்லுமுன், மணமுள்ள தாமரைத் தடாகத்தின் மேலே எழுந்து நிற்கும் ஞாயிறு போன்று, சூசைமீது தன் அருளைச் சொரிந்து அவனும் தன்னோடு மேலே எழுந்து வருமாறு, தன் உள்ளம் நிறைந்து வரும் அன்போடு, திருமகன் சூசையை நோக்கிப் பின்வருமாறு கூறினான் :

9. "புண்ணை ஆற்றிக் காக்கும் மருந்து போல் அமைந்தவனே, கண்ணைக் காக்கும் இமைக்கு ஒப்பான அன்போடு, இம்மண்ணுலகை மீட்டுக் காக்கும் என்னையே நீ இம்மண்ணுலகில் காப்பாற்றி வந்தமையால், இனி விண்ணுலகத்தையே ஆளும் அரசனாக விளங்குவாய்.

10. "ஓயாத தவம் பூண்ட தாவீதனுக்குக் கடவுள் கூறிய சொல்லில் அமைந்துள்ளபடி, நிறைவாக அவன் குடும்பப் பரம்பரையில் அமைந்துவரும் மகனாகிய நீ, அழியாத சிறப்போடு, மண்ணுலகையும் வானுலகையும் அரசனாக நின்று ஆளுவாய்.

**11. "நான் அளித்த மனுக் குலம் நன்று உற,**
**கோன் அளித்த முடிக் குடம் சூடி நீ,**

**வான் அளித்த வளம் கொடு வாழ, வில்**
**மீன் அளித்த விசும்பு உயர் வாய்" என்றான்.**

"நான் மீட்டுக் காத்த மனித இனம் நன்மை அடையும் பொருட்டு, நீ அரசனுக்குரிய மகுடமுடி சூடி, வானுலகுக்குரிய வளங்கொண்டு வாழுமாறு, ஒளியுள்ள விண்மீனைக் கொண்டுள்ள வானுலகிற்கு எழுந்து வருக" என்றான்.

**12. பொருளில் வீங்கிய தாள் வளன் போற்றலும்,**
**தெருளில் வீங்கிய சேனைகள் வாழ்த்தலும்,**
**அருளில் வீங்கிய ஆண்டகை பால், வளன்,**
**மருளில் வீங்கிய வையம் விட்டு ஏறினான்.**

பொன் போல் சிறந்த திருமகனின் அடிகளைச் சூசை போற்றி வணங்கவும், தெளிவால் சிறந்து விளங்கிய வானவர் படைகள் இருவரையும் வாழ்த்தின. அதன்பின், சூசை, அருளில் சிறந்து விளங்கிய ஆண்டவன் அருகே சேர்ந்து, மயக்கம் நிறைந்த இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகிற்கு ஏறிச் சென்றான்.

**13.** இவ்விருவரும், வான வெளியில் நிறைந்து கிடந்த விண்மீன்களிடையே தோன்றிய நல்லொளி நிறைந்த ஞாயிறும் திங்களுமாகிய இரு சுடர்கள் போன்று, மகிழ்ச்சி நிறைந்த வானவர் அணிகளின் நடுவே, குளிர்ச்சி நிறைந்த இன்பங் கொண்டு ஏறிச் சென்றனர்.

14. வானுலகில் உலாவும் வானவர் படைகளின் பிரிவுகளெல்லாம், விண்மீன்களில் திகழும் ஒளி உருவங் கொண்டு தோன்றி வந்து, தேன் பொருந்திய மலர் மாலைகளை இருவர்க்கும் வழங்கி எதிர் கொள்ள, அவ்விருவரும் அரசனுக்குரிய வளத்தோடு ஏறிச் சென்றனர்.

15. ஒளிக்கதிர் எழுந்ததைக் காண விரும்பி, அன்று ஞாயிறு எழுந்து வந்து, தான் ஒப்பாதலில் தோற்றாற் போல, நாணத்தோடு மெல்ல எழுந்து சிவந்து தோன்றியது. மேன்மை மிக்க அவ்விருவரும், சொல்லுக்கு அடங்காமல் மேலோங்கிய அத்தகைய சுடரொளி உருவத்தோடு ஏறிச் சென்றனர்.

**16. மிகை விரிந்த வியப்பு, இமையாது, இவண்**
**தொகை விரிந்து நின்றார் துயர் தீர்ப்ப,**
**வான் முகை விரிந்த மணி முகில் மூடி, அவ்**
**வகை விரிந்த வில் வாகனத்து ஏறினார்.**

அளவின் மிகுந்த வியப்போடு, இமை கொட்டாமல், அம்மலையடியில் தொகை மிகுந்து கூடி நின்றவர் தம் துயரத்தைப் போக்கும் பொருட்டு, வானத்தில் மலர்போல் விரிந்த அழகிய மேகம் ஒன்று மூடி மறைக்க, அவ்விதமாய் விரிந்த ஒளி வீசும் மேக வாகனத்தில் ஏறிச் சென்றனர்.

17. வானத்தினின்று பெயர்ந்து விழுந்த இடிபோல வானுலகினின்று கெட்டு நரகத்தில் விழுந்த வஞ்சகப் பேயின் செயலால், ஆதிப் பெற்றோர் உண்டு, தேன் ஒழுகும் கனி ஒன்றால் உண்டான பாவம் அடைத்து வைத்த வானுலக வாயிலை, நம் தந்தையாகிய திருமகன், மண்டி முழங்கும் அலைகள் தவழும் இவ்வுலகை மீட்டுக் காத்த அருட்செயலின் பயனாக, எட்டுத் திசையிலும் வாழும் மனிதர்க்கெல்லாம் அன்றே திறந்து வைத்தான்.

**18.** அடைத்திருந்த மோட்ச வாயிலைத் திறந்து விட்டவனாகிய திருமகனைச் சரணாக அணுகி, தம்மை அணுகும் துன்பமெல்லாம் உடைத்தெறிந்த தன்மையாக, தம் உள்ளந் தளராமல், அவனுக்கு ஏற்ற அறநெறியில் நிலைகொண்டவரே அல்லாமல், படைக்கப்பட்ட பொருள்களையே விரும்பிப் பற்றி, அவற்றையெல்லாம் படைத்த ஆண்டவனைப் பகைப்பவர் இங்கு வந்து நுழைய மாட்டாரென்று சொல்லி, தானே துடைத்துப் போக்கிய பாவ நோய்களுக்கெல்லாம் ஒரே மருந்து போன்றவனாகிய திருமகன், தன்னைத் தொடர்ந்து வந்த நல்லவர் கூட்டம் சூழ்ந்து வர மோட்ச வீட்டுள் புகுந்தான்

**19.** அவ்வாறு புகுந்த எல்லையற்ற மனிதனும் இறைவனுமாகிய திருமகன், பொலிவுடன் விளங்கும் வானவர் நிலையைக் கடந்து, திரண்ட சிந்தனையின் நிலையையும் கடந்து நின்ற பேரின்ப நிலையில் தனது தந்தையாகிய கடவுள் வீற்றிருந்து ஆளும் மிக்க ஒளி சூழ்ந்த அரியணை முன் விழுந்து தொழுது, மக்கள் மீது தான் கொண்ட அன்பு மேலோங்கி நின்று தன் உள்ளத்தைத் தூண்டுதலால், அளவில்லாத அன்போடு, பின்வருமாறு சொல்லலானான்.

**20.** நிலையாத இன்பத்தை நாடிச் செய்த தீவினையைப் போக்க இயலாத மக்கள் மீது இரக்கங் கொண்டு நானே மனிதன் ஆனேன். அவர்கள் வாழும் பொருட்டு நான் உயிர் நொந்தேன்; துன்பத்தால் தளர்ந்தேன், இகழ்ச்சி கொண்டு இறந்தேன். முன் நாளில் தந்தையாகிய நீ எனக்குக் கட்டளையிட்டதெல்லாம் முடித்தேன். பகையாகிய பேயை வென்றேன். வென்று, இதோ, இவர்களையெல்லாம் மீட்டுக் கொணர்ந்து, இங்கே ஆண்டு கொண்டிருந்து மகிழுமாறு, இன்று உன் அடிகளிற் சேர்ந்தேன்.

**21. "நமர் என்று இரங்கி, அன்பு மிக, நான் மீட்டு அளித்த நரர் குலமே**
**நுமர் என்று, இரங்கி அருள் நோக்காய். நூறாப் பழிப் பேய், அக்குலத்தார்**
**தமர் என்று ஆள்வது இனி நன்றே? தயைக்கு என் இனத்திற்கு இறங்கி, பேய்**
**அமர் என்று, அவர் வென்று, ஈங்கு எம்மோடு ஆள அருள் செய்க" எனத் தொழுதான்.**

"நம்மைச் சேர்ந்தவர் என்று இரங்கி, அன்பு மிக, நான் மீட்டுக் காத்த மனித குலமே, உம்மைச் சேர்ந்தவரென்று கொண்டு, இரங்கி அருளோடு நோக்குவாய். அழியாத பழி பூண்ட பேய்கள், அக்குலத்தாரைத் தம்மவர் என்று கொண்டு இனியும் ஆள்வது நல்லதோ? இது பேயின் போரென்று மதித்து, தயவு கொண்டு என் இனத்தார்க்கு இரங்கி, அவர் அப்பேயை வென்று, இங்கு வந்து நம்மோடு அரசாள அருள் செய்வாயாக" என்று கூறித் தொழுதான்.

**22. களி கூர்ந்து, ஆர்வத்து அரு மகனைக் கனியத் தழுவி, கண் கடந்த**
**ஒளி கூர்ந்து உயர் தன் ஆசனத்தின் உகப்பில் அருத்தியோடு இருத்தி,**
**அளி கூர்ந்து, "ஏதோ, என் மகனே, அமைவகேள்" என்று, அவன் கூற,**
**நளி கூர்ந்து, ஆற்றா அருள் ஏந்து நளின நெஞ்சான், மீட்டு உரைத்தான்;**

அத்தந்தையும், மகிழ்ச்சி மிக்கு, தன் அருமை மகனை ஆர்வத்தோடு கனியத் தழுவி, கண்ணுக்கு அடங்காத ஒளி மிக்கு உயர்ந்து நின்ற தன் அரியணையில் விருப்பங் கலந்த அன்போடு அமர்வித்து, கருணை மிகுந்து, "என் மகனே, வேண்டுவன எதுவாயினும் என்னிடம் கேள்" என்று கூற, குளிர்ச்சி மிகுந்து, தாங்காத கருணை ஏந்திய இனிய நெஞ்சங் கொண்ட திருமகன், மீண்டும் பின்வருமாறு கூறலானான்.

23. "முன் உன்னிடம் இருந்து, பின் உன் ஏவலால் நான் உலகத்தில் மனிதனாய் இறங்கிச் சென்ற வேளையில், இவனிடமே தங்கியிருந்து, நீயே இவனுக்குத் தந்த குளிர்ந்த தேன் சிந்தும் மலர்க்கொடியின் ஒளியினிடையே இருந்து, இவன் நிழலில் ஒதுங்கிக் கொண்டிருக்க, விருப்பத்தோடு அரிய தன்மையாய் என்னை வளர்த்தான். இப்பொழுது உன் பக்கம் நின்று தொழுது கொண்டிருக்கும் இச்சூசையே தான் உலகத்தில் தனக்கு ஒப்பற்ற மனத்தூய்மை கொண்டவன்.

24. "பிறர்க்கு எட்டாத கருணை என்னும் கடலுக்குக் கரை கண்டவனாகிய இவன், அரிய வரமெல்லாம் கொண்டிருந்தான்; மண்ணுலகில் என் தாய் அடைந்த துயரத்தைப் போக்கினான்; வேற்றுநாடு அடைந்து, தன் நாட்டுக் கொடுங்கோல்

மன்னனின் வஞ்சகத்தினின்று என் உயிரைக் காத்தான்; பிரியாத அன்பினால் தூண்டப் பெற்று, நான் பிரிந்தபோது அழுதான்; நான் கனிந்த சுவையுள்ள உணவு அருந்தும் பொருட்டுத் தான் இரந்தான்; வருந்தினான்; வேர்க்க உழைத்தான்.

**25.** "நினைவையும் கடந்த காட்சியால் எல்லாம் அறியும் நல்லவனே, உன்னோடு ஒன்றாக நின்று மூன்று உலகங்களையும் ஒருங்கே நிழலிட்டுக்காக்கும் வல்லமையுள்ள எனக்கும், என்னோடு, கன்னிமை கெடாமல் என்னைப் பெற்ற மரியாளுக்கும் தானே நிழலிட்டுக் காத்தவனும், ஒளி பொருந்திய வான் மணிக்கு ஒப்பாக விரிந்த மலர்க் கொடியை உடையவனுமாகிய இவனது மாண்பின் தகுதியை, இனி நான் உன்னோடு உரைக்க வேண்டுவதென்ன?

**26. "இன்னான் இன்ன ததவு உளனாய், என்னோடு உடல் கொண்டு ஈங்கு அடைந்தான்,**
**பல்நாள் தொடர்ந்த பழி அற, நான் பாய் செங்குருதி தந்து இறப்ப,**
**என்னால் ஆய பயன் காட்ட, இவனே மக்கட்கு அரசன் எனா,**
**மின் ஆர் மணி ஆர் முடி சூட்டல் வேண்டும், ஐயா!" எனப் பணிந்தான்.**

"ஐயா, இவன் இத்தகைய தகுதி உடையவனாய், உடல் கொண்டு உயிர்த்து என்னோடு இங்கு வந்துடைந்துள்ளான். பல காலமாய்த் தொடர்ந்து வந்த பாவப் பழி முழுவதும் அழிய, பாயும் செந்நிறமான என் இரத்தத்தைத் தந்து இறந்திருக்கவே, என்னால் விளைந்த பயன் எத்தகையதென்று காட்ட, இவனே மனிதர்க்கெல்லாம் அரசனென மதித்து, ஒளி மிக்க மணிகள் நிறைந்த முடியை இவனுக்குச் சூட்டுதல் வேண்டும்" என்று கூறி வணங்கினான்.

27. திருமகன் ஆராய்ந்து இன்பமாய்ச் சொன்னவற்றைத் தந்தையாகிய ஆண்டவன் கேட்டு, வான் வீட்டில் பெருமகிழ்ச்சி தோய்ந்து, யாவரும் மகிழ்ந்து, ஓயாத புகழுரைகளை ஒலிபடச் சொல்லிக் கொண்டிருக்க, "அதுவே நன்று!" என்றான்; இத்தகைய பெருமை வாய்ந்து உவகையுடன் தொழுது நின்ற சூசையை நோக்கி, தன் நல்லாசியையும் வழங்கி, நீங்காத அன்போடும் அருளோடும், "நீ இங்கு எழுந்து வருக!" என்று அழைத்து, இறுக அணைத்துக்கொண்டான்.

**சூசைக்கு முடி புனைவு**

**28. வான் புறத்து இலகும் செஞ்சுடர் காண வந்து என வனைந்த வாள் மகுடம்,**
**தான் புறத்து ஒரு வேறு ஏழ் சுடர் பூண்ட தன்மை ஏழ் மணி ஒளி இயக்க,**
**மீன் புறத்து அகற்றும் செல்வ வீட்டு உவகை மிக அளவு இன்றி,**

**அம்முடியை,**

**கான் புறத்து அலர் கோல் சூசை தன் தலைமேல் களிப்பு எழ, முதலவன்,**

**புனைந்தான்.**

வானத்தில் விளங்கும் பகலவன் அக்காட்சியைக் காண வந்தது போல் அமைத்த ஒளியுள்ள மகுடம்; தன் புறத்தே சுற்றிலும் வேறு ஏழு பகலவரைப் பூண்ட தன்மையாக ஏழு மணிகள் ஒளி பரப்பியிருக்க, விண்மீன்களை ஒளியற்றனவென்று புறத்தே போக்கும் செல்வச் சிறப்புள்ள மோட்ச வீட்டில் மகிழ்ச்சி அளவின்றிப் பொங்க, தெய்வ மூன்றாட்களுள் முதலவனாகிய தந்தையாம் கடவுள், மணத்தைப் புறத்தெல்லாம் பரப்பி மலர்ந்த மலர்க்கோலைத் தாங்கிய சூசையின் தலைமேல் மகிழ்ச்சியோடு அம்முடியைச் சூட்டினான்.

29. தெய்வீக மகிழ்ச்சி ஒலியின் ஓசைகள் முழங்கின; தொடர்ந்த துதியின் ஓசைகள் முழங்கின; தெய்வீக வீணையினின்று வரும் ஓசைகள் முழங்கின; இனிய பாடலின் இசைகள் முழங்கின; பொலிந்த வாழ்த்தின் ஓசைகள் முழங்கின; வியப்புக் கொண்டவரின் ஓசைகள் முழங்கின; அவ்வாறு முழங்கிய மகிழ்ச்சியினிடையே, மூவருள் இரண்டாமவனாகிய திருமகன், ஒளி நிறைந்த மற்றொரு முடியை அரிய தவத்தோனாகிய சூசைக்குச் சூட்டினான்.

30. **ஆர்த்தன பல்லாண்டு; ஆர்ந்தன உவகை; ஆறு அறுநூற்று மூ ஐம் பூ,**

**சீர்த்தன மதுவின் பூத்தன, சூசை சேர்த்த கைக் கொடியில். அம் மலரால்**

**கோர்த்தன ஆறாறு அணிகளே. கடவுட் குளுஞ் சுடர்ப் பதத்து அவை,**

**வானோர்,**

**நீர்த்தன இன்பத்து அணிய, மா தவற்கே, நேயனும் ஒளிமுடி**

**புனைந்தான்.**

'பல்லாண்டு வாழ்க!' என்னும் வாழ்த்தொலிகள் முழங்கின; மகிழ்ச்சிகள் நிறைந்தன; சூசை தன்கையில் தாங்கியிருந்த மலர்க் கொடியில் சிறந்த தேனோடு பூத்த மலர்கள் மூவாயிரத் தறுநூற்றுப் பதினைந்து. அம்மலர்களால் தொடுத்த மாலைகள் முப்பத்தாறு. வானவர் அவற்றைக் கடவுளின் குளிர்ந்த ஒளியுள்ள அடியில் சிறந்த இன்பத்தோடு அணிந்தனர். அப்பொழுது, மூவருள் மூன்றாமவனாகிய நேயன் எனப்படும் தூய ஆவியும் பெருந்தவத்தோனாகிய சூசைக்கு ஒளி முடி சூட்டினான்.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினா

1. சூசை மரியாளிடம் தானும் திருமகனும் விண்ணுலகம் செல்வது பற்றிக் கூறியது என்ன? அதற்கு மரியாள் உரைத்த மறுமொழி யாது?

2. திருமகன் சூசையிடம் விண்ணுலகை ஆள வருமாறு கூறியவை குறித்து எழுதுக.

3. திருமகனும் சூசையும் விண்ணுலகம் ஏறிய காட்சியை விவரி

4. திருமகன் இறைவனிடம் உரைத்த செய்திகளைத் தருக.

5. இறைவனிடம் திருமகன் சூசை குறித்து கூறியவற்றை எழுதுக

6. சூசை முடிசூட்டு நிகழ்வு குறித்து எழுதுக

### நெடுவினா

1. திருமகன், சூசை இருவரும் விண்ணுலகம் ஏறிய நிகழ்ச்சிகளை விவரி

2. திருமகனும் சூசையும் விண்ணுலகம் அடைந்த நிகழ்வுகளையும், அங்கு இறைவனிடம் திருமகன் கூறிய கருத்துக்களையும் தொகுத்துரைக்க

3. சூசை பற்றி திருமகன் இறைவனுக்குக் கூறியதும், சூசை முடிசூட்டு நிகழ்வு நடந்தேறியதும் பற்றி விவரித்து எழுதுக

4. சூசையின் பண்புநலன்களை விவரிக்க

# சீறாப்புராணம்

தமிழில் எழுதப்பட்ட தலைச்சிறந்த இசுலாமிய இலக்கியம் **சீறாப் புராணம்** ஆகும். இந்நூல் இறைதூதர் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு தமிழ்மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்ட ஒரு காவியம். இதனை இயற்றியவர் 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமறுப்புலவர் ஆவார். அதே காலத்தில் வாழ்ந்த வள்ளல் சீதக்காதியின் ஆதரவை உமறுப் புலவர் பெற்றார்.

வள்ளல் சீதக்காதியின் பெருமையைச் "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்ற சொற்றொடர் விளக்கும். இக்காப்பியம் இரண்டு பாகங்களில் அமைந்துள்ளது. முதற்பாகத்தில் 45 படலங்களும், இரண்டாவது பாகத்தில் 47 படலங்களும் என நூல் முழுவதும் 92 படலங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் 5027 பாடல்கள் அமைந்துள்ளன

இறைவனின் திருத்தூதர் முஹம்மது நபி அவர்களின் சிறந்த வாழ்க்கை வரலாற்றினை விவரிக்கும் இனிய தமிழ் நூல் சீறாப்புராணம் ஆகும். இவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர். ஷேக் அப்துல் காதிர் மரைக்காயர் என்னும் வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின்படி உமறுப்புலவர் சீறாப்புராணத்தை எழுதத் தொடங்கினார். நூல் முற்றுபெறும் முன்னரே சீதக்காதி மறைந்தார். பின்பு அபுல் காசிம் என்ற வள்ளலின் உதவியால் சீறாப்புறாணம் நிறைவு பெற்றது. அதன் காரணமாக உமறுப்பலர் அவர்கள் வள்ளல் அபுல் காசீம் அவர்களைத் தனது நூலில் பல இடங்களில் நினைவு கூர்ந்து போற்றுவது குறிப்பிடத்தக்கது.

உமறுப்புலவர் அவர்கள் முதுமொழிமாலை என்ற எண்பது (80) பாக்களால் ஆகிய நூலையும் தமிழுக்குப் படைத்தளித்துள்ளார். சீறத் என்னும் அரபுச் சொல் தமிழ்மொழி மரபிற்கேற்ப சீறா என்று வழங்கப்படுகிறது. சீறா என்றால் வாழ்க்கை என்பது பொருளாகும். புராணம் என்பது வரலாறு.

சீறாப்புறாணம் என்பதற்கு நபிகள் நாயக்தின் வாழ்க்கை வரலாறு எனப்படுகிறது. இந்நூல் விலாதத்ததுக்காண்டம், நுபுவத்துக்காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என்ற மூன்று பெரும் பிரிவுகளையும் 5027 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது. இவை முறையே விலாதத்துக்காண்டத்தில் இறைவனின் திருத்தூதர் முஹம்மது நபி (அவர்கள் மீது இறைவனின் சாந்தியுண்டாகட்டும்) அவர்களின் பிறப்பு, இளமைப்பருவம், திருமண வாழ்க்கை ஆகியவையும் நுபுவத்துக்காண்டத்தில் வானவர் ஜிப்றாயீல் மூலம் திருமறை நபிகள் பெருமானுக்கு அருளப்பட்டதும் அதன்பின் மக்கா நகரத்தில் நடந்தவையும் ஹிஜ்றத்துக்காண்டத்தில் மக்கா நகரை விட்டு நாடுதுறந்து பெருமானார் மதீனா நகருக்கு சென்றதும் தீன் நிலை நிறுத்தற்காக நிகழ்ந்த போர்களும் போராட்டங்களும் பிறவும் வரையப்பட்டுள்ளன. சீறாப்புராணத்தில் நபிகள் நாயகத்தின் வாழ்வு முற்றிலுமாக பாடி நிறைவு செய்யப்படவில்லை. பனு அஹ்மது மரைக்காயர் என்பவர்தாம் பெருமானாரின் தூய திருவாழ்வு முழுமையும் பாடி முடித்தார்கள். அஃது சின்னச் சீறா என்று வழங்கப்படுகிறது.

இங்கு சீறாப்புராணத்திலிருந்து ஓநாய் பேசிய படலம் என்னும் பகுதி பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

இப்படலம், மக்க மாநகரை அடுத்த கானகத்தில் ஓநாய் ஒன்று மானை விரட்டிச் செல்ல, அந்த மான் ஹரம் ஷரீபுக்குள் சென்று விட்டது. அங்கு நின்றிருந்த குறைஷிக் கொடுமனத் தலைவர்களாகிய அபூஜஹல், அபூஸுப்ய்யான் ஆகியோரிடம் அறநெறி போதித்த அற்புதம் பற்றிக் கூறுகிறது.

## ஓநாய் பேசிய படலம்

**1. நலனுறு மக்கமா நகரைச் சுற்றிய**

**மலைகளி னொருவரை யடவி யின்வயி**

**னிலைகொளாப் பறழொடு நிறைந்த புள்ளிமான்**

**கலையொடுஞ் செறிந்துபுற் கறித்து நின்றதே.**

நன்மை பொருந்திய திரு மக்கமா நகரத்தை வளைந்த மலைகளில் ஒரு மலையினது காட்டினிடத்துப் பொலிந்த புள்ளிகளையுடைய பெண்மான்கள், தனித்து நிற்றலைப் பெறாத தமது குட்டிகளுடனும் ஆண் மான்களுடனும் நெருங்கிப் புற்களைப் பற்களினால் மென்று மேய்ந்து கொண்டு நின்றன.

**2.** அவ்வாறு நிற்க, கூர்மை தங்கிய நகங்களையும், சுருண்ட வாலையும், வளைந்த பற்களையும், தூங்குகின்ற மார்பையும், உள்ளே ஒடுங்கிய வயிற்றையுமுடைய

ஓர் ஓநாயானது ஒள்ளிய நுனியைக் கொண்ட முட்கள் தங்கிய இடையையுடைய காட்டின் கண்ணிருந்தபடியிருந்து பெருமை பொருந்திய புள்ளிகளினது சரீரத்தையுடைய அந்த மான்களைப் பார்த்து அருகே வந்தது.

**3.** கற்களானவை இரு மருங்கிலும் சிதறும் வண்ணம், காற்களால் வறுவி வலிமையையுடைய மார்பானது பூமியிற் படிய வளைந்து தலையைத் தாழ்த்திக் கணக்கற்ற பசியோடு அந்நாயானது அவ்வாறு வந்து எதிர்ப்பட, அந்த மான் கூட்டங்கள் பற்பல திசைகளிலும் பரவிச் சென்றன.

**4. பிணைக்குலந் திசைதொறுஞ் சிதறிப் போதுற**

**வணித்ததென் றொருபிணை யதனை நோக்கிவெண்**

**மணிக்கதி ரெனுமுகிர் நிலத்தில் வவ்வுறத்**

**துணித்துணு மம்மரிற் றொடர்ந்து போயதே.**

மானின் கூட்டங்களானவை அவ்வாறு எல்லாத் திசைகளிலுஞ் சிதறுதலடைந்து மதி மயங்கிச் செல்ல, ஓர் பெண் மானானது தனக்குச் சமீபித்ததென்று அதைப் பார்த்து இரத்தினப் பிரகாசம் எனும்படியான தனது நகங்கள் பூமியை வவ்வும்படி அதைப் பிடித்து உண்ணும் மயக்கத்தினால் பின்பற்றிச் சென்றது.

5. அன்றியும், தெளிந்த எச்சிலைச் சிந்துகின்ற நாவையுடைய அந்த ஓநாயானது தனது வாயால் பற்றி விட்டது என்று சொல்லும் வண்ணம் அம் மானைப் பின் பற்றிப் போக, அந்தப் புள்ளி மானும் அடித்த பந்தைப் போலும் சாடி அருமையோடும் இவ்வுலகத்தில் வெளிப்பட கஃபத் துல்லா வென்னும் பள்ளியை விரும்பிச் சென்றது.

**6.** அவ்வாறு செல்ல, அந்த ஓநாயினது வாயின் முனையானது பரவியோடுகின்ற அந்தப் புள்ளி மானின் வாலைத் தொட்டதென்று சொல்லும் வண்ணம் பின்பற்றிச் சென்ற சமயத்தில் அம்மானாது எட்டு திக்குகளும் துதித்து வணங்கும் பாவத்தின் நிலைமையானது அறுகின்ற ஹறமென்று கூறும் தானத்தின் கண் போய்ச் சேர்ந்தது.

**7.** அவ்விதம் போய்ச் சேர, ஒப்பற்ற அந்த ஓநாயானது இந்த மான் இறைவனாகிய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் தேவர்களான மலாயிக்கத்துமார்கள் செய்த வரிசையினால் ஹறமென்று கூறா நிற்கும் அந்தத் தானத்தின் கண் போய்ச் சேர்ந்தது. ஆதலால் நாம் இவ்விடத்தில் இனி அழிக்கின்ற

கொலைத் தொழிலைச் செய்வது குற்றமாகும். அது நல்ல சன்மார்க்கத்தினது ஒழுங்கும் அல்லவென்று அங்கு நின்றது.

**8. ஈனன பாசுபி யானு மின்பமு**

**மானமுந் தவிரபூ சகுலும் வன்கொலைக்**

**கானபஞ் சரசபு வானு மாண்டொரு**

**தானமீ தமர்ந்துநின் றவர்கள் சாற்றுவார்.**

அவ்வாறு நிற்க, இழிவை உடையவனான அபாசுபியான் என்பவனும், இன்பத்தையும் அபிமானத்தையும் தவிர்த்த அபூஜகில் என்பவனும், கொடிய கொலைத் தொழிலுக்கான தேகத்தைக் கொண்ட சபுவான் என்பவனும் அங்கு ஒரு தலத்தின்கண் தங்கி நின்று கொண்டு அவர்கள் சொல்லுவார்கள்.

9. இந்த மானானது காட்டினிடத்துள்ள இவ் ஓநாயின் வாயிலகப்பட்டு இறந்து போயிற்றென்று நாம் எண்ணியிருந்தோம். அந்த மானும் விரைவில் இவ்வுலகத்திற் சமைந்த நன்மை பொருந்திய ஹறத்தின் உள்ளே போய்ச் சார்ந்தது. அவ் ஓநாயும் நன்மை பொருந்திய அந்த ஹறத்தைக் கனம் பண்ணிற்று.

10. அன்றியும், பிரதி தினமும் துன்பமுறும் வண்ணம் ஜீவராசிகளைக் கொல்லும் கொடிய இந்த ஓநாயானது தானுண்ணும் பசியை மறுத்து ஹறத்தைக் கனம் பண்ணி அங்கு தங்கிற்று. அந்த மானும் இந்த ஹறமென்று கூறும் தானத்தினுள் படவே, அத்தானத்தை மனதின்கண் பொருத்தமுற்று நின்று அகத்திலேனும் வெளியிலேனும் போகவில்லை.

**11.** இச் சமாச்சாரங்கள் ஆச்சரியத்திலும் ஆச்சரியமென்று அந்த மூன்று பேர்களும் பொங்கிக் கிளர்ந்து நின்று ஆச்சரியத்தோடு பேசிய மாத்திரத்தில், பிதிர்ந்த விரல்களையும் ஓங்கிய பற்களையுமுடைய அந்த ஓநாய் பிளந்த தனது வாயின் நீரானது சிந்துகின்ற நீண்ட நாவை நீட்டிச் சொல்லத் தொடங்கியது.

**12.** சிந்தையினிடத்து அறிவற்றிருக்கின்ற காபிர்களே! நீங்கள் நான் பொலிவுடன் விளங்கும் ஹறத்தை மனதின் கண் மதித்துப் பின்னடைந்து திரும்பியிருப்பதை ஆச்சரியமென்று கூறுகின்றீர்களென்று செவ்வையாக்கிச் சொல்ல, அவர்கள் மறுத்துக் கூறுவார்கள்.

**13. குதிமறுத் தறமதைக் குறித்து நின்றதே**

**புதுமையென் றிருந்தனம் பொருவி லாதநன்**

**மதியொடு மின்றுநீ யுரைத்த வாசக**

**மதனினும் புதுமையென் றறைந்திட் டார்களால்.**

நீ உனது சாட்டத்தை வெறுத்து ஹறத்தைச் சிந்தையின் கண் மதித்து நின்றதுதான் புதுமையென்று நாங்களிருந்தோம். இன்றையத் தினம் ஒப்பற்ற நல்ல அறிவோடும் நீ கூறிய வசனமானது அதனிலும் ஆச்சரியமென்று சொன்னார்கள்.

14. அவர்கள் அவ்விதம் சொல்ல, அவ் ஓநாய் நீங்கள் யான் நின்று குறிப்பிட்டு எதிர்த்துப் பேசிய வார்த்தைகளை எந்தப் பக்கத்திலும் காணக்கூடாத ஆச்சரியமென்று சொல்லுகிறீர்கள். புண்ணியத்திற்கு உரிமையனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் பேரில் ஆணையாக உங்களிடத்தில் மிகவும் பெரிய ஆச்சரியமானது ஒன்றுள்ளது என்று கூறிற்று.

15. அவ்வாறு கூற அவர்கள் வனத்தின் கண் தங்கி வாழும் ஓநாயே! நீ எங்களிடத்தில் காணக்கூடாத ஓர் ஆச்சரியமானது உள்ளதென்று சொல்லுகின்றாய்? அவற்றை உண்மையுடன் எல்லாருக்கும் விளங்கும் வண்ணம் கூறென்று கேட்க, அவ்விதங் கேட்ட அவர்களுக்குப் புத்தியானது உண்டாகும்படி ஓநாய் கூறத் தொடங்கியது.

**16.** யாவற்றிற்கும் முதன்மையனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் ஒளிவிலிருந்து அநாதியான அவ்வல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் றசூலென்று இவ்வுலகத்தின் கண் வெளியாகி நின்றார்கள். அவர்களுக்குப் புறுக்கானுல் அலீமென்னும் வேதமும் இறங்கிற்று. சத்தியத்தையுடைய அந்த வேதத்தினது நியாயத்தையும் இங்கு நடத்தினார்கள். அவர்களுக்கு ஒப்பானவர்கள் ஒருவருமில்லர்.

**17.** அந்த நபிகட் பெருமானார் நபி முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் நன்மை பொருந்திய புறுக்கானுல் மஜீதென்னும் வேத வசனத்தை ஓதி ஈமான் கொள்ளுவதற்கு அவர்கள் கூறியவைகளெல்லாவற்றையும் மறுதலித்து நீங்கள் சூழத் துன்பத்தைப் பொருந்தினீர்கள். இஃதல்லாமல் இனிச் சொல்லுவதற்கருமையான ஆச்சரியமானது இவ்வுலகத்தின்கண் ஒன்றுமில்லை.

**18. முகமது நபியுரை மறுத்த மாற்றலர்**

**முகமதி நோக்குதன் முழுதுந் தின்மையென்**

**றகலுறக் கொடுமொழி யெடுத்துக் காட்டிவிண்**

**புகுமலைக் கானினிற் சுணங்கன் புக்கதால்.**

அன்றியும், அந்த ஓநாயானது நாயகம் நபிகட் பெருமானார் நபி முகமது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் வார்த்தைகளை மறுதலித்த சத்துராதிகளாகிய அக்காபிர்களின் வதனமான சந்திரனைப் பார்ப்பது முற்றும் கேடென்று சொல்லிப் பகைமையானது பொருந்தும் வண்ணம் கொடிய வார்த்தைகளை எடுத்து அவர்களுக்குச் சொல்லிக் காட்டி ஆகாயத்தைப் போய்த் தொடாநிற்கும் மலைகளையுடைய காட்டினிடத்துப் போய்ச் சேர்ந்தது.

19. அந்த ஓநாயானது அவ்வாறு இணக்கமாகிய நல்ல வார்த்தைகளை யாவருக்கும் சொல்லி வெவ்விய காட்டின் கண் போய்ச் சேர, அதனை அங்கு வளைந்து நிற்கும் கூட்டங்களில் அபூஜகில் என்பவன் வஞ்சகமும் சத்தியமும் மாறு கொண்ட மனதினிடத்தில் நிந்தித்துச் சொல்லுவான்.

**20.** உடும்பையும் வலிமையைக் கொண்ட பெண் மானையும் தனது கரத்தினுட்படத் துன்பத்தைச் செய்த அந்த முகம்மதென்னும் அபிதானத்தை யுடையவன் காட்டின்கண் உண்டான இந்த ஓநாயின் சிந்தையை மிகவும் மயக்கப்படும் வண்ணம் செய்ததை யான் சொல்லவும் வேண்டுமா? வேண்டாம்.

**21.** அன்றியும் அந்த முகம்மதென்பவன் புண்ணியத்தினுட்பட்ட இந்தத் திரு மக்கமா நகரத்தையுடைய ஜனங்களுக்கு அன்பில்லாது இறத்தலைக் கொண்ட கெட்ட எண்ணத்தைத் தாங்கிய மாயத்தினால் வெளியில் ஒப்பற்ற திரு மதீனமா நகரத்தின் கண் போய்ச் சேர்ந்ததும் அவன் செய்கின்ற வஞ்சகங்களை வெறுக்காது செய்தனன்.

**22. அயனகர்ப் புகுந்தன னகும தென்றியாம்**

**பயமற விருப்பது பழுது பற்றலார்க்**

**கியலுறு மிடங்கொடுத் திருத்தல் பாரிடை**

**வியனுறும் வீரத்தின் விழும மன்றரோ.**

அன்றியும், அஹ்மத் என்னும் பெயரையுடைய அந்த முகம்மதென்பவன் வேறு நகரத்தின் கண் போய்ச் சேர்ந்தானென்று நாம் அச்சமின்றி உறைவது குற்றமாகும். இவ்வுலகத்தினிடத்துச் சத்துராதிகளுக்கு இயல்பைச் சேர்ந்த இடத்தைக் கொடுத்துறைவது பெருமை பொருந்திய வீரத்தினது சிறப்பல்ல.

**23.** சத்துராதிகள் தமது வீரமானது கெடும்படி தளர்ந்து வேறொரு பெரிய ஊரின் கண் போய்த் தங்கினார்களே ஆனாலும் அவர்கள் மதிமயங்கும் வண்ணம் அன்னிய இராச்சியத்தையுடைய அரசர்களினால் அவர்கள்பால் விரோதத்தை மூளச்

செய்தும் அவர்களினது கருவை இல்லாமலொழித்து அவர்களின் விரோதத்தையும் இல்லாமற் செய்தல் வேண்டும்.

**24.** அன்றியும், அவர்கள் பல அரசிறைகளைக் கொடுத்தாலும் பொருந்தி இரு கைகளையும் குவித்து எங்களரசென்று சொல்லி நின்றாலும், இனிமையான சமாச்சாரங்களைச் சொன்னாலும், குற்றமானது நிறையப் பெற்ற கொடிய இதயத்தையுடைய சத்துராதிகளை நேயர்களென்று எண்ணுவது புத்திக்கு இழிவாகும்.

**25. அடுத்துறைந் திலரென வெள்ள லன்றிக**

**லெடுத்திடுங் கருதல ரிருந்து நாட்குநாட்**

**டொடுத்திடும் வினையமுஞ் செயலுஞ் சூழ்ச்சியும்**

**விடுத்திடு மொற்றராற் றெரிய வேண்டுமால்.**

அன்றியும், அவர்கள் நமக்குச் சமீபத்தில் இருந்திலரென்று சொல்லித் தள்ளலாகாது. பகைமையைத் தாங்கிய சத்துராதிகளாகிய அவர்களிலிருந்து பிரதி தினமும் ஆரம்பிக்கா நிற்கும் வஞ்சகங்களையும் செய்கைகளையும் அவர்களினது ஆலோசனைகளையும் நாம் விடுகின்ற தூதர்களால் அறிதல் வேண்டும்.

**26.** அன்றியும், இந்தத் திரு மக்கமா நகரத்தின் கண் உறைந்திருந்தவனான அந்த முகம்மது என்பவன் குற்றங்களையும் கேடுகளையும் பொய்யினால் முடித்து அருமையான அறிவையுடையோர்களைக் கொடியவராக்கினான். மேலும் அவன் கொடிய செய்கைகளைச் செய்ய மாட்டானென்று இதயத்தின் கண் தெளிந்திருத்தலாகாது.

**27.** அன்றியும், அந்த முகம்மதென்பவன் சமுத்திரமானது பொருந்திய நீண்ட இப் பூமியின் கண் நீங்காது எந்தத் தானத்திலுறைந்தாலும் செவ்வையாகிய மனத்தை உடையவனல்லன். அவன் வலிமையானது சீர்கெடும் வண்ணம் நாம் கொடிய யுத்தங்களைச் செய்து கீர்த்தியை நிலையாக நாட்டுதல் வேண்டும்.

28. என்று இப்படிப்பட்ட சமாச்சாரங்களை அந்த அபூஜகிலென்பவன் சொல்ல, சூழ நின்ற காபிர்கள் அதைக் கேள்வியுற்று இச்சமாச்சாரங்களே கருத்தென்று சொல்லி மலையைப் போலும் பெருமை பொருந்திய தங்களின் இரு தோள்களும் பூரித்துக் கொண்டெழும்ப, கொடிய வலிமையைப் பொருந்திய பெரிய விரோதத்தைக் கொண்ட இதயத்தை உடைவர்களானார்கள்.

**29. ஈரமில் லபூசகு லென்னு மன்னவன்**

**சார்பினி லுறவினிற் றக்க வேந்தரும்**

**பாரிடைச் சிறுகுடிப் படையின் மாந்தரு**

**மூரிடைப் படையொடு மொருங்கு கூடினார்.**

அவ்விதமாகி அன்பில்லாத அபூஜகிலென்று சொல்லும் அரசனின் பக்கத்திலும் உறவிலுமுள்ள தகுதியையுடைய மன்னர்களும் இவ்வுலகத்தின்கண் சிறிய குடிப்படையையுடைய ஜனங்களும் அந்த திரு மக்கமா நகரத்தின்கண் தங்கள் தங்கள் ஆயுதங்களோடும் ஒன்றாய் வந்து சேர்ந்தார்கள்.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினா

1. ஓநாய் மானை விரட்டிச் சென்ற காட்சியை வருணிக்க
2. ஓநாயைக் கண்ட மான்கள் எவ்வாறு சிதறியோடின?
3. மானும் ஓநாயும் ஹரத்தைச் சென்றடைந்த நிகழ்வினை விளக்குக
4. ஹரத்தில் நின்ற அபூஜகில் உள்ளிட்டோர் ஓநாய் குறித்து பேசியன என்ன?
5. ஓநாய் ஹரத்தில் நின்றிருந்தோரிடம் முகமது நபி குறித்துக் கூறியவற்றை விவரி
6. அபூஜகிலின் வஞ்சனை பற்றி எழுதுக

### நெடுவினா

1. ஓநாயின் அறப்பண்பினை விவரி
2. அபூஜகிலின் வஞ்சனைச் செயலை விவரிக்க
3. ஓநாய், அபூஜகில் உள்ளிட்டோருக்கு போதித்த அறக்கருத்துக்களை விவரி
4. ஓநாய் பேசிய படலச் செய்திகளைத் தொகுத்துரைக்க

## அலகு 5

**கண்ணகி புரட்சிக் காப்பியம் – பாரதிதாசன்**

**பூங்கொடி – முடியரசன்**

# கண்ணகி புரட்சிக் காப்பியம்

**பாரதிதாசன்**

கண்ணகி புரட்சிக் காப்பியம் என்னும் நூலை எழுதியவர் பாரதிதாசன் ஆவார். இவர் பாண்டிச்சேரியில் பிறந்து, பெரும் புகழ் படைத்த பாவலர் ஆவார். இவருடைய இயற்பெயர் '**கனகசுப்புரத்தினம்**' ஆகும். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர், சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால், 'பாரதிதாசன்' என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார். பாரதிதாசன், தம் எழுச்சி மிக்க எழுத்துகளால், **புரட்சிக் கவிஞர்** என்றும் **பாவேந்தர்** என்றும் பரவலாக அழைக்கப்படுபவர்.

புரட்சிக்கவி பாரதிதாசன், ஏப்ரல் 29, 1891 ஆம் ஆண்டு புதுவையில் பிறந்தார். தமது பதினாறாம் வயதிலேயே, கல்வே கல்லூரியில் தமிழ்ப் புலமைத் தேர்வு கருதிப் புகுந்தார். தமிழ் மொழிப் பற்றும், முயற்சியால் தமிழறிவும் நிறைந்தவராதலின், இரண்டாண்டில், கல்லூரியிலேயே முதலாவதாகத் தேர்வுற்றார். இசையுணர்வும், நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. சிறு வயதிலேயே சிறுசிறு பாடல்களை, அழகாகச் சுவையுடன் எழுதித் தமது தோழர்களுக்குப் பாடிக் காட்டுவார்.

புதுவையிலிருந்து வெளியான தமிழ் ஏடுகளில், "கண்டழுதுவோன்", "கிறுக்கன்", "கிண்டல்காரன்", "பாரதிதாசன்" எனப் பல புனைப் பெயர்களில் எழுதி வந்தார். தந்தை பெரியாரின் தீவிரத் தொண்டராகவும் விளங்கினார். மேலும் அவர் திராவிடர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அதன் காரணமாகக் கடவுள்

மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு போன்றவற்றினை தனது பாடல்கள் மூலம் பதிவு செய்தார்.

பிரபல எழுத்தாளரும், திரைப்படக் கதாசிரியரும், பெரும் கவிஞருமான பாரதிதாசன், அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக, 1954-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.1946, சூலை 29-இல் அறிஞர் அண்ணாவால், கவிஞர் "புரட்சிக்கவி" என்று பாராட்டப்பட்டு, ரூ.25,000 வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

கவிஞருடைய படைப்பான "பிசிராந்தையார்" என்ற நாடக நூலுக்கு, 1969 -இல் சாகித்ய அகாடமியின் விருது கிடைத்தது. இவருடைய படைப்புகள் தமிழ்நாடு அரசினரால் 1990-இல் பொது உடைமையாக்கப்பட்டன. தமிழ்மொழி மீது பற்றுக் கொண்டவராக இருந்த பாரதிதாசன், அவரது மானசீக குருவாகப் சுப்ரமணிய பாரதியாரைக் கருதினார். பாரதிதாசன் ஏப்ரல் 21, 1964 அன்று காலமானார்.

## கண்ணகி புரட்சிக் காப்பியம்

சிலப்பதிகாரக் கண்ணகியின் கதையைப் புரட்சிக் கவிஞர் ‘கண்ணகி புரட்சிக் காப்பியம்’ எனப் படைத்தார். இந்தப் படைப்பில் பாரதிதாசன் பகுத்தறிவு மணம் கமழச் செய்கிறார். இயற்கை மீறிய நிகழ்ச்சிகளைக் கவிஞர் நீக்கி விடுகிறார். கணவனைப் பெறவேண்டுமென்றால், கண்ணகி சோமகுண்டம், சூரியகுண்டம் என்ற குளங்களிலே மூழ்கி மன்மதனைத் தொழ வேண்டும் என்று தேவந்தி என்ற தோழி கூறுகின்றாள். சிலப்பதிகாரக் கண்ணகி அது சிறப்பாகாது என்று கூறுவதோடு நிறுத்திக் கொள்கிறாள். பாவேந்தரின் கண்ணகி “உன் தீய ஒழுக்கத்தை இங்கு நுழைக்காதே” என்று எச்சரிக்கின்றாள். மதுரையைக் கண்ணகி தன் ஆற்றலால் எரித்ததாகச் சிலப்பதிகாரம் கூறியதை மாற்றினார் பாரதிதாசன். கண்ணகிக்கு நிகழ்ந்த கொடுமை கண்டு மக்கள் மதுரை நகர்க்குத் தீயிட்டனர் என்றார் கவிஞர். கண்ணகி வானநாடு போனதாகக் கூறப்பட்டதை மாற்றி மலையிலிருந்து விழுந்து இறந்தாள் என்று கூறினார் கவிஞர். கண்ணகி காவியம் கவிஞரின் படைப்பில் சீர்திருத்தக் காவியமாயிற்று.

**கண்ணகி புரட்சிக் காப்பியம்**

**பதிகம்**

**இயல் 1**

மலைநாட்டு நெடுவேள்குன் றத்தின் வேங்கை
மாநிழலில் கண்ணகிதான் வந்து நின்று
கலகலெனக் கண்ணீரால் அருவி செய்து
குறவர்களின் மனமதுவும் கரையச் செய்தாள்!

கொலைசெய்யப் பட்டான் என் கணவன் கண்டீர்
குற்றமொன்றும் செய்தறியான்: குன்றத் தோரே!
இலைஉலகில் பருவுடல்தான் எனினும் அன்னோன்
என்னுள்ளத் துள்ளிருத்தல் காணுவீரோ.

முலைதோன்றி முற்றாமுன் தொட்டுச் சென்றான்
முறையில்லா ளிடம்கிடந்தான், இறுதியாய்என்
தலைவாயி லிறிகண்டேன் தாவ லானேன்:
தன்வறுமை கூறினான், என்செய் வேன்நான்!
கலைச்செல்வி மாதவியின் முத்தம் வாங்கக்
கைப்பொருள்கேட் டான்போலும் என்றே எண்ணி
நலம்பெய்த என்சிலம்பு தரஇ சைந்தேன்,
நாமிருவர் இன்புற்று வாழ்வோம் என்றான்.

மதுரையிலே வாணிகமே புரிவோம் நீயும்
வாராயோ என அழைக்க விரைந்து சென்றேன்
இதன் பின்னர் என்காதல் நோய்மருந்தை
இருதுண்டாய்க் கண்டவள்நான்: வாழேன் என்றான்!
எதிரேறும் இளங்கொடிதான் கொழுகொம் பற்றே
விழுந்ததையும் இறந்ததையும் கண்டு ணர்ந்தே
அதிர்ந்தஉளத் தோராகிக் கண்ணீர் மல்க
அறஞ்செய்து புறஞ்சென்றார் குன்ற வாணர்.

## இயல் 2

குன்றத்துக் குறவரெலாம் கைகள் கூப்பிக்
கோமான்நின் திறல்வாழ்க செய்கோல் வாழ்க
என்றைக்கும் தமிழ்வாழ்க என்று வாழ்த்த
எல்லீரும் நலஞ்சார வாழ்கின் றீரோ
இன்றுங்கள் முகத்திலொரு புதுமை என்ன
என்றசெங் குட்டுவன்பால் குன்ற வாணர்
ஒன்றுண்டே ஒன்றுண்டே உலகுக் கெல்லாம்
உணர்வளிப்ப தொன்றுண்டென் றுரைக்க லானார்,

ஆடலுற்ற பெண்கட்குத் தோற்றுப் போன
அழகான பச்சைமயில் எதிரிற் கண்ட
காடுபெற்று தீயில்விழும் வேள்குன் றத்தில்
கண்ணகிதான் கோவலனை உள்ளத் தேந்தி

வீடுபெற்ற தைமன்னன் திருமுன் வைத்தோம்
மெய்ம்மை இது வென்றுரைக்க உயர்க ருத்தில்
ஈடுபட்ட உள்ளத்தா னாகிமன்னன்
இன்னுமுள வரலாற்றை அறியச் சென்றான்.

அவ்வாறு குட்டுவன்சென் றிடஇ ளங்கோ
அடிகளிடத் தும்சொல்லக் குன்ற வாணர்
செவ்வையுறு குணவாயிற் கோட்டம் நோக்கிச்
சீருரில் உள்ளவர்கள் அனைவ ரோடும்
பெய்வளையின் கோவலரின் செய்தி ஏந்தி
பேருளத்திற் பெறுஞ்செய்தி ஆவல் ஏந்தி
எவ்வாறு மலையருவி செலும்?அவ் வாறே
ஈரமலைச் சாரல்கடந் தேகி னார்கள்.

### இயல் 3

குன்றத்துக் குறவரெலாம் வழிநடந்து
குணவாயிற் கோட்டத்தைச் சேர்ந்து-இளங்கோ
என்றுரைக்கும் அடிகளிடம் நெடுவேள் குன்றில்
இரண்டுள்ளம் ஒன்றிலொன்று இணைந்த வண்ணம்
சென்றனவே! கோவலனை ஏந்தும் நெஞ்சச்
சேயிழையாள் கண்ணகியைப் பெற்ற தான
நன்றான வீட்டுலகம் இன்று பெற்ற
நற்புகழை முன்பெற்ற தில்லை என்றார்.

அந்நேரம் செங்குட்டு வன்பாற் சென்றே
அடிகளிடம் வந்திருந்த சாத்த னாரும்
முன்நிகழ்ந்த கண்ணகியின் செய்தி யெல்லாம்
முறையாகக் கேள்வியுற்ற படியே சொல்ல
இந்நிகழ்வைக் காப்பியமாய் இயற்ற வோநான்?
எனக்கேட்டார் அடிகளார்! நன்று நன்று
முந்நாடு பற்றியதாம் அதுமு டிக்கும்
முழுத்தகுதி நுமக்கென்றார் சாத்த னாரும்.
புலப்பெரியார் சாத்தனார் இருந்து கேட்டார்
புரைதீர்த்த அடிகளார் உரைத்தார்! அந்தச்
சிலப்பதிகா ரப்பெருநூல் எனைஅ ழைத்துத்
தனித்தமிழில் சிலபாட்டால் அடிகள் உள்ளம்
கலப்பற்ற பசுப்பாலே யாக மக்கள்

கவிந்துண்ணத் தருகளனச் சொன்ன தாலே
சொலப்புகுந்தென் என்தமிழர் இருந்து கேட்பார்
தூயதமிழ்ச் சுவைசுண்டு வாழ்வார் நன்றே!

**புகார்க் காண்டம்**

**இயல் 4**

வரம்பற்ற செல்வத்தான் வாய்மை மிக்கான்
மாசாத்து வான்உரைப்பான் 'பெரியீர்! என்றன்
திருமகனாம் கோவலற்கும் மாநாய் கர்தம்
செல்வியாம் கண்ணகியைக் கொடுப்ப தற்குப்
பெருமனது கொள்கின்றார் மகன்ம ணந்தால்
பெருமைஎன் கின்றேன்நான் ஆத லாலே
திருமணத்தை முடித்துவைப்பீர்' என்று சொல்லச்
சேந்தனார் எழுந்திருந்து செப்ப லுற்றார்.

செந்தமிழ்நான் மறைமுறையும் செத்த தேயோ?
செம்மலுளம் மங்கையுளம் ஒன்று பட்டால்
அந்நிலைதான் மணமென்பார் அதனை விட்டே
அப்பன்மார் ஒப்புவதால் ஆவ தென்ன?
தந்தைதரப் படும்பொருளா மங்கை நல்லாள்?
தகுவதன்றே தகுவதென்றே என்று சொன்னார்,
வந்திருந்த ஆரியனும் நடுந டுங்கி
வாய்திறந்து தமிழ்குலைக்கத் தொடங்க லானான்.

சாகுமுன்வி வாஹத்தை நடத்திக் கண்ணால்
தரிசிக்க வேணுமென்று நாய்ஹர் சொண்ணார்
ஆகாகா எண்றேன்நான் ஆரி யர்கள்
அப்பண்மார் உடம்பட்டாள் விவாஹம் செய்வான்.
ஆகாது த்ரமிளர்க்கே இவ்வி வாஹம்!
ஆணதிணாள் எணை அளைத்தார் நாணும் வந்தேன்!
போகாயோ என்றுரைத்தாள் போகிண்றேணே
புன்னாக்க வேண்டாம்எண் உடம்பை என்றான்.

**இயல் 5**

கண்ணகிஎன் றொருபெண்ணை மணப்பாய் என்றேன்
கட்டளையை என்மகனும் ஒப்பி னான்இவ்
வண்ணந்தான் திருமணத்தை முடித்து வைப்போன்

ஆரியனே ஆதலினால் அவனை வைத்தேன்,
கண்ணிருக்கும் போதேநான் காண வேண்டும்
காளையுடன் பாவையினை மணவ றைக்குள்
எண்ணநிறை வேற்றிலைப்பீ ரெனக்கும் பிட்டான்!
மாசாத்து வான்சொல்லை ஏற்றார் ஊரார்.

ஆயினுமச் சேந்தனார் எழுந்தி ருந்தார்
அத்தனையும் ஆரியமாய் இருக்க வேண்டாம்
தீயவிளை வுண்டாகும் ஆதலாலே
செந்தமிழால் அவையத்தார் வாழ்ந்த லன்றி
நாளைப்போல் குரைப்பதனால் நம்பால் வேண்டாம்!
நரியைப்போல் ஊளையிடல் நம்பால் வேண்டாம்!
நீயென்ன சொல்லுகின்றாய் என்று கேட்க
நின்றிருந்த ஆரியனும் நிகழ்த்த லானான்.

மந்த்ரங்கள் ஆரியத்தால் செய்ய வேண்டும்
மட்டுமுள்ள சடங்குகளும் அப்ப டித்தான்
பிந்திஅந்த வதூவரரை ஒன்று சேர்க்கப்
பெரியதொரு சடங்குண்டே! மந்த்ர முண்டே
அந்தஎலாம் செய்யத்தான் வேண்டும் ஆனால்
பெரும்பாலும் அகட்டிடுவேன் கூலி வேனும்
என்றுரைத்தான் எல்லாரும் சிரிப்பில் ஆழ்ந்தார்.

**இயல் 6**

சோடித்த யானையின்மேற் பொன்னம் பாரி
தூக்கிஅதில் மாநாய்கன் பாக்கியத்தை
ஈடில்மா சத்துவான் இளங்க ளிற்றை
இழையாலும் பட்டாலும் பூக்களாலும்
மூடியுடல் மூடாத இருமு கங்கள்
முத்துநிலா பொற்கடரே எனவி ளங்க
நாடிநகர் வலம்புரிந்தார் பல்லி யங்கள்
நாற்றிசையும் அமிழ்தென்று பாய்ச்சு வித்தார்.

ஆடிக்கொண் டேசென்றார் அழகு மாதர்
அசைந்துகொண் டிருந்ததுவே மக்கள் வெள்ளம்!
பாடிக்கொண் டேசென்றார் பழந்த மிழ்ப்பண்!
பறந்தனவே புலிக்கொடிகள் வானளாவிப்

பீடுடைய ஓhறிஞன் இங்குக் காணும்
பெருங்றபுக் கண்ணகிதான் கோவ லன்தான்
நாடுடையீர்! இந்நாளே மணங்காண் பார்கள்
நல்மணத்தை வாழ்த்திடவே வருவீ ரென்பான்!

மணிக்குவியல் மீதிலொரு மலர்மு கத்தில்
வந்துவந்து வழுக்கிவிழும் இரண்டுகண்கள்
அணித்திருந்து பார்த்தவர்கள் 'அன்பு ளங்கள்
அணைந்துவரும் நிலைஇதுவாம்' எனவி யப்பார்!
பணித்திடினும் பணிவல்லார் இயற்ற ஒண்ணாப்
பாவைஒன்றும் வீரம்ஒன்றும் பெண்மாப் பிள்ளை!
மணக்கின்றார் வாழியவே என்பார் கண்டோர்:
மணமக்கள் நகர்சுற்றி இல்லம் சேர்ந்தார்.

**இயல் 7**

மணம் நடக்கும் மணிவீடும் பல்லி யத்தால்
மணமுரசால் பூமழையால் வான்வ ரைக்கும்
இணைந்த பெரும் பந்தரினால் முத்துத் தொங்கல்
இனியநறும் பூத்தொங்கல் கமுகு வாழை
அணைந்ததனால் நகர்நடுவில் அழகின் காடே
அணைவாரின் கண்கவர்ந்தே மனம்க வாந்தே
இணையற்ற தாயிற்று! நாட்டு மக்கள்,
ஏந்திழைமா ரோடுவரத் தொடங்கி னார்கள்!

மாசாத்து வானோடு மனையும் மற்றும்
மாநாய்க னோடுதன் மனையும் ஆகத்
தேசுற்ற மணவீட்டின் வாயில் முன்னே
தெருநோக்கி வருவாரின் வரவு நோக்கிப்
பூசற்கு நறுந்தேய்வும் பூணத் தாரும்
போடற்கு நறுஞ்சுருளும் வணங்கக் கையும்
பேசற்குச் செந்தமிழும் முற்ப டுத்திப்
பின்பாரார்: நின்றிருந்தார் அன்பார்ந் தாராய்!

தெருமறையத் தெளித்திருந்த பசுங்கோ ரைப்புல்
சேவடியும் பூவடியும் மேல்வ ருங்கால்
சரசரெனும்! பூவடிகள் சிலம்பு பாடும்!

தத்தும்பொற் குத்துவிளக் காம்இ ளைஞர்
விரைந்தோட மார்பணிகள் கணக ணென்னும்!
வெறுவெளியில் பெரகுபுனல் மணிவெள் ளம்போல்
அரிவையுடன் அழகன்என நாட்டு மக்கள்
அனைவருமே மணவீட்டை அடைகின் றார்கள்.

### இயல் 8

அன்பரசி ஆணழகு கன்னல் பொன்னன்
ஆடுமயில் அறிவழகன் அன்னம நல்லான்
தென்னழகு தமிழப்பன் முத்து முல்லை
தேன்மொழியாள் மறவர்மணி திங்கள் செல்வன்
பொன்னோடை பொன்னப்பன் கிள்ளை சேரன்
புத்தமுது தமிழரசு தங்கம் சோழன்
இன்பத்தேன் இளவழகன் ஔவை வேந்தன்
இருங்கோவேள் வயவேங்கை எல்லி நல்லி,

திருவிளக்கு மதியழகன் நிலவு செய்கோல்
தேனருவி அருளப்பன் தோகை பாரி
மருக்கொழுந்து பொன்வண்ணன் அல்லி வள்ளல்
மல்லிகை மாவளவன் காவேரி சிங்கம்
கரும்புபெருந் தகைமுத்துப் பந்தம் சேந்தன்
கயற்கண்ணி காத்தமுத்து வீரி மன்னன்
முருகாத்தாள் புகழேந்தி தேனீ மானன்
முத்தம்மா தமிழ்வாணன் தாயார் வேலன்.

அழகம்மை ஆளவந்தான் வேனில் தென்றல்
ஆரமுது தமிழத்தொண்டன் இலந்தை பொன்வேல்
மழைமுத்து மன்னர்மன்னன் தத்தை எட்டி
மணியம்மை பொன்முடிதே னாறு தென்னன்
மொழியரசி இளந்திரையன் புன்னை நன்னன்
முத்துநகை மாவரசு முதலி யோரை
அழைத்தார்கள் வருகென்றே நலஞ்செய் தார்கள்
அணிஅணியாய் அனைவருமே உட்சென் றார்கள்.

### இயல் 9

வாழியவே மணமக்கள் என்று சான்றோர்
வாழ்த்தியபின் வாழ்வரசி மாரும் மற்றும்

வாழ்விலுயர் பெரியோரும் அமளி நோக்கி
கோவலனைக் கண்ணகியை வருக என்றார்
நாழிகையின் அரைக்காலிற் முக்காற் பங்கும்
நஞ்சென்பார் பஞ்சணைக்கா வரம றுப்பார்?
யாழ்ஒன்றும் இசைஒன்றும் அமளி ஏற
எல்லாரும் வாழ்த்துரைத்துத் திரும்ப லானார்!

திருந்துண்ட மணமக்கள் இருவ ரோடும்
சேர்ந்துண்ட நாட்டுமக்கள் தேய்வு பூசி
வருந்துண்ட அடைகாயின் சுருளை மென்று
வாய்நிறைத்து முகமுயர்த்தி இதழ்விள் ளாமல்
விருந்துண்ட சிறப்பினையும் விரிக்க லானார்
விழும்எச்சில் கண்டவர்கள் சிரிக்க லானார்
மருந்துண்டேன் விருந்துண்கி லேன்நான் என்றோன்
மலைவாழை மட்டும்நூ றுண்டேன் என்றான்.

கறிவகையும் பண்ணியத்து வகையும் நல்ல
கனிவகையும் என்நாவைக் கவர்ந்த தாலே
நிறைமூக்கைப் பிடிக்கநான் உண்டு விட்டேன்
நிலைகடுமை என்றுமதி அழகன் சொன்னான்:
நிறைவயிறு குறைவதற்கு நீள்துரும்பை
நீஉள்ளே செலுத்தென்று தென்றல் சொல்லச்
சிறுதுரும்புக செல்லஇடம் இருந்தால் வட்டில்
தேம்பாகை விட்டிரேன் என்றான் அன்னோன்.

### இயல் 10

கடைத்தெருவில் நடுத்தெருவில் காட்டில் மேட்டில்
கால்நடையால் ஊர்திகளால் செல்வோர் யாரும்
படைத்திட்ட உணவுகளைப் புகழ லானார்
பாங்கெல்லாம் புதுப்பாங்கென் பான்ஒ ருத்தன்
வடையினிலே நெய்ஒழுகிற் றென்றான் திண்ணன்
நெய்யினிலே வடைஒழுகிற் றென்றான் வேங்கை!
குடத்தளவு முக்கனியா என்றான் முத்தன்!
குண்டான்தே னாஅதற்கே என்றான் எட்டி!

இந்நாட்டு விருந்துமுறை மாற வேண்டும்
இங்குண்டோம் வீட்டுக்கும் எடுத்துச் சென்று

பின்னாளும் வைத்துண்டோம் என்ப தில்லை!
பேராசை கொண்டிவ்வா றுரைத்தான் பொன்னன்!
பின்னாளில் பிறர்வீடு செல்க என்று
பெரியண்ணன் சொல்லவே பொன்னன், "ஏடா!
இந்நாட்டில் எவன்வீட்டில் புத்துருக்கில்
இலைசோறு, கறியெல்லாம் மிதக்கும்" என்றான்!

அவரைக்காய் உப்புநெய் கடுகு தேங்காய்
ஐம்பொருளைக் கூட்டமுதில் அறிய லானேன்
அவற்றோடு மற்றொன்றும் உண்டு போலும்!
எனினுமதன் பேரறியேன் என்றான் ஆண்டான்!
அவைஐந்தின் கூட்டத்தால் மற்றொன் றுண்டாம்:
அதன் பெயர்தான் உயிர்ச்சுவைஎன் றுரைத்தான் தேவன்
எவைஎவையோ பேசுவார் அவற்றி லெல்லாம்
இன்விருந்தைப் புகழாத எழுத்தே இல்லை!

## இயல் 11

முகில் தழுவும் எழுநிலைமா டத்துக் கட்டில்
முழுநிலவு முகத்தானை அழகன் தான்தன்
அகம்தழுவிச் சிறப்புறுங்கால் சாள ரத்தால்
அசைந்துவரும் நறுந்தென்றல் இனிமை வார்க்க
மகிழ்ந்தவராய்க் காதல்மிகப் பட்டா ராகி
மாடத்தின் நிலாமுற்றம் வந்து சேர்ந்தார்:
தகைசிரித்தான் நாணமுற்றி ருந்தான் மங்கை!
தடங்கைகள் நீட்டினான் அவற்றில் சாய்ந்தாள்!

தழுவும்உடற் கூட்டத்தில் தனிமை காணார்
தமைஇழந்தார்: இன்பத்தின் எல்லை கண்டார்!
முழுநிலவைத் தன்இடது கையால் ஏந்தி
மூடவரும் சுரிகுழலை விலக்கி ஆளன்,
"அழகுக்கோர் இலக்கணமும் நீயோ கண்ணே!
அன்புசெய வாய்ந்தஇலக் கியமோ! என்றன்
அழல்நீக்கும் குளிர்நிழலே இன்பப் பாவாய்!
அனைத்தும்பெற் றேனுன்னைப் பெற்ற தாலே!

என்வாழ்வில் நிறைஅமிழ்தே நினைக்கும் தோறும்
இனிப்பவளே! வாய்திறந்து பேசுந் தோறும்

தென்தமிழின் நறுஞ்சாறாய்த் தித்திப் போளே!
தீண்டுதொறும் ஐம்புலனும் இன்பில் ஆழ்த்தும்
பொன்னே! நன் முத்தே! என் பூவே! என்பான்!
புதிதொன்று பழைதாக மேலும், மேலும்
இன்பத்தில் ஆழ்ந்திடுவான் மீள்வான் பின்னும்
இன்பத்தில் ஆழ்ந்திடுவான் கோவ லன்தான்!

### இயல் 12

பாட்டொன்று கேட்டுப்போ என்று சொல்லிப்
பாவையினை அழைத்திட்ட கோவ லற்குக்
கூட்டொன்று விருந்தினர்க்குப் பண்ணு கின்றேன்:
கூவாதீர் என்றுரைத்தாள் அடிஎன் பாட்டைக்
கேட்டலினும், விருந்தினர்க்குக் கூட்டுச் செய்தல்
இனியதோ கிளத்தென்றான் கோவ லன்தான்!
பாட்டுக்கும் நம்காதல் கூட்டி னுக்கும்
பாகற்காய்க் கூட்டுமுறை இனிதே என்றாள்.

நூற்றுக்கு மேற்பட்டோர் பகல்வி ருந்தாய்
நோக்குவார் மனமகிழ வருகை தந்தார்:
ஆற்றுநலம் ஆற்றிஅவர் அமர்வ தற்கும்,
ஆடற்கும் உதவுதற்கும் பாடு தற்கும்
காற்றுக்கும் காட்சிக்கும் வகைபு ரிந்து
கலந்துண்ண வாரீரோ எனஅ ழைக்கச்
சோற்றுக்கும் சாற்றுக்கும் கறிக்கும் எண்ணத்
தூய்மைக்கும் தாய்மைக்கும் வியந்தார்: உண்டார்!

சாப்பிட்டார் கமழ்தேய்வு நிறக்கப் பூசிக்
கண்மலர்த்தேன் மழைநனைந்தே அடைக்காய் மென்றே
வாய்ப்புக்குப் பற்பலவும் கேட்டு நாட்டு
வளம்பேசிச் செந்தமிழ்நூல் இன்பந் துய்த்து
மாப்பட்டு மெத்தையிலும் சாய்ந்தி ருக்க
வாய்ப்புற்ற கட்டிலிலும் அமைந்தார் தம்மில்
கூப்பிட்டாள் ஒருமுதியோன் கால்நோய் என்றே
குறுக்கோட்டிக் கண்ண்கிதான் கால்பி டித்தாள்!

### இயல் 13

கால்பிடித்த கண்ணகியின் கைப்பி டித்தே,

கண்ணகிக்கு மாமியவள் கோவ லன்தாய்
தோல்பிடித்தும் விதைமுதிராப் பயற்றங் காயைத்
துவட்டுமுறை எவண்கற்றாய்? தாயூட் டிட்ட
பால்பிடித்த கறைமாறா இதழி னாளே!
பாங்கடிநின் மனையறந்தான் மகிழ்ச்சி என்றாள்!
சேல்பிடித்து வைத்தனைய விழிவி யக்கத்
திடுக்கிட்டாள் கண்ணகிதான் பறந்தாள் ஓர்பால்

அத்தான்நும் அம்மாஎன் அருமை மாமி!
அதோகாண்பீர்! விருந்துண்ட மகளிர் தம்மில்
முத்தொன்றைச் சிப்பிமறைத் ததுபோல் நன்கு
முக்காடு முகமறைக்க அமர்ந்துண் டாரே!
அத்தகையோர் இத்தகையோர் எனக்காண் கில்லோம்:
அறையினின்று கால்வலியாம் என்ற ழைக்க
எத்தாயோ என்படுமோ என்று சென்றேன்
இருகாலைத் தொட்டேன்என் இருகை தொட்டார்.

என்றேகண் ணகிகூற அதேநே ரத்தில்
எதிர்வந்தாள் கோவலனின் அன்னை தானும்!
சென்றுவணங் கினர்இருவர் அன்பால் அள்ளித்
தென்னகத்துப் பண்பாட்டுப் பொன்வி ளக்கைக்
குன்றிலிட்டீர்! நன்றாக வாழ்க நீவிர்:
கொண்டுவந்தேன் பலபொருள்கள் கொள்க கொள்க
என்றுரைத்தாள்! அங்கிருவர் எதிரிற் கண்டார்
இருநூறு வண்டிகளில் பல்பொ ருள்கள்!

### இயல் 14

காவிரிப்பூம் பட்டினத்தின் கண்ணும் காதும்
கலைவெறிதான் தலைக்கேற நிலைகு லைந்து
மீவிரித்த வளைவுக்கும் மணிமே டைக்கும்
நடுவினிலே மின்னலோ கொடியோ சான்றோர்
பாவிரித்த இலக்கணமோ குழலோ யாழோ
பைந்தமிழோ நன்னிலவோ யாதோ என்று
நாவிரிக்க மாதவிதான் ஆடுகின்றாள்
நானிலமே மகிழ்ச்சிக்கூத் தாட ஆட.

முழவினோன் முழவி ன்மேல் ஒற்றும் கையும்

மொய்குழலாள் அடைவுபெற மிதிக்கும் காலும்
வழிஒத்தி ருக்குமிது கூர்ந்து காணின்
வையத்துக் கொருபுதுமை ஆகும் என்று
பிழைபாட்டு வடவர்களும் பேச லானார்!
பிறநாட்டின் அறிஞரெலாம் பிற்றை நாளும்
அழகிருந்த தமிழ்நாட்டின் ஆடற் பாங்கை
அறிவதெனில் அருமையே எனப்பு கன்றார்.

கருவிழிகள் கடையோடி விரலில் காதற்
கருத்துரைத்துச் செவ்விதழில் மின்னக் கண்டோர்
இருதோளும் சிற்றிடையும் அடித்த பூப்பந்
தெழில்மார்பின் மேற்குலுங்கும் புதுமை காணார்
இருந்தபடி வம்புரிதான் இருக்க மேலே
இடம்வலமாய் ஒருநிலவு மிதக்கக் கண்டோர்
சுரும்பிருந்து பாடுமலர்ப் பின்னற் பாம்பு
துடியிடையைச் சுற்றுவது காணு கில்லார்.

## இயல் 15

இயலிசைநா டகமூன்றும் இந்தா என்றே
இவ்வுலகு கண்டுகேட் டுணர்ந்து வக்கக்
கயல்விழியால் மலர்வாயால் சுவடிக் காலால்
கடிதீந்த திறம்அரிது நாம்இ தம்முன்
குயில்கேட்டோம் கிளிஅறிந்தோம் மயிலைப் பார்த்தோம்!
கூற்றும்பாட் டும்கூத்தும் ஒருங்கு காணோம்
அயலார்பால் கண்டவெலாம் சுண்டைக் காய்கள்
அரிவையால் பெற்றதுதேன் வாழை யாகும்!

இவ்வாறு புகழ்ந்தானாய் மன்னர் மன்னன்
இந்தாடி என்கண்ணே பச்சை மாலை
செவ்விதின்நீ தலைக்கோலி ஆக! மேலும்
தேடரும்பொன் ஆயிரத்தெட் டுக்க ழஞ்சே
எவ்வாறும் விலைபெறும்என் றான்அ ளித்தான்
இருந்தவர்கள் எல்லாரும் மகிழ்ந்தா ராகி
அவ்வளவும் தகும்தகும்என் றுரைத்தார் ஆங்கே
மற்றவரும் தகும்பரிசில் அடைந்து வந்தார்!

## இயல் 16

கடைஓடி நொடிமீளும் கண்ணென்ன கண்ணோ!
காப்பியத்தின் பொருள்முடிக்கும் விரலென்ன விரலோ!
குடைஅரங்க மின்னிநெளி இடைஎன்ன இடையோ!
தூண்டாத மணிவிளக்கின் ஒளிப்பிழம்பு காற்றால்
அடைவதென அடைவுபெறும் உடலென்ன உடலோ!
ஆடிக்கொண் டும்பாடிக் கொண்டுமிருந் தவளை
விடைகொடுத்துப் பரிசளித்:து நம்வேந்தர் வேந்தன்
விரைந்தனுப்பினான் அவளும் செல்லுகின்றாள் அந்தோ.

எனக்கூறி மனம்செல்லக் கண்களெலாம் செல்ல
இன்பத்தை விடாதுபற்றும் இயற்கைஉயிர் செல்ல
இடம்தொடரச் செல்கின்ற மாதவியி னோடே,
எல்லாரும் செல்லலுற்றார் ஆயிரங்கண் அன்னாள்
இனியதேன் இதழினிலே ஒருங்கோடி மொய்க்கும்!
இரண்டாயி ரங்கண்கள் கண்ணீலத் தேனில்
உனக்கெனக்கென் றேஓடி மொய்க்கும் மிகு மக்கள்
ஒருகடலே: மாதவிதான் நடுவில்ஒரு புள்ளி!

அவள்முதுகின் பின்னிருந்த ஓர்ஆள் கழுத்தை
அணுகிஅவள் மலர்முகத்தை உற்றுப்பார்க் கின்றான்
துவளுகின்ற பின்னலினைத் தொடுகின்றான் ஒருவன்
சுடர்ப்பொன்னோ மின்னலோ என்றுடலை ஒருவன்
கவலையுடன் பார்த்தபடி நடக்கின்றான் மற்றும்
கருத்துறுத்தும் காதலால் வஞ்சியவள் முதுகை
அவுக்கென்று தொட்டுநக்கிச் சுவைக்கின்றான் ஒருவன்
அவள்ஆடை மேற்பறக்கச் சோலைஎன்றான் ஒருவன்.

## இயல் 17

நகரமக்கள் நெருக்கத்தில் மாத விக்கு
நலிவுவரா திருக்கவே பல்லோர் சேர்ந்து
தகுநெடுங்கை கோத்துமா வட்டம் ஆக்கித்
தையலினை நடுவினிலே நடத்திச் சென்றார்.
திகழ்தருமோர் அரசர்தெருச் செல்லல் உற்ற
திருநுதலாள் தனைச்சூழ்ந்த ஆட வர்கள்
முகவரிசை மேற்றனது விழிசெ லுத்தும்
வேளையொரு காளை தன் நெஞ்சைத் தொட்டான்!

காவலரும் கடன்கேட்கும் செல்வர் பிள்ளை:
கட்டழகன்: கண்ணகியை மணந்த செம்மல்:
பாவலரும் பொருள் கேட்கும் தமிழ்வல் லாளன்
பலரோடு மாதவியின் ஆடல் காணும்
ஆவலினால் அங்குவந்தோன் வெளியிற் சென்ற
அன்னாளின் பின்சென்றான்: கடைக்கண் பிச்சை
ஈவாளா எனக்கிடந்தோன் ஈந்தாள்: ஏற்றான்
இரண்டுள்ளத் திறப்புவிழா இதுவாம் என்க.

கண்ணைக்கண் மனத்தைமனம் கன்னம் வைக்கும்
கதைமுடிந்து போனவுடன் மங்கை சார்பில்
நண்ணிஒரு கூனிதான் "ஒன்று கேட்பீர்!
நம்மன்னர் உவந்தளித்த நன்மா லைக்கே
உண்ணசையால் ஆயிரத்தொண் கழஞ்சு சந்தோன்
ஓவியத்தை மாதவியைப் பெறுக" என்றாள்!
ஒண்ணுதலும் அவன்தோளில் மாலை போட்டாள்:
உவப்போடு கோவலன்பொன் ஈந்தான் கையில்!

ஓடுகின்றார் ஓடுகின்றார் இருவர் தாமும்!
உடனிருந்த கூட்டத்தார் ஏமாந் தார்கள்!
வாடுகின்றார் அவர்களிலே சில்லோர்! சில்லோர்
மகிழ்கின்றார் அவ்விருவர் மகிழ்ச்சி கண்டு,
பாடுகின்றார் சில்லோர்அப் பாவை யாட்கும்
பைந்தமிழச் செம்மலுக்கும் பொருத்தம் என்றே!
ஓடுகின்றார்: மாதவியின் வீட்டுக் கூட்டின்
உள்ளடைந்தார் மாதவிகோ வலன்அன் றில்கள்!

### இயல் 18

உட்புகுந்து கூட்டத்தின் நடுவில் நின்றே
ஒண்டோடியின் முகம்பார்த்தான்: வீட்டைப் பார்த்தான்
சுட்டினான் பஞ்சணையின் அறையை! அன்னோன்
தோகையினை அணைத்தபடி உட்பு குந்தே
எட்டினால் பஞ்சணையை! உடன்ப றந்தாள்!
இருபெருக்கின் ஒருவெள்ளப் புனலே யானார்
கட்டிக்க ரும்படிஎ னத்தொ டங்கும்
கவிக்கிடையில் முகத்தில்முகம் கவிழ்க்க லானான்.

புதுத்தேனில் ஊறவைத்த கனியு தட்டைப்
புகல்என்றான் கண்ணகியை மறந்தே போனான்!
எதிர்ப்பாரும் நட்பாரும் இலாத தான
இன்பஉல கிதுவென்றே அவள்தோள் சாய்ந்தான்
இதற்குத்தான் நான்பிறந்தேள் இவ்வை யத்தில்
என்பான்போல் தழூஉமார்பை விடாதி ருந்தான்.
முதற்றொடங்கும் முத்தமழை கடைசி யூழி
முடியுமட்டும் முடியாது போலும் அங்கே!

கைந்நொடியை ஓரிலக்கம் பொன்னாற் போக்கிக்
கைப்பொருளைப் போக்கிவரும் நாலில் அன்னோன்
தன்அறையின் பஞ்சணையில் அவளின் தோளில்
சாய்ந்தபடி பலகணியால் தெருவிற் சென்ற
சின்னவனைக் கண்டிட்டான்: கோவ லன்தான்,
திடுக்கிட்டான்: உடலதிர்ச்சி உணர்ந்த மங்கை
என்னஎன்றாள்: என்போன்றான் துணைவி இன்றி
எவ்வாறு தனித்தும்உயிர் வாழ்ந்தான்?- என்றான் .

### இயல் 19

காதற்பாட் டேயன்றிப் பிறபாட் டில்லை
கட்டிலிலே உண்பதன்றி இறங்கல் இல்லை
மோதல்வரக் காரணமே இருந்த தில்லை
ஈதலில்லை ஏற்றவில்லை இன்பப் பொய்கை
இறங்கினோர் கரையேறும் நினைப்பே இல்லை
ஈதில்லை என்பதில்லை போவ லற்கே
இவளிருந்தாள் மாதவிக்கே அவனிருந்தான்.

அந்நாளில் மாதவிநி லாமுற் றத்தில்
அன்பனிடம் இன்பமே நுகர்தல் போல
பன்மகளிர் மணாளர்தோள் ஒடுங்கு வார்கள்!
பாவைகண் ணகிமட்டும் கொழுத னின்றித்
தன்பாற்பொங் கலைஇழந்த உழவ னைப்போல்
தளர்வுற்றாள் பஞ்சணையிற் புரள லுற்றாள்
இன்கண்ணில் மைஎழுதாள் பொருட்டும் வையாள்
இருண்டகுழல் நெய்பணியும் இன்றிச் சோர்வாள்.

மங்கலத்தின் அணியன்றி அணிம றந்தாள்

வழக்கத்தால் செய்கின்ற ஒப்ப னைகள்
மங்கைதான் செய்தறியாள் செந்த மிழ்தான்
மாப்புலவர் இழப்பின்உயர் விழத்தல் போலே
எங்குமுள்ளார் தம்மிற்கண் ணகியே என்ன
இணைபிரிந்து சீரற்றார் பலரா னார்கள்
திங்கள்ஒன்றே குளிர்கொண்டும் அழகு கொண்டும்
சிலர்க்கல்லல் சிலர்க்குநலம் செயல்வி யப்பே.

### இயல் 20

பூவிரிந்து வானெங்கும் தேன்வி ரிந்து
பொன்விரிந்தாற் போலுநறும் பொடிவி ரிந்த
காவிரிதல் போலெங்கும் விரித லாலே
காவிரிஆ றென்றார்கள்: அதன்தொ டர்பால்
காவிரிப்பூம் பட்டினம்என் றேமுன் டர்பால்
காவிரியும் நாவினோர் நகரைச் சொன்னார்
மூவிரிநூற் றமிழ்வேந்தர் மூவ ருள்ளும்
முந்துபுகழ் மாவளவன் அதற்கு மன்னன்.

காளைக்கு நாளெண்ணிக் காத்தி ருக்கும்
காதலிபோல், இனிப்பான பதநீர்த் தென்னம்
பாளைக்குக் காத்திருக்கும் ஊரார் போல்,அப்
பட்டினத்து வாழ்கின்ற மக்கள் யாரும்
வேளைக்கு வேளைஇதோ வந்த தென்று
விளம்புமொரு காவிரிவி ழாநெ ருங்க
நாளைக்கே என்றுமகிழ் கொண்டார், காலை
நடுப்பகல்: இராப்போது நகர்ந்த பின்னே.

பழாமரத்திற் பழுத்தஒரு மாம்ப ழம்போல்
பாசிபடர் குளத்திலொரு தாம ரைபோல்
முழாக்கண்ணில் கையுற்ற வெள்வ டுப்போல்
மொய்த்தகருங் குழற்கிடையில் மகள்மு கம்போல்
எழாஉளத்தும் மகிழ்ச்சிஎழ இருளின் நாப்பண்
எழுந்தஇள ஞாயிற்றின் ஒளியில் யாண்டும்
விழாப்பெருநாள்: காவிரிநற் றிருநாள் என்று
வேந்துமுர சானையின்மேல் அறைந்தான் வீரன்.

### இயல் 21

காவிரிபூம் பட்டினத்தின் மருவூர்ப் பாக்கம்
கடற்கரையை ஒட்டியதோர் பகுதி யாகும்
மாவிரியும் மன்னர்பிறர் வாழ்தெ ருக்கள்,
பட்டினப்பாக் கப்பகுதி இவற்றின் மேன்மை
யாவரியம் பிடவல்லார் புலவர் வேந்தன்
இளங்கோதான் இயம்பினான் அவைகொண் டேநான்
ஆவலினாற் சிலசொல்வேன் முழுதும் வேண்டின்
அவருள்ளார் நீவிருள்வீர் கண்டு கொள்க.

அரபியரும் கிரேக்கர்களும், வாணி கம்செய்
அயல்நாட்டு மாந்தர்களும் கலந்து வைகும்
தெருவரிசை கண்கவரும்! வண்ணம் சுண்ணம்
செஞ்சாந்து மலர்பலவும் கூறி விற்போர்
திரிகின்ற தெருக்களெலாம் சிறக்கும்! ஈண்டு
திகழ்பட்டுச் சாலியர்கள் நகைக்க டைகள்
விரும்புகன் னார்தட்டார் தச்சர் கொல்லர்
விளங்குகூ லக்கடைகள் தகுதி காட்டும்,

ஏழிசையும் வழுவாமல் குழலும் யாழும்
இசைக்கின்ற பாணர்களும் சிறப்பின் வாழ்ந்தார்
வாழ்வினையே இன்புறுத்தும் கலைஞர் வாழ்ந்தார்
வளமிக்க அம்மருவூர்ப் பாக்கந் தன்னில்!
மாழ்கல்இலார் பட்டினப்பாக் கத்தில் உண்டு:
மன்னர்தெரு! அறிஞர்தெரு! மருந்தர் கூத்தர்
நாழிகைக்க ணக்கர்நாற் படைவல் லாரும்
நாற்புறத்தும் குறைவின்றிச் சூழ்ந்தி ருந்தார்.

**இயல் 22**

நன்மருவூர்ப் பாக்கம்பட் டினப்பாக் கத்தின்
நடுவினிலே வளர்மரங்கள் கால்க ளாகக்
கன்மிகுக்கக் கட்டியதோர் நாளங் காடி
கால்நடையாய்க் கண்டுவர ஓராண் டாகும்!
இன்றேறும் சரக்குயரம் பொதிகைக் குன்றம்!
இறக்குமதிச் சரக்கெல்லாம் யானைக் குன்றம்!
பொன்வரவு செலவெழுதும் கணக்கர்க் கோலை
பொழுதெல்லாம் தந்தபனந் தோப்பே மொட்டை!

நாவாய்கள் வரவெண்ணி வாணி கத்தார்
நாவாய்கள் வராதவராய்த் துறைமு கத்திற்
போவாய்என் றொருவர்பின் ஒருவ ராகப்
போவாரின் கூட்டத்தை நோக்கு வோர்கள்
மூவாயில் கடல்நோக்கி முத்த மிழ்வாய்
முழங்குகடல் எழுந்ததென மொழிவா ரானார்!
இல்லைஎன்ப தில்லைஎன்னும் நாளங் காடி!

பொன்னாடை ஆயிரமும் பன்னி றத்துப்
பூவாடை ஆயிரமும் நாடோ றும்போய்த்
தன்மையினில் வண்டிகளில் ஏற்றி மீள்வார்
தலைப்பாகை வரிசைஒரு கல்லின் நீளம்!
பின்னோடும் மிளகுவண்டி அதன்பின் ஓடும்
பெருஞ்சீர் கத்துவண்டி அதன்பின் ஓடும்
தென்னகத்துச் சரக்கேற்றி இலக்கம் வண்டி
சேர்ந்தவண்டி பின்கூட்டம் ஊர டைக்கும்!

**இயல் 23**

நாட்டிலுள்ள ஆடவரும் மகளிர் தாமும்
நலங்கொழிக்கும் காவிரியை வாழ்த்தித் தம்தோள்
நீட்டித் தாய் எனத்தழுவி அன்பால் மூழ்கி
நிலைபெயரும் மலைகள்போல் நிலாக்க ளேபோல்
வீட்டிலுற்றே உடைமாற்றி அணிகள் பூண்டு
வேந்தனைப்போய் மனமார வாழ்த்திப் பின்னர்
கேட்டாலும் நாவூறும் பண்ணி யங்கள்
கிடைப்பரிய அப்பங்கள் வெண்ணெய்ப் பிட்டே:

தேங்குழல்நற் பொரிவிளங்காய் பலாமா வாழை
தேன்பால்நெய், நறும்பாகு, முதிர்ந்தி, லாத
தீங்கிலவாம் வழுக்கைஇள நீர்ப ருப்புச்
சேர்க்கையினால் பொங்கியதோர் ஓவப் பொங்கல்
யாங்கிருந்தும் கொணர்ந்திட்ட காய்க றிக்கே
இங்கிருக்கும் தமிழரன் றிப் பிறர்பா ணாத
பாங்கிலுறு பச்சடிகள் குழம்பு கூட்டுப்
பல்வகையின் வற்றல்கள் வறுவ லோடும்

வெண்பாட்டுக் குருத்திலைகள் மிகவி ரித்தே

விருந்தினரைக் கையேந்தி அழைத்த ழைத்துக்
கண்பட்டால் ஒளிதெறிக்கும் கைவ ளைகள்
கவிபாடும் எழில்மடவார் இடஉ வந்து
புண்பட்டுச் சாவ அஞ்சும் ஆரி யர்கள்
புகார்என்னும் பூம்புகார் அரசை வாழ்த்தி
உண்கவே எனஇடுவார் இட்டிட் டேங்க
உண்டார்கள் ஒவ்வொன்றின் சுவையு ணர்ந்தே.

**இயல் 24**

இறவாத புகழுடைய படைமு தல்வர்
யானைமேல் குதிரைமேல் தேர்மேல் ஏறி
முறையாகப் படைதொடர நகரைச் சுற்ற
முன்விட்டுப் பின்னோடு காலாள் கூட்டம்
உரைகழற்றித் துஸக்கியவாள் மின்னும் வண்ணம்
ஊர்வியக்கச் சென்றார்கள்! சோலை தோறும்
பிறைநுதலார் பொன்னூசல் ஆடலுற்றார்
பெம்பந்து காளையரும் அடித்தார் ஓர்பால்.

சாகுமட்டும் ;சண்டையிடும் சேவற் கோழி
தலையுடையும் வரைமோதும் ஆடு-கொண்டு
போகின்றார் சண்டைக்கே! போர்மு டித்துப்
போந்ததெனக் கேவெற்றி என்றான் ஓர்ஆள்:
ஏகுமுயிர் ஏங்காமல் மேமே என்றே
இயம்புகின்ற ஆடுடையான் தோற்றேன் என்றான்
ஏகெடுவீர். தோல்விவெற்றி உமக்கே கண்டீர்
இவைஇன்னும் காண்கிலஎன் றான்ஓர் வீரன்.

இமைநேரம் ஒழிவின்றி வெளியில் ஆடி
இருந்தவரிற் சிலர், வீடு வந்த போதில்
எமைமறந்த தேன்என்று மனைமார் சில்லோர்
எரிவுற்றார்! காதலரின் இருதோள் பெற்றே
தமைமறந்தார் மாதவியைப் போலே சில்லோர்
தன் அன்பன் கோவலனைப் பிரிந்தி ருந்த
அமைவுள்ள கற்புறுகண் ணகிதுன் பத்தின்
அடிவீழ்ந்து கிடந்திட்டாள் விழாநாள் உள்ளும்!

**இயல் 25**

இந்நாளே நிறைநிலா என்று நாட்டார்
எல்லாரும் கடலாடச் செல்ல லுற்றார்!
அந்நாளின் கடலாடும் காட்சி காண
அழகுடைய மாதவியும் அவளை விட்டே
எந்நாளும் பிரியாத செம்மல்; தானும்
எழிலான ஊர்தியினில் ஏறிக் காலை
முன்னான போதினிலே கடற்க ரைபோய்
முழுதுமணற் பரப்பினிலே புன்னை நீழல்:

அடிவளைத்த திரைக்கிடையில் இட்ட கட்டில்
அமர்ந்தார்கள் அங்கதன்பின் தோழி கையில்
நெடிதிருந்த யாழ்அதனை மங்கை வாங்கி
நேர்செய்தே இசைஎழுப்பிச் செவியின் ஓர்ந்தே
முடிவாக்கிக் கோவலன்பால் நீட்ட, அன்னோன்,
முன்னங்கை ஏந்தியே தன்ன கத்தின்
வடிவாகப் பாடுவது தொடக்கம் செய்தான்.
மாதவியும் வரும்பாட்டில் செவியைச் சாய்த்தாள்.

ஆரியரை அறவென்று வடக்கு நாட்டை
அடிப்படுத்திக் கங்கையினை அகப்ப டுத்திச்
சீரியசெங் கோற்சோழன் புணர்ந்திட் டாலும்
திருவாரும் காவிரிநீ வருந்தாய்! வாழி!
ஆரியத்துக் கங்கைதனைப் புணர்ந்திட் டாலும்
அகம்நோவா திருந்ததுன்றன் கற்பே என்று
தேரினேன் காவிரியே வாழி!-என்றே
தேனென்று செந்தமிழைப் பாட லுற்றான்.

### இயல் 26

இவ்வாறு பாடியது கேட்டாள்: அன்னோன்
எண்ணந்தான் வேறொருத்தி மேல தென்றே
ஒவ்வாது மனம்கொதித்தும் உவந்தாள் போல
ஒளிவிழியாள் மாதவிதான் யாழை வாங்கிக்
“கவ்வியதேன் மலர்மழையே பொழியும் சோலைக்
காவிரியே பூவாடை அசையச் சென்றாய்
செவ்விதின்வா ழியநீதான் செல்வ தென்ன?
செம்மலுக்கே உளம்பதைத்தாய் வாழி!” என்றாள்

நான்ஒன்று பாடினேன் அவளும் அஃதே
நவிலாமல் வேறொன்று நவில லானாள்
தான்என்னை மறுத்தஒரு குறிப்புக் காட்டித்
தனிக்கின்றாள் என்றுகோ வலன்நி னைந்து
மீனவிழி மேல்இணைத்த கைவி லக்கி
விரைந்து சென்றான் ஏவலர்கள் சூழ்ந்து செல்ல!
ஆனதினால் மாதவியும் வண்டி ஏறி
அகன்றாள்தான் பெற்றசெல்வம் அகன்றா ளாகி.

அவள்வருந்த இவண்அடைந்தான், அறம றந்தான்!
அறமறந்தான் அறிவிழத்தல் வியப்பே அன்று!
நுவன்றமொழிக் கருத்தறியாள் அவள்!இ வன்தான்
நுவலுவதைச் செவ்வையுற நுவன்றா னில்லை
அவனுந்தான் அவளுந்தான் இழைத்த தீமை
அழகுதமிழ் அன்னைக்கே ஆயிற் றென்றால்
எவன்சொல்வான் இவர்நன்றே வாழ்வார் என்றே?
இன்தமிழ்ச்செந் தமிழ்ப்புலவர் வாழ்க நன்றே!

### இயல் 27

இளவேனில் வந்தென்று குயிலும் கூவ
ஏகியஓர் மாதவிதன் மேன்மாடத்தின்
ஒளிநிலா முற்றத்தில் யாழெ டுத்தாள்:
ஒருபண்ணாற் குரலெடுத்தாள்: பிறிதில் வீழ்ந்தாள்
கிளிப்பெண்ணாள் மற்றொன்றும் தொட்டாள் கெட்டாள்
“கேளாயோ தோழியே என்றன் எண்ணம்
துளியில்லை என்னிடத்தில் பொறுக்கொ ணாத
துன்பத்திற் புரளுகின்றேன் ஆத லாலோ:

அவன்காணத் திருமுகம்ஒன் றெழுது கின்றேன்
அளிக்கின்றேன் உன்னிடத்தில்! அவன்பால் சேர்த்தே
நவில்என்நிலை: கையோடு கொணர்க என்று
நற்றாழை வெள்ளேட்டில் எழுது தற்கே
கவினார்பித் திகையரும்பே ஆணியாகக்
கடிதேசெம் பஞ்சியிலே தோய்த்தெடுத்துத்
துவரிதழில் எழிலாட வருங்க ருத்தைச்
சொல்லிக்கொண் டேமங்கை எழுது கின்றாள்:

இளவேனில் முறையறியா இளைய மன்னன்:
இளமதியும் காலமறி யாத பையல்
எளியேனை அவர்வருத்தல் புதிய தாமோ
இதைநீவிர் அறிந்தருள்க இதனைத் தோழி
களியோடு கையேற்று வெளியிற் சென்றாள்
கையிரண்டாற் கண்பொத்தி மெய்து டிக்க
அளியாரோ அடைந்தவரை ஆட வர்கள்
அன்பிலையோ எனப்பஞ்ச ணைமேல் வீழ்ந்தாள்.

**இயல் 28**

செங்கதிர் போய் மறைந்திட்ட மாலைப் போதில்
தேவந்தி என்னுமொரு பார்ப்ப னத்தி
மங்கைஎழிற் கண்ணகியை இந்நாள் உன்றன்
மனக்கவலை யதுதீரத் திங்கட் குண்டம்
பொங்குகதிர்க் குண்டமெனும் இருபொய் கைக்கும்
போய்த்தெய்வம் தொழுது நீமூழ்க வேண்டும்
இங்கிதனைச் செய்களன்றாள்: கண்ண கிக்கே
இன்னலின்மேல் மற்றுமோர் இன்னல் சேர்த்தாள்.

தெய்வமெனல் நலஞ்செய்யும் என்கின் றாய்நீ?
தெய்வத்தைத் தொழவேண்டும் என்கின் றாய்நீ!
தெய்வமென நீசொல்லும் பொருள்எங் கேயோ
திரைமறைவில் இருப்பதெனச் சொல்லு கின்றாய்
மெய்வைத்த தமிழர்களின் ஒழுக லாற்றை
மிகச்சிறிதும் அறிகிலாய் ஆரியர்தம்
பொய்வைத்த வாழ்க்கையினை நன்றே என்று
புளுகுவார் புளுகல்லாம் ஏதும் காணாய்!

செந்தமிழ்ச் செல்வியரின் ஒழுக லாற்றில்
தெய்வத்தை நீகண்ட துண்டு போலும்!
முந்துநாள் முதல்இந்த நாள்வ ரைக்கும்
மொய்குழலார் தமக்கெல்;லாம் எல்லா மாகி
வந்தோர்கள் வருகின்றோர் வருவோர் யாவர்?
வாழ்தந்தை தாயரல்லர் கணவர் ஆவார்!
நொந்துள்ள நிலைகண்டுன் தீயொ ழுக்கம்
நுழைப்பதுண்டோ என்னுளத்தில் இவ்வா றென்றாள்.

### இயல் 29

கோணல்மனப் பார்ப்பனத்தி போதல் கண்டாள்
கோவலனும் தலைவாயில் புகுதல் கண்டாள்
வாணுதலாள் கண்ணகிதான்! எதிரில் ஓடி
"வருகவே என் அத்தான்" என்ற ழைத்தாள்!
ஆணழகன் "மாதவியின் வலையில் வீழ்ந்தேன்
அரியபொருள் அத்தனையும் தோற்றேன்" என்றாள்:
"ஆணிமுத்து நகைவாங்கப் பணமில் லாமல்
அல்லலுற்றான் போலும்" என நினைத்தான் மங்கை.

நகைகாட்டி இருசிலம்பாம் நகையும் காட்டி
நன்றுகொள்க எனநீட்டக் கோவ லன்தான்
"தகையுடையாய் இச்சிலம்பை முதலாக் கொண்டே
தமிழ்வளர்த்த மதுரைபோய் வாணி கத்தில்
மிகுபொருளைத் தேடலாம் வருக நீயும்
விரைவாக" என்றுரைத்தான் நன்றே என்று
தொகையான மகிழ்ச்சியினை நெஞ்சந் தன்னிற்
சுமந்தபடி அன்பனொடு செல்ல லானாள்.

கதிர்எழுந்து விடியலினைச் செய்யும் போதில்
காதலின் மங்கையர்கள் கண்வி ழித்தே
எதிருற்ற கணவர்தமைத் தொழத வண்ணம்
எழும்போதில் ஊர்க்கோழி கூவும் போதில்
முதிராத சிற்றடிகள் விடாது பற்ற
முன்நடந்தான் கோவலனே! இருவர் தாமும்
அதிர்காவி ரிக்குவட கரையி னூடே
ஆனமேற் றிசையிலொரு காதம் சேர்ந்தார்.

### இயல் 30

நடந்ததில்லை இத்தொலைவு நடந்தாள் மேனி
நலிந்ததில்லை இவ்வாறு நலிந்தாள்: "அத்தான்
அடைந்ததில்லை மாமதுரை அணித்தோ" என்றாள்.
"ஆம்" என்றான் கோவலனும் நகைபு ரிந்தே!
கடந்தார்கள் சிறுதொலைவு கண்டார் அங்கே
கவுந்தியெனும் துறவுடையாள் உறையும் பள்ளி
அடிகளே மாமதுரை செல்ல வேண்டும்

அருளுகவே நன்னெறிதான் எனப் பணிந்தார்.

அருகனுறு சமையத்துக் கவுந்தி அம்மை
அவர்கட்கு வாழ்த்துரைத்து, யானும் அங்கே
பெரியார்பால் அறிவுரைகள் கேட்க வேண்டும்
பிழைதீர்ந்த அறிவனைநான் ஏந்த வேண்டும்
வருகின்றேன் என்றுசொல்ல மகிழ்ச்சி கொண்டார்
வழியோடு மூவருமே மேற்கண் நோக்கி
மருமலர்ப்பூங் காவயல்கள் வளங்கள் கண்டு
மகிழ்வில்நலி மறந்துசென்றார் நாளோர் காதம்.

செல்லுகையில் தமிழ்ச்சான்றோர் தம்மைக் கண்டார்
செம்மைநெறி இன்னதெனக் கேட்டு வந்தார்:
அல்லலிலா அருகனையும் ஏந்தி நின்றார்
அங்கிருந்தே ஓடத்தால் ஆறு தாண்டி
நல்லதொரு தென்கரையிற் பூம்பொ ழிற்கண்
நலிதீர்ந்தார்! தீயோரால் நண்ண லுற்ற
போல்லாங்கெல் லாம்தவிர்ந்தார் உறையூர் சேர்ந்தார்
பொழுதிருந்து வைகறையில் தென்பால் சென்றார்.

### இயல் 31

தென்திசைநோக் கிச்சென்றோர் வளநீர்ப் பண்ணை
திகழ்பொய்கை சூழ்ந்தஓர் மலர்ப்பூங் காவில்
நன்றிருந்தார்! அப்போதில் ஒருபார்ப் பான்தான்
நண்ணலுற்றாள் ஊர்யாது வந்த செய்தி
என்னஎன்ற கோவலற்கே குடம லைநாட்
டின்மாங்கா டென்னுமூர் உடையேன் இங்கே
நன்றான திருவரங்கம் வேங்க டம்காண்
கினறஓர் நகையாலே வந்தேன் என்ன:

மதுரைக்கு வழிகேட்டான் கோவ லன்தான்
மற்றிந்த நெடுவழியைக் கடந்து சென்று
முதுகொடும்பா ;ர்அடைந்தால் அங்குத் தோன்றும்
மூவழியில் வலப்பக்க வழியே சென்றால்
மதிதென்னர் சிறுகுன்றம் தோன்றும் அஃது
வலந்தள்ளிச் செல்லுவீர் இடப்பக் கத்தின்
அதர்ஏகத் திருமால்குன் றத்தைக் காண்பீர்

அங்குண்டோர் பிலம்: அதன்கண் மூன்று பொய்கை.

முதற்பொய்கை மூழ்கினால் ஐந்தி ரத்தை
முழுதுணர்வீர் மற்றொன்றால் பழம்பி றப்பும்
அதன்பின்ன தால்விரும்பும் பேறும் காண்பீர்:
அவ்வழியே மதுரைக்குச் செல்லல் நன்றாம்.
இதுவன்றி நடுவிலுள வழியே சென்றால்
இடர்உண்டாம் என்றுரைத்து நகைவி ளைத்தான்.
மதியுடைய கோவலனும் நகைத்தா னாகி
வழுத்துவான் பார்ப்பனனும் விழித்தா னானான்.

படிவதனால் பொய்கையிலே ஐந்தி ரத்தை
படித்தநிலை வந்திடுமோ! ஆரி யத்தைப்
படிப்பதனால் ஆவதென்ன? பழம்பி றப்புப்
படுபொய்யோ உண்மையோ முடிவார் கண்டார்?
முடிவில் ஒன்றால் விரும்புவது கிடைக்கு மென்றால்
முழுப்பொய்யை நம்புவார் உள்ளார் போலும்!
நடப்பார்ப்பான் ஆரியத்தைப் பிறர்உள் ளத்தில்!
நாம்நடப்போம் நடுவழியே என்றார். ஆங்கே.

### இயல் 32

வேட்டுவர்ஓர் குமரிக்குக் கோலம் செய்து
விழாநடத்தும் அதனையே முகந்தி ருப்பி
நீட்டுவிழிக் கண்ணகிதான் பார்த்த வண்ணம்
நேயனொடும் கவுந்தியொடும் நடக்க லானாள்
வாட்டமுறு பொதிகையினிற் தோன்றித் தென்னன்
மதுரையினில் வளர்தென்றல் வீச, மற்றும்
ஊட்டுகுளிர் வானிலவு பகலைச் செய்ய
ஒழுக்கமிலாப் பார்ப்பனர்வாழ் புறத்தே சேர்ந்தார்

கவுந்தியினைக் கண்ணகியைக் காலை ஒர்பால்
காப்பான வேலிசூழ் நல்இடத்தில்
உவந்திருப்பீர் என்றுரைத்து நீர்நி லைதான்
உள்ளஇடம் தேடியே நெடிது சென்றான்:
“அவண்தனித்த மாதவியே இந்நே ரத்தில்
அல்லலென்ன உற்றனையோ” என்னும் ஓர்சொல்
எவனிருந்து வந்ததெனக் கோவ லன்தான்

எண்ணினான் ஓர்பார்ப்பைக் கண்ணிற் கண்டான்.

ஏதுரைத்தாய் அதன்பொருள்தான் என்ன என்றே
எதிர்வந்த பார்ப்பனனைக் கோவ லன்தான்,
ஓதென்ன "மாசாத்து வானும் ;அன்னோன்
உயிரனையாள் தானுமவர் உறவி னோரும்
போதெல்லாம் துன்பமெனும் கடலுட் பட்டுப்
புறமீள வகையின்றிக் "கோவலன்தான்
யாதுற்றான்! எங்குள்ளான்: எனைவ யத்துள்
எப்புறத்தும் தேடவிட்டார்" என்று சொன்னான்.

## இயல் 33

முன் அதனைக் கூறினோன் பின்னும் "ஐயா
மொய்குழலாள் மாதவிதான் எனைஅ ழைத்தே
தன்எழுத்துத் திருமுகத்து என்பால் தந்து
'தருகஎன் கோவலனைத் தேடி' என்றாள்
சொன்னமொழி கொண்டும்மைக் கண்டு கொன்டேன்
தூயோரே எனத்தந்தான்! கோவ லன்தான்
மன்னஞ்சல் திறக்குங்கால், மண்ண ழுத்தில்
மாதவியின் மேனிமணம் ;மருவ லானான்.

பெற்றவர்கள் தம்முயிரைப் பிரிந்து போகப்
பெற்றவர்கள் ஆனார்கள் மற்றுமுள்ள
உற்றவர்கள் தாம்பெற்ற செல்வம் ஏகல்
உற்றவர்கள் ஆனார்கள் நாட்டி லுள்ள
கற்றவர்கள் எல்லாரும் அழுது பாடக்
கற்றவர்கள் ஆனார்கள் துறவு கொண்ட
நற்றவர்கள் உமைத்துறக்க ஆற்று கில்லார்
நங்கையுடன் சென்றீரே என்ப்பி ரிந்து!

சூழலுற்ற கோவலன்தான் அங்கு வந்து
சூழலுற்ற பாணருடன் மகிழ்வினோடும்
யாழிசைத்தே மதுரைதான் எங்கே என்ன
இதுமதுரைத் தென்றலே அஃதாண் மைத்தே
வாழ்களன்றார்: மூவருமே வழிக டந்து
வையையினைப் புணைமரத்தால் கடந்தே ஆற்றின்
வீழ்புனலின் தென்சரையை மேவி ஆங்கே

விரிம்துரை மதிற்புறத்தோர் சேரி புக்கார்.

## மதுரைக் காண்டம்

### இயல் 34

புக்கிருந்த புறஞ்சேரிச் சார்பில் உள்ள
பூம்பொழிலில் வளவயலில் புள்ளி னங்கள்
ஒக்கவே எழுந்தார்ப்ப வைக றைக்கண்
ஊர்சாந்த பொய்கைத்தா மரைஅ ரும்பின்
மிக்கனவாம் இதழிவிரித்த இளஞா யிற்றின்
மென்கதிரின் பொன்னொளிபோய் இன்னல் காணா
மக்களினைத் துயிலெழுப்ப, முரசால் சங்கால்
மதுரைபெற்ற மங்கலம்இவ் வுலகர் பெற்றார்!

மதுரைநகர்ப் பாங்குகண்டு மக்கள் வாழ்வில்
வகைகண்டு வருவேன்இங் கிருக்க என்று
முதிர்அன்பு மங்கையால், அடிக ளின்பால்
மொழிந்தானாய்ச் சொல்லுகின்ற கோவ லன்தான்
மதிக்கலுறும் மறத்துறையின் விளங்கு கின்ற
மன்னவனின் கோயிலையும் அமைச்சர் ஒற்றர்
பதிபலவும் அவண்வருவார் போவார் நெஞ்சப்
பாங்கினையும் கண்டுமேற் கொண்டு சென்றான்.

மாண்அகத்துத் தமிழ்ப்புலவர் பேர வைகள்
வான்எட்டும் மாடங்கள் மலிதெ ருக்கள்
வாணிகத்து நிலையங்கள் அறமன் றங்கள்
மாள்எட்டும் விழிமாதர் ஆடும் பூங்கா
பூண்அகத்துப் பூண்அதுதான் கல்வி என்று
புடைஎட்டும் கழகங்கள் கண்டான் மேலும்
காண்அகத்தான் தொழில்பலவும் காணச் சென்றான்
கண்டவர்கள் கோவலனைப் பினதொ டர்ந்தார்!

### இயல் 35

இதுவென்ன? எனக்கேட்பான் கோவலன்தான்!
இன்னதென விளக்குவார் ஆயி ரம்பேர்!
புதிதென்ன இன்னும்எனில் ஆயி ரம்பேர்:
போம்வழியைக் காட்டுதற்கே முன்ந டப்பார்!
எதுவேனும் அவன் சொன்னால் சொல்இருந்த

இனிதான உளங்கொண்டு மகிழா நிற்பார்
மதுஓடும் பக்கமெலாம் கூட்ட மான
வண்டோடிக் கொண்டிருத்தல் வியப்பே அன்றாம்!

சூழ்ந்திருந்த நல்லோரிற் சில்லோர் கேட்கத்
தூயமனம் வருந்தாமை கருதித் தான்முன்
வாழ்ந்திருந்த வரலாற்றுச் சுருக்கம் சொல்லி
மற்றுந்தான் காணுவன கண்டே, அஞ்சி
வீழ்ந்தணரோ சேரியிலே தங்கி யுள்ளார்
விரைந்துநான் சென்றிடத்தான் வேண்டு மென்றே
ஆழ்ந்துள்ள எண்ணத்து மக்கள் தம்பால்
அறிவித்து நெறிபற்றித் தனியே சென்றான்!

விடிந்துவிடும் முன்அகன்று வெங்க திர்போய்
விழுந்தபின்னம் வரவிலையே! என்கண் ணீர்தான்
வடிந்தபின்னும் வரவிலையே! என்கண் ணீர்தான்
வடிந்துலிடும் எனுங்கருத்தே! துணைபி ரிந்தும்
வாழ்ந்திருப்பேன் எனுங்கருத்தோ! எனஉயிர்தான்
முடிந்துவிடு மோஎன்னும் நிலை யடைந்து
மெய்குழலின் மலர்சிதற ஐயோ என்ற
ஒடிந்துவிழும் பூங்கொடியைத் தாங்கி நின்றான்:
உள்ளத்தும் கண்ணகியைத் தாங்கும் செம்மல்

### இயல் 36

ஊர்ஏகிப் புறஞ்சேரி மீண்ட செம்மல்
உயர்மதுரைச் சிறப்பினையும்; பாண்டி மன்னன்
சீர்மிக்க வெற்றியையும் கவுந்தி யின்பால்
செப்புகையில் தலைச்செங்கா னத்து வாழ்வோன்:
ஓர்பார்ப்பான்: மாடலன்தான் குமரி ஆடி
உடன்மீள்வோன் கவுந்தியினை காணு தற்கு
நேர்வந்தான் கோவலனும் வருக என்றான்
நெஞ்சத்து மிகமகிழ்ச்சி கொண்டான் பார்ப்பான்.

வரவேற்ற கோவலனை மாட லன்தான்
வண்மையிலும் தன்மையிலும் நிகரி லாதீர்!
மருமலர்த்தர் மார்பனீர் நீவிர் இந்த
மாணிக்கக் கொழுந்தோடு வந்த தென்ன

உரைக்களனக் கோவலன்தான் ஐயா இங்கே
உற்றதொன்று பெரிதன்றே வரவி ருக்கும்
ஒருபெரிய தீங்குண்டு போலும்! எண்ண
உளநடுங்கும் கனவொன்று கண்டேன் என்றான்.

அடிகள்தாம் அதுகேட்டுக் கூறு கின்றார்
"அறங்காணாப் பார்ப்பனர்கள் ஊர்ந்த ஊரில்
குடிபுகுந்தீர் அச்சத்தில் குடிபு குந்தீர்
கொள்நினைவே கனவாகும் ஆத லாலே
நொடியில்இவ் விடம்விட்டு மதுரை செல்க"
நவில்இது! கோவலனும் நன்றே என்றான்
அடிகளிடம் மாதரிவந் தாள்அந் நேரம்!
அன்னவள்ஓர் ஆயர்மகள்: முதியோள்: நல்லாள்!

### இயல் 37

கொடுமையிலா வாழ்க்கையினை உடையாள் ஆப்பால்
கொண்டளிக்கும் குடியுடையாள்: முதியாள்: நல்லள்
நடுநிலையாள் மாதரிபால் அன்பு மிக்க
நங்கையினை இருத்தலாம் எனக் கவுந்தி
அடிகள்தாம் உரைத்தவுடன் கோவ லன்தான்
அன்னாய்என் கண்ணகியாம் மனைவி தான்நின்
அடைக்கலமே எனவுரைத்து மனையாள் கையை
அவள்கையில் பிடித்தளித்துக் கண்ணீர் வார்த்தாள்!

கனவெண்ணி நெஞ்சத்தில் கலக்கம் வைத்தும்
கண்களிலே அருவிவைத்தும், சூழ்ந்தி ருந்த
அனைவோரின் நடுவின்மா தரிதான் ஏந்தும்
அங்கையினாற் செங்கைதான் பற்றப் பட்டும்
முனம்மறந்து பின்நினைந்து வந்து, காட்டா
முகம்காட்டிச் சாவாளை வாழ வைத்த
இனியவனை இனப்பிரிதல் உண்டு போலும்
என்றெண்ணிக் கண்ணகிதான் ஏங்க லுற்றாள்:

ஏங்கினாட் தேங்கினான் கோவ லன்தான்!
ஏங்கினார் அங்கிருந்த மக்கள் யாரும்!
தீங்கற்றான்: தீங்கற்றாள் இன்ன வண்ணம்
சிறுமையினில் ஆழ்கின்ற நிலையை எண்ணி

ஆங்கிருந்த துறந்தாளும் அழுதிருந்தாள்
“அடிகளே வணக்கம்” என்றான் செம்மல்! மங்கை
நீங்கினிரோ எனத்தொழுதாள்! நடக்க லுற்றார்
நேயந்து மாதரியி னோடு நேரே

**இயல் 38**

மாதரியின் இல்லத்திற் சேர்ந்தார் ஆக
மாதர்இயற் றும்பணியை நான்நான் என்று
மாதரிந்து காய்கறியைச் சமையல் முற்றும்
மாதரிவை செயற்கரியை எனமு டித்தே
ஓதரிய குணமுடைய கோவ லற்கே
உணவிட்டு வெற்றிலைபாக் கீந்து நிற்கக்.
காதலியைக் கோவலன்தான் கேட்ட தான
காற்சிலம்பி ரண்டிலொன்று கழற்றித் தந்தாள்.

கண்ணகியே என்னோடு காட்டி லெல்லாம்
கால்நோவ நடந்ததனை என்பெற் றோர்கள்
எண்ணியே என்னதுயர் எய்தி னாரோ!
யானும்உனக் கிழைத்ததுயர் சிறிய தன்று!
பண்ணரிய பொற்பாவாய்! நான்சு மந்த
பழுநற்ற வந்தவனே அழுதல் வேண்டாம்
நண்ணிடுவேன் விரைவாக இதனை விற்றே
நல்லவளே எனச்செம்மல் சொல்லிச் சென்றான்.

கலம்பாடிச் சரக்கேற்றி அயலில் விற்கும்!
கலம்பாடிச் சரக்கேற்றி நாடு மீளும்!
இலம்பாடி வந்தோர்க்கே இல்லை என்னார்!
இனம்பாடும் புலவர்க்கே எல்லாம் என்போர்!
நலம்பாடும் செல்வமெலாம் கடல்போற் கொண்ட
நாட்டுக்குப் பாடுபடு வாரின் மைந்தன்
சிலம்பொன்றின் விலைபாடச் சொல்லும் காட்சி
சிறுமைக்குக் கண்ணாடி என்றார் கண்டோர்!

**இயல் 39**

நிலம்பரித்து நாலானாற் போலும், தண்மை
நீர்பிரிந்து மூன்றானாற் போலும், ஒண்மைப்
பொலம்பிரிந்து பல்அணிகள் ஆகி: வண்ணப்

பூவுடம்பெல் லாம் குலுங்கப் பெற்ற மன்னி
புலம்பிரியா மணவாளள் பஞ்ச ணைக்கண்
புனருங்கால் பட்டுறுத்தும் என்று, பூண்ட
சிலம்பிரண்டை பும்கழற்றி அணிந்தி ருந்த
திருப்பள்ளிப் பெட்டகத்தின் மீது வைத்தாள்!

மணம்வேண்டும் நாமொன்றி வாழ வேண்டும்:
மணம்வைப்பாய் எனக்கேட்ட வஞ்சி தன்னைப்
பணம்வேண்டும் எனக்கேட்டான் கருங்கை என்பான்.
பள்ளியினில் துயிலெழுப்பும் போதில் கண்ட
வணம்சிறந்த சிலம்பிரண்டில் ஒன்றெ டுத்து
வந்துகருங் கையிடத்தே வஞ்சி நீட்ட
இணங்கிஎன் கண்ணாட்டி உன்னை மன்னி
எடுத்தாயா எனக்கேட்டால் இல்லை என்க.

இன்னுங்கேள் வஞ்சியே இக்கள் ளத்தை
இம்மியள வுரைத்தாலும் நம்இ ரண்டு
முன்னங்கை கால்கட்டித் தீயில் இட்டே
முழுதுடம்பும் பொரித்தெடுத்துத் தெருவில் எங்கும்
'இந்நங்கை! இம்மைந்தன்! காண்பீர்" என்பார்
என்றுரைத்தான்! "செத்தாலும் சொல்லேன்" என்றாள்
"நன்மணந்தான் என்றென்றாள் இச்சிலம்பு
நமக்குறுதி யானவுடன் நடக்கும்" என்றான்.

**இயல் 40**

நம்கோப்பெ ரும்பெண்டின் சிலம்பெங் கென்ன
நானறியேன் நானறியேன் என்று கோயில்
தங்குவார் தனித்தனியே சொல்லப் பின்னர்த்
தயங்கிநின்ற வஞ்சியினைக் கேட்ட போதில்
"எங்கள்மணம் முடிப்பதற்கும் காசே இல்லை
என்கருங்கை மாப்பிளைக்கும் வேலை இல்லை!
உங்கள்சிலம் பெங்களிடம் இருந்தி ருந்தால்
உடனேஎம் மணமுடியும் அன்றோ" என்றாள்!

ஆகாமல் இருக்குமா மணந்தான்? -என்றே
அழுத்தமுறச் சொல்லிவிட்டேன் என்றாள் வஞ்சி!
"ஏகேடி என்பெயரை ஏன்இ ழுத்தாய்!

இலைமறைக்கக் காம்பையும்நீ காட்ட லாமா?
நீகூறி னாய்நீட்டி நீட்டிக் கேட்டே
நிறுத்திக்கொண் டார்அவர்தம் பேச்சை என்றாய்
காகாஎன் பதைநிறுத்திக் கொண்ட காக்கை
கருத்தையெல்லாம் துப்பறியச் செலுத்திற் றாகும்!

**இயல் 41**

ஐயப்பா டென்மீது கொள்ள வைத்தாய்
அரசர்விடும் உளவறிவோர் உளவ றிந்தால்
வையப்பா சிலம்புதனை என்பார்: வைத்தால்
வந்திடப்பா வஞ்சியையும் அழைத்துக் கொண்டு
நையப்போ டப்படப்பா கலையைத் துண்டாய்
நறுக்கிப்போ டப்படப்பா என்பார் என்றான்
செய்யப்போய் நலமொன்றைத் தீயைப் போய்நீ
திருடிவந்தாய் வஞ்சிஎன்றான் வருந்தி நின்றான்.

மடமையினால் இச்செயலைச் செய்தோம் என்றான்
மக்கள்நமை மதியாரே என்று நைந்தான்
உடைமையினை உடையவர்பால் சேர்த்தே எம்மை
ஒன்றும்செய் யாதீர்கள் என்போம் என்றான்
மடமடென வேநடந்தான்: சிலம்பெ டுத்தான்
மற்றுமதை நோக்கினான் மார்பில் வைத்தே
மிடிபோக்கும் செல்வமே என்று கூறி
மீண்டுமதை இருந்தஇடம் தன்னில் வைத்தான்.

மிகப்பெரிது நமக்கெல்லாம் இச்சி லம்பு
வேந்தர்க்குச் சிறுதுரும்பே ஆத லாலே
அகத்தியமாய்த் தேடிடார் எனநி னைப்பான்
அரசியார் திருவடியின் மங்க லத்தைப்
பகுத்துணராப் பாலியினைத் தேடு தற்குப்
பத்தாயிரம் பேரைப் போவீர் என்று
தகத்தகெனக் குதித்திடுவார் வேந்தர்: பல்லைத்
தடதடெனக் கடித்திடுவார் எனநி னைப்பான்.

**இயல் 42**

வீட்டையும்வந் தாராயக் கூடும் என்றே
வேலங்காட் டிற்சிலம்பைப் புதைத்து வைத்தான்

காட்டையும்ஆய் வாரென்று சிலம்பைத் தோண்டிக்
கடிதோடி இடுகாட்டில் புதைத்து வைத்தான்.
நாட்டிலுள்ள எவர்களையும் உளவு காணும்
நாட்டத்தார் எண்றெண்ணி நடுக்கம் கொள்வான்
தோட்டத்து வேலையினில் எட்டிப் பார்ப்பான்
தொலைநோக்கித் தெருக்;குறட்டில் நிற்கும் போதில்

அத்தெருவில் ஆயிரம்பேர் நடுவிற்செல்லும்
ஆணழகன் ஒருசிலம்பும் கையு மாக
இத்தெருவில் இதுகொள்வீர் உள்ளீர் கொல்லோ
எழிற்சிலம்போ சிலம்பென்று கூறக் கேட்ட
நத்தைவிழிக் கருங்கையான் ஓடி "ஐயா
நம்அரசி யார்க்கொன்று வேண்டும்;: நீவீர்
வைத்திருக்கம் சிலம்பினுடன் இந்தக் கோவில்
வாயிலிலே நின்றிருப்பீர்" என்று சொன்னான்.
யார்நீவிர் எனக்கேட்ட கோவ லற்கே
யாள்இந்த அரசவையின் பழம்பொற் கொல்லன்:
பேர்கருங்கை: இந்நாட்டின் மன்னி யார்தாம்
பின்னுமொரு பொற்சிலம்பு தேவை என்று
நேர்என்பால் சொல்லிவைத்தார் அதனா லன்றோ
நீவிர்இதை வைத்திருப்பீர் என்று சொன்னேன்
ஓர்நொடியில் இதுசொல்லி மீளு கின்றேன்
உரைத்தவிலை பெறுவீர்என்று விரைந்து சென்றான்.

**இயல் 43**

வெப்புக்கும் மாற்றிளித்தேன்: குளிர்மை காட்டும்
மேலுக்கும் மறாற்ளித்தேன் வேந்தே, அன்னை
எய்ப்புக்குத் தீர்வில்லை என்ன என்றேன்
இப்புக்க நோய்மனநோய் என்றன் தோழி
செப்புக்கும் இளநீர்க்கும் கொங்கை ஒக்கும்
செலுக்கும் வேலுக்கும் கண்கள் ஒக்கும்
உப்புக்கும் துப்புக்கும் இதழ்கள் ஒக்கும்
ஊற்றுக்கும் சாற்றுக்கும் சொற்கள் ஒக்கும்.

என்றுரைத்த என்உடையார் எவள்பால் கண்டார்?
யானிருக்க அவளிடத்தில் இவர்க்கேன் நாட்டம்?
என்றிவ்வா றுரைத்தழுதாள் தேற்றத் தேறாள்

எனைத்தள்ளி அறைக்கதவின் தாழும் இட்டாள்
அன்றில்களில் ஒன்றங்கே ஒன்றிங்கேயா?
ஆருயிரும் பேருடலும் பிரிவ துண்டா
இன்றுதான் காண்கின்றேன் புதுமை என்றே
எழில்வேந்தர் லேந்தனிடம் தோழி சொன்னாள்.

பாட்டொன்று பாடினேன் அவைக்கண் இன்று!
பாங்கிருந்தார் தம்மிலொரு பாவா ணர்தாம்
கேட்டொன்று நன்றென்று விரைவிற் சென்று
கிளிஒன்று மொழியார்பால் கிளத்த லானார்
போட்டொன்று கொன்றாளே என்னை மன்னி!
புல்லொன்று மலையாகச் செய்கின் றாளே.
ஊட்டொன்று கன்றும்தாய் தனைம றக்கும்
உணர்வொன்று பேரின்பம் மறவா தென்றான்.

**இயல் 44**

பாண்டியன்நெ டுஞ்செழியன் தோழி யின்பால்
இவ்வாறு பகர்ந்தேன் இருக்கை நீங்கி
ஆண்டியன்ற பெருங்கோயில் மன்னி கொண்ட
ஊடலினை அகற்றுதற்குச் செல்லும் போதில்
ஆண்டவரே நும்கோயில் ஒருசி லம்பைத்
திருடியவன் அடியேனின் குடிலில் உள்ளான்
ஈண்டுளதே அக்குடிலும் அச்சி லம்பும்
இருக்கின்ற தென்றுரைத்தான் கருங்கைத் தீயன்.

அன்றுபோய் இன்றுவரும் காற்சி லம்பும்
அவள்ஊடல் நெருப்பணைக்க ஏற்ற தாகும்
என்றுபோய்க் கொண்டேதன் எதிரில் வாளால்
ஏவல்செயும் காவலரை நோக்கி “ஆளைக்
கொன்றந்தச் சிலம்புதனைக் கொணர்விர் என்றான்.
கோவலனை நோக்கியந்தக் காவ லாளர்
பின்தொடர முன்நடந்தான் கருங்கைத் தீயன்
பெருமகிழ்ச்சி உள்ஊரக் கைகள் வீசி

கோவலனை அணுகினார்: கருங்கைத் தீயன்
கோமானின் ஏவலால் சிலம்பு காணும்
ஆவலினால இவர்வந்தார் காட்டும்: என்றே

அன்புரைபோல் வன்புரையை அமைத்துக் சொன்னான்
காவலரோ “கோவலனிள் முகத்திற் கள்ளம்
காணவில்லை யேஎன்று கருதிச் சொன்னார்
தாவலுற்ற ஊராரும் கருங்கை யானின்
தலைவாங்கும் ஏற்பாட்டின் நிலைய றிந்தார்

### இயல் 45

முகத்திலொரு நல்லகுறி தோன்றிற் றென்றால்
முழுத்திருடன் தனித்திறமை அதுதான், அன்னோள்
அகத்திலொரு தீயகுறிஉணர்தல் வேண்டும்
அதுவன்றோ கையிலுள்ள காற்சி லம்பு!
மிகுத்திவ்வா றுரைத்தஉரை கேட்டோ ரெல்லாம்
மேலோர்மேற் பழிசுமத்தும் நூலோ என்றார்
பகுத்துணரப் பாவிஒரு காவ லன்;தான்
பட்டென்று கோவலனை வெட்டிச் சாய்த்தான்

நடுங்குகின்றார் கொலைகண்டு மதுரை மூதூர்
நலங்களெல்லாம் தொலையுண்டு போன தென்றே:
ஒடுங்குகின்றார் நாணததில் உடம்பின் செந்நீர்
ஊர்ஆறாய் ஓடுவது கண்டார்: பல்வேறு
அடுங்கள்அப் பாவிகளைக் கருங்கை யானை
ஐயகோ என்றார்கள்! மற்றும் ஓர்ஆள்
விடுங்கள்எனைப் பழிதீர்ப்பேன் என்றான் தன்னை
விடாதிருந்த பல்லோரை நோக்கி ஆங்கே.

வல்லான் வகுத்ததெல்லாம் வாய்க்கால் போலும்
வாய்மையினைக் கொன்றிடவும் வல்லான் போலும்!
நல்லான்தான் என்றிருந்தோம் வேந்தன் தன்னைம!
நாணாதான் நடுவுநிலை கோணு தற்கே!
கொல்லாண்மை இழந்தானை மதுரை அன்னை
சுமப்பாளோ பழிமூட்டை சுமப்பா ளோதான்!
இல்லாள்தான் கோவலனே எனினும் அன்னோன்
இருப்பான்தான் இல்லாட்சி தொலைத்த பின்னும்

### இயல் 46

மன்றத்துப் புலவரெல்லாம் வந்து கண்டு
மனத்துடித்தார் மன்னவன்சீர் மறைந்த தென்றார்!

குன்றத்து வாழ்மக்கள் நெய்தல் மக்கள்
குளிர்முல்லைப் பெருமக்கள் மானமா ரோடு
ஒன்றொத்துப் பொன்நெடுந்தேர் சாய்ந் துடைந்த
ஒருதுன்பக் காட்சிகண்டு தமிழ கந்தான்
தென்றற்கும் செந்தமிழ்க்கும் ;தாயாய், இந்தச்
சிறுசெயற்கும் மடியேந்தல் உண்டோ என்றார்.

அன்பென்ற நீர்ப்பாய்ச்சி அறம்வ ளர்த்தே
அவனுயர்ந்தான் இவன் தாழ்ந்தான் என்ப தான
துன்பின்றித் தமிழ்ச் சான்றோர் பலரைப் பெற்றுத்
தொல்லுலகுக் கொழுக்கநெறி பயிற்று வித்துத்
தென்பென்றால் தென்னாட்டின் வீரம் என்றும்
திறம்என்றால் அறப்போரின் திறமே என்றும்
இன்பென்றால் இவைஎன்றும் அருளிச் செய்யும்
எழில்நாட்டில் படுகொலையா என்றார் நல்லோர்.

இழந்ததுவே இள்வுலகோர் மாணிக் கத்தை!
இழந்ததுவே இந்நாடு பெற்ற சீர்த்தி:
பழந்தமிழர் பலரோடும் பகைத்தா ராகிய
பல்காலும் பலரோடும் பேசி நைவார்
குழந்தைகளும் கோவலனின் உடல் வெட்டுண்ட
கொடுங்கனவே காணுவார் ஆனார் என்றால்
முழங்குவன மும்முரசா அன்றி ஆட்சி
முடிகளனும் பெருமுழக்கா என்றார் சான்றோர்.

### இயல் 47

மாதரிதான் வையைநீர் ஆடச் சென்றாள்
மதுரையினின் றங்குவந்த மாதொ ருத்தி
தீதறியான் கோவலனாம், நாட்டு மன்னி
சிலம்புதனைத் திருடியதாய்த் தீயோர் ஏதோ
ஓதியது கேட்டரசன் சொல்வித் தானாம்
ஊரெல்லாம் இதுகுறித்த இரக்கம் கேட்கும்
காதெல்லாம் இரங்குவன என்றால் நான்உள்
கலங்குவதில் வியப்புண்டோ என்று சொன்னாள்.
வெட்டுண்ட கோவலனைக் காணு தற்கும்
விளைவென்ன என்பதனை அறிவ தற்கும்
எட்டுண்டு திசையென்றால் அங்கங் குள்ளார்

எல்லாரும் வந்துற்றார் கடலைப் போல்வார்
திட்டுண்டான் மன்னவனே கூட்ட மக்கள்
செப்பியவை அக்கடலின் இரைச்சல் போலும்
முட்டுண்டேன் நான்மக்கள் நெருக்கத் தாலே!
முறிவுண்டேன் உளம்சேதி கேட்டே என்றாள்.

தண்ணீரில் மூழ்குமுனம் இதனைக் கேட்ட
தையலாள் மாதிரிதான் அழுகை செய்த
கண்ணீரில் மூழ்கினாள்: விரைந்தாள் இல்லம்!
கண்ணகிகண் டாள் அவளை நீரா டற்கும்
எண்ணீரோ? என்உற்றீர்? யாது கேட்டீர்
என்னுடையார் ஏதுற்றார்? அம்மா என்றன்
உண்ணீர்மை நலமில்லை உழலு கின்றேன்
உரைப்பிரென்றாள் மேற்பேசும் ஆற்றல் அற்றாள்:

## இயல் 48

கைச்சிலம்பு மன்னியவள் சிலம்பே என்றும்
கள்ளம்செய் தான்அதனை என்றும் சொன்ன
பொய்ச்சொல்லை நம்பியே மன்னன் “கொன்று
போடச்சொன் னான்செம்மல் தன்னை” என்றே
அச்செழுநீர்ப் பொய்கைக்கண் மதுரை வாழ்வாள்
அறிவித்தாள், நீராடேன்: உன்பால் வந்தேன்
இச்சேதி நானுரைக்க வாயிற் றென்றே
எதிர்வீழ்ந்தாள் மீதுரமா தரியும் விழ்ந்தாள்.

ஆஐயோ எனவீழ்ந்த கண்ண கிப்பேர்
ஆடுமயில் தோகைநிகர் குழல் விரிந்தே
சாவாஎன் அன்புக்கு? வாழ்வார் வாழ
தமிழ்காத்தார் வழிவந்தும் அறத்தைக் கொன்றோன்
கோவா?அக் கொடுங்காலன்? கோத்த சொல்லால்
கொலைசெய்யச் சொன்னானே? குற்ற முண்டோ?
ஓவானே? காற்றே!செங் கதிரே! சொல்வீர்
ஒன்றுண்டோ நீவீர் அறியாத செய்தி?

ஆம்ஆம்ஆம் அவன்ஒழிவான் நாடும் தீயும்
அறம்திறம்பா என் அன்பைக் கொன்றான் வாழ்வு
பொம்ஆம்ஆம் பெர்யஏற்பான் ஆட்சி அற்றுப்

போம்ஆம்ஆம் தமிழ்ப்பழங்கு டித்த லைக்கோர்
தூமணியைப் பழிமாசு துடைப்பேன் என்று
மாதிரிஜ யைஇருந்தார் இடம் உரைத்தே
பூமணிக்கை முகத்தறைந்து மங்கை போனாள்
புறந்திருந்தார் செயலற்று நின்றி ருத்தார்.

**இயல் 49**

செஞ்சிலம்பே ஒன்றோடி ரண்டு கண்ணின்
முந்நீர்போய் நானிலமே செறியக் கண்டோர்
அஞ்சுவான் நானிலமே செறியக் கண்டோர்
எட்டீகைத் தொண்டுவளர் திசைகள் பத்தும்
பஞ்சுபாண் டியற்கமுது மகளிர்க் காக
நான்காணீர் கொலையுண்டோன் மனையாள் என்றாள்

என்சிலம்பே எடுத்துவந்த தம்மை மாரே
எவள்சிலம்பும் நாமறியோம் அம்மை மாரே
என்சிலம்பைத் தன்சிலம்பென் றுரைக்கக் கேட்டோன்
இருதுண்டாய் வெட்டுவித்தான் துணையை! மன்னன்
புன்செயலால் இவ்அமைதி யுலகம் என்ற
பூஒன்றில் இதழிஒன்று போயிற் றன்றோ!
தென்னாட்டு வாழ்வரசி எதிர்பார்க் கின்ற
திருவெல்லாம் வேரோடு சாய்ந்த தன்றோ.

பன்னாளும் பரத்தையிடம் வாழ்ந்தோன்: செல்வம்
பறிகொடுத்தோன் என்அடைந்தென் சிலம்பில் ஒன்றை
இந்நாளில் விற்றிங்குப் பிழைக்க வந்தோன்
இனத்திலுயர் தமிழ்ப்பழங்கு டிப்பி றந்தோன்:
என்வாழ்வை இனித்துலங்கும் பொன்வி ளக்கை
இருதுண்டாய்க் காணுவதோர் இடமும் காணேன்
என்னாமுன் கண்ணகியை எவரும் சூழ்ந்தார்
யாம்பட்டோம் நீபட்ட துன்பம் என்றார்.

**இயல் 50**

கண்ணகியை அழைத்தேகி உடல் கிடந்த
காட்சியினைக் காட்டுதற்கு நெருங்கும் போதில்
புண்நகும்அப் பொன்னுடலைச் சூழ்ந்தி ருந்த
பொங்குகடல் மக்களிலோர் புலவன் நின்று

மண்ணகத்தின் தமிழரசன் பாண்டி யன்கான்
மதிகேடன்: கொடுங்கோலன் என்று காட்டும்
திண்ணகத்தான் எவனுள்ளான் என்ப தெண்ணிச்
செத்தாய்நீ என்றான்மற் றொருவன் சொல்வான்.

பாதியுடல் கண்ணகிக்கும் மற்றும் உன்றன்
பாதியுடல் மாதவிக்கும் ஆனாய் என்றால்
சாதிஒழிப் பான்ஒருவன் வேண்டுமென்று
தவங்கிடக்கும் தமிழகத்தின் குறைத விர்க்க
ஏதுடலம் எதுதொண்டு எவ்வா றுய்தல்?
இனிதான தமிழ்ப்பண்பா டுயிரே என்போய்
தீதறியாய்! மன்னனுனைக் கொன்றான்! உன்றன்
சாகாத புகழுடம்பாற் சீர ழிந்தான்.

இவ்வாறு பெருமக்கள் பலவா றாக
இறந்தவனுக் கிரங்கலுற்றார் அறநெ றிக்கே
ஒவ்வாத மன்னவனைப் பழித்தல் செய்தார்
“ஒதுங்கிடுக! வழிவிடுக” என்ப தாம்ஓர்
செவ்வொலியின் நடுவினின்று திருந்து கற்புச்
சேல்விழிதான் கார்குழல்தான் என்று காட்டும்
அவ்விளைய கண்ணகிதான் கோவ லன்தன்
அழகுடலின் மேல்விழுந்து புரள லுற்றாள்

## இயல் 51

என்செய்வேன் என்துணையே? வாழ்க்கை தன்னில்
ஏதுண்டாம் எனக்கினிமேல்? இந்நிலத்தில்
பொன்செயலாம் பொருள்செயலாம் சா லுற்றுப்
போனஉனை நான் இனியும் படைத்தல் உண்டோ!
மன்செய்த இக்கொலைத்தீர்ப் புக்கு முன்னே
மாண்டஒரு மாசிலனை மீண்டும் ஆக்கல்
ஒன்றுமட்டும் முடியாதே என்ப தெண்ணி
இருப்பானேல் ஒவியத்வை இழவேன் என்றாள்.

முகம்காண்பாள் அவன்காண முகங்கா ணாதாள்
முகம்கண்டு முகங்கண்டு முகத்தை ஒற்றி
அகம்கண்ட துயர்பெருக்கே கண்ணீ ராக
அகம்,கண்டம் முகம், தோள்கள் தழுவிக் காலின்

நகம்கண்டு கால்கண்டு கைகள் கண்டு
நடுக்குற்று விரலாழி கண்டு, வீழ்ந்தான்
நகம்கண்டு சொன்னகதை ஆழி சொன்ன
நடந்தகதை எண்ணிஎண்ணி அலற லானாள்.

இன்னநடந் தனவென்று சொல்லீர் போலும்!
ஏன்கொன்றான் என்பதையும் விளக்கீர் போலும்!
கன்னமிட்டான் கொளத்தக்க கொடிய தீர்ப்பின்
காரணத்தை நானறியச் சொல்லீர் போலும்!
மன்னவனைக் கண்டுநான் நம்கு டிக்கு
வாய்த்தபழி தீர்ப்பேன்என் றெண்ணீர் போலும்
என்றுரைத்த கண்ணகியை நோக்கி ஆங்கே
இருந்தவர்கள் நிகழ்ந்தவற்றை உரைக்க லானார்.

**இயல் 52**

அம்மையீர் உம்ஒருகாற் சிலம்பை ஊரி
னகத்துவிலை காணுகையில் கருங்கை என்போன்
நம்அரசி அவ்வாறொன் றெனக்கு வேண்டும்
நாடுகெனச் சொன்னதாய்ச் சொல்லி இந்தச்
செம்மலினைத் தன்னில்லத் தெதிர்த்த கோயில்
தெருப்பக்கம் இருப்பிர்எனச் சொல்ல ஓடி
அம்மன்னர் இடம்திருட்டுப் போன தான
அருஞ்சிலம்பும் கையும்ஆய் உளான்ஆள் என்றான்.

அப்பாவி அதுகேட்டே ஆரா யாமல்
அவற்கொன்று சிலம்புகொண்டு வருக என்றான்
இப்பால்அக் கருங்கையன் காவ லாளர்
வந்தார்கள் காவலரும், “குறிநன் றானார்
எப்படிநாம் கொல்லுவோம்” எனஇ ருந்தார்
கருங்கையான் “இவன்திருடன் திறமை மிக்கான்
தப்பாது கொல்க” என்றான் நாங்க ளுந்தாம்
கரியல்ல எனமறுத்தோம் அதேநே ரத்தில்:

பாவலரின் ஒருமுரடன் வாளாற் கொன்றான்
கருங்கையன் யாவன்எனில், மன்னி யாரின்
கோவிலிலே அவர்சிலம்பைத் திருடி வந்த
கொடுவஞ்சி மணந்துகொளக் கெஞ்சப் பட்டோன்:

ஆவலினால் கருங்கையன் அதைம றைத்தான்
அச்சத்தால் இச்சிலம்பை இதுதான் என்றான்
யாவும்இவை எனக்கேட்டாள் இறந்த வர்தாம்
எழுந்துவந் துரைத்தவைஎன் றெண்ணிச் சென்றாள்.

**இயல் 53**

பாண்டியனெ டுஞ்செழியன் மனைவி யின்பால்
பரிவோடு வருகைந்தான் நாட்டு மக்கள்
ஈண்டினார் எங்கணுமே நம்மைப் பற்றி
இழிவுரைத்தார் என்றுநான் கேள்வி யுற்றேன்
ஆண்டுநாம் இட்டதென்று சொல்லும் தீர்ப்பும்
அறக்கேடே ஆயிற்றாம் கொலையுண் டானோன்
மாண்புடையான்: குற்றமிலான் என்றெல் லோரும்
வருந்துகின்றார் என்பதையும் யுணர்ந்தேன் என்றாள்.

கொலையுண்டோன் மனைவிஒரு கற்பின் மிக்காள்
கூறுகின்றார் இவ்வாறு! மங்கை உள்ளம்
அலையுண்டால் நம்நிலைமை என்ன ஆகும்?
அறம்பிழைத்தார் யார்வாழ்ந்தார்? என்றன் உள்ளம்
நிலைகலங்க லாயிற்றே? அச்சம் என்ற
நெருப்பிலொரு புழுவானேன் நாட்டார் கூட்டம்
புலிவாயில் நம்வாழ்வு மானே ஆனாற்
போலுமொரு மனத்தோற்றம் உடையேன் என்றாள்.

கோமகள்தான் இவ்வாறு கூறும் போது
கோடிமக்கள் கூடிவர உடன்நடந்த
மாமயிலாள் கையிலொரு சிலம்பி னோடும்
மடித்தஇதழ் எடுத்தநுதல் விழியி னோடும்
வெம்மனத்தி னோடும், எம் குடியின் சீர்த்தி
வீழ்த்தினோன்: என்துணையை வீழ்த்தி னோனின்
தீமையுறு கோயிலெங்கே? என்று கேட்டாள்
சென்றவர்கள் ஓடிவர முன்வி ரைந்தாள்!

**இயல் 54**

சிங்கம்சு மந்திருக்கும்; இருக்கை யின்மேல்
சேர்ந்திருக்கும் நெடுஞ்செழியன் கடைகாப் போனை
அங்கழைத்துப் பெருமக்கள் கூட்டத் தோடும்

அவள்வருவாள்: புகக்கேட்பாள்: என்னி டம்வா
பொங்கிவரும் கடற்கஞ்சேல் தணலுக் கஞ்சேல்
புகல்என்பால் இடும்ஆணை தவறி டாதே
அங்கேசெல் என்றுசொன்னான் கடைகாப் பாளன்
அப்படியே அப்படியே என்றான் சென்றான்.

பெருமக்கள் பின்னிருக்க முன்னே வந்து
"பிழைசெய்தான் கடைக்காக்கும் காவ லோயே,
ஒருசிலம்பும் கையுமாய் ஒருத்தி வந்தாள்
உயிர்போன்றான் தனைஇழந்த ஒருத்தி வந்தாள்
உரைபோய்நீ என்றுகண் ணகிஉ ரைக்க
ஓடினான் "ஒருத்திமட்டும் வருகஉள்ளே
உரைபோய்நீ" எனமன்னன் உரைக்கக் கேட்டே
ஓடிவந்தான், கண்ணகிக்கும் மக்க ளுக்கும்

தொழுதெழுந்து "தாயேஎன் தாயே நீவீர்
ஒருவர்மட்டும் உட்செல்க மன்னன் ஆணை:
எழுந்தருள்க! நாட்டவரே மன்னர் ஆணை
என்விருப்பம் போல்நடத்தல் நன்றோ என்றான்
தொழுதானைக் கையமைத்து மக்கள் தம்மைத்
தொழுதுகை கண்ணகிதான் தனிய ளாகப்

### இயல் 55

என்னநீ சொல்வதென மன்னன் கேட்டான்
என்சிலம்பை விலைகூறி இங்குற் றோனை
என்னநீர் கொன்றதென மங்கை கேட்டாள்
இடர்விளைக்கும் கள்வனைநான் கொல்வித் தேன்மற்
றென்னஎன் செங்கோல்தான் செய்யத் தக்க
தென்றுரைத்தான் மன்னன்தான்! மங்கை நல்லாள்
என்னநீர் ஆராய்ந்தீர் சிலம்பைப் பற்றி?
என்னநும் செங்கோல்தான் என்று கூறி:

கள்வனைநீ கண்டீரோ, விற்க வந்தோன்
கைச்சிலம்பை ஆய்ந்தீரோ மாசி லாதோன்
விள்வனைத்தும் கேட்டீரோ ஒருதீ யோன்தான்
விண்டதனை ஆயாமல் கொல்வீர் என்று
விள்வதுவும் தக்கதென எண்ணிட் டீரோ

விளைவுணமை காணீரோ வாழ்க்கை இன்பம்
கொள்வாளும் கொள்ளாமல் செய்தீர் என்னைக்
கொண்டானைக் கொன்றீரே என்று கூறி:

உம்சிலம்பைக் கொணர்விப்பீர் என்சி லம்பும்
உள்ளதிதோ! என்றுரைக்க மன்ன வன்தான்
வெஞ்சிலம்பைக் கொணர்வித்து முன்னே வைத்தான்
வேந்தரே உம்சிலம்பின் பரல்கள் என்ன
அஞ்சாமல் சொல்களன்று மங்கை கேட்க
எம்சிலம்பின் பரல்முத்தே என்றான் மன்னன்
வஞ்சமிலாக் கண்ணகிதான் என்சிலம்பின்
மாணிக்கம் பார்க்கப்போ கின்றீர் என்றாள்,

### இயல் 56

எனைப்பிரிந்தாய் என்துணைவன் கையிற் சென்றாய்
இம்மதுரைத் தெருவினிலே உலவி வந்தாய்
உனைப்பிரிந்த என்துணையின் உயிரைப் போக்க
ஊராள்வோன் அரண்மனையில் இருந்தாய் என்றன்
மனப்புயலை எழுப்பினாய் மன்னர் மன்னன்
விழிக்கெதிரில் உருக்காட்டிச் சென்று வீழ
நும்சிலம்பே கொணர்களனக் கொண்டு டைக்க
நுறுங்காத வெண்முத்தும் சிதறப் பின்னும்
கொஞ்சுகிளி கைச்சிலம்பும் போட்டு டைத்துக்
குண்டுமா ணிக்கங்கள் கண்டீர் என்றாள்.

அதுகண்டான் பாண்டியன்தான் மனம்பி ளந்தான்
ஐயகோ ஐயகோ தீயன் சொல்லால்
இதுசெய்தேன் உயிர்பறித்தேன் நானே கள்வன்
யான்துணிந்த கோவலனோ கள்வன் அல்லன்
முதியவெலாம் தம்மினுமோர் முதிய தென்னும்
முன்னான தென்னாட்டின் வழிவந் தேமன்
பதைக்காக்கும் முறைபிழைத்தேன் என்றான் வீழ்ந்தான்
பதைக்காமல் துடிக்காமல் இறந்து யர்ந்தான்.

### இயல் 57

பாண்டியனெ டுஞ்செழியன் இறந்தான் என்றால்
பாண்டியனின் உயிர்போன்றாள் இருப்ப துண்டோ

ஈண்டினோர் இரங்கிடவே தானும் ஆங்கே
இறந்திட்டாள்! நத்தம்போற் கேடும் மற்றும்
ஆண்டுளதாம் சாக்காடும் வித்த கர்க்கல்
லாலரிது வள்ளுவனார் அருளும் இச்சொல்
காண்டிரென எடுத்துக்காட் டானார் போலும்
காதல்வாழ் வியல்காட்டிச் சென்றார் போலும்.

மாணிக்கப் பரலிட்டு பொன்னும் மற்றும்
மணியிட்டுப் பணியிட்ட பாணி கண்டார்
ஆணிப்பொன் னேஎன்னும் வெண்க லத்தின்
அழகான சிலம்பிட்டுப் பாண்டியன்தான்
கோணிட்ட நெறிவென்றும் அன்னோன் அன்பின்
கோமாட்டி உயர்வென்றும் அவை அகன்றே
ஏணிட்ட வாயிலினின் றப்பு றத்தே
என்என்ற பெருமக்கட் கடல்அ டைந்தாள்.

என்நல்லான் கள்வனல்லன் யானே கள்வன்
என்றுரைத்தான் உயிர்பிரிந்தான் மன்னன் அன்பு
மன்னியுந்தான் உயிர்பிரிந்தாள் எனினும் என்றன்
மணவாளன் உயிர்பெற்று வருதல் உண்டோ
மன்னிறந்தான் ஆனாலும் அவன் வழக்கம்
மற்றரசின் துறைதோறும் படித லாலே
இன்னலினைச் செய்யாதோ அருமை மக்காள்
எவ்வாறு வாழுவீர் இனிமேல் இங்கே.

### இயல் 58

அரசனவன் பொதுசொத்தை இழக்க வில்லை
அரசனவன் தன்பொருளை இழந்தி ருந்தான்
அரசனவன் அந்நிலையில் அரசன் அல்லன்
அரசளவன் வழக்காளி தனியாள்! என்றால்
ஒருதனியாள் தன்வழக்கைத் தானே தன்பால்
உரைத்துக்கொள் வதும்தீர்ப்பும் தானே கூறி
அருந்துணையைக் கொல்லுவதும் முறையா தீய
அரசன்விளை யாட்டெல்லாம் சட்டம் தானோ!

அமைச்சர்கள் அவையத்தார் படைத்தலைவர்
அரசனுக்கே ஆட்களென்றால் உறம்என் னாகும்?

அமைச்சர்களை அவையினரை படைமே லோரை
ஆதரிப்ப தும்பணமா அவன்கைக் காசா?
அமைச்சர்களால் அவையினரால் படைமே லோரால்
அழிவுக்கே துணைபோக முடியும் என்றால்
அமைச்சர்ஏன் அவையினர்ஏன் படைமே லோர்ஏன்
அரசனோடு பொறுக்கித்தின் பதுவா நோக்கம்!

சமையப்பற் றோதீய சாதிப் பற்றோ
தந்நலப்பற் றோமற்றும் எந்தப் பற்றும்
உமியளவும் இல்லாத தமிழச்சான் றோர்கள்
உதவியது சட்டம்! அதில் உள்ள வாறே
அமையும்வகை ஓரெழுத்தும் தவறா வாறே
ஆட்சியினை நடத்துவோன் அரசன் ஐயோ
தமியேனின் அருந்துணையைக் கொன்று போட்டான்
சட்டம்எங்கே சட்டநெறி நின்ற தெங்கே.

### இயல் 59

அரசனது விளையாட்டே சட்ட மானால்
அச்சட்ட மேநாட்டை ஆளு மானால்
அரசனவன் அதிகாரம் பரவல் ஆனால்
அந்தோஅந் தோஎன்றன் அன்பு மிக்க
பெருமக்களாள் என் துணைவர் பட்ட திங்கே
பெறவேண்டும்! அவரன்பு மனைவி மாரே!
இருக்கின்றீர் என்போலும் மங்க லத்தை
இழப்பீரோ காதலின்பம்! இழக்க லாமோ!

என்நிலையைப் பாருங்கள் என்து ணைதான்
இழுக்கப்பெற் றேன்இனிநான் பெறுவ தென்ன?
பொன்னெனக்கும் ஒருகேடா கழுத்த ணிந்த
பூமாலை ஒருகேடர் எனக்க ளைந்தாள்
மின்னென்மேல் விட்டெறிந்தான்! மேலும் என்ன
விளைந்திடுமோ என்மக்கள் ஆஆ என்றார்
என்இளமை ஏன்என்றாள் விரிந்த கூந்தல்
இழுத்திழுத்துப் புய்த்துப்புய்த் தேஎ றிந்தாள்.

அம்மாஎம் அம்மாஎம் அம்மா என்றே
அங்கைஏந் திப்பல்லால் கெஞ்சு வாரை

இம்மிஅவள் கருதவில்லை என்கண் ணாளன்
வலதுகையால் முதல்ஏந்தும் இடது கொங்கை
விம்மல்ஏன் எனஅதனைப் புய்த்தெ றிந்தாள்
வீறுகொண்ட மக்கள்எலாம் மதுரை தான்ஏன்?
வெம்மைசேர் அரண்மனைஏன் படைஏன் வீடேன்
அமைச்சகத்தின் தேவைஏன் என்றெழுந்தார்.

### இயல் 60

அறம்கொன்ற பாவிக்குத் துணையி ருந்த
அமைச்சனார் வீடில்லை அவரும் தீர்ந்தார்
திறங்காட்டும் மறவரில்லை படைவீ டில்லை
சிறிதுச்சிக் குடிமியினோர் எவரு மில்லை
உறங்கினார் போலிருப்பார் என்ப தில்லை
ஒருகுன்றச் சாம்பலாய்க் காணப் பட்டார்
முறஞ்செவிகள் முதல்யாவும் இறக்கக் கண்டார்
முன்னின்ற கண்ணகிபு ரட்சிக் காரர்.

### இயல் 61

இருவேமாய் இந்நகரிற் புகுந்தோம் அந்தோ
ஏகலுற்றேன் இகைவிட்டுத் தனியள் ஆகத்
திரிகின்றேன்: வஞ்சிக்கே செல்வேன் அன்பன்
திருப்புகழில் எனக்கும்இடம் தேடிக் கொள்வேன்
எரியுண்ட மதுரையிலே வாயில் இல்லை.
என்னுடையான் தனைச்சேர வழியு மில்லை
பெருமகிழ்ச்சி உலவாத நாட்டில் யாரும்
பிறந்தாலும் இறந்தாலும் பெருமை இல்லை.

பிறந்தவர்கள் இறக்கும்வரை பெறுவ தெல்லாம்
பெருந்துன்பம் என்றாலும் பண்டு தொட்டே
சிறந்தொருவற் கொருத்திஒருத் திக்கொ ருத்தன்
எனவாழும் தென்னாட்டுத் தமிழர் யாரும்
பிறந்தறியா அறம்அன்பு வாய்மை கொண்டு
பேருலகில் வாழ்வாங்கு வாழ்வா ராயின்
பிறந்தவர்கள் பெருந்துன்பம் அடையார் அன்னோர்
பிள்ளைகளும் துன்பமே பெறமாட் டார்கள்.

உலகுதொடங் கிடநாளாய்த் தமிழ கத்தில்

உருப்பெற்ற ஒழுகலா றுகள்தாம் நன்றே
நிலைபெறலால் ஒழுக்கமெனல் இதுவாம் என்றே
நீணிலத்து மாந்தரெல்லாம் மேற்கொண் டார்கள்
இலகுமிவ் வொழுக்கந்தான் உயிரின் மேலாய்
எண்ணியே ஓம்பிடுக என்றார் தேவர்:
எலியானார் ஒழுக்கத்தால் புலிகள் ஆவர்
எளியாரும் வலியாரால் இறப்ப தில்லை.

**இயல் 62**

மதுரையிலே தீமூளும் முன்பே தீய
மன்னவனின் மதுரையேன்; என்ற கன்றார்
இதுநன்றே என்றாராய்ச் சேர நாட்டை
எய்தினார் மகளிர்சிலர் மக்ள் சில்லோர்.
எதுநாடு? தீதாட்சி இன்மை யாலே
அதுநாடே என்றுசிலர் சேர்ந்தார்: சில்லோர்
மிதித்தகிளை பிடித்தகிளை அற்றார் ஆகி
வீழ்ந்தார்கள் விலகிவாழ் ஆரி யர்பால்

குன்றேறி வாழ்ந்திடலாம் என்று சென்றோர்
குறுக்கினிலே திரும்பினார் தீயொ ழுக்கம்
ஒன்றேறும் நாகரிவர் என்று கண்டே!
ஓட்டாறு காட்டாறே எனினும் சில்லோர்
சென்றேறிக் குடித்தனமும் செய்ய லானார்
செந்தமிழர் சேருமிடம் காடோ மேடோ
நன்றேறும் என்றார்கள் போலும் சென்றார்
நாடோறும் நன்றுழைப்பார் நன்றே காண்பார்.

தாயகத்தை விட்டகல எண்ணார சில்லோர்
தாயகத்தில் மூள்தணலும் நன்றே என்று
தீயகத்திற் புகுந்தார்கள்! தாய கந்தான்
தென்னாடு பொன்னாடென் றோர்தீத் தப்பிப்
போயடைந்தார் சோணாடு சேர நாடு
பும்போக்கும் மலைநாடு யாண்டும் நன்றே
தூயயானைத் துறத்திட்டுத் துயரில் மூழ்கித்
தோகையவள் என்ஆனாள் காண்போம் இங்கே.

### இயல் 63

கேண்டைவிழி ஊற்றுநீர் ஆறே ஆகக்
கிளிப்பேச்சும் அழுதழுதே ஒலிஇ ழக்கத்
தொண்டையினில் நீர்வற்றக் கால்க டுக்கச்
சுடுவெயிலும் படுகுழியும் வெள்ள நீரும்
கண்டையோ எனக்கதறிக் கதறித் தாண்டிக்
களைப்போடும் இளைப்போடும் சேர நாட்டில்
அண்டைநெடு வேள்குன்றின் வேங்கை நீழல்
அடிநின்றாள்: குன்றத்தூர் வருதல் கண்டாள்.

நெஞ்சத்தே வழிந்துவரும் துன்பச் செய்தி
நெடிதுரைத்தாள்: நின்றிருந்தாள் வீழ்ந்தி றந்தாள்
நஞ்சொத்த நடுக்கத்தை நன்னீர் ஒத்த
இரக்கத்தை நண்ணினோர் ஆகித் தென்னன்
வஞ்சத்தை வேண்மாளோ டிருந்த சேர
மன்னவனாம் செங்குட்டு வன்பால் சொன்னார்
கொஞ்சத்தை அழுதபடி கேட்ட மன்னன்
கொள்ளாத ஆவலுற்றான் பிறவும் கேட்க

தொன்மதுரை ஆசிரியர் சாத்த னார்தாம்
தோன்றலொடு வீற்றிருந்தார் அறிவோம் என்று
முன்னடைந்த பிறவெல்லாம் கூறி நின்றார்
முடிதாழாக் குட்டுவனும் முடிதாழ்ந் தான்! அம்
மன்னியவள் வாடாத முகம்வா டுற்றாள்
மனமிரங்கி னார்இருவர் கண்ணீர் விட்டார்!
அன்புடையாய் உன்மனத்திற் பட்ட தென்ன
அறிவிப்பாய் எனக்கேட்டான் குட்டு வன்தான்.

### இயல் 64

தனித்திருந்தான் தலைவனயல் வாழ்நா ளெல்லாம்
தன்னைத்தான் காத்துக்கொண் டாள்அ தன்பின்
இனிக்கவந்தே இல்லாமை சொல்லிக் கேட்டான்
எழிற்சிலம்பை! அளித்தேதன் அன்பு மாறா
மனத்தோடு மாமதுரை சென்றே வாய்த்த
மாப்பழிச் சொல் தீர்த்துமணந்தான்சீர் காத்தாள்
அனைத்துலகும் புகழ்தமிழர் குடிச்சீர் காத்தாள்
அல்லலெண்ணாள்: அவனிறந்தான் எனஇ றந்தாள்.

ஒருநாளும் பெறத்தக்க இன்ப வாழ்வும்
பெற்றறியாப் பொற்பாவை தன்ம ணாளன்
ஒருநாளில் படுகொலைக்குள் ளாகத் துன்பம்
உன்றான்என் றாலும், அவன் பெற்ற தீச்சொல்
வருநாளும் நில்லாமல் விரைந்து சென்று
வழக்கிட்டுப் பாண்டியனைச் சிலம்பால் வென்ற
திருநாளை வாழ்த்தாமல் இருந்த நாள்தான்
சிறுநாளே எனினும் அதுதீய நாளே.

முற்கண்ட நாளிலெல்லாம் அரிது செய்த
மொய்குழலார் உருவெழுதி இயற்றும் தச்சுக்
கெற்கண்டு பெற்றதுவே கற்பாம் என்று
கடல்கண்ட குமரிநா டியம்பும்; உண்மை
பிற்கண்டோம் கண்ணகியின் அரிய செய்கை
பிழைகண்ட பிறநாட்டு மகளிர் காணத்
தெற்கண்டை வஞ்சியினிலே வஞ்சி யாளின்
திருவுருவக் கல்நாட்டல் நன்றே என்றாள்.

### இயல் 65

மிடியிழுத்துக் கட்டிச்சாக் காட்டில் தள்ளி
வில்லிழுத்துக் கட்டித்தன் திறத்தால் மற்றக்
குடியிழுத்துக் கட்டித்தூய் ஆட்சி காட்டக்
கொடியிழுத்துக் கட்டியதென் னவனைச் சீறி
மடியிழுத்துக் கட்டித்தன் மார்பின் கச்சு
வாரிழுத்துக் கட்டியகண் ணகிசீர் வாழ்த்தும்
படியிழுத்தும் கட்டுவேன் உலகை என்றான்
பனையிழுத்துக் கட்டியபூந் தாரன் சேரன்.

இல்ஒன்று வாழ்வின்பம் அளியாள் சொல்லின்
எழுத்தொன்று தள்ளாத இளைய பெண்ணாள்
வெல்ஒன்று மாள்ஒன்று பாண்டி யன்பால்
விலைக்கொன்று போகாமற் றொருசி லம்பில்
எல்ஒன்று மாணிக்கம் காணக் காட்டி
இழுக்கொன்று காத்தாட்குக் கற்பின் தாய்க்குக்
கல்ஒன்று நாட்டெனும்உன் சொல்ஒவ் வொன்றின்
கால்ஒன்று கோடிபெறும் கழிவொன் றில்லை.

தௌ;ளிவைத்த தமிழினிலே நற்க ருத்தைத்
திருத்திவைத்த சொல்லாலே பொன்னா லாகிப்
புள்ளிவைத்த பசுந்தோகை மயிலே நீதான்
புகழ்ந்துரைத்த கண்ணகியை மறவேன் என்று
வெள்ளிவைத்த தேர்ப்படியிற் கால்வைத் தேதன்
வேண்மாளை வாணுதலை இன்ன மிழ்தை
அள்ளிவைத்துச் செலுத்தென்றான் கோயி லின்முன்
அணைத்துவைத்த படிபொன்னை இறக்கி வைத்தான்.

**இயல் 66**

இளங்கோவேண் மாள்தானும் அமைச்ச னான
எழில்வில்ல வன்கோதை சாத்த னாரும்
விளங்கோவ மணிமன்றில் தனிஇ ருந்தே
மென்கோவ லன்வாய்மை காக்கத் தென்னன்
உளங்கொள்ள வழக்குரைத்துச் சிலம்பால் வென்ற
உலகத் மாதர்மணி ஆம்அ வட்கே
வளங்கோயிற் பேரரசு "கல்லே கற்பு
வரலாறு பேசும்வகை உருவம் நாட்ட:

எண்ணிமுடித் தோமென்று குட்டுவன்தான்
இயம்பிமுடித் தான்கேட்ட மக்கள் மேலோர்
கண்ணிமுடித் தேன்வண்டு வண்ணம் பாடக்
கவித்தமுடி மன்னவா, வாழ்க! நீவிர்
பண்ணிமுடித் தோமென்ற முடிவை வாழ்த்திப்
பாடிமுடித் தோம்என்று பதில்மு டித்தே
மண்ணிமுடித் தேபெற்ற மணிச்சி லம்பின்
வஞ்சியொடு வஞ்சிதான் வாழ்க என்றார்.

ஒருபாதி ஆடவர்கள் வாழ்கின் றார்மற்
றொருபாதி மாதர்களும் வாழ்கின் றார்இவ்
விருபாதி யும்வாழும், இந்த நாட்டில்
இருக்குமனை யின்கணவன் இருவர் தம்முள்
ஒருபாதி நான்என்று மனைவி சொல்வாள்
ஒருபாதி நான்என்பான் கணவன் என்றால்
ஒருபாதி பெற்றதுயர் பிறபா திக்கும்

உண்டென்போம்: கண்ண்கிபால் கண்டோம் என்றான்.

### இயல் 67

கொண்டவன்தன் கைப்பிள்ளை பாலில் லாத
குறைதாங்க முடியாமல் செத்தான் என்றால்
கொண்டவள்தன் மார்படித்துத் தலைவிரித்துக்
கூத்தாடி பாட்டொன்று நீளப் பாடி
அண்டைஅயல் மாதர்களை வரவேற் றுத்தன்
அல்லல்விரித் திருப்பாள்பால் இல்லாப் பிள்ளை
தொண்டைவறண் மொழியவைப்பாள் மனஇ ருட்குத்
தோகையவள் கண்ண்கிஓர் சுடர்வி ளக்கே.

தனைஅயலான் நெருங்காமல் தனைம ணந்தான்
தனைத்தீமை நெருங்காமல் தன்குடிச்சீர்
தனைக்கெடுப்பான் நெருங்காமல் முயல்வாள் நெஞ்சம்
தனைச்சோர்வு நெருங்காமல் காப்பாள் இல்லாள்!
புனைஆடை அணிகுவதும் கூத்துப் பார்க்கப்
போவதுமே கடமைஎன எண்ணுகின்ற
மனக்கப்பல் துயர்கடலைத் தாண்டிச் சேர
மங்கைஒரு கலங்கரைவி ளக்க மன்றோ!

இறந்தானுக் குதவிஎனல் இருந்த போதில்
இருந்தபொதுக் குறைநீக்கல் ஆகும்: அன்றி
இறந்தானின் உடலுக்குத் தேரும் தாரும்
ஏற்பாடு செய்வதுவும் வேறிடத்தில்
சிறந்தான்என் றெண்ணுவதும் அங்கே அன்னோன்
சீரடைய இங்குள்ள பார்ப்ப னர்க்கு
முறங்காணும் அரிசில்முதல் செருப் பீராக
முடிதாழ்த்துக் கொடுப்பதுவும் மடமை என்றான்.

### இயல் 68

வேணாட்டிற் பிறந்துபின் பாண்டி நாட்டில்
தோகைதான் பட்டதெல்லாம் சொல்லு வாள்போல்
சேணுள்ள நம்அருமை வஞ்சி நாட்டைச்
சேர்ந்தாள்இப் பாரெல்லாம் செல்லும் கற்பு
வாணுதலாள் திருவுருவம் அமைப்ப தற்கு
வாய்ப்பான் கல்எங்கே எடுப்ப தென்று

காணுங்கால் இமையத்துக் கல்லே என்று
கண்டுவைத்தோம் காரணம்உண் டதற்கும் என்றான்.

தெற்குமலைக் கல்லைப்போல் முதிர்ச்சி யில்லை
வடக்குமலை யிற்காணும் கல்லில்! ஆனால்
தெற்குமலை நம்முடமை அதனைக் காப்போர்
செந்தமிழர் நமையிகழும் பகைவர் அல்லர்
தெற்குடைய தமிழகழ்ந்த வடக்கர் தம்மால்
திறங்காட்டிக் கொள்ளுங்கள் சிறப்பிற் றென்றான்
மற்றுமுள்ளோர் பல்யானை இடையாட் டுக்கும்
வால்குழைக்கும் வரிப்புலியே வெல்க என்றார்.

ஆங்கிருக்கும் தமிழ்ச்சான்றோர் ஈங்கு வந்தார்
ஆரியர்கள் தமிழ்பழித்தார் என்று சொன்னார்
தீங்குள்ளார் கனகனொடு விசயன் என்றார்
செந்தமிழர் திறங்காட்டா திருந்தோ மானால்
ஆங்கிருக்கும் தமிழ்ச்சான்றோர் நெஞ்சம் என்ஆம்
அனைத்துலகில் தமிழன்சீர் என்ஆம் என்றான்
யாங்குள்ளான் தமிழ்பழித்தான் ஆங்குச் சென்றே
அழித்துயர்க என்றார்அங் கிருந்தோர் யாரும்.

### இயல் 69

இவ்வாறு குட்டுவன்தான் பெருமக் கள்பால்
இயம்பினோன், தன்னருமை முதல மைச்சர்
வெவ்வேலிற் கண்வைத்தால் தெவ்வர் அஞ்சும்
வில்லவன்கோ தைதன்னை நோக்கி “எண்ணம்
எவ்வாறு மேல்நடப்ப தென்ன” என்றான்
யாண்டுபல வாழ்கநின் கொற்றம் என்றே
அவ்வமைச்சன் கார்முகிலாய்க் கண்கள் மின்னக்
குரலிடித்துச் சொன்மாரி பொழிவா னாங்கே

வாளொடுத் வரிப்புலியார் கயலார் நும்பால்
மாறுபட்டார்: கொங்கர்செங் களத்தில் வந்தார்:
தோளெடுத்த எடுப்பினிலே தோல்வி கண்டார்
தொகுத்தெடுத்தே இருகொடியும் நும்பால் தந்த
நாள் எடுத்த ஓட்டத்தைத் திசைகள் எட்டும்
நன்றெடுத்துக் கூறுவன் கொங்க ணர்க்கே

கோளெடுத்த கலிங்கர், மறக் கருந டர்கள்
கொடும்பங்க ளர்,கங்கர் கட்டி யர்கள்.

ஆரியர்க ளுடன்தமிழர் கைக லக்கும்
அப்போரில் நும்மரிய யானை வேட்டை
நேரிருந்து நான்அன்று கண்டேன் ;இன்றும்
நெஞ்சரங்கில் காணாத நேர மில்லை!
ஊரிருந்து பார்த்துவர எம்கோ மாட்டி
உடன்சென்ற விற்தொடிக்கீழ் உமைஎ திர்த்த
ஆரியத்து மன்னர்தோள் அறுதல் கண்டார்
ஆயிரம்தோள் பறந்தவிடம் காணு கில்லார்.

## இயல் 70

அத்தகையீர் கடல்சூழ்ந்த இந்நி லத்தை
அந்தமிழ்நா டாக்குவதாம் இந்தக் கொள்கை
எத்தகுதி எவருடையார் இதைஎ திர்க்க?
எந்நிலத்து நல்லாரும் எய்தத் தக்க
மெய்த்தகுதி யாம்கற்பு விளக்க அன்றோ
வில்லெடுத்தீர் இமயத்துக் கல்லெ டுக்க!
வைத்தெழுது வீர்அஞ்சல் உங்கள் கொள்கை
வடபுலத்து மன்னர்க்கு வருகை ஏற்க

இந்நாட்டில் இதுகுறித்துப் பறைமு ழக்கம்
எழப்புரிவீர்: பன்னாட்டின் ஒற்றர் யாரும்
தம்நாட்டிற் கறிவிக்கக் கடமைப் பட்டார்
தமிழ்எழுக வீரமிலா வடக்கு நோக்கி!
அந்நாட்டபர் நமைஎதிர்க்க எண்ணு வாரேல்
அவருண்டு நமையறிந்த மூத்தோ ருண்டு
தென்னாட்டின் பழவீரம் அன்றும் இன்றும்
என்றுமே உண்டென்றான் எடுத்த தோளான்
மட்டற்ற மகிழ்ச்சிகொண்ட மன்னன் “எங்கே
மாவீரர் எங்கேநாற் படைத்த லைவர்?
பட்டத்து யானைஎங்கே? ஆகஆக
பறையறைவிப் பீர்” என்றான் நாட்டி லெங்கும்
“குட்டுவனார் நம்மன்னர் வாழ்க நாளும்
கோதை உருக் கல்கொணர வடக்குச் செல்வார்
வட்டத்து மன்னரெலாம் திறைகொ ணர்க

வரவேற்க” என்பறை முழக்கம் கேட்டான்

### இயல் 71

தந்தத்தன தந்தத்தன தான தான
தந்தத்தன தந்தத்தன தான தான

வஞ்சிக்கிறை செங்குட்டுவன் வாழ்க வாழ்க
மன்பொற்கொடி திங்கட்குடை வாழ்க வாழ்க
மிஞ்சிச்செலும் வெங்கட்படை வாழ்க வாழ்க
வென்றிப்பனை இன்பத்தொடை வாழ்க வாழ்க
நெஞ்சொக்கமு ழங்கப்பறை வாழ்க வாழ்க
நின்றெக்களி சங்கத்திரு வாழ்க வாழ்க
துஞ்சத்தகு வெங்கட்பகை வீழ்க வீழ்க
வஞ்சிப்படை வென்றிப்படி வாழ்க நேரே.

தனதனதன தனதனதன தத்தத் தத்தா
நனதனதன தனதனதன தத்தத் தத்தா
வழிகுழிபெற நிலநெளிவுற எட்டுத் திக்கே
மலிபொடிஎழ மிசைஇருள்பெற ஒட்டுப் பட்டே
விழிஎரிதர மடமடஎன முற்பட் டுத்தோள்
விடுபடைஎறி படைதொடுபடை எட்டத் தொட்டே
ஒழிவதுபகை ஒழிவதுபகை தட்டுக் கெட்டே
உறுவதுபுகழ் எமதிறைஎன வெற்றிச் சொற்கே
மொழிஎனஒரு தமிழர்கள்படை முற்பட் டுத்தீ
முடுகியதென விரைவதுவட வெற்புக் கற்கே.

ஆடிநடந்தனபரிகள்: அணியா னைகள்
அசைந்துநடந் தனதேர்கள் கலக லென்று
பாடிநடந்தனதேர்கள் கலக லென்று
படைதொடங்கித் தேர்ப்படையின் கடைவ ரைக்கும்
ஓடித்தான் பார்ப்பதென எண்ணி னோர்கள்
ஓடுகின்றார் ஓடுகின்றார் காணார் இன்னும்
ஓடிக்கொண் டேஇருக்கின் றார்கள் என்றால்
படைநீளம் நீளமலை வரைக்கும் உண்டாம்.

### இயல் 72

கண்டதிரும் நீலமலைப் புறத்தே தானை

கடும்பகலில் பாடிவீ டிறங்க மன்னன்
அண்டையினோ ருடன்இருக்கை வீற்றி ருந்தான்
அவிழ்த்துவிடப் பட்டனதேர்ப் பரிகள் எல்லாம்
விண்தொடும்போர் யானைகளும் கரும்பு வாழை
விளாவீழ்த்திப் பலாப்பழத்தோ டுண்டுலாவத்
திண்டிறலோர் நீராடி உடைகள் மாற்றித்
தெங்கிளநீர் முதிராவ ழுக்கை உண்டார்

அரசரொடு போர்மறவர் எவரு மாக
அடியரிந்து நரம்பகற்றிக் குருத் திலைகள்
வரிசையினில் இட்டுச்சோ றிட்டு நெய்யா
றதுபாய்ச்சிக் கறிவகைகள் பண்ணி யங்கள்
பரிமாறிச் சுவைநீரும் அருகில் வைக்கப்
பார்அங்கே பாரிலுள்ளோர் இங்கே என்ன
இருவரிசை மூவாயி ரங்கோல் நீளம்
இருந்துண்டார் எழுவர்என எட்ட வில்லை.

வயிரொன்று தனிப்பெட்டி யாய்இ ருந்தால்
வந்தஎலாம் வரவுவைத்துத் தோளில் தூக்கி
உயிரச்சம் இல்லாமல் செல்ல லாமென்
றுரைத்தவனை மற்றொருவன் நோக்கி அண்ணே
துயர்என்ப தொன்றில்லை என்றி ருந்தால்
தொண்ணூறு வடைஒன்றும் பண்ணா என்றான்
அயல்நின்றான் கைப்பற்றி நின்றான் ஓர்ஆள்
அயலானைத் தூக்கிவிட்டு வீழ்ந்தான் ஓர்ஆள்

## இயல் 73

குடக்கோமான் உணவருந்தி அமைச்சர் யாரும்
கொண்டாட வீற்றிருக்கும் போதில், ஐயா
வடக்கிருந்து வந்துள்ளார் காண்ப தற்கு
வரவிடவோ? என்றொருவன் வணங்கி கேட்க
மடக்கிவைத் தாராய்க என்று மன்னன்
வாயெடுக்கத் “தமிழ்பேசும் துறவோர் என்று
நடுக்குற்றே அவன்சொல்ல வேந்தர் வேந்தும்
நடுக்குற்றான் ஓடினான் வணங்கி நின்றான்.

பார்துறந்தும் தமிழ்துறவாத் துறவீர் என்றன்

படிமீதில் அடிவாழ்க என்றழைத்துச்
சீர்புரிந்து நின்றபடி என்பால் என்ன
திருவருளோ என்கேட்க “மன்னர் மன்னா
ஆர்வருந்தார் அங்கிருக்கும் தமிழர் கொண்ட
அல்லல்சொல் லக்கேட்டால்? கற்கோள் எண்ணாத்
தேர்பரிகா லாள்யானை சேரச் சென்று
செயல்முடிப்பீர் தமிழர்களின் குறையும் கேட்பீர்

ஒன்றன்று பலகுறைகள் உண்டு நீவிர்
உயர்தமிழர் யாவர்க்கும் காட்சி தந்து
நன்றொன்று செய்வீரெல், நன்றாம்” என்றார்
நகைஒன்று புரிந்தரசர்க் கரசன் அந்தப்
பன்றியுண்டார் கண்காணத் தமிழர் கட்குப்
பரிவொன்று காட்டுவது கடமை என்றான்
என்றென்றும் வாழியவே வேந்தே என்றே
இரும்என்று சென்றார்கள் துறந்த மேலோர்

### இயல் 74

வண்கொங்கர் ஆடல்கண்டும் திறைகள் பெற்றும்
மன்னன்தான் விரல்அசைக்க வீரர் சிலலோர்
கண்டனர்போய்ப் பறையறைந்தார் சங்கெ டுத்தார்
கணம்ஒன்றில் வரிசையுற நாற்ப டைகள்
உண்டென்றார் போல்நின்றார் மன்னர் மன்னன்
ஒருதேரில் ஏறினான் ஏறு கென்றான்
பண்டுமுதல் கொண்டுதமிழ் மறவர் பாடும்
படைப்பாட்டில் நடைபோட்டார் வீரர் யாரும்.

தனதத்தத் தனதானா தான தந்தா
தனதத்தத் தனதானா தான தந்தா
தமிழர்க்குப் பகையானோர் வாழ்வ தெங்கே?
தலையற்றுக் குவியாதோ ஊது சங்கே
எமைநந்திப் பிழையாதார் போவ தெங்கே,
இடருற்றுக் கெடுவாரே ஊது சங்கே!
குமிழொத்துத் திரிவோரே வாழ்வும் ஒன்றோ?
பெருவெற்றிக் குடையாரே சேரர் அன்றோ?
தமிழ்வெற்றித் திருநாளே வாழ்க என்றே
திசைஎட்டப் படிமீதே ஊது சங்கே.

கங்கையாற் றைக்கடந்தார் நண்பர் ஆன
கன்னயநூற் றுவர்கொணர்ந்த ஓட மேறி
அங்குள்ள பகைநாட்டிற் புகுந்து நன்றே
அமைத்தஒரு பாசறையில் இனிதி ருந்தார்
தங்கியது கேட்டார்கள் ஆரி யர்க்குத்
தலைவராம் கனகவிச யர்கள், மன்னர்
இங்கிந்தத் தமிழர்களின் ஆற்றல் காண்போம்
என்றாராம் தமிழரசும் நன்றென் றானாம்.

**இயல் 75**

ஆரியநாட் டரசர்களின் படைவீ ரர்கள்
கனகவிச யர்படையோ டொன்று சேர்ந்து
போரிடுவார் திரைகடலே போன்றார் சங்கும்
போர்ப்பறையும் முழங்கினார் முழக்கம் கேட்டே
ஆரியரா? தமிழர்களா? வைய கத்தை
ஆளுவோர் யார்எனறார் பன்னாட் டாரும்!
சேரர்படை புகக்கண்டார் தேரி னின்றே
சிங்கமொன்று புகக்கண்டார் பகைப்ப டைக்குள்

அவர்வாளும் தமிழர்மறவர் எடுத்த வாளும்
அவர்வீச்சும் தமிழர்மறவர் விரைந்த வீச்சும்
தவறொன்றும் வீழ்ந்ததலை நூறும் ஆகச்
சாய்குருதி மிதப்பனவாம் பிணம லைகள்!
இவர்எங்கே ஓடுகின்றார் கூட்டத் தோடே
எனத்தொடர்வார் வில்லேந்து தமிழர் ஓர்பால்
அவன்கனகன் அவன்விசயன் என்பார் ஓர்பால்!
அரைநாளில் தமிழ்வெற்றித் திருநாள் கண்டார்

ஓரைம்பான் இருமன்னர் உருவம் மாற்றி
ணிந்தவரும் சடைமுடிகள் ஓட்டி னோரும்
கூரம்பால் மூகம்கீறி அம்மா பிச்சை
கொடுப்பீரெனத் திரிந்தோரும் ஆனார்மன்னன்
நேரந்தக் கனகவிச யர்கள் கட்டி
நிறுத்தப்பட் டார்பல்லோர் துரத்தப் பட்டார்
ஆரங்கே வில்லவன்கோ தைகற் கொள்க
கங்கைநீ ராட்டுவிழா முடிக்க என்றான்.

### இயல் 76

கனகனையும் விசயனையும் கல்சுமக்கக்
கையோடு கூட்டியே தமிழ வீரர்
அனைவரொடும் இமயமலை தனைஅ டைந்தான்
அறிவமைச்சன் வில்லவன் கோதைதான் அங்கு
வினைமுடிததே அவர்தலையில் கல்லை ஏற்றி
வீரரையும் உதவிக்குக் கங்கை ஆட்டிப்
புனைவில்லும் பொற்கயலும் புலியும் வானின்
பூண்எ ன்ன நீள் கொடிகள் மின்னைச் செய்ய:

சங்கொலிக்கப் பறைமுழங்க ஆடல் பாடல்
கதையுரைக்கப் பரியானை தேர்கா லாட்கள்
பொங்குகடல் நடந்ததெனப் புகல வையப்
புகழ்சுமந்த வில்லவன்கோ தைதன் னோடும்
எங்குள்ளோ ரும்காணக் கற்கு மந்தே
என்செய்வோம் எனக்கனக விசயர் கூற
அங்கங்கு நின்றுவரும் ஊர்வ லத்தில்
ஆரியம்தோற் றதுதமிழே வென்ற தென்பார்.

பாசறையில் குட்டுவன்தான் வடக்கில் வாழும்
பைந்தமிழப் பெரியோரை வரவேற் றுப்பின்
பேசுகையில் தமிழ்நெறியின் பெற்றி கூறிப்
பிறர்போக்கின் சிறுமையினை எடுத்துக் காட்டி
வீசுதலை விழும்போதும் தமிழர் நாக்கு
வெல்கதமிழ் எனவேண்டும் எனவு ணர்த்தி
ஆசையுடன் வருகின்ற ஊர்வ லத்தை
அருகோடி வரவேற்று வாழ்க என்றான்.

### இயல் 77

வஞ்சிக்கு வரவில்லைஎன்ம ணாளன்!
மங்கைக்கு முகம்காட்ட எண்ணவில்லை
கஞ்சிக்கு வழியில்லான் தேளுங் கொட்டக்
கலங்குகையில் கடன்காரன் வந்தாற் போல்என்
நெஞ்சுக்கு நெருப்பாக வந்த வட்ட
நிலவுக்குத் தப்புவதும் எளிதோ தோழி?
பஞ்சுக்கு நிகரான என்உ டம்பு

பற்றிற்றே எனத்துடித்தாள் இளங்கோ வேண்மாள்.

மாலைதான் ஏன்அனுப்பும் தென்றற் காற்றை?
மல்லிகைதான் ஏன் அனுப்பும் நறும ணததை?
சோலைதான் ஏன் அனுப்பும் குயிலின் பண்ணை?
தொல்கடல்தான் ஏன் அனுப்பும் பெருமு ழக்கை?
ஓலைதான் வருகின்றேன் எனென் அன்பன்
ஒன்றுதான் வரவிட்டால் அவை நடத்தும்
வேலைதான் செல்லுவதும் உண்டோ தோழி
விளம்பாயோ எனஅழுதாள் இளங்கோ வேண்மாள்.

மண்ணுக்கு நன்மணிகள் வேண்டும் வைய
மகளிர்க்குக் கற்பொழுக்கம் வேண்டும் காணும்
விண்ணுக்கு வெண்ணிலவு வேண்டும் வாழும்
வீட்டிற்குச் சுடர்விளக்கு வேண்டும் நல்ல
பண்ணுக்கு மூன்றுதமிழ் வேண்டும் நீர்சூழ்
பாருக்கு நல்லோர்கள் வேண்டும் என்றன்
கண்ணுக்குக் கண்ணாளன் சேரர் தோன்றல்
கட்டாயம் வேண்டுமென்றாள் இளங்கோ வேண்மாள்.

### இயல் 78

யார்வந்து கேட்டாலும் இல்லை என்னா
இசைவந்த குடிவந்த பெண்ணே இந்த
ஊர்வந்தும் தெருவெல்லாம் திரும்பி வந்தும்
ஊர்வலத்தை முடித்துவரும் கண்ணொப் பாரின்
தேர்வந்த தாஎன்று பார்போய்: வந்தால்
திரும்பிவந்து சொல்லேடி என்றால் என்றன்
நீர்வந்த கண்துடைத்து நிற்கின் றாயே
நெஞ்சுவந்த தா என்றாள் இளங்கோ வேண்மாள்

வாராத நேரமெலாம் துன்ப நேரம்
வாராயே கண்ணாட்டி என்றன் தோளைச்
சேராத நேரமெல்லாம் உயிரி னுள்ளே
தீராத நோயொன்று திருகும் நேரம்
பாராயோ அன்னவரை வழிமேற் சென்று?
பற்றித்தான் வாராயோ பற்றி லாரை?
ஆராயா திருந்தாயே என்நி லைதான்

அழிவுநிலை என்றுரைத்தாள் இளங்கொ வேண்மாள்

மிகப்பூவை பாடியதால் மூட்டில் ஓடி
மெல்லிளனைக்; கொல்வதுமுன் கருத்தா என்றே
புகைப்பூவை நிகர்கைகள் நீட்டும் போதில்
புதுநிலவை முகின்மறைத்த தெனப்பின் நின்று
முகப்பூவை இருகைப்பூ வால்ம றைத்தே
முந்துபுகழ்க் குட்டுவன்தான் “நான்யார்” என்றான்
அகப்பூவில் வீற்றிருப்பார் என்றாள் வேண்மாள்
அல்லிப்பூ இதழிமுத்தம் ஐந்து வைத்தான்

### இயல் 79

பூம்புகார் பூவைக்குப் புகழெ டுக்கப்
போனீரே பின்னடந்த தென்ன என்று
பாம்புகார் சடைக்குழலி கேட்டாள் ஆங்கே
படைச்செயலும் நடப்பெவையும் வரிரித்து ரைத்து
வேம்புகா ராத்திபுனை தமிழ்வேந் தர்க்கும்
விற்சுமந்த பகைவர்தாம் கற்சு மந்து
தாம்புகார் எனினும்அவர் புகுந்த செய்தி
சாற்றுகென ஆள்விட்டேன் என்றான் மன்னன்

பீடுறுகண் ணகிகோவ லன்தந் தைமார்
பெருஞ்சிறப்புத் துறவடைந்தார்! இருவர் தாய்மார்
நீடுமகிழ் சிறப்புலகைச் சேர்ந்திட் டாராம்
நெடியமுடிச் சோழனவன் ஆட்சி நன்றாம்
மாடலனே இவ்வாறு சொன்னான் என்றான்
வாழியவே நம்சீர்த்தி வருக வேநீர்
ஆடிடுவீர் அமுதுண்பீர் என்று மன்னி
அழைத்திட்டாள் மன்னவனும் நன்றே என்றான்.

### இயல் 80

அரசியல்மா மன்றத்தில் குட்டு வன்தான்
அமர்ந்திருக்க நீலன்முதல் மெய்காப் பாளர்
வரலுற்றார்: வாழ்த்துரைத்துச் சொல்ல லுற்றார்:
மன்னவரே பாண்டியர்பால் சோழ னார்பால்
வரிசையுற வடநாட்டுச் செலவும் கல்லை
மன்னராம் கனகவிச யர்சு மந்த

வருமாறு புரிந்ததுவும் சொன்னோம் கேட்ட
மன்னர்அவர் சொன்னவுரை நன்றன் றென்றார்

எம்மிடத்தில் தோற்றவரை மீண்டும் போருக்கு
இழுத்ததுவே சிறுமையாம் சேர வேந்தர்
தம்மிடத்தும் அவர்தோற்றார் எனில் வியப்போ!
தலைமறையப் புறங்காட்டி ஓடி னோரைச்
சும்மாடு தவைவைத்துக் கல்லை ஏற்றிச்
சுமந்துவரச் செய்ததுவும் பெருமை தூனோ?
நம்மிடத்தில்கனகவிச யர்கள் என்ற
நாய்க்குட்டிக் கதையுரைக்க வேண்டாம் என்றார்.

மெய்காப்பார் இதுசொல்லக் கேட்ட வேந்தன்
மீன்கொடியார் புலிக்கொடியார் பொறாமை கொண்டார்
துய்யவரே வறுமைபெறச் செய்த ஆட்சி
துடுக்காகக் கோவலனைக் கொன்ற ஆட்சி
செய்தவர்கள், கண்ணகிக்கும் கோவ லற்கும்
செயத்தக்க செய்தளனை இகழ்ந்தா ரென்றால்
வெய்யவர்க்கு வெய்யவரேபுகழ்ச்சி பாட
வேண்டும் போலும் காணீர்” என்று சொன்னார்.

**இயல் 81**

கல்லினில்அக் கண்ணகியைக் கற்பின் தாயைக்
கண்ணுறுதல் வேண்டுநாம்! கற்றச் சர்பால்
சொல்லிடுக விரைந்துபணி முடிக்கச் செய்க
துய்தான கல்நாட்டு விழாநாள் தன்னை
எல்லார்க்கும் தெரிவிக்க வருhர்க் கெல்லாம்
எல்லாமும் முன்னேற்பா டாக்கி வைக்க
வில்லவனே கனகவிச யர்கள் தம்மை
விரைவினிலே வரவழைக்க என்றான் மன்னன்.

வந்துநின்ற இருவரையும் வேந்தன் நோக்கி
மலைஇருந்த இடமெல்லாம் கடலும் ஆகும்:
பொந்துநின்ற இடமெல்லாம் மலையும் ஆகும்:
பொழில்நின்ற இடமெல்லாம் பாலை யாகும்:
வெந்துநின்ற இடமெல்லாம் நகரும் ஆகும்:
விரிந்துநின்ற இடஞ்சுருங்கல் ஆகும்: ஆனால்

செந்தமிழின் உண்மைநிலை எந்த நாளும்
சிறிதேனும் மாறாது நினைவில் வைக்க

தேவரென்றும் உவப்பென்றும் ஈடு வெட்டும்
சிறுசெயலைத் தமிழரெல்லாம் வெறுக்கின் றார்கள்
ஆவலுற்றே ஒருமகளைப் பலர்ம ணத்தல்
அறம்என்னும் தீயாரை உமிழ்கின் றார்கள்
யாவருமே பிறப்பினிலே நிகர்என் பாரை
எதிர்ப்பாரைத் தமிழரெலாம் எதிர்க்கின்றார்கள்
காவாத கொலைஞனுக்கும் கழுவாய் பேசும்
கயவர்களைக் கழுவேற்றச் சொல்வார் என்றான்.

**இயல் 82**

திருடித்தான் வாழ்ந்திடுதல் வேண்டும் என்றால்
செத்துத்தான் புகழ்காப்பேன் என்று சொல்வோன்
இருள்தீர்ந்த பழந்தமிழன்! ஆரியன்தான்
இடரென்றால் திருடுவதும் நன்றே என்போன்
குருடகல வடக்கரெலாம் மருந்துண் ணாமல்
குக்கலெனத் தமிழர்களைக் குரைத்தல் நன்றோ!
துகள்தீர்க என்றுநான் பணித்ததாகச்
சொல்லுகபோய் திருந்தாஉம் இனத்த வர்க்கே.

அருந்தமிழ்நான் மறைகண்டு மறைகண் டீர்கள்
அறம்பொருளின் பம்வீடு காணு கில்லீர்
செந்தமிழர் துணைமறைகள் செய்தும் தந்தார்
சிறிதேனும் ஒழுக்கநெறி கண்டீர் இல்வீர்
எந்தமிரை எம்மருமை இலக்கி யத்தை
ஈடழித்தே எம்மன்னனை நாட்டைப் பற்றிக்
குந்தியுண்ணத் திட்டமிட்டீர் அதன்முன் உங்கள்
குதிகாலைக் காத்துக்கொள் வீர்கள் என்றான்.

புறங்காட்டி ஓடிடவே பலநாட் டின்கண்
புலிகளையும் எலிகளே ஆக்கி எங்கள்
திறங்காட்டி ஆளுவதோர் அறமும் காட்டித்
திரும்பினோம் அல்லால்எம் கொடியை அங்கே
நிறங்காட்டச் செய்தோமா மக்கள் செல்வ
நிழல்காட்ட ஒதுங்கியதும் உண்டா? தீய

குறுங்காட்டு நரிகளே செல்க என்றான்
கும்பிட்டுப் போனார்கள் ஆரியர்கள்

## இயல் 83

உலாவந்தும் உற்றாரைக் கண்டு வந்தும்
கண்ணகிக்கே இயற்றுகின்ற உருவம், கோயில்
எலாமுடியப் பணிமுடியும் ஊக்கம் தந்தம்
இல்வந்தே இன்னடிசில் முடித்தும் நல்ல
பலாவாழை மா ஆன முக்க னிக்குட்
படாததாம் பெரியசுவை வேண்மாள் தன்னை
விலா அணைய அணைத்தபடி நிலாமுற்றத்தில்
விடாக்காதற் சொற்பொழிவை நடாத்தென் றான்மன்.

வெண்ணிலவு பேசிக்கொண் டேஇ ருக்கும்
விரிவானம் பேசாமல் இருக்கும் மேலும்
வெண்ணிலவு உள்ளன்பு நிறைந்ததன்று
விரிவானே அன்புடையதாகும் என்றாள்
உண்ணிறைந்த காதலிலே ஆணும் பெண்ணும்
ஒன்றேயாம் எனவேந்தன் உரைத்தான் இல்லை
பெண்ணுள்ளம் நிறைகாதற் பேழை என்று
பிளந்தபா ளைச்சிரிப்புக் காரி சொன்னாள்.

பேரின்பத் துறையினிலே காத லிக்குப்
பேச்சில்லை என்றுரைப்பார் நன்று! பெண்ணே,
பாரினிலே இன்பமெனல் ஆட வர்பால்
பாவையரும் பாவையர் ஆடவர்தம் பாலும்
ஆருவதொன் றேதானா? என்று கேட்டான்
ஐந்தடுக்கு மாளி்யி னின்று கீழே
பார்வையினைப் பொகவிட்ட இளங்கோ வேண்மாள்
பச்சைமயில் இவளொருததி யார்யார் என்றாள்.

## இயல் 84

வேண்மாளும் குட்டுவனும் ஊறும றைத்தே
விரைந்துசெலும் அவ்வொருத்தி யைத்தொ டர்ந்தார்
தூண்மாளும் வேலைஒரு புறத்தே! ஓவச்
சுவர்எழும்பும் மற்றொருபால்! கோயில் தன்னைக்
காண்பாரின் உளம்பறிப்ப தாம்மேற் கட்டுக்

கற்றச்சர் இன்கனவை உண்மை ஆக்கும்?
வேண்மாளும் குட்டுவனும் அவற்றைத் தாண்டி
வில்ளரிதாம் ஒருவிடுதி உள்ளே சென்றார்.

கண்ணகிக்குக் கல்லுருவம் அமைப்பான் அங்கே
காலைபோம் நடுப்பகல்போம் மாலை யும்போம்
எண்ணத்தை மீட்கவில்லை: கண்ணும் கையும்
எடுத்ததில்லை வேறுபும்! மனைவி யான
வண்ணமயில் எதிர்வந்தாள் பார்க்க வில்லை:
வாய்ப்பாட்டும் கேட்கவில்லை ஆட லானாள்
உண்ணின்ற உயிரிருத்தும் உணர்வில்லாமல்
ஒழிந்ததுண்டோ எனமீண்டும் ஆடு கின்றாள்

பண்ணடிக்கும் முழவடிக்கும் தக்க தாகப்
பச்சைமயில் ஆடிக்கொண் டேஇருக்க
விண்ணடிக்கும் மழைக்கசையாக் குன்றம் போல
விழிதிருப்பாக் கற்றச்சன் பணியே ஆனான்
கண்ணடித்தாள் பச்சைமயில் முகம்அ டித்துக்
கண்ணடித்துத்துக் கொண்டிருந்தான் கற்றச் சன்தான்
மண்ணடித்துப் போயிற்றோ காதல் என்றாள்:
மனமடித்துப் போயிற்றுக் கலைதான் என்றான்:

**இயல் 85**

அலைமனது காதலின்பம் தனைத்தள் ளாதே!
அவ்வின்பம் மறப்பதுண்டோ என்றாள் மஞ்ஞை
கலைஇன்பம் ஒன்றுதான் கலைஞர் கின்பம்
கவிஇன்பம் கவிஞனுக்கே ஆனாற் போலே?
தலைவனுமே தலைவியமே பிரியும போது
காதலின்பம் அவர் தவிர்ந்தும் வாழ்தல் கூடும்
கலையுமொரு கலைஞனுமோ பிரிதல் இல்லை
கலைஞன்வாழ் நாளெல்லாம் இன்ப நாளே!

கலைஞனுக்கு மனைவிதோள் ஓய்வு மெத்தை!
கைக்காத இன்பமிந்தக் கருங்கல் என்று
கலைகுனிந்தான் சிற்றுளியை எடுத்தான் கல்லின்
தையலும்தன் தண்ணுமாய்ப் பணிதொ டர்ந்தான்
வலைவீசும் வழியாளே என்கேள் விக்கு

மறுமொழியும் இதுதானா என்றான் மன்னி
மலைபேச வைக்கின்றான் கற்றச் சன்தான்
வந்துநிலை யறிந்ததெனக் கின்பம் என்றாள்.
கற்றச்சுக்கலைஞனே வாழ்க உன்றன்
கைத்திறத்தை விரைவினிலே முடித்து வை;க்க
மற்றந்தப் பெருங்கோயில் பணியும் தீர்க்க
மன்னிஇவள் முடிந்துவரும் கலைகா ணற்கே
உற்றதோர் ஆசையினை என்ன சொல்N;வன்
உயிர்வாழ்ந்தாள் எனில்இந்தக் கண்ண கிக்குக்
கற்காணும் விழாமுடிக்க வாழ்ந்தாள் என்று
காவலன்சொன் னான்அரசி யோடு சென்றான்.

**இயல் 86**

நாட்டுக்கு முரசறைந்தார் உலகுக் கெல்லாம்
நல்லோலை செல்லவட்டார் மகளிற் கற்பின்
காட்டுக்குக் கண்ணகியின் கல்நாட் டென்றார்
கண்டவரும் கேட்ட வரும் நமது வஞ்சி
நாட்டுக்கு வரஇன்றே கிளம்பி னார்உள்
நாட்டாரும் ஆயத்தம் ஆகின் றார்கள்
வீட்டுக்குவீ டிந்த மகிழ்ச்சிப் பேச்சாம்
விளையாட்டுப் பாடடுமகண் ணகியின் பாடடே

அயல்நாட்டு மன்னவரும் பிறகு வந்தால்
அமைவதற்கும் ஆடுதற்கும் பாடு தற்கும்
துயில்வதற்கும் குளிப்பதற்கும் வெயில்ப டாமல்
கற்றுதற்கும் மற்றெதற்கும் தகுதி யான
இயலமைந்த கருவிகளும் பொருளும் செய்தார்
இல்லையெனச் சொல்லாமல்; எல்லாம் வைத்தார்
வயலெல்லாம் வழிநாளில் புத்து ருக்கே
வரப்பெல்லாம் புத்துருக்கின் மிடாவி ளிம்பே

செங்கதிரும் வேறுவழி செல்ல வேண்டும்
செல்லாக்கால் சோற்றுமலை இடிக்கும் மற்றும்
இங்குள்ள பெருங்குளத்து நீர்இ றைத்தே
எம்மருங்கும் கரையெடுத்துத் தயிரைத் தேக்கித்
தங்கமலை மாடெல்லாம் தரும்பால் ;தேக்கத்
தடங்கடலை இடங்கேட்க வேண்டு மன்றோ

செங்குட்டு வன்பாலிவ் வாறு சொன்னார்
செயல்துறையின் மேலோர்கள் இன்னும் சொல்வார்.

**இயல் 87**

காய்கறிகள் தோட்டங்கள் நூறு போதும்
கமழ்ஏலம் முதலியன ஐந்து வீடு
வாய்படுமுன் குடல் இனிக்கும் கரும்பின் கட்டி
வண்டிஐ யாயிரமே முன்ஏற்பாடு
வேப்பிளந்த பெருமத்து விளைத்த வெண்ணெய்
வெற்பளவு1 நல்லெண்ணெய்க் குடம்இ லக்கம்!
நோய்தீர்ந்த இளந்தேங்காய் உரிப்பார் ஓர்பால்
நூறுவண்டி காத்திருக்கும் மட்டை ஏற்ற

பருப்பெல்லாம் இருப்பாக்கி மாதிஇ டித்துந்
பையாக்கி நெல்லெலாம் அரிசி ஆக்கி
விருப்பாக்க விருந்தினரைக் கடுகும் ஈர்த்து
வீணாக்கி டாதுவெயிற் காய்ச்ச லாக்கி
நெருப்பாக்கி டாதுளுத்தும் பயற்றை எல்லாம்
நெடியாக்கும் பொன்வருவல் ஆக்கித் தாளிப்
புரித்தான எல்லாமும் தூய்மையாக்கி
உயர்ந்தபாக் கியமாக்கி வைத்தார் என்றார்

குளிப்பார்க்கு நறும்பொடிகள் தூங்கு தற்கும்
குடிப்பதற்கும் சுவைநீரே நீட்டு தற்கும்
விளிப்பார்க்கே இதோவந்தேன் என்ப தற்கும்
வெந்நீரே கேட்பார்க்குத் தருவத ற்கும்
வெளுத்தாடை தரக்கேட்டால் வெளுப்பதற்கும்
வியர்வென்றாய் அயராமல் விசிறு தற்கும்
ஒளிப்பின்றி ஒருவருக்கோர் ஆள்வி ழுக்காடு
ஒப்பந்தம் செய்யப்பட் டுள்ளார் என்றால்.

**இயல் 88**

மேல்நோக்கும் கீழ்த்திசையாம் கோவில் ஒன்றின்
வெளிக்கதவு திறந்திடவும் பரிதி தோன்றும்!
ஆனஇமைக் கதவுதிறந் திடவும் கண்கள்
அனைவோர்க்கும் வெளித்தோன்றும்! சோர்வே என்ற
ஊனநெடுங் கதவுதிறந் திடவும் யார்க்கும்

உணர்வுதோன் றும்!தோன்ற உலகோர் வாழ்த்த
வானுயர்ந்த கண்ணகியின் பெரிய கோயில்
மணிக்கதவு திறந்திடவும் கற்புத் தோன்றும்.

திறல்வேந்தன் குட்டுவன்அப் பெரிய கோயில்
திருக்கதவு திறக்கவைத்துக் கேளீர் கேளீர்
பிறர்நெஞ்சு புகாள்: புகார் பெற்ற செல்வம்
பிழைஒன்றும் அறியானைத் தான்வாழ் வுக்கே
உறவானைப் பழிகூறிக் கொன்றோன் நாட்டோடு
ஒருபுரட்சித் தீயிலிட்டாள்: ஊன்உடம்பை
அறநீக்கக் கற்பினாற் புகழ டைந்தாள்
அவள்இவளே உலகீரே காண்மின் என்றான்.

வாழியவே கண்ணகியின் சீர்த்தி என்று
வாழ்த்தினார் நாட்டாரும் வந்தோர் யாரும்
ஆழிசூழ் உலகத்து மகளிர்க் கெல்லாம்
அகமுடையான் பேர்காத்தல் அறமாம் என்னும்
வாழுநெறி காட்டினாள் கற்பின் அன்னை,
வாழியவே எனவாழ்த்தி நின்றாள் வேண்மாள்
வாழியவே தமிழ்என்றார்! மகிழ்ந்தா ராகி
மலர்மாரி இசைமாரி பெய்தி ருந்தார்

**இயல் 89**

மாதரியும் ஐயையும்தே வந்தி தானும்
மற்றவரும் கண்ணகியைத் தேடித் தேடி
ஈதறிவோம் என்றவரின் வாய்ச்சொல் கேட்டே
இங்குவவந்தோம் மன்னவரே மன்னி யாரே
ஏதுற்றோம் யாம்பொறோம் என்றே ஓடி
எதிர்நின்ற கண்ணகியின் அடியில் வீழ்ந்து
தீதுற்றாய் என்றலைந்தோம் எனினும் அன்னாய்
திருவுற்றாய் புகழான உருவம் உற்றாய்

என்றழுதார் திருமுகம்பார்த் தேங்கி ஏங்கி!
எழில்மன்னன் அன்னவல்பால் பலவும் கேட்டே
நன்றான கோவலனின் கூத்தி யான
நங்கைநிலை ஏதென்றான் அவர்கள் “வேந்தே
முன்தானை கோவலர்க்கு விரித்த தன்றி

முகமொன்றும் அறியாத மாதவிக்கே
ஒன்றான மகள் மணிமே கலையும் நெஞ்சம்
ஒன்றானாள் துறவில்தன் இளமை பெய்தாள்.

எனக்கேட்ட மன்னவனும் வியப்புற் றானாய்
எதிரிலுறு கண்ணகியை நோக்கி நின்றான்
புனைதாரன் இலங்கைக்கோன் கயவா கென்பான்
பூண்முடிஆ ரியவேந்தர் குடகக் கொங்கர்
மனமுயர்மா ளவெந்தன் வணங்கி வாழ்த்தி
வஞ்சியர்க்கு வாழ்வரிக்க வந்த அன்னாய்
இனிதாக எம்நகர்க்கும் எழுந்த ருள்க
எனச்சொல்லித் திருமுகத்தில் விழிவைத் தார்கள்

**இயல் 90**

நின்றிருந்த கோலத்தைப் பலலோர் தாமும்
நெடுநேரம் பார்த்தபடி இருந்தார் நெஞ்சம்
ஒன்றொன்றும் கேட்டதனைப் பெற்று மீளும்
உதவமறுத்தாள்என்ப தொன்று மில்லை
இன்றொன்றை நாமளித்தால் நாளைக் கொன்றை
எமக்களிப்பாள் எனும் மடமை எழவே இல்லை.
குன்றுதரும் அருவிபோல் அழகு வெள்ளம்
கொழிப்பனவாம் உறுப்புக்கள் யாவும் ஆங்கே
பேசிக்கொண் டேயிருக்கும் இரண்டி தழ்கள்!
பீரிட்டுக் கொண்டிருக்கும் அருளைக் கண்கள்!
வீசிக்கொண் டேயிருக்கும் ஒளியை நெற்றி
விளைத்துக்கொண் டேயிருக்கும் நகைம கிழ்வைக்
கூசிக்கொண் டேயிருக்கும் மகளிர்கெல்லாம்
கொடுத்துக் கொண்டேயிருக்கும் புருவம் வீரம்
ஏசிக்கொண் டேயிருக்கும் ஆரி யர்க்கே
இயம்புவது தமிழறத்தை முழுமைத் தோற்றம்

வில்லவன்கோ தைதன்பால் ஆட்சி நல்கி
வேண்மாளோ டிங்கிருந்து மக்கள் தொண்டைப்
புல்லுகஎன் றருளிளாள் அன்னை என்று
புதுக்கோயில் மனைவியுடன் வாழ்ந்தான் மன்னன்
செல்லுமுன் மன்னனிடம் இளைய ஐயை
முதலானோர் செப்பினார் எங்கள் அன்னை

நல்லகத்திற் றுணையிருப்பேன் என்றாள் என்று
நடந்தார்கள் ஊர்நோக்கி மகிழ்ச்சி யோடே

### இயல் 91

வஞ்சியிலே ஒருபடிவம் உலக மக்கள்
மனத்திலெலாம் ஒழுக்கவர லாறு வைத்த
எம்சிறந்த தமிழ்வேந்தே வாழ்க நீவிர்
எம்நாடும் கற்பரசி அடியில் வாழத்
தம்சிறந்த துணைவேண்டும் இதனைச் செய்த
தலைசிறந்த கலைவல்லோர் கற்றச் சர்தாம்
வஞ்சியினை அங்கங்கு வைப்பார் நீவிர்
வாழ்ந்தீர்போல் யாமெல்லாம் வாழ்வோம் என்றே:

சீரிலங்கைக் கயவாகு செப்பி நின்றான்
சீரியதே அஃதென்றார் உடனிருந்தோர்
பாரிலங்கு குட்டுவனும் நன்றே மற்றிப்
படிவத்தால் நீவிர்உற்ற தென்ன என்றான்
ஆரிலங்கைக் கேதுபுகல் என்றேன் அன்னை
அஞ்சலென்ற தன் வலக்கை தூக்கி நின்றாள்
நேரிலங்கு நின்றிருந்தோள் நெஞ்சில் வந்தாள்
நீடுழி வாழ்கஎன வாய்ம லர்ந்தாள்.

என்றுபல கயவாகு சொல்ல மற்றும்
இருந்திட்ட ஆரியனும் கற்றச் சார்தாம்
அன்னையினாள் நெஞ்சத்தைத் தன்நெஞ் சாக்கி
அதன்பின்னர் அவளழகைக் கல்லில் தேக்கித்
தின்னுமுன்னே சுவையூட்டும் தேன்கு ழல்போல்
திரும்புமுன்னே அறிவூட்டி அழகைக் காட்டும்
இந்நிலத்துக் கொருபடிவம் ஆக்கிப் பண்டே
இருந்ததமிழ்க் கலைக்குமுடி கவித்தார் என்றான்.

### இயல் 92

வந்தாரின் மனமலரிற் போனா ளேனும்
வஞ்சியினை வஞ்சியா ளாயி ருந்தாள்
இந்தாரும் எனவீடெ லாம்அ ழைக்க
ஏன்காணும் என்றுள்நாட் டாரும் சென்றார்
மூந்தாநாள் காணடிந்த சின்ன பிள்ளை

முக்கூட்டுத் தெருவிலொரு வீட்டி னின்று
செந்தாழை தான்பெற்றுவீடு சேர்ந்தாள்
செவிடனைப்போய் வழிகேட்டுச் சிரித்தான் ஓர்ஆள்

தங்கஇடம் தந்தானின் தங்கை கொண்டான்
தங்கைகள் கூப்பிவிடை கேட்கும் போதில்
இங்கையா மணம்நடக்க வேண்டும் என்ன
இருக்கின்றோம் எனஉரைத்துப் போகும் போதில்
எங்கையா போகின்றீர் என்று கேட்க
ஏங்கையா எங்கள்மணம் ஆங்கென் றார்கள்
தங்கையா ஒப்பினாள், என்றான் தங்கை
தங்கையா எனச்சென்றாள் தங்கா ளாகி.

கருவூரின் ஒருமுதியோள் விருந்திற் பெற்ற
கனிவாழைத் தார்பலாச் சுளைகள் மற்றும்
ஒருநூறு கொய்யாமா முப்பத் தைந்து
ஒன்றாகக் கட்டி, அதைப் பேரர்க் கென்றே
இருகையால் தூக்குவாள் முடிய வில்லை
இருக்கவிட்டுப் போகமனம் வரவு மில்லை
பெருங்குரங்கு பத்துவந்து விழுங்கித் தீர்த்தும்
பின்னும்உண்டோ எனக் கேட்கும் கிழக்கு ரங்கை.

## இயல் 93

கண்ணில்விழா நேரமில்லை உருவம்! வாழ்த்துக்
காதில்விழா நேரமில்லை நாள்க டந்தும்!
எண்ணில்விழாக் காணவந்தோர் தம்ஊர் நோக்கி
ஏகுவார் பன்னாளும் வாய்திறந்து
கண்ணகியின் புகழ்வாழ்க என்று சொல்லக்
காதாரக் கேட்டடுக்கேட் டங்கி ருந்த
வண்கிளையிற் பறவைகளும் அதையே சொல்லும்
வான்பருந்தும் செந்தமிழாம் தேனைச் சிந்தும்.

பானைமுதற் செய்கின்ற குலாலர் தாமும்
பண்ணியங்கள் செய்கின்ற இல்லோர் தாமும்
யானைமுதற் செய்கின்ற வினைவல் லாரும்
இரும்புமுதல் வார்ப்படத்துக் கன்னார் தாமும்
தேனைமுதல் சிறிதெடுத்தே இதழ்கள் செய்தும்

சிரிப்பமதற் செய்துபின் மூக்கும் காதும்
மானைநிகர் திருவிழியும் செய்து கற்பு
மணிசெய்து பின்தொட்ட பணிசெய் வார்கள்

உழவுதொழில் வாணிகமே தச்சுக் கல்வி
உயர்வரைவே எனும் ஆறின் வகையின் வாழும்
பழங்குடியாம் தமிழரெல்லாம் இல்லந் தோறும்
பகல்தோறும் இரவுதொறும் காணு கின்ற
ஒழுகலா றுகள் தம்மிற் சிறப்பி லெல்லாம்
ஒண்டொடியாள் கண்ணகியே வந்து நிற்பாள்!
மழைதென்றல் பெண்குழந்தை தமிழ்ந லத்தை
வாயூறி அடடாகண் ணகிதான் என்பார்.

**இயல் 94**

செந்தமிழ்நான் மறைமறைக்க, வையம் கேட்டால்
சிரிப்பதோர் ஆரியநாந் மறையைச் செய்தோம்
தந்ததிரு வள்ளுவன் நூல் மறைக்க நான்கு
சாதிசொல்லும் மனுநூலைச் செய்தோம் மற்றும்
எந்நூலும் தமிழ்நூலே எனல்ம றைக்க
இழிநூலாற் கலப்படத்தைச் செய்தோம்: இந்தக்
கல்நூலைக் கண்ண்கியை மறைக்க இந்நாள்
காணும்ந}ல் எதுஎன்றார் ஆரியர்கள்

தமிழ்ஒ ழுக்கவேர் இருக்கும் வரைத மிழ்ச்சீர்
தடங்கிளையும் அடிமரமும் இருக்கும் இந்நாள்
தமிழ்ஒழுக்க வேரழிந்தால் தமிழர் வாழ்வு
தலைகவிழும் எனும்முயற்சி கைகூ டுங்கால்
அமைவுடைய நெடுஞ்செழியன் நான்கு சாதி
அறம் என்றான்: நாட்டோடும் அழியச் செய்தாள்
தமிழரசி கண்ணகியைத் தொலைப்ப தெந்நாள்
தமிற்கூடி ஆரியர்இவ்வாறு ரைத்தார்.

செம்பிலும், கல்லிலும் மஞ்சள் சாணி,
சேற்றிலும் எவனமைக்கும் உருவி னுக்கும்
நம்பெரியோர் ஆரியர்கள் மறையைக் கொண்டே
நல்லுயிர்ஏற் றுதல்வேண்டும் என்ற சட்டம்
பொய்ம்மைஎன் றாக்கியே கண்ண கிக்கும்

பொலிவுறவே உயிரமைத்தான் தமிழத் தச்சன்
நம்பொய்மை கற்கோட்டை தூளா யிற்று
நாளைநிலை என்என்றார் ஆரி யர்கள்

**இயல் 95**

வாயழிகண் ணகிகற்பு! வைய மெல்லாம்
வாழியசெந் தமிழ்மாண்பு! தமிழ கந்தான்
வாழிய!வா ழியதமிழர்! யாண்டும் நன்று
வாழுகின்ற தமிழரெலாம் தமிழர் ஆட்சி
ஆழ்கடல் சூழ் தமிழ்நிலத்தில் நிலவச் செய்தல்
அறம்என்று திறங்காட்டும் தோள்கள் வெல்க
வாழியவே புலி, கயல் வில் ஒருங்கி யன்ற
மணிக்கொடிதான்! வாழ்கஅறம் வாழ்க நன்றே

கருங்கையிடம் ஓடிவந்த வஞ்சிஅ த்தான்
காற்சிலம்பு கேட்டார்கள்: காணேன் என்றேன்!
குரங்காகி விழித்தார்கள் பின்னர் ஒன்றும்
கூறவில்லை என்றுரைத்தாள்! கருங்கை யாளன்
அரங்கிலவர் கேட்டதென்ன? சொன்ன தென்ன?
அப்படியே சொல்லென்றான் மணமு டிக்க
அரைக்காசும் கையிலில்லை கருங்கை யர்க்கும்
ஐயையோ வேலையில்லை! சிலம்பி ருந்தால்:

## கண்ணகி புரட்சிக் காப்பியம் – படைப்புத் திறன்

நூல்களைப் பண்டைத்தமிழ் இலக்கணத்தார் மூவகையாகப் பகுத்துரைப்பர். அவை முதல் நூல், வழிநூல், சார்பு நூல் என்பனவே அம்மூவகைகள். **"வினையின் நீங்கிய விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்"** என்ற நூற்பா ஆழமான உண்மை ஒன்றை உள்ளடக்கியதாகும். படைப்பாளனால் உருவாக்கப்பட்ட, ஏதாவதொரு வகையில் செல்வாக்குப் பெற்று எழுகின்ற முதல் நூலை ஒட்டி எழுகின்ற நூல்கள் வழிநூல், சார்பு நூல் என வழங்கும்.

அவ்வகையில், சிலப்பதிகாரத்தை மூல நூலாகக் கொண்டெழுந்த வழி அல்லது சார்பு நூலாகப் பாரதிதாசனின் கண்ணகி புரட்சிக் காப்பியம்' என்ற படைப்பைக் கூறலாம். இவ்வாறு தன் படைப்புக்கு மூலமாக வேறொரு நூலைக் கொண்ட படைப்புக்களை ஆராயும்போது, அவை எழுந்த காரணம், மூல நூலொடு

அவை கொண்டுள்ள ஒற்றுமை வேற்றுமைகள், வழி நூலின் தனித்தன்மைகள் முதலியன எண்ணிப் பார்த்தற்குரியன.

**படைப்பு நோக்கம்:**

எந்தப் படைப்புக்கும் ஒரு நோக்கம் உண்டு. வழி நூல்களில் அது சிறப்பாகவே ஆராய்தற்குரியது. ஏனெனில் தன் படைப்பிலக்கியத்திற்குக் கருவாகக் குறிப்பிட்ட ஒரு நூலை அல்லது அதன் ஒரு கூறினை ஆசிரியன் தேர்ந்தெடுத்தமைக்குத் தக்க காரணம் இருக்கும்; இருக்கவேண்டும். எண்ணற்ற படைப்புக்களில் ஏதோ சில மட்டும் சிலர் மனத்தை மட்டும் கவர்ந்து மாற்றுப் பதிப்பொன்றை வெளியிடத் தூண்டுமானால் அதற்குத் தக்க காரணம் இருக்கவேண்டும். தூண்டப்பட்ட மனங்களும் எளியவை அல்ல; துய்ப்புக்கு மேற்பட்டெழும் துடிப்புக்கொண்டவை; படைப்பாற்றல் உடையவை. தம் கவித்துவ வெளியீட்டிற்குப் பிறர் ஒருவர் படைப்பைத் தூண்டுகோலாகக் கொள்ளவேண்டுமானால் - திறம் சான்ற இவர்களைச் செயற்படத் தூண்டும் ஆற்றல் அந்த மூலங்களுக்கு இருக்கவேண்டும். அந்த மூலம் இவர்களைக் கவர்ந்ததற்கும் எழுதத் தூண்டியதற்கும் ஒரு காரணமும் நோக்கமும் இருக்கவேண்டும். அவ்வகையில் சிலப்பதிகாரம் புரட்சிக் கவிஞரைக் கவர்ந்த காரணம் என்ன? அதை இவர் மீண்டும் பாடியதன் நோக்கம் என்ன? இவை சிந்திக்க வேண்டியவை.

தமிழிலக்கியம் கற்றோரின் மனங்கவர்ந்த நூல் பட்டியலில் உறுதியாக இடம்பெறும் நூல்களில் ஒன்று சிலம்பு. எனவே அது புரட்சிக் கவிஞரின் கவனத்தைக் கவர்ந்ததில் வியப்பு இல்லை. ஆனாலும் தானும் அதைப் பாட எண்ணியது ஏன்?

**சிலப்பதிகாரப் பெருநூல் எனை அழைத்துத்**

**தனித்தமிழில் சிலபாட்டால் அடிகள் உள்ளம்**

**கலப்பற்ற பசுப்பாலே யாக மக்கள்**

**கவிந்துண்ணத் தருக எனச் சொன்னதாலே**

**சொலப்புகுந்தேன் என்தமிழர் இருந்து கேட்பார்**

**தூயதமிழ்ச் சுவைகண்டு வாழ்வார் நன்றே (பா.9)**

என்கிறார். தனித்தமிழில் சில பாட்டால், அடிகள் உள்ளம் கலப்பற்ற பசுவின் பாலேயாக, மக்கள் கவிந்துண்ண, தூய தமிழ்ச் சுவைகண்டு' என்ற தொடர்கள் கவனத்திற்குரியவை.

பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்த பாரதிதாசனாரின் திராவிடப் பற்றும் தமிழர்பாற் காதலும் ஆரிய வெறுப்பும் - சரியோ தவறோ, நாம் உடன்படுகிறோமோ இல்லையோ உலகறிந்தவை, ஆரியன் வரவால் தமிழரின் நாகரிகம் கலப்புற்றுக் கெட்டுத் தாழ்வடைந்தது என்பது அவர் கருத்து. அந்தக் கலப்பை அவர் சிலம்பிலேயே கண்டிருப்பார் போலத் தெரிகிறது. கண்ணகியின் பண்பு அவரைக் கவர்ந்திருக்கிறது; அவள் வாழ்வும் முடிவும் அவரை இறும்பூது கொள்ளச் செய்திருக்கிறது. அனால் அவள் வாழ்க்கை சிலம்பில் புனையப்பட்ட விதத்தில், சில இடங்கள் அவருக்கு உடன்பாடாக இல்லை. அதன் கதைப்பின்னல்புனைவு தமிழ்த்தன்மையை முழுமையாகப் பெறவில்லை. எனவே தம் மனங்கவர்ந்த கருப்பொருளைத் தாம் விரும்பிய விதத்தில் புனைய விரும்பியே இந் நூலை இயற்றியுள்ளார்.

அங்ஙனம் புனைகையில் நல்ல படைப்பாளர் எவரும் செய்வதுபோல் தம் காலச் சூழலுக்குப் பொருத்தமான சில சிந்தனைகளையும் இடைமிடைந்து பாடியுள்ளார். இத்தகு முயற்சிகள் உலகில் புதியன அல்ல; பலராலும் மேற்கொள்ளப்பட்டவையே. அவ்வகையில் அவர் செய்த மாற்றங்களில்தான் ஆசிரியரின் படைப்புத்திறனும் தனித்தன்மையும் வெளியாகின்றன.

**வழி நூல்களில் தனித்தன்மை :**

மொழிபெயர்ப்புக்களும், தழுவல்களும் படைப்பிலக்கியங்களுக்கு நிகரான மதிப்பைப் பெறுவதில்லை. படைப்பிலக்கியங்களே தனித்தன்மை உடையவை என்றும், தழுவல்கள் பிறர் கைவண்ணத்தில் மெருகேற்றும் பணி மட்டுமே செய்வன என்றும் கருதப்படுகிறன. அனால் இங்கே நாம் பார்க்க வேண்டிய சரியான கோணம் ஒன்றுண்டு, அதன் வழியே பார்த்தால் தழுவல்களும் தனித்தன்மையுடையனவே என்பது புரியும்.

மூலநூல்களுக்கும், தழுவல்களுக்கும் இடையே உள்ள உறவு காரண காரிய உறவாக இருக்குமானால் அங்கே காரணம் மட்டுமே சிறப்புப் பெறும். ஏனெனில் காரணத்தின் இயல்பான, தவிர்க்க முடியாத விளைவு காரியம். காரணம் இருந்தால் காரியம் கண்டிப்பாகத் தொடரும். விசையை அழுத்தினால் விளக்கு எரியும். மின்னோட்டமே இரண்டுக்கும் அடிப்படை. மின்னோட்டம் விளைவிக்கும் விசையை யார் அழுத்தினாலும் விளக்கெரியும். ஆனால் மூலநூல் - தழுவல் நூல் உறவு இத்தகையது அன்று. மூல நூலுடன் தொடர்பு கொள்ளும் எல்லோருமே தழுவல் நூல் படைப்பதில்லை. வால்மீகி இராமாயணத்தை அறிய நேர்ந்த, படித்த தமிழர் பலராகலாம். ஆனால் தமிழில் எழுதியவர், எழுதிப் பெயரும் பெற்றவர் கம்பரே. ஹோமரது காப்பியத்தைச் சுவைத்தவர் பலர். அனால் ஜாய்சின் கைகள் மட்டுமே

இயங்கி 'யுலிசிஸ் 'எழுதின. பைபிளைப் படித்தவர் எத்தனை போர்? சுவர்க்க நீக்கமும் மீட்சியும் எழுதத் தோன்றியதும், முடிந்ததும் மில்டனுக்கு மட்டுந்தானே?

தழுவல் நூல் எழுகையில் அதில் அந்தப் படைப்பாளரின் முத்திரை பதிந்திருக்கும். ஒருவகையில் நோக்கினால் வாழ்வின் பிரதிபலிப்பான இலக்கியம் படைக்கும்போது, வாழ்வினால் பாதிக்கப்பட்டு எழுதும் தூண்டுதலைப் பெறுகிறான் ஒரு படைப்பாளன். அதே விதமான பாதிப்பையும் தூண்டுதலையும் வாழ்வினிடமிருந்து பெறுதற்குப் பதிலாக வாழ்வின் பிரதிபலிப்பான இலக்கியத்தினின்றும் பெறுகிறான் தழுவல் நூலாசிரியன். வாழ்வின் தூண்டலால் எழுவது மூல இலக்கியம், இலக்கியத்தின் தூண்டுதலால் எழுவது தழுவல் இலக்கியம்.

அவ்வகையில் சிலப்பதிகாரத்தின் அடிக்கருத்தான கண்ணகியின் வாழ்வு இளங்கோவால் பின்னப்பட்ட முறைக்கும் பாவேந்தரால் பின்னப்பட்ட முறைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் இருவருக்கும் இடையே நிலவும் கால வேறுபாடு, சமூகச் சிந்தனை வேறுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் விளக்கப்படுதற்குரியன.

**கண்ணகி புரட்சிக் காப்பியம் - தனித்தன்மைகள் :**

பாரதிதாசன் கைச்சிலம்பு, இளங்கோவின் கைச்சிலம்பினின்றும் எண்ணற்ற வகைகளில் மாறுபடுகிறது. முதல் மாற்றம் முதன்மையான மாற்றம் தமிழ்ப்பண்பாடாகப் பாரதிதாசன் கருதுவனவற்றிற்கு மாறான சிலம்புச் சித்திரங்களில் செய்யப்படுகிறது. கண்ணகி திருமணத்தைக் களவு வழிப்பட்ட காதல் மணமாசக் காட்டும் முயற்சிகள் உண்டு. எனினும் அகச்சான்றுகள் அது பெரியோரால் ஏற்பாடு செய்யப்பட்ட மணம் எனவே சுட்டும். பாரதிதாசனுக்கு இதில் உடன்பாடு இல்லை. களவு வழிவந்த மணமே தமிழர் பண்பாடு என அவர் கருதுகிறார். இதுவே சரியான கருத்தும்கூட ; ஆரியர் மணமுறைகள் எட்டனுள் ஒன்றான காந்தருவம் தமிழரின் களவுக்கு ஒப்பானது என்று தொல்காப்பியம் கூறினாலும் வடவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை, எட்டில் நான்கே. அந்த நான்கனுள் காந்தருவம் இடம்பெறவில்லை. அத்துடன், சிலரால் இழிவாகவும்கூடக் கருதப்பட்டது.

மற்றவரிடம் காணப்படாமல் தம்மிடம் மட்டுமே காணப்படுவதைத்தானே ஒருவர் தம் பண்பாடு எனப் பிரித்து உணர்த்த முடியும்"? எனவே களவு மணமே தமிழர் பண்பாடு என்ற பாவேந்தரின் கருத்து வரலாற்றடிப்படையில் சரியான ஒன்று. அவ்வகையில் கண்ணகி கதையில் அவர் செய்யும் முதல் மாற்றம் ஏற்பாட்டுத் திருமண எதிர்ப்பு. களவு மணமாகக் கண்ணகி மணத்தை மாற்றிக் சாட்டுவதை விட, ஏற்பாட்டு மணம் வாழ்விற்குப் பொருந்தா மணம் எனக் காட்டுவதே ஆசிரியர்க்கு உவப்பான செயலாகிறது. புரட்சிக் கவிஞர் அல்லவா? உடன்பாட்டில் கூறுதலில் உப்புச்சப்பு

இராது; புரட்சியே மனத்தில் உறைக்கும் என எண்ணுகிறார். எனவே பெற்றோர் மண ஏற்பாடு செய்ய, ஊர்ப் பெரியோர் கடிந்துரைப்பதாகக் காட்டுகிறார்.

**செந்தமிழ் நான்மறை முறையும் செத்ததேயோ?**

**செம்மலுளம் மங்கையுளம் ஒன்று பட்டால்**

**அந்நிலைதான் மணமென்பார் அதனை விட்டே**

**அப்பன்மார் ஒப்புவதால் ஆவ தென்ன?**

**தந்தைதரப் படும்பொருளா மங்கை நல்லாள்?**

**தகுவதன்றே தகுவதன்றே என்று சொன்னார். (பா..77)**

இவ்வாறே நூல் முழுவதும் நோக்கினால்,

1. சிலம்பில் கூறப்பட்ட செய்திகளில் சில மாற்றம் பெறுகின்றன.

2. சிலம்பில் கூறப்படாத செய்திகள் சில புதிது புகுந்துள்ளன.

3. சிலம்பில் விரிக்கப்பட்டன தொகுத்தும், சுருக்கப்பட்டன விரித்தும் பேசப்படுகின்றன.
4. தம் காலச் சமூகச் சூழலுக்கேற்பச் சில கருத்துக்கள் நுழைக்குப்பட்டுள்ளன.

**மாற்றங்கள் :**

1. கண்ணகியைக் குறவர் கண்ட இடம், விதம், அவள் வரலாற்றைக் குட்டுவனும் இளங்கோ அடிகளும் அறிய நேர்ந்தமை ஆகிய பதிகச் செய்திகளிலேயே மாற்றம் உண்டு. கண்ணகி கணவனுடன் வானூர்தியில் செல்லவில்லை; இயல்பாக இறக்கிறாள். குறவர்கள் இறுதிச் சடங்குகளைச் செய்கிறார்கள். கண்ணகி பற்றி முதலில் குட்டுவனிடமும் பிறகு இளங்கோவிடமும் கூறுகிறார்கள். அதன்பின் சாத்தனார் கேட்க, இளங்கோவால் பாடப்பட்ட சிலப்பதிகாரம் தன்னை அழைத்துத் தனித்தமிழில் பாடுமாறு கேட்கத் தான் பாடியதாக முன்னுரை அமைக்கிறார்.

2. நூலினுட் செய்த மாற்றம் முன்னரே சுட்டியது போல் கண்ணகி திருமண ஏற்பாட்டில் தொடங்கித் தொடர்கிறது. கண்ணகியும் கோவலனும் யானை மேலேறி, நகர்வலம் வருகின்றனர். 'யாண்டுசில கழிந்தன, இற்பெருங்கிழமையின்' என இளங்கோ பேசிய இல்லற வாழ்வும் விரிவாகப் பேசப்படுகிறது. கண்ணகி மாமியார் மெச்சிய மருமகளாக விருந்தோம்பி இல்வாழ்வு பேணுகிறாள்.

3. மாதவியின் மடல்கள் இரண்டில் பின்னதன் செய்தி மாறுபடுகிறது. அம்மடலைக் கோவலன் தன் பெற்றோர்க்குப் பொருந்துமென அனுப்பியதோ,

'தன்தீதிலள் ' என மாதவிக்கு இரங்கியதோ இடம் பெறவில்லை. மறுமடல் கண்ட அவன் மனநிலை, செயல் ஆகியன பற்றிப் பேச்சே இல்லை.

4. அடைக்கலம் புகுந்த மாதரி வீட்டில் 'கையறி மடைமையின் காதலற்காக்கி'யதாய் இளங்கோ கூறுவார். ஆனால், 'மாதரி இவை செயற்கரிய என முடித்த'தாக இவர் பாடுகிறார்.

5. தேவியின் சிலம்பை அவள் பணிமகள் வஞ்சி திருடிக் காதலனான பொற்கொல்லனிடம் தந்ததாகப் பாவேந்தரின் கதை சொல்கிறது.

6. பாண்டிமாதேவி ஊடியதன் காரணம் பாண்டியன் அவையில் பாடிய பாடலாகிறது.

7. கோவலன் இறப்புப் பற்றிக் கண்ணகிக்குத் தெரிவிப்பவள் மாதரியாகிறாள்.

8. ஊர் எரியுண்டது பொதுமக்களின் செயல் என்று எண்ணுமாறு புனைவுரை அமைகிறது.

9. கண்ணகி தீக்கடவுளை ஏவவோ, 'தீத்திறத்தார் பக்கமே சேர்க'வென்று பணிக்கவோ இல்லை.

10. கணவனை இழந்த விரக்தியில் தன் நகிலை எறிவதாக, 'என் கண்ணாளன் வலது கையால் முதல் ஏந்தும் இடது கொங்கை விம்மல் ஏன் என அதனைப் பிய்த்தெறிந்தாள்" என்று பாடுகிறார்.

11. மதுராபதித் தெய்வம் பின் செல்லவில்லை.

12. நால்வகை வருண பூதங்கள் வரவேயில்லை.

13. தேவந்தி பூசாரிணியாகக் கோவிலில் ஆசுவில்லை.

14. தெய்வமேறப்பெற்று யாரும் பழம்பிறப்புப் புதுப்பிறப்புக் கதைகள் கூறவில்லை.

இவையெல்லாம் பாவேந்தர் கைச்சிலம்பில் நாம் காணும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள்.

**புதிய செய்திகள்:**

கண்ணகி விருந்தோம்பிய ஒருநாளில் முக்காடிட்டு முகமறைத்து யாரென்று அறியவிடாமல் தடுத்து அவள் மாமியே வந்து கண்ணகியின் விருந்தோம்பற்

சிறப்பையும் முதியோர்ப் பேணும் பண்பையும் சோதித்தறிந்து மகிழ்ந்து சமையல் திறத்தைப் பாராட்டிப் பரிசுகள் அளித்துச் செல்கிறாள்.

மாதவியுடன் வாழும் நாளில் கோவலன் ஒருநாள் பலகணி வழியே எட்டிப் பார்த்துத் தெருவில் தனியே செல்லும் தன்னொத்த வயதினனைக் கண்டு 'என்போன்றான் துணைவியின்றி எவ்வாறு தனித்தும் உயிர் வாழ்ந்தான் " என்று கேட்கிறான்.

சிலம்பின் கடலாடு "காதையில் விவரிக்கப்படும் புகார்நகர்ப் புனைவில் இடம்பெறாத ஆடு, கோழிச் சண்டைகள் கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் விவரிக்கப்படுகின்றன.

காவலன் பேரூர் கண்டு கோவலன் மகிழ்வெய்திய திறம் சிலம்பில் கூறப்படாத வகையில் வினா-விடைப் பாங்கிலமைந்து ஊர் பற்றிக் கோவலன் மக்களிடம் கேட்டறிவதும் அவர்கள் கேள்விக்கு விடையாகத் தன் வரலாறு கூறுவதுமாகப் புதிய செய்திகள் அமைகின்றன.

கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாகத் தருவதும், கவுந்தியல்ல, கோவலன்.

கண்ணகியின் “கற்கோட்டம் எழுகையில் குட்டுவனும் கோதையும் அதைச் சென்று காணமுற்படும் காட்சியும், சிற்பி-சிற்பி மனைவி உரையாடலும் காதல் பெரிதா, கலை பெரிதா எனக் கண்டறிவதும் 2, 3 இயல்களாக நீளும் புதிய செய்திகள்.

**தொகுப்பு விரிப்புகள்:**

இவ்வகையில் குறிப்பிடத் தகுந்தது கானல்வரி. சிலம்பின் கானல் வரிப் பாடல்களில் இரண்டு மட்டுமே பேசப்பட்டு எஞ்சியவை விடப்படுகின்றன. பிணக்குக்குக் காரணமான பாடல்களில் இரண்டே பேசப்பட்டாலும் மனப்பிணக்கு ஏற்பட்ட விதமும் விளைவும் விரிவாகப் பேசப்படுகின்றன.

கனாத்திறம் உரைத்த காதையில் தேவந்தியின் அறிவுரை கேட்ட இளங்கோவின் கண்ணகி பீடன்று' எனச் சுருங்கக் கூறி அமைவாள். ஆனால் பாவேந்தரின் கண்ணகியோ மிக விரிவாக விளக்கி மறுத்துரைப்பாள்.

சிலம்பில் விரிவாக இடம்பெறும் மாங்காட்டு மறையோனின் மதுரைவழிப் புனைவு மிகச் சுருக்கிக் கூறுப்படுகிறது. காடுகாண், நாடுகாண் காதைச் செய்திகள் புறக்கணிக்கப்படுகின்றன.

அடைக்கலக் காதைக் கோவலன் பெருமைகள் இடம்பெறவேயில்லை. தேவந்தி கதை அறவே விடப்படுகிறது. ஆனால் அரசியின் சிலம்பைத் திருடிய வஞ்சி-பொற்கொல்லனின் காதல் கதையும், களவை அவர்கள் மறைத்த திறமும் விரிவாகப் பேசப்படுகின்றன.

'நற்றிறம்படராக' கொற்கை வேந்தே யாமுடைச் சிலம்பு மணியுடை. அரியே' என இரட்டை வரியில் இடம்பெற்ற கண்ணகியின் வழக்குரை இயல் முழுவதும் நீள்கிறது.

**மாற்ற நோக்கம்:**

முற்குறித்த மாற்றங்கள் செய்து பாவேந்தர் கண்ணகி புரட்சிக் காப்பியம் படைக்க சில காரணங்கள் உண்டு.

தனித்தமிழில் - மொழியில் மட்டுமல்ல பண்பாட்டுத் திறத்திலும் தர வேண்டும் என்பது முதற்காரணம். தமிழர் பண்பாட்டுக்கு ஒவ்வாதவை, உள்ளடங்காதவை எனக் கருதிய இடங்களையெல்லாம் மாற்றிக் கொண்டார். தமிழ்ப் பண்பாட்டிற்கு உரியவை எனக் கருதிய காட்சிகளைப் புதிதாகச் சேர்த்துக் கொண்டார். விரித்தும் தொகுத்தும் கூறிய இடங்களில் இது தவிர்த்த வேறுசில காரணங்களும் உண்டு.

இளங்கோவின் படைப்பு நோக்கம் முடிகெழுவேந்தர் மூவர்க்கும் உரிய கதையைப் பாட்டுடைச் செய்யுள் வழியே கூறி மூன்று உண்மைகளை நிலைநாட்டுவது. எனவே, மூவர் நாடும் திறனும் போற்றப்பட்டன. இசை, நாட்டியக் கூறுகள் இணைக்கப்பட்டன; காப்பியத்திற்கே உரிய இயற்கைப் புனைவு, இன்பியற் புனைவு, அரசியற் புனைவு ஆகியவை விரிவாக இடம்பெற்றன. ஊழ் வலியுறுத்தப்பட்ட.து. இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் இயல்பாகச் சொல்லப்பட்டன. கண்ணகி தெய்வமானாள்.

ஆனால் பாவேந்தரின் படைப்பு நோக்கு, பகுத்தறிவுப் போக்கில், தமிழ்ப் பண்பாட்டின் உயர்வும், ஆரிய நாகரிகத் தாழ்வும் வெளியாகும் வகையில் நம்பகத்தன்மையுட.ன் கூடிய சுவையான கதைப்பின்னலை அமைத்துத் தம் காலச் சமூகச் சூழலுக்குப் பயன்படும் கருத்துக்களை வழங்குவது ஆகும். எனவேதான் இயற்கை இகந்த நிகழ்ச்சிகளை விட்டுவிடுகிறார். கால, இடப் புனைவுரைகளான காப்பியக் கூறுகளை ஒதுக்கிவிடுகிறார். நம்பகத் தன்மையும் சுவையும் ஏற்படும் வகையில் நிகழ்ச்சிகளைப் பொருத்தமுறவும், அடுக்கடுக்காகவும் புனைந்து தருகிறார்.

**பாவேந்தர் கைச்சிலம்பு :**

இந்த மாற்றங்கள், சேர்ப்புக்கள், விரிப்புத் தொகுப்புக்களுக்கும் அப்பாற்பட்டுப் பாவேந்தர் கைவண்ணம் அவர் ஆளுமையைப் புறம் தோற்றியவாறு புலனாகும் இடங்களும் இந்நூலில் உண்டு. அவரது தமிழ்ப்பற்று, அரிய வெறுப்பு, புலச்சுவைப் புனைவுரைகள், சமகாலச் சமூகச் சித்திரிப்பு அகியன அவ்வகையில் குறிப்பிடத்தகுந்தவை.

**தமிழ்ப் பற்று :**

தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பும் தமிழர் வாழ்வும் தரணியிலேயே உயர்ந்தவை என்ற தீவிரமான எண்ணம் உடையவர் பாவேந்தர். உவமைகள் கூறும் போது கூடத் தமிழர்க்குரிய செயல்களும் பொருள்களும் சிறப்பாக்கி உவமிக்கப்படக் காணலாம். தமிழரின் செயல்களை உயர்த்தியே கூறுவார். அவ்வாறு பேசித் தம் தமிழ்ப் பற்றை வெளியிடும் இடங்கள் இந்நூலில் பலவுண்டு.

கண்ணகி வீட்டில் விருந்துண்ட பின்னர் ஓய்வெடுத்த நிலையைப் பாடுகையில், "வளம்பேசிச் செந்தமிழ்நால் இன்பம் துய்த்து மாய்பட்டு மெத்தையில்" சாய்ந்திருந்ததாகக் கூறுகிறார். கண்ணகியின் பிரிவுத் துயரைப் பேசுகையில், "தன் பாற்பொங்கலை இழந்த உழவன் போலவும், "செந்தமிழ்தான் மாப்புலவர் இழப்பின் உயர்வு இழத்தல் போலவும்", வருந்தியதாகப் பாடுமிடத்தில் தமிழர் திருநாளும், தமிழ்ப் புலவோரும் பேசப்படக் காணலாம்.

"இலம்பாடி வந்தோர்க்கே இல்லை என்னார், இனம்பாடும் புலவர்க்கே எல்லாம் என்போர்" எனத் தமிழரைப் போற்றுகிறார். "சிறந்தொருவற்கொருத்தி ஒருத்திக்கொருத்தன் என வாழும் தென்னாட்டுத் தமிழர் யாரும்" எனத் தமிழர் பண்பாடு பேசுவார்.

மதுரை எரியுண்டபோது தப்பிக்க ஓடியவர்கள், "செந்தமிழர் சேருமிடம் காடோ மேடோ நன்றேறும் என்றார்கள் போலும்", சென்றதாய்ப் பாடுகிறார். கண்ணகிக்குச் சிலைவடிக்கக் கல்தேரும் போது, "தெற்குமலைக் கல்லைப் போல் முதிர்ச்சியில்லை வடக்குமலையிற் காணும் கல்லில்; ஆனால் தெற்குமலை நம்முடைமை அதனைக் காப்போர் செந்தமிழர்" என்பதனால் வடக்கே இமயத்திற் கல்லெடுக்க முடிவு செய்ததாகக் கூறுவார். அத்துடன்,

**ஆங்கிருக்கும் தமிழ்ச் சான்றோர் ஈங்குவந்தார்**

**ஆரியர்கள் தமிழ்பழித்தார் என்று சொன்னார்**

**தீங்குள்ளார் கனகனொடு விசயன் என்றார்**

**செந்தமிழர் திறங்காட்டா திருந்தோ மானால்**

**அங்கிருக்கும் தமிழ்ச்சான்றோர் நெஞ்சம் என்னாம்?**

**அனைத்துலகில் தமிழன்சிர் என்னாம் என்றான்.**

**யாங்குள்ளான் தமிழ்பழித்தான் ஆங்குச் சென்றே**

**அழித்துயர்க என்றார் அங்கிருந்தோர் யாரும் (பா...203)**

என்று தமிழையும் தமிழரையும் பழித்தோரை எதிர்க்கும் முனைப்புடனே குட்டுவனின் வடதிசைப் படையெடுப்பு நிகழ்ந்ததை உணர்ச்சியுடன் பாடுவார். கல் சுமந்து கனகவிசயார் வருகையில், "அங்கங்கு நின்றுவரும் ஊர்வலத்தில் ஆரியம் தோற்றது தமிழே வென்றதென்பார்" எனப் பாடுகிறார். குட்டுவன் வடக்கில் வாழும் பைந்தமிழ்ப் பெரியோரை வரவேற்றுப் பேசுகையில், "தமிழ் நெறியின் பெற்றி கூறிப் பிறர் போக்கின் சிறுமையினை எடுத்துக்காட்டி வீசுதலை விழும்போதும் தமிழர் நாக்கு 'வெல்க தமிழ்' என வேண்டும்" என உணர்த்தியதாய்ப் பாடுவது குட்டுவன் வாயிலாக வெளிவரும் கவிஞரின் கூற்றே அன்றோ?

இளங்கோ வேண்மாள் தன் தோழியை விளிக்கையில் கூட 'யார் வந்து கேட்டாலும் இல்லை என்னா இசைவந்த குடிவந்த பெண்ணே" எனத் தமிழ்க்குடியின் ஈகையுணர்வு போற்றப்படும். "செந்தமிழின் உண்மை நிலை எந்த நாளும் சிறிதேனும் மாறாது நினைவில் வைக்க" (பா.240) என்பார். "திருடித்தான் வாழ்ந்திடுதல் வேண்டும் என்றால் செத்துத்தான் புகழ் காப்பேன் என்று சொல்வோன் இருள் தீர்ந்த பழந்தமிழன்" (பா..242) என்று தமிழரின் மானவுணர்வை எடுத்துரைப்பார். "அந்தமிழ் நான்மறை கண்டு மறை கண்டீர்கள்" (பா.23) என்று வேதங்களுக்கும் வழி வகுத்தது தமிழென்பார்.

**ஆரிய வெறுப்பு :**

இந்த ஆழ்ந்த தமிழ்ப்பற்றின் மறுபுறம் அவர்க்கிருந்த ஆரிய வெறுப்பு இதனினும் அதிகமாகவும், அழுத்தமாகவும் வெளியாகிறது. கண்ணகி திருமணத்தை நடத்தி வைக்க வந்திருந்த ஆரியனை நகைப்பிற்கும் எள்ளலுக்கும் உரிய பாத்திரமாக்கித் தொல்காப்பி மெய்ப்பாட்டியலில் நகைக்கு நிலைக்களனாகக் கூறப்படும். ஆரியர் பேசுந் தமிழில் அவனைப் பேசவைத்துத் தன் வெறுப்பிற்கு வடிகால் தேடிக்கொள்கிறார். ஆரியரைச் சுட்டுமிடமெல்லாம் அவச்சொல் பெய்கிறார்.

**'பிழைபாட்டு வடவர்கள்' (பா.47)**

**'புண்பட்டுச் சாவ அஞ்சும் ஆரியர்கள் (பா.69)**

**கோணல் மனப்பார்ப்பனத்தி: (பா. 85)**

**ஒழுக்கமிலாப் பார்ப்பனர்"**

**ஓர் பார்ப்பு: (பா.9)**

**அறங்காணாப் பார்ப்பனர்கள்' (பா./09)**

**'அறிதுச்சிக் குடுமியினர் (பா..179)**

என்றெல்லாம் பழித்துரைக்கிறார்.

**புலச்சுவைப் புனைவுரைகள் :**

காப்பியத்தில் இடம்பெறும் புனைவுரை மரபைப் பின்பற்றாவிடினும் இயற்கையில் ஈடுபாடும் புலன்களின் பொறிவழித் துய்ப்பில் ஆர்வமும் கொண்டவராதவின் ஐம்புலன்கள் ஆரும் இன்பங்களைக் - குறிப்பாக நாவின் சுவைப்பொருள்களை - நிறைய புனைந்துரைக்கிறார். சிலம்பில் இல்லாத ஒரு தனித்தன்மை இது. அறம் கூற வாய்ப்புக்களைத் தேடிக்கொண்டு காட்சிகளை அதற்கேற்ப அமைக்கும் டாக்டர் மு.வ. வின் நாவல்களில் போலவே நாவின் சுவையை விரித்துப் பாடும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு வயிறார உண்டு மகிழும் காட்சிகளைப் புனைகிறார் பாவேந்தர்.

குறிஞ்சிப்பாட்டில் 99 பூக்களின் பெயர்களைக் கபிலர் கூறுவது போல, 'முக்கூடற் பள்ளு'வில் பள்ளர், பள்ளத்தியர் ஆகியோர் பெயரும் நெல்வகைகளின் பெயரும் கூறுப்படுவது போலக் கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் இயல் முழுவதும் தூயதமிழ்ப் பெயர்கள் நிறைந்துள்ளன. கோவலன்-கண்ணகி மணவீட்டினுள் நுழையும் தலைவன் தலைவியரின் பெயர்களே அவ்வாறு அடுக்கப்பட்டுள்ளன. இயல்கள் ஒன்பதும் பத்தும் எழுபத்திரண்டும் விருந்துண்ட கூட்டத்தைப் புனைந்துரைப்பவை.

**வயிறொன்று தனிப்பெட்டி யாயிருந்தால்**

**வந்த எலாம் வரவுவைத்துத் தோனில் தூக்கி**

**உயிரச்சம் இல்லாமல் செல்லலாமென்**

**அரைத்தவனை மற்றொருவன் நோக்கி அண்ணே**

**துயார் என்ப தொன்றில்லை என்றிருந்தால்**

**தொண்ணூறு வடை ஒன்றும் பண்ணா என்றான்**

**ஆயல் நின்றான் கைப்பற்றி நின்றான் ஓர்ஆள்**

**அயலானைத் தூக்கிவிட்டு வீழ்ந்தான் ஓர்ஆள் (பா. 215)**

என்றும்,

**வடையினிலே நெய்யொழுகிற் றென்றான் திண்ணன்**

**நெய்யினிலே வடையொழுகிற் றென்றான் வேங்கை**

**குடத்தளவு முக்கனியா என்றான் முத்தன்**

**குண்டான் தேனா அதற்கே என்றான் எட்டி (பா. 25)**

**இந்நாட்டில் எவன் வீட்டில் புத்துருக்கில்**

**இலைசோறு கறியெல்லாம் மிதக்கும் என்றார் (பா..29)**

என்றும் விருந்து புனையப்படுகிறது.

நூலின் உள்ளடக்கம் ஆசிரியனின் உள்ள அடக்கமாக அமைவதுண்டு. அவன் எண்ணங்கள் காட்டும் கண்ணாடியாய், அகம் காட்டும் முகமாய், ஆளுமையை உணர்த்தும் ஆய்வு நூலாய் அமைவதுண்டு. பாரதிதாசனின் வாழ்வில் அவர் இயற்கையையும், அழகையும் போற்றியதற்கு இணையாகச் சுவையான உணவையும் போற்றியவர். சுவையான உணவுப்பட்டியலும் சுவைத்த திறப்பட்டியலும் இவ்வுண்மையை உணர்த்துவன.

**சமகாலச் சமூக ஆடி :**

ஆசிரியனை மட்டுமின்றி அவர் வாழும் காலமும் காட்டும் கண்ணாடி இலக்கியம். என்றோ நடந்த கதை, என்றோ எழுந்த நூல், இன்று அதைத் தழுவி எழுதுகையில் இக்காலச் சூழலின் செல்வாக்குத் தவிர்க்க முடியாதது. அரங்கேற்றம் முடிந்து அகம் நோக்கிச் சொல்கிறாள் மாதவி.

**இடம் தொடரச் செல்கின்ற மாதவியி னோடே**

**எலாரும் செல்லலுற்றார் ஆயிரங்கண் அன்னாள் (பா. 4)**

**அவள் முதுகின் பின்னிருந்த ஒரு ஆள் கழுத்தை**

**அணுகி அவள் மலர் முகத்தை உற்றுப் பார்க்கின்றான்**

**துவளுகின்ற பின்னலினைத் தொடுகின்றான் ஒருவன்**

**சுடர்ப்பொன்னோ மின்னலோ என்றுடலை ஒருவன்**

**கவலையுடன் பார்த்தபடி நடக்கின்றான் மற் றும்**

**கருத்துறுத்தும் காதலால் வஞ்சியவள் முதுகை**

**அவுக்கென்று தொட்டுநக்கிச் சுவைக்கின்றான் ஒருவன்**

**அவள் ஆடை மேற்பறக்கச் சேலையென்றான் ஒருவன் (பா. 47)**

**நகரமக்கள் நெருக்கத்தில் மாதவிக்கு**

**நலிவுவரா திருக்கவே பல்லோர் சேர்ந்து**

**தகுநெடுங்கை கோத்துமா வட்டம் ஆக்கித்**

**தையலினை நடுவினிலே நடத்திச் சென்றார் (பா. 75)**

என்ற காட்சி இன்றைய திரைப்பட நடிகைகள் தெருவில் சென்றால் நிகழும் காட்சியின் புனைவு அன்றோ?

**.. அத்தகையீர் கடல்சூழ்ந்த இந்நிலத்தை**

**அந்தமிழ் நாடாக்குவதாம் இந்தக்கொள்கை**

**எத்தகுதி எவருடையார் இதை எதிர்க்க (பா...207)**

என்ற வரிகளில் ஆசிரியர் சார்ந்திருந்த இயக்கத்தின் 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற கொள்கையின் சாயல் ஒளிந்துள்ளதோ என்ற எண்ணம் எழுகிறது.

**இறந்தானுக் குதவிஎனல் இருந்த போதில்**

**இருந்த பொதுக் குறைநீக்கல் ஆகும்; அன்றி**

**இறந்தானின் உடலுக்குத் தேரும் தாரும்**

**ஏற்பாடு செய்வதும் வேறிடத்தில்**

**சிறந்தான் என்றென்னனுவதும் அங்கே அன்னோன்**

**சீரடைய இங்குள்ள பார்ப்பனர்க்கு**

**முறங்காணும் அரிசிமுதல் செருப்பீறாக**

**மூடிதாழ்த்துக் கொடுப்பதுவும் மடமை என்றான் (பா...200)**

என்ற வரிகளில் இறந்தவர்க்குச் சடங்குகள் செய்யும் மூடதம்பிக்கை சாடப்படுகிறது. வடநாட்டின் மீது படையெடுத்துப் புறப்பட்ட செங்குட்டுவன் நாளும் கோளும் பார்த்து வாளும் வில்லும் ஏந்தவில்லை; கோவில்களின் சின்னங்களை அணியவில்லை. வீரத்தை மட்டுமே நம்பிப் புறப்படுகிறான். கண்ணகியைப் போற்றியோரும் அவளை வரமளிக்கும் தெய்வமாய்க் கருதவில்லை.

**இன்றொன்றை நாமளித்தால் நாளைக் கொன்றை**

**எமக்களிப்பாள் எனும் மடமை எழவே இல்லை (பா...266)**

என்று பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்த மனம் எழுதுகிறது.

இங்ஙனம் கண்ணகியின் கதையைக் கையாண்ட திறத்தில் மட்டுமல்ல, கதை கூறும் கலையைக் கையாண்ட திறத்திலும் பாவேந்தரின் தனித்தன்மை வெளியாகக் கவித்துவம் மிளிரக் காணலாம்.

**புனைதிறன் :**

புகாரைப் புனைகையில் பாரதிதாசன்,

**கள்மிகுக்கக் கட்டியதோர் நாளங்காடி,**

**கால்நடையாய்க் கண்டுவர ஓராண்டாகும்**

**இன்றேறும் சரக்குயரம் பொதிகைக் குன்றம்**

**இறக்குமதிச் சரக்கெல்லாம் யானைக் குன்றம்**

**பொன்வரவு செலவெழுதும் கணக்கர்க் கோலை**

**பொழுதெல்லாம் தந்தபனந் தோப்பே மொட்டை (பா.64)**

என்பதும், கண்ணகி கல்நாட்டு விழாவிற்குச் செய்த ஏற்பாடுகளை,

**செங்கதிரும் வேறுவழி செல்ல வேண்டும்**

**செல்லாக்கால் சோற்றுமலை இடிக்கும் மற்றும்**

**இங்குள்ள பெருங்குளத்து நீர் இறைத்தே**

**எம்மருங்கும் கரையெடுத் துத் தயிரைத் தேக்கித்**

**தங்கமலை மாடெல்லாம் தரும்பால் தேக்கத்**

**தடங்கடலை இடங்கேட்சு வேண்டு மன்றோ? (பா...256)**

என்பதும், அவர் கற்பனையின் திறமுணர்த்துவன. பொருளணி மட்டுமன்றிச் சொல்லணிகளும் சிறக்கப் பாடியுள்ளார். தான் யாரென்று கூறும் கண்ணகியின் கூற்றில்,

**'செஞ்சிலம்பே ஒன்றோடி இரண்டு கண்ணின்**

**முந்தீர் போய் நானிலமேற் செறியச் கண்டார்**

**அஞ்சுவன் _அறபார்த(து) எழு வகைத்தாய்**

**எட்டீகைத் தொண்டுவளர் திசைகள் பத்தும் (பா. 716)**

என எண்வரிசை இடம் பெறுகிறது. கோவலனின் வெட்டுண்ட உடல்மீது வீழ்ந்தழும் அவள் நிலை,

**முகம் காண்பான் அவன் காண முகங்காணாதாள்**

**மூகம் கண்டு முகம்கண்டு முகத்தை ஒற்றி**

**அகம் கண்ட துயர்ப்பெருக்கே கண்ணீராக**

**அசம் கண்டம் முகம் தோள்கள் தழுவிக்காவின்**

**நகம் கண்டு கால்கண்டு கைகள் கண்டு**

**நடுக்குற்று விரலாழி கண்டு வீ ழ்ந்தாள் (பா. 753)**

என்று சொற்பின்வருநிலை அணி அமையப் பாடப்படுகிறது. குட்டுவன் படை செல்லும் கோலம்,

**தனதனதன தனதனதன தத்தத் தத்தா**

**தனதனதன தனதனதன தத்தத் தத்தா**

என்ற சந்தத்தில்,

**வழிகுழிபெற நிலநெளிவுற எட்டுத் திக்கே**

**மலிபொடிஎழ னிசை இருள்பெற ஒட்டுப்பட்டே.**

**விழிஎரிதர மடமட என முற்பட்டுத் தோள்**

**விடுபடைஎறி படைதொடுபடை எட்டத்தொட்டே**

**ஒழிவதுபகை ஒழிவதுபகை தட்டுக் கெட்டே**

**உறுவதுபுகழ் எமதிறைஎன வெற்றிச் சொற்கே**

**மொழிஎனஜரு தமிழர்கள்படை முற்பட்டுத்தீ**

**முடுகியதென விரைவதுபட. வெற்புக் கற்கே**

என அமையுமிடம் ஓசையும் உணர்ச்சியும் ஒருங்கே சிறக்குமிடம்.

**சிதைந்த பரல்கள் :**

சீரான இச்சிலம்பிலும் சிதைந்த பரல்கள் சிலவுண்டு. குறிப்பிடத் தகுந்தவை இரண்டு இடங்கள். கொற்கை வேந்தே என்ற விளியிலேயே பாண்டிமாதேவியின் சிலம்பு முத்துப்பரலுடையது என்பதை உணர்த்தி யாமுடைச் சிலம்பு மணியுடைய அரியே என்பதில் தன் வாதம் உணர்த்திய சிலம்பின் கண்ணகி சொற்செட்டில் சுவைப்பெருக்கை ஊட்டியவள். பாவேந்தரின் கண்ணகி பாண்டியனுடன் நீள நடத்தும் உரையாடல் குறிப்புச் சுவை குன்றுமிடமாகிறது.

அதேபோல் மாதவியின் 2-அவது கடிதம் இலக்கியச் சிறப்பு வாய்ந்தது. அடிகள் முன்னர் யானடி, வீழ்ந்தேன்; வடியாக் கிளவி மனக் கொளல் வேண்டும்' எனத் தொடங்கும் மடலில் மாதவியின் துயரும் கோவலனின் குற்றமும், கணிகை என்பதால் தான் தாழ்வுற, குலமகள் என்பதால் கண்ணகி வாழ்வுற்றதை உணர்த்தும் குறிப்பும் நிறைந்து கோவலன் தன் பெற்றோர்க்கு அதை அனுப்புமளவு நாகரிக மொழிகள் வாய்க்கப்பெற்றிருந்தது. மாதவிபால் மனமிரங்கினாலும் செயற்பாலதறியாது மயங்கும் கோவலன் மனநிலை காப்பியத்தின் அவலச்சுவையை மிகுக்கும் இடம் அது. ஆனால் அது பாவேந்தர் கைச்சிலம்பில் முதன்மை பெறாமல் புறக்கணிக்கப்படுகிறது. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றமே விசும்பின் மதிக்கண் மறுப்போல் உணரப்படும். திறமான கவிஞரின் பாட்டென்பதாலேயே இக்குற்றங்கள் தெரிய வருகின்றன.

தனித்தன்மை சான்ற இத்தழுவல் நூல் மரபுமரத்தின் விழுதாக அமையவில்லை; வேரைத் தகர்த்து வேறொன்றை நட்ட செயலாகவும் அமையவில்லை. ஒட்டுச்செடியாகப் பழமையும் புதுமையும் மரபும் மாற்றமும் கலந்து சுவை தருகிறது.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினா

1. கண்ணகி புரட்சிக் காப்பியம் – அறிமுகம் செய்க
2. கண்ணகி புரட்சிக் காப்பியத்தின் தனித்தன்மைகளை விவரி
3. கண்ணகி புரட்சிக் காப்பியம் வழி பாவேந்தரின் மொழிப்பற்றை விவரிக்க
4. கண்ணகி புரட்சிக் காப்பியம் காட்டும் தமிழர் வாழ்வியல் செய்திகளைக் கூறுக
5. கண்ணகி பாத்திரப்படைப்பை பாரதிதாசன் வழி நின்று விளக்குக
6. கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் தமிழின உணர்வு மிகுந்து காணப்படுவதை விவரி

## நெடுவினா

1. கண்ணகி புரட்சிக் காப்பியம் சமகாலச் சிந்தனைகளை வெளிப்படுத்துகிறது என்பதை நிறுவுக

2. கண்ணகி புரட்சிக் காப்பியத்தின் தனிச்சிறப்புகளை ஆராய்க

3. கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் பெண் கதாப்பாத்திரங்களை ஆராய்க

4. இளங்கோவின் கண்ணகியும் பாவேந்தரின் கண்ணகியும் வேறுபடும் இடங்களை எடுத்துரைக்க

5. பாவேந்தரின் படைப்புத்திறனை கண்ணகி புரட்சிக் காப்பியத்தின் வழி நிறுவுக

6. கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் புகார்க் காண்டச் செய்திகளைத் தொகுத்துரைக்க

7. கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் மதுரைக் காண்டச் செய்திகளைத் தொகுத்துரைக்க

8. கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் வஞ்சிக் காண்டச் செய்திகளைத் தொகுத்துரைக்க

# பூங்கொடி

இருபதாம் நூற்றாண்டுக் காப்பியங்களுள் **பூங்கொடிக்** காப்பியத்திற்கு ஒரு தனி இடமுண்டு. இந்தக் காப்பியம் தமிழ், தமிழ் உணர்வு, தமிழ்ப் பண்பாடு, தமிழர் முதலியவற்றை முன்னிலைப்படுத்துகிறது. இவ்வகையில் இந்தக் காப்பியம் தனித்தன்மை உடையதாக உள்ளது. மேலும் காப்பியங்களில் பொதுவாக இடம்பெறும் நம்பத்தகாத செய்திகள் இந்தக் காப்பியத்தில் இல்லை. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த பல தமிழ்ச் சான்றோர், தமிழறிஞர்கள், தமிழ் உணர்வினர் இந்தக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளனர். இவ்வகையிலும் பூங்கொடிக் காப்பியம் தனித்தன்மை உடையதாகத் திகழ்கிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பூங்கொடிக் காப்பியத்தைப் பற்றிய செய்திகள் இங்கு தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

## பூங்கொடிக் காப்பியம்

**பூங்கொடிக் காப்பியம்**

**பூங்கொடிக் காப்பியம்** கவிஞர் முடியரசனின் படைப்புகளுள் ஒன்றாகும். 'மொழிக்கொரு காப்பியம்' என்னும் சிறப்பினை இந்தக் காப்பியம் பெற்றுள்ளது. 'தமிழ்த் தெய்வ வணக்கம்' நீங்கலாக, 'விழவயர் காதை' முதலாக 'விடுதலைக் காதை' ஈறாக முப்பத்தொரு காதைகள் இந்தக் காப்பியத்தில் உள்ளன. 5243 பாடல் வரிகள் உள்ளன. தமிழ்நாட்டு மொழிப் போராட்ட வரலாற்றில் இடம் பெற்றவர்களும் தமிழ்மொழி, தமிழிசை முதலியவற்றின் வளர்ச்சியில் ஈடுபட்டவர்களும் இந்தக் காப்பியத்தில் குறிப்பாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளனர்.

**மணிமேகலையும் பூங்கொடியும்**

பௌத்த சமய உண்மைகளை உணர்த்த அறச்செல்வியாக ஒரு மணிமேகலை சீத்தலைச்சாத்தனாரால் படைக்கப்பட்டாள். அதுபோல மொழி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு இல்லறம் துறந்து, பொதுநலம் போற்றித் தன்னலம் மறந்த தமிழ்ச்செல்வி பூங்கொடியாகக் கவிஞர் முடியரசனால் படைக்கப்பட்டுள்ளாள்.

**ஆசிரியர்**

இக்காப்பியத்தை இயற்றியவர் கவிஞர் முடியரசன். 1920ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 7ஆம் நாள் பெரியகுளம் என்னும் ஊரில் பிறந்தார். இயற்பெயர் துரைராசு என்பதாகும். தனித்தமிழ் உணர்வினால் தூண்டப்பெற்றுத் தனித்தமிழில் முடியரசன் எனத் தன் பெயரை மாற்றிக்கொண்டார். மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் பயின்று புலவர் பட்டம் பெற்றார். பாவேந்தர் பாரதிதாசன் கவிதைப் பரம்பரையின் முன்னணிக் கவிஞர் முடியரசன். கடவுள் மறுப்புக் கொள்கையுடையவர். தமிழ்மொழி, இனம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் தம் வாழ்நாளின் இறுதிவரையிலும் உழைத்தவர். கவிஞர் முடியரசன் தமிழைத் தெய்வமாகப் போற்றி, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதில் உள்ளம் மகிழ்ந்தவர்.

**படைப்புகளும் பட்டமும்**

**பூங்கொடி, முடியரசன் கவிதைகள், கவியரங்கில் முடியரசன், பாடும் பறவை, காவியப்பாவை, வீரகாவியம், ஊன்றுகோல்** ஆகிய படைப்புகளைக் கவிஞர் முடியரசன் எழுதியுள்ளார். இவருடைய பாடல்கள் சில இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தவத்திரு குன்றக்குடி அடிகளார் கவிஞர்க்குக் **கவியரசு** எனப் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தார்.

‘தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாவதில்லை’ என்பதற்கேற்ப மக்கள் மனத்தில் ‘இறவாமல்’ வாழும் உயர்ந்த கவிஞர் முடியரசன் என்பதில் ஐயமில்லை.

## பூங்கொடி காப்பியம் – கதைச் சுருக்கம்

தமிழகம், எங்கும் விழாக் கோலத்துடன் பொலிந்தது; பொங்கற் புதுநாள் அனைவர் உள்ளத்தையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தது. பகலும் இரவும் கலை நிகழ்ச்சிகள் சிறப்புற்றோங்கின. ஆனால், அருண்மொழியும் அவள் மகள் பூங்கொடியும் இசையரங்கேற வாராமையால் ஊரார் பலவாறு பேசினர். இதனால் வருந்திய வஞ்சி, தன் மகள் அருண்மொழிக்குத் தேன்மொழி வாயிலாகச் செய்தி கூறியனுப்பினள். மலையுறையடிகளின் குறளகத்திற் சேர்ந்த அவள், இத் துறையையே வெறுத்து வாராது நின்றனள். அருண்மொழி தன்தோழி தேன்மொழியிடம் தன் கணவன் வடிவேல்

படுகொலையுண்டதைக் கூறக் கேட்டுக் கொண்டிருந்த பூங்கொடி தேம்பியழுதனள். அருண்மொழி, அவ்வழுகையை மாற்ற அவளைப் பூங்காவிற்கு அனுப்பினள். தோழி அல்லியும் உடன் சென்றாள்.

பூங்காக் காட்சிகளை இருவரும் கண்டுகளிக்கும் பொழுது பூங்கொடிமேற் காதல்கொண்ட கோமகன் அங்கு வருவதறிந்து, அஞ்சிய பூங்கொடி, ஆங்கிருந்த படிப்பகத்தினுட் புகுந்தாள். வெளியில் நின்ற அல்லியிடம், தன் உளக்குறிப்பை அவன் புலப்படுத்த, அவள் மறுத்துரைத்துப் பூங்கொடியின் துறவுள்ளத்தை எடுத்துரைத்தாள். கோமகன் ஆசைதணியானாகி அகல, தாமரைக்கண்ணி அங்கே வந்தனள். அவள் இவ்விருவரின் நிலையறிந்து, முன்வந்த வழியே செல்லாது முத்தக்கூத்தன் கல்லறைவழியே செல்லுமாறு பணித்து அவன் வரலாறும் கூறிப் பூங்கொடியைக் கடல் நகர்க்கு வருமாறு மொழிந்தகன்றனள்.

பூங்கொடியின் நினைவொடு போகிய கோமகனிடத்துத் தாமரைக்கண்ணி சென்று, இடித்துரை கூறி மீண்டனள். தாமரைக்கண்ணி கூறியவாறு, பூங்கொடி கடல் நகர்க்குச் சென்று, சொல்மழை பொழிந்து, கயவர் வீசிய கல்லடிபட்டும் அஞ்சாதிருந்தனள். இடைவிடாப் பணியாள் திருந்திய மாந்தர்தம் வேண்டுகோட் கிணங்கிப் பூங்கொடி அங்கே தங்க, தாமரைக்கண்ணி மட்டும் மீண்டனள்.

அந்நகருக்கு வந்த இலக்கியர் என்னும் நாவலர், பூங்கொடியைக் கண்டு தம்முன் வரலாறுரைத்து, அவளுக்கு ஊக்கமூட்டித் திருக்குறட்குத் தெளிவுரையும் கூறி, விடை கொண்டனர். தாமரைக்கண்ணி மீண்டும் கடல் நகருக்கு வந்து, பூங்கொடிபால் கோமகன் செய்யும், தமிழ்ப்பணி யுரைத்துப் பன்மொழிப் பயிற்சி பெறப் பணித்து, தொல்காப்பிய விளக்கம் மொழிந்து மீண்டனள். பூங்கொடி அந்நகரில் தங்கியிருக்கும் பொழுது, தமிழேடுகள் தேடித் தொகுக்கும் பணியை மேற்கொண்ட நாவலூர் அமுதம் என்னும் மூதாட்டி, ஆங்கு வந்து, இவளை வாழ்த்திக் கலைமகள் நிலையத்திலிருந்து தான் பெற்ற இசையுங் கூத்துங் கூறும் இருபெரும் சுவடிகளை ஈந்தனள். பூங்கொடி வணங்கிச் சுவடிகளுடன் தாயகம் மீண்டனள்.

மீண்ட பூங்கொடி மலையுறையடிகளிடம் நிகழ்ந்தவை கூறி, மீனவன் என்பான் விடுத்துச் சென்ற இருபெருஞ்சுவடிகளையும் நாவலூர் அமுதம் தந்தமையையும் மொழிந்து நின்றனள். அடிகளார் மகிழ்ந்து, மாந்தர்க்கு எழுச்சியூட்ட, மீண்டும் இசைப்பணி புரிய எழுமாறு பணித்துப் பொதுப்பணிக்கு வேண்டும் பண்புகளையும் விளக்கி வாழ்த்தியருளினர். மேலும் அவர் மீனவன் வரலாற்றையும் கூறியருளினர்.

"நெல்லூர் என்னும் ஊரில் பொன்னி என்பவள் தன் தந்தையை மீறி வில்லவன் என்பானைக் கலப்புமணஞ் செய்துகொண்டனள். அவள் ஆண்மகவொன்றைப் பெற்று மறைந்தனள். வில்லவன் மனம்நொந்து, குழந்தையை ஒருவரிடம் கொடுத்து, உலகை வெறுத்துச் சென்றுவிட்டான். கற்றுவளர்ந்த அவ்விளைஞனே மீனவன். அவன் புரட்சிமனப்பான்மை யுடையவனானான். ஒருநாள் சிலரால் தாக்குண்டான். பழமையில் ஊறிய மாந்தர், அவனை வளர்ப்போர்க்குப் பல தொல்லைகள் தந்தனர். தன்னாலன்றோ இத்தொல்லைகள் இவர்கட்கு நேர்கின்றன என எண்ணிய மீனவன் யாரும் அறியாவகையில் புறப்பட்டுக் கூடல் நகரினை அடைந்தான்.

கூடல் நகரில் மீனவன் பணிபுரியுங்கால் அங்கிருந்த தமிழ்ச் சங்கத்தில் ஓர் இசைச் சுவடி கிடைக்கப் பெற்றான். அதன் துணையால் இசை பரப்பும் நாளில், ஏமகானன் என்னும் வடபுலத்திசை வல்லான், தங்கத்தேவன் ஏவலால் மீனவனிடம் வந்து, வடநாட்டிசை பயிலச் சொன்னான். மீனவன் மறுத்து எள்ளி நகையாட வெட்கித் திரும்பிய ஏமகானனின் தூண்டுதலால் சீற்றங்கொண்ட தங்கத்தேவன் மீனவனைக் கொலை செய்ய முயன்றான். அத்தீமையிற்றப்பிப் பிழைத்த மீனவன், கூடலைவிட்டு வேறிடஞ் சார்ந்தனன். எனினும் கொடியோன் ஏவத் தீயோர் சிலர் அவனைக்கொலை செய்துவிட்டனர். அவன் இறக்கு முன் இசைச் சுவடியைக் கலைமகள் நிலையத்திற் சேர்க்குமாறு பணித்தனன். அச்சுவடி பூங்கொடியாகிய நின்பால் வந்துற்றது. இதன் துணையால் மீண்டும் இசைப்பணி புரிக" என அடிகள் உரைத்துச் சென்றனர்.

அருண்மொழியும் இசைவு தந்து, இசைச் சுவடியின் விளக்கத்தை எழிலி என்னும் மாதரசியிடம் சென்று பெறுமாறு பணித்தனள். பூங்கொடி, எழிலியின் வரலாறறிய விழைந்தனள். அடிகளும் கூறுவாராயினர்; "கொடுமுடியில் பிறந்த எழிலி இசைத்துறையில் ஒப்புயர்வின்றி விளங்கினாள். அப்பொழுது புகழ்பெற்ற கூத்தன் ஒருவனைக் கலப்புமணம் செய்துகொண்டாள். ஒருசமயம் கூத்தின் பொருட்டு அயல்நாடு சென்று திரும்புங்கால், புயலால் மரக்கலம் உடைய, அருகில் இருந்த தீவை அவன் அடைந்தான். தப்பிப் பிழைத்த சிலர், கூத்தன் இறந்ததாக எழிலியிடம் கூற, அளவிலாத் துன்பம் அடைந்திருந்தாள். தீவினுள் நுழைந்த கூத்தன் அத்தீவின் தலைவன்பால் தன் திறமை காட்டிப் பரிசில் பல பெற்று ஊர் திரும்பினன். திரும்பிய அவனைக் கண்டு எழிலி அளவிலா உவகை எய்தினள். அப்பெருமாட்டியிடம் இச்சுவடியிற் சொல்லிய செய்திகளைத் தெரிந்து கொள்க" என்றனர்.

பூங்கொடி எழிலிபாற் சென்று இசை நுணுக்கமும் யாப்பிலக்கணமும் தெளிந்து, இருதுறையிலும் வல்லவளாக விளங்கினாள். இதுகண்டு மகிழ்ந்த அடிகளார்

இசைப்பள்ளி ஒன்றனை நிறுவிப் பயிற்றும் பொறுப்பைப் பூங்கொடிபால் ஒப்படைத்தனர். இப்பணி நடைபெறுங்கால் சண்டிலி என்னும் வடபுலப் பெண்ணொருத்தி இசை பயில வந்தனள். அவளும் ஆர்வத்தால் அத்துறையில் மேம்பாடடைந்தனள். அவள் முன்பொருகால் தென்னாட்டு மலைவளம் காணவந்து, பொதிகையில் கணவனோடு தங்கியிருந்தனள். அங்கே இசைச்செல்வி ஒருத்தியின் தேவார இசைகேட்டு மயங்கித் தமிழ் இசையை வேட்டுத் தனக்கு அவ்விசையைப் பயிற்றுமாறு வேண்டினள். அவ்விசைச் செல்வி பூங்கொடியிடம் செல்க என ஆற்றுப்படுத்த இங்கு வந்து சேர்ந்தனள். பயின்று முடித்த சண்டிலி வேங்கை நகர்க்கு வருமாறு பூங்கொடியை வேண்டினள். இவளும் இசைந்து அடிகளிடம் ஒப்புதல் பெற்று, வடபுலம் சென்று இசைப்பணி புரிந்தனள்.

மணவாழ்வு வெறுத்த பூங்கொடியை நினைந்து வருந்திய வஞ்சி, கோமகனை அடைந்து, அவனைத் தூண்டி, அவனுக்கு மீண்டும் காம உணர்ச்சியை உண்டாக்கி அவனை வேங்கை நகர்க்கு அனுப்பினாள். அவன் இசை பயில்வான் போன்று, பூங்கொடிபாற் சென்று தன் உள்ளக்குறிப்பைப் புலப்படுத்தினன். அவள் அறவே வெறுத்துக் கூறி அனுப்பிவிட்டாள். தோல்விகண்ட கோமகன் எவ்வாறேனும் இவளை அடைவதாக வஞ்சினம் கூறிச் சென்றான்.

அந்நகரில் இசையில் பெரு விருப்பங்கொண்ட பெருநிலக்கிழார் என்பவர் பூங்கொடியைப் பற்றிக் கேள்வியுற்று அவளுக்கு அழைப்பு விடுத்தனர். அவளும் தனித்து இங்குவந்து பலவகை இசையும் பாடி மகிழ்வித்தனள். மகிழ்ந்த அவர், ஆடலிலும் பாடலிலும் சிறந்திருந்து இறந்துபோன தன் மகளைப் போலவே விளங்கும் இவளையும் மகளாகவே கருதிப் பூங்கொடிக்கு உதவ நினைத்தனர். அதன்படி பூங்கொடியின் வேண்டுதலால் மிகப்பெரிய நூலகம் ஒன்று நிறுவ இசைந்தனர்.

இசைபயிலும் சண்டிலியைக் காண வந்திருந்த அவள் கணவன் துருவன், அம்மாளிகையின் ஒருபால் தங்கியிருந்தனன். அந்நள்ளிரவில் கோமகன் பூங்கொடியின் அறையை நோக்கிப் பதுங்கிப் பதுங்கி நடந்தான். இதனைக் கண்டு ஐயுற்ற துருவன், தவறுதலாக சண்டிலியின் அறையுட் புகுந்த கோமகனைக் கொலை செய்துவிட்டுச் சண்டிலியோடு ஓடி மறைந்தான். பெருநிலக்கிழாரிடம் விடைபெற்றுத் திரும்பிய பூங்கொடி, கோமகன் கொலையுண்டு கிடப்பதைக் கண்டு அஞ்சிப்பதறிக் கிழாரிடம் சென்றாள். கொலைச் செய்தியறிந்த ஊர்காவலர் இங்கு வந்து ஆய்ந்தனர். அப்பொழுது கிழாருடன் பூங்கொடி வர, அவளை ஐயுற்ற காவலர் சிறைப்படுத்தினர். செய்தியிதழின் வாயிலாக இதனையறிந்த துருவன் சண்டிலியோடு அறமன்றத்திற்கு வந்து, உண்மையைக் கூறி அவளை விடுவித்தான்.

அருண்மொழியும் அடிகளும், பூங்கொடி சிறைப்பட்ட செய்தியறிந்து விரைந்துவந்து அவள் விடுதலை பெற்றதறிந்து மகிழ்ந்தனர். பூங்கொடி, ஒருவர்க்கொருவரை அறிமுகஞ்செய்தாள். கிழார் அருண்மொழி முகத்தை உற்றுநோக்கிக் கலங்க, அடிகளார் அதன் காரணம் வினவினார். அதற்கு அவர், `அருண்மொழி முகம் என் கடந்தகால நிகழ்ச்சிகளை நினைவூட்டியது', என்று சுவரில் மாட்டிய படமொன்றைக் காட்டினார். அருண்மொழி முகமும் அப்படத்திலுள்ள பெண் முகமும் ஒன்று போலிருந்தன. யாவரும் திகைத்தனர். `இவள் பெயர் என்ன?' என்று அருண்மொழி வினவினாள்.

பெருநிலக்கிழார் `நான் வாணிகத்தின் பொருட்டுக் காழகம் செல்லும் பொழுது கப்பலில் இவளைக் கண்டேன். எங்கள் விழிகள் கலந்தன. பின்பு காழகத்து இசையரங்கில் அவள் இசைகேட்டு மயங்கி அவளையை மணந்தேன். சில ஆண்டுகளில் பெண் மகவொன்றை ஈன்று உயிர்துறந்தாள். அத்துயரைக் குழந்தையின் முகம்பார்த்து மாற்றி வந்தேன். அம்மகளும் கட்டிளம் பருவத்தே காலன் வயப்பட்டனள். என் மனையாள் பெயர் ஏலங்குழலி' என்று விடைதந்தனர். இதுகேட்டு அலறிய அருண்மொழி, `அவள் என் உடன் பிறந்தவளே இளமையில் எங்களைப் பிரிந்தாள்' என்று முன்னைய வரலாறு உரைத்து, `இப்பூங்கொடியும் உங்கட்கு மகள் முறையே ஆவாள்' என்றனள்.

அனைவரும் மகிழ்ந்து, சிலநாள் அங்கு உறைந்து, நால்வரும் மணிநகர்க்குப் புறப்பட்டனர். வழியில் கோட்டை நகரில் இறங்கிக் கோனூர் வள்ளலைக் கண்டு மகிழ்ந்தனர்.

கோனூர் வள்ளலின் மாளிகையில் மயில்வாகனரைக் காணும் பேறும் பெற்றனர். அவர் பதினான்கு ஆண்டு ஆய்ந்து எழுதிய யாழ்நூல் ஒன்றினைப் பூங்கொடிக்குத் தந்து, அதன் விளக்கமும் கூறினார். பின், மயில்வாகனர் அறிவுரைப்படி பூங்கொடி அயல்நாடுகள் பலவுஞ் சென்று, தமிழின் சிறப்பை உணர்த்தி, ஆங்காங்குள்ள அறிவியல் நூல்கள் பலவுங் கொண்டு தமிழகம் திரும்பினாள்.

தமிழகம் திரும்பிய பூங்கொடி புதுப்புது நூல்கள் படைத்தாள். தமிழ்மொழி குறித்து எதிர்ப்புரை பகர்வார் பலருடன் சொற்போர் புரிந்து தமிழுக்கு வெற்றித் தேடித் தந்தாள். தமிழகத்தே மொழிப் பற்றுடையார் பலரும் கூடி, மாநாடு கூட்டி, மொழி காக்க அறப்போர் தொடுப்பதென்று முடிவு செய்தனர். அறப்போர் தொடங்கியது. அதனால் அருண்மொழி முதன்முதலாகப் பலரும் சிறை ஏகினர். பூங்கொடியும் பொங்கிய உணர்வால், பூரிப்புடன் சிறையகம் புகுந்தனள். சிறையில் அப்பெருமாட்டி நோய்வாய்ப்பட்டாள். நோயின் கொடுமை மிகுதிப்பட, மருத்துவமனைக்கு அவளை

எடுத்துச் சென்றனர். அங்கும் நோய் தணிந்திலது. இதனைக்கண்ட அரசு விடுதலை ஆணைப் பிறப்பித்தது. அவ்வாணை வருமுன், பூங்கொடியின் உயிர் அவள் உடலிலிருந்து விடுதலை பெற்றது.

**பூங்கொடிக் காப்பியம் - கதைக்கரு**

இந்தக் காப்பியத்தின் கருப்பொருள் புதுமையானதாகும். தாய்மொழியாகிய தமிழ்மொழியின் உரிமையைக் காப்பதற்காக மேற்கொண்ட மொழிப் போராட்டம் இதன் கருப்பொருள் ஆகும். தொன்மை சான்ற ஒருமொழிக்கு அதற்குரிய இடத்தை ஆட்சியாளர் வழங்காதபோது அறப்போராட்டத்தின் வழி அதனைப் பெறமுயல்வது தவறாகாது என்று மொழிப்போராட்டம் குறித்துப் **பூங்கொடிக் காப்பியம்** கூறுகிறது.

**கதைமாந்தர்**

கதை நிகழ்வுகளை முன்னெடுத்துச் செல்பவர் கதை மாந்தர்கள் ஆவர். காப்பியங்களில் ஒருவர்க்கு மேற்பட்ட கதை மாந்தர்கள் உள்ளனர். கதை மாந்தர்களைத் தலைமை மாந்தர், துணைமாந்தர் என இருவகைப்படுத்தலாம்.

பூங்கொடிக் காப்பியத்தின் தலைமை மாந்தராக, கதைத் தலைவியாகத் திகழ்பவள் பூங்கொடி ஆவாள். பிற மாந்தர்கள் அனைவரும் துணைமாந்தர் எனப்படுவர்.

**பூங்கொடி**

காப்பியத் தலைவி பூங்கொடி காப்பியத்தின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை காப்பியத்துள் இடம்பெறுகிறாள். காப்பியக் களங்களாக உள்ள மணிநகர், கடல்நகர், வேங்கைநகர் ஆகிய முந்நகர்களுக்கும் சென்று, தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடும் கதைத் தலைவியாகப் பூங்கொடி உள்ளாள்.

அழகும் இளமையும் உடைய இலட்சியப் பெண்ணாகப் பூங்கொடி படைக்கப்பட்டுள்ளதால் அவள் பல இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் எதிர்கொள்கிறாள். அன்னை அருண்மொழியாலும் மலையுறையடிகளாலும் அவள் இலட்சியப் பெண்ணாக உருவாக்கப்பட்டு, பெருநிலக்கிழாரின் அன்பாலும் ஆதரவாலும் ஈர்க்கப்படுகிறாள். தான் உயிராகப் போற்றிய மொழியுரிமைக் காப்பிற்காக நடத்திய அறப்போராட்டத்தில் **சிறைப்பட்டு நோய்வாய்ப்பட்டு** இறுதியில் உயிர் துறக்கிறாள். எந்தப் போராட்டமும் பெண்களின் பங்கினைப் பெறும்போதுதான் முழுமை பெறுகிறது என்பதற்கு இந்தக் காப்பியம் சான்றாகிறது. பூங்கொடிக்

காப்பியத்தின் நடுநாயகமாக விளங்க, அவளை அருண்மொழி, மலையுறையடிகள், கோமகன், வஞ்சி, பெருநிலக்கிழார், கோனூர் வள்ளல், சண்டிலி முதலிய காப்பிய மாந்தர்கள் சுற்றி வருகின்றனர்.

**மொழி உணர்வு**

இளமையிலேயே தந்தை வடிவேலுவை இழந்த பூங்கொடி, தாயின் அரவணைப்பாலும் மலையுறையடிகளின் அறிவுரையாலும் தமிழ்ப் பணியைத் தலைமைப் பணியாகக் கொண்டு சமுதாயத் தொண்டாற்றுகின்றாள்

அவள் தோழி தாமரைக்கண்ணி பூங்கொடியைப் பற்றிக் கூறுபவை பூங்கொடியின் தமிழ் உணர்வினையும் தமிழ்ப் பணியையும் எடுத்துரைக்கின்றன.

**மொழிவளம் பெறவும் மூடச் செயலால்**
**இழிநிலை யுற்றோர் எழுச்சி பெறவும்**
**தொண்டுகள் ஆற்றும் தூயவள்....**
**மேம்படு தமிழே மேவிய மூச்சாய்**
**வாழும் குறிக்கோள் வாழ்வினள்**

**(கடல்நகர் புக்க காதை, 17 - 23)**

இதில், தமிழே உயிர் மூச்சாகக் கருதி வாழ்பவள் அவள் என்று ஆசிரியர் சுட்டுகிறார்.

**மனத்திண்மை**

கோமகன் என்பவன் தமிழ்ப்பணி புரிவதாகத் தன்னைக் காட்டிக்கொண்டு பூங்கொடியின் காதலைப் பெற முனைந்தான். அவனுக்குப் பூங்கொடியின் பாட்டி வஞ்சி உதவ முன்வந்தாள். பூங்கொடியைக் கோமகன் வேங்கை நகர்க்கும் பின்தொடர்ந்தான். பூங்கொடி தன் வாழ்க்கைக் குறிக்கோளை அப்பொழுது அவனிடம் வெளிப்படுத்தினாள்.

**உள்ளத்து எழூஉம் உணர்ச்சிகள் அடக்கி**
**உள்ளம் துறந்தேன் உலகம் துறந்திலேன்**
**எள்ளத் தனையும் எழுச்சியில் விழாஅது**
**தெள்ளத் தெளிந்து திருமணம் ஒரீஇ**
**இனமும் மொழியும் ஏற்றமுற்று ஓங்க**
**மனம்வைத்து உழைத்திட வாழ்வு கொடுத்துள்ளேன்**

**(கோமகன் மீண்டும் தோன்றிய காதை, 284 - 289)**

தான் கொண்டுள்ள குறிக்கோளிலிருந்து கொஞ்சமும் நெகிழாத் தன்மை கொண்டவள் என்பதனை இக்கூற்று வெளிப்படுத்துகிறது. அவள், தான் வாழ்க்கையைத் துறக்கவில்லை என்றும் ஆனால் அதே நேரத்தில், இல்லறத்தில் ஈடுபட்டு வாழும் இல்வாழ்க்கையை அதாவது திருமண வாழ்க்கையை மட்டும் விட்டுவிடுவதாகவும் குறிப்பிடுகிறாள். மாறாகத் தமிழ் மொழியும் தமிழ் இனமும் சிறப்படைவதற்குரிய வாழ்க்கையை வாழ்வேன் என்று குறிப்பிடுகின்றாள். தன்னை விரும்பி, தன்னை வாழ்க்கைத் துணையாக்கி வாழ விரும்பும் கோமகனிடம், தன் குறிக்கோளை மிகவும் உறுதியாக எடுத்துக் கூறுகிறாள். இது அவளது மன இயல்புகளை மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.

**பன்மொழிப் புலமை**

தாமரைக்கண்ணியும் விபுலானந்தரும் கூறியபடி ஆங்கிலம், கன்னடம், மலையாளம் முதலிய பன்மொழிகளில் பூங்கொடி பயிற்சி பெற்றனள். தமிழ்த்தூதுக் குழுவில் இடம் பெற்று அயல்நாடுகளுக்குச் சென்றாள். அயல்நாடுகளில் உள்ள தமிழறிஞர்களின் துணையோடு தமிழின் தொன்மையையும் நீர்மையையும் எடுத்துரைத்தாள். சான்மார், கமிலர், உருதின் முதலிய அறிஞர்களை அயல்நாட்டுப் பயணத்தில் சந்தித்தாள். அச்சந்திப்புகளில் அவள் தேடித் தொகுத்த ஏடுகளினால் புதுப்புது நூல்களை எல்லாம் தமிழுக்குத் தந்தாள்.

**பொருளியல் நூலும் புதுப்புதுப் படைப்பும்**
**அறிவியல் நூலும் அருங்கவித் திரட்டும்**
**உளநூல் நிலநூல் உண்மைத் தத்துவம்**
**பலவர லாறும் படைத்தனள் தமிழில்,**

**(அயல்நாடு சென்றுவந்த காதை, 148 - 151)**

**மலையுறையடிகள்**

பூங்கொடிக் காப்பியத்தின் இரண்டாவது காதையாகிய ‘பழியுரை காதையில்’ மலையுறையடிகள் அறிமுகமாகிறார். அருண்மொழியின் கணவன் வடிவேல் பகைவரால் கொலை செய்யப்பட, வாடி வருந்திய அவளுடைய வருத்தம் நீங்க ஆறுதல் கூறி அவளைத் தமிழ்த் தொண்டு செய்ய ஆற்றுப்படுத்தினார். வெருகன் என்பவனால் கற்பை இழந்த அல்லி என்னும் வேதியர் குலப்பெண்ணை அரவணைத்துக் கொண்டார். அவர் குறளகப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

**பூங்கொடியிடம் அன்பு**

பூங்கொடிக்கு மீனவன், எழிலி ஆகியோரின் வரலாற்றை எடுத்துக் கூறி அவளைத் தமிழிசைப் பணியில் ஈடுபடுத்திய பெருமை மலையுறையடிகளையே சாரும்.

கோமகன் கொலை காரணமாகப் பூங்கொடி சிறைப்பட்டாள் என்பது அறிந்து வருந்தி அருண்மொழியோடு மலையுறையடிகள் வேங்கை நகர்க்கு வந்தமையால் பூங்கொடிபால் அவர் கொண்ட அன்பு எத்தகையது என்பதை அறியலாம். பூங்கொடி மலையுறையடிகள் பற்றிக் கூறியன:

**இவரே எளியனை இத்துறைப் படுத்தினர்**
**கவலை தவிர்ந்திட நல்வழி காட்டினர்**
**தாயின் மனமும் தந்தையின் நிலையும்**
**ஏயும் பெருமகன் எம்முயர் தலைவர்**

**(கிழார்திறம் அறிந்த காதை, 89 - 92)**

அயல்நாடு செல்லும் தமிழ்த்தூதுக் குழுவில் பூங்கொடி இடம் பெறுவதால்,

**புதுமைக் கலைகள் தமிழில் பூக்கும்**
**அருமைத் தமிழும் அவ்விடை மலரும்**

**(அயல்நாடு சென்று வந்த காதை, 30 - 31)**

என்று அவள் மீதுள்ள அன்பினாலும் நம்பிக்கையினாலும் மலையுறையடிகள் இவ்வாறு கூறுகின்றார்.

**மன உறுதி**

முத்தமிழ் மாநாட்டில் மலையுறையடிகள் ஆற்றிய சொற்பெருக்கு, சுந்தரம்பிள்ளையின் மனோன்மணீயம் நாடகத்தில் வரும் பாண்டிய மன்னன் புருடோத்தமனின் வீரவுரையை ஒத்தது. மலையுறையடிகள் நிகழ்த்திய உரை:

**ஆருயிர் கொடுப்பதுஅறப்போர் ஆகும்**
**வேறுயிர் எடுப்பது மறப்போர் ஆகும்**
**அதனதன் பெற்றிமை அறிகதில் அம்ம!**
**முதற்போர் புரிய முனைந்தனம் இன்றே**
**போரெனில் உயிர்பல போதலும் இயல்பே,**
**சீரிய இப்பெரும் போரினில் புகுவோம்**
**யாரென யாரென இயம்புதிர் இன்றே**

**இருப்பதும் ஓருயிர் இறப்பதும் ஓர்முறை**
**தடுத்திட ஒல்லுமோ? சாவதும் ஒருதலை**
**விடுக்கும்அவ் ஓருயிர் வீணிற் செலவிடாது**
**அடுத்தநம் தாய்மொழி அரியணை வீற்றிடத்**
**தொடுத்திடும் போரில் விடுத்திடத் துணிக**
**துணிவோர் எவரோ அவரே வருக!**
**துணிவிலர் ஆயின் தொலைவில் செல்க**

**(அறப்போர் நிகழ்த்திய காதை, 139 - 152)**

**சமுதாய உணர்வு**

தாய்மொழி காக்கும் போரில் ஈடுபாடு கொண்ட மலையுறையடிகள் பல்வேறு சமூகப் பணிகளையும் மேற்கொண்டிருந்தார். பல அமைப்புகளையும் நடத்தி வந்தார். கல்விக் கழகம் அமைத்தார். படிப்பகம் நிறுவினார். தம் கொடைவண்மையால் கவிஞர் பலர் உயிர் காத்தார். மங்கையர் வாழ்வில் புதுமை மலர அரிவையர் மன்றம் அமைத்தார். குறளகம் கண்டார்.

**மலையுறையும் மறைமலையும்**

மலையுறையடிகள் என்னும் பாத்திரம் தனித்தமிழ் மலையாம் மறைமலையடிகளை நினைவுபடுத்துவதாகும்.

மலையுறையடிகள் பிறர்க்கு உதவும் நன்னெஞ்சம் உடையவராய், பொதுப்பணிகள் பலவற்றைத் தாமே முன்னின்று நடத்தியதை அறியலாம்.

**பெருநிலக்கிழார்**

பூங்கொடிக் காப்பியத்தில் அமைந்துள்ள ஒரு குறிப்பிடத்தக்க பாத்திரம் பெருநிலக்கிழார் ஆகும். இக்காப்பியத்தில் இருபதாவது காதையாகிய ‘பெருநிலக்கிழார் வாழ்த்திய காதை’யில் அவர் முதன்முதலில் குறிக்கப்படுகிறார்.

**இசை ஈடுபாடு**

மாளிகையில் எப்போதும் இசைமுழக்கம் ஒலித்தவண்ணம் இருந்தது என்பதால் அவர்க்கு இசைக்கலையின்பால் இருந்த ஈடுபாடு தெரிகிறது. பூங்கொடியின் இசைத்திறனைக் கூறக்கேட்டு அவளைத் தம் மாளிகைக்கு அழைத்துச் சிறப்பித்தார். அவள் அவர்க்குத் தமிழிசையின் நுட்பம் எல்லாம் தெரிவித்தாள். மேலும் முத்துத்தாண்டவர், அருணாசலக்கவி, வேதநாயகர் முதலியோர் பாடிய தமிழிசைப்

பாடல்களை எல்லாம் பாடி அவரை மகிழ்வித்தாள். அப்பாடல்களில் பெருநிலக்கிழார் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார்.

**பூங்கொடியுடன் நட்பு**

தம் பெருமாளிகையின் ஒரு பகுதியை நூல்நிலையம் அமைக்கப் பூங்கொடிக்கு விட்டுக் கொடுத்தார். பூங்கொடி, கோமகன் கொலையுறச் சிறையகம் புகுந்தாள். அவள் சிறையிலிருந்து விடுதலை பெற்றதும் பெருநிலக்கிழார் தம் மனையிலேயே அவளைத் தங்குமாறு வேண்டினார். இளமைப்பருவத்தில் இழந்த தம் மகளை ஒத்துப் பூங்கொடி இருந்ததால் அவளைத் தம் மகளாகவே கருதினார்.

பூங்கொடிக் காப்பியத்தில் பெருநிலக்கிழார் என்னும் பாத்திரம் துணைப் பாத்திரமாயினும் காப்பியத் தலைவியின் தமிழிசைக்கும் நூலக அமைப்பிற்கும் துணையான பாத்திரம் எனில் அது மிகையன்று.

**தாமரைக்கண்ணி**

‘தாமரைக்கண்ணி தோன்றிய காதையில்’ கவிஞர் முடியரசன் தாமரைக்கண்ணி என்னும் கதை மாந்தரை அறிமுகப்படுத்துகிறார். கோமகனைக் கண்டு அஞ்சிய பூங்கொடியை மணிநகரிலிருந்து கடல் நகர்க்குக் கொண்டு சேர்த்த பெருமை தாமரைக்கண்ணியையே சாரும்.

**தமிழ் உணர்வு**

தாமரைக்கண்ணி தமிழ் உணர்வு உடையவள். அவள் வருகை தமிழ் வாழ்த்தோடு தொடங்குகிறது.

**தமிழ்மொழி வாழ்க! வாழ்க!....**
**உலக மொழியுள் உயர்ந்தாய்’ என்கோ!**
**அலகிலாக் காலம் கண்டாய் என்கோ!**
**சங்கம் வளர்த்தாய் சான்றோர் பலரால்**
**பொங்கும் புதுநூல் பூண்டாய் என்கோ**
**ஆயிரம் பகைதாம் ஆர்ப்பரித் துறினும்**
**தூவென இகழ்ந்து தோள்வலி காட்டி**
**எழிலரசு ஓச்சும் தமிழே என்கோ”**

**(தாமரைக்கண்ணி தோன்றிய காதை, 130 - 138)**

**பூங்கொடியிடம் அன்பு**

தாமரைக்கண்ணி, கோமகன் பூங்கொடியிடம் காதல் கொண்டுள்ளதை அறிந்தவள். கோமகனே பூங்கொடியைத் தொடரும் சூழல் உள்ளதால் படிப்பகத்திலிருந்து தெருவழியே செல்லாமல் பொழிலின் பின்புற வழியாகச் செல்ல அறிவுரை கூறினாள். அவ்வழியாகச் செல்லின் சுடுகாடு இடைப்படும் என்பதைக் கூறினாள். சுடுகாட்டு வழியே செல்லப் பூங்கொடி அஞ்சினாள். தாமரைக்கண்ணி பேயென ஒன்றில்லை எனக் கூறிப் பூங்கொடியையும் அல்லியையும் ஊக்கப்படுத்தினாள். பூங்கொடியைத் தொடரும் கோமகனுக்கு,

**நின்னை**
**நயவாப் பெண்டிரை நாடுதல் சிறுமதிச்**
**செயலாய் முடியும், சிந்தித்து ணர்க.**

**(கடல்நகர் புக்க காதை, 30 - 31)**

என்று அறிவுரை கூறி அவளை விடுவித்தாள். பூங்கொடியின் மீதுள்ள அன்பினால் இவ்வாறு அறிவுரை கூறி உதவி செய்தாள்.

**கல்விப்பணி**

கோமகன் பூங்கொடியை அடைதற் பொருட்டுப் பாவலர் படிப்பகம் ஒன்றை ஏற்படுத்திப் போலியாகப் பொதுப் பணி செய்வதைத் தாமரைக்கண்ணி அறிந்து அதனைப் பூங்கொடிக்குத் தெரிவித்தாள்.

பூங்கொடி பன்மொழிப் பயிற்சி பெறவேண்டிய தேவையை உணர்ந்து அவளுக்கு அதை உணர்த்திய பெருமை தாமரைக்கண்ணியையே சாரும். தாமரைக்கண்ணி தான் கற்ற **தொல்காப்பியப்** பெருநூலைப் பூங்கொடிக்குக் கற்பித்தாள். பூங்கொடி என்னும் காப்பியத் தலைவியின் ஆளுமை முழுமையுறத் தாமரைக்கண்ணி ஆற்றிய பணி சிறப்புடையதாகும்.

**காப்பியச் சிறப்பு**

காப்பிய அமைப்பு, கதை, கதை மாந்தர் என்பவற்றிற்கும் அப்பாற்பட்ட நிலையில், பல சிறப்புக் கூறுகள் பூங்கொடிக் காப்பியத்தில் அமைந்துள்ளன. குறிப்பாக, ஆசிரியர் முடியரசன், தமிழ் மொழியின் சிறப்பு, தமிழிசையின் பெருமை, தமிழின் தனித்தன்மை ஆகியவற்றையும் சிறப்பாக இக்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார். காப்பியமே ஒரு வகையில் மேற்குறிப்பிட்ட சிறப்புக் கூறுகளை வெளிப்படுத்தும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடலாம்.

**தமிழின் சிறப்பு**

தமிழ்மொழிக்கு மந்திர வலிமை உண்டு. முதலை உண்ட பாலனை மீட்டுத் தந்தது தமிழ், திருமறைக்காட்டில் அடைத்த கதவைத் திறக்கச் செய்தது தமிழ், கணிகண்ணன் முன் செல்லத் திருமழிசை ஆழ்வார் பின்செல்லத் திருமால் திருமகளோடு பாம்பணையைச் சுருட்டிக் கொண்டு அவருக்குப் பின்னால் ஓடச்செய்தது தமிழ். இத்துணைப் பெருமையையும், தமிழுக்குச் சொன்னவர்களே இன்று அதை மறந்து தமிழ்மொழிக்கு மந்திரவலிமை உண்டா என்று கேட்பது வஞ்சகம் அன்றோ?

**சிவனும் தமிழும்**

தமிழைக் கடவுளரும் விரும்பிச் சுவைத்தனர். சிவபெருமான் தன்னுருவை மறைத்து, மீன்கொடியை ஏந்தி, வேப்ப மாலையைச் சூடி, சவுந்தர பாண்டியனாக வந்து மதுரையை ஆண்டான். மலைமகள் உமையாள் தடாதகைப் பிராட்டியாக மதுரையில் அவதரித்தாள். மயில்வேல் முருகன் உக்கிரகுமாரனாக உருவெடுத்தான். இவ்வாறு சிவனும் உமையும் மயில்வேலனும் தென்னாட்டு மொழியாம் தீந்தமிழின் சுவையை உண்பதற்காக முறையே சவுந்தர பாண்டியனாகவும், தடாதகைப் பிராட்டியாகவும் உக்கிரகுமாரனாகவும் உருத்தாங்கி வந்தனர். அதுமட்டுமா? கைலாயத்திலிருந்த சிவன் தென்திசை நோக்கி வந்து ஆடியதும் தமிழ்ச் சுவையை நுகர்வதற்காகத்தானே! மேலும் சிவன் தமிழ்ப் புலவர்களின் கூட்டத்தில் தானும் ஒரு புலவனாக அமர்ந்து, தமிழை ஆய்ந்து சுவைத்தான். திருவாசகத்தைத் திருவாதவூரர் ஆன மாணிக்கவாசகர் சொல்லச் சொல்லச் சிவன் தன் கைப்பட ஏட்டில் எழுதி நாட்டிற்கு அளித்தான். சுந்தரரைத் தமிழில் பாடுமாறு இறைவன் வேண்டுகோள் விடுத்தான்.

இறைவன் விரும்பும் சிறப்புடையது தமிழ்மொழி என்பதைக் கவிஞர் முடியரசன் எத்துணை அழகாகக் கூறுகிறார்.

**கடகரி உரியன் கடும்புலி அதளன்**
**சடையினை மறைத்து மணிமுடி தரித்து**
**விடைக்கொடி விடுத்து வேம்பலர் முடித்துத்**
**தொடுகழல் மாறன் வடிவொடு வந்ததூஉம்**
**மடவரல் மனையாள் மலைமகள் உமையாள்**
**தடாதகைப் பெயரினைத் தாங்கி வந்ததூஉம்**
**மயில்மேல் அமர்வோன் அயில்வேல் உடையோன்**
**எயில்சூழ் மதுரை எழில்நகர் அதனுள்**
**உக்கிர குமரன் உருவொடு வந்ததூஉம்**
**தெக்கண மொழியாம் தீந்தமிழ்ச் சுவையைக்**

**கூட்டுண எழுந்த வேட்கையால் என்றே**
**பாட்டினில் குருபரர் பாடி வைத்தனர்; .....**
**வழிபடு தமிழை விழைகுவர் இறைவரென்று**
**எழிலுற உணர்த்திட இவையிவை சான்றாம்....**

**(சொற்போர் நிகழ்த்திய காதை, 188 - 215)**

இவையெல்லாம் இறைவனுக்குத் தமிழின்பால் உள்ள விருப்பத்தை விளக்கும். பூங்கொடி கடவுள் விரும்பும் மொழி தமிழ்மொழி என்பதற்குப் பல சான்றுகளைத் தந்து நிறுவினாள்.

**தமிழிசை**

உள்ளத்தை உருக்கி இன்ப உணர்ச்சியை அள்ளித்தரும் இசையில் மொழிவேற்றுமை புகுத்துவது இழிவாகும். குழலும் யாழும் தரும் இசையில் மொழி உண்டா? அந்த இசையில் பழியேதும் உண்டா? தமிழில் இசைவளம் உண்டா? இசையுணர்வு உடையோர் எந்த மொழியாக இருந்தாலும் விருப்புடன் அதனை ஏற்கின்றனர். எனவே மொழிவெறி இசையில் புகவேண்டாம் என வம்புகள் மொழிந்தனர் சிலர்.

இசையில் மொழிவெறி புகுத்துதல் இழிவெனக் கூறுவோர் கருத்தைப் பூங்கொடி மறுத்துரைத்தாள். குயில், காகம் முதலிய பறவைகள் தம் குரலால் ஒலிக்கின்றனவே ஒழிய இரவல் குரலில் அவை பாடுவதில்லை. பகுத்தறிவுடைய மக்களே நமக்குள்ள மொழியில் பாடாது பயிற்சிக்குரிய மொழியால் பிதற்றுகின்றோம். பொருள் உணர்ந்து பாடும்போதுதான் ஊனும் உயிரும் நெஞ்சுடன் குழைந்து உருகிப் பேரின்பம் தருகிறது. குழல் தரும் இசையில் மொழியில்லையே என்றால், அந்த இசையே போதுமே. அதற்குமேல் வாய்ப்பாட்டு எதற்கு? வேறோரு மொழியில் பாடுவோர் கூட்டமும் தேவையா? குழல், யாழ் முதலிய இசைக்கருவிகள் தரும் இசையே போதுமானது. இவ்வாறு பூங்கொடி கூறுவது வாய்மொழி இசை தாய்மொழி இசையாக அமைதல் வேண்டும் என்பதற்காகவேயாம்.

பூங்கொடிக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள இசைத்தமிழ் என்ற பகுதியில் இசைத்தமிழ் பற்றிய செய்திகளையும் தமிழிசை இயக்கம் பற்றிய செய்திகளையும் காணலாம்.

மேலும், காப்பியத் தலைவி பூங்கொடி நாவலூர் அமுதத்தைச் சந்தித்தது அவள் வாழ்க்கையின் ஒரு மைல்கல்லாகும். பூங்கொடி தமிழிசை வளர்ச்சியில் ஈடுபட அது ஒரு தூண்டுகோலாக அமைந்தது.

**இசை ஆர்வம்**

தமிழில் உள்ள சிதைந்தும் குறைந்தும் கிடக்கும் இலக்கியச் செல்வங்களை எல்லாம் ஓரிடத்துக் கொணர்ந்து நூலகம் அமைத்துக் காத்தது நாவலூர் அமுதத்தின் சீரிய பணியாகும். கலைமகள் நூலகத்தில் வழக்கம்போல் ஏடுகளைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவர் இரு சுவடிகளைக் கண்டார் அச்சுவடிகள் இரண்டும் தமிழ் இசையும் கூத்தும் பற்றியவையாகும். அச்சுவடிகளைக் கலைமகள் நூலகத்திலிருந்து விலைகொடுத்துப் பெற்றார். அச்சுவடிகளைப் பூங்கொடியின்பால் ஒப்படைத்து, அவற்றின் வரலாற்றினையும் நுட்பத்தினையும் மலையுறையடிகளிடம் கேட்டுத் தெளியுமாறு ஆற்றுப்படுத்தினார்.

**இசைப்பயிற்சி**

தமிழிசையை நன்கு அறிந்த தன் அன்னை அருண்மொழியிடமே தமிழிசையின் நுட்பங்களை அறியப் பூங்கொடி விரும்பினாள். ஆனால் அருண்மொழி கொடுமுடி என்னும் ஊரில் வாழும் ஏழிசைச் செல்வியாம் எழிலியிடம் இசைத்தமிழ்ச் சுவடியின் நுட்பங்களை அறியும்படி ஆற்றுப்படுத்தினாள். பூங்கொடி எழிலியிடம் இசையின் இலக்கண நுணுக்கம், பாடல்திறன், பாடும் முறை முதலியவற்றை அறிந்து இசையரங்கு ஏறினாள்.

பூங்கொடி தமிழிசையோடு யாப்பிலக்கணமும் பாவகையும் பா இனமும் எழிலியிடமே பயின்று, கவிதை இயற்றவும் இசைத்துறைப் பாடல்கள் புனையவும் கற்றுத் தேர்ந்தாள்.

**தமிழிசை வளர்ச்சி**

மலையுறையடிகள் தமிழிசை வளர்ச்சி கருதி, தமிழிசைப் பள்ளி நிறுவி, மாணவர்களைப் பயிற்றுவித்து, திசைதொறும் தமிழிசையைப் பரப்ப எண்ணினார். பகுத்தறிவுப் பாடல்களைப் புனைந்து மாணவர்களைக் கற்கச் செய்து தம் கொள்கைகளைப் பரவச் செய்ய வேண்டும் என்னும் தம் விருப்பத்தையும் வெளிப்படுத்தினார்.

தமிழிசைப் பள்ளி தொடங்கப்பெற்று, தமிழிசையின் நுட்பங்களை மாணவர்கட்குக் கற்பித்து வருங்கால், தமிழிசை பயில்வதில் வேட்கை கொண்ட சண்டிலியையும் தன் மாணவியாகப் பூங்கொடி ஏற்றாள்.

**பெருநிலக்கிழார் இசை ஆர்வம்**

வேங்கை நகரில் வாழும் பெருநிலக்கிழார் இசை ஆர்வம் உடையவர். அவர் மாளிகையில் எப்போதும் தமிழிசை ஒலித்தவண்ணம் இருக்கும்.

**பண்ணும் இசையும் பயில்வோர் ஒலியும்**
**தண்ணுமைக் கருவி தந்திடும் முழக்கும்**
**தெரிதரு யாழில் விரிதரும் இசையும்**
**முறிதரு கருவிகள் மோதுநல் லொலியும்**
**காய்வேய்ங் குழலின் கனிந்தநல் லிசையும்**
**ஆய்நூற் புலவர் அறைந்தநாற் கருவியும்**
**கற்பார் மிடற்றுக் கருவியும் கலந்து**
**பொற்புடன் வழங்கும் புத்திசை வெள்ளம்**
**மாடமிசைப் பிறந்து மறுகிடைப் பரந்தது.**

(பெருநிலக்கிழார் வாழ்த்திய காதை, 80 - 88)

பெருநிலக்கிழார் பூங்கொடியின் இசைத்திறனைக் கேள்வியுற்று, தன் மாளிகைக்கு அழைப்பித்து, அவள் வழங்கிய இசைத்தேனை நுகர்ந்து இன்புற்றார். இளம்பருவத்தில் இறந்த தன் மகளே மீளவும் உயிர்பெற்று எழுந்தது போலப் பூங்கொடியைக் கண்டு அகமகிழ்ந்தார்.

**தமிழிசை இயக்கம்**

தமிழ்நாட்டில் தமிழிசை நலிவுற்றிருந்தது. அந்நிலையை மாற்றித் தமிழ்நாட்டில் தமிழிசை மலர்ச்சியுற வேண்டும் என்பதை இக்காப்பியம் வற்புறுத்துகிறது.

**தமிழிசையின் தொன்மை**

தமிழிசை மிகவும் தொன்மையானது. யாழும் குழலும் தமிழர்தம் இசைக்கருவிகளே. பாணனும் பாடினியும் தமிழிசை பாடி மகிழ்வித்தனர். அவர் பாடிய பண்ணும் இசையும் தமிழ்மொழிக்குரியன. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என வகைப்படுத்தப்பட்ட ஐந்திணைக்கும் பண்ணும் யாழும் வகுக்கப்பட்டன. **சிலப்பதிகாரத்தில்** காணப்படும் கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி ஆகியவை அக்காலத் தமிழிசைக்குச் சான்றாக உள்ளன. பண் சுமந்த பாடல்களாகத் தேவார, திருவாசகப் பாடல்களும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களும் திகழ்கின்றன.

**தமிழிசைச் சிறப்பு**

தமிழிசைக்குச் சிறப்புகள் பல உண்டு. மனம், மொழி, மெய் என்னும் முக்கோணங்களையும் தன்வயமாக்கும் திறன் தமிழிசைக்கு உண்டு. விலங்கும் அரவும் கூடத் தமிழிசை கேட்டு மயங்கும்.

கவிஞர் தமிழிசையின் சிறப்பைக் கூறுவதற்கு அப்பர் தேவாரத்தைப் பயன்படுத்துகிறார்.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும்**

**(இசைப்பணி புரிந்த காதை, 240 - 242)**

போன்று அஃது உளத்திற்கு உவகை ஊட்டுவது.

**தமிழிசையின் நிலை**

தமிழ் இசைச்செல்வம் உடைய மொழியாயினும் அது பிற்காலத்தில் புறந்தள்ளப்பட்டது. அயல்மொழி இசை ஆட்சி பெற்றது. தமிழிசைக்குத் தடைகள் அமைக்கப்பட்டன.

கூவும் குயிலும் காகமும் தம் குரலால் பாடுகின்றன. அவை இரவல் குரலால் பாடுவதில்லை. இசைக்கு மொழியில்லை என்றால் கருவி இசையே போதுமானது; மிடற்றிசை வேண்டாமே! என்று பூங்கொடி இசைக்கு மொழி வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தினாள்.

இவ்வாறு தமிழிசை குறித்த செய்திகளைப் பூங்கொடிக் காப்பியம் தெளிவுபடுத்துகிறது

**தமிழின் தனித்தன்மை**

பூங்கொடிக் காப்பியம் தமிழகச் சூழலை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட காப்பியமாகும். தாய்மொழி தமிழை ஆட்சி மொழியாக, அறிவியல் மொழியாக, அனைத்துத் துறைகளிலும் ஆளும் மொழியாக ஆக்க வேண்டும் என்னும் குறிக்கோளோடு இக்காப்பியம் படைக்கப்பட்டுள்ளது. பிறமொழிகளைப் பேசும் சூழல் தமிழகத்தில் இருப்பினும், தமிழின் தூய்மை காக்கப்பட வேண்டும் என்பது தமிழ்வல்லோர் கருத்தாகும். அதற்கேற்பப் பூங்கொடிக் காப்பியத்தில் வரும் மாந்தர்களின் பெயர்களும் ஊர்களின் பெயர்களும் தூய தமிழாக அமைந்துள்ளன.

காப்பிய மாந்தர்கள் பூங்கொடி, அருண்மொழி, அல்லி, தாமரைக்கண்ணி, வஞ்சி, தேன்மொழி, எழிலி, பொன்னி, ஏலங்குழலி, நாவலூர் அமுதம் முதலிய பெண்பாற் பெயர்கள் தூய தமிழ்ப் பெயர்களாகும்.

மலையுறையடிகள், பெருநிலக்கிழார், கோனூர் வள்ளல், மயில்வாகனர், கோமகன், திருமகன், தங்கத்தேவன் முதலிய ஆண்பாற் பெயர்களும் தூய தமிழ்ப் பெயர்களாக உள்ளன.

மணிநகர், கடல்நகர், கூடல்நகர், வேங்கைநகர், கோனூர், நெல்லூர், நாவலூர், மயில் நகர் ஆகிய ஊர்ப் பெயர்களும் தனித்தமிழ்ப் பெயர்களாக உள்ளன.

**காப்பியத்தில் செய்தி**

பூங்கொடிக் காப்பியம், தமிழர்களின் ஒற்றுமை, தமிழ் மொழிக்காப்பு, தமிழை ஆட்சி மொழியாக்கல், பிறமொழிக் கலப்பிலிருந்து தமிழைக் காப்பாற்றுதல் மேற்குறிப்பிட்டவைகளைச் செயல்படுத்த மொழிப்போராட்டம் நடத்துதல் போன்றவற்றைத் தமிழர்கள் செய்ய வேண்டுமெனப் பல அறிவுரைகளை - கருத்துகளைக் கூறுகின்றது.

**தமிழர் ஒற்றுமை**

சாதி, சமய, இன வேறுபாடுகள் நம் ஒற்றுமையைக் குலைக்கின்றன. அதனால், ஒன்றுபட்டு, ஒற்றுமையாகச் செயல்பட்டு, தமிழுக்கு ஆற்றவேண்டிய பணிகளை ஆற்றமுடியாமல் போய்விட்டது. இனியாவது தமிழர்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்று வேண்டுகிறார் முடியரசன். இக்கருத்தைப் பூங்கொடி எனும் கதை மாந்தர் மூலம் வெளிப்படுத்துகிறார்.

முத்தமிழ் மாநாடு ஒன்றைத் தன் சுய முயற்சியால் நடத்துகிறாள் பூங்கொடி. அம்மாநாட்டில் அவள் பேசும்பொழுது, தமிழர் ஒற்றுமையை வலியுறுத்துகிறாள்.

**பிறப்பால் வழக்கால் பேசும் மொழியால்**
**இனத்தால் தமிழர் எனுமொரு நினைவே**
**கருத்தால் கொண்டுளோம் காலம் நமதே!**
**தாய்மொழி காக்கும் தணியா வேட்கை**
**சேய்கள் நம்பால் செம்மையில் கிளர்ந்தது.**
**வாகையும் சூடுவோம் வளர்தமிழ் பாடுவோம்**
**ஓகையில் ஆடுவோம் ஓங்குக ஓங்கவே**

**(அறப்போர் நிகழ்த்திய காதை, 62 - 68)**

என்று குறிப்பிடுகிறாள்.

தமிழர் ஒற்றுமையாயிருந்தால் பல சாதனைகளைப் படைக்கலாம் என்று நம்பினார் முடியரசன். எனவே, ஒன்றுபட்டு வாழ்ந்து, பல கடமைகளைத் தமிழர் செய்யவேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

**தமிழ் ஆட்சி மொழி**

காப்பியத்தின் கிளைக் கதையில் இடம்பெறும் மீனவன் இறைவழிபாட்டில் தமிழுக்கு உரிமை கோரி மறியல் செய்தான்.

**இழிவாம் இச்செயல்! இனிமேல் தமிழால்**
**வழிபாட்டு உரையை வழங்குக**

**(மீனவன் வரலாறுணர்ந்த காதை 112 - 113)**

என்று வேண்டினான். வழிபாட்டு மொழி வடமொழியாய் இருந்தமையால் மறையோர் அவன் கருத்தை ஏற்க மறுத்ததோடு, கயவர்களைக் கொண்டு அவனைத் தாக்கவும் செய்தனர்.

தமிழக எல்லையில் தமிழே ஆட்சிமொழியாக வேண்டும் என்றால் கடவுள் வழிபாட்டிலும் தமிழ் என்பது அதில் அடக்கம்தானே? கடவுள் வழிபாட்டிற்குக் கோயில் எழுப்பியோர் தமிழர். கோயிலில் உறையும் கடவுளும் தமிழர்க்கே உரியவர் ஆவார். உள்ளம் உருக அக்கடவுளை வழிபடுவோரும் தமிழர்களே!

**தமிழ்மொழிக் காப்பு**

தமிழ்மொழியை நலிவுறாமல் காப்பது தமிழ்மொழிக் காப்பு ஆகும். தமிழைக் காக்கும் பணியில் அதனை வளப்படுத்துவதும் அடங்கும். அதனை வளப்படுத்தும் பணிகளில் ஒன்று பிறமொழிகளில் காணக் கிடக்கும் அரிய கருத்துகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருவதுமாகும்.

**பிழையின்றிப் பேசல் எழுதல்**

தமிழ்மொழிக் காப்புப் பணியில் மற்றொன்று, பிழைபடத் தமிழைப் பேசியும் எழுதியும் வருவோரைக் கண்டு நல்லறிவூட்டி அவர்களைத் திருத்துவதுமாகும்.

**நூல்கள் படைத்தல்**

பல்துறை சான்ற பொருளியல் நூல்கள், அறிவியல் நூல்கள், உள நூல்கள், நில நூல்கள், தத்துவ நூல்கள் முதலிய நூல்களையும் தமிழில் படைத்துத் தருதல் தமிழ்வளர்ச்சிக்கு ஆக்கம் தரும்.

**காத்தல்**

தமிழில் இருக்கும் கலைச்செல்வங்களை, இலக்கண இலக்கியங்களைச் சிதைவுறாமல் காப்பதும் தமிழ் வளர்ச்சிப் பணியாகும்.

**பிறமொழிக் கலப்பை எதிர்த்தல்**

தாய்மொழியில் பிறமொழிச் சொற்கள் கலப்பதை மொழிக்கலப்பு எனலாம். ஒவ்வொருவரும் தம் தாய்மொழியில் பேசும்போதும், எழுதும்போதும், பிறமொழிச் சொற்களைக் கலப்பதைத் தவிர்ப்பது நல்லது. இக்கருத்திற்கு மாறாகத் தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களை நீக்கினால் தமிழ் வளராது என்றும் சிலர் கூறுகின்றனர். செம்பொன்னோடு செம்பு கலந்தால்தான் நல்ல அணிகலன்களை உருவாக்க முடியும் என்பது மொழிக் கலப்பை ஏற்போர் கருத்து. செம்பொன்னோடு செம்பு கலக்கும்போது அளவிற்கு அதிகமாகக் கலந்துவிட்டால் செம்பொன்னில் அணிகலன்கள் செய்ய முடியாது.

தமிழ்மொழி பிறமொழிகளின் உதவியின்றித் தனித்தியங்கும் தகுதி உடையது என்பதை மொழிநூல் வல்லார்கள் கூறுகின்றனர். அவ்வகையில் தமிழ் உயர்தனிச் செம்மொழியாக விளங்குகின்றது. தமிழில் பிறமொழிக் கலப்பை ஆதரிப்பது இனிப்பான அமிழ்தம் இருக்க, அதன் சுவைக்காக வெல்லத்தை அதனோடு கலப்பது போன்றதாகும்.

கவிஞர் முடியரசன் மொழிக்கலப்பை ஆதரிக்காதவர். அவர் மொழிக்கலப்புப் பற்றிக் கூறியிருக்கும் கருத்தை நோக்குங்கள்:

**அமிழ்தம் இனிக்க அச்சு வெல்லம்**
**கலப்போர் உலகிற் கண்டோம் இல்லை**
**உலப்பிலாத் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி**
**கலப்பிலா தியங்கும், கற்றவர் அறிவர்;**
**செம்பு கலந்தணி செய்வதும் இயற்கை,**
**செம்பும் மிகவே சேர்த்திடப் பெறுமேல்**
**கலன்செய அப்பொன் பயன்படாது ஒழியும்**

(மலையுறையடிகள் வாழ்த்திய காதை, 52 - 58)

**மொழிப்போராட்டம்**

பூங்கொடிக் காப்பியம் மொழி பற்றிய சிந்தனையை முன்னெடுத்துச் செல்கிறது. தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளிலிருந்து எழுபது வரையிலான காலக் கட்டத்தில் மொழிப்போராட்டம் வீறுபெற்றிருந்தது. ஐயமிலாப் புன்மொழியைத் திணிக்கும் முயற்சி நடந்தது. தாய்மொழி வளர்ச்சி போதிய அளவும் இல்லாதபோது, போதிய கல்வியறிவு இல்லாத நாட்டில், பிறமொழியைப் பயில்வது நலம் பயக்காது. இத்தகைய சூழலில்தான் மொழிப்போராட்டம் தொடர்ந்தது. அது போன்றதொரு மொழிப்போராட்டத்தைப் பூங்கொடிக் காப்பியத்தின் கதைக் கருவாக்கிப் படைத்துள்ளார் கவிஞர் முடியரசன்.

மொழிப்போராட்டத்தில் நோக்கம் என்ன என்பதையும் நோக்க வேண்டும். தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள தமிழ், ஆட்சியின் துறைகளில் எல்லாம் இடம் பெறவேண்டும். ஆட்சியியலில் வேற்றுமொழி இடம் பெறல் தவிர்க்கப்படல் வேண்டும். இதன் இன்றியமையாமையைப் பலமுறை ஆள்வோர்க்கு எடுத்துரைத்தும் ஆள்வோர் செவிசாய்க்கவில்லை. இச்சூழலில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் மொழிப்போராட்டத்தில் இறங்கினர். கவிஞர் முடியரசன் பூங்கொடியின் குரலில் இதனை,

**துறைதொறும் துறைதொறும் தூயநற் றமிழே**
**ஆட்சி புரியும் மாட்சிமை வேண்டும்**
**ஆட்சியின் பெயரால் அயன்மொழி புகுதலைச்**
**சான்றோர் வெறுப்பர் தமிழகம் மறுக்கும்**
**ஆன்றமைந் தடங்கிய அறவோர் கொதிப்பர்**
**ஆதலின் அரசியல் ஆயத் துள்ளீர்**
**மேதகு பெரியீர் ஆவன புரிக**
**என்று பலகால் எடுத்தெடுத் திசைத்தும்**
**நன்று புரிந்திட நயந்திலர் அவரே.**

**(சொற்போர் நிகழ்த்திய காதை 224 - 232)**

மொழிப்போராட்டத்தில் சிறைப்பட்ட பூங்கொடி நோய்வாய்ப்பட்டு, சிறையிலிருந்து வெளிவரும் முன்னரே உயிர் நீத்தாள்.

இவ்வாறு மொழியுணர்ச்சிக்காகவும் தன் தாய்மொழி ஆட்சியுரிமை பெறுவதற்காகவும் தமிழ் வாழ்க்கைத் துறைகள் பலவற்றிலும் உரிய

பங்காற்றுவதற்காகவும் ஒரு மொழிப்போராட்டத்தைப் பூங்கொடி நடத்தியதைப் பூங்கொடிக் காப்பியத்தால் அறியலாம்.

கவிஞர் முடியரசனின் பூங்கொடிக் காப்பியம் ‘மொழிக்கொரு காப்பியமாக’ அமைந்துள்ளது. தமிழ்மொழி, இசைத்துறையிலும், வழிபாட்டு நிலையிலும் ஆட்சித் துறையிலும் புறக்கணிக்கப்பட்டது. தாய்மொழி என்ற நிலையிலும் தமிழுக்குரிய இடம் மறுக்கப்பட்டது. இந்நிலைமைகளை மாற்றி இசைத்துறையிலும், வழிபாட்டு நிலையிலும் ஆட்சித் துறையிலும் தமிழை நிலைநிறுத்திப் பூங்கொடி மொழிப்போராட்டம் நடத்தினாள். அப்போராட்ட முடிவில் தன் உயிரையே தியாகம் செய்தாள்.

பூங்கொடி என்ற இளமங்கையின் வாழ்க்கை உருவாக்கத்திற்குக் காரணமானவர்கள் சுட்டிக்காட்டப்பட்டனர்; நிகழ்ச்சிகள் சுட்டிக் காட்டப்பட்டன.

பூங்கொடி என்னும் காப்பியத்தலைவி ஓர் இலட்சியமாகத் திகழ்கிறாள். மாசுமறுவற்ற ஒரு பாத்திரமாகக் கவிஞர் முடியரசன் அவர்கள் பூங்கொடி பாத்திரத்தைப் படைத்துள்ளார் எனலாம்.

## முடியரசனாரின் பூங்கொடியும் சாத்தனாரின் மணிமேகலையும்

சீத்தலைச் சாத்தனர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் பௌத்த சமயத் தலைவரான புத்தரின் சிந்தனைகளைத் தமிழக மக்கள் மத்தியில் பரப்பவேண்டும் என்ற எண்ணத்தில் பாட்டுடைச் செய்யுளாகப் படைத்த காப்பியம் ‘மணிமேகலை’ ஆகும் இதைப்போலவே தமிழ்மொழியில் தமிழைப் பரப்புவதற்காக ஒரு காப்பியம் வேண்டும் என்ற ஆர்வமிகுதியால் பாரதிதாசன் மரபில் வந்த கவிஞர் முடியரசன் 1964 ஆம் ஆண்டு இயற்றிய காப்பியம் ‘பூங்கொடி’. இந்தக் காப்பியம் சாத்தனாரின் மணிமேகலையின் மீட்டுருவாக்கம் எனலாம்.

சீத்தலைச் சாத்தனார் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றிய மணிமேகலையும், 1964ஆம் ஆண்டு கவிஞர் முடியரசனாரின் பூங்கொடி காப்பியமும் பின்வரும் கட்டமைப்பினைக் கொண்டுள்ளன. சாத்தனாரின் மணிமேகலை காப்பியம் 30 காதைகளையும், கவிஞர் முடியரசன் எழுதிய பூங்கொடி காப்பியம் 31 காதைகளையும் கொண்டுள்ளன.

சாத்தனாரின் மணிமேகலையிலும், முடியரசனாரின் பூங்கொடியிலும் மொழிநடையாக ஆசிரியப்பாவை இருவரும் கையாண்டுள்ளனர். ஒரு நூலின் உள்ளடக்கம் சிறப்பாக அமைவதற்குப் படைப்பாளி எதைக் கையாள வேண்டுமோ

அதைச் சாத்தனாரும், கவிஞர் முடியரசனும் பின்பற்றியுள்ளனர். உள்ளடக்கத்தில் கையாளவேண்டிய தலைப்பினை அடுத்து எந்தெந்த தலைப்பினைக் கொண்டு செல்லவேண்டும் என்று சிறப்பாகத் தெரிவு செய்து காப்பியத்தை அமைத்துள்ளனர். அவை பற்றி, மணிமேகலை பதிகம் உட்பட விழாவறை காதை முதலாக பவத்திறமறுகெனப் பாவைநோற்ற காதை வரை 30 காதைகளும் பூங்கொடி, தமிழ்த்தாய் வாழ்த்து உட்பட விழாவயர் காதை தொடங்கி விடுதலைக் காதை முடிய 31 காதைகளையும் கொண்டுள்ளன.

**மணிமேகலை**

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மணிமேகலை "அறம்" தழைக்கப் பாடுபட்டாள். பூங்கொடி 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டது. தமிழ்நாட்டில் 1964ஆம் காலக்கட்டத்தில் மத்திய அரசால் இந்தி மொழி முதன்மை மொழியாக அனைத்து மாநிலமும் ஏற்க வேண்டும் என்ற சூழலை மையமாகக்கொண்டு படைக்கப்பட்ட பூங்கொடி 'தமிழ்' தழைக்கப் பாடுபடுகின்றாள்.

மேலே கண்ட செய்திகளை அடிப்படையாகக்கொண்டு முதல் இரு காதையிலும் முடியரசன் கட்டுடைப்பு செய்த செய்திகள், சாத்தனார் விழாவறை காதையில் சோழமன்னர்களால் நிகழ்த்தப்பெற்ற இந்திரவிழா நிகழ்வைக் கவிஞர் முடியரசன் அதைத் தமிழர்த் திருநாளாம் 'தை' முதல் நாள் கொண்டாடப்படும் பொங்கல் விழாவாகப் படைத்துள்ளார். சாத்தனார் விழா அறிக்கையை,

**"திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி**
**வான மும்மாரி பொழிக"**

என்று யானைமீது அமர்ந்து முரசறைவோன் குறிப்பிடுவதாகப் படைத்துள்ளார். ஆனால் முடியரசன் பூங்கொடியில்,

**"தமிழர் திருநாள் தை முதல் நாளாம்**
**அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்"**
**"நமக்கென மொழியும் நாளும்**
**உலகம் அறிய உணர்த்துவம் வாரீர்"**

தமிழர்களின் திருநாளாம் பொங்கல் விழாவைக் கொண்டாட அழைப்பு விடுத்து, நமது தாய்மொழியாம் தமிழை உலகுக்கு உணர்த்த வாரீர் என்று மக்களையும் ஒற்றுமை

பரப்ப அழைக்கின்றார். இரண்டாம் காதையில் சாத்தனாரின், மணிமேகலை தனது பெற்றோர்களுக்கு உற்ற துன்பத்தைக் கேட்டவுடன் துறவு வாழ்க்கை மேற்கொள்வதாகப் படைத்துள்ளார்.

சாத்தனார் கண்ட மணிமேகலை துறவு வாழ்க்கை வாழ முடிவுசெய்கிறாள். முடியரசன் கண்ட பூங்கொடி தனது தந்தை விட்டுச்சென்ற பொதுப்பணியாம் தமிழ்ப்பணியைச் செய்ய முற்படுகிறாள் என்று தமிழ்நாட்டைப் பற்றியும், மொழிச் சூழல் பற்றியும் முதல் இரு காதைகளில் கவிஞர் முடியரசன் கட்டுடைப்பு செய்துள்ளார்.

**தமிழ்க் காப்பிய உலகில் புதுமைக் காதைகள் பற்றிய செய்திகள்**

சாத்தனாரின் மணிமேகலை புத்தசமயக் காப்பியம். அதன் கதைத்தலைவியாகிய மணிமேகலை புத்தசமயக் கருத்துகளைப் பரப்புவதற்காகப் படைக்கப்பட்டாள். கவிஞர் முடியரசனின் பூங்கொடிக் காப்பியத்தில் தமிழ் மரபிற்கேற்ப புதுமைகளோடு படைத்துள்ள காதையாகப் படிப்பகம் புக்க காதை, கல்லறைகாண் காதை, திறக்குறள் கற்றுத் தெளிந்த காதை, தொல்காப்பியம் உணர்ந்த காதை, இசைப் பணிபுரிந்த காதை, நூல் நிலையம் அமைத்த காதை, யாழ்நூல் பெற்ற காதை, சொற்போர் நிகழ்த்திய காதை, அறப்போர் நிகழ்த்திய காதை முதலிய காதைகள் தமிழறிஞர் இதுகாறும் கேட்டறியா காதை என்றே குறிப்பிடலாம்.

பளிக்கறைபுக்ககாதை - படிப்பகம் புக்ககாதை - காதல் செய்தியை வெளிப்படுத்தியதில் முடியரசன் பண்பாட்டுக் கட்டுடைப்பைக் கையாண்டுள்ளார்.

மணிமேகலையில் உதயகுமரன், மணிமேலையின் மீதுகொண்ட காதலால் சுதமதியின் ஆலோசனையால் பளிக்கறையில் மறைந்து கொள்கிறாள். இதனைச் சாத்தனாரின்

**“ஆங்கவள் தன்னையென் அணித்தேரேற்றி**
**ஈங்கியான் வருவேன்”**

என்று எட்டிக்குமரனிடம் உதயகுமரன் கூறினான். இதில் சாத்தனாரின் மணிமேகலையின் மனக்குறிப்பை அறியாமல் உதயகுமரன் மணிமேகலையைத் தனது தேரேற்றி வருவேன் என்பதை, பூங்கொடியில் பூங்கொடியின் அழகில் மயங்கிய கோமகன் தனது காதலை வெளிப்படுத்திய முறை நோக்கத்தக்கது.

**“ஒண்டொடி அவள் மனஒப்புதல் பெற்றத்**
**தண்டமிழ் நிகர்க்கும் தையல் கொழுநன்**
**ஆவேன் யான்”**

என்று முகுந்தனிடம் தமிழ்ப் பண்பாட்டின் உணர்வின்படி பூங்கொடியின் இசைவு பெற்று அவளுக்குக் கணவன் ஆவேன் என்று குறிப்பிட்டுள்ளமையில் கட்டுடைப்புச் செய்துள்ளார் என்பது தெளிவு. மேலும், இதே காதையில் மணிமேகலையில் சுதமதி உதயகுமரனுக்குக் கூறும் அறிவுரையை நோக்கும்போது, **“அறிவும் சால்பும் அரசியல் வழக்கும் மகளிரின் கூறுமாறும் உண்டோ?”** என்று அரசகுமாரனுக்கு அறிவுரை வழங்கும் நிலையாக அமைந்துள்ளது. இதையே முடியரசன் அல்லியின் அறிவுரையாகக் கூறும்போது, **“செல்வம் நிறைந்தவனே பெருமையான கல்வியைக் கற்றவனே மங்கையர் அறிவுரை உனக்குத் தேவையெனில் நான் கூறுவேன்”** என்று காப்பியத் தலைவியின் தோழி கூறுவதாகப் படைத்துக் காட்டியுள்ளார்.

**சக்கரவாளக் கோட்டமுரைத்த காதை - கல்லறைகாண் காதையில் பகுத்தறிவு சிந்தனை**

சாத்தனார் தமது காப்பியத்தில் மணிமேகலா தெய்வத்தை வெளிப்படுத்தும் போது தமது சமயக்கடவுளாகப் போற்றப்படும் புத்தரை வணங்கி அவரின் பெருமைகளை உரைப்பதையும் புத்த தருமத்தையும் புத்தசங்கத்தையும் பலவிடங்களில் எடுத்துரைப்பதையும் காணலாம்.

**“ஆதி முதல்வன் அறவாழி யாள்வோன்**
**பாத பீடிகை பணிந்தன ளேத்திப்”**

மேலும், சுடுகாடு, வரம் கொடுக்கும் தேவர்கள் பற்றிக் குறிப்பிட்டு பின்பு மணிமேகலையை மணிபல்லவத்தீவிற்குத் தூக்கிச் சென்ற நிகழ்ச்சிகளைச் சாத்தனார் படைத்த தன்மையைக் கவிஞர் முடியரசன் தமது பூங்கொடியில் காலமாற்றத்தைக்காட்டித் தமிழ்ப் பகுத்தறிவுச் சிந்தனையுடன் படைத்துள்ளார்.

முத்தக்கூத்தன் கல்லறையைப் பூங்கொடிக்கும், அல்லிக்கும் அறிமுகப்படுத்த வரும் தாமரைக்கண்ணி என்னும் தமிழ்த் தேவதை மலர் சோலைக்குள் வரும்போது,

**“தாமரைக் கண்ணி தமிழ்மொழி வாழ்த்திப்**
**பூமலர் மேனிப் பூங்கொடி தன்னொடு”**

பூங்கொடியில் தாமரைக்கண்ணி தோன்றும் இடமெல்லாம் கவிஞர் முடியரசன் தமது தாய்மொழியாம் தமிழ்மொழியை வாழ்த்துவதாகப் படைத்துள்ளார். இதற்குக் காரணம்,

தமிழ்நாட்டில் பிறமொழியின் ஆதிக்கம் வந்துவிடக்கூடாது என்பதற்காகத் தமது காப்பியத்தலைவி பொதுப்பணியாம் தமிழ்ப்பணியைப் பரப்பும் நோக்கில் படைத்துள்ளார். முத்தக்கூத்தன் கல்லறையைப்பற்றி தாமரைக்கண்ணி பூங்கொடிக்கும், அல்லிக்கும் எடுத்துரைத்தலில் பகுத்தறிவுச் சிந்தனையைப் புகுத்தியுள்ளார் என்றே குறிப்பிடவேண்டும் சாத்தனார் மணிமேகலையில் சக்கரவாளக்கோட்டம் பற்றி மணிமேகலா தெய்வம் குறிப்பிடும்போது, சுடுகாடு என்றால் பயமாக இருக்கும், அங்கே பிணம் திண்ணும் பேய்கள் உள்ளது பாசப்பூதம் இருக்கும் என்று குறிப்பிட்டு அதைக்கண்டு பயப்படவேண்டாம் என்று படைத்துள்ளார். ஆனால், பூங்கொடியில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பொரியாரின் சிந்தனையில் தாமரைக்கண்ணி பேசுவதாகப் படைத்துள்ளார் என்பதை,

**“பேயென ஒருபொருள் உண்டெனப் பேசுதல்**
**ஆயிழை! பேதமை ஆகும் அறிகதில்!”**

பேய் என்ற ஒன்றைப் பற்றி அறியாமை தன்மையில் குழம்பி அச்சம் கொள்ளும் போது பகுத்தறிவுச் சிந்தனைகளோடு சிந்திக்கவேண்டும். காரணம் பூங்கொடி காப்பியம் படைக்கப்பட்ட காலச்சூழல் 20ஆம் நூற்றாண்டின் சமூக வளர்ச்சியிலும் மாற்றத்திலும் பகுத்தறிவுக் கொள்கை முக்கிய இடபெறும் எனலாம். இந்தப் பகுத்தறிவு தமிழகத்திற்குப் புதியன அல்ல எந்த செய்தியையும் பகுத்தறிவோடு பார்க்கவேண்டும் என்பதையும் திருவள்ளுவர்,

**“எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு”**

என்கிறார். இந்த உலகில் எந்தப் பொருளையும் அறிவு வகையினால் மெய்ப்பொருளை நாடுவது பகுத்தறிவு. “புராணக் கற்பனைகளும், மூட நம்பிக்கைளும், இயற்கை இகந்த நிகழ்ச்சிகளும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதன” என்னும் கருத்திற்கு ஏற்ப பேய் உண்டோ? உண்டு என்றால் அது அறிவின்மை என்று பதிவு செய்துள்ளமை சிறப்பு. இதனை அடிப்படையாகக் கொண்டு சுடுகாட்டைப்பற்றி முடியரசன் செய்திகளை ஆராய்கின்றபோது, இன்றும் சிலர் நம்மில் சுடுகாட்டுப் பக்கம் சென்றால் பேய் பிடித்துக் கொள்ளும் என்ற பொதுவான அச்சம் மக்களிடம் உள்ளது. அந்த அச்சத்தைப் போக்கும் விதம் தாமரைக்கண்ணி என்னும் தமிழ்த் தேவதை பூங்கொடியிடமும், அல்லியிடமும் முத்தக்கூத்தன் கல்லறையைக் கண்டால் நெஞ்சுரம் எற்படும் என்பதை,

**“மொழிக்குயிர் ஈந்தநல் முத்தக் கூத்தன்**
**பளிக்கறைப் புதைகுழிபாங்குடன் மிளிரும்**

**அதனைக் காணின் அச்சம் தொலையும்**
**மத முறுகொடியர் மனச்செருக் கொழிக்க**
**நெஞ்சுரம் ஏறும், நிமிர்ந்து நடப்பீர்”**

என்று கூறுகிறாள். இதில் முத்தக்கூத்தன் எவ்வாறு இறந்தான் என்ற சூழல் கூறப்படுகிறது. முடியரசன் முத்தக்கூத்தன் 1964ஆம் ஆண்டு இந்தக் காப்பியத்தை இயற்றவேண்டிய சூழலையும் பதிவு செய்துள்ளார். தமிழகத்தில் இந்தி மொழித்திணிப்பை மத்திய அரசாங்கம் செய்தபோது தமிழர்களின் தாய்மொழியான தமிழ்மொழியைக் காப்பதற்காகத் தமிழர்கள் கையாண்ட அறப்போராட்டத்தில் ஈடுபட்டனர். கையில் கொடியேந்தி மொழிப்போராட்டத்தில் ஈடுப்பட்ட போது அரசின் அடக்குமுறையால் குருதி சிந்தினார். ஆனால், உறுதிகுலைந்திலார் அந்தச் சூழலில் போராட்டத்தில் ஈடுபட்டோர் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். அங்கு உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்த முத்தக்கூத்தன் சில நரித்தனமான வஞ்சகர்களால் கொலை செய்யப்பட்டான். அவனைப் புதைக்கப்பட்ட கல்லறையைக் கண்டாலும் அவ்வழி சென்றாலும் அச்சம் நீங்கி முழுமையான வலிமை கிடைக்கும், பிறரின் மனச்செருக்கு அழிக்கும், மனவலிமை கிடைக்கும், பெண்கள் அச்சமின்றி தலைநிமிர்ந்து நடக்கலாம் என்று முடியரசன் குறிப்பிட்டுள்ளமை சிந்திக்தக்கது.

‘மணிபல்லவம்’ என்ற தீவு, பூங்கொடியில் “கடல் நகர்“ என மாற்றம் பெற்றுள்ளது. சாத்தனார் படைத்த மணிபல்லவத்தீவில் மணிமேகலை புத்தபீடிகை அதை வணங்கி பாத்திரம் பெற்றுப் பசியோடு இருக்கும் மக்களுக்கு உணவு வழங்குகிறாள். இதைப் பூங்கொடியில் முடியரசன் கட்டுடைப்பு செய்துள்ளார் மணிபல்லவம் என்பதைக் கடல்நகர் என்றும், பூங்கொடியில் மக்கள் அறியாமையைப் பிணியாகக் காட்டியுள்ளார்.

**பீடிகைகண்டு பிறப்புணர்ந்த காதை - திருக்குறள் கற்றுணர்ந்த காதை**

சாத்தனாரின் படைத்த மணிமேகலையில் மணிமேகலை எப்பொழுதெல்லாம் துன்பம் உறுகிறாளோ அப்போதெல்லாம் மணிமேகலா தெய்வம் தோன்றி அவளுக்குத் துன்பத்தைப் போக்கும்; ஆறுதல் மொழி கூறும். மேலும், புத்தபெருமான் சிலையை வணங்கியவுடன் பழம்பிறப்பின் செய்திகளை உணர்ந்து கொள்வதாகவும், காந்தார நாட்டு அரச மைத்துனன் பிரமதருமனுக்கு அறம்போதிக்கையில், அங்குள்ள நாவலந்தீவில் பூகம்பம் ஏற்படும். அதனால் அத்தீவினைவிட்டு அகன்று விடு என்ற செய்தியை, பூங்கொடியில் கவிஞர் முடியரசன் மாற்றியமைக்கிறார். முடியரசனுக்கு பழம்பிறப்பின் மீது நம்பிக்கை இல்லை. காரணம், இவர் பகுத்தறிவுச் சிந்தனையாளார்களின் வழி வந்தவர் என்பதால் ‘நாவலந்தீவு’

என்பதை ‘அறியாமை இருளில் உள்ள கடல்நகர் என்று படைத்துக்கொண்டார். அந்நகர் வந்த பூங்கொடியைத் தேடிவந்த பாவலரை வணங்கி மாலையிட்டு, அவரிடம் தாம் திருக்குறளை முழுமையாகக் கற்று விட்டேன் என்று குறிப்பிடுவதாகப் படைத்துள்ளார். பிறகு, பூங்கொடி கடல்நகர் மக்களுக்குத் தமிழ் உணர்வைக் கற்பிக்கிற போது சிலர் பழிப்புரையோடு, பல இடர் பெற்றேன் என்று பூங்கொடி நாவலரிடம் கூறுகிறாள். இதைக்கேட்ட நாவலர்.

**“அன்னாய்! உலகில் அறிவொளி பரப்ப**
**முன்னுவோர்க் கெல்லாம் முதல்வர விதுவே**
**தொல்லைகள் பொறுத்துத் தொண்டுகள் ஆற்றின**
**எல்லையில் இன்பம் எடுத்தது முடியும்”**

என்று கூறித் தாம் தமிழ்ப்பணி ஆற்றும் வேளையில் தன் தலை மேல் கல் போட வந்த செய்தியையும் பூங்கொடியிடம் கூறுகின்றார்.

**“பாறைக் கல்லொடுபக்கம் வந்தனர்”**
**“உடலும் உயிரும் உலகுக் காக்கினென்.**
**இடரினைக் கண்டு தொடைநடுக் குறுதல்**
**மடமை அன்றோ? முதியலார் செயலது”**

எனத் தமிழ் மொழி உணர்வை மக்களுக்கு ஊட்டும்போது வரும் இன்னல், துன்பம் அதனை ஒருபொருட்டாக எண்ணுதல் கூடாது. மேலும், நாம் இந்த உடலையும் உயிரினையும் பெற்றிருப்பது இந்த உலகைக் காப்பதற்காகவே என்று நாவலர் பூங்கொடிக்கும் மன உறுதியை ஏற்படுத்துகிறார்.

**மந்திரம் கொடுத்த காதை - தொல்காப்பியம் உணர்ந்த காதை**

இந்தக் காதையில் மணிமேகலா தெய்வத்தின் உதவியால் நாவலந்தீவு சென்ற மணிமேகலை வருத்தப்பட்டு இருந்தவேளையில், புத்தர் பெருமானின் பீடிகையின் தன்மையால் தமது பழம்பிறப்பை உணர்ந்து, பிறகு எனது கணவன் யாங்குளன் என்று கேட்டாள். அங்கே, சாத்தனாரின் சாதுசக்கரன் என்னும் பௌத்த முனிவரை அறிமுகம் செய்து, பௌத்த சமய உண்மைகளை அறிந்து, இரண்டு மந்திரங்களை அறிவுறுத்தி, இது புத்தபெருமான் அருளிய திருவறம் இதை உறுதியாய் பெறுவாய் என்று கூறி, “மக்கள் யாக்கை உணவின் பிண்டம்; இப்பெருமந்திரம் இரும்பசி அறுக்கம்” என்று சொல்லி வானில் பறந்தது.

கவிஞர் முடியரசனின் பூங்கொடியில் பூங்கொடி பாவலர் அறிவுரையால் திருக்குறளை நன்றாகக் கற்றுக் குறள்பரப்புரை செய்வதாகப் பாடுகிறார்.

**"நாற்பொருள் உணர்ந்த பொற்கொடி குறளின்**
**சொற்பொருள் தெளிந்த சூழ வருவார்க்க**
**உணர்த்தும் பணியை உவப்புடன் பூண்டனள்"**

என்று குறள் பணியை மகிழ்ச்சியுடன் செய்து வரும் பொழுதினில் தாமரைக்கண்ணித் தோன்றி பூங்கொடியிடம் கோமகன் பாவலன் பெயரால் படிப்பகம் நிறுவிய தன்னலச் செயலைக் குறிப்பிட்டமையால் பூங்கொடி வருத்தம் அடைகிறாள். அதை,

**"உன்பெயர் சொல்லித் தந்நலம் நுகர்வார்**
**நின்னலம் சிறிதும் நினையார் உளரே"**

என்னும் வரிகளால் அறியலாம். சாத்தனாரின் மணிமேகலையில் பௌத்த சமய உண்மைகளை அறிந்து கொண்டதனால் மணிமேகலா தெய்வம் இரண்டு வரம் கொடுத்தது. அதைக் கட்டுடைப்பு செய்யும் முடியரசன் இந்தியாவில் நடந்த இந்தித் திணிப்பின் சூழலில் தமிழகத்தில் யான் தமிழன் என்று குறிப்பிட்டு, அந்தக் காலக்கட்டத்தில் தமிழருக்கும் தமிழ்நாட்டுக்கும் அகப்பகை, புறப்பகை என்பது எது? என்று தமது காப்பியத்தில் வினவுகிறார்.

**"உள்ளமும் உயிரும் உணர்வும் தமிழென**
**உள்ளுவோன் எவனோ அவனே தமிழன்" (பூங்கொடி ப. 46.)**

என்று உண்மையான தமிழனுக்குரிய பண்பையும், தமிழ் உணர்வு கொண்ட தமிழன் என்றும் பாடி, மணிமேகலா தெய்வம் கொடுத்த வரத்தை முடியரசன் கட்டுடைப்பு செய்து அதைத் தமிழ்நாட்டிற்கு வந்த பகைகளாக அமைத்துக் காட்டியுள்ளார். மேலும், இந்தப்பகையை வெல்லவேண்டுமானால் பூங்கொடியே பன்மொழி பயிலவும், பிழையாய் தமிழைப் பேசியும், எழுதியும் பிழைப்போருக்கு பேரறிவையும் ஊட்டுக என்றும், தமிழ்மொழியின் இலக்கணமாம் தொல்காப்பியத்தை இழித்தும், பழித்தும் உரைத்தவர்களின் கொட்டம் அடக்கு என்று கூறி 'ஐவகை இலக்கணம் உணர்வார் மொழியில் உயர்வார்' என்று படைத்துக் காட்டியுள்ளார். இதுகாறும் கண்ட செய்திகள் தமிழ் உலகில் அறிஞர்கள் கேட்டறியாச் செய்திகள் என்றே கூறலாம்.

**கதை மாந்தர்களின் தன்மைகள்**

மணிமேகலையில் இடம் பெற்றுள்ள பாத்திரங்கள் பல எனினும் மணிமேகலையுடன் நெருங்கிய பாத்திரங்களான மாதவி, சுதமதி, உதயகுமரன், சித்திராபதி, மணிமேகலா தெய்வம், தீவதிலகை, அறவணஅடிகள் முதலானோர் காப்பியத்தின் அடிப்டைக் கதைக்குரிய நிகழ்ச்சியுடன் ஒன்றுபட்டு இயங்குகின்றனர். பூங்கொடியில் முடியரசன் படைத்த பாத்திரங்களான அருண்மொழி, அல்லி, கோமகன், வஞ்சி, தாமரைக்கண்ணி, மலையுறை அடிகள் போன்றோர் கதைக்குரிய நிகழ்ச்சியுடன் ஒத்துப் போகின்றனர்.

**மணிமேகலையின் சமய வாழ்க்கையும் சமய உணர்வும்**

சாத்தனார் படைத்த மணிமேகலை, காப்பியத்தில் பௌத்த சமயத்தைத் தழுவிய சமய வாழ்க்கை வாழ்கிறாள். கவிஞர் முடியரசனின் பூங்கொடியில் பூங்கொடி பொதுப்பணி வாழ்க்கையை மேற்கொள்கிறாள். மணிமேகலையின் சமய உணர்வு, பூங்கொடியில் தமிழ் உணர்வாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**அமுதசுரபியின் நிலை**

மணிமேகலையில் அமுதசுரபி எப்பொழுதும் குறைவுபடாமல் பால்சுரத்தல்போல உணவு சுரத்தல், சிறந்தவர் கைக்கொள்ளும் போது சுரத்தல் போன்ற தன்மை பொருந்தியதாகக் காணப்படுகிறது. கவிஞர் முடியரசனின் பூங்கொடியில், அறியாமை இருளில் உள்ளவர்களுக்கு அறியாமையைப் போக்கும் தமிழிலக்கிய இலக்கியச் சுவடிகளாய் மாற்றம் பெற்றுள்ளன.

பௌத்த அறத்தை நிலைக்கச் செய்ய படைக்கப்பட்ட மணிமேகலையைப் போலவே கவிஞர் முடியரசனாரின் எண்ணம் போற்றத்தக்கது. தமிழ்மொழி வளர்ச்சியே தன் வாழ்க்கையின் குறிக்கோளாய் எண்ணி தன்னுடைய இன்பங்களையும், துன்பங்களையும் மறந்து மொழிநலம் காத்த பூங்கொடி காப்பியம் முடியரசனாரின் மொழிப்பற்று, நாட்டுப்பற்று காரணமாக காப்பிய இலக்கிய வரிசையில் தனியிடம் பெற்றுத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

## பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

**1.** பூங்கொடிக் காப்பிய ஆசிரியர் யார்? சிறு குறிப்புத் தருக.

**2.** பூங்கொடிக் காப்பியத்தின் கதைக் கரு யாது?

**3.** பூங்கொடியின் மனத்திண்மையை விளக்குக.

**4.** பூங்கொடியின் அயல்நாட்டுப் பயணத்தால் தமிழ் பெற்ற நன்மைகள் யாவை?

**5.** மலையுறையடிகள் பூங்கொடியின் வளர்ச்சியில் எவ்வெவ்வாறு துணை நின்றார்? விளக்குக.

**6.** கடவுளர்களுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பிற்கு இரு சான்றுகள் தருக.

**7.** தமிழிசையின் தொன்மையை விவரிக்க.

**8.** தமிழ்மொழிக் காப்புப் பணிகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

**9.** மொழிக் கலப்புப் பற்றிய முடியரசன் கருத்து யாது?

**10.** மொழிப் போராட்டத்தின் தேவை குறித்துப் பூங்கொடி கூறுவன யாவை?

**நெடுவினா**

1. பூங்கொடி பாத்திரப்படைப்பை ஆராய்க

2. பூங்கொடி காப்பியத்தின் சிறப்புகள் குறித்து கட்டுரை வரைக

3. பூங்கொடி காப்பியம் காட்டும் சமூகச் சிந்தனைகளை விளக்கி வரைக

4. பூங்கொடி காப்பியம் வழி முடியரசனாரின் தமிழ்மொழிப் பற்றை நிறுவுக

5. சாத்தனாரின் மணிமேகலையும் முடியரசனின் பூங்கொடியும் ஒப்பிட்டு ஆராய்க

6. தமிழை வளப்படுத்த பூங்கொடி மேற்கொள்ளும் முயற்சிகளை விவரிக்க

7. பூங்கொடியின் வாழ்க்கை வரலாற்றை விவரித்து எழுதுக